34

உ

V. PR. PL
M.K.
Paganeri

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

Y. M. C.
ASSOCIATION
PAGANERI.

கம்பராமாயணம்

பால காண்டம்

பொருள் விளக்கம் அரும்பதவுரை
விசேஷக் குறிப்புகளுடன்

டி. என். சேஷாசலம், பி. ஏ., பி. எல்.

பிழையறப் பரிசோதித்துப் பதிப்பித்தது

பி. ஜி. பால் அண்டு கம்பெனி,
புத்தக வியாபாரிகள், சென்னை

5-00

காபிரைட்] 1930 [விலை ரூ. ~~2-8.~~

பதிப்புரை

கவிவாணர்தம் கருத்தை இயன்றவரையில் அவர் ஆய்ந்தமைத்த சொற்களைக் கொண்டே தெளியவைத்தல் தக்கதெனும் நோக்கத்தோடு இப்பதிப்பில் உரை வரைந்துள முறை புதியது. அன்வயப்படுத்திச் சொற்களைப் பிரித்துத் தொகைகளை விரித்து மயங்கிய உருபுகளை மாற்றி அசைகளையும் வேண்டாவழிச் சாரியைகளையும் விலக்கி அவாய் நிலையாய் நின்றவற்றைச் சேர்த்து அரும்பதங்களுக் கர்த்தமும் காட்டிய பின் பாசுரத்தின் பொருள் தெரிவதற்குப் படிப்போர் முயற்சியன்றி வேண்டுவது பிறிதொன்றில்லை. நாவலர் தந்த செம்மொழித்தொடர் நயம் ஓதுவோர் மனத்தில் ஊன்றிப் பழக இஃதோர் சாதனமுமாகும். தமிழில் சிறிதே பயிற்சியுள்ளோரும் செய்யுள் சில இவ்வண்ணம் ஊக்கத்துடன் கற்பாராயின் அன்னதன் பின்னர் அயலுதவி யின்றியே எந்நூற்கும் பொருளறியும் திறம் எளிதில் வாய்க்கப் பெறுவர். மொழிபெயர்த்துக் கொள்ளாமல் பாஷையைக் கற்றுப் பழகுவதே நேர்வழியாகும்.

இங்கு இடை இடையே காணும் விசேஷக் குறிப்புகள் கம்பநாடு மனோபாவத்தையும் அவருக்கே உரிய சில தத்துவங்களையும் விளக்கும் கருத்தின.

1. வேள்ளாழத் தெரு
புரசைபாக்கம்
சென்னைப்பட்டணம்
நவம்பர் மூ 1930

T. N. சேஷாசலம்

படல அட்டவணை

படலம்		பக்கம்
1.	சிறப்புப் பாயிரம்	1
2.	ஆற்றுப் படலம்	4
3.	நாட்டுப் படலம்	11
4.	நகரப் படலம்	30
5.	அரசியற் படலம்	54
6.	திருவவதாரப் படலம்	58
7.	கையடைப் படலம்	97
8.	தாடகைவதைப் படலம்	106
9.	வேள்விப் படலம்	128
10.	அகலிகைப் படலம்	144
11.	மிதிலைக்காட்சிப் படலம்	170
12.	குலமுறைகிளத்து படலம்	217
13.	கார்முகப் படலம்	225
14.	எழுச்சிப் படலம்	245
15.	வரைக்காட்சிப் படலம்....	267
16.	பூக்கொய் படலம்	291
17.	நீர்விளையாட்டுப் படலம்	303
18.	உண்டாட்டுப் படலம்	312
19.	எதிர்கோட் படலம்	332
20.	உலாவியற் படலம்	342
21.	கோலங்காண் படலம்	357
22.	கடிமணப் படலம்	370
23.	பரசுராமப் படலம்	395

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

ஸ்ரீமத் கம்ப ராமாயணம்.

—:o:—

பால காண்டம்.

1. சிறப்புப் பாயிரம்.

கடவுள் வாழ்த்து.

1. உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே.

உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும், நிலை பெறுத்தலும், நீக்கலும் நீங்கலா அலகு இலா விளையாட்டு உடையார் அவர் தலைவர், அன்னவர்க்கே நாங்கள் சரண்.

2. சிற்கு ணத்தர் தெரிவரு நன்னிலை
எற்கு ணர்த்தரி தெண்ணிய மூன்றனுள்
முற்கு ணத்தவ ரேமுத லோரவர்
நற்கு ணக்கட லாடுத னன்றரோ.

சிற்குணத்தவரும் தெரிவு அரு (அவரது) நல் நிலை எற்கு உணர்த்து அரிது; (எனினும்) எண்ணிய மூன்றன் உள் முன் குணத்தவரே முதலோர்; (ஆதலால்) அவர் நல்குணமாகிய கடலில் ஆடுதல் நன்று. (முன் குணம் = மூன்றுகுணங்களுள் முதலதாகிய சத்வ குணம்).

3. ஆதி யந்த மரியென யாவையும்
ஓதி னாரல கில்லன வுள்ளன
வேத மென்பன மெய்ந்நெறி நன்மையன்
பாத மல்லது பற்றிலர் பற்றிலார்.

அலகு இல்லனவும் உள்ளனவும் (ஆகிய) வேதம் என்பன யாவையும் ஆதியிலும் அந்தத்திலும் ‘அரி’ என ஓதினர் (களாகிய)

பற்று இலார், மெய்ந் நெறி நன்மையனது பாதம் அல்லது பற்றிலர். அலகு = அளவு.

அவையடக்கம்.

4. ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவு நக்குபு புக்கென
ஆசை பற்றி யறையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ.

(ஒரு) பூசை, ஓசை பெற்று உயர் பால் கடல் உற்று (அதை) முற்றவும் நக்குபு புக்கு என, இ காசு இல் கொற்றத்து இராமன் கதையை ஆசை பற்றி (யான்) அறையல் உற்றேன். [பூசை = பூனை. காசு = குற்றம். கொற்றம் = வெற்றி.]

5. நொய்தி னொய்யசொன் னூற்கலுற் றேனெனை
வைத வைவின் மராமர மேழ்தொளை
எய்த வெய்தவற் கெய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொன்னின்ற தேயத்தே.

(பெரியோர்கள்) வைத வைவின் மராமரம் எழ் தொளை எயத (அம்பை) எய்தவர்கு எய்திய மா கதையைச் செய்த செய் தவன் சொல் நின்ற தேயத்தில் நொய்தின் நொய்ய சொல் (நானும்) நூற்கல் உற்றேன். எனை! [வைதவைவின் = இட்டசாபம்போல்; செய்தவன் = வான்மீகி; எனை = என்ன ஆச்சரியம்.]

(அல்லது)

மராமரம் எழ் தொளை எய்த எய்தவற்கு எய்திய மா கதையைச் செய்த செய்தவன் சொல் நின்ற தேயத்தில் (நான்) என்னை வைத வைவின் நொய்தின் நொய்ய சொல் நூற்கல் உற்றேன். [எனை வைதவைவின் = என்னையே நான் வைதுக்கொண்டதுபோல்.]

(அல்லது)

வைத வைவினின்று மராமரம் எழ் தொளை எய்த எய்தவற்கு எய்திய மா கதையைச் செய்த செய்தவன் சொல் நின்ற தேயத்தில் (நானும்) நொய்தின் நொய்ய சொல் நூற்கல் உற்றேன்; எனை! [வான்மீகி முனிவர் வேடன் ஒருவனுக்கு இட்டசாபத்தையே ஆஸ்பதமாகக்கொண்டு இராமாயணத்தை இயற்றிய வரலாற்றை இவ் வர்த்தம் குறிக்கும்.]

6. வைய மென்னை யிகழவு மாசெனக்
கெய்த வும்மி தியம்புவ தியாதெனில்
பொய்யில் கேள்விப் புலமையி னோர்புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே.

என்னை வையம் இகழவும் எனக்கு மாசு எய்தவும் (காரண மாய்) இதை (நான்) இயம்புவதற்குக்காரணம் யாது எனில், பொய் யில்லாத கேள்வியையுடைய (வடமொழி) புலமையினோர் (வால்மீகி முனிவர் முதலானவர்) புகன்ற தெய்வம் மா கவிகளின் மாட்சியைத் தெரிவிக்கவே.

7. தேவ பாடையி னிக்கதை செய்தவர்
மூவ ரானவர் தம்முளு முந்திய
நாவி னாருரை யின்படி நான்றமிழ்ப்
பாவி னாலி துணர்த்திய பண்பரோ.

தேவபாடையில் இ கதையைச் செய்தவர் (களாகிய வான்மீகி, வசிஷ்டர். போதாயனர் என்னும்) மூவர் ஆனவர் தம் உள்ளும் முந் திய நாவினர் (ஆகிய வான்மீகி முனிவரது) உரையின்படி நான் தமிழ்ப்பாவினால் இது உணர்த்திய பண்பு.

8. துறைய டுத்த விருத்தத் தொகைக்கவிக்
குறைய டுத்த செவிகளுக் கோதில்யாழ்
நறைய டுத்த வசுணநன் மாச்செவிப்
பறைய டுத்தது போலுமென் பாவரோ.

(பல) துறைகளை அடுத்த விருத்தத் தொகை கவிகளுக்கு உறை (விடமாக) அடுத்த செவிகளுக்கு என் பாவை ஓதில், யாழி னது நறை போன்ற கானம் அடுத்த நல் அசுணம் மா செவிகளைப் பறை அடுத்தது போலும். [கோது இல்-குற்றமில்லாத; நறை- தேன்; அசுணம்-ஸங்கீத இரஸமறியுமோர் பறவை. இனிதான யாழோசை கேட்டு இன்புறுங்கால் பறையோசை காதில் விழுமானால் அப்பறவை மூர்ச்சையடையும் என்பர்.]

9. முத்த மிழ்த்துறை யின்முறை போகிய
உத்த மக்கவி கட்கொன் றுணர்த்துவென்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ.

(இயல் இசை நாடகம் என்கிற) முத்தமிழின் துறைகளின் முறைபோகிய உத்தமக் கவிகளுக்கு (நான்) ஒன்று உணர்த்துவென்; (அது யாதெனில்) பித்தர் சொன்னவும், பேதையர் சொன்னவும், பத்தர் சொன்னவும் பன்னப் பெருபவோ ?

10. அறையு மாடரங் கும்மடப் பிள்ளைகள்
தறையிற் கீறிடிற் றச்சருங் காய்வரோ
இறையு ஞான மிலாதவென் புன்கவி
முறையி னாலுணர்ந் தாரு முனிவரோ.

மடமையையுடைய பிள்ளைகள், தரையில் அறையையும் ஆடுகின்ற அரங்கையும் கீறிடில் (அதைக்கண்டு சிற்ப நூல் வல்ல) தச்சரும் காய்வரோ, (காயார், அதுபோல) இறையும் ஞானம் இலாத என் புன்கவியை (கேட்டு) முறையின் நூல் உணர்ந்தாரும் முனிவரோ (முனியார்) [தச்சர் = சிற்பநூல் வல்லவர். காய்வரோ, முனிவரோ = கோவிப்பார்களோ.]

இந்த நூல் செய்த இடமும் உபகாரியின் பெயரும்.

11. நடையி னின்றுயர் நாயகன் றோற்றத்தின்
இடைநி கழ்ந்த விராமாவ தாரப்பேர்த்
தொடைநி ரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயிற் றந்ததே

நடையில் நின்று உயர்ந்த நாயகனது தோற்றத்தின் இடை நிகழ்ந்த இராமாவதாரம் என்கிற பேரையுடைய தொடை நிரம்பிய தோம் அறு மா கதையானது சடையனது வெண்ணெய் நல்லூர் வயின் தந்தது. [தொடை-செய்யுளின் தொடை; தோம்-குற்றம்; அறு, அற்ற-இல்லாத; தந்தது-செய்யப்பட்டது.]

---

2. ஆற்றுப்படலம்.

சரயு நதியின் அழகை உரைப்போம்.

1. ஆச லம்புரி யைம்பொறி வாளியுங்
காச லம்பு முலையவர் கண்ணெனும்
பூச லம்பு நெறியின் புறஞ்செலாக்
கோச லம்புனை யாற்றணி கூறுவாம்.

ஆசு அலம் புரிகின்ற ஐந்து பொறிகளாகிய வாளியும், காசுகள் அலம்பப்பெற்ற முலைகளையுடையவர்களது கண் எனும் பூசலைத்தருகின்ற அம்பும், நெறியின் புறம் செலாதனவாய் அமைந்த கோசல தேசத்தைப் புனைந்திருக்கின்ற (சரயுவாகிய) ஆற்றினது அணியைக் கூறுவாம். [ஆசு-குற்றத்தை; அலம்-மிகவும்; வாளி-அம்பு; காசு-இரத்தின ஹாரங்கள்; பூசல்-போர்; நெறியின்புறம்-துன்மார்க்கம்; புனை-அலங்கரி; அணி-அழகு.]

மேகங்கள் சிவனைப்போல் வெண்மை நிறமாய்ப்போய்க் கடல் நீரையுண்டு திருமாலைப்போல் கரிய நிறத்தோடு திரும்பின.

2. நீற ணிந்த கடவு ணிறத்தவான்
ஆற ணிந்துசென் றார்கலி மேய்ந்தகிற்
சேற ணிந்த முலைத்திரு மங்கைதன்
வீற ணிந்தவன் மேனியின் மீண்டவே.

(திரு) நீற்றை அணிந்த கடவுளது நிறத்தனவாகிய வான் ஆற்றை அணிந்து சென்று ஆர்கலியை மேய்ந்து, அகிலின் சேற்றை அணிந்த முலைகளையுடைய திருமங்கைதன் வீற்றை அணிந்தவனது மேனிபோல் மீண்டன. [நீறு-விபூதி; வான்-மேகம; ஆறு-போகின்ற வழி; ஆர்கலி-கடல்; வீறு-வேறு ஒன்றினிடத்துமில்லாத பேரழகு.]

நீர் கொண்ட மேகங்கள் பரந்து மலையின்மீது படிந்தது மலையரையனுக்குத் திருமஞ்சனம் செய்விக்கக் கடல் எழுந்தது போன்று இருந்தது.

3. பம்பி மேகம் பரந்தது பானுவால்
நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினன்
அம்பி னாட்டுது மென்றகன் குன்றின்மேல்
இம்பர் வாரி யெழுந்தது போன்றதே.

மேகம் பம்பிப் பரந்த தோற்றமானது, "நம் பன் மாதுலன் பானுவால் வெம்மையை நண்ணினன், (ஆகையால்) அம்பினை ஆட்டுதும்," என்று (எண்ணி) இம்பர் வாரி அகன் குன்றின் மேல் எழுந்தது போன்றது. [பானு-சூரியன்; பன்-துதித்தற்குரிய; மாதுலன்-மாமனாகிய மலையரையன்; அம்பு-நீர்; இம்பர்-இவ்வுலகத்து; வாரி-கடல்.]

மலைமீது படிந்த மேகங்கள் வள்ளியோர்போல மழை சொரிந்தன.

4. புள்ளிமால்வரை பொன்னென நோக்கிவான்
வெள்ளி வீழிடை வீழ்த்தெனத் தாரைகள்
உள்ளியுள்ளவெல் லாமுவந் தீயுமவ்
வள்ளி யோரின் வழங்கின மேகமே.

இமய மால் வரை பொன் எனல் நோக்கி வானத்தில் (உள்ளோர்) வெள்ளி வீழ் களை இடை வீழ்த்தால்என, உள்ளி உள்ள எல்லாம் உவந்து ஈயும் வள்ளியோரைப்போல் மழைத்தாரைகளை மேகங்கள் வழங்கின. [புள்ளி-இமயமலை; வீழ்-கம்பி.]

சொரிந்த மழை வெள்ளம் தயரதனது புகழ் போலவும் அந்தணர்களுக்கு அளித்த தானம்போலவும் பெருகிற்று.

5. மான நேர்ந்தற நோக்கி மனுநெறி
போன தண்குடை வேந்தன் புகழென
ஞான முன்னிய நான்மறை யாளர்கைத்
தான மென்னத் தழைத்தது நீத்தமே.

நீத்தமானது, மானம் நேர்ந்து அறம் நோக்கி மனுநெறி போன தண்மை பொருந்திய குடையையுடைய தசரத வேந்தனது புகழைப் போலவும், ஞானத்தை உன்னிய நான்கு மறை ஆளரது கையிற் கொடுத்த தானம் என்னவும் தழைத்தது. [நீத்தம்-வெள்ளம்.]

பெருகிய வெள்ளம் மலையின்கண் உள்ள பொருள்களை எல்லாம் அடித்துக்கொண்டு பாய்ந்தவேகத்தில் பரத்தையரை ஒத்தது.

6. தலையு மாகமுந் தாளுந் தழீஇயதன்
நிலைநி லாதிறை நின்றது போலவே
மலையி னுள்ள வெலாங்கொண்டு மண்டலால்
விலையின் மாதரை யொத்தவ் வெள்ளமே

தலையையும் ஆகத்தையும் தாளையும் தழீஇய தன் நிலை நிலாது இறை நின்றது போலவே, மலையின்கண் உள்ள எல்லாம் கொண்டு மண்டலால் அவ்வெள்ளம் விலையின்மாதரை ஒத்தது. [இறை-சிறிது நேரம்; மண்டல்-விரைந்துபோதல்; விலையின்மாதர்-வேசையர்.]

அப்பொருள்களைச் சுமந்து சென்ற தொழிலால் அவ்வெள்ளம் வணிகரை ஒத்தது.

7. மணியும் பொன்னும் மயிற்றழைப் பீலியும்
அணியு மானைவெண் கோடுமகிலுந்தன்
இணையி லாரமு மின்னகொண் டேகலான்
வணிக மாக்களை யொத்ததவ் வாரியே.

மணி, பொன், மயில் தழை பீலி, அணியும் ஆனையினது வெண்மையாகிய கோடு, அகில், தனக்கு இணையில்லாத ஆரம், இன்னவைகளைக் கொண்டு ஏகலால், அவ்வாரி வணிகமாக்களை ஒத்தது. [கோடு-தந்தம்; ஆரம்-சந்தனக்கட்டை; வாரி-வெள்ளம்.]

இன்னும் பலபொருள்கள் மிதந்து செல்வதால் அவ்வெள்ளம் நிறத்தில் வானவில்லை ஒத்தது.

8. பூநி ரைத்துமென் றாது பொருந்தியும்
தேன் வளாவியுஞ் செம்பொன் விராவியும்
ஆனை மாமத வாற்றொ டளாவியும்
வான வில்லை நிகர்த்தது வாரியே.

பூக்களை நிரைத்தும், மெல்லிய தாதுக்களைப் பொருந்தியும், தேனுடன் வளாவியும், செம்பொன்னை விராவியும், ஆனைகளுடைய மா மதமாகிய ஆற்றொடு அளாவியும் (வருதலால்) வாரி வான வில்லை நிகர்த்தது. [விராவு, அளாவு-சேர்.]

வெள்ளம் பாய்ந்தபோது செய்யும் செய்கையால் வானரக் கூட்டத்தை ஒத்தது.

9. மலையெ டுத்து மரங்கள் பறித்துமா
டிலைமு தற்பொருள் யாவையு மேந்தலான்

அலைக டற்றலை யன்றணை வேண்டிய
நிலையு டைக்கவி நீத்தமந் நீத்தமே.

மலைகளை எடுத்தும், மரங்களைப் பறித்தும், மாடு உள்ள இலை முதல் பொருள் யாவையும் ஏந்தலால்; அ நீத்தம் அலைகளையுடைய கடல்தலை (சேதுபந்தனம் செய்த) அன்று அணை (கட்ட) வேண்டிய நிலைஉடைக் கவிநீத்தத்தை (ஒத்தது). [மாடு-அருகில்; கடல்தலை-கடலினிடத்தில்; கவி-வானரம்.]

வெள்ளம் புதிய தன்மையில் கள்குடியரை ஒத்தது.

10. ஈக்கள் வண்டொடு மொய்ப்ப வரம்பிகந்
தூக்க மேமிகுந் துட்டெளி வின்றியே
தேக்கெ றிந்து வருதலிற் றீம்புனல்
வாக்குதேனுகர் மாக்களை மானுமே.

ஈக்கள் வண்டொடு மொய்க்கவும், வரம்பை இகந்தும், ஊக்கமே மிகுந்தும், உள் தெளிவு இன்றியும், தேக்கை எறிந்தும், வருதலில், தீம் புனல் வாக்கு தேனை நுகர் மாக்களை மானும். [தேக்கு—தேக்குமரம். தேக்கெறிதல் = ஏப்பமிடுதல். வாக்கு = வார்க்கப்படுகின்ற. மானும் ஒக்கும்.]

வெள்ளம் கடலை நோக்கிப் புரண்டது சமுத்திரராஜன்மேல்
போர் செய்யப் போவதை ஒத்தது.

11. பணைமு கக்களி யானைபன் மாக்களோ
டணிவ குத்தென வீர்த்திரைத் தார்த்தலின்
மணியு டைக்கொடி தோன்றவந் தூன்றலால்
புணரி மேற்பொரப் போவது போன்றதே.

பணை முகத்தையும் களிப்பையும் உடைய யானைகளைப பல் மாக்களோடு அணிவகுத்து என ஈர்த்து இரைத்து ஆர்த்தலினாலும், மணி உடைய கொடிகள் தோன்றவந்து ஊன்றலாலும் (அவ்வெள்ளம்) புணரிமேல் பொரப் போவது போன்றது. [பணை = பருத்த; மா = விலங்கு; ஈர்த்து = இழுத்துக்கொண்டு; ஆர்த்தல் = ஆரவாரம் செய்தல்; மணி = அழகு இரத்தினங்கள்; புணரி = சமுத்திரம்.]

சரயு நதியின் தீர்த்த விசேஷம்.

12. இரவி தன்குலத் தெண்ணில் பல்வேந்தர்தம்
பரவு நல்லொழுக் கின்படி பூண்டது
சரயு வென்பது தாய்முலை யன்னதிவ்
வுரவு நீர்நிலத் தோங்கு முயிர்க்கெலாம்.

இரவிதன் குலத்தில்பிறந்த எண்இல் பல்வேந்தர்தம் பரவுதற்கு உரிய நல் ஒழுக்கின்படிப் பூண்டது (ஆகிய) சரயு என்

பது உரவு நீரால் சூழப்பட்ட இ நிலத்தின்கண்உள்ள ஓங்கும் உயிர்க்கு எலாம் தாய்முலை அன்னது. [இரவி = சூரியன்; பரவு தற்கு = துதித்தற்கு; படி = தன்மை; உரவுநீர் = கடல்நீர். கடல் உலக மெங்கும் சூழ்ந்திருந்தும் சரயுவினது தீர்த்தமே உண்ணீ ராயிற்று எனபதை எடுத்துக் காட்டவே "உரவு நீர் நிலத்து ஓங்கும் உயிர்க்கு எலாம்" என்று கவி கூறுகின்றார்.

சரயுநதி அடித்துவரும் வாசனைத்திரவியங்கள்.

13. கொடிச்சிய ரிடித்த சுண்ணங் குங்குமங் கோட்ட மேலம்
நடுக்குறு சந்தஞ் சிந்தூ ரத்தொடு நரந்த நாகம் [ணெய்
கடுக்கையார் வேங்கை கோங்கு பச்சிலை கண்டில் வெண்
அடுக்கலி னடுத்த தீந்தே னகிலொடு நாறுமன்றே.

கொடிச்சியர் இடித்த சுண்ணம், குங்குமம், கோட்டம், ஏலம், நடுக்குறு சந்தம், சிந்தூரம், நரந்தம், நாகம், கடுக்கை, ஆர், வேங்கை, கோங்கு, பச்சிலை, கண்டில்வெண்ணெய், அடுக்கலின் அடுத்த தீம் தேன், அகில், (இவைகளுடன்கூடி அவ்வெள்ளம்) நாறும். [கொடிச்சியர்-குறத்தியர்; சுண்ணம்-வாசனைப்பொடி; அடுக்கலின் அடுத்தமலையில் கட்டப்பட்ட; மற்ற பெயர்களெல்லாம் மர விசேஷங்கள்.]

பாலைநிலத்தில் பாயும்போது இவ்வெள்ளம் யுத்தம் செய்யும் சேனையை ஒத்தது.

14. எயினர்வாழ் சீறூ ரப்பு மாரியி னிரியல் போக்கி
வயின்வயி னெயிற்றி மாதர் வயிறலைத் தோட வோடி
அயின்முகக் கணையும் வில்லும் வாரிக்கொண் டலைக்கு நீரால்
செயிர்தருங் கொற்ற மன்னர் சேனையை மானுமன்றே.

எயினர் வாழும் சிறு ஊர்களை அப்புமாரியின் இரியல்போக்கி, வயின்வயின் எயிற்றியர்களாகியமாதர் வயிற்றில் அலைத்து ஓட ஓடி அயில் முகமுடைய கணையையும் வில்லையும் வாரிக்கொண்டு அலைக் கும் நீரால் (அவ்வெள்ளம்) செயிரைத்தரும் கொற்ற மன்னர் சேனையை மானும். [எயினர்-வேடர்; அப்புமாரி-சலமாகியமழை. அம்புமாரி; இரியல்போக்கி-ஓடச்செய்து; வயின்வயின்-இடமெல் லாம்; அயில்-கூர்மையான; நீரால்-தன்மையால்; செயிர்-போர். கொற்றம்-வெற்றிபொருந்திய; மானும்-ஒக்கும்.]

முல்லை நிலத்தில் பாயும்போது இவ்வெள்ளம் இழைத்த செய்கைகளில் கண்ணனை ஒத்தது.

15. செறிநறுந் தயிரும் பாலும் வெண்ணெயும் சேர்ந்தநெய்
உறியொடு வாரி யுண்டு குருந்தொடு மருதமுந்தி [யும்

மறிவிழி யாயர்மாதர் வனை துகில் வாரும்நீரால்
பொறிவரி யரவினாடும் புனிதனும் போன்ற தன்றே.

செறிந்த நறும் தயிரையும் பாலையும் வெண்ணெயையும் சேர்ந்த நெய்யையும் உறியொடு வாரி உண்டு குருந்தொடு மருதத்தை உந்தி, மறிபோன்ற விழிகளை உடைய ஆயர்மாதர் வனைந்த துகிலை வாரும் நீரால் (அவ்வெள்ளம்) பொறிகளையும் வரிகளையும் உடைய அரவின் ஆடும் புனிதனையும் ஒத்தது. [செறிந்த-உறைந்த; நறு-மணம் பொருந்திய; குருந்து, மருதம்-மரங்கள்; மறி-மான்; ஆயர்மாதர்-இடைச்சியர்; வனைந்த-உடுத்த; துகில்-புடவை; நீரால்-தன்மையினால்; பொறி-புள்ளி; புனிதன்-பரிசுத்தன், கண்ணன்.]

மருதநிலத்தில் பாய்ந்த அவ்வெள்ளம் யானையை ஒத்தது.

16. கதவினை முட்டி மள்ளர் கையெடுத் தார்ப்ப வெய்தி
நுதலணி யோடை பொங்க நுகர்வரி வண்டு கிண்டத்
ததைமணி சிந்தவுந்தித் தறியிறத் தடக்கை சாய்த்து
மதமழை யானை யென்ன மருதஞ்சென் றடைந்ததன்றே

கதவினை முட்டி மள்ளர் கை எடுத்து ஆர்ப்ப எய்தி, நுதல் அணி ஓடைகள் பொங்கவும், நுகரும் வரிகளை உடைய வண்டுகள் கிண்டவும், ததை மணி சிந்தவும், தறி இறவும், தடம் கை சாய்த்து மதம்மழை யானை என்ன (அவ்வெள்ளம்) மருதம் சென்று அடைந்தது. [ஓடை-பொன் பட்டம், நீர் ஓடைகள்; ததை-நெருங்கிய; தறி-கட்டுத்தறி, தூண்.]

ஒரு நிலத்துள்ள பொருள்களை மற்றோர் நிலத்தின்கண் சேர்த்து
நிலங்களின் தன்மைகளை மாற்றுவதில் வெள்ளம்
இருவினைகளை ஒத்தது.

17. முல்லைக் குறிஞ்சி யாக்கி மருதத்தை முல்லையாக்கிப்
புல்லிய நெய்த றன்னைப் பொருவரு மருத மாக்கி
எல்லையிற் பொருள்க ளெல்லா மிடைதடு மாறு நீராற்
செல்லுறு கதியிற்செல்லும் வினையெனச் சென்றதன்றே

முல்லையை குறிஞ்சி ஆக்கி, மருதத்தை முல்லை ஆக்கி, புல்லிய நெய்தல் தன்னை பொருவு அரு மருதம் ஆக்கி, எல்லையில் (உள்ள) பொருள்கள் எல்லாம் இடை தடுமாறும் நீரால், (உயிர்கள்) செல் உறும் கதியில் செல்லும் வினை என (அவ்வெள்ளம்) சென்றது [பொருவுஅரும்-இணையற்ற; எல்லையில்-அவ்வவ்விடங்களிலுள்ள; நீரால்-தன்மையால்; வினை-கருமம்.]

அவ்வாற்று வெள்ளம் கிளைகளாகப்பிரிந்ததில்
குலபரம்பரையை ஒத்தது.

18. காத்தகான் மள்ளர் வெள்ளக் கலிப்பறை கறங்கக் கைபோய்ச்
சேர்த்தநீர்த் திவலை பொன்னு முத்தொடுதிரையின் வீசி
நீத்தமாந் தலைய வாகி நிமிர்ந்துபார் கிழிய நீண்டு
கோத்தகா லொன்றி னொன்று குலமெனப்பிரிந்தவன்றே

காத்த கால்களையுடைய மள்ளர்களது வெள்ளம் வருவதை யுணர்த்தும் கலிக்கின்ற பறைகள் கறங்கவும், கைபோய் நீர் திவலைகள் சேர்த்த பொன்னும் முத்தொடு திரையினால் வீசியும், நீத்தம் ஆம் தலைய ஆகி நிமிர்ந்து பார்கிழிய நீண்டும், கோத்த கால்கள் ஒன்றின் ஒன்று குலம் என பிரிந்த. [காத்தகால்-தம்மால் காக்கப்பட்ட நீர்க்கால்கள்; கலி-ஒலிக்கின்ற; கறங்க-ஒலிக்க; கைபோய்-ஒழுங்காகச்சென்று; திரை-அலைகள்.]

ஒரே வெள்ளம்பல துறைகளில் படிந்ததில் அது
பரம்பொருளை ஒத்தது.

19. கல்லிடைப் பிறந்துபோந்து கடலிடைக்
கலந்த நீத்தம்
எல்லையின் மறைக ளாலு மியம்பரும்
பொருளீ தென்னத்
தொல்லையி னொன்றே யாகித் துறைதொறும்
பரந்த சூழ்ச்சி
பல்பெருஞ் சமயஞ் சொல்லும் பொருளும் போற்
பரந்ததன்றே.

கல் இடை பிறந்து கடல் இடை கலந்த நீத்தமானது தொல்லையின் ஒன்றே ஆகினும் துறை தொறும் பரந்த சூழ்ச்சியால் எல்லை இல் மறைகளாலும் இயம்ப அரும் பல் பெரும் சமயங்களும் ஈது என்று சொல்லும் பரம்பொருளைப் போல் பரந்தது. [கல்-மலை; நீத்தம்-வெள்ளம்; தொல்லையின்-ஆதியில்; துறை-குளம், ஏரி, வாய்க்கால் முதலிய இடங்கள்; சூழ்ச்சி-விசேஷத்தால்; மறை-வேதங்கள்; இயம்பஅரும்-சொல்வதற்கு அருமையான.]

இவ்வெள்ளம் எங்கும் வியாபித்திருந்ததால் உயிரையும் ஒத்தது

20. தாதுகு சோலைதோறுஞ் சண்பகக்காடு தோறும் [றும்
போதவிழ் பொய்கைதோறும் புதுமணற் றடங்கடோ
மாதவி வேலிப் பூக வனந்தொறும் வயல்கடோறும்
ஓதிய வுடம்பு தோறு முயிரென வுலாய தன்றே.

(அவ்வெள்ளம்) தாதுக்களை உகுக்கும் சோலைகள் தோறும், சண்பகக் காடுதோறும், போது அவிழ்கின்ற பொய்கைகள் தோறும், புது மணல் தடங்கள் தோறும், மாதவி வேலியையுடைய பூகம் வனம் தோறும், வயல்கள் தோறும், ஓதிய உடம்பு தோறும் உயிர் என உலாயது. [தாது-மகரந்தம்; போது-அரும்புகள்; பூகம்-பாக்குமரம்; உலாயது-உலாவியது.]

---

3. நாட்டுப் படலம்.

வான்மீகி முனிவருக்கு எதிரில் நான் ஊமையனை ஒப்பேன்.

1. வாங்கரும் பாதநான்கும் வகுத்தவான் மீகி யென்பான்
தீங்கவி செவிக ளாரத் தேவரும் பருகச் செய்தான்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை யன்பெனு நறவ மாந்தி
மூங்கையான் பேசலுற்றா னென்னயான் மொழியலுற்றேன்.

வாங்க அரும் பாதம் நான்கையும் வகுத்த வான்மீகி என்பான், தேவரும் செவிகள் ஆர பருக தீம் கவி செய்தான், யானோ அன்பு எனும் நறவை மாந்தி மூங்கையான் பேசல் உற்றான் என, ஆங்கு அவன் புகழ்ந்த நாட்டை மொழியல் உற்றேன். [பாதம் நான்கு-நான்கு அடிகளை, வகுத்த-சுலோகங்களுக்கு அமைத்த, தீம்-மதுரமான. நறவம்-கள். மாந்தி-குடித்து. மூங்கையான்-ஊமையன்.]

நாட்டின்கண் மலிந்து கிடந்த பொருள்கள்.

2. வரம்பெலா முத்தந் தத்து
மடையெலாம் பணில மாநீர்க்
குரம்பெலாஞ் செம்பொன் மேதிக்
குழியெலாம் கழுநீர்க் கொள்ளை
பரம்பெலாம் பவளஞ் சாலிப்
பரப்பெலா மன்னம் பாங்கர்க்
கரம்பெலாஞ் செந்தேன் சந்தக்
காவெலாங் களிவண் டீட்டம்.

வரம்பு எலாம் முத்தம், தத்தும் மடை எலாம் பணிலம், மாநீர் குரம்பு எலாம் செம் பொன், மேதி (படிகின்ற) குழி எலாம் கழுநீர் கொள்ளை, பரம்பு எலாம் பவளம்; சாலி பரப்பு எலாம் அன்னம்; பாங்கர் (உள்ள) கரம்பு எலாம் செம் தேன், சந்தம் கா எலாம் களி வண்டு ஈட்டம். [பணிலம்-சங்கு; மேதி-எருமை; கழுநீர்-செங்கழுநீர்மலர்; சாலி-நெல் வயல்; சந்தம்-அழகிய. கா-சோலை. ஈட்டம்-கூட்டம்.]

நாட்டின்கண் இடைவிடாது முழங்கும் பலவகை ஓசைகள்.

3. ஆறுபா யரவ மள்ள ராலைபா யமலை யாலைச்
சாறுபா யோசை வேலைச் சங்குவாய் பொங்கு மோதை
ஏறுபாய் தமரநீரி லெருமைபாய் துழனியின்ன
மாறுமா றாகித் தம்மின் மயங்குமா மருதவேலி.

மருதவேலியில், ஆறு பாய்கின்ற அரவமும், மள்ளர் ஆலைபாய்ச்சுகின்ற அமலையும், ஆலையினின்று சாறு பாயும் ஓசையும், வேலையிலுள்ள சங்கின் வாயில் பொங்கும் ஓதையும், ஏறு பாய்கின்ற தமரமும், எருமை நீரில் பாய்கின்ற துழனியும், இன்ன (பிற ஒலிகளும்) மாறு மாறு ஆகி தம்மின் மயங்கும். [அரவம் அமலை ஓசை ஓதை தமரம் துழனி-ஓசை. ஒரு பொருள். வேலை-கடல். ஏறு-எருது; மருதவேலி-வயலும் வயலைசசார்ந்த இடமும்.]

மருத நிலமானது அரசு வீற்றிருந்தது போன்றிருந்தது.

4. தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கண் முழவி னேங்கக்குவளைகண் விழித்துநோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகரயாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ.

தண்டலைகளில் மயில்கள் ஆடவும், தாமரை விளக்கம் தாங்கவும் கொண்டல்கள் முழவின் ஏங்கவும், குவளைமலர்கள் கண்ணை விழித்து நோக்கவும், தெண் திரைகள் எழினியை காட்டவும், வண்டுகள் தேம் பிழி மகரயாழின் இனிது பாடவும் (பெற்று) மருதம் (அரசு) வீற்றிருக்கும். [தண்டலை-சோலை. கொண்டல்-மேகம். முழவின்-மத்தளம்போல. திரை-அலை. எழினி-திரைச்சீலை. தேம்பிழி மகரயாழின்-இனியதேன் சொரிவது ஒத்த மகர வீணையைப்போல்]

அந்நாட்டில் எவையெவை எங்கெங்கு தங்கியிருந்தன என்பது.

5. தாமரைப் படுவவண்டுந் தகைவருந் திருவுந் தண்டார்க்
காமுகர்ப் படுவ மாதர் கண்களுங் காமனம்பும்
மாமுகிற் படுவ வாரிப் பவளமும் வயங்கு முத்தும்
நாமுதற் படுவ மெய்யு நாமநூற் பொருளுமன்னே.

வண்டும் தகை வரும் திருவும் தாமரையின்கண் படுவ; மாதரது கண்களும் காமனது அம்பும் தண் தாரை (அணிந்த) காமுகர்மீது படுவ; வாரியின்கண் உண்டாகின்ற பவளமும் வயங்கும் முத்தும் மாமுகிலிடத்தில் படுவ; மெய்யும் நாமம் நூல் பொருளும் (மக்களது) நா முதல் படுவ. [தகை வரும்-அழகு வளர்கின்ற. தண்தார்-குளிர்ச்சி பொருந்திய பூமாலை. வாரி-கடல். வயங்கும்-பிரகாசிக்கிற. நாமம்-பிரபலமான. படுவ-தங்குவன.]

எவையெவை எங்கெங்கு உறங்கியிருந்தன, என்பது.

6. நீரிடை யுறங்குஞ் சங்க நிழலிடை யுறங்கு மேதி
தாரிடை யுறங்கும்வண்டு தாமரை யுறங்குஞ் செய்யாள்
தூரிடை யுறங்கு மாமை துறையிடை யுறங்கு மிப்பி
போரிடை யுறங்கு மன்னம் பொழிலிடை யுறங்குந் தோகை.

சங்கம் நீர்இடை உறங்கும், மேதி நிழல் இடை உறங்கும், வண்டு தார் இடை உறங்கும், செய்யாள் தாமரையில் உறங்கும், ஆமை தூர் இடை உறங்கும், இப்பி துறையிடை உறங்கும், அன்னம் போர் இடை உறங்கும், தோகை பொழில் இடை உறங்கும். [செய்யாள்-இலக்குமி. தூர்-மரவேர். இப்பி-சிப்பி. போர்-நெல்போர். பொழில்-சோலை. தோகை-மயில்.]

7. படையுழ வெழுந்த பொன்னும் பணிலங்க ளுயிர்த்த முத்தும்
இடறிய பரம்பிற் காந்து மினமணித் தொகையு நெல்லும்
மிடைபசுங் கதிரு மீனு மென்றழைக் கரும்பும் வண்டும்
கடைசியர் முகமும் போதுங் கண்மலர்ந் தொளிரு மாதோ.

படையானது உழ எழுந்த பொன்னும், பணிலங்கள் உயிர்த்த முத்தும், இடறிய பரமபில் காந்தும் இனம் மணி தொகையும், நெல்லும், மிடைந்த பசும் கதிரை ஈனும். மென் தழையுடைய கரும்பு கண (கணுக்கள்) மலர்ந்தும், வண்டுகள் (மாதர்)கண் போல் மலர்ந்தும், கடைசியரது முகம் கண் மலர்ந்தும், போது கள் மலர்ந்தும் ஒளிரும். [படை-கலப்பை. பணிலம்-சங்கு. காந்தும்-பிரகாசிக்கிற. மிடை-நெருங்கிய. கதிர்-ஒளி, நெல்கதிர். கடைசியர்-உழத்தியர். போது-மலர்கள்.]

பாணர் பாடல்கள் மாளிகைக்கண் மடவாரைத் துயிலெழுப்பும்.

8. தெள்விளி சிறியாழ்ப் பாணர் தேம்பிழி நறவ மாந்தி
வள்விசி கருவி பம்ப வயின்வயின் வழங்கு பாடல்
வெள்ளி வெண் மாடத்தும்பர் வெயில்விரி பசும்பொற் பள்ளி
எள்ளருங் கருங்கட் டோகை யின்றுயி லெழுப்பு மன்றே.

தெள்விளியை பாடுதற்குரிய சிறிய யாழ்கொண்டு, வள்ளால் விசிக்கப்பட்ட கருவிகள் பம்ப, பாணர் தேம் பிழி நறவம் மாந்தி வயின்வயின் வழங்கும் பாடலானது, வெள்ளிபோன்ற வெண்மையையுடைய மாடத்து உம்பர் வெயிலை விரிக்கின்ற பசும் பொன்னால் செய்த பள்ளிகளில் (நித்திரை செய்கிற) எள்ளுவதற்கு அருமை பொருந்திய கண்களையுடைய தோகைபோன்ற மாதர்களை இன் துயிலினின்று எழுப்பும். [தெள்விளி-ஒருவித பண்ணைப் பாடல். வள் விசி-வாரினால் இறுக்கிய. வெயில்-பிரகாசம்.]

பலவிடங்களினின்றும் பெருகும் தேனைப்பருகி மீனெலாம் களிக்கும்

9. ஆலைவாய்க் கரும்பின் றேனு மரிதலைப் பாளைத் தேனும்
சோலைவாய்க் கனியின் றேனுந் தொடையிழி யிறாலின் றேனு

மாலைவா யுகுத்த தேனும் வரம்பிகந் தோடி வங்க
வேலைவாய் மடுப்ப வுண்டு மீனெலாங் களிக்கு மாதோ.

ஆலைவாய் (சிதையும்) கரும்பின் தேனும், அரிந்த தலைகளை யுடைய பாளை(யினின்று ஒழுகும்) தேனும், சோலைவாய் கனியின் தேனும், தொடையாக இழியும் இறாலின் தேனும், மாலைவாய் உகுத்த தேனும், வரம்பு இகந்து ஓடி வங்கம் (இயங்கும்) வேலை வாய் மடுப்ப (அதை) உண்டு மீன் எலாம் களிக்கும். [இறால்-தேன் கூடு. மாலை-பூமாலைகள். வங்கம்-கப்பல். வேலை-கடல்.]

தம் காதலிகளது அவயவங்களை ஒத்தனவாகவே களைகள் இருந்தன வாதால் மள்ளர் நேயத்தால் அவைகளைக் களையாதிருந்தனர்.

10. பண்கள்வாய் மிழற்று மின்சொற் கடைசியர் பரந்து நீண்ட
கண்கைகான் முகம்வா யொக்குங் களையலாற் களையி லாமை
உண்கள்வார் கடைவாய் மள்ளர் களைகலாது லாவி நிற்பார்
பெண்கள்பால்வைத்தநேயம்பிழைப்பரோசிறியோர் பெற்றால்.

பண்கள்போல் இன் சொற்களை வாய்மிழற்றும் கடைசியரது பரந்து நீண்ட கண் (ஒக்கும் குவளையும்) கை கால் முகம் (ஒக்கும் தாமரையும்) வாய் ஒக்கும் (செவ்வாம்பலும் ஆகிய) களை அலால் (வேறு) களை இலாமையால்; (வயல்களில் களை யெடுக்கச் சென்ற) உண்ட கள் வார்கின்ற கடைவாயுடன் கூடிய மள்ளர் களைகலாது உலாவி நிற்பார். சிறியோர் பெண்கள்பால் வைத்த நேயம் பிழைப்பரோ. பெற்றால். [களைகலாது-களையைக் களைய இயலாதவர்களாய். பிழைப்பரோ-தவறுவார்களோ.]

'பெற்றால்' என்னுமிப்பதம் வந்து அவ்வடியின் பொருளைச் சிறிது மயங்கச் செய்கின்றது. பாடம் வேறாயிருத்தலும் கூடும்.

மாதராடிய நீர் கலந்து கடல் மிக்க பரிமளமுள்ளதா யிற்று.

11. புதுப்புனல் குடையு மாதர் பூவொடு நாவி பூத்த
கதுப்புறுவெறியே நாறுங்கருங்கடற்றரங்க மென்றால்
மதுப்பொதி மழலைச் செவ்வாய் வாட்கடைக் கண்ணின் மைந்
தர் விதுப்புற நோக்கு மன்னார் மிகுதியை விளம்ப லாமே.

புதியதாய் வருகின்ற ஆற்றினது புனலில் குடையும் மாதரது பூவொடு நாவியும் பூத்த கதுப்பில் உறும் வெறியே கரும் கடலின் தரங்கம் நாறும் என்றால், வாள் போன்ற கடைக் கண்ணினால் மைந்தர் விதுப்புற நோக்கும் மதுப் பொதிந்த மழலை (சொற்களுடன் கூடிய) செவந்த வாயை (யுடைய) அன்னார் (அம்மாதர்களது) மிகுதியை விளம்பல் ஆமே. [புனல்-நீர். குடையும்-மூழ்குகின்ற. நாவி-கஸ்தூரி. கதுப்பு-கூந்தல். வெறி-வாசனை தரங்கம்-அலை. பொதி-நிரம்பிய. விதுப்புற-காதல் கொள்ள.]

ஆடவராடிய நீரில் வண்டு மொய்த்திருக்கும்.

12. வெண்டளக் கலவைச் சேறுங் குங்கும விரைமென் சாந்தும்
குண்டலக் கோல மைந்தர் குடைந்தநீர்க் கொள்ளை சாற்றில்
தண்டலைப் பரப்புஞ் சாலி வேலியுந்தழீஇய வைப்பும்
வண்டலிட் டோடு மண்ணு மதுகர மொய்க்கு மாதோ.

குண்டலம் தரித்த கோலம் உடைய மைந்தர் குடைந்த நீரில், வெண்மையான தளம் பொருந்திய கலவை சேறு, குங்குமம், விரை, மென் சாந்து (இவைகளின்) கொள்ளையை (நாம்) சாற்றில்—தண்டலை பரப்பும், சாலிவேலியும், (அதை) தழீஇய வைப்பும், வண்டல் இட்டு ஓடும் மண்ணும், மதுகரம் மொய்க்கும். [தளம்-கனமான. விரை-வாசனைப் பொருள்கள். கொள்ளை-மிகுதி. மதுகரம்-வண்டு.]

தேரை தாலாட்ட அன்னக் குஞ்சுகள் எருமைப் பாலுண்டு
பண்ணையில் துயிலும்.

13. சேலுண்ட வொண்கணாரிற் றிரிகின்ற செங்கா லன்னம்
மாலுண்ட நளினப்பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை
காலுண்ட சேற்றுமேதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத் தேரைதா ராட்டும் பண்ணை.

பண்ணையில், சேலை உண்ட ஒண் கண்ணார்போல் திரிகின்ற செம் காலை (உடைய) அன்னமானது, மால் உண்ட நளினம் (ஆகிய) பள்ளியில் வளர்த்திய (அதன்) மழலை பிள்ளைகள், சேற்றை காலில் உண்ட மேதி (வீட்டில் விட்ட) கன்றை உள்ளி கனைப்ப (அப்பொழுது) சோர்ந்த பாலை உண்டு துயில (அங்குள்ள) பச்சை தேரை (அவைகளை) தாராட்டும். [சேல் உண்ட-சேல் மீனை ஒத்த. ஒண்-ஒளி பொருந்திய. மால் உண்ட-பெருமை தங்கிய. நளினம்-தாமரை.]

சோலையில், மயில்களாடக் குயில்கள் வதுவை செய்தன.
தும்பிகள் பாட அன்னங்கள் துயில் எழுந்தன.

14. குயிலினம் வதுவை செய்யக் கொம்பிடைக் குனிக்கு மஞ்ஞை
அயில்விழி மகளி ராடு மரங்கினுக் கழகு செய்யப்
பயில்சிறை யரச வன்னம் பனிமலர்ப் பள்ளி நின்றும்
துயிலெழத் தும்பி காலைச் செவ்வழி முரல்வ சோலை.

சோலைகளில், குனிக்கும் மஞ்ஞை (அச்சோலை இடங்களை) அயில் போன்ற விழிகளையுடைய (நாட்டிய) மகளிர் ஆடும் அரங்கைவிட அழகு (பெறும்படி) செய்ய (அதுகண்டு) கொம்பு இடை குயில் இனம் வதுவை செய்யவும்; பயின்ற சிறையையுடைய அரச அன்னம் பனிமலர் (ஆகிய தமது) பள்ளிகளினின்றும் துயில் எழும் வண்ணம் தும்பிகள் காலையில் செவ்வழி (என்னும் உதயராகப் பண்

களை) முரல்வன. [குனிக்கும்-ஆடுகின்ற. மஞ்ஞை-மயில். பயின்ற-நெருங்கிய. முரல்வ-பாடுவன.]

அந்நாட்டோர் தம் காலத்தை எவ்வெவ்வாறு கழித்தார்களென்பது.

15. பொருந்திய மகளி ரோடு வதுவையிற் பொருந்து வாரும்
பருந்தொடு நிழல்சென் றன்ன வியலிசைப் பயன்றுய்ப் பாரும்
மருந்தினு மினிய கேள்வி செவியுற மாந்து வாரும்
விருந்தினர் முகங்கண் டன்ன விழாவணி விரும்பு வாரும்.

பொருந்திய மகளிரோடு வதுவையில் பொருந்துவாரும், பருந்தொடு (அதன்) நிழல் சென்றன்ன இயல் (அமைந்த) இசையினது பயனை துய்ப்பாரும், மருந்தினும் இனிய கேள்விகளை செவிஉற மாந்துவாரும், விருந்தினரது முகங்கண்டு அன்னம் (இடும்) விழாவின் அணியை விரும்புவாரும். [வதுவை-விவாகம், இயல்-இலக்கணம், துய்ப்பாரும்-அநுபவிப்பவர்களும், மருந்து-அமிர்தம், கேள்வி-சுருதிகள்.]

சிலர் சேவல்போர் விளைத்தனர்.

16. கறுப்புறு மனமுங் கண்ணிற் செவப்புறு சூட்டுங் காட்டி
உறுப்புறு படையிற் றாக்கி யுறுபகையின்றிச் சீறி
வெறுப்பில களிப்பின் வெம்போர் மதுகைய வீர வாழ்க்கை
மறுப்பட வாவி பேணு வாரணம் பொருத்து வாரும்.

(தமது) வீர வாழ்க்கை மறு படுமாயின் (பிறகு) ஆவியையும் பேணாத மதுகைய வாரணங்கள், உறுபகை இன்றியே சீறி, கறுப்பு உறு மனமும் (தம்) கண்போல் செவப்பு உறு சூட்டும் காட்டி, (காலாகிய) உறுப்பில் உற்ற (முள்ளாகிய) படையினால் தாக்கி, வெறுப்பு இலவாய் களிப்பினால் (ஒன்றோடொன்று) வெம்போர் (செய்யும் வண்ணம்) பொருத்துவார். [மதுகைய-வலியையுடைய, வாரணம்-சேவல் கோழி, சூட்டு-கொண்டை, உறு-பொருந்திய.]

எருமைக்கடாக்கள் சண்டை யிடக்கண்டு ஆரவாரம் செய்தனர்.

17. எருமைநா கீன்ற செங்கணேற்றையோ டேற்றை சீற்றத்
துருமிவை யென்னத் தாக்கி யூழுற நெருக்கி யொன்றாய்
விரியிரு ளிரண்டு கூறாய் வெகுண்டன வனைய நோக்கி
அரியினங் குஞ்சி யார்ப்ப மஞ்சுற வார்க்கின் றாரும்.

எருமை நாகு ஈன்ற செம் கண்களையுடைய ஏற்றோடு ஏற்றை, இவை உருமு என்ன தாக்கவும், (அவற்றை) ஊழ் உற ஒன்றாய் நெருக்கியும் (சிலர் வைக்க) (அதனால்) விரிந்த இருள் இரண்டுகூறாய் வெகுண்டன அனைய (அக் கடாக்கள் தோன்றலால், அவைகளை) நோக்கி, அரி இனம் (தமது) குஞ்சிகளில் ஆர்ப்ப, மஞ்சு உற ஆர்க்கின்றாரும். [எருமைநாகு-பெண் எருமை. ஏறு-கடா. உருமு-இடி.

ஊழ்-பகை. வெகுண்டன அனைய-கோவித்துப் பிரிந்ததுபோல். 4-வது அடி :—வண்டு இனங்கள் தம் சிகைகளில் ஆரவாரம் செய்ய மேகம் போல் சப்தம் செய்கின்றவர்களும்.]

உழுகின்ற கடாக்களை அதட்டி ஓட்டினர் சில மள்ளர்.

18. முள்ளரை முளரி வெள்ளை முளையிற முத்தும் பொன்னுந்
தள்ளுற மணிகள் சிந்தச் சலஞ்சலம் புலம்பச் சாலில்
துள்ளிமீன் றுடிப்ப வாமை தலைபுடை சுரிப்பத் தூம்பி
னுள்வரா லொளிப்ப மள்ள ருழுபக டுரப்பு வாரும்.

சாலில் முள் அரைகளையுடைய முளரியின் வெள்ளை நிறமான முளைகள் இறவும், முத்தும் பொன்னும் தள்ளுறவும், மணிகள் சிந்தவும், சலஞ்சலம் புலம்பவும், மீன் துள்ளி துடிக்கவும், ஆமை தலையையும் புடையிலுள்ள உறுப்புகளையும் சுரிக்கவும், வரால் தூம்பின் உள் ஒளிக்கவும் (உரத்த குரலில்) மள்ளர் உழுகின்ற பகடுகளை உரப்புவார். [சால்-படைச்சால். முளரி-தாமரை. சலஞ்சலம்-ஒரு வகைச்சங்கு. தூம்பு-மதகு. பகடு-எருது. உரப்புவார்-அதட்டுவார்.]

அந்தணர் விருந்தொடு அமுதுண்டு வாழ்ந்தனர்.

19. முந்துமுக் கனியி னூறு முதிரையின் முழுத்த நெய்யிற்
செந்தயிர்க் கண்டங் கண்ட மிடையிடை செறிந்த சோற்றில்
தந்தமி லிருந்து தாமும் விருந்தொடுந் தமரி னேடும்
அந்தண ரமுத ருண்டிய யில்வுறு மமலைத் தெங்கும்.

(அந்நாடு) எங்கும், முந்தும் முக்கனியாலும், நாறு முதிரையாலும், (அவைகளை) முழுத்த (விடுகிற) நெய்யினாலும், செம்தயிர் கண்டங்களாலும், கண்டங்களாலும் இடை இடை செறிந்த சோற்றை, அந்தணர்தம்தம் இல்லில் இருந்து தாமும் விருந்தொடும், தமரோடும் அமுதர் உண்டிபோல் அயில்வு உறும் அமலைத்து. [முதிரை-துவரை முதலிய பருப்பினங்கள். கண்டம்-கண்ட சர்க்கரை. தமர்-சுற்றத்தார். அமுதருண்டி அயில்வுறும்-அமிர்தம்போல் இனிதாக உண்ணுகிற. அமலைத்து-ஆரவாரம் உடையது.]

கப்பல்கள் பலபொருள்களைத் துறைமுகத்தில் இறக்கின.

20. முறையறிந் தவாவை நீக்கி முனிவுழி முனிந்து வெஃகும்
இறையறிந் துயிர்க்கு நல்கு மிசைகெழு வேந்தன் காக்கப்
பொறைதவிர்ந் துயிர்க்குந் தெய்வப் பூதலந் தன்னிற் பொன்
னிறைபரஞ் சொரிந்து வங்க நெடுமுது காற்று நெய்தல். [னின்

(மநு) முறையை அறிந்து அவாவை நீக்கி முனிவுழி முனிந்து வெஃகும் இறையை அறிந்து (வாங்கி, அதை) உயிர்க்கு நல்கும் இசைகெழு (தயாத) வேந்தன் காக்க, (அதனால் தனது) பொறையை தவிர்ந்து உயிர்க்கும் தெய்வத்தன்மையுடைய பூதலம் தன்னில் (அல்லது ‘ தன்னைப்போல் ’) வங்கம் நெய்தல் நிலத்தில் பொன்

னின் நிறை பரம் சொரிந்து (தனது) நெடு முதுகை ஆற்றும். [அவா-ஆசை. முனிவுழி-கோவிக்கவேண்டுமிடத்தில். வெஃகும்-இறையறிந்து உயிர்க்கு நல்கும் இசை கெழுவேந்தன்-தான் குடிக ளிடத்தில் வாங்கக்கூடிய வரி எவ்வளவு என்பதைத் தேர்ந்து வாங்கி, அவ்வாறு வாங்கிய இறைப்பொருளை மறுபடி குடிகளின்பாலே பயன் படுத்தும் கீர்த்தி மிகுந்த தயரதன். பொறை, பரம்-பாரம். உயிர்க்கும்-இளைப்பாறுகின்ற. நெய்தல்-கடல்சார்ந்த இடம்.]

குறிப்பு:—“பொறையொருங்கு மேல்வருங் காற் றாங்கி யிறைவற் கிறை யொருங்கு நேர்வது நாடு” என்னும் இக் குறள் பா இங்கு கருதத்தக்கது.

சிலர், விளைந்த பொருள்களை வண்டியிலேற்றி வீட்டில் சேர்ப்பார்

21. எறிதரு மரியின் சும்மை யெடுத்துவா னிட்ட போர்கள் [வார்
குறிகளும் போற்றிக் கொள்வார் கொன்றநெற் குவைகள் செய்
வறியவர்க் குதவி மிக்க விருந்துண மனையி னுய்ப்பான்
நெறிகளும் புதையப் பண்டி நிரைத்துமண் ணெளிய வூர்வார்.

(சிலர்) எறிதரும் அரியின் சும்மையை எடுத்து வான் அளவு இட்ட (நெல்) போர்களில் குறிகளும் போற்றி கொள்வார். கொன்ற நெல்லை குவைகள் செய்வார். (களத்திலேயே) வறிய வர்க்கு உதவி. மிக்க (நெல்லை) விருந்தினர் உண்ண மனையில் உய்ப்பதற்கு பண்டிகளில் நிறைத்து நெறிகள் புதைய மண்ணும் நெளிய (அப்பண்டிகளை) ஊர்வார். [எறிதரும்-அரியப்பட்ட. அரி-நெல்லரி.]

குறிப்பு:—களத்திலேயே நெல்லை உதவி மிகுந்ததையும் விருந்தினர் உண்ணவே அந்நாட்டோர் தம் வீட்டிற்குக் கொண்டு போயினர் என்றபடியாற்றான், “வித்து மிடல் வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி மிச்சின் மிசைவான் புலம்” என்று வினவும் குறளடிகளுக்கு விடையாகக் கம்பர், கோசல தேசத்தில் விதைவிதைத்ததாக இப்படலத்தி லெங் கும் சொல்லாதிருக்கின்றனர் போலும்.

வண்டுகள் போல் மள்ளர் பொருள்களைச் சேகரம் செய்தனர்.

22. கதிர்படு வயலி னுள்ள கடிகமழ் பொழிலி னுள்ள
முதிர்பல மரத்தி னுள்ள முதிரைகள் புறவி னுள்ள
பதிபடு கொடியி னுள்ள படிவளர் குழியி னுள்ள [வார்.
மதுவன மலரிற் கொள்ளும் வண்டென மள்ளர் கொள்

மள்ளர் கதிர்கள் படுகின்ற வயலில் உள்ளவைகளையும், கடி கமழும் பொழிலின் உள்ளவைகளையும், முதிர்ந்த பல மரத்தில் உள்

ளவைகளேயும், முதிரைகளேயும், புறவில் உள்ளவைகளேயும், பதிக்கப்படுகின்ற கொடியில் உள்ளவைகளேயும், படியில் வளர்கின்ற குழியில் உள்ளவைகளேயும், வனத்து மலரில் உள்ள மதுவை கொள்ளும் வண்டு என கொள்வார். [கடி-வாசனே. புறவு-முல்லைநிலம். படி-தரை.]

குறிப்பு :—தமது முயற்சி இன்றியே விளைந்துள சிறந்த பொருள்களை நாடிச் சாரத்தையே கிரகித்து இனத்தவர் பொதுப்பயன் கருதியே சேர்த்தலில் மள்ளற்கு ஏற்ற உவமை மதுகரமாயது.

பெண்கள் கண்களைத் தம் பெடையென வண்டினம் மயங்கின.

23. பருவ மங்கையர் பங்கய வாண்முகத்
துருவ வுண்கணே யொண்பெடை யாமெனக்
கருதி யன்பொடு காமுற்று வைகலும்
மருத வேலியின் வைகின வண்டரோ.

(ஆண்) வண்டுகள், மங்கை பருவத்தவரது பங்கயம் போன்ற வாள் முகத்து (உள்ள) உருவும் அ (மையை) உண்ட கண்ணே, (தமது) ஒண் பெடை ஆம் என கருதி அன்பொடு காமம் உற்று வைகலும் மருதவேலியில் வைகின. [வாள்-பிரகாசமான. ஒண்-அழகு பொருந்திய. வைகலும்-நாள்தோறும். கணே-கண்ணே. கணே என்பதை உவமை ஆகு பெயராகக் கொண்டு (உடலில்) உருவிச் சென்று உயிரை உண்ணும் கணே (அம்பு) போன்ற ‘கண்’ என்றுங் கொள்ளலாம்.

24. வேளை வென்ற முகத்தியர் வெம்முலே
ஆளை நின்று முனிந்திடு மங்கொர்பால்
பாளை தந்த மதுப்பரு கிப்பரு
வாளை நின்று மதர்க்கு மருங்கெலாம்.

அங்கு ஓர் பால், வேளையும் வென்ற முகத்தையுடைய மாதர்களது வெம்மை (தருகின்ற) முலைகள் ஆளை நின்று முனிந்திடும்; மருங்கு எலாம் பருவாளை மீன்கள் தென்னம் பாளைகள் தந்த மதுவைப் பருகி நின்று மதர்க்கும். [வேள்-மன்மதன். வெம்மை-விருப்பம் ஆள்-ஆடவர்கள். முனிந்திடும்-வருத்தும். மதர்க்கும்-களிக்கும்.]

அந்நாட்டு நெல்பயிர் எருமைப்பால் பெற்றுத்தழைத்தன.

25. ஈர நீர்ப்படிந் திந்நிலத் தேசில
கார்க ளென்ன வருங்கரு மேதிகள்

ஊரி னின்றகன் றுள்ளிட வுண்முலை
தாரை கொள்ளத் தழைப்பன சாலியே.

ஈரமாகிய நீரில் படிந்து (பின்) இந்நிலத்தே (வரும்) சில கார்கள் என்னும்படி வரும் கருநிற மேதிகள், ஊரில் நின்ற (தமது) கன்று களை உள்ளிட (அதனால், அக்கன்றுகள்) உண்ணத்தக்க முலைகள் (பால்) தாரை கொள்ள (அந்தத்தாரைகளால்) சாலிதழைப்பன. [கார்-மேகம். மேதி-எருமை. உள்ளிட-நினைக்க. சாலி-நெல்பயிர்.]

கழுநீர் பாய்ந்து நெல் வளரும்.

26. முட்டி லட்டின் முழங்குற வாக்கிய
நெட்டு லைக்கழு நீர்நெடு நீத்தந்தான்
பட்டமென் கமு கோங்கு படப்பைபோய்
நட்ட செந்நெலி னாறு வளர்க்குமே.

முட்டு இல்லாத அடுகின்ற இல்லில் முழங்கு உற வாக்கிய நெடு உலைகளினது கழுநீரின் நெடும் நீத்தம் பட்டமாய் வளர்ந்த மெல் லிய கமுகு ஓங்கும் படப்பையைக் கடந்துபோய் நட்ட செம் நெல் லினது நாறை வளர்க்கும். [அடு-சமைக்கின்ற. படப்பை-சோலை.]

மாணிக்கத்தை மின்மினி எனத் தம் கூட்டில் குருவிகள் சேர்க்கும்.

27. சூட்டு டைத்துணைத் தூநிற வாரணம்
தாட்டு ணைக்குடை யுந்தகை சான்மணி
மேட்டி மைப்பன மின்மினி யாமெனக்
கூட்டி னுய்க்குங் குரீஇக் குழாமரோ.

துணையாகிய பெடையோடுங் கூடி சூட்டை உடைய தூய்மை யான நிறம் பொருந்திய வாரணம் (தமது) தாள் துணையாலும் குடையும் (போது வெளிப்படும்) தகை சால் மணிகள் (குப்பை) மேட்டில் இமைப்பன (அவற்றை) மின்மினிப் பூச்சிகள் ஆம் என (நினைத்து) குருவி குழாம் (வெளிச்சத்திற்காக தம்) கூட்டில் உய்க் கும். [வாரணம்-சேவல். தகை சால்-அழகு மிகுந்த. உய்க் கும்-சேர்க்கும்.]

இடைச்சியர் தயிர் கடைந்தனர்.

28. தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளவும்
ஆய வெள்வளை வாய்விட் டரற்றவுந்
தேயு நுண்ணிடை சென்று வணங்கவும்
ஆயர் மங்கைய ரங்கை வருந்துவார்.

தோய்ந்த வெண்மையாகிய தயிரில் மத்தினது ஒலி துள்ளவும், (கையில் அணிந்த) ஆய வெண்மையாகிய வளையல்கள் வாய்விட்டு

அரற்றவும், தேய்ந்த நுண் இடை சென்று வணங்கவும் ஆயர் மங்கையர் (முல்லை நிலத்தில்) அம் கை வருந்துவார். [ஆய-அழகிய.]

நுளைச்சியர் சிதறிய முத்துக்களே கடைசியர் கொழிக்கும் பாக்கில் கிடக்கின்றன.

29. குற்ற பாகு கொழிப்பவர் கோணெறி
கற்றி லாத கருங்க ணுளைச்சியர்
முற்றி லார முகந்துதம் முன்றிலிற்
சிற்றில் கோலிச் சிதறிய முத்தமே.

(மருதத்தில்) குற்ற பாகு கொழிப்பவர் (கொழித்துத் தள்ளுவன எவை எனில்) கோள் நெறியை கற்று இலாத கருமை நிறம் பொருந்திய கண்களையுடைய நுளைச்சியர் (கடல் கரையில்) முற்றில் ஆர முகந்து (வந்து) தம் முன்றிலில் சிறு இல் கோலி (பிறகு) சிதறிய முத்தே. [குற்ற-நெரித்த. பாகு-பாக்கு. கோள்-பொய். அல்லது தீமை; நுளைச்சியர்-நெய்த நிலத்துச் சிறுமியர். முற்றில்-சிறுமுரம், முச்சில். சிற்றில்-விளையாட்டாகக் கட்டுகின்றசிறு வீடு.]

முல்லை நிலத்தில் ஆட்டுக்கடாக்கள் முட்டிக்கொள்ளும் ஓசையைக் கேட்டுத் திடுக்கிட்டுக் குறிஞ்சியில் மேகம் மின்னும்.

30. துருவை மென்பிணை யீன்ற துளக்கிலா
வரிம ருப்பின வன்றலை யேற்றைவான்
உருமி டித்தெனத் தாக்குறு மோதையின்
வெருவி மால்வரைச் சூன்மழை மின்னுமே.

மெல் பிணை துருவையானது ஈன்ற துளக்கு இல்லாத வரிகள் அமைந்த மருப்புடன் கூடிய வலிய தலைகளுள்ள ஏறுகள் வானத்து உருமு இடித்தென தாக்கு உறும் ஓதையினால் மால் வரையின் மேல் சூல் மழை வெருவி (வாயங்காந்ததுபோல்) மின்னும். [துருவை-செம்மறி ஆடு.]

31. தினைச் சிலம்புவ தீஞ்சொ லிளங்கிளி
நனைச் சிலம்புவ நாகிள வண்டுபூம்
புனைச் சிலம்புவ புள்ளினம் வள்ளியோர்
மனைச் சிலம்புவ மங்கல வள்ளையே.

தீம் சொல் (மிழற்றும்) கிளிகள் தினைப்புனங்களில் சிலம்புவ; நாகு இள வண்டுகள் நனையில் சிலம்புவ; பூம்புனையில் வண்டு இனம் சிலம்புவ; வள்ளியோர் மனைகளில் மங்கல வள்ளை சிலம்புவ. [சிலம்புவ-ஒலிப்பன. நனை-மலர் அரும்பு. நாகு-இளமையுடைய. புனை-நீர். வள்ளை-உலக்கைக்கொண்டு சுண்ணமிடிக்கும் மகளிர் தம் தலைவன் வளம் கூறிப்பாடும் பாட்டு.]

குறிஞ்சி நிலமாக்களது ஒலி மருதத்தில் அன்னங்களை இரிக்கும்.

32. கன்றுடைப்பிடி நீக்கிக் களிற்றினம்
வன்றொடர்படுக் கும்வன வாரிசூழ்
குன்றுடைக்குல மள்ளர் குழுக்குரல்
இன்றுணைக்களி யன்ன மிரிக்குமே.

கன்றுகளை உடைய பிடிகளை நீக்கி களிறு இனங்களை வல் தொடர்களில் படுக்கும் வனங்களில் வாரிகள் சூழ்ந்த குன்றுகளை (தமக்கு இடமாக) உடைய குலம் மள்ளர்களது குழுக்களில் (உண்டாகிய) குரலானது இனிய துணைகளுடன் கூடி களித்திருக்கும் (ஆண்) அன்னங்களை இரிக்கும். [பிடி-பெண் யானை. களிறு-ஆண்யானை. தொடர்-சங்கிலி. வாரி-யானை பிடிக்கும் குழி. மள்ளர்-குறிஞ்சிநில மாக்கள். இரிக்கும்-ஓட்டும்.]

33. வள்ளி கொள்பவர் கொள்வன மாமணித்
துள்ளி கொள்வன தூங்கிய மாங்கனி
புள்ளி கொள்வன பொன்விரி புன்னைகள்
பள்ளி கொள்வன பங்கயத் தன்னமே.

(குறிஞ்சியில்) வள்ளி (கிழங்கைத் தோண்டி) கொள்பவர்களால் கொள்ளப்படுகின்ற மாமணிகள் (அவர்கள் விட்டு எறிய) (மருதத்தில்) தூங்கிய மாங்கனிகளை துள்ளி கொள்வன. (மருத நிலத்து) பங்கயத்து பள்ளி கொள்வனவாகிய அன்னம், (நெய்தல் நிலத்து) புன்னை மலர்கள் விருக்கும் பொன் (போன்ற மகரந்தம் படிய) புள்ளி கொள்வன. [தூங்கிய-தொங்கும். துள்ளி கொள்வன-துள்ளும்படி செய்யும். புள்ளி கொள்வன-புள்ளிகளைப்பெறுகின்றன.]

34. கொன்றை வேய்ங்குழற் கோவலர் முன்றிலிற்
கன்றுறக்கும் குரவை கடைசியர்
புன்றலைப்புனங் காப்புடை போதரச்
சென்றிசைக்கு நுளைச்சியர் செவ்வழி.

(மருத நிலத்து) கடைசியர் (பாடுகின்ற) குரவை (என்னும் பாட்டுகள்) கொன்றைக் குழல்களையும் வேய் குழல்களையுமுடைய (முல்லை நிலத்து) கோவலர்களது முன்றிலில் (இருக்கின்ற) கன்றுகளை உறக்கும்; (குறிஞ்சி நிலத்தில்) புன்மையான தலையையுடைய (தினை) புனங்களது காப்பு உடைந்து போதர (நெய்தல் நிலத்து) நுளைச்சியர் பாடுகின்ற செவ்வழி (என்னும் பண்) சென்று இசைக்கும். [புன்றலை-சிறிய இடத்தையுடைய.]

35. சேம்பு கால்பொரச் செங்கழு நீர்க்குளத்
தூம்பு காலச் சுரிவளை மேய்வன

காம்பு கால்பொரக் கண்ணகன் மால்வரைப்
பாம்பு நான்றெனப் பாய்பசுந் தேறலே.

காம்பானது காலால் பொருதலால் கண் அகல் மால்வரையி லுள்ள (தேன் கூடுகள் கிழிய) பாம்பு நான்று என பாய்கின்ற பசும் தேறலையே, செங்கழு நீர்களுள்ள குளங்களின் தூம்புகள் காலலால். (அத்தேனை) சுரிந்த முகத்தையுடைய வளைகள், சேம்பு (மடல்கள்) காலினால் (தம்மீது) பொர மேய்வன. [சேம்பு-சேப்ப மடல். கால்-காற்று. தூம்பு-மதகு. காம்பு-மூங்கில். நான்றென-தொங்குவதுபோல்.]

விருந்தும் ஈகையுமன்றி அந்நாட்டில் பிறதொழில்களில்லை.

36. பெருந்த டங்கட் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே.

(கோசல தேசத்தில்) பெரும் தடம் கண்களை பெற்று பிறை போன்ற நுதலையுடையவர்களாகிய (மாதர்க்கு) எல்லாம், பொருந்திய செல்வமும் கல்வியும் பூத்தலால் (அங்கு) வருந்தி வந்தவர்க்கு ஈதலும், வைகலும் விருந்து (ஓம்புதலும்) அன்றி விளைவன யாவையே? (ஒன்றுமில்லை) [நுதல்-நெற்றி; பூத்தலால்-இருப்பதால்; வைகலும்-நாள்தோறும்; விளைவன-நடைபெறுவன.]

குறிப்பு:—இச்செய்யுளில், மாதர் கல்வியிற் சிறந்து இருப்பதினால் தான் விருந்தோம்பலும் ஈகையும் இல்லறத்தில் நடைபெறுவது சாத்தியமாகும் என்பதைக் கம்பர் எடுத்துக்காட்டுகின்றார். மனைவி விருந்திடல் ஈகையாதி நற்குணங்களின் நயங்களைக் கல்லாதவளாயின் ஆடவர் அவ் விஷயங்களில் செயலற்றவராகின்றனர். போர் தோற்றால் "இல்லாளை அஞ்சி விருந்தின் முகம் கொன்ற நெஞ்சில், புல்லாளனாகக்கடவேன்" என்று சீவகன் கூறிய வஞ்சினம் போல் கோசல நாட்டில் கூறுவதற்கு இடமில்லாமற் போன பெரும் பாக்கியத்திற்குக் காரணம் மாதர்களுக்கு உற்ற கல்வியே.

உணவு பண்டங்கள் அன்னசத்திரங்களில் நிறைந்திருந்தன.

37. பிறைமு கத்தலைப் பெட்பி னிரும்புபோழ்
குறை கறித்திரள் குப்பை பருப்பொடு
நிறைவெண் முத்தி னிறத்தரி சிக்குவை
உறைவ கொட்பின வூட்டிடந் தோறெலாம்.

பிறைமுகம் போன்ற தலையினையுடைய பெட்பின் இரும்பினால் (அரிவாள் மணையினால்) போழ்ந்து குறைத்த கறித்திரளும், பருப்பு குப்பையும், வெண்மையாகிய நிறத்துடன்கூடிய அரிசி நிறைந்த குவையும், (அந்நாடெங்கும்) கொட்பின ஊட்டு இடம் தோறும் எலாம் உறைவ. [பெட்பு-பற்று. கொட்பின-சூழ்ந்திருக்கின்ற. ஊட்டிடம்-சத்திரம். உறைவ-கிடப்பன.]

38. கலஞ்சு ரக்கு நிதியங் கணக்கிலா
நிலஞ்சு ரக்கு நிறைவள நன்மணி
பிலஞ்சு ரக்கும் பெறுதற் கரியதங்
குலஞ்சு ரக்கு மொழுக்கங் குடிக்கெலாம்.

(அந்த நாட்டிலுள்ள) குடிக்கு எல்லாம், (மரக்)கலங்கள் கணக்கு இல்லா நிதியம் சுரக்கும், நிலமானது நிறைந்த வளம் சுரக்கும், பிலங்கள் நல் மணிகளை சுரக்கும்; தமது குலம் பெறுதற்கு அரிய ஒழுக்கங்களை சுரக்கும்.

39. கூற்ற மில்லையோர் குற்ற மிலாமையால்
சீற்ற மில்லைதஞ் சிந்தையிற் செய்கையால்
ஆற்ற னல்லற மல்ல திலாமையால்
ஏற்ற மல்ல திழிதக வில்லையே.

(அந்த நாட்டில்) ஒரு குற்றமும் இலாமையால் கூற்றம் இல்லை (அனைவர்க்கும்) தம் சிந்தையின்படி செய்கைகள் செய்யும் சுதந்திரம் இருத்தலால் சீற்றம் (வருவதற்கு இடம்) இல்லை. நல் அறம் அல்லது ஆற்றல் இலாமையால் ஏற்றம் அல்லது இழிதகவு இல்லை. [கூற்றம்-யமன். இவ்விடத்தில் அகால மிருத்யு. சீற்றம்-கோபம். ஆற்றல்-செய்தல். ஏற்றம்-மேன்மை.]

40. நெறிகடந்து பரந்தன நீத்தமே
குறிய ழிந்தன குங்குமத் தோள்களே
சிறிய மங்கையர் தேயு மருங்குலே
வெறிய வும்மவர் மென்மலர்க் கூந்தலே.

(அந்த நாட்டில்) நீத்தமே நெறியை கடந்து பரந்தன, (மாநரது) குங்கும (தொய்யில் எழுதப்பட்டுள்ள) தோள்களே குறி அழிந்தன, மங்கையரது தேயும் மருங்குலே சிறிய, வெறியவும் அவர் மெல் மலர் கூந்தலே. [நீத்தம்-வெள்ளம். மருங்குல்-இடை. வெறி-மணம், மயக்கம்.]

புகை மேகம்போல் எங்கும் நிறைந்தது.

41. அகிலி டும்புகை யட்டி லிடும்புகை
நகலி னாலை நறும்புகை நான்மறை

புகலும் வேள்வியிற் பூம்புகை யோடளாய்
முகிலின் விம்மி முழங்கின வெங்கணும்.

(அந்த தேயத்தில்) எங்கணும், அகில் இடும்புகையும், அட்டில் இடும் புகையும், நகலேஉடைய(கரும்பு) ஆலே நறும்புகையும், நான்கு மறைகளை புகலும் வேள்வியின் பூம் புகையும், அளாய் முகில்போல் விம்மி முழங்கின. [அட்டில்-சமையல். நகல்-விளங்குதல். வேள்வி-யாகம். அளாய்-கலந்து. முகில்-மேகம்.]

42. இயல்புடை பெயர்வன மயின்மணி யிழையின்
வெயில்புடை பெயர்வன முலேயவர் குழல்போல்
புயல்புடை பெயர்வன பொழிலவர் விழிபோல்
கயல்புடை பெயர்வன கடிகமழ் கழனி.

பொழிலில், முலேயவர் இயலேப்போல் மயில் புடை பெயர்வன, அவர்களது) மணி இழையின் வெயில் புடை பெயர்வன, (அவர்களது) குழல்போல் புயல் புடை பெயர்வன, கடிகமழ் கழனியில் அவர் விழிபோல் கயல் புடை பெயர்வன. [பொழில்-சோலே. குழல்-கூந்தல். புயல்-மேகம்.]

43. இடையிற மகளிர்க ளெறிபுனன் மறுகக்
குடைபவர் துவரித ழலர்வன குமுதம்
மடைபெய ரனமென மடநடை அளகக்
கடைசியர் முகமென மலர்வன கமலம்.

(தமது) இடை இறும்படி, (அலேயை) எறிகின்ற புனலானது மறுக குடைபவர்களாகிய மகளிர்களுடைய துவர்ஒத்த இதழ் போல் குமுதம் அலர்வன, மடைகளில் பெயர்கின்ற அன்னம் என மட நடையையும், அளகத்தையும் (உடைய) கடைசியரது முகம் என கமலம் மலர்வன. [இறு-ஒடி. மறுக-கலங்க. துவர்-பவழம். குமுதம்-செவ்வல்லி. மடை-மதகு. அளகம்-கூந்தல்.]

44. விதியினே நகுவன வயில்விழி பிடியின்
கதியினே நகுவன வவர்நடை கமலப்
பொதியினே நகுவன புணர்முலே கலேவாழ்
மதியினே நகுவன வனிதையர் வதனம்.

வனிதையரது அயில் போன்ற (கூரிய) விழிகள் (ஆடவர்களுக்குப் பிரமன் ஆயுளாக விதித்துள்ள) விதியை (பிரமன் விதிக்கு மாறாக எம் பார்வையால் ஆடவர்களே இப்பொழுதே கொல்கின்றேம் பார், என இகழ்ந்து) நகுவன; அவர் நடை, பிடியின் கதியினே பழித்து) நகுவன; (அவர்) புணர்ந்த முலேகள் கமலத்தின் பொதியினே (பழித்து) நகுவன; (களங்கமாக) கலே வாழ்கின்ற மதியினே

(அவர்) வதனம் (களங்கமின்மையால் அவமதித்து) நகுவன. [கதி-நடை. புணர்ந்த-நெருங்கிய. பொதி-அரும்பு. கலை-மான்.]

45. பகலினொ டிகலுவ படர்மணி மடவார்
நகிலினொ டிகலுவ நளிவள ரிளநீர்
துகிலினொ டிகலுவ சுதைபுரை நுரைகார்
முகிலினொ டிகலுவ கடிமண முரசம்.

படர்ந்திருக்கிற மணிகள் பகலினொடு இகலுவ; நளி வளர் இளநீர் மடவாரது நகிலினொடு இகலுவ; சுதையை புரை நுரை (அவர் உடுக்கும்) துகிலினொடு இகலுவ, கடிமண முரசம் கார் (காலத்து) முகிலினொடு (முழக்கத்தில்) இகலுவ. [பகல்-சூரியன். நளி-செறிந்த. நகில்-முலை. சுதை-பால். புரை-ஒத்த. கடி-புதிய. இகலுவ-பகைப்பன.]

46. காரொடு நிகர்வன கடிபொழில் கழனிப்
போரொடு நிகர்வன புணர்மலை யணைசூழ்
நீரொடு நிகர்வன நிறைகட னிதிசால்
ஊரொடு நிகர்வன விமையவ ருலகம்.

கடி பொழில் காரொடு நிகர்வன, புணர்ந்த மலை கழனியில் உள்ள (நெல்) போரொடு நிகர்வன, நிறைந்த கடல் அணையால் சூழப்பட்ட நீர் (நிலைகளோடு) நிகர்வன, இமையவர் உலகம் நிதிசால் (அந் நாட்டு) ஊரொடு நிகர்வன. [சால்-மிகுந்த. இமையவர்-தேவர்.]

47. நென்மலை யல்லன நிரைவரு தரளச்
சொன்மலை யல்லன தொடுகட லமுத
நன்மலை யல்லன நதிதரு நிதியப்
பொன்மலை யல்லன மணிபடு புளினம்.

(அந்த நாட்டில் மலைகளாகக் காணப்படுபவைகள்) நெல் மலைகள்; அல்லன நிரையாக வருகின்ற தரளங்களின் புகழ்பெற்ற மலைகள்; (மேல்) சொல்(லப்பட்ட தரள)மலையும் அல்லன தொடு கடலில் (கிடைக்கும்) அமுதம் (எனத்தகும் உப்பின்)நல்ல மலை; அவை அல்லன நதிகள் தருகின்ற பொன் (முதலிய) நிதிய மலைகள்; அவை அல்லன மணிகள் படும் புளினங்கள். [தொடு-தோண்டப்பட்ட. புளினம்-மணல்மேடு.]

48. பந்தினை யிளையவர் பயிலிட மயிலூர்
கந்தனை யனையவர் கலைதெரி கழகம்
சந்தன வனமல சண்பக வனமாம்
நந்தன வனமல நறைவிரி புறவம்.

இளையவர்கள் பந்தினை பயிலும் சந்தன வனம் அல்லது சண்பக வனம் அல்லது நந்தன வனம் அல்லது நறை விரிந்த புற.

வங்களாகிய இடங்களே மயிலை ஊர்கின்ற கந்தனை அனையவர் (வாலி பர்) கலை தெரிகின்ற கழகம் (ஆகின்றன). [இளையவர்-மங்கையர் ஊர்கின்ற-வாகனமாக உடைய. கந்தன்-முருகவேள். புறவம்-காடு.]

குறிப்பு :—இச்செய்யுளிற்கு இப்பொருளே பொருந்தியது. பூக்கொய்படலம் 33-வது செய்யுளும் இதற்கு ஆதாரம். ஆங்கில கவி பைரன் (Byron) என்பவர் "My only books are women's looks." என்று கூறியிருப்பதுடன் இக் கருத்து ஒத்திருப்பது வியப்பைத் தருகின்றது.

49. கோகில நவில்வன விளையவர் குதலைப்
பாகியல் கிளவிக ளவர்பயி னடமே
கேகய நவில்வன கிளரிள வளையின்
நாருக ளுமிழ்வன நகைபுரை தரளம்.

கோகிலங்கள் நவில்வன (எல்லாம்) இளையவர்களது குதலை யாகிய பாகினது இயல் (பெற்ற) கிளவிகளையே, கேகயங்கள் நவில் வன அவர் பயில்கின்ற நடனத்தையே. கிளர்கின்ற இளமையாகிய வளையினது நாகுகள் உமிழ்வன(அவரது)நகையை புரையும் தரளங் களே. [கோகிலம்-குயில். நவில்வன-கற்பன. கிளவி-மொழி. கேகயம்-மயில். வளைநாகு-பெண்சங்கு. புரை-போன்ற.]

50. பழையர்த மனையன பழநறை நுகரும்
உழவர்த மனையன வுழுதொழில் புரியும்
மழவர்த மனையன மணவொலி யிசையின்
கிழவர்த மனையன கிளைபயில் வளையாழ்.

பழையர்தம் மனையன பழநறை, (பழ நறையை) நுகரும் உழவர்தம் மனையன உழுதொழில், (அவ்வுழுதொழில்) புரியும் மழ வர்தம் மனையன மணஒலி, (அவ்வொலி)இசையையுடைய கிழவர் (பாணர்) தம் மனையன கிளை (என்னும் பண்ணை) பயில்கின்ற வளைந்த யாழ். [பழையர்-கள்விற்போர். மழவர்-இளைஞர்.]

51. கோதைகள் சொரிவன குளிரிள நறவம்
பாதைகள் சொரிவன பருமணி கனகம்
ஊதைகள் சொரிவன வுறையுறு மமுதம்
காதைகள் சொரிவன செவிநுகர் கவிகள்.

[கோதை-பூமாலை. பாதை-கப்பல். ஊதை-குளிர்காற்று. உறை உறும் அமுதம்-மழைத் திவலைகள் பொருந்திய அமுதம்].

ஆடவர் சிந்தைபோல் மாதர்களைப் பின்பற்றி மயில்கள் சென்றன

52. இடங்கொள் சாயல்கண் டிளைஞர் சிந்தைபோல்
தடங்கொள் சோலைவாய் மலர்பெய் தாழ்குழல்

வடங்கொள் பூண்முலை மடந்தை மாரொடும்
தொடர்ந்து போவன தோகை மஞ்ஞைகள்.

தடம் கொண்ட சோலைவாய் மலர் பெய்த தாழ்ந்த குழலும் (முத்து) வடம் கொண்ட பூண்களை (அணிந்த) முலையும் (உடைய) மடந்தைமாரொடும் (அவர்)இடம்கொண்ட சாயலை கண்டு, இளைஞர் சிந்தையை போல், தோகையையுடைய மஞ்ஞைகள் தொடர்ந்து போவன. [இடம்-பெருமை. தடம்-இடம்.]

53. வண்மை யில்லையோர் வறுமை யின்மையால்
திண்மை யில்லைநேர் செறுந ரின்மையால்
உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்
வெண்மை யில்லைபல் கேள்வி மேவலால்.

(கோசல தேசத்தில்) ஓர் வறுமை இன்மையால் வண்மையும் இல்லை, நேரான செறுநர் இன்மையால் திண்மையும் இல்லை, பொய் உரை இலாமையால் உண்மையும் இல்லை, பல்கேள்வி (அறிவு) மேவலால் வெண்மையும் இல்லை. [வண்மை-ஈகை. திண்மை-பராக்ரமம். செறுநர்-பகைவர். வெண்மை-அறியாமை. மேவலால்-பொருந்தி இருத்தலால்.]

குறிப்பு:—வறுமையில்லாது வண்மைக்கும் இடமில்லாமற் போயிற்றென்பதை ஆபுத்திரன் அணையவர் கேட்டமாத் திரத்தில், "அறம் செய் மாக்கள் பற்றற முயல்வோர் யாவரு மில்லாக் கோசல நன்னாட்டுக் கிறைவனாகிய பெருவிறல் வேந்தே" எனத் தசரதனை ஸ்துதி நிந்தையாகப் பரிகசித் தழைத்து, "வாங்கு கை வருந்த மன்னுயிரோம்பி வருந்தி வந்தோர் அரும்பசி களைந்தவர் திருந்து முகம் கண்டுவக்கப் பெறா நின்னாட்டை எள்ளினேன் போ" என வெள்ளை மக்கள்போல் நகைத்துத் தம் காலில் படிந்துள புழுதியையும் உதறிப்போய் அந்நாட்டைவிட்டுக் கடிதில் அகன்றுவிடுவர்.

54. எள்ளு மேனலு மிறுங்குஞ் சாமையும்
கொள்ளுங் கொள்ளையிற் கொணரும் பண்டியும்
அள்ள லோங்களத் தமுதின் பண்டியும்
தள்ளு நீர்மையிற் றலைம யங்குமே.

[எனல்-தினை. இறுங்கு-சோளம். அள்ளல் ஓங்கு அளத்து அமுது-சேறு நிறைந்த உப்பளத்து உப்பு. தலைமயங்கும்-கலக்கும்.]

55. உயருஞ் சார்விலா வுயிர்கள் செய்வினைப்
பெயரும் பல்கதிப் பிறக்கு மாறுபோல்

அயிருந் தேனுமின் பாகு மாயரூர்த்
தயிரும் வேரியுந் தலைம யங்குமே.

(பரகதிபெற்று) உயரும் சார்வு (ஆகிய மெய்ஞ்ஞானம்) இலாத உயிர்கள் செய்கிற வினையால் பெயரும் பல்கதிகளில் பிறக்குமாறு போல்—அயிரும் தேனும் இன்பாகும் ஆயர் ஊர் தயிரும் வேரியும் தலை மயங்குமே. [அயிர்-சருக்கரை. வேரி-கள்.]

56. கூறு பாடலுங் குழலின் பாடலும்
வேறு வேறுநின் றிசைக்கும் வீதிவாய்
ஆறு மாறும்வந் தெதிர்ந்த தாமெனச்
சாறும் வேள்வியுந் தலைம யங்குமே.

(வாய்) பாடலும் குழலின் பாடலும் வேறுவேறு நின்றுஇசைக்கும் வீதிவாய், சாறும் வேள்வியும் ஆறும் ஆறும் வந்து எந்திர்ந்த தாம் என தலை மயங்கும். [சாறு-திருவிழா. வேள்வி-கலியாணம்.]

57. மூக்கிற் றாக்குறு மூரி நந்துநேர்
தாக்கிற் றாக்குறும் பறையுந் தண்ணுமை
வீக்கிற் றாக்குறும் விளியு மள்ளர்தம்
வாக்கிற் றாக்குறு மொலியின் மாயுமே.

(சுரிமுகத்தின்) மூக்கில் தாக்குறு மூரியுடைய நந்தும், நேரான தாக்கினுல் தாக்குறும் பறையும், வீக்கில் தாக்குறும் தண்ணுமையின் விளியும்; மள்ளர்தம் வாக்கில் தாக்குறும் ஒலியினுல் மாயும். [தாக்கு-குறுந்தடி. தண்ணுமை-மத்தளம். மாயும்-அடங்கும்.]

58. தாலி யைம்படை தழுவு மார்பிடை
மாலை வாயமு தொழுகு மக்களைப்
பாலி னூட்டுவார் செங்கை பங்கயம்
வால் நிலாவுறக் குவிவ மானுமே.

தாலி ஐம்படை தழுவும் மார்பு இடை மாலையாக வாய் அமுது ஒழுகும் மக்களுக்கு (சங்கை எடுத்து) பால் ஊட்டுவார் (ஆகிய தாய்மாரது) செம் கைகள் பங்கயம் வால் நிலா உற குவிவதை மானும். [தாலி ஐம்படை-குழந்தைகளுக்குக் காப்பாகக் கழுத்திலணியுமோராபரணம். வாயமுது-எச்சில். வால்-வெண்மையான.]

59. பொற்பி னின்றன பொலிவு பொய்யிலா
நிற்பி னின்றன நீதி மாதரார்
அற்பி னின்றன வறங்க ளன்னவர்
கற்பி னின்றன கால மாரியே.

பொலிவு (ஆடவர்களுடைய) பொற்பினுல் நின்றன, நீதிகள் (அவரது) பொய் இல்லாத நிற்பினுல் நின்றன, அறங்கள் மாதரா

ரது அன்பினுல் நின்றன, காலமாரி அன்னவரது கற்பினுல் நின்றன. [பொலிவு-கீர்த்தி. பொற்பு-குணநலம்.]

60. சோலை மாநிலந் துருவி யாவரே
வேலை கண்டுதா மீள வல்லவர்
சாலும் வார்புனற் சரயு வும்பல
காலி னேடியுங் கண்ட தில்லையே.

சாலும் வார் புனல் உடைய சரயுவும் பலகாலினுல் ஓடியும் கண்டதில்லை (என்ருல்) சோலைகளால் சூழப்பட்ட அந்த மா நிலத்தை துருவி (யார்) வேலையை கண்டு தாம் மீளவல்லவர்? [சாலும் வார்-நிறைந்த. துருவி-தேடி. வேலை-எல்லை.]

61. வீடு சேரநீர் வேலை கான்மடுத்
தூடு பேரினு முலைவி லாநலங்
கூடு கோசல மென்னுங் கோதிலா
நாடு கூறினு நகரங் கூறுவாம்.

வேலையானது காலால் மடுத்து வீட்டை சேர (அதன்) நீர் (நாட்டின்) ஊடு பேரினும் உலைவு இல்லாத நலம் கூடுகின்ற கோசலம் என்னும் கோது இல்லா நாட்டை (சிறப்பித்து) கூறினும். (இனி) நகரத்தை (பற்றி) கூறிவாம். [வேலை-கடல். கால்-காற்று. வீடு சேர-அழிவு அடைய. ஊடு-உள். உலைவு-கெடுதல்.]

---

4. நகரப் படலம்.

அயோத்திநகர் வைகுண்ட வாசிகளும் விரும்பிவரும் சிறப்புடையது.

1. செவ்விய மதுரஞ் சேர்ந்தநற் பொருளில்
சீரிய கூரிய தீஞ்சொல்
வவ்விய கவிஞ ரனைவரும் வடநூல்
முனிவரும் புகழ்ந்தது வரம்பில்
எவ்வுல கத்தோர் யாவருந் தவஞ்செய்
தேறுவா ராதரிக் கின்ற
அவ்வுல கத்தோ ரிழிவதற் கருத்தி
புரிகின்ற தயோத்திமா நகரம்.

அயோத்தி மா நகரம், செவ்விய மதுரம் சேர்ந்த நல் பொருளில் சீரியனவும் கூரியனவும் (ஆகிய) தீம் சொற்களை வவ்விய (சடகோபர் முதலிய) கவிஞர் அனைவரும், (வான்மீகி முதலாகிய) வடநூல் முனிவரும் புகழ்ந்தது; வரம்பு இல் எவ்வுலகத்தோர் யாவரும் தவம் செய்து ஏற ஆதரிக்கின்ற அ (பரமபதமாகிய) உலகத்தோரும் இழிவதற்கு அருத்தி புரிகின்றது. [அருத்தி-விருப்பம்.]

அயோத்திமா நகரத்திற்கு உவமை கூறுவது அரிது.

2. நிலமகள் முகமோ திலகமோ கண்ணோ
நிறைநெடு மங்கல நாணோ
இலகுபூண் முலைமே லாரமோ வுயிரி
னிருக்கையோ திருமகட் கினிய
மலர்கொலோ மாயோன் மார்பினன் மணிகள்
வைத்தபொற் பெட்டியோ வானோர்
உலகின்மே லுலகோ வூழியி னிறுதி
யுறையுளோ யாதென வுரைப்பாம்.

(அந்நகரத்தை) நிலமகள் முகமோ, திலகமோ கண்ணோ, நிறை நெடு மங்கல நாணோ, இலகும் பூண் (அணிந்த) முலைமேல் (புரளுகின்ற) ஆரமோ, உயிரின் இருக்கையோ; திருமகட்கு இனிய மலர் கொலோ; மாயோனது மார்பில் (விளங்கும்) நல்ல (கௌஸ்துப) மணிகள் வைத்த பொன் பெட்டியோ; வானோர் உலகின் மேல் உலகோ; ஊழியின் இறுதி உறையுளோ; யாது என உரைப்போம்

தனக்கு நிகர் தானேயானது அயோத்தி மாநகரம்.

3. உமைக்கொரு பாகத் தொருவனு மிருவர்க்
கொருதனிக் கொழுநனு மலர்மேல்
கமைப்பெருஞ் செல்வக் கடவுளு முதலோர்
கண்டிலா நகரது காண்பான்
அமைப்பருங் காதன் முன்பிடித் துந்த
அந்தரஞ் சந்திரா தித்தர்
இமைப்பிலர் திரிவ ரிதுவலா லிதனுக்
கியம்பலா முவமைமற் றியாதோ.

உமையை ஒரு பாகத்து (உடைய பரமசிவனாகிய) ஒருவனும் (வள்ளி தெய்வயானைகளாகிய) இருவர்க்கு ஒரு தனி (முருகவேள் ஆகிய) கொழுநனும், மலர்மேல் கமை பெரும் செல்வம் (பொருந்திய பிரமன் ஆகிய) கடவுளும் முதலோர், (இதற்கு உவமை) கண்டு இல்லாத நகரது(தான்) காண, அமைப்பு அரும் காதல் முன் பிடித்து உந்த அந்தரத்தில் சந்திரனும் ஆதித்தனும் இமைப்பு இலராய் திரிவர், (ஆதலால்) இதனுக்கு உவமை இது அலால் மற்று யாதோ இயம்பலாம். [கமை-பெருமையாகிய.]

அமராவதியினும் அளகையினும் அயோத்தி சிறந்தது.

4. அயின்முகக் குலிசத் தமரர்கோ னகரு
மளகையு மென்றிவை யயனார்
பயிலுற வுற்ற படிபெரும் பாலு
மிப்பெருந் திருநகர் படைப்பான்

மயன்முதற் றெய்வத் தச்சருந் தத்த
மனத்தொழி ஞணினர் மறந்தார்
புயலொடு குடுமி நெடுநிலை மாடத்
திந்நகர் புகலுமா றெவனே.

அயனார், பெரும்பாலும் அயின்முகம் குலிசத்து அமரர் கோனது நகரும், (குபேரனது நகராகிய) அளகையும் என்று இவைகளை (படைத்து) பயிலுற உற்றபடி (அயோத்தி என்னும்) இ பெரும் திருநகர் படைக்கும் பொருட்டே; (அதைக் கண்டு) நாணி மயன் முதல் தெய்வ தச்சரும் தம் தம் மனத்தில் (நினைத்தமாத்திரத்தில் அமைக்க வல்ல) தொழிலை மறந்தார்; (அப்படி இருக்க) புயலை தொடும் குடுமிகளோடுகூடிய நெடும் (மேல்) நிலைகளையுடைய மாடத்தையுடைய இ நகர் (சிறப்பை) புகலும் ஆறு எவன்! [குலிசம்-வஜ்ராயுதம்.]

அயோத்தியினும் சிறந்த போகபூமி பிறிதில்லை.

5. புண்ணியம் புரிந்தோர் புகுவது துறக்க
மென்னுமீ தருமறைப் பொருளே
மண்ணிடை யாவ ரிராகவ னன்றி
மாதவ மறத் தொடும் வளர்த்தார்
எண்ணருங் குணத்தி னவனினி திருந்திவ்
வேழுல காளிட மென்றால்
ஒண்ணுமோ விதனின் வேறொரு போக
முறைவிட முண்டென வுரைத்தல்.

புண்ணியம் புரிந்தோர் புகுவது துறக்கம் என்னும் இது அருமறை பொருள்; இராகவன் அன்றி மண் இடை மாதவத்தை அறத்தோடு (வேறு யார்) வளர்த்தார்; எண்ணுதற்கு அருமையாகிய குணத்தவனாகிய அவன் இனிது இருந்து இந்த எழு உலகங்களையும் ஆளும் இடம் (இவ்வயோத்தி) என்றால், இதனின் வேறொரு போகம் உறையும் இடம் உண்டு என உரைத்தல் ஒண்ணுமோ! [துறக்கம்-மோக்ஷம். மண்-பூலோகம். ஒண்ணுமோ-கூடுமோ.]

அயோத்தியினும் அழகுடைய நகரம் தேவலோகத்திலுமில்லை.

6. தங்குமா பொருளுந் தருமமுந் துணையாத்
தம்பகைப் புலன்களைத் தவிர்க்கும்
பொங்குமா தவமு ஞானமும் புணர்ந்தோர்
யாவர்க்கும் புகலிட மான
செங்கண்மால் பிறந்தாண் டளப்பருங் காலம்
திருவின்வீற் றிருந்தமை தெரிந்தால்
அங்கண்மா ஞாலத் திந்நக ரொக்கும்
பொன்னக ரமரர்நாட் டியாதோ.

தங்கும் மா (கல்வி) பொருளும் தருமமும் துணையாக (கொண்டு) தமக்கு பகையான (ஐம்) புலன்களை தவிர்க்கும் பொங்கும் மா தவமும் ஞானமும் புணர்ந்தோர் (களாகிய) யாவர்க்கும் புகல் இடமான செம் கண் மாலானவன் பிறந்து ஆண்டு அளப்பதற்கு அரிய காலம் திருமகளோடு (இங்கு) வீற்று இருந்தமை தெரிந்தால் (பிறகு) அம் கண் மா ஞாலத்து (உள்ள) இந்த (அயோத்தி) நகரை ஒக்கும் பொன் நகரம் அமரரது நாட்டிலும் யாதோ (இல்லை). [ஞாலம்-பூமி]

7. அரசெலா மவண வணியெலா மவண
அரும்பெறன் மணியெலா மவண
புரசைமால் களிறும் புரவியுந் தேரும்
பூதலத் தியாவையு மவண
விரசுவார் முனிவர் விண்ணவ ரியக்கர்
விஞ்சையர் முதலினோ ரெவரும்
உரைசெய்வா ராஞ ரானபோ ததனுக்
குவமைதா னரிதரோ வுளதோ.

அரசர்கள் எல்லாம் அவண, அணி எல்லாம் அவண, பெறல் அரும் மணி எலாம் அவண, புரசை (கட்டியிருக்கிற) மால் களிறும் புரவியும் தேரும் பூதலத்து (உள்ள) யாவையும் அவண; (அந்நகரத்திற்கு) விரசுவார் (களாகிய) முனிவர் விண்ணவர் இயக்கர் விஞ்சையர் முதலினோர் எவரும் (அதைப் புகழ்ந்து) உரை செய்வார் ஆனார்; ஆன போது அதனுக்கு உவமைதான் அரிதோ, உளதோ! [அவண-அவ்விடத்திலுள்ளன. புரசை-கழுத்துக் கயிறு. களிறு-யானை. புரவி-குதிரை. விரசுவார்-வருபவர். இயக்கர்-யக்ஷர்]

இதுமுதல் ஆறு கவிகள் மதில் வர்ணனை.

8. நால்வகைச் சதுரம் விதிமுறை நாட்டி
நனிதவ வுயர்ந்தன பனிதோய்
மால்வரைக் குலத்தில் யாவையு மில்லை
யாதலா லுவமைமற் றில்லை
நூல்வரைத் தொடர்ந்து பயத்தொடும் பழகி
நுணங்கிய நுவலரு முணர்வே
போல்வகைத் தல்லா லுயர்வினோ டுயர்ந்த
தென்னலாம் பொன்மதி னிலையே.

நால் வகை (பட்ட) சதுரமாக (சிற்பநூல்) விதி முறைப்படி நாட்டி நனிதவ உயர்ந்தனவாகி பனி தோய்ந்த மால் வரை குலத்தில் யாவையுமில்லை, ஆதலால், பொன் மதில் நிலையை, (தன்) உயர்வினோடு (ஒப்ப) உயர்ந்தது என்னலாம் அல்லால் (அதற்கு) உவமை மற்று இல்லை. (ஆயினும்) நூல் (பொருள் முடிவு) வரை

யிலும் தொடர்ந்து (கற்று ஆராய்ந்து) (அதன்) பயனுடன் பழகி நுணங்கிய நுவல்வதற்கு அருமையாகிய உணர்வேபோல் (அம் மதில்) வகைத்து. [நூல், பயம், இவ்விரண்டு பதங்களும் சிலேடையாக நின்று மதிலைக் குறிக்கும்போது கயிறு என்றும் நீர் என்றும் முறையே பொருள்படுகின்றன. நுணங்கிய-கூர்மை பெற்ற.]

9. மேவரு முணர்வு முடிவிலா மையினால்
வேதமு மொக்கும் விண்புகலால்
தேவரு மொக்கு முனிவரு மொக்கும்
திண்பொறி யடக்கிய செயலால்
காவலிற் கலையூர் கன்னியை யொக்கும்
சூலத்தால் காளியை யொக்கும்
யாவையு மொக்கும் பெருமை யாலெய்தற்
கருமையா லீசனை யொக்கும்.

(அந்த மதில்) மேவுதற்கு அருமையான உணர்வுக்கும் முடிவு (காணும் திறம்) இல்லாமையினால் வேதத்தையும் ஒக்கும், விண் புகலால் தேவரும் ஒக்கும், (தன்னிடத்து) திண்மை பொருந்திய பொறிகளை அடக்கிய செய்கையால் முனிவரும் ஒக்கும், (நகர) காவலில் கலையை ஊர்கின்ற (துர்க்கையாகிய) கன்னியை ஒக்கும், (தாங்கிய) சூலத்தால் காளியை ஒக்கும், பெருமையால் யாவையும் ஒக்கும், எய்தற்கு அருமையால் ஈசனை ஒக்கும். [மேவு அரு-அடைதல் அருமையான. பொறி-யந்திரம், ஐம்புலன். கலை ஊர்-கலைமானை வாகனமாக உடைய. சூலம்-சூலப்படை, இடிதாங்கி.]

10. பஞ்சிவான் மதியை யூட்டிய வனைய
படருகிர்ப் பங்கயச் செங்கால்
வஞ்சிபோன் மருங்குல் குரும்பைபோற் கொங்கை
வயங்குவே யமைத்தமென் பணைத்தோள்
அஞ்சொலார் பயிலு மயோத்திமா நகரி
னழகுடைத் தன்றென வறிவான்
இஞ்சிவா னோங்கி யிமையவ ருலகங்
காணிய வெழுந்ததொத் துளதே.

(செம்) பஞ்சி (குழம்பு) ஊட்டிய வான் உள்ள மதி அனைய படர்ந்த உகிர் வாய்ந்த பங்கயம் போன்ற செம் கால்களையும், வஞ்சி (கொடி) போல் மருங்குலையும், (தென்னம்) குரும்பைபோல் கொங்கைகளையும், வயங்கும் வேய் அமைத்த மெல் பணை தோள்களையும் (உடைய) அம் சொல்லார் (ஆகிய மாதர்) பயிலும் அயோத்தி மா நகரிலும் அழகு உடைத்தோ அன்றோ என அறிய, (அந்த) இஞ்சி

யானது இமையவர் உலகம் காண வானை (நோக்கி) ஓங்கி எழுந்ததை ஒத்து உளது. [உகிர்-நகம். மருங்குல்-இடை. வயங்கும் வேய்-பிரகாசிக்கின்ற மூங்கில். இஞ்சி-மதில்.]

11. கோலிடை யுலக மளத்தலிற் பகைஞர்
முடித்தலை கோடலின் மனுவின்
நூனெறி நடக்குஞ் செவ்வையின் யார்க்கு
நோக்கருங் காவலின் வலியின்
வேலொடு வாள்விற் பயிற்றலின் வெய்ய
சூழ்ச்சியின் வெலற்கரும் வலத்தில்
சால்புடை யுயர்விற் சக்கர நடத்துந்
தன்மையிற் றலைவரொத் துளதே.

கோல் இடை உலகம் அளத்தலினாலும், பகைஞரது முடிதாங்கிய தலைகளை கோடலினாலும், மனுவின் நூல் நெறி நடக்கும் செவ்வையினாலும், யார்க்கும் நோக்க அரும் காவலினாலும், வலியினாலும், வேல் வாள் வில்லை பயிற்றலினாலும், வெய்ய சூழ்ச்சியினாலும், வெல்லற்கு அரிய வலத்தினாலும், சால்பு உடைய உயர்வினாலும், சக்கரம் நடத்தும் தன்மையையுடைய (அயோத்திமா நகர) தலைவரை (அந்த மதில் சிலேடை யாக) ஒத்து உளது.

12. சினத்தயில் கொலைவாள் சிலைமழுத் தண்டு
சக்கரந் தோமர முலக்கை
கனத்திடை யுருமின் வெருவருங் கவண்கல்
என்றிவை கணிப்பில கொதுகின்
இனத்தையு முவணத் திறையையு
மியங்குங் காலையு மிதமல நினைவார்
மனத்தையு மெறியும் பொறியுள வென்றால்
மற்றினி யுணர்த்துவ தெவனோ.

(இவையன்றி) கொதுகின் இனத்தையும், உவணத்தின் இறையையும், இயங்கும் காலையும் இதம் அல நினைவார் மனத்தையும் (போன்ற அப்பரத்தியக்ஷ வஸ்துக்களைக்கூட) எறியக்கூடிய சினத்தையுடைய அயில், கொலை புரியும் வாள், சிலை, மழு தண்டு, சக்கரம், தோமரம், உலக்கை, கனம் இடை (உண்டாகின்ற) உருமைப்போல வெருவரும் கவண்கல், என்று (சொல்லப்படுகின்ற) இவை; கணிப்பு இலவாய் பொறிகள் (அந்த மதிலினிடத்தில்) உளஎன்றால், மற்று இனி உணர்த்துவது எவனோ. [கொதுகு-கொசு. உவணம்-பருந்து. கால்-காற்று. அயில்-வேல். கனம்-மேகம். உருமு-இடி.]

13. பூணினும் புகழே யமையுமென் றினைய
பொற்பினின் றுயிர் நனிபுரக்கும்
யாணரெண் டிசைக்கு மிருளற விமைக்கு
மிரவிதன் குலமுதனிருபர்
சேனையுங் கடந்து திசையையுங் கடந்து
திகிரியுஞ் செந்தனிக் கோலும்
ஆணையு நடக்கு மாயினு நகருக்
கணியென வியற்றிய தன்றே.

பூணினும் புகழே அமையும் என்று இனைய பொற்பில் நின்று உயிர்களை நனிபுரக்கும், யாணர் எண் திசைக்கும் இருள் அற இமைக்கும் இரவிதன் குல முதல் (வந்த) நிருபர்களுடைய திகிரியும் செம்மையாகிய தனி கோலும் ஆணையும், சேனையும் கடந்து திசையையும் கடந்து நடக்கும் ஆயின் நகருக்கு (இந்த மதில் பயனில்லாவிடினும் சின்னமாக இருக்கவேணடிய ஓர்) அணி என இயற்றியது. [பூண்-ஆபரணம். பொற்பில்-பொலிவுடன். யாணர்-நன்மையையுடைய. இரவி-சூரியன். சேண்-சுவர்க்கம். அணி-அழகு.]

இதுமுதல் எழுகவிகள் அகழிவர்ணனை.

14. அன்னமா மதிலுக் காழிமால் வரையை
யலைகடல் சூழ்ந்தன வகழி
பொன்விலை மகளிர் மனமெனக் கீழ்போய்ப்
புன்கவி யெனத்தெளி வின்றிக்
கன்னிய ரல்குற் றடமென யார்க்கும்
படிவருங் காப்பின தாகி
நன்னெறி விலக்கும் பொறியென வெறியுங்
கராத்தது நவிலலுற் றதுநாம்.

ஆழிமால் வரையை அலைகடல் சூழ்ந்தது அன்ன அன்ன மாமதிலுக்கு (அமைந்த) அகழியானது, பொன்விலை (கூறித் தம் நலம் விற்கும் பரத்தை) மகளிருடைய மனம் என கீழ் போய், புன் கவி என தெளிவு இன்றி, கன்னியர் அல்குல் தடம் என யார்க்கும் படிவு அரிய காப்பினது ஆகி, நல் நெறியினின்று விலக்கும் (ஐம்) பொறி என வெறியும் கராத்தது. (அந்த அகழியை) நாம் நவிலல் உற்றது. [ஆழிமால்வரை-சக்கரவாளகிரி, அதைச் சூழ்ந்தது நன்னீர்க்கடல். புன்மை-அற்பம். படிவு-தோய்தல். கரா-முதலை.]

மேகம் அகழியையும் மதிலையும் கடலென்றும் மலை என்றும் மயங்கும்

15. ஏகுகின்ற தங்கணங்க ளோடுமெல்லை காண்கிலா
நாகமொன் றகல்கிடங்கை நாமவேலை யாமெனு

மேகமொண்டு கொண்டெழுந்து விண்டொடர்ந்த குன்றமென்
றாகநொந்து நின்றுதாரை யம்மதிற்கண் வீசுமே.

தம் கணங்களோடும் எல்லையை காண்கிலாமல் மேகமானது ஏகி, நாக (லோகம் வரைக்கும்) ஒன்றும் அகல் கிடங்கை நாமம் வேலை ஆகும் என (எண்ணி அதன் நீரை) மொண்டு கொண்டு எழுந்து, விண் தொடர்ந்த குன்றம் என்று (தம்) ஆகம் நொந்து அ மதில்கண் (ஏறி) நின்று தாரை வீசும். [கிடங்கு-அகழி. ஒன்றும்-பொருந்திய. நாமம்-அச்சத்தைத் தருகின்ற.]

16. அந்தமா மதிற்புறத் தகத்தெழுந் தலர்ந்தநீள்
கந்தநாறு பங்கயத்த கானமான மாதரார்
முந்துவாண் முகங்களுக் குடைந்துபோன மொய்ம்பெலாம்
வந்துபோர் மலைக்கமா மதில்வளைத்த மானுமே.

அந்த மா மதிலின் (வெளி) புறத்துள்ள (அகழியின்) அகத்தில் எழுந்து அலர்ந்த நீள் கந்தம் நாறும் பங்கயத்த கானம் ஆனது, (அந் நகர) மாதராரது வாள் முகங்களுக்கு முந்து (தோல்வி யடைந்து) உடைந்துபோன மொய்ம்பு எலாம் வந்து (மீட்டும்) போர்மலைக்க மா மதில் வளைத்தலை மானும். [மானும்-ஒக்கும்.]

17. சூழ்ந்தநாஞ்சில் சூழ்ந்தவாரை சுற்றுமுற்று பாரெலாம்
போழ்ந்தமா கிடங்கிடைக் கிடந்துபொங் கிடங்கர்மா
தாழ்ந்தவங்க வாரியிற் றடுக்கொணு மதத்தினல்
ஆழ்ந்த யானை மீதெழுந் தழுந்துகின்ற போலுமே.

சூழ்ந்த நாஞ்சில் சூழ்ந்த ஆரையை சுற்றும் பார் முற்று எலாம் போழ்ந்த கிடங்கு இடை கிடந்து பொங்கும் இடங்கர் மாக்கள், தாழ்ந்த வங்கம் (இருக்கும்) வாரியில் தடுக்க ஒண்ணுத மதத்தினல் ஆழ்ந்த யானை மீது எழுந்து (மீண்டும்) அழுந்துகின்ற போலும். [நாஞ்சில்-மதில் அமைந்த சித்திரம். ஆரை-மதில். இடங்கர்-முதலை.]

18. ஈரும்வாளின் வால்விதிர்த் தெயிற்றிளம் பிறைக்குலம்
பேரமின்னி வாய்விரித் தெதிர்ந்தகட் பிறங்குதீ [மா
சோரவொன்றை யொன்றுமுன் தொடர்ந்துசீ றிடங்கர்
போரில்வந்து சீறுகின்ற போரரக்கர் போலுமே.

ஈரும் வாள்போன்ற வாலை விதிர்த்து, எயிறுகளாகிய இளம் பிறைகுலம் மின்னி வாயை விரித்து, எதிர்ந்த கண்களினின் றும் பிறங்கும் தீ சோர, ஒன்றை ஒன்று முன் தொடர்ந்து சீறு கின்ற இடங்கர்மாக்கள், போரில் வந்து சீறுகின்ற போர் அரக்கர் போலும். [எயிறு-பல். பிறங்கும்-விளங்கும்.]

அகழியானது மன்னர் சேனையை ஒத்தது.

19. ஆளுமன்னம் வெண்குடைக் குலங்களா வருங்கராக்
கோளெலா முலாவுகின்ற குன்றமன்ன யானையாத்
தாளுலாவு பங்கயத் தரங்கமே துரங்கமா
வாளும்வேலு மீனமாக மன்னர்சேனை மானுமே.

ஆளும் அன்னங்கள் வெண் குடை குலங்கள் ஆகவும், (தப்புதற்கு) அரிய கரா கோள்கள் எலாம் உலாவுகின்ற குன்றம் அன்ன யானையாகவும், தாள் உலாவும் பங்கயம் (நிரம்பிய) தரங்கமே துரங்கம் ஆகவும், மீனம் வாளும் வேலும் ஆகவும் (அந்த அகழி) மன்னர் சேனையை மானும். [கோள்-கிரகங்கள். தரங்கம்-அலை. துரங்கம்-குதிரை ஆளும்-உலாவுகின்ற.]

படிகக் கல்லிற்கும் அகழி நீரிற்கும் வித்தியாசம் தெரியவில்லை.

20. விளிம்புதெற்றி முற்றுவித்து வெள்ளிகட்டி யுள்ளுறப்
பளிங்குபொற் றகட்டகத் தடுத்துறப் படுத்தலில்
தளிந்தகற் றலத்தொடச் சலத்தினைத் தனித்துறத்
தெளிந்துணர்த்து கிற்றுமென்ற றேவராலு மாவதே.

(அவ்வகழியின்) விளிம்பில் தெற்றிகள் முற்றுவித்து [தெற்றிகளின் ஓரத்தில்) வெள்ளி கட்டி, (அதன்) உள்உற, பளிங்கை பொன் தகட்டு அகத்து அடுத்து உற படுத்தலில், (கல்களைப் பொருத்தும் சாந்து) தளிந்த கல் தலத்தொடு அ சலத்தினை தனித்து உற தெளிந்து உணர்த்துகிற்றும் என்றல் தேவராலும் ஆவதே [தெற்றி-திண்ணை. தளிந்த-தளித்த, பூசப்பட்ட.]

21. அன்னநீ ரகன்கிடங்கு சூழ்கிடந்த வாழியைத்
துன்னிவேறு சூழ்கிடந்த தூங்குவீங் கிருட்பிழம்
பென்னலா மிறும்புசூழ் கிடந்தசோலை யெண்ணிலப்
பொன்னின்மா மதிட்குடுத்த நீலவாடை போலுமே.

அன்ன நீர் அகன்ற கிடங்கை சூழ்ந்து கிடந்த ஆழியை, இறும்பை துன்னி வேறு சூழ்ந்து கிடந்த தூங்கும் வீங்கு இருள் பிழம்பு என்னலாம். (அந்த இறும்பை) சூழ்ந்து கிடந்த சோலையானது, எண்ணில், பொன்னின் (அமைத்த) மா மதிலுக்கு (கண்ணெச்சில் படாமல்) உடுத்த நீல ஆடையை போலும். [இறும்பு-மலை. ஆழி-கடல். துன்னி-நெருங்கி. ஆடை-திரைச்சீலை.]

22. எல்லைநின்ற வென்றியானை யென்னநின்று முன்னமால்
ஒல்லையும்பர் நாடளந்த தாளின்மீ துயர்ந்தவால்
மல்லன்ஞாலம் யாவுநீதி மாறுரு வழக்கினல்
நல்லவாறு சொல்லும்வேத நான்குமன்ன வாயிலே.

(கோபுர) வாயில்கள், (நான்கு) எல்லைகளிலும் நின்ற வெற்றி யானை என்ன நின்று, முன்னம் (திரு) மால் ஒல்லை உம்பர் நாட்டை அளந்த தாள்போல் மீது உயர்ந்தன; (மேலும் அவை) மல்லல் (பெற்ற) ஞாலம் யாவும் நீதி மாறு உறு வழக்கினால் நல்ல ஆறு சொல்லும் நான்கு வேதங்கள் அன்ன. [ஒல்லை-விரைவாக. மல்லல்-வளப்பம்.]

23. தாவில்பொற் றலத்தினற் றவத்தினோர்க டங்குதாட்
பூவுயிர்த்த கற்பகப் பொதும்பர்புக் கொதுங்குமால்
ஆவியொத்த அன்புசேவல் கூவவந் தணைந்திடா
ஓவியப் புறாவின்மா டிருக்கவூடு பேடையே.

ஆவியை ஒத்த அன்புடைய சேவல் கூவ (அது கோபுர சிகரங்களில் சித்திரமாகச் செய்யப்பட்ட) ஓவியம் புறாவின் மாடு இருக்க (கண்டு) வந்து அணைந்திடாமல் (தன் நாயகன் பிறமாதை விரும்பினான் என்று எண்ணி) ஊடும் பேடையானது, தா இல் பொன் தலதில் (இருக்கும்) நல்தவத்தினோர்கள் தங்கும் தாளுடைய பூக்களை உயிர்த்த கற்பக பொதும்பர் புக்கு ஒதுங்கும். [மாடு-அருகே. ஊடும்-பிணங்கும். தா-குற்றம். பொதும்பர்-சோலை.]

பின்வரும் மூன்று செய்யுள்களும் குளகமாகக் கோபுரத்தின் செய்கை விசித்திரத்தைக் கூறுவன.

24. கல்லிடித் தடுக்கிவாய் பளிங்கரிந்து கட்டிமீ
தெல்லிடப் பசும்பொன்வைத் திலங்குபன் மணிக்குலம்
வில்லிடக் குயிற்றிவாள் விரிக்கும்வெள்ளி மாமரம்
புல்லிடக் கிடத்திவச் சிரத்தகால் பொருத்தியே.

கற்களை இடித்து அடுக்கி, பளிங்கு அரிந்து கட்டி, (அதன்) மீது எல் இட பசும் பொன் வைத்து, இலங்கும் பல்மணிக் குலம் வில் இட குயிற்றி, வாள் விரிக்கும் வெள்ளி மா (உத்திர) மரம் புல்லிட கிடத்தி, வச்சிரத்த கால் பொருத்தி, [எல், வில், வாள்-ஒளி. குயிற்றி-புதைத்து.]

25. மரகதத் திலங்குபோ திகைத்தலத்து வச்சிரம்
புரைதபுத் தடுத்கிமீது பொன்குயிற்றி மின்குலா
நிரைமணிக் குலத்தினாளி நீள்வகுத்த வோளிமேல்
விரவுகைத் தலத்தினுய்த்த மேதகத்தின் மீதரோ.

(அக்கால்கள்மேல்) மரகதத்து இலங்கும் போதிகை தலத்து, வச்சிரங்களை புரை தபுத்து அடுக்கி, மீது பொன் குயிற்றி மின் குலாம் நிரைமணி குலத்தினும் ஆளி (வடிவமாக) நீள் வகுத்த ஒளி மேல் (உள்ள) விரவு கை (மர) தலத்தில் உய்த்த மேதகத்தின் மீது.

[போதிகை-தூண்மேல் வைக்கும் குறுந்தறி. புரை தபுத்து-பழுது நீக்கி. ஒளி-ஆதார உத்தரம். மேதகம்-கோமேதகம்.]

26. ஏழ்பொழிற்கு மேழ்நிலத் தலஞ்சமைத்த தென்னநூல்
ஊழுறக் குறித்தமைத்த வும்பர்செம்பொன் வேய்ந்துமீ
சூழ்சுடர்ச் சிரத்துநன் மணித்தசும்பு தோன்றலால் [ச்
வாழ்நிலக் குலக்கொழுந்தை மௌலிசூட்டி யன்னவே.

ஏழ் பொழிற்கும் ஏழ் நிலதலம் சமைத்து என்ன (சிற்ப) நூலின் ஊழ் உற குறித்து அமைத்த உம்பர் செம் பொன் வேய்ந்து மீ சுடர் சூழ்ந்த சிரத்தில் நல் மணி (களால் செய்த) தசும்பு தோன்றலால் வாழும் நில (மாகிய) குலம் கொழுந்திற்கு மௌலி சூட்டி (யது) அன்ன (தாயிருந்தது). [பொழில்-உலகம். ஊழ்-விதி. மௌலி-மகுடம். தசும்பு-குடம்.]

27. திங்களுங் கரிதென வெண்மை தீற்றிய
சங்கவெண் சுதையுடைத் தவள மாளிகை
வெங்கடுங் கால்பொர மேக்கு நோக்கிய
பொங்கிரும் பாற்கடற் றரங்கம் போலுமே.

திங்களும் கரிது எனும்படி வெண்மை தீற்றிய, வெண் சங்கின் சுதையை உடைய தவள (நிறமுள்ள) மாளிகைகள், வெம் கடும் கால் பொருதலால் மேக்கு நோக்கிய பொங்கு இரும் பால் கடலின் தரங்கம்போலும் (விளங்கின). [சுதை-சாந்து. தவளம்-வெண்மை. கால்-காற்று. இரும்-அகன்ற. தரங்கம்-அலை. மேக்கு-மேல்.]

28. புள்ளியம் புறவிறை பொருந்து மாளிகை
தள்ளருந் தமனியத் தகடு வேய்ந்தன
எள்ளருங் கதிரவ னிளவெ யிற்குழாம்
வெள்ளியங் கிரிமிசை விரிந்த போலுமே.

புள்ளிகளுடைய அம் புறவுகளின் இறை பொருந்தும் மாளிகைகளின்மேல் வேய்ந்தன (ஆகிய) தள்ளரிய தமனியம் தகடு எள்ளரிய கதிரவனது இள வெயில் குழாம் வெள்ளி அம் கிரி மிசை விரிந்ததை போலும். [இறை-தங்குதல். தமனியம்-பொன். கிரி-மலை.]

29. வயிரநற் கான்மிசை மரக தத்துலாம்
செயிரறப் போதிகை கிடத்திச் சித்திரம்
உயிர்பெறக் குயிற்றிய வும்பர் நாட்டவர்
அயிருற விமைப்பன வளவில் கோடியே.

வயிர (மணிகளாலாகிய) நல்ல கால் மிசை மரகத துலாத்தை செயிர்அற போதிகைமேல் கிடத்தி, (அதன்மேல்) (கண் இமையாது பார்க்கவல்ல) உம்பர் நாட்டவர்களும் இமைப்பன (வோ என்று).

அயிர் உற சித்திரம் உயிர் பெற குயிற்றிய மாளிகைகள் அளவு இல் கோடியே. [செயிர் அற-குற்றம் நீங்க. உம்பர்-தேவர். அயிர் உற-ஐயப்படும்படி. இமைப்பன-கண் கொட்டுவன.]

30. சந்திர காந்தத்தின் றலத்த சந்தனப்
பந்திசெய் தூணின்மேற் பவளப் போதிகைச்
செந்தனி மணித்துலாஞ் செறிந்த திண்சுவர்
இந்திர நீலத்த வெண்ணில் கோடியே.

சந்திரகாந்தத்தின் தலத்தனவாய் பந்தியாக செய்த சந்தன தூணின் மேல் (வைத்த) பவள போதிகை (மேல்) செம் தனி மணி துலாம் செறிந்த திண் சுவர் இந்திர நீலத்தன எண் இல் கோடியே.

மகளிர்க்கும் மாளிகைக்கும் சிலேடை.

31. பாடகக் காலடி பதுமத் தொப்பன
சேடரைத் தழீஇயன செய்ய வாயன
நாடகத் தொழிலன நடுவு துய்யன
ஆடகத் தோற்றத்த அளவி லாதன.

மகளிரைக் குறிக்கும்போது :— பாடகம் (அணிந்த) கால் அடிகள் பதுமத்தை ஒப்பன (ஆகியும்), (தமது) சேடரை தழீயன (ஆகியும்), செய்ய வாயன (ஆகியும்), நாடக தொழிலன (ஆகியும்), நடுவு துய் அன (ஆகியும்), ஆடகத்தினது தோற்றத்தன (ஆகியும்) (மாளிகைகள்) அளவு இலாதன. [சேடர்-பாங்கர். துய்-நூற்கும் பஞ்சில் தொடர்கின்ற நுனி. ஆடகம்-பொன்.] அல்லது, மாளிகைகளைக் குறிக்கும்போது :— பாடு (உடைய) அகத்தினது கால்களின் அடிகள் பதுமத்தை ஒப்பன; (அஸ்திபாரத்தினுல்) சேடரை தழீஇயன; செய்ய ஆயன; (எல்லோரும்) நாடும் அகம் தொழிலன, நடுவு (இடம்) துய்பன, ஆடகத்தின் தோற்றத்தன அளவு இலாதன [பாடு-மேன்மை. அகம்-வீடு. கால்-தூண். சேடர்-ஆதிசேடன்.]

32. புக்கவர் கண்ணிமை பொருந்து றுதொளி
தொக்குடன் றயங்கிவிண் ணவரிற் றோன்றலால்
திக்குற நினைப்பினிற் செல்லுந் தெய்வவீ
டொக்கநின் றிமைப்பன வும்பர் நாட்டினும்.

(மாளிகைகளின்) ஒளியானது தொக்கு உடன் தயங்கி (அதனுல்) புக்கவர்களுடைய கண் இமை பொருந்துறுது (செய்ய அதனுல் அவர் இமையாது) விண்ணவர்போல் தோன்றலால், (அம் மாளிகைகள்) நினைப்பினில் திக்குஉற செல்லும் தெய்வவீடுகளை ஒக்க நின்று உம்பர்நாட்டினும் இமைப்பன. [தெய்வவீடு-விமானம். இமைப்பன-ஒளி வீசுவன.]

33. அணியிழை மகளிரு மலங்கல் வீரருந்
தணிவன வறநெறி தணிவி லாதன
மணியினும் பொன்னினும் வனைந்த வல்லது
பணிபிறி தியன்றன பாங்கு மில்லையே.

(அம் மாளிகைகள்) அணி (செய்கின்ற) இழைகள் (அணிந்த) மகளிரும் அலங்கல் (சூடிய) வீரரும் தணிவன, (இல்) அறம் நெறியில் தணிவு இலாதன ; (அவை) மணியினும் பொன்னினும் வனைந்த அல்லது பிறிது (பொருளால்) பணி இயன்றன பாங்கும் இல்லை. [அலங்கல்- மாலை. தணி-தங்கு, குறை. பாங்கும்- பக்கத்திலும்].

34. வானுற நிமிர்ந்தன வரம்பில் செல்வத்த
தானுயர் புகழன தயங்கு சோதிய
ஊனமி லறநெறி யுற்ற வெண்ணிலாக்
கோனிகர் குடிகடங் கொள்ளை சான்றன.

(மாளிகைகள்) வானைஉற நிமிர்ந்தன, வரம்பு இல்லா செல்வத்தன, தானே உயர்ந்த புகழன, தயங்கும் சோதியன, ஊனம்இல்லா அறம் நெறிஇல் உற்ற கோனை நிகர்த்த எண் இல்லா குடிகள்தம் கொள்ளை சான்றன. [தயங்கும்-விளங்கும். கோன்-அரசன்].

35. அருவியிற் றாழ்ந்துமுத் தலங்கு தாமத்த
விரிமுகிற் குலமெனக் கொடிவி ராயின
பருமணிக் குவையன பசும்பொற் கோடிய
பொருமயிற் கணத்தன மலையும் போன்றன.

(மாளிகைகள்) அருவிபோல் தாழ்ந்து அலங்கும் முத்து தாமத்த, முகில் குலம் என விரியும் கொடி விராயின, பருமணி குவையன, பசும் பொன் கோடிய, பொரும் மயில்-அயில் கணத்தன, மலையும் போன்றன. [தாமத்த-மாலைகளையுடையன. கோடிய-கணக்கற்றன. பொரும் மயில்-பொருந்திய மயில்கள், அல்லது பொரும் அயில்-போர் செய்யும் கூரிய ஆயுதங்கள்.]

கொடியாடை மேகமும் சூலம் மின்னலும் போன்று இருந்தன.

36. அகிலிடு கொழும்புகை யளாய்ம யங்கின
முகிலொடு வேற்றுமை தெரிக லாமுழுத்
துகிலொடு நெடுங்கொடிச் சூல மின்னுவ
பகலிடு மின்னணி பரப்புப் போன்றவே.

அகில்இடும் கொழும் புகையுடன் அளாவி முகில்ஒடு வேற்றுமை தெரிகலா மயங்கின (ஆகிய) முழு துகில் ஒடு கொடியின் (நுனியிலுள்ள) சூலம் மின்னுவன பகல் இடும் மின்னலது அணி ஆராம பரப்பு போன்றவே. [பகல்-ஒளி.]

37. துடியிடைப் பணைமுலைத் தோகையன்னவர்
அடியிணைச் சிலம்புபூண் டரற்று மாளிகைக்
கொடியிடைத் தரளவெண் கோவை சூழ்வன
கடியுடைக் கற்பகங் கான்ற மாலையே.

துடிபோன்ற இடையையும் பணைத்தமுலையையும் உடைய தோகை அன்னவரது அடி இணையிலும் சிலம்பு பூண்டு (முலையின் பாரத்தை இடை சுமக்கமாட்டாது ஒடியுமே என்று) அரற்றும் மாளிகை(யின்மீது கட்டிய) கொடிகளின் இடையில் சூழ்வனவாகிய வெள் தரளம் கோவைகள், கடிஉடைய கற்பகம் கான்ற மாலைகளே. [துடி-உடுக்கை. தோகை-மயில். தரளம் கோவை-முத்துமாலை. கடி-வாசனை. கான்ற-உதிர்த்த.]

கொடிகளுடன் உரைந்தே சந்திரன் தேய்வடைகின்றது.

38. காண்வரு நெடுவரைக் கதலிக் கானம்போல்
கோணிமிர் பதாகையின் குழாந்த ழைத்தன
வாணனி மழுங்கிட மடங்கி வைகலும்
சேண்மதி தேய்வதக் கொடிக டேய்க்கவே.

நெடும் வரையில் காண்வரும் கதலி கானம்போல் கோள் (மண்டலம் வரைக்கும்) நிமிர்ந்த பதாகையின் குழாம் தழைத்தன, சேணில் உள்ள மதியானது வாள் நனி மழுங்கிட வைகலும் மடங்கி தேய்வது அ கொடிகள் தேய்க்கவே. [கதலி-வாழை. கோள்-நவக்கிரகம். வாள்-ஒளி. வைகலும்-நாள்தோறும்.]

39. பொன்றிணி மண்டப மல்ல பூத்தொடர்
மன்றுக ளல்லன மாட மாளிகைக்
குன்றுக ளல்லன மணிசெய் குட்டிமம்
முன்றில்க ளல்லன முத்தின் பந்தரே.

(அந்நகரில் எங்கும்) பொன் திணித்த மண்டபம்; அல்லன, பூ தொடர் மன்றுகள்; அல்லன, மாடமாளிகை (ஆகிய) குன்றுகள்; அல்லன, மணிகளால் செய்த குட்டிமம் முன்றில்கள்; அல்லன, முத்தின் பந்தரே (உள்ளன). [குட்டிமம்-தளவரிசை செய்த தரை.]

40. மின்னென விளக்கென வெயிற்பி ழம்பென
துன்னிய தமனியத் தொழிற தழைத்தவக்
கன்னிநன் னகர்நிழல் கதுவ லாலரோ
பொன்னுல காயதப் புலவர் வானமே.

மின் எனவும் விளக்கு எனவும் வெயில் பிழம்பு எனவும் துன்னிய தமனியம் (கொண்டு செய்த)தொழில்கள் தழைத்த அ

(அயோத்தியாகிய) கன்னி நல் நகரின் நிழல் (சென்று) கதுவவால் அ புலவர் (வாழும் சுவர்க்கமாகிய) வானம் பொன் உலகு ஆயது [கன்னி-அழிவில்லாத. நிழல்-ஒளி, சாயல். புலவர்-தேவர்.]

41. எழுமிடத் தகன்றிடை யொன்றி யெற்படு
பொழுதிடைப் போதலிற் புரிசைப் பொன்மதில்
அழன்மணி திருத்திய வயோத்தி யாளுடை
நிழலெனப் பொலியுமா னேமி வான்சுடர்.

(ஒளி) எழும் இடத்து அகன்று, இடையில் ஒன்றி, எல் படும் பொழுது இடை போதலில், அழல் போன்ற மணிகள் திருத்திய பொன்னாலாகிய புரிசை மதில் (சூழ்ந்த) அயோத்தியாள்உடைய நிழல் என வான் உள்ள நேமிபோன்ற சுடர் பொலியும். [எல்-இரவு. நேமி-சக்கரம். சுடர்-சூரியன். புரிசை-மதில்.]

42. ஆய்ந்தமே கலையவ ரம்பொன் மாளிகை
வேய்ந்தகா ரகிற்புகை யுண்ட மேகம்போய்த்
தோய்ந்தமா கடனறுந் தூப நாறுமேற்
பாய்ந்ததா ரையினிலை பகரல் வேண்டுமோ.

ஆய்ந்த மேகலையை அணிந்தவர்கள் (ஆகிய மாதர்) அம் பொன் மாளிகைகளுக்கு வேய்ந்த கார் அகில்புகையை உண்ட மேகமானது போய் தோய்ந்த மா கடல் நறும் தூபம் நாறுமேல், (மேகத்தினின்று) பாய்ந்த தாரைகளின் நிலைமை பகரலும் வேண்டுமோ. [ஆய்ந்த-திருத்தமாய்ச் செய்யப்பட்ட. மேகலை-ஒரு நகை.]

43. குழலிசை மடந்தையர் குதலை கோதையர்
மழலையங் குழலிசை மகர யாழிசை
எழிலிசை மடந்தைய ரின்சொ லின்னிசை
பழையர்தஞ் சேரியிற் பொருநர் பாட்டிசை.

குழலானது இசையும் (இளம்) மடந்தையர்களுடைய (எழுத்து வடிவம் கூடாத) குதலை, (புள்ளாங்) குழலின் இசை (ஒத்திருக்கும்). கோதையர்களது மழலையானது, மகர யாழின் இசை (ஒத்திருக்கும்). எழில் இசைந்த மடந்தையர்களுடைய இன் சொல்லாகிய இன் இசை, பழையர் தம் சேரியில் (இருக்கும்) பொருநர்களுடைய பாட்டு இசை (ஒத்திருக்கும்). [குழல்-கூந்தல். இசையும்-முடித்துக் கொள்ளும்படி சேரும். கோதையர்-பூமாலையணிந்தவர். எழில்-அழகு. பழையர்-கள்விற்போர். பொருநர்-கூத்தர்.]

44. கண்ணிடைக் கனல்சொரி களிறு கால்கொடு
மண்ணிடை வெட்டுவ வேட்கு மைந்தர்கள்

பண்ணைகள் பயிலிடங் குழிபடைப்பன
சுண்ணமக் குழிகளைத் தொடர்ந்து தூர்ப்பன.

கண் இடை கனலை சொரியும் களிறு கால்கொண்டு மண் இடை வெட்டுவ. (அதனால்), (கண்டோர்) வேட்கும் மைந்தர்களது பண்ணைகள் (விளையாடி) பயில்கின்ற இடங்கள் குழி படைப்பன. (ஆனால்) (அவர்கள் அணிந்து கொண்டிருக்கும்) சுண்ணம் தொடர்ந்து (விழுந்து) அ குழிகளை தூர்ப்பன. [வேட்கும்-விரும்பும். பண்ணை-கூட்டம். சுண்ணம்-பரிமளப்பொடி].

45. பந்துகண் மடந்தையர் பயிற்று வாரிடைச்
சிந்துவ முத்தின மவைதி ரட்டுவார்
அந்தமில் சிலதிய ராற்ற குப்பைகள்
சந்திர னொளிகெடத் தழைப்ப தண்ணிலா.

பந்துகளை பயிற்றுவாராகிய மடந்தையரது இடையில் முத்தினம் சிந்துவ, அவைகளை, அந்தம் இல் சிலதியர் திரட்டுவார், (அவ்வாறு) ஆற்ற குப்பைகள் சந்திரனது ஒளி கெடும்படி தண் நிலாவை தழைப்ப [பயிற்றுவார்-ஆடுவார். சிலதியர்-தாதிகள். ஆற்ற-சேர்த்த.]

46. அரங்கிடை மடந்தைய ராடு வாரவர்
கருங்கடைக் கண்ணயில் காமர் நெஞ்சினை
ஒருங்குவ மற்றவ ருயிர்க ளன்னவர்
மருங்குல்போற் றேய்வன வளர்வ தாசையே.

அரங்கின் இடையில் மடைந்தையர் ஆடுவார்; அவர் கரும் கண்ணாகிய அயில்கள் காமரது நெஞ்சினை ஒருங்குவ; அவர்களது உயிர் (அதனால்) அன்னவர் (மடந்தையரது) மருங்குலைப் போல் தேய்வன; (ஆனால் காமருக்கு) ஆசையோ, (மடந்தையரது தனம் போல்) வளர்வது. [அரங்கு-நடனசாலை. ஒருங்குதல்-வருத்தல். காமர்-காமுகர். மருங்குல்-இடை.]

47. பொழிவன சோலைகள் புதிய தேன்சில
விழைவன தென்றலு மிஞிறு மெல்லென
நுழைவன வன்னவை நுழைய நோவொடு
குழைவன பிரிந்தவர் கொதிக்குங் கொங்கையே.

சோலைகள் சில புதிய தேனை பொழிவன; விழைவனவாகிய தென்றலும் மிஞிறும் மெல்லென நுழைவன; அன்னவை நுழைய, (தலைவனை) பிரிந்தவர்களது (விரகத்தால்) கொதிக்கும் கொங்கைகள் நோ ஒடு குழைவன. [மிஞிறு-வண்டு].

48. இறங்குவ மகரயா ழெடுத்த வின்னிசை
நிறங்கிளர் பாடலா னிமிர்வ வவ்வழி

கறங்குவ வள்விசி கருவி கண்முகிழ்த்
துறங்குவ மகளிரோ டோதுங் கிள்ளையே.

மகரயாழானது எடுத்த இன் இசை நிறத்தினின்று கிளர்கின்ற பாடலோடு இறங்குவ நிமிர்வ; அவ்வழி வள் விசித்திருக்கும் கருவிகள் கறங்குவ, (அவ்விசையைக்கேட்டு) மகளிரோடு ஓதும் கிள்ளை கண்ணை முகிழ்த்து உறங்குவ. [நிறம்-மார்பு. வள்விசி கருவி-வார்கட்டிய முழவம். கறங்குவ-ஒலிப்பன.]

49. குதைவரிச் சிலைநுதற் கொவ்வை வாய்ச்சியர்
பதயுகத் தொழில்கொடு பழிப்பி லாதன
ததைமலர்த் தாமரை யன்ன தாளினல்
உதைபடச் சிவப்பன வுரவுத் தோள்களே.

குதைஉடைய வரி அமைந்த சிலை போன்றநுதலையும் கொவ்வைக் கனிபோன்ற வாயையும் உடைய மடவாரது, யுகம் பதங்களுக் குரிய (செம்பஞ்சியூட்டல் சிலம்பணிதல் முதலிய) தொழில்கள் கொண்டு பழிப்பு இல்லாதனவாகிய (இதழ்கள்) ததைந்த தாமரை அன்ன தாளினல் (ஊடல் காலத்தில்) உதைபட (ஆடவரது) உரவு (அமைந்த) தோள்கள் சிவப்பன. [குதை-வில்லில் இட்ட நாணின் முடி. யுகம்-இரண்டு. ததை-நெருங்கிய. உரவு-வலிமை].

50. பொழுதுணர் வரியவப் பொருவின் மாநகர்த்
தொழுதகை மடந்தையர் சுடர்வி ளக்கெனப்
பழுதற மேனியைப் பார்க்கு மாசை கொல்
எழுதுசித் திரங்களு மிமைப்பி லாதவே.

(பொன் மணி யொளிகளின் மிகுதியால் பகலென்றும் இரவென்றும்) பொழுதை உணர்வு அரிய அ பொருவில் மா நகர் (உள்ள) (கற்பினல்) தொழும் தகையுடைய மடந்தையரது சுடர் விளக்கு என பழுது அற்ற மேனியை பார்க்கும் ஆசைகொல் (மாளிகையில்) எழுதிய சித்திரங்களும் இமைப்பு இலாத (னவாய் இருத்தற்குக் காரணம்?) [பொருவில்-நிகரற்ற. ஆசை கொல்-ஆசையினலோ.]

51. தணிமலர்த் திருமக டயங்கு மாளிகை
இணரொளி பரப்பிநின் றிருடு ரப்பன
திணிசுடர் நெய்யுடைத் தீவி ளக்கமோ
மணிவிளக் கல்லன மகளிர் மேனியே.

தணிந்த (தாமரை) மலர் (வாழும்) திருமகள் தயங்கும் மாளிகையில் நின்று இணர்ந்த ஒளியை பரப்பி இருளை: துரப்பன, திணிந்த சுடர் (பொருந்திய) நெய் உடைய தீ விளக்கமோ (எனின் அன்று), மணி விளக்குகள் அல்லன (ஆயின்) மகளிரது மேனியே. [தணிந்த-குளிர்ந்த. இணர்ந்த, திணிந்த-நெருங்கிய.]

குறிப்பு :—நச்சினார்க்கினியர் "தணிக்குந் தாமரையாள்" என்ற விடத்தில், தன் அழகால் பிறரழகைத் தணிக்கும் (குறைக்கும்)தாமரையாள்என் றுபொருள் செய்திருக்கின்றார்.

மதங்கியர் நடனம் செய்தனர்.

52. பதங்களிற் றண்ணுமை பாணி பண்ணுற
விதங்களின் விதிமுறை சதிமி திப்பவர்
மதங்கிய ரச்சதி வகுத்துக் காட்டுவ
சதங்கைக ளல்லன புரவித் தார்களே.

தண்ணுமையும் (ஒத்துப்பாடுகின்றவர்களது) பாணியும் (யாழினது) பண்ணும் உற (பரத சாஸ்திர) விதிமுறை விதங்களின் மதங்கியர் பாதங்களால் சதி மிதிப்பவர்; அ சதியை வகுத்து காட்டுவன (அவர்கள் காலில் கட்டியிருக்கும்) சதங்கைகள் அல்லன (ஆயின்) (அவர்களுடன் கூட ஆடும்) புரவியின் (கழுத்தில் அணியப்பட்டிருக்கும் கிங்கிணியாகிய) தார்கள். [தண்ணுமை-மத்தளம். பாணி-பாடல். உற-பொருந்த. மதங்கியர்-ஆடல்பாடல் வல்ல பதினாறு வயதுப் பெண்கள். சதி-தாள ஒத்து.]

நடனம் செய்த மதங்கியர் ஆடவரிடம் பரிசு பெற்றனர்.

53. முளைப்பன முறுவலம் முறுவல் வெந்துயர்
விளைப்பன வன்றியு மெலிந்து நாடொறும்
இளைப்பன நுண்ணிடை யிளைப்ப மென்முலை
திளைப்பன முத்தொடு செம்பொ னாரமே.

(அம்மதங்கியர் முகத்தினிடத்து) முறுவல் முளைப்பன, அ முறுவல் (அருகு இருந்த ஆடவர்க்கு) வெம் துயர் விளைப்பன; அன்றியும், நாள்தொறும் மெலிந்து இளைப்பனவாகிய (அவர்களது) நுண் இடை (பாரம் அதிகரித்துப் பின்னும்) இளைப்ப (ஆடவர் பரிசாக அளித்த) முத்து ஒடு செம் பொன் ஆரம் (அவர்களது) மெல் முலை மேல் திளைப்பன. [முறுவல்-புன்னகை. திளைப்பன-பெருகின.]

குறிப்பு :—இச்செய்யுளின் பின் இரண்டு அடிகளும் இப் பொருள் பெறுவிடின், மேல் 46 வது செய்யுள் 3 வது அடியைக் கருதுங்கால் நம் கவி கூறியது கூறல் என்னும் குற்றத்திற்கு ஆளாவதும் கூடும்.

54. இடையிடை யெங்கணுங் களிய ருதன
நடையிள வன்னங்க ணளின நீர்க்கயல்
பெடையிள வண்டுகள் பிரச மாந்திடுங்
கடகரி யல்லன மகளிர் கண்களே.

(அந்நகரில்) நளினம் (உடைய) நீர் (நிலைகளில்) இடை இடை எங்கணும் நடை இள அன்னங்களும், கயல் மீன்களும், இளமை பொருந்திய பெடை வண்டுகளுங், கடம் (பொழியும் மதசலத்தை) மாந்திடும் பிரசங்கள் (மொய்க்கப்பெற்ற) கரிகளும் அல்லன ஆயின் மகளிர் கண்களும், (எப்பொழுதும்) களி அறுதன. [கடம்-மதச் சுவடு. பிரசம்-வண்டு. கரி-யானை. களி அறுதன-களிப்பு நீங்காதன.]

55. தழல்விழி யாளியுந் துணையுந் தாழ்வரை
முழைவிழை கிரிநிகர் களிற்றின் மும்மத
மழைவிழும் விழுந்தொறு மண்ணுங் கீழுறக்
குழைவிழு மதில்விழுங் கொடித்திண் டேர்களே.

தழல்போல் விழிக்கின்ற ஆளியும் (அதன்) துணையும் விழைகின்ற முழைகள் (பொருந்திய) தாழ்ந்த வரையுடைய கிரியை நிகர்க்கும் களிற்றின் மும்மதமாகிய மழை விழும்; விழுந்தொறும் மண்ணும் கீழ் உறகுழைவிழும்; அதில் கொடிகளுடைய திண்மை பொருந்திய தேர்கள் (புதைந்து) விழும். [ஆளி-சிங்கம். விழை-விரும்புகின்ற. முழை-குகை. குழைவிழும்-சேறுகும்.]

56. ஆடுவார் புரவியின் குரத்தை யார்ப்பன
சூடுவா ரிகழ்ந்தவத் தொங்கன் மாலைகள்
ஓடுவா ரிழுக்குவ வூட லூடுறக்
கூடுவார் வனமுலை கொழித்த சாந்தமே.

(நாயகி ஊடிய காலத்து அவ்வூடல் தீரும் வண்ணம் மாலை எடுத்து அவளுக்கு) சூடுவார் (ஆகிய நாயகரை) இகழ்ந்து (அம்மகளிர் வெளியில் எறிந்த) அதொங்கலாகிய மாலைகள, (வீதியில்) ஆடுகின்ற வார் (பொருந்திய) புரவியின் குரத்தை ஆர்ப்பன; ஊடலானது ஊடுஉற (பிறகு) கூடுவார் வனம் முலைகளினின்றும் கொழித்து (எறிந்த) சாந்தம் (வீதியில்) ஓடுவாரை இழுக்குவ. [குரம்-குளம்பு. ஆர்ப்பன-கட்டுவன. ஊடுற-தணிய. சாந்தம்-சந்தனம். இழுக்குவ-வழுக்குவன.]

57. இளைப்பருங் குரங்களா லிவுளி பாரினைக்
கிளைப்பன வவ்வழி கிளர்ந்த தூளியின்
ஒளிப்பன மணியவை யொளிர மீதுதேன்
துளிப்பன குமரர்தந் தோளின் மாலையே.

இவுளி, இளைப்பு அரிய குரம்களால் பாரினை கிளைப்பன அவ்வழி கிளர்ந்த தூளியால் (அக்குதிரை மேல் ஏறிவரும் மைந்தர் அணிந்துள) மணிகள் ஒளிப்பன; அவை (மறுபடி) ஒளிர (அந்த) குமரர் தம்தோளில் (அணிந்த) மாலைகள் தேனை மீது துளிப்பன. [இவுளி-குதிரை. ஒளிப்பன-மறைத்து விடுகின்றன.]

58. விலக்கருங் கரிமதம் வேங்கை நாறுவ
குலக்கொடி மாதர்வாய் குமுத நாறுவ
கலக்கடை கணிப்பருங் கதிர்க ணாறுவ
மலர்க்கடி நாறுவ மகளிர் கூந்தலே.

விலக்கு அரு கரியினது மதம் வேங்கை (பூக்களின் மணம்போல்) நாறுவ; கொடிபோன்ற குல மாதர்களது வாய்கள் குமுதம்போல் நாறுவ; (அவரது அணி) கலம்களின் கடை கணிப்பு அரு கதிர்களை நாறுவ; மகளிர் கூந்தல் மலரின் கடியை நாறுவ. [நாறுவ-முறையே மணப்பன, தோன்றுவன, வீசுவன, மணப்பன.]

அயோத்தி அங்காடி வளங்களில் சிறந்தது.

59. கோவையிந் நகரொடெண் குறிக்க லாதவத்
தேவர்தந் நகரியைச் செப்பு கின்றதென்
யாவையும் வழங்கிடத் திகலி யிந்நகர்
ஆவணங் கண்டபி னளகை தோற்றதே.

யாவையும் வழங்கு இடத்து இகலி இ (அயோத்தி) நகரின் ஆவணத்தை கண்டபின் (குபேரபட்டினமாகிய) அளகையும் தோற்றது. (அப்படி இருக்க) இ (அயோத்தி) நகரொடு (அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்தி துவாரகை என்று சொல்லப் படுகிற) கோவையில் குறிக்கலாத (அமராவதி என்னும்) அ தேவர் தம் நகரியை (ஒப்பாகாது என்று) செப்புகின்றதால் என்ன பயன்! [ஆவணம்-கடைவீதி. கோவை-வரிசை.]

60. அதிர்கழ லொலிப்பன வயிலி மைப்பன
கதிர்மணி யணிவெயில் கால்வ மான்மத
முதிர்வுறக் கமழ்வன முத்த மின்னுவ
மதுகர மிசைப்பன மைந்த ரீட்டமே.

மைந்தரது ஈட்டங்களில், அதிரும் கழல்கள் ஒலிப்பன; அயில்கள் இமைப்பன; அணிகளிலுள்ள மணிகள் வெயில் கதிர் கால்வன; முதிர்வு உற மான்மதம் கமழ்வன; முத்தம் மின்னுவன; மதுகரம் இசைப்பன. [மான்மதம்-கஸ்தூரி. மதுகரம்-வண்டு.]

அந்நகரில் விளையும் வாத்தியகோஷத்தால் கடலொலியும் அடங்கும்.

61. வளையொலி வயிரொலி மகர வீணையின்
கிளையொலி முழவொலி கின்ன ரத்தொலி
துளையொலி பல்லியந் துவைக்குஞ் சும்மையின்
விளையொலி கடலொலி மெலிய விம்முமே.

[வளை-சங்கு. வயிர்-ஊதுகொம்பு. கிளை-தந்தி. முழவு-மத்தளம். தொளை-தாரை, சின்னம் முதலிய தொளைக் கருவிகள். பல் இயம்-பலவாத்தியங்கள். துவைக்கும்-சப்திக்கும். சும்மையின்--ஆரவாரத்தால். விம்மும்-மேல்படும்.]

அந்நகரத்தில் பலவித மண்டபங்களும் மிகுதியாக இருந்தன.

62. மன்னவர் தருதிறை யளக்கு மண்டபம்
அன்னமென் னடையவ ராடு மண்டபம்
உன்னரு மருமறை யோது மண்டபம்
பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம்.

[பன்-சொல்வதற்கு. பட்டிமண்டபம்-வித்தியாமண்டபம்.]

63. இரவியிற் சுடர்மணி யிமைக்குந் தோரணத்
தெருவினிற் சிறியன திசைகள் சேண்விளங்
கருவியிற் பெரியன வானைத் தானங்கள்
பரவையிற் பெரியன புரவிப் பந்தியே.

இரவிபோல் இமைக்கும் சுடர்மணி தோரணங்கள் (தொங்கும்) தெருவினும் திசைகள் சிறியன; சேண் விளங்கும் அருவியினும் ஆனையினது தானங்கள் பெரியன; புரவியின் பந்திகள் பரவையினும் பெரியன. [சேண்-தூரத்தில். தானம்-மதநீர். பரவை-கடல்.]

64. சூளிகை மழைமுகி லுரிஞ்சுந் தோரண
மாளிகை மலர்வன மகளிர் வாண்முகம்
வாளிக ளன்னவை மலர்வ மற்றவை
ஆளிக ளன்னவர் நிறத்தி னாழ்பவே.

மழை முகிலை தொடக்கும் சூளிகையுடைய தோரணம் (கட்டிய) மாளிகை (சாளரங்களில்) மகளிரது வாள் (பொருந்திய) முகம் (ஆகிய தாமரைகள்) மலர்வன; அன்னவை (கண்களாகிய) வாளிகள் மலர்வன; மற்று (வாளிகளாகிய) அவை (தெருவில் செல்லும் ஆடவர்களாகிய) ஆளிகள் அன்னவர் நிறத்தில் ஆழ்பவே. [தொடக்கும்-எட்டும். சூளிகை-மேல்தளம். ஆளி-சிங்கம். நிறம்-மார்பு.]

65. மன்னவர் கழலொடு மாறு கொள்வன
பொன்னணி தேரொலி புரவித் தாரொலி
இன்னகை யவர்சிலம் பேங்க வேங்குவ
கன்னியர் குடைதுறைக் கமல வன்னமே.

பொன் அணி தேர்ஒலியும் புரவியின் தார் ஒலியும் மன்னவர் கழல்ஒடு மாறுகொள்வன; இனிய நகையவர் (ஆகிய மாதரது) சிலம்பு ஏங்க (அது தங்கள் இனத்தின் குரல் என மயங்கி) கன்னி

யர் குடையும் துறையிலிருக்கும் கமலத்தில் வாழும் அன்னங்கள் ஏங்குவன. [ஏங்க-ஒலிக்க.]

66. ஊடவுங் கூடவு முயிரி னின்னிசை
பாடவும் விறலியர் பாடல் கேட்கவும்
ஆடவு மகன்புன லாடி யம்மலர்
சூடவும் பொழுதுபோஞ் சிலர்க்கத் தொன்னகர்.

அ தொல் நகரில் சிலர்க்கு (தம்தம்) உயிர்போன்ற (நாயகரோடு) ஊடவும், கூடவும், இனிய இசையை பாடவும், விறலியரது பாடலை கேட்கவும் அகன்ற புனலில் (ஆடவும்) ஆடி அம் மலரை சூடவும் பொழுது போகும். [தொல்-பழைய. விறலியர்-பாண் மகளிர்.]

67. முழங்குதிண் கடகரி முன்பி னூரவும்
எழுங்குரத் திவுளியோ டிரத மேறவும்
பழங்கணோ டிரந்தவர் பரிவு தீர்தர
வழங்கவும் பொழுதுபோஞ் சிலர்க்கம் மாநகர்.

அ மா நகரில் சிலர்க்கு, முழங்கும் திண்மை பொருந்திய கடம் பொழிகின்ற கரிகளை முன்னும் பின்னும் ஊரவும், எழும் குரம் உடைய இவுளிகளிலுங் இரதங்களிலும் ஏறவும், பழங்கணோடு இரந்தவர்களது பரிவு தீர்தர (வேண்டிய அளவு) வழங்கவும் பொழுது போகும். [குரம்-குளம்பு. பழங்கண்-துன்பம்.]

68. கரியொடு கரியெதிர் பொருத்திக் கைப்படை
வரிசிலை முதலிய வழங்கி வாலுளைப்
புரவியிற் பொருவில் செண்டாடிப் போர்க்கலை
தெரிதலிற் பொழுதுபோஞ் சிலர்க்கச் சேணகர்.

அ சேண் நகரில் சிலர்க்கு, கரியோடு கரியை எதிர்பட பொருத்தியும், கைபடை வரிசிலை முதலிய வழங்கியும், வால் உளையுடைய பொரு இல் புரவியில் (ஏறிக்கொண்டு) செண்டில் ஆடி, போர் கலைகள் தெரிதலில் பொழுது போகும். [சேண்-விசாலமான. வால்-வெண்மையான. உளை-கழுத்துமயிர். செண்டு-பந்து எறிவீதி, குதிரை வையாளி வீதி. போர்க்கலை-தனுர்வேதம்.]

69. நந்தன வனத்தலர் கொய்து நவ்விபோல்
வந்திளை யவரொடு வாவி யாடிவாய்ச்
செந்துவ ரழிதரத் தேறன் மாந்திச்சூ
துந்தலிற் பொழுதுபோஞ் சிலர்க்கவ் வொண்ணகர்.

அ ஒள் நகரில் சிலர்க்கு நந்தன வனத்துள்ள அலர்களை கொய்தும், நவ்விபோல் வந்து (தம்தம்) இளையவரோடு வாவியில் (நீர்)

ஆடியும், வாய் (இதழினிடத்துப் பொருந்திய) செம் துவரானது அழிதர தேறலை மாந்தியும், சூதை உந்துதலிலும், பொழுது போகும். [நவ்வி-மான். இளையவர்-வாலிபர். வாவி-தடாகம். தேறல்-மது. சூது உந்துதல்-சூது ஆடுதல்].

70. நாளு விதமா நளி மாதிர வீதி யோடி
மீனாறு வேலைப் புனல் வெண்முகி லுண்ணு மாபோல்
ஆனாத மாடத் திடையாடு கொடிகண் மீப்போய்
வானாறு நண்ணிப் புனல்வற்றிட நக்கு மன்னோ.

வெண் முகிலானது நளி மாதிரத்தின் வீதிகளில் நாளுவிதமாய் ஓடி, மீன் நாறும் வேலையினது புனலை உண்ணுமாபோல், ஆனாத மாடத்து இடை ஆடும் கொடிகள் மீ போய் வான் ஆற்றை நண்ணி (அதன்) புனலை வற்றிட நக்கும். [நளி-பெரிய. மாதிரம்-ஆகாயம். ஆனாத-அழிவில்லாத. வான் ஆறு-ஆகாய கங்கை]

அயோத்தி மன்னரது குணம் நண்பர் கீர்த்திகளைப்போல் கோபுர வாயிலும் இரண்டு மதில்களும் மிகவும் உயர்ந்து விளங்கின.

71. வன்றோரணங்கள் புணர் வாயிலும் வானினும்பர்
சென்றோங்கி மேலோ ரிடமில்லெனச் செம்பொனிஞ்சி
குன்றோங்கு தோளார் குணங்கூட்டிசைக் குப்பையென்ன
ஒன்றோடிரண்டு முயர்ந்தோங்கின வும்பர் நாண.

வல் தோரணங்கள் புணர்ந்த வாயிலும், வானிற்கு உம்பர் மேல் ஓர் இடம் இல்லை என சென்று ஓங்கி (இருக்கும்) செம் பொன்னலாகிய (அகநகர் புறநகர் இரண்டு) இஞ்சிகளும் (ஆகிய) ஒன்றோடு இரண்டும், குன்று போல் ஓங்கும் தோளார் (ஆகிய அயோத்தி மன்னரது) குணம் கூட்டு இசைக்குப்பை (இவைகள்) என்ன உம்பர்கள் நாண உயர்ந்து ஓங்கின. [புணர்ந்த-சேர்ந்த. உம்பர்-அப்புறம். இஞ்சி-மதில். ஒன்றோடு இரண்டு-மூன்று. கூட்டு-நட்புடையவர். இசைக்குப்பை-கீர்த்தியின் தொகுதி. உம்பர்-தேவர்கள்.]

72. காடும் புனமுங் கடலன்ன கிடங்கு மாதர்
ஆடுங் குளனும் மருவிச்சுனைக் குன்று மும்பர்
வீடும் விரவும் மணிப்பந்தரும் வீணை வண்டு
பாடும் பொழிலும் மலர்ப்பல்லவப் பள்ளி மன்னோ.

(அந்நகரைச்சூழ்ந்த) காடுகளிலும், புனங்களிலும், கடல்அன்ன கிடங்குகளிலும், மாதர்(நீர்)ஆடும் குளங்களிலும், அருவியையும் சுனையையும் (உடைய) குன்றுகளிலும், உம்பர்வீடுகளிலும், மணிகளாலாகிய பந்தர்களிலும், வண்டுகள் வீணைபோல் பாடும் பொழில்களி

லும், மலர் பல்லவம் (ஆகிய இவை இரண்டும்) பள்ளிபோல் கிடந்து விரவும். [புனம்-விளைநிலம். உம்பர்வீடு-மேல்வீடு. பொழில்-சோலை. பல்லவம்-தளிர். பள்ளி-சயனம். விரவும்-கலந்து இருக்கும்]

73. தெள்வார்மழையுந் திரையாழியு முட்க நாளும்
வள்வார் முரசம் மதிர்மாநகர் வாழு மாக்கள்
கள்வா ரிலாமைப் பொருட் காவலு மில்லை யாதுங்
கொள்வா ரிலாமைக் கொடுப்பார்களு மில்லை மாதோ.

தெள்ளிய வார் (பொழியும்) மழையும் திரைகள் உடைய ஆழியும் உட்கும்படி வள்வார் (கட்டிய) முரசம் நாளும் அதிர்கின்ற மா நகரில் வாழும் மாக்களுள் கள்வார் இல்லாமையால் பொருள் காவலும் இல்லை; யாதும் (இரந்து) கொள்வார் இல்லாமையால் (எதையும்) கொடுப்பார்களும் இல்லை. [திரை-அலை. ஆழி-கடல். உட்க-அஞ்ச. வள்வார்-தோல் கச்சு. கள்வார்-திருடர்.]

அயோத்தியில் எவ்விஷயத்திலும் ஏற்றம் தாழ்வு என்பது இல்லை.

74. கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்வி முற்ற
வல்லாரு மில்லை யவைவல்லாரல் லாரு மில்லை
எல்லாரு மெல்லாப் பெருஞ்செல்வமு மெய்த லாலே
இல்லாரு மில்லை யுடையார்களு மில்லை மாதோ.

(அந்நகரமாக்களுள்) கல்லாது (மரம்போல்) நிற்பவர் பிறர் இன்மையால் (இன்னவர்) கல்வியை முற்ற (கற்று) வல்லார் (என்று சொல்வதற்கு) இல்லை; (இன்னவர்) அவை வல்லார் அல்லார் (என்றும் சொல்வதற்கு) இல்லை; எல்லாரும் (அஷ்ட ஐச்வர்யங்களாகிய) எல்லா பெரும் செல்வமும் எய்தலாலே, (இன்னவர்) இல்லார் (என்பதற்கு) இல்லை, (இன்னவர்) உடையார்கள் (என்பதற்கும்) இல்லை.

அயோத்திமா நகரம் சிறந்த போக பூமியாயிருந்ததற்கு முதற் காரணம் அந்நகரத்தில் வாழ்வோர்க்கு வாய்த்த கல்வி கேள்விகளேயாகும்.

75. ஏகம் முதற்கல்வி முளைத் தெழுந் தெண்ணில் கேள்வி
ஆகும் முதற்றிண் பணைபோக்கி யருந்த வத்தின்
சாகந் தழைத்தன் பரும்பித்தரு மம்ம லர்ந்து
போகங் கனியொன் றுபழுத்தது போலு மன்றே.

(அயோத்தியானது) கல்வி (எனும்) ஏகம் முதல்(முளை)முளைத்து எழுந்து, (அதிலிருந்து) எண் இல் கேள்வி ஆகும் திண்மை பொருந்திய முதல் பணையை (மேல் ஓங்க) போக்கி, (அந்த முதல் பணையிலிருந்து) அரும் தவமாகிய சாகம் தழைத்து, (பின்) அன்பு

ஆகிய (அரும்பு) அரும்பி, (அந்த அரும்பு) தருமம் (ஆகிய மலராய்) மலர்ந்து, (அம்மலர்) போகம் (ஆகிய) கனி ஒன்ருய் பழுத்தது போலும். [முதல் பணை-அடிமரம். சாகம்-இலை.]

---

5. அரசியற் படலம்.

தயரதனது தன்மையைக் கூறுகின்ற படலம்.

1. அம்மா ணகருக் கரசன்னர சர்க்கரசன்
செம்மாண் டனிக்கோ லுலகேழினுஞ் செல்லநின்ருன்
இம்மாண் கதைக்கோ ரிறையாய விராமனென்னும்
மொய்ம்மாண் கழலோற் றருநல்லற மூர்த்தியன்ஞன்.

இ மாண் கதைக்கு ஓர் இறையாய இராமன் என்னும் மொய்யில் மாண் (வீர) கழலோனை (உலகம் உய்யுமாறு) தரும் நல்ல அறம் மூர்த்தி அன்னன் (ஆகிய தயரதன்) அ மாண் நகருக்கு அரசன். (அவன்) அரசர்க்கு (எல்லாம்) அரசன். (தனது) மாண் தனி (செம்) கோல் உலகு ஏழினும் செல்ல நின்ருன். [மாண்-மாட்சி பெற்ற. இறையாய-தலைவனுகிய. மொய்-போர்.]

மற்ற அரசரிடத்துக் குறையாகவே இருந்த குணங்கள்
தயரதனிடம் பூரணமாய் விளங்கின.

2. ஆதிம் மதியும் மருளும்மற னும்மமைவும்
ஏதின் மிடல்வீ ரமுமீகையு மெண்ணில்யாவும்
நீதிந் நிலையும் மிவைநேமியி னோர்க்குநின்ற
பாதிம் முழுதும் மிவர்க்கேபணி கேட்பமன்னே.

ஆதிமதியும், அருளும், அறனும், அமைவும், ஏதம் இல் மிடல் (பொருந்திய) வீரமும், ஈகையும், எண் இல் (மற்ற இராஜ குணங்கள்) யாவும், நீதிநிலையும் (ஆகிய) இவை (பிற) நேமியினோர்க்கு பாதி நின்றன. (அவ்வாறன்றி) இவற்கே (அவை) முழுதும் பணி கேட்பன. [ஏதம்-குற்றம். மிடல்-திண்மை.]

தயரதன் கொடாத தானமும் செய்யாத யாகமும் இல்லை.

3. மொய்யார் கலிசூழ் முதுபாரின் முகந்ததானக்
கையார் புனலா னனையாதன கையுமில்லை
மெய்யாய வேதத் துறைவேந்தருக் கேய்ந்தயாரும்
செய்யாத யாக மிவன்செய்து மறந்தமாதோ.

மொய் ஆர்கலி சூழும் முது பாரில் தானங்களை முகந்து (கொடுக்கும் தயரதனது) கைகளில் ஆர்ந்த புனலால் நனையாதன (ஆகிய) கையும் இல்லை. மெய் ஆகிய வேதத்தினது துறை (ஒழுகும்) வேந்

தருக்கு எய்ந்த யாரும் செய்யாத யாகம் இவன் செய்து மறந்தன. [ஆர்கலி-கடல். ஆர்ந்த-பொருந்திய.]

4 தாயொக்கு மன்பிற் றவமொக்கு நலம்பயப்பில்
சேயொக்கு முன்னின் றொருசெல்கதி யுய்க்குநீரால்
நோயொக்கு மென்னின் மருந்தொக்கு நுணங்குகேள்வி
ஆயப்பு குங்கா லறிவொக்கு மெவர்க்குமன்னான். [வி

அன்னான் எவர்க்கும், அன்பில் தாயை ஒக்கும், நலம் பயப்பில் தவத்தை ஒக்கும், முன் நின்று ஒரு செல்கதி உய்க்கும் நீரால் சேயை ஒக்கும், நோயை ஒக்கும் எனின் மருந்தையும் ஒக்கும், நுணங்கும் கேள்வியை ஆயப்புகுங்கால் அறிவு ஒக்கும். [நீரால்-தன்மையால். நுணங்கு-நுட்பமான.]

குறிப்பு :—தாயும் சேயும் ஆயதயரதன் "தன்னேய்க்குத் தானே மருந்தாம்" அணியிழையென, இன்பம் பயப்பதில் அவ்வவர் தலைவியையும் ஒத்திருந்தனன் என்னும் கருத்தை இப்பாசுரத்தின் மூன்றாமடி குறித்து நிற்கின்றது போலும்! வேண்டிய வேண்டியாங்கு தருதலால் தயரதன் தவம் போன்றனன். மன்னுயிர் காக்கும் மன்னவன் ஐம்பகை தீர்த்தலன்றியும் தாயொத்த அன்பினால் நால்வகைப் புருடார்த்தங்களுக்குச் சாதனமாயிருத்தலும் வேண்டும்.

5. ஈய்ந்தே கடந்தா னிரப்போர்கட லெண்ணினுண்ணூல்
ஆய்ந்தே கடந்தா னறிவென்னு மளக்கர்வாளால்
காய்ந்தே கடந்தான் பகைவேலை கருத்துமுற்றத்
தோய்ந்தே கடந்தான் திருவிற்றொடர் போகபௌவம்

(அவ்வரசன்) இரப்போர் (ஆகிய) கடலை ஈந்தே கடந்தான், அறிவு என்னும் அளக்கரை எண் இல் நுண் நூல்களை ஆய்ந்தே கடந்தான், பகைவர் (களாகிய) வேலையை வாளால் காய்ந்தே கடந்தான், திருவினால் தொடரும் போகம் (ஆகிய) பௌவத்தை கருத்து முற்ற தோய்ந்தே கடந்தான். [அளக்கர், வேலை, பௌவம்-கடல்.]

6. வெள்ளமும் பறவையும் விலங்கும் வேசியர்
உள்ளமு மொருவழி யோட நின்றவன்
தள்ளரும் பெரும்புகழ்த் தயர தப்பெயர்
வள்ளல்வள் ளுறையயின் மன்னர் மன்னனே.

(தமக்கென்று ஒருநெறியில்லாதனவாகிய) வெள்ளமும் பறவையும் விலங்கும் (மனம் போன போக்கெல்லாம் போகும்) வேசியர்களது உள்ளமும் ஒரு வழியாய் ஓட (கோல் கோடாது) நின்றவன் தள்ளு

தற்கு அரும் பெரும் புகழ் (உடைய) தயரதன் (என்கிற) பெயரை உடைய வள்ளல். (அவன்) வள் உறையில் (கிடக்கும்) அயிலை உடைய மன்னர் மன்னவன். [வள்-தோல். அயில்-வேல்.]

குறிப்பு:—பகையரசர் இன்மையால் தயரதனது வேல் உறையினுள்ளேயே கிடக்கின்றது.

உலகமுழுவதும் தயரதனது செங்கோல் சென்றது.

7. நேமிமால் வரைமதி லாக நீள்புறப்
பாமமா கடல்கிடங் காகப் பன்மணி
வாமமா ளிகைமலை யாக மன்னற்குப்
பூமியு மயோத்திமா நகரம் போலுமே.

மால் நேமிவரை மதிலாகவும், நீள் பாமம் மா புறக்கடல் கிடங்காகவும், மலைகள் பல் மணிகள் (பொருந்திய) வாமம் மாளிகைகளாகவும் (இருந்து) மன்னற்கு பூமியும் அயோத்தி மாநகரம் போலும். [மால்-பெரிய. நேமிவரை-சக்ரவாள கிரி. பாமம்-விசாலமான. வாமம்-அழகிய.]

8. ஆவரும் வன்மைநே ரறிந்து தீட்டலால்
மேவருங் கையடை வேலுந் தேயுமால்
கோவுடை நெடுமணி மகுட கோடியால்
சேவடி யணிந்தபொற் கழலுந் தேயுமால்.

(பகையரசர்) யாவரது வன்மையும் (இவனது இவ்வளவு என்பதை) நேராக அறிந்து (இவனை வெல்ல இத்தனை தரம் தீட்டினால் போதும் என்று அதற்கேற்றபடி ஒருமுறை இருமுறை மும்முறை) தீட்டலால் (மாத்திரம்), (தயரதனது) கையில் அடைந்திருக்கும் வேலானது தேயும். (தயரதன் வேலைத் தீட்டுகின்ற செய்தியைக் கேட்டமாத்திரத்திலேயே, படை எடுத்து வந்த அரசர் போர் ஒடுங்கிவிடுவார்களாகையால், தயரதன் கைவேல் அவர்களைத் தாக்கி அதனால் தேய்வடைய இடமில்லை. அவ்வாறு போர் ஒடுங்கி தயரதனது அடிபணியும்) கோஉடை நெடு மணி (அமைக்கப் பெற்ற) மகுட கோடியால் (தயரதனது) சே அடியை அடைந்த பொன் கழலும் தேயும். [கோவுடை-அரசர்களுடைய. கழல்-வீரகண்டை.]

தயரதன் குடை இருக்க விண்மதி வீண் என்பர்.

9. மண்ணிடை யுயிர்தொறும் வளர்ந்து தேய்வின்றித்
தண்ணிழல் பரப்பவு மிருளைத் தள்ளவும்
அண்ணறன் குடைமதி யமையு மாதலால்
விண்ணிடை மதியினை மிகையி தென்பவே.

மண் இடை (உள்ள) உயிர்கள் தொறும், தேய்வு இன்றி (என்றும் வளர்ந்து (இன்பமாகிய) தண்மை பொருந்திய நிழலை பரப்பவும் (வறுமை பாபம் ஆகிய) இருளை தள்ளவும் அண்ணல் தன் (வெண்கொற்றக்) குடையாகிய மதி அமையும்; ஆதலால் விண் இடை (வளர்வதும் தேய்வதுமாகிக் களங்கமும் உடைய) மதியினை (பெரியோர்கள் நோக்கி) " இது மிகை " என்பர்.

சராசரங்கள் அத்தனைக்கும் தயரதன் அன்பினால் உடம்புபோல்வான்

10. வயிரவான் பூணணி மடங்கன் மொய்ம்பினான்
உயிரெலாந் தன்னுயி ரொப்ப வோம்பலால்
செயிரிலா வுலகினிற் சென்று நின்றுவாழ்
உயிரெலா முறைவதோ ருடம்பு மாயினான்.

வயிர (மணிகளால் செய்த) வான்பூண்களை அணிந்த மடங்கல்போன்றமொய்ம்பினான் (ஆகிய தயரதன்), உயிர் எல்லாம் தன் உயிர் ஒப்ப (பாவித்து) ஓம்பலால் (அவன்) செயிர் இலா உலகினிற் சென்றும் நின்றும் வாழ்கின்ற உயிர்கள் எலாம் உறைவது ஆகிய ஓர் (முன் சொன்ன, தாய், தவம், சேய், மருந்து, அறிவு அன்றியும்) உடம்பும் ஆயினான். [வான்-சிறந்த. மடங்கல்-சிங்கம். செயிர்-குற்றம்.]

குறிப்பு:—" மன்னுயிரேல்லா மண்ணாள் வேந்தன் தன்னுயிர் " எனக்கூறிய மணிமேகலா தெய்வத்தின் வாக்கை இச்செய்யுள் விளக்கிக் காட்டுகின்றது. உடல் வளர்வதெல்லாம் உயிரைத் தாங்குவதற்கே யாகையாலும், உயிர் நலியின் உடல் அழியுமாகையாலும்—" குடிதாழக் கோல் வீழும் " என்னும் சாச்வத உண்மையை அரசாங்க முறையிற் பயில்வோர் மறத்தலாகாது. தம்மைக் கொண்டாடும் பொருட்டே குடிகள் வாய்த்திருக்கின்றனர் என்னும் ஞாபகத்தை ஆள்வோர் ஒழித்துக் குடிகளுக்குத் தாம் உடம்பே போன்றவர் என்றெண்ணி அவர் விவகரிப்பாராயின் உலக மன்னவர்க்குயிரீவார் எந்நாளும் இலராகார்.

தயரதன் ஏக சக்ராதிபத்யம் செய்தனன்.

11. குன்றென வுயரிய குவவுத் தோளினான்
வென்றியந் திகிரிவெம் பரிதி யாமென
ஒன்றென வுலகிடை யுலாவி மீமிசை
நின்றுநின் றுயிர்தொறு நெடிது காக்குமே.

குன்று என உயரிய குவவு (பொருந்திய) தோளினனது வென்றியோடுகூடிய அம் திகிரியானது, (பிரகாசத்தால்) வெம் பரிதி ஆகும் என (தோன்றி), (அச்சூரியனைப்போல்)ஒன்றே என உலகிடை உலா

வியும் மீமிசை நின்று நின்றும் உயிர்தொறும் நெடிது காக்கும். [குவவு-திரட்சி. திகிரி-சக்ரம். பரிதி-சூரியன்.]

12. எய்யென வெழுபகை யெங்கு மின்மையால்
மொய்பொரு தினைவுறு முழவுத் தோளினன்
வையக முழுவதும் வறிஞ ரோம்புமோர்
செய்யெனக் காத்தினி தரசு செய்கின்றான்.

எய்என எழும்பகை எங்கும் இன்மையால் மொய்த்து பொரும் தினைவை உறும் முழவுபோன்ற தோளினன் (ஆகிய தயரதன்) வையகம் முழுவதையும் வறிஞன் ஓம்பும் ஓர் செய்என காத்து இனிது அரசு செய்கின்றான். [எய்என-விரைந்து. மொய்பொரு நெருங்கிப் போர்செய்ய வேண்டுமென்கிற. முழவு-மத்தளம். செய்-விளைந்த வயல்.]

6. திருவவதாரப் படலம்.

ஸ்ரீ ராமபிரானது திருஅவதாரத்தைக் கூறுகின்ற படலம்.

1. ஆயவ னொருபக லயனை யேநிகர்
தூயமா முனிவரற் றொழுது தொல்குலத்
தாயருந் தந்தையுந் தவமு மன்பினால்
மேயவான் கடவுளும் பிறவும் வேறுநீ.

ஆயவன், ஒருபகல் அயனையே நிகர்க்கும் (வசிஷ்டனாகிய) தூய மா முனிவரனை தொழுது "(எனது) தொல் குலத்திற்கு தாயரும், தந்தையும், தவமும், அன்பினால் மேவும் வான் கடவுளும் (ஹிதமான) பிறவும் வேறு நீ (யாகி இருக்கின்றாய்)". [ஆயவன்-அத் தன்மையன் ஆகியதயரதன். வான்-சிறந்த.]

2. எம்குலத் தலைவர்க ளிரவி தன்னினும்
தங்குலம் விளங்குறத் தரணி தாங்கினார்
மங்குந ரில்லென வரம்பில் வையகம்
இங்குன தருளினா லினிதி னோம்பினேன்.

(ஆகையால்) "எம் குல தலைவர்கள் (கிரகணத்தாலும் மேகத்தாலும் ஒவ்வொருசமயம் ஒளி மழுங்கும்) இரவிதன்னிலும் தம் குலம் விளங்குற தரணியை தாங்கினார். (அவர்களுள்) மங்குநர் இலர் என (யாவரும் புகழும்படி) வரம்பு இல் வையகத்தை இங்கு உனது அருளினால், (நானும்) இனிது ஓம்பினேன்". [தரணி, வையகம்-பூமி.]

3 அறுபதி னுயிர மாண்டு மாண்டுற
உறுபகை யொடுக்கியிவ் வுலகை யோம்பினேன்
பிறிதொரு குறையிலை யெற்பின் வையகம்
மறுகுறு மென்பதோர் மறுக்க முண்டரோ.

(இவ்வாறு) அறுபதினுயிரம் ஆண்டும் மாண்டுஉற உறுபகை ஒடுக்கி இ உலகை ஓம்பினேன்; என்பின் வையகம் மறுகு உறும் என்பது ஓர் மறுக்கம் (என் மனத்தில்) உண்டு. பிறிது ஒரு குறை இல்லை. [மாண்டுற-கழிய. மறுக்கம்-கலக்கம்.]

4. அருந்தவ முனிவரு மந்த ணாளரும்
வருந்துத லின்றியே வாழ்வின் வைகினர்
இருந்துய ருழக்குவ ரெற்பி னென்பதோர்
அருந்துயர் வருத்துமென் னகத்தை யென்றனன்.

[இருந்துயருழக்குவர்-பெருந் துயரத்தினுல் கலக்கப்படுவோர்.]

5. முரசறை செழுங்கடை முத்த மாமுடி
அரசர்தங் கோமக னனைய கூறலும்
விரைசெறி கமலமென் பொகுட்டு மேவிய
வரசரோ ருகன்மகன் மனத்தி லெண்ணினன்.

முரசு அறைகின்ற செழும் கடை (வாயிலும்) முத்து (பதித்த) மா முடியையும் (உடைய) அரசர்தம் கோமகன் அனைய கூறலும், விரை செறிந்த கமலத்தினது மெல் பொகுட்டில் மேவிய வரம் சரோருகனது மகன் (ஆகிய வசிஷ்டன் தன்) மனத்தில் (கீழ்வரும், வாய்மையையும், முன் தேவலோகத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியையும்) எண்ணினன். [வரம்-சிறந்த. சரோருகன்-பிரமன்.]

6. அலைகட னடுவணோ ரனந்தன் மீமிசை
மலையென விழிதுயில் வளரு மாமுகில்
கொலைதொழி லரக்கர்தங் கொடுமை தீர்ப்பனென்
றலைவுறு மமரருக் குரைத்த வாய்மையை.

அலைகளுடைய கடலின் நடுவண் ஓர் அனந்தன் மீமிசை மலை என (படுத்து) விழிதுயில் வளரும் மா முகில் (வண்ணனாகிய திருமால்) 'கொலையை தொழிலாக உடைய அரக்கர்தம் கொடுமையை தீர்ப்பன் (நான்)' என்று உலைவு உறும் அமரருக்கு (முன்) உரைத்த வாய்மையை (வசிஷ்டன் எண்ணினன்). [உலைவு-வருத்தம்.]

திருமால் தேவர்க்கு வாக்குக்கொடுத்த விருத்தாந்தம்.

7. சுடுதொழி லரக்கராற் றொலைந்து வானுளோர்
கடுவமர் களனடி கலந்து கூறலும்
படுபொரு ளுணர்ந்தவப் பரமன் யாமினி
அடுவதி லெனமறுத் தவரோ டேகினன்

வான் உளோர், (பிறரை) சுடுகின்ற தொழில் புரியும் அரக்கரால் தொலைந்து கடு அமர்ந்த களன் அடிகளை கலந்து (தமது துன்பத்தை) கூறலும், படும் பொருளை உணர்ந்த அ பரமன் 'யாம் இனி (அரக்கரை) அடுவது இல்' என மறுத்து (கூறி) அவரோடு ஏகினன். [கடு அமர் களன்-விஷம் பொருந்திய கழுத்தையுடையவன், சிவன். அடுவது-கொல்வது.]

8. கறைமிடற் றிறைவனுங் கடவு ளோர்களும்
மறைமுதற் கிழவனை வந்து நண்ணலும்
முறைமையிற் கடன்முறை முற்றி முண்டகத் .
திறைவனு மவரோடு மினிதி னேகினன்.

[கறைமிடறு-விஷம் தங்கிய கழுத்து. முண்டகம்-தாமரைப்பூ.]

9. வடவரைக் குடுமியி னடுவண் மாசறு
சுடர்மணி மண்டபந் துன்னி நான்முகக்
களவுளை யடிதொழு தமரர் கண்டகர்
இடிநிகர்வினையமதியம்பி னனரோ.

(ஏக) வடவரையின் குடுமியின் நடுவண் மாசு அற்ற சுடர் (வீசும்) மணிமண்டபத்தை துன்னி நான்கு முகமுடைய (பிரம்ம தேவனாகிய) கடவுளை அடிதொழுது அமரர்க்கு கண்டகராகிய (இராக்ஷஸர்களுடைய) இடியை நிகர்க்கும் வினையம் அது இயம்பினனன.—[வடவரை-மேருமலை. வினையம்-செய்கை.]

10. பாகசா தனன்றனைப் பாசத் தார்த்தடல்
மேகநா தன்புகுந் திலங்கை மேயநாள்
போகமா மலருறை புனிதன் மீட்டமை
தோகைபா கற்குறச் சொல்லி னனரோ.

பாகசாதனன்—தன்னை அடல் பொருந்திய மேகநாதன் பாசத்தால் ஆர்த்து இலங்கை புகுந்து மேவியநாள், போகம் ஆம் மலரில் உறை புனிதன் (ஆகிய பிரமன்) மீட்டமையை தோகை போன்ற உமையை (ஒரு) பாகத்து உடைய ஈசற்கு உற சொல்லினன். [பாகசாதனன்-இந்திரன். தோகை-மயில்.]

11. இருபது கரந்தலை யீரைந் தென்னுமத்
திருவிலி வலிக்கொரு செயலின் றெங்களால்
கருமுகி லெனவளர் கருணை யங்கடல்
பொருதிடர் தணிக்கினுண் டெனும்பு ணர்ப்பினர்.

(சொல்லக்கேட்டு) இருபது கரமும் ஈர் ஐந்து தலைகளையும் (உடையவன்) என்னும் அ திரு இலி (ஆகிய இராவணனது) வலிக்கு எங்க

ளால் ஒரு (எதிர்) செயல் இன்று (என்று பிரமன் கூற, தேவர்கள்) கருமுகில் என கண் வளர்கின்ற கருணை அம் கடல் (ஆகிய திருமால் அரக்கரை) பொருது (தம்) இடரை தணிக்கின் (சுகம்) உண்டு எனும் புணர்ப்பினர் (ஆயினர்). [திரு இலி-மெய்ஞ்ஞானச் செல் வம் இல்லாதவன். புணர்ப்பினர்-ஆலோசனை உடையவர்.]

12. திரைகெழு பயோததித் துயிலுந் தெய்வவான்
மரகத மலையினை வழுத்தி நெஞ்சினால்
கரகமலங் குவித் திருந்த காலையில்
பரகதி யுணர்ந்தவர்க் குதவு பண்ணவன்.

(ஆகி), திரைகெழு பயம்உததியில் துயிலும் தெய்வம் (ஆகிய) வான் மரகத மலையினை நெஞ்சினால் வழுத்தி (தமது) கமலம்போன்ற கரங்களை குவித்து இருந்த காலையில் (தன்னை) உணர்ந்தவர்க்கு பரகதியை உதவும் பண்ணவன்—[கெழு-நிறைந்த. பயம்-பால். உததி-கடல். வான்-பெரிய. பண்ணவன்-கடவுள்.]

13. கருமுகிற் றாமரைக் காடு பூத்துநீ
டிருசுட ரிருபுறத் தேந்தி யேடவிழ்
திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின்மேல்
வருவபோற் கலுழன்மேல் வந்து தோன்றினான்.

(அந்தப்பண்ணவன்), (ஒரு) கருமுகிலானது (தன் அகத்தில் செம்) தாமரை காடு பூத்து, நீடு (சூரிய சந்திரர்களாகிய) இரு சுடரை யும் (தன்) இரு புறத்தும் ஏந்தி, ஏடுகள் அவிழ்ந்த (தாமரை மலரி லுள்ள) திருஒடும் பொலிய, ஓர் செம்பொன் குன்றின்மேல் வருவது போல் கலுழன்மேல் வந்து (அங்கு) தோன்றினான். [கலுழன்-கரு டன்.]

14. எழுந்தனர் கறைமிடற் றிறையுந் தாமரைச்
செழுந்தவி சுகந்தவத் தேவுஞ் சென்றெதிர்
விழுந்தன ரடிமிசை விண்ணு ளோரொடுந்
தொழுந்தொறுந் தொழுந்தொறுங் களித்து ளங்குவார்.

(தோன்றவும்), கறை (பொருந்திய) மிடற்று இறையாகிய (சிவ னும்) செழும் தாமரையை தவிசு (ஆக) உகந்த (பிரமனாகிய) அ தேவும் எழுந்தனர். எதிர் சென்று அடிமிசை விழுந்தனர்களான விண்ணு ளோரொடும், (அவர்கள்) தொழும்தொறும் தொழும் தொறும், களிப் பால் (சிவனும் பிரமனும்) துளங்குவார். [கறை-விஷம். மிடறு- கழுத்து. தவிசு-ஆசநம். துளங்குவார்-ஆடுவார்.]

15. ஆடினர் பாடின ரங்கு மிங்குமா
ஓடின ருவகையா நறவுண் டோர்கிலார்

வீடின ரரக்கரென் றுவக்கும் விம்மலால்
சூடினர் முறைமுறை துளவத் தாண்மலர்.

(திருமால் திருவுள்ளம் புரிந்தமையால்), அரக்கர் வீடினர் என்று உவக்கும் விம்மலால் (தேவர்கள்) உவகை ஆம் நறவு உண்டு (தாம் செய்யும் காரியம் இன்னது என்று) ஓர்கிலாராய், ஆடினர் பாடினர் அங்கும் இங்கும் ஆய் ஓடினர். (திருமாலது) துளவம் அணிந்த தாள்களாகிய மலரை முறை முறை (தமது சிரத்தில்) சூடினர். [வீடினர்-நசித்தனர். நறவு-கள்.]

16. பொன்வரை யிழிவதோர் புயலின் பொற்புற
என்னையா ளுடையவன் றோளினின் றெம்பிரான்
சென்னிவான் றடவுமண் டபத்துச் சேர்ந்தரி
துன்னுபொற் பீடமேற் பொலிந்து தோன்றினான்.

(தேவர்கள் செய்கை இவ்வாறு இருக்க), எம்பிரான் பொன்வரையினின்று இழிவது (ஆன) ஓர் புயல்போல் பொற்புஉற என்னை ஆள் உடையவனாகிய (கருடனின்) தோள் நின்று (இறங்கி) வானை தடவும் சென்னி (உடைய) மண்டபத்து சேர்ந்து (அங்கு) அரிதுன்னும் பொன் பீடம் மேல் பொலிந்து தோன்றினான். [இழிவது-இறங்குவது. புயல்-மேகம். பொற்பு-அழகு. சென்னி-சிகரம்.]

17. விதியொடு முனிவரும் விண்ணு ளோர்களும்
மதிவளர் சடைமுடி மழுவ லாளனும்
அதிசய முடனுவந் தயலி ருந்துழிக்
கொதிகொள்வே லரக்கர்தங் கொடுமை கூறினார்.

(திருமால் அரிஅணை அமர்ந்ததும்)—விதியொடு, மதி வளர்கின்ற சடைமுடி (உடைய) மழுவலாளனும் அதிசயமுடன் உவந்து (அவர்) அயல் இருந்துழி, முனிவரும் விண்ணில் உளோர்களும் கொதி கொண்ட வேல் (உடைய) அரக்கர்தம் கொடுமையை கூறினார். [விதி-பிரமன். மழுவலாளன்-சிவன். கொதி-கோபம்.]

18. ஐயிரு தலையினோ னனுச ராதியாம்
மெய்வலி யரக்கரால் விண்ணு மண்ணுமே
செய்தவ மிழந்தன திருவி னாயக
உய்திற மில்லையென் றுயிர்ப்பு வீங்கினார்.

(கூறி), "ஐ இருதலையினோன், (ஆகிய இராவணனும், அவன்) அனுசர் ஆதியாம் மெய்வலி (படைத்த) அரக்கரால் விண்ணும் மண்ணும் செய்யவேண்டிய தவங்களை இழந்தன, திருவின் நாயகனே, (இனி) (யாம்) உய்யும்திறம் இல்லை" என்று (அவர்கள்) உயிர்ப்பு வீங்கினார். [அனுசர்-தம்பியர். ஆதியாம்-முதலிய. உய்யும்-பிழைக்கும்.]

19. எங்கணீள் வரங்களா லரக்க ரென்றுளார்
பொங்குமூ வுலகையும் புடைத் தழித்தனர்
செங்கணு யகவினித் தீர்த்த லில்லையேல்
நுங்குவ ருலகையோர் நொடியி னென்றனர்.

(என்று தேவர் இயம்ப, சிவனும் பிரமனும்) "செம் கண் உடைய நாயகா, அரக்கர் என்று உளார், எங்கள் (பால் பெற்ற) நீள் வரங்களால் மூ உலகையும் புடைத்து அழித்தனர். இனி (இதை நீ) தீர்த்தல் இல்லையேல், ஓர் நொடியில் (அவ்வரக்கர்) உலகை நுங்குவர்" என்றனர். [புடைத்து-அடித்து. நுங்குவர்-விழுங்குவர்.]

20. என்றபி னமரர்க ளிறைஞ்சி யேத்தலும்
மன்றலந் துளவினன் வருந்தல் வஞ்சகர்
தந்தலை யறுத்திடர் தணிப்பன் மேலணிக்
கொன்று நீர் கேண்மென வுரைத்தன் மேயினன்.

என்றபின், அமரர்கள் இறைஞ்சி ஏத்தலும், மன்றல் (பொருந்திய) அம் துளவினன் (ஆகிய திருமால்), "வருந்தல், வஞ்சகர் தம் தலைகளை அறுத்து தாரணிக்கு (உற்ற) இடரை தணிப்பன்; மேல் நீர் (செய்ய வேண்டியது) ஒன்று கேளும்" என உரைத்தல் மேயினன். [இறைஞ்சி-வணங்கி. ஏத்தலும்-துதித்தலும். மன்றல்-மிருமணம்.]

21. வானுளோ ரனைவரும் வானரங்களாய்க்
கானினும் வரையினுங் கடிதடத்தினும்
சேனையோ டவதரித் திடுமின் சென்றென
ஆனன மலர்ந்தன னருளி னாழியான்.

(அதாவது), "வானத்தில் உளோர் (ஆகிய நீங்கள்) அனைவரும் கானிலும் வரையிலும் கடிதடத்திலும் (உங்கள்) சேனையோடு சென்று வானரங்களாய் அவதரித்து இடுமின்" என அருளின் ஆழியான் ஆனனம் மலர்ந்தனன். [கடிதடம்-அச்சத்தைத்தருகின்ற மலைப்பக்கம். ஆனனம்-முகம்.]

22. மசரத மனையவர் வரமும் வாழ்வுமோர்
நிசரத கணைகளா னீறு செய்யயாம்
கசரத துரகமாக் கடல்கொள் காவலன்
தசரதன் மதலையாய் வருதுந் தாரணி.

(பின்), "(பொய்த்தோற்றமாகிய) மசரதம் அனையவர் (ஆகிய அரக்கரின்) வரங்களையும் வாழ்வையும் (எமது) ஓர் நிசமாகிய ரதம் (அமைந்த) கணைகளால் நீறு செய்ய யாம், கசம் ரதம் துரகம் (ஆள் ஆகிய இவைகளை) கடல் (அளவு படையாக) கொண்ட காவலன் (ஆகிய) தசரதனுடைய மதலையாய் தரணியில் வருதும்" [மசரதம்-

பேய்த்தேர், கானல் நீர். ரதம்-ரசம், சாரம். நீறு-சாம்பல். கசம்-யானை. துரகம்-குதிரை. மதலை-புதல்வன்.]

23. வளையொடு திகிரியும் வடவை தீதர
விளைதரு கடுவுடை விரிகொள் பாயலும்
இளையர்க ளெனவடி பரவ வேகிநாம்
வளைமதி லயோத்தியில் வருது மென்றனன்.

"(இன்னும் எனது) வளையும் திகிரியும், வடவையும் தீதர விளைதரும் கடுவை உடைய விரிகொள் (ஆதிசேஷனாகிய) பாயலும், முறையே (சத்ருக்னன் பரதன் இலக்குமணன் ஆகி) இளையவர்கள் என (எனது) அடிகளை பரவ நாம் ஏகி வளைந்த மதில் (உடைய) அயோத்தியில் வருதும்' என்றனன். [வளை-சங்கு. திகிரி-சக்கரம். வடவை-வடவாக்கினி. தீதர-எரிய. கடு-விஷம். பாயல்-சயனம்.]

24. என்றவ னுரைத்தபோ தெழுந்து துள்ளினர்
நன்றிகொண் மங்கல நாதம் பாடினர்
மன்றலஞ் செழுந்துள வணியு மாயனார்
இன்றெமை யளித்தன ரென்னு மேம்பலால்.

என்று அவன் உரைத்தபோது, மன்றல் (பொருந்திய) அம் செழும் துளவு அணியும் மாயனார் இன்று எம்மை அளித்தனர், என்னும் ஏம்பல் ஆல், (அமரர்) எழுந்து துள்ளி நன்றிகொண்ட மங்கல நாதம் பாடினர். [மாயன்-திருமால். ஏம்பல்-மகிழ்ச்சி.]

25. போயதெம்பொருமலென்னுவிந்திரனுவகைபூத்தான்
தூயமா மலரு ளோனுஞ் சுடர்மதி சூடி னோனும்
சேயுயர் விசும்பு ளோருந் தீர்ந்ததெஞ் சிறுமை யென்றார்
மாயிரு ஞால முண்டோன் கலுழன்மேற் சரணம் வைத்தான்.

'எம் பொருமல் (இதனுடன்) போயது' என்னு இந்திரன் உவகை பூத்தான்; தூய மா மலர் உளோனும், சுடர் (வீசும்) மதியை (சடையில்) சூடினோனும், (மற்ற) சேய் உயர்ந்த விசும்பில் உளோரும் 'எம் சிறுமை தீர்ந்தது' என்றார். மா இரு ஞாலத்தை உண்டோன் (ஏறிச்செல்ல) கலுழன் மேல் (தனது) சரணத்தை வைத்தான்.

26. என்னையா ளுடைய வையன் கலுழன்மீ தெழுந்துபோய
பின்னர் வானவரை நோக்கிப் பிதாமகன் பேசுகின்றான்
முன்னரே யெண்கின் வேந்தன் யானென மொழிகின் றான்
றன்னவா றெவரு நீர்போ யவதரித் திடுமி னென்றான். [மற்

என்னை ஆளுடைய ஐயன் கலுழன் மீது எழுந்து போய பின்னர், பிதாமகன் (ஆகிய பிரமன்) வானவரைநோக்கி பேசுகின்றான், (என்னெனில்) "யான், முன்னரே (ஜாம்பவந்தனென்னும்) எண்கின் வேந்

தணுகி (இருக்கின்றேன்)" எனமொழிந்து, 'மற்று நீர் எவரும் போய் அன்னவாறு அவதரித்து இடுமின்' என்றான். [எண்கு-கரடி.]

27. தருவுடைக் கடவுள் வேந்தன் சாற்றுவா னெனது கூறு
மருவலர்க் கசனி யன்ன வாலியு மகனு மென்ன
இரவிமற் றெனது கூறங் கவற்கிளை யவனென் றோத
அரியுமற் றெனது கூறு நீலனென் றறைந்திட் டானால்.

(அவ்வாறே), (கற்பக) தருவையுடைய கடவுள் வேந்தன் (ஆகிய இந்திரன்) "மருவு அலர்க்கு அசனி அன்ன வாலியும் (அவன்) மகன் (அங்கதனும்) எனது கூறு' என்ன சாற்றுவான். இரவி " அங்கு (மேல் சொன்ன வாலியாகிய) அவற்கு இளையவன் (ஆகியசுக்ரீவன்) எனது கூறு" என்று ஓத, அரியும் 'மற்று நீலன் எனது கூறு' என்று அறைந்திட்டான். [மருவு அலர்-பொருந்ாதவர், பகைவர். அசனி-இடி. அரி-அக்கினி. கூறு-அமிசம்.]

28. வாயுமற் றெனது கூறு மாருதி யெனலு மற்றோர்
காயுமர்க் கடங்க ளாகிக் காசினி யதனின் மீது
போயிடத் துணிந்தோ மென்றார் புராரிமற் றியானும் வாத
சேயெனப்புகன்றான்மற்றைத்திசையுளோர்க்கவதியுண்டோ.

(இன்னவாறே), வாயுவும் 'மற்று மாருதி எனது கூறு' எனலும் மற்றோர் "காயும் மர்க்கடங்கள் ஆகி காசினி அதனின்மீது போய் இட துணிந்தோம்' என்றார். புராரி 'மற்று யானும் வாதத்தின் சேய்' என புகன்றான். மற்றை திசைகளில் உளோர்க்கு அவதி உண்டோ. [மாருதி-அநுமான். காயும்-கோபிக்கும். மர்க்கடம்-குரங்கு. காசினி-பூலோகம். புராரி-பரமசிவன். வாதம் சேய்-வாயுவின் புதல்வன், அநுமான். அவதி-அளவு.]

29. அருடரு கமலக் கண்ண னருண்முறை யலரு ளோனும்
இருடரு மிடற்றி னோனு மமரரு மினைய ராகி
மருடரு வனத்தின் மண்ணில் வானர ராகி வந்தார்
பொருடரு மிறைவர் தத்த முறைவிடஞ் சென்று புக்கார்.

அருள் தருகின்ற கமலம் போன்ற கண்ணன் அருள் செய்தமுறைபடி, அலரில் உளோனும், இருள் தரும் மிடற்றினோனும், (மற்ற) அமரரும் இனையர் ஆகி, (புகுவோர்க்கு) மருளை தருகின்ற வனத்திலும் மண்ணிலும் வானரர் ஆகிவந்தார் (தம்மை யடைந்தவர்கள் விரும்பும்) பொருள்களை தரும் இறைவர்கள் (ஆகிய பிரம்ம ருத்ரேந்தாதியர்) தம்தம் உறைகின்ற இடம் சென்று புக்கார்.

30. ஈதுமுன் னிகழ்ந்த வண்ண மெனமுனி யிதயத் தெண்ணி
மாதிரம் பொருத திண்டோண் மன்ன நீ வருந்தே லேழ்
பூதல முழுதுங் காக்கும் புதல்வரை யளிக்கும் வேள்வி
தீதற முயலி னைய சிந்தைநோய் தீரு மென்றான்.

(இவ்வாறு, இராமாவதாரத்திற்குப் பீடிகையாக முன் தேவலோகத்தில் நடந்த) 'இது முன் நிகழ்ந்த வண்ணம்' என (வசிஷ்ட) முனி (தன்) இதயத்து எண்ணி, (பின் தயரதனைப்பார்த்து) "மாதிரங்களிலெல்லாம் (தேர் செலுத்தி) பொருத திண் தோள்களுடைய, மன்னு, நீ வருந்தேல், ஏழ் ஏழ் பூதலம் முழுதும் காக்கும் புதல்வரை அளிக்கும் (புத்ரகாமேஷ்டி) வேள்வியை (செய்ய) தீது அற (நீ) முயலின் ஐய, (உனது) சிந்தையிலுள்ள நோயானது தீரும்" என்றான். [வண்ணம்-செய்தி. மாதிரம்-திசை. வேள்வி-யாகம்.]

31. என்னமா முனிவன் கூற வெழுந்தபே ருவகை பொங்க
மன்னவர் மன்ன னந்த மாமுனி சரணஞ் சூடி
உன்னையே புகல்புக் கேனுக் குறுகண்வந் தடைவ துண்டோ
அன்னதற் கடியேன் செய்யும் பணியினி தளித்தி யென்றான்.

என்னமா முனிவன் கூற (கேட்டு) மன்னர் மன்னவன் எழுந்த பேர் உவகை பொங்க, அந்த மாமுனியின் சரணங்களை (தன் சிரசில்) சூடி, "உன்னையே புகல் புக்கேனுக்கு உறுகண் வந்து அடைவது உண்டோ, (இல்லையாகையால்), (இனி) அன்னதற்கு அடியேன் செய்யும் பணியை இனிது (சொல்லி) அளித்தி" என்றான். [புகல்-தஞ்சம். உறுகண்-துன்பம்.]

வசிஷ்டர் கலைக்கோட்டு முனியின் வரலாற்றைத்
தயரதனுக்குக் கூறுகின்றார்.

32. மாசறு சுரர்க ளோடு மற்றுளோர் தமையு மீன்ற
காசிப னருளு மைந்தன் விபாண்டகன் கங்கை சூடும்
ஈசனும் புகழ்தற் கொத்தோ னிருங்கலை பிறவு மெண்ணில்
தேசுடை தந்தை யொப்பான் றிருவருள் புனைந்த மைந்தன்.

மாசு அற்ற சுரர்களோடு மற்று உள்ளோர்தமையும் ஈன்ற காசிபன் (என்னும் இரிஷி பெற்று) அருளும் மைந்தன் விபாண்டகன் (என்போன்). கங்கையை (சடையில்) சூடும் ஈசனும் புகழ்தற்கு ஒத்தோன். (அவ்விபாண்டகன்) எண்ணில், இருகலை ஞானத்திலும் பிற விஷயங்களிலும் தேசு உடைய (காசிபனாகிய தன்) தந்தையை ஒப்பான். (அவ் விபாண்டகனுடைய) திரு அருளை புனைந்த மைந்தன்—(ஒருவன் உளன்.) [சுரர்- தேவர். தேசு-பிரகாசம்.]

33. வருகலை பிறவு நீதி மனு நெறி வரம்பில் வாய்மை
தருகலை மறையு மெண்ணிற் சதுமுகற் குவமை சான்றோன்
திருகலை யுடைய விந்தச் செகத்துளோர் தன்மை தேரா
ஒருகலை முகச்சிருங்க வுயர்தவன் வருதல் வேண்டும்.

(அவ் விபாண்டகன் மைந்தனே) எண்ணில், வரும் கலைகளிலும், பிறவும், மனு நெறி நீதியிலும், வரம்பு இல் வாய்மையை தரும் கலைகளையுடைய மறைகளிலும் சதுமுகர்க்கு உவமை சான்றோன்.

(அவன்) திருகலையுடைய இந்த செகத்துளோர் தன்மையை தேராத, கலையினது ஒரு சிருங்கம் பொருந்திய முகம் (உடையவன்.) உயர்தவன் (ஆகிய அவன்) வருதல் வேண்டும். [திருகல்-குழற்சி. மயக்கம். சதுமுகன்-பிரமன். கலை-மான். சிருங்கம்-மிருகத்தின் கொம்பு.]

34. பாந்தளின் மகுட கோடி பரித்தபா ரதனில் வைகும்
மாந்தரை விலங்கென் றுன்னு மனத்தன் மாதவத்த னெண்
பூந்தவி சுகந்து ளோனும் புராரியும் புகழ்தற் கொத்த [ணில்
சாந்தனுல் வேள்வி முற்றிற் றனயர்க ளுளரா மென்றான்.

(ஆதிசேஷன் என்னும்) பாந்தளின் மகுட கோடிகள் பரித்த பார்அதனில் வைகும் மாந்தர்களை விலங்கு என்று உன்னும் மனத்தனும் மாதவத்தனும் (ஆகி) எண்ணில், பூவை தவிசு ஆக உகந்து உளோனும் புராரியும் புகழ்தற்கு ஒத்த (அந்தக் கலைக்கொட்டு முனி யாகிய) சாந்தனுல் வேள்வியை (நீ) முற்றின் (உனக்கு) தனயர்கள் உளர் ஆகும் என்றான். [பாந்தள்-பாம்பு. பரித்த-தாங்கிய.]

35. ஆங்குரை யினைய கூறு மருந்தவர்க் கரசன் செய்ய
பூங்கழ றொழுது வாழ்த்திப் பூதல மன்னர் மன்னன்
தீங்கறு குணத்தான் மிக்க செழுந்தவன் யாண்டை யுள்ளான்
ஈங்கியான் புரியுந் தன்மை யியம்புதி யிறைவ வென்றான்.

ஆங்கு, இனைய உரை கூறும் அரும் தவர்க்கு அரசன் (ஆகிய வசிஷ்டனது) செய்ய பூம் கழலை தொழுது வாழ்த்தி பூதலத்து மன்னர்களுக்கு மன்னன் (ஆகிய தசரதன்) "தீங்கு அற்ற குணத்தால் மிக்க (அந்த) செழும் தவன் யாண்டை உள்ளான், ஈங்கு யான் புரியும் தன்மையை, இறைவ, இயம்புதி" என்றான்.

36. புத்தான கொடுவினையோ டருந்துயரம்
போயொளிப்பப் புவனந் தாங்குஞ்
சத்தான குணமுடையோன் றயையினோடு
தண்ணளியின் சாலை போல்வான்
எத்தாலும் வெலற்கரியான் மனுகுலத்தே
வந்துதித்தோ னிலங்கு மௌலி
உத்தான பாதனரு ளுரோமபத
னென்றுளனிவ் வுலகை யாள்வான்.

புத்திற்கு (காரணம்) ஆன கொடும் வினையோடு அரியதுயரமும் போய் ஒளிப்ப, புவனத்தை தாங்கும் சத்து ஆன குணம் உடையோனும், தயைக்கும் தண் அளிக்கும் சாலை போல்வானும், எத்தாலும் வெல்லற்கு அரியானும், மனுவினது குலத்திலே வந்து உதித்தோனும், இலங்குகின்ற மௌலியை தரித்தவனும் (ஆய்) உலகை ஆள்

வான் (ஆகிய) உத்தானபாதன் (பெற்று) அருளிய உரோமபதன் என்று (ஒருவன்) உளன். [புவனம்-பூலோகம், தண்ணளி-அன்பு. சாலை-உறைவிடம். மௌலி-கிரீடம். புத்-நரகம்.]

37. அன்னவன்றான் புரந்தளிக்குந் திருநாட்டி
னெடுங்கால மளவ தாக
மின்னியெழு முகிலின்றி வெந்துயர்
பெருகுதலும் வேந்த னன்னூல்
மன்னுமுனி வரையழைத்து மாதானங்
கொடுத்தும்வான் வழங்கா தாகப்
பின்னுமறை யவர்க்கேட்பக் கலைக்கோட்டு
முனிவரின்வான் பிலிற்று மென்றார்.

(உரோமபதனாகிய) அன்னவன்தான் புரந்து அளிக்கும் திருநாட்டில் நெடும் காலம் அளவதாக மின்னி எழும் முகில் இன்றி (மழை பெய்யாது) வெம் துயர் பெருகுதலும், வேந்தன் (வேதமாகிய) நல்ல நூல் (உணர்ச்சி) மன்னும் முனிவரை அழைத்து மா தானம் கொடுத்தும் வான் ஆனது வழங்காது ஆக, பின்னும் (அரசன் என்ன செய்வதென்று) மறையவரை கேட்ப (அவர்) 'கலைக்கோட்டு முனிவரின் வான் பிலிற்றும்' என்றார். [பிலிற்றும்-பெய்யும்.]

38. ஓதநெடுங் கடலாடை யுலகினில்வாழ்
மனிதர்விலங் கெனவே யுன்னுங்
கோதில்குணத் தருந்தவனைக் கொணரும்வகை
யாவதெனக் குணிக்கும் வேலை
சோதிநுதற் கருநெடுங்கட் டுவரிதழ்வாய்த்
தரளநகைத் துணைமென் கொங்கை
மாதரெழுந் தியாமேகி யருந்தவனைக்
கொணர்துமென வணக்கம் செய்தார்.

(மறையவர் அவ்வாறு சொல்ல), ஓதம் உடைய நெடும் கடலை ஆடை(யாகப்பெற்ற) உலகினில் வாழும் மனிதரை விலங்கு எனவே உன்னும் கோதுஇல் குணத்து (கலைக்கோட்டுமுனியாகிய) அரும் தவனை கொணரும் வகை யாவது என (சபையிலுள்ளோர்) குணிக்கும் வேலையில்—சோதி பொருந்திய நுதலும், கரும் நெடும் கண்களையும், துவர்போன்ற இதழோடு கூடிய வாயையும், தரளம் போன்ற நகையினையும், துணையான மெல்கொங்கைகளையும் உடைய (கணிகை) மாதர் எழுந்து 'யாம் ஏகி அரும் தவனை கொணர்தும்' என (கூறி) வணக்கம் செய்தார். [ஓதம்-அலை. குணிக்கும்-அலோசிக்கும். வேலை-சமயம். துவர்-பவழம். தரளம்-முத்து இதழ்-அதரம். நகை-பல். துணை-இரட்டை.]

39. ஆங்கவரம் மொழியுரைப்ப வரசன் மகிழ்ந்
தவர்க்கணிதூ சாதியாய
பாங்குளமற் றவையருளிப் பனிப்பிறையைப்
பழித்தநுதற் பணைத்த வேய்த்தோள்
ஏங்குமிடைத் தடித்தமுலை யிருண்டகுழல்
மருண்டவிழி யிலவச் செய்வாய்ப்
பூங்கொடியீ ரேகுமெனத் தொழுதிறைஞ்சி
யிரதமிசைப் போயி னாரே.

ஆங்கு அவர் அ மொழி உரைப்ப, (உரோமபத) அரசன் மகிழ்ந்து, அவர்க்கு, அணிகள் தூசு ஆதியாய பாங்கு உள்ள மற்றவைகளையும் (கொடுத்து) அருளி—"பனி பிறையை பழித்த நுதல், பணைத்த வேய் (ஒத்த) தோள், (தேய்ந்து) ஏங்கும் இடை, தடித்தமுலை. (இருள்போல்) இருண்ட குழல், (மான் போல்) மருண்ட விழி. இலவம் (பூப்போல்) செவந்த வாய். (பெற்ற) பூ கொடி போன்றீர்! ஏகும்" என (அவர்) தொழுது இறைஞ்சி இரதம் மிசை போயினார். [தூசு-வஸ்திரம். பாங்கு-தகுதி. பணைத்த-பெருத்த. வேய்-மூங்கில். குழல்-கூந்தல்.]

40. ஓசனை பலகடந் தினியொ ரோசனை
ஏசறு தவனுறை யிடம தென்றுழி
பாசிழை மடந்தையர் பன்ன சாலைசெய்
தாசறு மருந்தவத் தவரின் வைகினார்.

(அவ்வாறு போன) பசும் பொன்னால் செய்த இழைகளணிந்த மடந்தையர் பல ஓசனை (வழியை) கடந்து, ஏசு அற்ற தவன் (ஆகிய கலைக்கோட்டு முனி) உறையும் இடம் இனி ஒரு ஓசனை (தூரம்) அது என்ற உழி, (அவர்) பன்னம் சாலை செய்து (அதில்) ஆசு அற்ற அரும் தவத்தவர்போல் வைகினார். [உழி-இடத்தில் பன்னம் சாலை-தழையால் செய்த சிறு வீடு. ஏசு, ஆசு-குற்றம்.]

41. அருந்தவன் றந்தையை யற்ற நோக்கியே
கருந்தடங் கண்ணியர் கலைவ லாளனிற்
பொருந்தினர் பொருந்துபு விலங்கெ னப்புரிந்
திருந்தவ ரிவரென வினைய செய்தனன்.

(இருக்க ஒரு நாள்), அரும் தவனது தந்தை (யாகிய விபாண்டகன்) அற்ற (சமயம்) நோக்கி, (அந்த) கரும் தடம் கண்ணியர் கலைவலாளனது இல்லில் (போய்) பொருந்தினர். பொருந்துபு, (உலகத்தோரை) விலங்கு எனப்புரிந்து இவர்களும் (தன்னைப்போல்) இருந்தவர்கள் என (அம்முனிவன் கருதி) இனைய செய்தனன்.

42. அருக்கிய முதலிய வாசனங் கொடுத்
திருக்கென விருந்தபின் னினிய கூறியம்
முருக்கிதழ் மடந்தையர் முனிவனைத் தொழாப்
பொருக்கென வெழுந்துபோய் புரையுள் புக்கனர்.

அருக்கியம் முதலியவும் ஆசனமும் கொடுத்து (அவர்களை) இருக்க என, (அவர்கள்) இருந்தபின், இனிய (குசலப்ரசினம் முதலானவைகள்) கூறி அ முருக்கம் பூ போன்ற இதழ் உடைய மடந்தையர் முனிவனை தொழுது பொருக்கென எழுந்து போய் (தம்) புரையுள் புக்கனர். [பொருக்கென-விரைவாக. புரை-பன்னசாலை.]

43. திருந்திழை யவர்சில தினங்க டீர்ந்துழி
மருந்தினு மினியன வருக்கை வாழைமாத்
தருந்தருங் கனியொடு தாழை யின்பலம்
அருந்தவ வருந்தென வருந்தி னானரோ.

(இவ்வாறு) சில தினங்கள் தீர்ந்துழி திருந்திய இழைதரித்த அவர்கள், வருக்கை வாழை மா தரும் தரும் கனியொடு தாழையின் பலமும் (கொண்டுபோய்) "அரும்தவா, (இவை) மருந்தினும் இனியன, அருந்து' என (முனிவன் அவைகளை) அருந்தினான். [வருக்கை-பலா. தாழைபலம்-தேங்காய். மருந்து-அமிருதம்.]

44. இன்னன பலபக லிறந்த பின்றிரு
நன்னுதன் மடந்தையர் நவையின் மாதவன்
தன்னையெம் மிடத்தினுஞ் சார்தல் வேண்டுமென்
றன்னவற் றொழுதலு மவரொ டேகினான்.

இன்னனம் பல பகல் இறந்தபின் திருஉடைய நல்ல நுதல் பொருந்திய (அந்த) மடந்தையர், நவை இல் மா தவன் தன்னை (நோக்கி) 'எம் இடத்திலும் (நீர்) சார்தல் வேண்டும் என்று' (கூறி) அன்னவனை தொழுதலும், (அம்முனிவன்) அவரொடு ஏகினான்.

45. விம்முறு முவகையர் வியந்த நெஞ்சினர்
அம்மவி திது வென வகலு நீணெறிச்
செம்மைசேர் முனிவரன் றொடரச் சென்றனர்
தம்மன மெனமருட் டையலார்களே.

(செய்யும் வஞ்சகமறிந்தால் என்ன சாபம் இடுவனோ என்று மருளும்) தம் மனம் என (கண்ணும்) மருளும் தையலார்கள், விம்மும் உவகையராய் வியந்த நெஞ்சினராய் "அம்ம, இது தான் இது தான் (எம் இடம்)" என (காட்டிக்கொண்டே) அகலும் நீள் நெறியில் செம்மை சேர்ந்த முனிவரன் தொடர சென்றனர் [அம்ம-கேள்.]

46. வளநகர் முனிவரன் வருமுன் வானவன்
களனமர் கடுவெனக் கருகி வான்முகில்
சளசள வெனமழைத் தாரை கான்றன
குளனொடு நதிகடங் குறைவு தீரவே.

(அவ்வாறு ஏகிய) முனிவரன் (உரோமபதனுடைய) வளம்பொருந்திய நகரத்தில் வருமுன், வான் உள்ள (வெண்) முகில் வானவன் (ஆகிய சிவபிரானது) களனில் அமர்ந்த கடுஎன கருகி, குளனும் நதிகளும் தம் குறைவு தீர, சள சள என மழை தாரை கான்றன. [களன்-கண்டம். கடு-விஷம். கான்றன-பொழிந்தன.]

47. பெரும்புன னதிகளுங் குளனும் பெட்புறக்
கரும்பொடு செந்நெலுங் கவின்கொண் டோங்கிட
இரும்புயல் ககனமீ திடைவி டாதெழூந்
தரும்புனல் சொரிந்தபோ தரசு ணர்ந்தனன்.

(அப்படி) பெரும்புனல் (கொண்ட) நதிகளும் குளனும் (நீர் பெற்று மனிதரது) பெட்பை உறவும், கரும்பும் செம் நெல்லும் கவின் கொண்டு ஓங்கிடவும், ககனம் மீது இரும் புயல்கள் எழுந்து இடைவிடாது அரும் புனலை சொரிந்தபொது (கலைக்கோட்டு முனிவன் வருவதை) அரசு உணர்ந்தனன். [பெட்பு உற-விருப்பத்தைப்பெற. கவின்-அழகு. இரும்-கரிய. ககனம்-ஆகாயம்.]

48. காமமும் வெகுளியும் களிப்புங் கைத்தெழு
கோமுனி யிவணடைந் தனன்கொல் கொவ்வை வாய்த்
தாமரை மலர்முகத் தரள வாணகைத்
தூமமென் குழலியர் புணர்த்த சூழ்ச்சியால்.

(உணர), கொவ்வை (கனி) போன்ற வாயும் தாமரை மலர் போன்ற முகமும் தரளம் போன்ற வாள் நகையும் (உடைய) தூமம் ஊட்டிய மெல் குழலியர் புணர்த்த சூழ்ச்சியால், காமம் வெகுளி களிப்பு (எனும் முக்குற்றங்களையும்) கைத்து எழும் கோமுனி (ஆகிய கலைக்கோட்டு முனி) இவண் அடைந்தனன்கொல்.'' [வாள்-பிரகாசம் பொருந்திய. தூமம்-அகில் புகை. களிப்பு-மயக்கம். கைத்து-வெறுத்து. கோமுனி-முனிசிரேஷ்டன்.]

49. என்றெழுந் தருமறை முனிவர் யாரொடுஞ்
சென்றிரண் டியோசனை சேனை சூழ்தர
மன்றலங் குழலியர் நடுவண் மாதவக்
குன்றினை யெதிர்ந்தனன் குவ்வுத் தோளினன்.

என்று, குவவு தோளினன் (ஆகிய உரோமபதன்) எழுந்து அருமறையை யுணர்ந்த முனிவர் யாரொடும், சேனை சூழ்தர இரண்டு

ஓசனை சென்று, மன்றல் பொருந்திய அம் குழலியர் நடுவண் (வந்த அந்த) மாதவம் குன்றினை எதிர்ந்தனன். [குவவு-திரட்சி.]

50. வீழ்ந்தன னடிமிசை விழிக ணீர்தர
வாழ்ந்தன மினியென மகிழுஞ் சிந்தையான்
தாழ்ந்தெழு மாதரார் தம்மை நோக்கிநீர்
போழ்ந்தனி ரெனதிடர் புணர்ப்பி னாலென்றான்.

(எதிர்ந்து), இனி வாழ்ந்தனம் என மகிழும் சிந்தையான் (ஆகி) (உரோமபதன்) விழிகள் நீர்தர (முனிவரரின்) அடிமிசை வீழ்ந்தனன். (பிறகு, தன்னை) தாழ்ந்து எழும் (கணிகை) மாதரார் தம்மை நோக்கி "நீர் (உமது) புணர்ப்புனால் எனது இடரை போழ்ந்தனிர்" என்றான். [புணர்ப்பு-சூழ்ச்சி. போழ்ந்தனிர்-நீக்கினீர்கள்.]

51. அரசனு முனிவரு மடைந்த வாயிடை
வரமுனி வஞ்சமென் றுணர்ந்த மாலைவாய்
வெருவினர் விண்ணவர் வேந்தன் வேண்டலால்
கரையெறி யாதலை கடலும் போன்றனன்.

அரசனும் முனிவரும் (வந்து) அடைந்த ஆயிடை, வரம் முனி (அவ்விடம் தன்னை அழைத்து வந்தது) வஞ்சம் என்று உணர்ந்த மாலைவாய் (என்ன நடக்குமோ என்று) விண்ணவர் வெருவினர். (எனினும், உரோமபத) வேந்தன் வெண்டலால் (அம்முனி, கோபம் கொண்டிருந்தும் ஒன்றும் செய்யாது) கரையை எறியாது அலையும் கடலை போன்றனன். [ஆயிடை, மாலைவாய்-சமயத்தில். வெருவினர்-பயந்தனர்.]

52. வள்ளுறு வயிரவாண் மன்னன் பன்முறை
எள்ளரு முனிவனை யிறைஞ்சி யாரினுந்
தள்ளருந் துயரமும் சமைவுஞ் சாற்றலும்
உள்ளுறு வெகுளிபோ யொளித்த தாமரோ.

(அப்பொழுது) வள் உறும் வயிரம் போன்ற வாளை உடைய (உரோமபத) மன்னன், எள் அரு (கலைக்கோட்டு) முனிவனை பல் முறை இறைஞ்சி யாரினும் தள்ளுவதற்கு அரும் (மழைபெய்யாத) துயரமும் (பின்) சமைவும் சாற்றலும் (முனிவரது) உள்ளில் உற்ற வெகுளி போய் ஒளித்தது. [வள்-கூர்மை. வயிரம்-வஜ்ராயுதம். எள் அரு பழிப்பற்ற. சமையு-அமைதி.]

53. அருள்சுரந் தரசனுக் காசி யுங்கொடுத்
துருடருந் தேரின்மீ தொல்லை யேறிநற்
பொருடரு முனிவருந் தொடரப் போயினன்
மருளொழி யுணர்வுடை வரத மாதவன்.

(ஒளிக்க), மருளை ஒழித்தற்குக் காரணமான (மெய்) உணர்வை உடைய (அந்த) வரத மாதவன், அருள் சுரந்து அரசனுக்கு ஆசியும் கொடுத்து உருள் தரும் தேரின்மீது ஒல்லை ஏறி, நல்ல பொருள்களை (உபதேசித்து) தரும் (மற்ற) முனிவரும் தொடர (நகர் நோக்கி) போயினன். [வரத-வேண்டியவற்றை அருளும். ஒல்லை-விரைவாக.]

54. அடைந்தனன் வளநக ரலங்க ரித்தெதிர்
மிடைந்திட முனியொடு வேந்தன் கோயில்புக்
கொடுங்கலில் பொற்குழாத் துறையு ளெய்தியோர்
மடங்கலா சனத்திடை முனியை வைத்தனன்.

(அந்நகரவாசிகள்) வளம் நகரை அலங்கரித்து எதிர் மிடைந்து இட, வேந்தன் முனியொடு (தன்) கோயில்புக்கு அடைந்தனன். (அடைந்து) ஒடுங்கல் இல்லாத பொன்குழாத்து உறையுள் எய்தி முனியை ஓர் மடங்கல் ஆசனத்து இடை வைத்தனன். [கோயில்-அரண்மனை. 3ஆம் அடி-விசாலமான பொன்னால் செய்யப்பட்ட திரண்ட மாளிகைக்குள் சென்று. மடங்கல்-சிங்கம்.]

55. அருக்கிய முதலிய கடன்க ளாற்றிவே
றுரைக்குவ திலதென வுவந்து தானருள்
முருக்கித ழிளமுலை முகந லாடனை
இருக்கொடு விதிமுறை யினிதி னீந்தனன்.

(வைத்து), (முனிவனுக்கு) அருக்கியம் முதலிய கடன்களை ஆற்றி, (உபசார மொழிகள் எல்லாம் சொல்லி) வேறு உரைக்குவது இலது என (ரோமபதன் மனத்துள் கொண்டு) உவந்து, தான் (பெற்று) அருளிய முருக்கம் பூவை ஒத்த அதரத்தையும் இளமுலைகளையும் (உடைய) முகம் நல்லாள் (ஆகிய தன் பெண்ணை) இருக்கொடு (விவாக) விதிமுறை (கலைக்கோட்டு முனிக்கு மணம் செய்து) இனிதின் ஈன்றனன். [இருக்கு-வேதமந்திரம்.]

மூன்றுமடிக்கு 'முருக்கிதழ்ச் சாந்தையா முகநலாடனை' என்று ஒரு பாட பேதமிருக்கின்றது. சாந்தை-ரோமபதன் பெண்.

56. வறுமைநோய் தணிதர வான்வ ழங்கவே
உறுதுயர் தணிந்ததவ் வுலகம் வேந்தருள்
செறிகுழல் போற்றிடத் திருந்து மாதவத்
தறிஞனாண் டிருக்குந னரச வென்றனன்.

(இவ்வாறு) 'வறுமைநோய் தணிதர வான் வழங்க, (ரோமபதனது) அ உலகம் (மழையின்றி உற்ற துயர் தணிந்தது. (அந்த) வேந்தன் (பெற்று) அருளிய செறிந்த குழலோடும் கூடிய சாந்தை என்பாள் போற்றிட, திருந்திய மாதவத்து அறிஞன்ஆண்டு இருக்குநன், (தசரத) அரசனே' என்றனன் (வசிஷ்டன்).

57. என்றலுமே முனிவரன்ற னடியிறைஞ்சி
யீண்டேகிக் கொணர்வ னென்னத்
துன்றுகழன் முடிவேந்த ரடிபோற்றச்
சுமந்திரனே முதலா வுள்ள
வன்றிறல்சே ரமைச்சர்தொழ மாமணித்தே
ரேறுதலும் வானோர் வாழ்த்தி
இன்றெமது வினைமுடிந்த தெனச் சொரிந்தார்
மலர்மாரி யிடைவி டாமல்.

(வசிஷ்டன் கலைக்கோட்டுமுனியின் விருத்தாந்தத்தைச் சொல்லி முடித்து, 'அவன் ரோமபதன் நகரில் இருக்கின்றான்') என்றலுமே, (தயரதன் வசிஷ்ட) முனிவரன்தன் அடியை இறைஞ்சி 'ஈண்டு ஏகி, கொணர்வன்' என்று, கழல் துன்றும் முடிவேந்தர் (தனது) அடியை போற்றவும், சுமந்திரனே முதலாக உள்ள வல்திறல் சேர்ந்த அமைச்சர் (தன்னை) தொழவும், மாமணி தேர் ஏறுதலும், வானோர் (அவனை) வாழ்த்தி 'இன்று எமது (கொடிய) வினை முடிந்தது' என மலர்மாரி இடைவிடாமல் சொரிந்தார்.

58. காகளமும் பல்லியமுங் கனைகடலின்
மேன் முழங்கக் கானம்பாட
மாகதர்க ளருமறைநூல் வேதியர்கள்
வாழ்த்தெடுப்ப மதுரச் செவ்வாய்த்
தோகையர்பல் லாண்டிசைப்பக் கடற்றானை
புடைசூழச் சுடரோ னென்ன
ஏகியரு நெறிநீங்கி யுரோமபதன்
றிருநாட்டை யெதிர்ந் தானன்றே.

(தேர் ஏறிய தயரதன்) காகளமும் பல இயமும் கனைக்கின்ற கடலின்மேல் முழங்கவும், மாகதர்கள் கானம் பாடவும், அருமறை நூல் வேதியர்கள் வாழ்த்து எடுப்பவும், மதுரமான செவந்த வாய் உடைய தோகையர் பல்லாண்டு இசைப்பவும், கடல் ஒத்த (தன்) தானை புடைசூழவும், சுடரோன்என்ன ஏகி, (கடத்தற்கு) அருமையான நெறியை நீங்கி (அங்கநாடு ஆகிய) ரோமபதனுடைய திருநாட்டை எதிர்ந்தான். [காகளம்-எக்காளம். இயம்-வாத்தியம். மாகதர்-வைசியனுக்கும் க்ஷத்திரியமாதிற்கும் பிறந்தஒரு சாதியார். பாடலும் புகழ்தலும் அவர் தொழில். தானை-சேனை. சுடரோன்-சூரியன்.]

59. கொழுந்தோடிப் படர்கீர்த்திக் கோவேந்த
னடைந்தமைசென் றொற்றர் கூறக்
கழுந்தோடும் வரிசிலைக்கைக் கடற்றானை
புடைசூழக் கழற்கால் வேந்தன்

செழுந்தோடும் பல்கலனும் வில்வீச
மாகதர்க டிரண்டு பாட
எழுந்தோடு முவகையுடன் யோசனைசென்
றானரசை யெதிர்கோ ளெண்ணி.

கொழுந்துகள் ஓடி படர்கின்ற கீர்த்தி வாய்ந்த கோவேந்தன் அடைந்தமை சென்று ஒற்றர் கூற, (அது கேட்டு) கழல் அணிந்த கால்களோடும்கூடிய (ரோமபத)வேந்தன் (தன்) அரசை எதிர்கோள் எண்ணி கழுந்து ஓடும் வரி அமைந்த சிலையை தாங்கிய கையுடைய கடல்ஒத்த (தன்) தானை புடை சூழவும். (அணிந்துள) செழும் தோடும் பலகலனும் வில் வீசவும், மாகதர்கள் திரண்டு பாடவும். எழுந்து (தனக்கு முன்னால் தயரதனைக் காண வேண்டுமென்று) ஓடுவதாகிய உவகையுடன், யோசனை (தூரம்) சென்றான். [ஒற்றர்-தூதர். கழுந்து-கைபிடித்து உண்டாகிய தேய்வு. வரி-கட்டு. சிலை-வில். கலன்-ஆபரணம். வில்-ஒளி. உவகை களிப்பு.]

60. எதிர்கொள்வான் வருகின்ற வயவேந்தன்
றனைக்கண்ணுற் றெழிலி நாண
அதிர்கின்ற பொலந்தேர்நின் றரசர்பிரா
னிழிந்துழிச்சென் றடியின் வீழ
முதிர்கின்ற பெருங்காத றழைத்தோங்க
வெடுத்திறுக முயங்க லோடுங்
கதிர்கொண்ட சுடர்வேலான் றனைநோக்கி
யிவையுரைத்தான் களிப்பின் மிக்கான்.

அரசர்பிரான், (தன்னை) எதிர்கொள்ள வருகின்ற வயம் வாய்ந்த (ரோமபத) வேந்தன்தனை கண்ணுற்று, எழிலி நாண அதிர்கின்ற பொலம் (கொண்டு செய்த) தேர் நின்று இழிந்துழி, (ரோமபதன்) சென்று (அவன்) அடியில் விழ, (தயரதன் அவனை) முதிர்கின்ற பெரும் காதல் தழைத்து ஓங்க எடுத்து இறுக முயங்கலோடும், (ரோமபதன்) களிப்பில் மிக்கானாய், கதிர்கொண்ட சுடர் போன்ற வேலான்தனை நோக்கி, இவை இவை உரைத்தான். [வயம்-வெற்றி எழிலி-மேகம். பொலம்-பொன். முயங்கல்-அணைத்தல். கதிர்-ஒளி. சுடர்-சூரியன்.]

61. யான்செய்த மாதவமோ விவ்வுலகஞ்
செய்தவமோ யாதோ விங்கண்
வான்செய்த சுடர்வேலோ யடைந்ததென
மனமகிழா மணித்தே ரேற்றித்

தேன்செய்த தார்மவுலித் தேர்வேந்தைச்
செழுநகரிற் கொணர்ந்தான் றெவ்வர்
ஊன்செய்த சுடர்வடிவே லுரோமபத
னென்றுரைக்கு முரவுத் தோளான்.

தெவ்வரை ஊன் செய்த சுடர்பொருந்திய வடித்த வேல்தரித்த ரோமபதன் என்று உரைக்கும் உரவு பொருந்திய தோளான் (தயரதனைப் பார்த்து,) "(சம்பராசுரனை வென்று) வான் (நாட்டை மீட்டும் நிலை பெற) செய்த சுடர்போன்ற வேலோய், இங்கண் (நீவந்து) அடைந்தது, யான் செய்த மாதவமோ, (அல்லது) இ உலகம் செய்த தவமோ, யாதோ" என (உபசாரம் கூறி) மனம் மகிழ்ந்து, தேன் செய்த தாரை அணிந்த மவுலி தரித்த (அந்தப் பத்துத் திக்கிலும் செல்லும்) தேரை உடைய வேந்தை, மணி தேரில் ஏற்றி (தனது) செழும் நகரில் கொணர்ந்தான். [தெவ்வர்-பகைவர். ஊன்-இரணம். உரவு-வலிமை. தார்-மாலை.]

62. ஆடகப்பொற் சுடரிமைக்கு மணிமாடத்
திடையொருமண் டபத்தை யண்மிப்
பாடகச்செம் பதுமமலர்ப் பாவையர்பல்
லாண்டிசைப்பப் பைம்பொற் பீடத்
தேடுதுற்ற வடிவேலோன் றனையிருத்திக்
கடன்முறைகள் யாவும் நேர்ந்து
தோடுதுற்ற மலர்த்தாரான் விருந்தளிப்ப
வினிதுகந்தான் சுரர்நா டீந்தான்.

(நகரில் கொணர்ந்து) தோடுகள் துற்ற மலர் தாரான் (ஆகிய ரோமபதன்), ஆடகம் என்கிற பொன்னின் சுடரை இமைக்கும் மணி மாடத்து இடை ஒரு மண்டபத்தை அண்மி, பாடகம் அணிந்த செம் பதும மலர் ஒத்த பாதங்களுடைய பாவைபோன்ற மடவார் பல்லாண்டு இசைப்ப, பொன்பீடத்தில், ஏடு துற்ற வடிக்கப்பட்ட வேலோன் தன்னை இருத்தி (அவனுக்கு உபசாரமான)கடன் முறைகள் யாவும் நேர்ந்து (பின்) விருந்தளிப்ப, சுரர்நாட்டை (சம்பராசுரனிடமிருந்து மீட்டு) ஈந்தான் (ஆகிய தயரதன், தேவாமிர்தத்தை உண்ணும் சுதந்தரமுடையவனு யிருந்தும், இவ்விருந்தை) இனிது உகந்தான். [தோடு, ஏடு-பூவிதழ். துற்ற-நெருங்கிய.]

63. செவ்விநறுஞ் சாந்தளித்துத் தேர்வேந்தன்
றனைநோக்கி யிவணீ சேர்ந்த
கவ்வையுரைத் தருள்கவென நிகழ்ந்தபரி
சரசர்பிரான் கழற லோடும்

அவ்வியநீத் துயர்ந்தமனத் தருந்தவனைக்
கொணர்ந்தாங்கண் விடுப்ப னான்ற
செவ்விமுடி யோயெனலுந் தேரேறிச்
சேனையொடு மயோத்தி சேர்ந்தான்.

(உகந்து உண்டபின்,) செவ்விநறும் சாந்தை அளித்து (வந்த) தேர் வேந்தன் தனை நோக்கி 'இவண் நீ சேர்ந்த கவ்வை உரைத்து அருள்' என, அரசர்பிரான் நிகழ்ந்தபரிசு கழறலோடும், (ரோமபதன்) 'ஆன்ற செவ்வி முடியோய், அவ்வியத்தை நீத்து உயர்ந்த மனத்துடைய அரும் தவனை ஆங்கண் (நான்) கொணர்ந்து விடுப்பன்' எனலும் (தயரதன்) தேர் ஏறி சேனையொடும் அயோத்தியை சேர்ந்தான். [செவ்வி-அழகு. கவ்வை, பரிசு-செய்தி. கழறலோடும்-சொல்ல. ஆன்ற-பெருமைதங்கிய. அவ்வியம்-பொறாமை.]

64. மன்னர்பிரா னகன்றதற்பின் வயவேந்த
னருமறைநூல் வடிவு கொண்ட
தன்னமுனி வரனுறையு ளனையணுகி
யிணையடித்தா மரைக ளம்பொன்
மன்னுமணி முடிபணிந்து வரன்முறைசெய்
திடவிவணீ வருதற் கொத்த
தென்னையென வடியேற்கோர் வரமருளு
மடிகளென யாவ தென்றான்.

மன்னர்பிரான் அகன்றதன்பின், வயம் உடைய (ரோமபத) வேந்தன், அருமறை நூல் (மானிட) வடிவு கொண்டது அன்ன (கலைக்கோட்டு) முனிவரன் (வசிக்கும்) உறையுள்தனை அணுகி, (முனிவனது) அடி இணை தாமரைகளை (தன்) அம் பொன் மன்னும் மணி முடியில் அணிந்து, வரன்முறைகள் செய்திட (அப்பொழுது முனிவன்) 'இவண் நீ வருதற்கு ஒத்தது என்னை' என (வினவ), (அரசன்) 'அடிகாள், அடியேற்கு ஓர் வரம் அருளும்' (என வேண்ட) (முனிவன்) 'யாவது?' என்றான். [உறையுள்-மாளிகை. வரன்முறைகள்-வந்தனை வழிபாடுகள்.]

65. புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க
பெருந்தகைதன் புகழிற் பூத்த
அறனென்றுந் திருமனத்தா னமரர்களுக்
கிடரிழைக்கு மவுண ராயோர்
திறலுண்ட வடிவேலான் றசரதனென்
றுயர்கீர்த்திச் செங்கோல் வேந்தன்
விறல்கொண்ட மணிமாட வயோத்திநக
ரடைந்திவணீ மீட லென்றான்.

(அதற்கு ரோமபதன்), "புறவு ஒன்றின் பொருட்டாக துலை புக்க (சிபிச் சக்ரவர்த்தியாகிய) பெருந்தகைதன் (கொழுந்தோடிப் படர்ந்த கொடிபோன்ற) புகழில் பூத்தவனும், அறம் ஒன்றும் திரு மனத்தானும். அமரர்களுக்கு இடரை இழைக்கும் அவுணர் ஆயோர் திறலை (குடித்து) உண்ட வடிவேலானும், (ஆகிய) தசரதன் என்று உயர்ந்த கீர்த்தியோடு செங்கோல் செலுத்தும் வேந்தனுடைய விறல் கொண்ட மணிமாட அயோத்தி நகரை அடைந்து, நீ, இவண் மீள்தல்" என்றான். [ஒன்றும்-பொருந்தும். திறல்-வலிமை. விறல்-பெருமை.]

66. அவ்வரந்தந் தனமினித்தேர் கொணர்தியென
வருந்தவத்தோ னறைதலோடும்
வெவ்வரந்தின் றயில்படைக்குஞ் சுடர்வேலா
னடியிறைஞ்சி வேந்தர் வேந்தன்
கவ்வையொழிந் துயர்ந்தனனென் றதிர்குரற்றேர்
கொணர்ந்ததனிற் கலைவ லாளன்
செவ்விநுதற் றிருவினொடும் போந்தேறு
கெனவேறிச் சிறந்தான் மன்னோ.

(எனக் கேட்டு) அரும் தவத்தோன் 'அவ்வரம் தந்தனம் இனி தேர் கொணர்தி' என, அறைதலோடும், வெவ்விய அரம் (அராவி) தின்று அயிலை படைக்கும் சுடர் வீசும் வேலான், (முனிவனது) அடியை இறைஞ்சி, (தயரத) வேந்தர் வேந்தன் கவ்வை ஒழிந்து உயர்ந்தனன் (என்று தனக்குள் எண்ணிக்கொண்டு) அதிர்கின்ற குரல் உடைய தேர் கொணர்ந்து அதனில் 'செவ்வி பொருந்திய நுதல் உடையதிரு மகள் போன்ற (நும்) பத்தினி யொடும் போந்து ஏறுக' என, கலைவலாளன் (அவ்வாறே) ஏறி சிறந்தான். [அறைதல்-சொல்லுதல். அயில்-கூர்மை. கவ்வை-துன்பம்.]

67. குனிசிலை வயவனுங் கரங்கள் கூப்பிடத்
துனியறு முனிவரர் தொடர்ந்து சூழ்வர
வனிதையு மருமறை வடிவம் போன்றொளிர்
முனிவனும் பொறிமிசை நெறியை முன்னினார்.

குனிந்த சிலையுடைய (ரோமபதன் ஆகிய) வயவன் கரங்கள் கூப்பி இட, (பிறவி) துனி அற்ற முனிவரும் தொடர்ந்து சூழ்ந்து வர, (சாந்தையாகிய) வனிதையும் அருமறையின் வடிவு போன்று ஒளிர்கின்ற முனிவனும் பொறிமிசை (ஏறி) நெறியை முன்னினார். [வயவன்-வெற்றியுடையவன். துனி-அச்சம். பொறி-தேர். முன்னினார்-முற்பட்டார்.]

68. அந்தர துந்துமி முழக்கி யாய்மலர்
சிந்தினர் களித்தன ரறமுந் தேவரும்
வெந்தெழு கொடுவினை வீழ்க்கு மெய்ம்முதல்
வந்தெழ வருடரு வானென் றெண்ணியே.

(அப்பொழுது), வெந்து எழுகின்ற (அரக்கரது) கொடு வினையை வீழ்க்கும் மெய்ம்முதல் (கடவுள் உலகத்து) வந்து எழ (இம்முனிவன்) அருள் தருவான் என்று எண்ணி அறமும் தேவரும் களித்தனர், அந்தரத்தில் துந்துமியை முழக்கி ஆய்ந்தமலர்களை சிந்தினர்.

69. தூர்துவ ரவ்வழி யயோத்தி துன்னினர்
மாதிரம் பொருததோண் மன்னர் மன்னன்முன்
ஓதினர் முனிவர வோத வேந்தனுங்
காதலென் றளவறு கடலு ளாழ்ந்தனன்.

அவ்வழி தூதுவர் அயோத்தியை துன்னினர். (அடைந்து) மாதிரத்தை பொருத தோள் உடைய மன்னர் மன்னன் முன் முனியின் வரவை ஓதினர். (ஓத) வேந்தனும் அளவு அற்ற காதல் என்ற கடலுள் ஆழ்ந்தனன். [மாதிரம்-திக்குகள்.]

70. எழுந்தனன் பொருக்கென விரத மேறினன்
பொழிந்தன மலர்மழை யாசி பூத்தன
மொழிந்தன பல்லிய முரச மார்த்தன
விழுந்தன தீவினை வேரி னோடுமே.

(ஆழ்ந்த தயரதன்) பொருக்கென எழுந்தனன், இரதம் எறினன். (அப்பொழுது) மலர் மழை பொழிந்தன. ஆசி பூத்தன. பல் இயம் மொழிந்தன. முரசம் ஆர்த்தன. தீவினை வேரினோடும்விழுந்தன.

71. பிதிர்ந்ததெம் மனத்துயர்ப் பிறங்க லென்றுகொண்
டதிர்ந்தெழு முரசுடை யரசர் கோமகன்
முதிர்ந்தமா தவமுடை முனியைக் கண்களால்
எதிர்ந்தனன் யோசனை யிரண்டொ டொன்றினே.

அதிர்ந்து எழும் முரசை உடைய அரசர் கோமகன் (ஆகிய தயரதன்) 'எம் மனத்திலுள்ள (மக்கட் பேறு இல்லாத) துயராகிய பிறங்கல் பிதிர்ந்தது' என்று கொண்டு, முதிர்ந்த மா தவம் உடைய முனியை இரண்டொடு ஒன்று யோசனை(சென்று) கண்களால் எதிர்ந்தனன். [பிறங்கல்-மலை. பிதிர்ந்தது-பொடி ஆயிற்று.]

72. நற்றவ மனைத்துமோர் நவையி லாவுருப்
பெற்றிவ ணடைந்தெனப் பிறங்கு வான்றனைச்
சுற்றிய கிளையு முழையின் றோற்றமும்
முற்றுறப் பொலிதரு மூர்த்தி யான்றனை.

(எதிர்ந்து அந்த) நல் தவம் அனைத்தும் ஓர் நவை இல்லாத உருவை பெற்று இவண் அடைந்தது என பிறங்குவான்தனை, (அரையில்) சுற்றிய சீரையும் உழையின்(முக)தோற்றமும் முற்று உற பொலிதரும் மூர்த்தியான் தனை, [நவை-குற்றம். பிறங்குவான்-விளங்குபவன். சீரை-மரவுரி. உழை-மான்.]

73. அண்டர்க டுயரமு மரக்க ராற்றலும்
விண்டிடப் பொலிதரும் வினைவல் லாளனைக்
குண்டிகை குடையொடுங் குலவு நூன்முறைத்
தண்டொடும் பொலிதரு தடக்கை யான்றனை.

அண்டர்களுக்கு (உற்ற) துயரமும் அரக்கர் (பெற்ற) ஆற்றலும் (ஒருங்கே) விண்டு இட பொலிதரும் (வேள்வி) வினை வல்லாளனை, குண்டிகையும், குடையும் குலவும் நூல் முறைமைப்படி தண்டும் பொலிதரும் தடம் கையான்தனை—(கண்களால் எதிர்ந்தனன் என்று முடிக்க). [அண்டர்-தேவர். ஆற்றல்-வல்லமை. குண்டிகை-கமண்டலம். குலவு-விளங்குகிற. தண்டு-திரிதண்டம்.]

74. இழிந்துபோ யிரதமாண் டிணைகொ டாண்மலர்
விழுந்தனன் வேந்தர்தம் வேந்த னீர்மையால்
மொழிந்தன ஞசிகண் முதிய நான்மறைக்
கொழுந்துமேற் படர்தரக் கொளுகொம் பாயினன்.

(எதிர்ந்த அளவில்), ஆண்டு வேந்தர்தம் வேந்தன் இரதத்தினின்றும் இழிந்துபோய் (முனிவனது) இணை கொண்ட தாமரை மலர் போன்ற தாள்களில் வீழ்ந்தனன். (விழவும்) முதிய நான்கு மறைகளின் கொழுந்துகள் (பரவி) மேல் படர்தர (ஒரு) கொளுகொம்பு (போன்று) ஆயினன் (ஆகிய அம்முனிவன்) நீர்மையால் ஆசிகள் அரசனுக்கு மொழிந்தனன். [இழிந்து-இறங்கி. நீர்மையால்-முறைமைப்படி.]

75. அயல்வரு முனிவரு மாசி கூறிடப்
புயல்பொழி தடக்கையாற் றொழுது பொங்கிநீர்க்
கயல்பொரு விழியொடு கலைவ லாளனை
இயல்பொடு கொணர்ந்தன னிரத மேற்றியே.

(பின் அரசன்) அயலில் வரும் முனிவரும் ஆசி கூறிட (அவர்களைத் தன்) புயல்போல் (பிரதிபலன் கருதாது பொருள்களை) பொழியும் தடம் கையால் தொழுது, (சந்தோஷம்) பொங்கி, நீரில் உள்ள கயல் மீன்களை பொரு விழிகளையுடைய முனிபத்தினியொடு கலைகளில் வல்லாளனை இரதம் ஏற்றி இயல்பொடு கொணர்ந்தனன். [பொரு-ஒத்த. இயல்பொடு-முறைமைப்படி.]

76. அடிகுரன் முரசதி ரயோத்தி மாநகர்
முடியுடை வேந்தனம் முனிவ னோடுமோர்
கடிகையி லடைந்தனன் கமல வாண்முக
வடிவுடை மடந்தையர் வாழ்த்தெ டுப்பவே.

முடியுடைய வேந்தன், கமலம் போன்ற வாள் பொருந்திய முகத்தின் வடிவு உடைய மடந்தையர் வாழ்த்து எடுப்ப, அடி குரல் முரசுகள் அதிர்கின்ற அயோத்திமாநகரை, அ முனிவனோடு ஓர் கடிகையில் அடைந்தனன். [வாள்-ஒளி. கடிகை-நாழிகை.]

77. கசட்டுறு வினைத்தொழிற் கள்வ ராயுழல்
அசட்டர்க ளைவரை யறுவ ராக்கிய
வசிட்டனு மருமறை வடிவுபோன் றொளிர்
விசிட்டனும் வேந்தவை பொலிய மேவினார்.

(அயோத்தியை அடைய) கசடு உற்ற வினைத் தொழில் புரிந்து (ஆன்மாவை அபகரிக்கும்) கள்வர்ஆய் உழலும் (பஞ்ச) இந்திரியங்களாகிய) அசடர்கள் ஐவரை, (செயல்) அற்றவர்களாக ஆக்கிய வசிட்டனும், அருமறை வடிவுபோன்று ஒளிர்கின்ற (கலைக்கோட்டு முனியாகிய) விசிட்டனும் வேந்தன் அவை பொலிய மேவினார். [கசடு-குற்றம். அறுவர்கள்-அற்றவர்கள். விசிட்டன்-உத்தமன். வேந்தவை-ராஜசபை. பொலிய-விளங்க.]

78. மாமணி மண்டப மன்னி மாசறு
தூமணித் தவிசிடைச் சுருதி யேநிகர்
கோமுனிக் கரசனை யிருத்திக் கொள்கடன்
ஏமுறத் திருத்திவே றினைய செப்பினான்.

(சக்ரவர்த்தி), மாமணி மண்டபம் மன்னி, மாசு அற்ற தூ மணி தவிசு இடை சுருதியையே நிகர்க்கும் கோமுனிக்கு அரசனை இருத்தி, (அவரை வரவேற்றுக்)கொள்ளும் கடன்களை ஏமம் உற திருத்தி (பின், கலைக்கோட்டு முனிவனை நோக்கி) இனைய செப்பினான். [மன்னி-அடைந்து. தூ-பரிசுத்தமான. சுருதி-வேதம். ஏமம்-மகிழ்ச்சி. திருத்தி-நிறைவேற்றி.]

79. சான்றவர் சான்றவ தருமமா தவம்
போன்றொளிர் புனிதநின் னருளிற் பூத்தவென்
ஆன்றதொல் குலமினி யரசின் வைகுமால்
யான்றவ முடைமையு மிழப்பின் றாமரோ.

"சான்றவர்களுக்குள் சான்றவனே, தருமமும் மாதவமும் போன்று ஒளிர்கின்ற புனிதனே, நின் அருளில் பூத்த என் ஆன்ற தொல் குலம் இனி அரசாட்சியில் (நிலை பெற்று) வைகும், யான் தவம் உட

மையும் இழப்பு இன்று ஆகும்." [சான்றவர்-மேலோர். புனித-பரிசுத்தனே.]

80. என்னலு முனிவர னினிது நோக்குறு
மன்னவர் மன்னகேள் வசிட்ட னென்னுமோர்
நன்னெடுந் தவன்றுணை நவையில் செய்கைநீ
நின்னையிவ் வுலகினி னிருபர் நேர்வரோ.

(தயரதன்) என்னலும், (கலைக்கோட்டு) முனிவரன் இனிது நோக்கி "மன்னவர்களுக்கு மன்னனே. கேள். வசிட்டன் என்னும் ஓர் நல்ல நெடும் தவனை துணையாய் உடையை. நீயும் நவை இல்லாத செய்கை (உடையை), (எனவே) நின்னை இ உலகினில் நிருபர் நேர்வரோ" (என்றான்.) [நிருபர்-அரசர்.]

81. என்றன பற்பல வினிமை கூறிநற்
குன்றுறழ் வரிசிலைக் குவவுத் தோளினாய்
நன்றிகொ ளரிமகந் நடத்த வெண்ணியோ
இன்றெனை யழைத்ததிங் கியம்புவா யென்றான்.

என்றன பல்பல இனிமை (வசனங்கள்) கூறி (பின்), "நல் குன்றை உறழ் வரி அமைந்த சிலையை தாங்கிய குவவு தோளினாய், இன்று என்னை இங்கு அழைத்தது, நன்றி கொண்ட அரிமகம் நடத்த எண்ணியோ, இயம்புவாய்" என்றான். [உறழ்-ஒத்த. நன்றிகொள்-நன்மை பொருந்திய. அரிமகம்-அசுவமேதயாகம்.]

82. உலப்பில்பல் லாண்டெலா முறுக ணின்றியே
தலப்பொறை யாற்றினன் றனையர் வந்திலர்
அலப்புநீ ருடுத்தபா ரளிக்கு மைந்தரை
நலப்புகழ் பெறவினி நல்க வேண்டுமால்.

(அதற்குப் பதிலாகத் தயரதன்) "உலப்பு இல்லாத பல்ஆண்டு எலாம் உறுகண் இன்றியே தலத்தின் பொறையை ஆற்றினன். (இதுவரையில் எனக்கு) தனையர் வந்திலர். அலம்பும் (கடல்) நீரை (சுற்றி) உடுத்த பாரை அளிக்கும் மைந்தரை (இத்தகைய மக்களைப் பெற என்ன தவம் செய்தேனோ என்று உலகத்தார் கூறும்) நலமாகியபுகழை (நான்) பெற (இனி) நீ நல்கவேண்டும்"(என்றான்) [உலப்பு-தொலைவு. உறுகண்-துன்பம். தலம்பொறை ஆற்றினன்-பூமி பாரம் தாங்கினேன்.]

83. என்றலு மரசநீ யிரங்க லிவ்வுல
கொன்றுமோ வுலகமீ ரேழு மோம்பிடும்
வன்றிறன் மைந்தரை யளிக்கு மாமகம்
இன்றுநீ யியற்றுதற் கெழுகவின் றென்றான்.

(அரசன் அவ்வாறு) என்றலும், (கலைக்கோட்டுமுனி) "அரச, நீ இரங்கல். இவ்வுலகு ஒன்று (மாத்திர)மோ, ஈர் ஏழு உலகமும் ஓம்பிடும் வல் திறல் வாய்ந்த மைந்தரை (உனக்கு) அளிக்கும் (புத்ரகாமேஷ்டி) மா மகம் நீ இன்று இயற்றுதற்கு ஈண்டு எழுக" என்றான். [மகம்-யாகம்.]

84. ஆயதற் குரியன கலப்பை யாவையும்
ஏயெனக் கொணர்ந்தனர் நிருபர்க் கேந்தலும்
தூயநற் புனல்படிஇச் சுருதி நூன்முறை
சாய்வறத் திருத்தியே சாலை புக்கனன்.

(உடனே) ஆயதற்கு உரியனவான கலப்பை (முதலிய உபகரணம் யாவையும் ஏ என கொணர்ந்தனர். (அப்பொழுது) நிருபர்க்கு ஏந்தலும் தூய நல்புனலில் படிந்து சுருதி நூல் முறைமைப்படி திருத்திய (யாக) சாலை புக்கனன். [ஏ என-விரைவில். ஏந்தல்-சிறந்தவன்.]

85. முழங்கழன் மும்மையு முடுகி யாகுதி
வழங்கியே யீரறு திங்கள் மாய்ந்தபின்
தழங்கின துந்துமி தாவில் வானகம்
விழுங்கினர் விண்ணவர் வெளியின் றென்னவே.

முழங்கும் (ஆகவநீயம், தக்ஷிணாக்நி, காருகபத்யம் என்கிற) அழல் மும்மையையும் முடுகி (வளர்த்து அதில்) ஆகுதி வழங்கி ஈர் ஆறு திங்கள் மாய்ந்தபின், (தேவ) துந்துமி தழங்கின, தா இல்லாத வானகத்தை விண்ணவர் (வேறு) வெளி இன்று என்னவே விழுங்கினர். [தா-கெடுதல். விழுங்கினர்-மறையும்படி மொய்த்துக்கொண்டார்.]

86. முகம லரொளிதர மொய்த்து வானுளோர்
அகவிரை நறுமலர் தூவி யார்த்தெழத்
தகவுடை முனியுமத் தழலி னுப்பிணை
மகவரு ளாகுதி வழங்கி னானரோ.

வான்உளோர் (தம்) மலர்போன்ற முகம் ஒளிதர மொய்த்து அகத்தில் விரை பொருந்திய (கற்பக) நறும் மலர்களை தூவி ஆர்த்து எழ, தகவு உடைய (கலைக்கோட்டு) முனியும் அ (ஹோம) தழலின் நாப்பண் மகவை அருளும் ஆகுதியை வழங்கினான். [நாப்பண்-நடு.]

87. ஆயிடைக் கனலினின் றம்பொற் றட்டமேல்
தூயநற் சுதை நிகர் பிண்ட மொன்றுசூழ்
தீயெரிப் பங்கியுஞ் சிவந்த கண்ணுமாய்
ஏயெனப் பூதமொன் றெழுந்த தேந்தியே.

வழங்கிய) ஆயிடை, கனலில் நின்று, பூதம் ஒன்று சூழ்ந்து எரி கின்ற தீயை போன்ற பங்கியும் சிவந்த கண்ணுமாய், அம் பொன்

தட்டம் மேல் தூய நல் சுதையை நிகர்க்கும் பிண்டம் ஒன்று ஏந்தி ஏ என எழுந்தது. [பங்கி-சிகைமயிர். சுதை-அமுதம்.]

88. வைத்தது தரைமிசை மறித்து மவ்வழித்
தைத்தது பூதமத் தவனும் வேந்தன்கை
உய்த்துநல் லமிர்தினை யுரிய மாதர்கட்
கத்தகு மரபினி னளித்தி யாலென்றான்.

(அந்த) பூதம் (தட்டை) தரைமிசை வைத்தது, மறித்தும் (வந்த) அ வழி தைத்தது. அ தவனும் (தட்டை) வேந்தன் கையில் உய்த்து "நல் அமிர்தினை (உன்) உரிய மாதர்கட்கு (மூத்தாள் இளையாள் எனும்) தகும் அ மரபினில் அளித்தி என்றான். [தைத்தது-புகுந்தது.]

89. மாமுனி யருள்வழி மன்னர் மன்னவன்
தூமமென் சுரிகுழற் றொண்டைச் செய்யவாய்க்
காமரொண் கௌசலை கரத்தி னோர்பகிர்
தாமுற வளித்தனன் சங்க மார்த்தெழ.

(அந்த) மா முனி (சொல்லி) அருளிய வழி மன்னர் மன்னவன் அகில்) தூமம் ஊட்டப் பெற்ற மெல்லிய குழலும் தொண்டைக் கனிபோன்ற செய்ய வாயையும் உடைய காமர் ஒள் கௌசலையின் கரத்தில்தாம் உற (அப்பிண்டத்தை இரண்டாக்கி அவற்றில்) ஓர் பகிரை சங்கம் ஆர்த்து எழ அளித்தனன். [தொண்டை-கொவ்வை. காமர்-அழகிய. பகிர்-பங்கு.]

90. கைகயன் றனையைதன் கரத்து மம்முறைச்
செய்கையி னளித்தனன் றேவ ரார்த்தெழப்
பொய்கையு நதிகளும் பொழிலு மோதிமம்
வைகுறு கோசல மன்னர் மன்னனே.

(பின்), பொய்கையும் நதிகளும் பொழிலும் ஓதிமம் வைகுறும் கோசல தேசத்து மன்னர் மன்னன், (இவள் செய்யும் சூழ்வினையால்தான் நம் துன்பம் இனி தீரப்போகிறதென்று சந்தோஷத்தால்) தேவர் ஆர்த்து எழ. கைகயனது தனையை (ஆகிய கைகேசி) தன் கரத்தும் (கௌசலைக்குக் கொடுத்த) அ முறைப்படி செய்கையில் (கையிலுள்ளதை இரண்டாகப் பகிர்ந்து அவற்றிலொரு பங்கை) அளித்தனன். [ஓதிமம்-அன்னப்புள்.]

குறிப்பு :—இப்பொழுது பிண்டம் கொடுப்பது போலவே பின்னால் அவளுக்கு 'மண்ணை கொள்' என்று தன் நாட்டையும் தயரதன் கொடுக்க வேண்டியவனுகையால் இப்பாசுரத்தில் 'கோசல மன்னன்' என்று தயரதனைக்கம்பர் குறிப்பிட்டு கூறுகின்றார்.

91. நமித்திரர் நடுக்குறு நலங்கொண் மொய்ம்புடை
நிமித்திரு மரபுளான் முன்னர் நீர்மையில்
சுமித்திரைக் களித்தனன் சுரர்க்கு வேந்தினி
சமித்ததெம் பகையெனத் தமரொ டார்ப்பவே.

(பின்), நமித்திரர் (ஆகிய பகைவர்) நடுக்கு உறும் நலம் கொண்ட மொய்ம்பை உடைய நிமி (என்னும் இக்ஷுவாகுவின் புதல்வனது) திருமரபில் (வந்து) உள்ளான் (ஆகிய தயரதன்), சுரர்க்கு வேந்தன் (ஆன இந்திரன்) 'எம் பகை (ஆகிய இந்திரசித்து) இனிசமித்தது' என தமரொடு ஆர்ப்ப, முன்னர் நீர்மையில் (கையில் இருந்ததை மறுபடியும் இரண்டாகப் பகிர்ந்து, அவற்றில் ஒருபங்கை) சுமித்திரைக்கு அளித்தனன். [நமித்திரர்-மித்திரர் அல்லாதவர். மொய்ம்பு-வலிமை. சமித்தது-அழிந்தது.]

92. பின்னுமப் பெருந்தகை பிதிர்ந்து வீழ்ந்தது
தன்னையுஞ் சுமித்திரை தனக்கு நல்கினான்
ஒன்னலர்க் கிடமும்வே றுலகி னோங்கிய
மன்னுயிர் தமக்குநீள் வலமுந் துள்ளவே.

பின்னும் அ பெருந்தகை (ஆகிய தயரதன்) ஒன்னலர்க்கு இடமும் உலகில் ஓங்கிய வேறு மன்னுயிர் தமக்கு நீண்ட வலமும் துள்ள, பிதிர்ந்து வீழ்ந்ததை தம்மையும் சுமித்திரை தனக்கு நல்கினான். [ஒன்னலர்-பகைவர். இடம், வலம்-இடப்பக்கம், வலப் பக்கம்.]

93. வாம்பரி வேள்வியும் மகவை நல்குவ
தாம்புரை யாவுதி பிறவு மந்தணன்
ஓம்பிட முடிந்தபி னுலகு காவலன்
ஏம்பலொ டெழுந்தனன் யாரு மேத்தவே.

வாவும் பரிவேள்வியும், மகவை நல்குவது ஆகும் புரையான ஆவுதி பிறவும் (கலைக்கோட்டு முனியாகிய) அந்தணன் ஓம்பிட முடிந்தபின், உலகினது காவலன் யாரும் ஏத்த ஏம்பலொடு எழுந்தனன். [பரி வேள்வி-அச்வமேதயாகம். புரை-உயர்ச்சி. ஏம்பல்-மகிழ்ச்சி.]

94. முருடொடு பல்லிய முழங்கி யார்த்தன
இருடரு முலகமு மிடரி னீங்கின
தெருடரு வேள்வியின் கடன்க டீர்ந்துழி
அருடரு மவையில்வந் தரச னெய்தினான்.

முருடும் பல இயமும் முழங்கி ஆர்த்தன; (அரக்கரால்) இருள் தரும் உலகமும் இடரினின்று நீங்கின; (வேதங்களால்) தெருள் தரும் வேள்வியின் கடன்கள் தீர்ந்துழி அரசன் (வேண்டியவர்க்கு

வேண்டியவைகளை) அருளோடு தரும் (இடமாய் அமைந்த) அவை யில் வந்துஎய்தினன். [முருடு-மத்தளம். இருள்-பேதைமை.]

95. செம்முறை கடன்முறை திறம்ப லின்றியே
மெய்ம்முறைக் கடவுளர்க் கீந்து விண்ணுளோர்க்
கம்முறை யளித்துநீ டந்த ணாளர்க்கும்
கைம்முறை வழங்கினன் கனக மாரியே.

(கொடை அவையில் வந்து), செய்யும் முறையில் கடன் முறை களை திறம்பல் இன்றி மெய் முறையுடைய கடவுளர்க்கு ஈந்து. (மற்ற) விண்ணில் உள்ளோர்க்கும் அ முறை அளித்து நீடு அந்தணா ளர்க்கும் கனகத்தை மாரிபோல் கையால் முறைப்படி வழங்கினன்.

96. வேந்தர்கட் கரசொடு வெறுக்கை தேர்பரி
வாய்ந்தநற் றுகிலொடு வரிசைக் கேற்பன
ஈந்தனன் பல்லியந் துவைப்ப வேகிநீர்
தோய்ந்தனன் சரயுநற் றுறைக்க ணெய்தியே.

வேந்தர்கட்கு, அரசும் வெறுக்கையும் தேரும் பரிகளும் (அவர்க ளுக்கு) வாய்ந்த நல் துகிலும் (அவரவர்) வரிசைக்கு ஏற்பனவற்றை ஈந்தனன். (பிறகு) பல் இயம் துவைப்ப ஏகி சரயுவின் நல் துறைக்கண் எய்தி நீரில் தோய்ந்தனன். [வெறுக்கை-திரவியம்.]

97. முரசினங் கறங்கிட முத்த வெண்குடை
விரசிடு நிழற்றர வேந்தர் சூழ்தர
அரசவை யடைந்துழி யயனு நாணுற
உரைசெறி முனிவர்தாள் வணங்கி யோங்கினன்.

(நீராடித் திரும்பிய அரசன்) முரசு இனம் கறங்கிட முத்துக்க ளால் செய்யப்பட்ட வெண்மையான குடை விரசிடும் நிழலை தர (அதன் கீழ்) வேந்தர் சூழ்தர (போகி) அரசு அவையை அடைந்துழி (அங்கு இருந்த), அயனும் நாணை உறத்தக்க உரை செறிந்த (வசிஷ்ட) முனிவரது தாள்களை வணங்கி ஓங்கினன். [விரசிடும்-நெருங்கிய. உரை-புகழ். ஓங்கினன்-எழுந்தான்.]

98. அரியநற் றவமுடை வசிட்ட னாணையால்
இரலைநற் சிருங்கமா விறைவன் றாடொழா
உரியபற் பலவுரை பயிற்றி யுய்ந்தனன்
பெரியநற் றவவினிப் பெறுவ தியாதென்றான்.

(பின் தயரதன்) அரிய நல் தவம் உடைய வசிட்டனது ஆணையால் இரலையின் நல் சிருங்கம் உடைய மா இறைவனது தாளை தொழுது, (சொல்வதற்கு) உரிய பல்பல உரைகளை பயிற்றி "பெரிய நல் தவா (அடியேன்) உய்ந்தனன். இனி பெறுவது யாது" என்றான்.

99. எந்தைநின் னருளினா லிடரி னீங்கியே
உய்ந்தன னடியனே னென்ன வொண்டவன்
சிந்தையுண் மகிழ்ச்சியால் வாழ்த்தித் தேர்மிசை
வந்தமா தவரொடும் வழிக்கொண் டேகினான்.

(பின்னும் அரசன்) "எந்தை நின் அருளினால் இடரினின்று நீங்கியே அடியனேன் உய்ந்தனன்" என்ன, ஒள் தவன் சிந்தையுள் மகிழ்ச்சியால் (அரசனை) வாழ்த்தி தேர்மிசை (ஏறித் தன்னுடன்) வந்த மா தவரொடும் வழிக்கொண்டு ஏகினான்.

100. வாங்கிய துயருடை மன்னன் பின்னரும்
பாங்குடை முனிவர்தாள் பழிச்சி யேத்தல்கொண்
டோங்கிய வுவகைய ராசி யோடெழா
நீங்கின ரிருந்தன னேமி வேந்தனே.

(இவ்விதம்) வாங்கிய துயரை உடைய மன்னன் பின்னரும், பாங்கு உடைய முனிவர்களது தாள்களை பழிச்சி (ஏத்த அந்த) ஏத்தலை கொண்டு ஓங்கிய உவகையராய் ஆசியோடு எழுந்து (முனிவர்) நீங்கினர். நேமிவேந்தன் இருந்தனன். [வாங்கிய துயர் உடைய-துயர்நீங்கிய. பழிச்சி-துதித்து. ஏத்தல்-புகழ்தல்.]

101. தெரிவையர் மூவருஞ் சிறிது நாட்செலீஇ
மருவிய வயாவொடு வருத்தந் துய்த்தலாற்
பொருவரு திருமுக மன்றி பொற்புநீ
டுருவமு மதியமொ டொப்பத் தோன்றினார்.

சிறிது நாள் செல (தயரதனது பட்ட மகிஷிகளாகிய) தெரிவையர் மூவரும் (கர்ப்பம் அடைந்து) மருவிய வயாவொடு வருத்தம் துய்த்தலால் (அவர்களது) பொருவு அரு திரு முகம் (மாத்திரம்) அன்றி, பொற்பு நீடு உருவமும் (வெண்மைநிறம்பெற்று) மதியமொடு ஒப்ப தோன்றினார். [தெரிவையர்-மாதர். வயாவு-மசக்கை, கருப்பகாலத்தில் பெண்களுக்குண்டாகும் அசாதாரணவிருப்பும் வெறுப்பும். பொருவு அரு-ஒப்பில்லாத. பொற்பு-அழகு. மதியம்-சந்திரன்.]

102. ஆயிடைப் பருவம்வந் தடைந்த வெல்லையின்
மாயிரும் புவிமகள் மகிழ்வி னோங்கிட
வேய்புனர் பூசமும் விண்ணு ளோர்புகழ்
தூயகர்க் கடகமு மெழுந்து துள்ளவே.

[வேய்-மூங்கில்: புனர்பூசநட்சத்திரத்துக்கு இதுவுமொரு மறு பெயர். கர்க்கடகம்-நண்டு, கடகராசி]

103. சித்தரு மியக்கருந் தெரிவை மார்களும்
வித்தக முனிவரும் விண்ணு ளோர்களும்
நித்தரு முறைமுறை நெருங்கி யார்ப்புறத்
தத்துற லொழிந்துநீ டருமமோங்கவே.

[வித்தகம்-ஞானம். நித்தர்-நித்திய சூரிகள்.]

104. ஒருபக லுலகெலா முதரத் துட்பொதிந்
தருமறைக் குணர்வரு மவனை யஞ்சனக்
கருமுகிற் கொழுந்தெழில் காட்டுஞ் சோதியைத்
திருவுறப் பயந்தன டிறங்கொள் கோசலை.

ஒருபகலில் உலகுஎல்லாம் (தன்) உதரத்துள் பொதிந்து அருமறைக்கு உணர்வு அரிய அவனை, அஞ்சனம்(போன்ற) கரு முகிலின் கொழுந்தினது எழிலை காட்டும் சோதியை, திறம் கொண்ட கோசலை திருஉற பயந்தனள். [அஞ்சனம்-மை. எழில்-அழகு. திருஉற-மங்களம் உண்டாக]

105 ஆசையும் விசும்புநின் றமர ரார்த்தெழ
வாசவன் முதலினோர் வணங்கி வாழ்த்துறப்
பூசமு மீனமும் பொலிய நல்கினாள்
மாசறு கேகயன் மாது மைந்தனை.

[ஆசை-திசை. வாசவன்-இந்திரன்.]

106. தளையவிழ் தருவுடைச் சயில கோபனுங்
கிளையுமந் தரமிசைக் கெழுமி யார்த்தெழ
அளைபுகு மரவினோ டலவன் வாழ்வுற
இளையவற் பயந்தன ளிளைய மென்கொடி.

(மலர்கள்) தளை அவிழ்கின்ற (கற்பக) தருவை உடைய சயில கோபனும், (தன் பகைவனாகிய இந்திரஜித்தைக் கொல்லப் பிறந்தவன் இவன் என்று அறிந்து அவன்) கிளையும் அந்தரமிசை கெழுமி ஆர்த்து எழ, (ஆயிலிய நக்ஷத்திரம் ஆகிய) அளைக்குள் புகும் அரவும், (கற்கடகராசி ஆகிய) அலவனும் வாழ்வு உற, இளைய மென் கொடிபோன்ற சுமித்திராதேவி இளையவனை பயந்தனள். [சயில கோபன்-மலைகளைக்கோவித்தவன், இந்திரன்.]

107. படங்கிளர் பஃறலைப் பாந்த ளேந்துபார்
நடங்கிளர் தரமறை நவில நாடகம்
மடங்கலு மகமுமே வாழ்வி னோங்கிட
விடங்கிளர் விழியினாண் மீட்டு மீன்றனள்.

படங்கள் கிளர்கின்ற பல் தலைகளையுடைய (ஆதிசேஷன் ஆகிய) பாந்தள் ஏந்தும் (இந்த) பார் (மடந்தை) நடனம் கிளர்தரவும்

மறைகள் நாடகம் நவிலவும், (ராசியில்) மடங்கலும் (நட்சத்திரத்தில்) மகமும் வாழ்வின் ஓங்கிஇட, விடம் (போல்) கிளர்கின்ற விழியினள் (ஆகிய அந்த சுமித்திராதேவி) மீட்டும் (இன்னொருமகவை) ஈன்றனள். [பாந்தள்-பாம்பு. மடங்கல்-சிங்கம்.]

108. ஆடின ரரம்பைய ரமுத வேழிசை
பாடினர் கின்னரர் துவைத்த பல்லியம்
வீடின ரரக்கரென் றுவக்கும் விம்மலால்
ஓடின ருலாவின ரும்பர் முற்றுமே.

109. ஓடின ரரசன்மாட் டுவகை கூறிநின்
றாடினர் சிலதிய ரந்த ணாளர்கள்
கூடினர் நாளொடு கோளு நின்றமை
நாடின ருலகினி நவையின் றென்றனர்.

சிலதியர் அரசன் மாட்டு ஓடினர் உவகை கூறி நின்று ஆடினர். (ஜோதிஷ) அந்தணாளர்கள் கூடினர், (ஜனனகாலத்தில்) நாளும் கோளும் நின்றமையை நாடினர். (நாடி) உலகு இனி நவை இன்று' என்றனர். [சிலதியர்-ஏவல் செய் தோழியர். நாள்-நக்ஷத்திரம். கோள்-கிரஹம். நவை-தீமை.]

ஸ்ரீராமரது ஜாதகம்.

110. மேடமா மதிதிதி நவமி மீன்கழை
நீடுறு மாலைகர்க் கடக நீதிசேர்
ஓடைமா களிறனு னுதய ராசிகோள்
நாடினே காதசர் நால்வ ருச்சரே.

நீதி சேர்ந்த ஓடையை அணிந்த மா களிறு அனுன் (அவதார காலத்தில்) மாமதி மேடம், திதி நவமி, மீன் கழை, உதயம் ராசி கர்க்கடகம், மால் ஐ (ஆகிய பத்தாவது ஸ்தானத்தில்) கோளிற்கு நாடானது இல். ஏகாதசர் நால்வர் உச்சராகவும் நீடுஉறும். [ஓடை-யானை நெற்றியில் கட்டும் பட்டம். மீன்கழை-புனர்ப்பூச நட்சத்திரம். மால்-புதன். ஐ-இராஜன். கோள்-கேது. நாடு-மிதுனம். ஏகாதசர்-பதினொன்றிற்கு உடையவர்.]

111. என்றனர் சாதக மிறைவற் கேனையர்
தன்றனக் குந்தகு முறையிற் றன்றெரிந்
தொன்றிய தமனியத் தெழுதி யோதினார்
வன்றிறற் சுரர்குரு வாழ்த்தெ டுப்பவே.

வல் திறலுள்ள சுரர்க்கு குரு (ஆகிய பிரகஸ்பதியும்) வாழ்த்து எடுப்ப, இறைவற்கு (இது) சாதகம் என்றனர். (பின்) ஏனையர் தன்

தனக்கும் தரும் முறையில் தான் (சாதகம்) தெரிந்து ஒன்றிய தமனியத்து எழுதி ஓதினர். [தமனியம்-பொன்.]

112. மாமுனி தன்னொடு மன்னர் மன்னவன்
ஏமுறப் புனல்படிஇ வித்தொ டின்பொருள்
தாமுற வழங்கிவெண் சங்க மார்ப்புறக்
கோமகர் திருமுகங் குறுகி நோக்கினன்.

மன்னர் மன்னவன், (சரயுவின்) புனலில் ஏமம் உற படிந்து, வித்தொடு இன்பொருள்கள் தாமும் உற வழங்கி, வெண் சங்கம் ஆர்ப்பு உற (வசிஷ்ட) மா முனி தன்னொடு குறுகி கோவின்மகர்களது திரு முகங்களை நோக்கினன். [ஏமம்-களிப்பு.]

113. இறைதவிர்ந் திடுகபார் யாண்டொ ரேழ்நிதி
நிறைதரு சாலைதாழ் நீக்கி யாவையும்
முறைகெட வறியவர் முகந்து கொள்கென
அறைபறை யென்றன னரசர் கோமகன்.

அரசர் கோமகன், 'ஓர் ஏழ் யாண்டு (இந்த) பார் (உள்ளார்) இறையை தவிர்ந்து இடுக. நிதி நிறைதரும் சாலையின் தாழை நீக்கி யாவையும் வறியவர் முறைகெட கொள்க என பறையை அறை' என்றனன். [இறை-வரி. தாழ்-தாழ்ப்பாள். சாலை-களஞ்சியம்.]

114. படையொழிந் திடுகதம் பதிக ளேயினி
விடைபெறு குகமுடி வேந்தர் வேதியர்
நடையுறு நியமமு நவையின் றாகுக
கடவுளர் விழாவொடு பொலிக வெங்கணும்.

"படை (தொழில்) ஒழிந்திடுக. நம் (சிறையில் இருக்கின்ற) முடி வேந்தர் தம் பதிகளுக்கே இனி விடை பெறுகுக. வேதியர் பால் நடையுறும் நியமங்களும் நவை இன்று ஆகுக. எங்கணும் கடவுளர் விழாவொடு பொலிக."

115. ஆலயம் புதுக்குக வந்த ணாளர்தம்
சாலையும் சதுக்கமுஞ் சமைக்க சந்தியும்
காலையும் மாலையுங் கடவு ளர்க்கணி
மாலையுந் தீபமும் வழங்கு கென்றனன்.

ஆலயங்களை புதுக்குக. அந்தணாளர்தம் (அற) சாலைகளையும் சதுக்கங்களையும் சமைக்க. காலையிலும் மாலையிலும் சந்தியாகாலங்களிலும் கடவுளர்க்கு அணி மாலையும் தீபமும் வழங்குக" என்றனன் (தயரதன்.) [சதுக்கம்-நாற்சந்தி கூடுமிடத்தில் கட்டப்பட்டிருக்கும் மண்டபம்.]

116. என்புழி வள்ளுவர் யானை மீமிசை
நன்பறை யறைந்தனர் நகர மாந்தரும்
மின்பிறழ் நுசுப்பினர் தாமும் விம்மலால்
இன்பமென் றளக்கரு மளக்க ரெய்தினார்.

என்புழி, வள்ளுவர் யானை மீமிசை (அரசன் விதித்தவாறே) நன்பறை அறைந்தனர். நகரமாந்தரும் மின்னல் கொடி போன்ற நுசிப்பினர் தாமும் விம்மலால் இன்பம் என்ற அளக்க அரிய அளக்கருள் எய்தினார். [நுசுப்பு-இடை. அளக்கர்-சமுத்திரம்.]

117 ஆர்த்தனர் முறைமுறை யன்பி னாலுடல்
போர்த்தன புளகம்வேர் பொடித்த நீணிதி
தூர்த்தன ரெதிரெதிர் சொல்லி னார்க்கெலாந்
தீர்த்தனென் றறிந்ததோ வவர்தஞ் சிந்தையே.

(அவ்வாறு ஆனந்தம் எய்தியவர்) முறைமுறை ஆர்த்தனர். அன்பினால் (அவர்) உடல் புளகத்தால் போர்த்தன. வேர்வை பொடித்த. எதிர்எதிர்(வந்து இராமவதார நற்செய்தியை)சொல்லினார்க்கு எலாம் நீண்ட நிதி தூர்த்தனர்—அவர்தம் சிந்தை (பிறந்துள்ளவன்) தீர்த்தன் என்று (ஒருக்கால்)அறிந்ததோ! [புளகம்-இன்பம்.]

118 பண்ணையு மாயமுந் திரளும் பாங்கரும்
கண்ணகன் றிருநகர் களிப்பு கைமிகுந்
தெண்ணெயுங் களபமு மிழுது நானமுஞ்
சுண்ணமுந் தூவின வீதி தோறுமே.

பண்ணையும் (அவர்) ஆயமும், திரளும் (அவர்) பாங்கரும் (எங்கும் நிறைந்த) கண் அகன்ற திருநகர் களிப்பு கைமிகுந்து எண்ணெயும், களபமும் இழுதும் நானமும் சுண்ணமும் வீதிதோறும் தூவின. [பண்ணை-மாதர்கூட்டம். ஆயம்-தோழியர்கூட்டம். கண்-இடம். களபம்-கலவைச்சாந்து. இழுது-நெய். நானம்-கஸ்தூரி. திரள்-ஆடவர்கூட்டம். பாங்கர்-தோழர் கூட்டம். சுண்ணம்-பரிமளப் பொடி.]

119. இத்தகை மாநக ரீரறு நாளும்
சித்த முறுங்களி யோடு சிறந்தே
தத்தமை யொன்று முணர்ந்தில தாவா
மெய்த்தவ னாமம் விதிப்ப மதித்தான்.

இத்தகை மாநகர் (மாந்தர்) ஈர் அறு நாளும் சித்தத்தில் உறும் களியோடு சிறந்து தம்தமை ஒன்றும் உணர்ந்திலர். (இப்படியிருக்க) தாவாத மெய் தவன் (ஆகிய வசிஷ்டன். அந்தக் குழந்தைகளுக்கு) நாமம் விதிப்ப மதித்தான். [தாவாத-கெடாத.]

120. கராமலை யத்தளர் கைக்கிரி யெய்த்தே
அராவணை யிற்றுயில் வோயென வந்நாள்
விராவி யளித்தருண் மெய்ப்பொ ருளுக்கே
இராம னெனப்பெய ரீய்ந்தன னன்றே.

கரா மலைய தளர்ந்த (துதிக்)கையுடைய கிரிபோன்ற கஜேந்திரன் எய்த்து 'அரா அணையில் துயில்வோய்' என்ன, அ நாள் விராவி (யானையை) அளித்து அருளிய (ஸ்ரீமந் நாராயணனாகிய) மெய் பொருளுக்கு இராமன் என பெயர் (வசிஷ்டன்) ஈந்தனன். [கரா-முதலை. அரா-பாம்பு. விராவி-வந்து. இராமன்-அழகுடையவன், இரமிக்கச் செய்பவன்.]

121. கரதல முற்றொளிர் நெல்லி கடுப்ப
விரத மறைப்பொருண் மெய்நெறி கண்ட
வரத னுதித்திட மற்றைய வொளியைப்
பரத னெனப்பெயர் பன்னின னன்றே.

விரதம் (செய்வதற்கு ஆதாரமான) மறைபொருளாகிய மெய் நெறியை, கரதலம் உற்று ஒளிரும் நெல்லிக்கனியை கடுப்ப கண்ட வரதன் உதித்திட மற்று அ ஒளியை பரதன் என பெயர் பன்னினன். [வரதன்-ஈகையாளன். பரதன்-பாரம் தாங்குபவன். விரதம்-தவம். கடுப்ப-ஒப்பாக.]

122. உலக்குனர் வஞ்சக ரும்பரு முய்ந்தார்
நிலக்கொடி யுந்துயர் நீத்தன ளிந்த
விலக்கரு மொய்ம்பின் விளங்கொளி நாமம்
இலக்குவ னென்ன விசைத்தன னன்றே.

(அரக்க) வஞ்சகர் உலக்குனர், (அதனால்) உம்பரும் உய்ந்தார். நிலக் கொடியும் துயர் நீத்தனள். இந்த விலக்க அரிய மொய்ம்புடைய விளங்கும் ஒளியின் நாமம் இலக்குவன் என்ன இசைத்தனன். [உலக்குனர்-இறந்தார். நிலக்கொடி-பூமிதேவி. இலக்குவன்-ஒளிஉடையோன்.]

123. முத்துருக் கொண்டுசெம் முளரி யலர்ந்தால்
ஒத்திருக் குமெழி லுடையவிவ் வொளியால்
எத்திருக் குங்கெடு மென்பதை யெண்ணிச்
சத்துருக் கன்னெனச் சாத்தின னாமம்.

முத்துகள் (மகவு) உருவை கொண்டு (அவ் வுருவில் முகம் வாய் கண் கை கால்கள் ஆகிய) செம்முளரி அலர்ந்ததை ஒத்து இருக்கும் எழில் உடைய இ ஒளியால் எ திருக்கும் கெடும் என்பதை எண்ணி,

(வசிஷ்டன்) சத்துருக்கன் என நாமம் சாத்தினன். [முளரி-தாமரை. திருக்கு-தீமை. சத்துருக்கன்-சத்துருவைக் கொல்வோன்.]

124. பொய்வழி யின்முனி புகலரு மறையால்
இவ்வழி பெயர்க ளிசைத்துழி யிறைவன்
கைவழி நிதியெனு நதிகலை மறையோர்
மெய்வழி யுவரி நிறைத்தன மேன்மேல்.

(நாமகரண காலத்தில்) பொய்வழி இல்லாத (வசிஷ்ட) முனி புகல்தரும் மறைப்படி இ வழி பெயர்கள் இசைத்துழி, இறைவன், கையினின்று வழியும் நிதி எனும் நதிகள் கலைவல்ல மெய் வழி நடக்கும் மறையோர் என்னும் உவரியை மேல் மேல் நிறைத்தன. [உவரி-கடல்.]

125. காவியு மொளிர்தரு கமலமு மெனவே
ஓவிய வெழிலுடை யொருவனை யலதோர்
ஆவியு முடலமு மிலதென வருளின்
மேவின னுலகுடை வேந்தர்தம் வேந்தன்.

(சரீரமாகிய) காவியும் (அதன் இடையில், கண், வாய், கை, கால்களாகிய) ஒளிர் தரும் கமலமும் என ஓவியத்தின் எழில் உடைய (ஸ்ரீராமன் ஆகிய) ஒருவனை அலது (வேறு) ஓர் ஆவியும் உடலும் இலது என உலகை உடைய வேந்தர்தம் வேந்தன் (அவனிடத்து) அருளொடு மேவினன். [காவி-நீலோத்பலம். ஓவியம்-சித்திரம்.]

126. அமிர்துகு குதலையொ டணிநடை பயிலா
திமிரம தறவரு தினகர னெனவும்
தமரம துடன்வளர் சதுமறை யெனவும்
குமரர்க ணிலமகள் குறைவற வளர்நாள்.

அமிர்தை உகும் குதலையொடு அணி நடை பயின்று, (உலகத்தின் பாபம் ஆகிய) திமிரம் அறும்படி வரும் தினகரன் எனவும், (ஓம்) என்னும் தமரம் உடன் வளர்கின்ற சதுர்மறை எனவும், நிலமகள் குறைவு அற குமரர்கள் வளர்கின்ற நாளில், [உகும்-சொரியும். குதலை-மழலைச்சொல். திமிரம்-இருள். தமரம்-ஒலி. தினகரன்-சூரியன்.]

127. சவுளமொ டுபநய விதிமுறை தருதற்
றிவளவ தெனவொரு கரைபிறி திலவா
உவள்தரு மறையினொ டொழிவறு கலையும்
தவள்மதி புனையர னிகர்முனி தரவே.

சவுளமும் உபநயமும் (வேத) விதிமுறை (அந் நால்வர்க்கும்) தரு குற்று, இ அளவுஅது என ஒருகலை பிறிது இலவாய், உவள்தரும் மறையினேடு ஒழிவு அற்ற கலையும், தவளம் மதியை (சடையில்) புனைந்த அரனை நிகர்த்த (வசிட்ட) முனி (கற்று) தர. [உவள்தரும்-தூய்மை செய்கின்ற. தவளம்-வெண்மை. அரன்-சிவன்.]

128. யானையு மிரதமு மிவுளியு முதலா
ஏனைய பிறவுமவ் வியல்பினி னடையுற்
றூனுறு படைபல சிலையொடு பயிலா
வானவர் தனிமுதல் கிளையொடு வளர.

யானையும் இரதமும் இவுளியும் முதலாக ஏனைய பிறவும் அ இயல்பினில் நடையுற்று, (பகைவர்) ஊனில் உறும் படைகள்பல சிலையொடு பயின்று வானவர்க்கு தனி முதல் (ஆகிய ஸ்ரீ ராமபிரான்) கிளையொடு வளர, [இவுளி-குதிரை. தனி-ஒப்பற்ற. கிளை-தம்பிமார்]

129. அருமறை முனிவரு மமரரு மவனித்
திருவும நகருறை செனமுந மிடரோ
டிருவினை துணிதரு மிவரினி திவணின்
றொருபொழு தகல்கில முறையென வுறுவார்.

அரியமறையை உணர்ந்த முனிவரும் அமரரும் அவனித்திருவும், நகரில் உறையும் செனமும், 'இவரினுல் நம் இடரோடு (அதற்குக் காரணமான) இருவினையும் துணிதரும் (ஆகையால்) இவண் நின்று ஒரு பொழுதும் அகல்கிலம், இது (தக்க) முறை ' என (அவ்விடத்திலேயே) உறுவார். [அவனித்திரு-பூமிதேவி.]

130. ஐயனு மிளவலு மணிநில மகடன்
செய்தவ முடைமை தெரிதர நதியும்
மைதவழ் பொழில்களு ம் வாவியு மருவி
நெய்குழ லுறுமிழை யெனநிலை திரிவார்.

ஐயனும் (இலக்குமண) இளவலும், அணிநிலமகள்தன் செய்தவம் உடைமைகளை தெரிதர, நதியும் மை தவழும் பொழில்களும் வாவியும் மருவி, நெய்கின்ற குழலில் உறும் (நூல்) இழை என (இணைபிரியாது) நிலைதிரிவார். [மை-மேகம். வாவி-தடாகம்.]

131. பரதனு மிளவலு மொருநொடி பகிரா
திரதமு மிவுளியு மிவரினு மறைநூல்
உரைதரு பொழுதினு மொழிகில ரெனையாள்
வரதனு மிளவலு மெனமரு வினரே.

என்னையாட்கொண்ட வரதனும் இளவலும் என பரதனும் (சத்ருக்கனுகிய அவன்) இளவலும் ஒருநொடி பகிராது, இரதமும் இவுளியும் இவரினும் மறைநூலை உரைதரும் பொழுதினும் (பிரிந்து) ஒழிகிலராய் மருவினர் [வரதன்-இரக்ஷகன். இவரினும்-ஏறினும்.]

132. வீரரு மிளைஞரும் வெறிபொழில் களின்வாய்
ஈரமொ டுரைதரு முனிவர ரிடைபோய்ச்
சோர்பொழு தணிநகர் துறுகுவ ரெதிர்வார்
கார்வர வலர்பயிர் பொருவுவர் களியால்.

(இராம பரதர்களாகிய) வீரரும் (இலக்ஷ்மண சத்ருக்நர்களாகிய) இளைஞரும் வெறி வீசும் பொழில்களின்வாய் ஈரமொடு உரைதரும் முனிவரர்இடைபோய் (இருந்து) சோர்பொழுதில் அணிநகர்துறுகுவர். (அப்பொழுது அவர்களை) எதிர்வார் களியால் கார் வர அலரும் பயிரை பொருவுவர். [ஈரமொடு உரைதரும்-அன்புடன் வார்த்தையாடும். சோர்பொழுது-அஸ்தமனவேளை. துறுகுவர்-புகுவார். கார்-மேகம். பொருவுவர்-ஒப்பாவார்]

133. ஏழைய ரனைவரு மிவர்தட முலைதோய்
கேழ்கிளர் மதுகையர் கிளைகளு மிளையார்
வாழிய வெனவவர் மனனுறு கடவுள்
தாழ்குவர் கவுசலை தயரத னெனவே.

(இன்னும்) ஏழையர் அனைவரும் இவர் தடம் முலையில் தோயும் கேழ்கிளர்கின்ற மதுகையரும் (அவர்) கிளைகளும் (வரும்) 'இளையார் (ஆகிய இராஜ குமாரர்கள்) வாழிய' என அவர் மனத்தில் உற்ற கடவுளை கவுசலையும் தயரதனும் என, தாழ்குவர். [கேழ்-ஒளி. மதுகையர்-வலியுடையவர்]

134. கடல்கரு முகிலொளிர் கமலம தலரா
வடவரை யுடன்வரு செயலென மறையும்
தடவுத லறிவரு தனிமுத லவனும்
புடைவரு மிளவலு மெனநிகர் புகல்வார்.

மறையும் (தன் அறிவால்) தடவுதற்கு அரிய (இராமபிரானுகிய) தனி முதலவனும் (அவனுக்கு) புடையில் வரும் (இலக்குமணன் ஆகிய) இளவலும், கடல் (அல்லது) கருமுகில் ஒளிர் கமலம்அது அலர்ந்து வடவரையுடன் வரும் செயல்என (தோன்றுகிறது) என (கண்டோர்) நிகர் புகல்வார். [வடவரை-பொன்மலை. நிகர்-உவமை.]

135 எதிர்வரு மவர்களை யெமையுடை இறைவன்
முதிர்தரு கருணையின் முகமல ரொளிரா
எதுவினை யிடரிலை யினிதினு மனையும்
மதிதரு குமரரும் வலியர்கொ லெனவே.

(தம்மைக்கண்டு மேல் சொன்னவாறு எண்ணுபவர்களாய்) எதிர் வரும் அவர்களை எமை (ஆள்) உடை இறைவன் (ஆகிய ஸ்ரீ ராமன் நோக்கி) முதிர்தரும் கருணையால் முகமாகிய மலர் ஒளிர "எது வினை? இடர் இலை? நும் மனையும் இனிது? மதிதரும் குமரரும் வலியர் கொல்?" என, (வினவ) [எது வினை-என்ன சமாச்சாரம்.]

136 அஃதைய நினையெம தரசென யுடையேம்
இஃதொரு பொருளல வெமதுயி ருடனேழ்
மகிதல முழுதையு முறுகவி மலரோன்
உகுபக லளவென வுரைநனி புரிவார்.

(அவர்கள்) "ஐய, அஃது. எமது அரசு என நின்னை உடையேமிற்கு இஃது ஒரு பொருள் அல, எமது உயிருடன் ஏழ் மகிதலம் முழுதையும் இ மலரோன் உகும்பகல் அளவு (நீ) உறுக" என நனி புரிவார், [அஃது-அப்படியே. மகிதலம்-உலகம். மலரோன் உகும் பகல் அளவு-பிரமன் இறக்கும் காலம் வரைக்கும்.]

137 இப்பரி சணிநக ருறையும் யாவரும்
மெய்ப்புகழ் புனைதர வினைய வீரர்கள்
தப்பற வடிநிழ றழுவி யேத்துற
முப்பரம் பொருளுக்கு முதல்வன் வைகுறும்.

இ பரிசு அணி நகரில் உறையும் யாவரும் (ஸ்ரீராமனை) மெய்யான புகழால் புனைதரவும், (மற்ற) இளைய வீரர்கள் தப்பு அற (அவனது) அடி நிழலை தழுவி ஏத்து உறவும், மூன்று பரம் பொருளுக்கும் முதல்வனானவன் (அந்நகரில்) வைகுறும். [பரிசு-பிரகாரம்.]

138. அரைசர்தம் பெருமக னகிலம் யாவையும்
விரைசுறு தனிக்குடை விளங்க வென்றிசேர்
முரைசொலி கறங்கிட முனிவ ரேத்துறக்
கரைசெய லரியதோர் களிப்பின் வைகு நாள்.

அரசர் தம் பொருமகன் (ஆகிய தயரத சக்கரவர்த்தி) அகிலம் யாவையும் (தன்) விரைசு உற்ற தனி குடை விளங்கவும், வென்றி சேர்ந்த முரசினது ஒலி கறங்கிடவும், முனிவர் ஏத்து உறவும், கரைசெய்யற்கு அரிதான ஓர் களிப்புக் கடலில்வைகும் நாளில், [அகிலம்-உலகம். விரைசு உறும்-பொருந்தி இருக்கின்ற.]

7. கையடைப் படலம்.

இராம லக்ஷ்மணர்களைத் தயரதன் விச்வாமித்திர
முனிவர் வசம் ஒப்புவித்த படலம்.

1. நனைவரு கற்பக நாட்டு நன்னகர்
அனைவரு மணைதர வயிர்க்குஞ் சிந்தையான்
நினையவு மரியது விசும்பி னீண்டதோர்
புனைமணி மண்டபம் பொலிய வெய்தினான்.

(களிப்புடன் வைகும் நாளில் ஒருநாள் தயரதன்), நனைகள் (அரும்பி) வரும் கற்பக (சோலையுடைய சுவர்க்க) நாட்டிலுள்ள (அமராவதிஎன்னும்) நல்நகரில் (வசிக்கும்தேவர்) அனைவரும், (இந்திரனது தொலு மண்டபமோ என்று) அணைதர அயிர்க்கும் சிந்தையால் நினையவும் அரியது விசும்பின் நீண்டது (ஆன) ஓர் மணிகளால் புனைந்த மண்டபம் பொலிய எய்தினான். [நனை-அரும்பு. அயிர்க்கும்-சந்தேகிக்கும். விசும்பு-ஆகாயம். புனைந்த-அலங்கரிக்கப்பட்ட].

2. தூயமெல் லரியணைப் பொலிந்து தோன்றினான்
சேயிரு விசும்பிடைத் திரியுஞ் சாரணர்
நாயக னிவன்கொலென் றயிர்த்து நாட்டமோர்
ஆயிர மில்லையென் றைய நீங்கினார்.

(எய்தி), தூய மெல் அரி அணையில் பொலிந்து தோன்றினான். (அப்பொழுது) சே இரு விசம்புஇடை திரியும் சாரணர் (தயரதனைக் கண்டு) '(நம்) நாயகன் (ஆகிய இந்திரன்) இவன் கொல்' என்று அயிர்த்து (பிறகு, இவனுக்கு) 'நாட்டம் ஓர் ஆயிரம் இல்லை' என்று (அறிந்து) ஐயம் நீங்கினார். [அரி அணை-சிங்காதனம். சே இரு விசும்பு-மிகவும் பெரிய ஆகாயம். சாரணர்-தேவ ஒற்றர்].

3. மடங்கல்போன் மொய்ம்பினான் முன்னர் மன்னுயிர்
அடங்கலு முலகும்வே றமைத்துத் தேவரோ
டிடங்கொணான் முகனையும் படைப்ப னீண்டெனத்
தொடங்கிய துனியுறு முனிவன் றோன்றினான்.

(அரியணை அமர்ந்த) மடங்கல்போல் மெய்ம்பினான் முன்னர், மன் உயிர் அடங்கலும் (அவைகட்கு) உலகம் வேறு அமைத்து, தேவரையும் (எவ்வுயிர்க்கும் பிறப்பு) இடமாகக் கொண்ட நான்முகனையும் ஈண்டு படைப்பன்' என (திருசங்குவின் பொருட்டு) தொடங்கிய துனி உற்ற (விச்வாமித்திர) முனிவன் தோன்றினான். [மடங்கல்-சிங்கம். மொய்ம்பினான்-பலமுடையவன். துனி-கோபம்].

4. வந்துமுனி யெய்துதலு மார்பினணி யாரம்
அந்தரத லத்திரவி யஞ்சவொளி விஞ்சக்
கந்தமல ரிற்கடவு டன்வரவு காணும்
இந்திரனெ னக்கடிதெ ழுந்தடிப ணிந்தான்.

(விச்வாமித்திர) முனி வந்து எய்துதலும், (தயரதன்) மார்பின் அணிந்த (ரத்ன) ஆரமானது அந்தரதலத்தில் (சஞ்சரிக்கும்) இரவி அஞ்சும்படி ஒளி விஞ்ச கடிது எழுந்து கந்தம் உடைய (தாமரை) மலரில் (வீற்றிருக்கும் பிரம்மன் ஆகிய) கடவுள்தன் வரவை காணும் இந்திரன் என (முனிவனது) அடியைப் பணிந்தான்.

5. பணிந்துமணி செற்றுபுகு யிற்றியவிர் பைம்பொன்
அணிந்ததவி சிட்டதி னருத்தியொ டிருத்தி
இணைந்தகம லச்சரண ருச்சனைசெய் தின்றே
துணிந்ததென் வினைத்தொடர் பெனத்தொழுது சொன்னான்.

பணிந்து, மணிகள் செற்றுபு குயிற்றி அவிர் (பொருந்திய பைம் பொன் அணிந்த தவிசை இட்டு, அதின் (முனிவனை) அருத்தியொடு இருத்தி, (அவனது) இணைந்த கமலம் ஒத்த சரணங்களுக்கு அருச்சனை செய்து 'இன்றே என் வினைத்தொடர்பு துணிந்தது' எனத் தொழுது சொன்னான். [செற்றுபு-நெருக்கி. குயிற்றி பதித்து. அவிர்-பிரகாசம். தவிசு-ஆசனம். அருத்தி-அன்பு. துணிந்தது-அற்றது].

6. நிலஞ்செய்தவ மென்றுணரி னன்றுநெடி யோயென்
நலஞ்செய்வினை யுண்டெனினு மன்றுநகர் நீயான்
வலஞ்செய்துவ ணங்கவெளி வந்தவிது மூந்தென்
குலஞ்செய்தவ மென்றினிது கூறமுனி கூறும்.

"நெடியோய், (முனி சிரேஷ்டரான) நீ, யான் வலம் செய்து வணங்க எளிதில் (இந்த) நகரின்கண் வந்த இது, நிலம் செய்ததவம் என்று உணரின் அன்று, என் நலம் செய்வினை உண்டு எனினும் அன்று. ஆகையால் முந்து என் குலம் செய்த தவம் (தான் காரணம்)" என்று (அரசன்) இனிது கூற, முனி கூறும்.

7. என்னனைய முனிவரரு மிமையவரு
மிடையூறொன் றுடைய ரானால்
பன்னகமு நகுவெள்ளிப் பனிவரையும்
பாற்கடலும் பதும பீடத்
தன்னகருங் கற்பகநாட் டணிநகரு
மணிமாட வயோத்தி யென்னும்
பொன்னகரு மல்லாது புகலுண்டோ
இகல்கடந்த புலவு வேலோய்.

(அதைக் கேட்டு முனிவன்), " இகலை கடந்த புலவு தங்கிய வேலோய், என்னை அனைய முனிவரும் இமையவரும் இடையூறு ஒன்று உடையர் ஆனால் பல நகங்களையும் (அவமதித்து) நகும் பனிபொருந்திய (சிவனது இடமாகிய) வெள்ளி வரையும், (அல்லது, விஷ்ணுவின் இடமாகிய) பால் கடலும், (அல்லது) பதும பீடத்தன் (ஆகிய பிரமனது) நகரும், (அல்லது, இந்திரனது அமராவதி என்னும்) கற்பக நாட்டு அணிநகரும் (அவ்விடங்களிலெல்லாம் சென்றும் எம் இடையூறு விலகாதாயின்) மணி மாட அயோத்தி என்னும் பொன் நகரும் அல்லாது (வேறு) புகல் (இடம்) உண்டோ!" (என்றனன்). [இகல்-பகைவர். நகம்-மலை.]

8. இன்றளிர்க்கற் பகநறுந்தே னிடைதுளிக்கு
நிழலிருக்கை யிழந்து போந்து
நின்றளிர்க்குந் தனிக்குடைக்கீ ழதினொதுங்கிக்
குறையிரந்து நிற்ப நோக்கிக்
குன்றளிக்குங் குலமணித்தோட் சம்பரனைக்
குலத்தோடுந் தொலைத்து நீகொண்
டன்றளித்த வரசன்றோ புரந்தரனின்
றாள்கின்ற தரச வென்றான்.

" அரச, (புரந்தரன்) இனிய தளிர்களையுடைய கற்பகம் நறும் தேனை இடை துளிக்கும் நிழலில் (அரசு) இருக்கையை இழந்து போந்து, நின் தளிர்க்கும் தனி குடைக்கீழ் அதின் ஒதுங்கி (தன்) குறையை இரந்து நிற்ப, (நீ) நோக்கி, குன்றுகள் அளிக்கும் மணி குலங்கள் (அலங்கரிக்கப்பெற்ற) தோளை உடைய சம்பரனை (அவன்) குலத்தோடும் (கொன்று) தொலைத்து நீ (தேவலோகத்தை) கொண்டு (பிறகு) அன்று அளித்த அரசு அன்றோ (அவ்விந்திரன்) இன்று ஆள்கின்றது!" என்றான் (விச்வாமித்திரமுனிவன்). [நறும்-வாசனை பொருந்திய. தளிர்க்கும்-செழிக்கின்ற. புரந்தரன்-இந்திரன்].

9. உரைசெய்யு மளவிலவன் முகநோக்கி
யுள்ளத்தி னொருவ ராலும்
கரைசெய்ய வரியதொரு பேருவகைக்
கடல்பெருகக் கரங்கள் கூப்பி
அரைசெய்தி யிருந்தபய னெய்தினன்மற்
றினிச்செய்வ தருளு கென்று
முரைசெய்து கடைத்தலையான் முன்மொழியப்
பின்மொழியு முனிவ னங்கே.

(அவ்விதம் விச்வாமித்திரன்) உரை செய்யும் அளவில் அவன் முகத்தை நோக்கி, (தயரதன்) உள்ளத்தில் ஒருவராலும் கரை

செய்ய அரியது (ஆன) ஒரு பேர் உவகையாகிய கடல் பெருக கரங்களை கூப்பி "(நான்) அரசு எய்தி இருந்த பயனை (உன் போன்றவர் வந்து அருள்செய்ய இன்று) எய்தினன். மற்று, இனி (நான்) செய்வதை (சொல்லி) அருளுக" என்று முரசு எய்தும் கடைத்தலையான் (ஆகிய) தயரதன் முன் மொழிய, ஆங்கு முனிவன் பின் மொழியும். [முரசு எய்தும் கடைத்தலையான்-பேரிகைகள் முழங்கும் தலைவாயிலை உடையவன்.]

10. தருவனத்துள் யானியற்றுந் தவவேள்விக்
கிடையூருய்த் தவஞ்செய் வோர்கள்
வெருவரச்சென் றடைகாம வெகுளியென
நிருதரிடை விலக்கா வண்ணஞ்
செருமுகத்துக் காத்தியென நின்சிறவர்
நால்வரினுங் கரிய செம்மல்
ஒருவனைத்தந் திடுதியென வுயிரிரக்குங்
கொடுங்கூற்றி னுளையச் சொன்னான்.

(அதற்கு விச்வாமித்திரன்) "தருக்கள் (அடர்ந்த) வனத்துள் யான் இயற்றும் தவத்திற்கும் வேள்விக்கும் இடையூருய், தவம் செய்வோர்கள் வெருவர சென்று அடையும் காமம் வெகுளி என, நிருதர் இடை விலக்காத வண்ணம் 'செருமுகத்து காத்தி' என (கட்டளையிட்டு) நின் சிறவர் நால்வரினும் (இராமனாகிய) கரிய செம்மல் ஒருவனை (என்னுடன் அனுப்பி) தந்து இடு" என உயிரை இரக்கும் கொடும் கூற்றைபோல் (தயரதன் மனம்) உளைய சொன்னான். [தரு-விருக்ஷம். வெருவர-அஞ்ச. நிருதர்-அரக்கர். செருமுகம்-போர்முகம். செம்மல்-புதல்வன். இரக்கும்-யாசிக்கும். கூற்று-யமன்.]

குறிப்பு:—காமம் வெகுளி மயக்கம் ஆகிய மும்மலங்களும் தவம் செய்வோர்க்கு உட்பகையாயிருந்து இடையூறு செய்கின்றன. நிருதரோ வெளிப்பகையாய் நின்று யாகத்தை அழிக்கின்றனர். நிருதருக்கு உதாரணமாய் உட்பகை மலங்களை எடுத்துக்காட்ட வந்த விச்வாமித்திரன் மயக்கத்தை யொழித்து மற்றைய இரண்டையுமே கூறியதற்குச் சுயானுபவ நியாயமே காரணமாதல் வேண்டும். மேனகைபால் காமத்தாலும் திருசங்குவின் நிமித்தம் கோபத்தாலும் தபசைக் கொட்டியுள்ள கோசிகன்மாட்டு அவ்வை இரண்டுமே நாமுதல் நிற்பது இயற்கை. மயக்கம் என்கிற பொல்லாக் காட்சியால் இம் முனிவன் பீடிக்கப்பட்டதாக எங்கும் தெரியவரவில்லை. சுவாகு மாரீசன் இருவரைக்

கருதி முனிவர் காமவெகுளியைக் கூறினர் என்று கொள்ப வர் இரண்டிற்கும் பொதுப் பிறப்பிடமாகிய தாடகை என் னும் மயக்கத்தைக் கூறாது விடுவது இயல்பன்று என்பதை மறத்தல் ஆகாது.

11. எண்ணிலா வருந்தவத்தோ னியம்பியசொல்
மருமத்தி னெறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையிற் கனனுழைந்தா
லெனச்செவியிற் புகுதலோடும்
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த
ஆருயிர்நின் றூச லாடக்
கண்ணிலான் பெற்றிழந்தா னெனவுழந்தான்
கடுந்துயரங் கால வேலான்.

(இராமனைக் கொடு என்று) எண் இலா அரிய தவத்தோன் இயம்பிய சொல் மருமத்தில் எறிவேல் பாய்ந்த புண்ணுல் ஆகும் பெரும் புழையில் கனல் நுழைந்தால் என (அரசன்) செவியில் புகுதலோடும், உள்ளத்தில் நிலாவிய துயரமானது பிடித்து உந்த (அவனது) ஆர் உயிர் (போவதும் வருவதுமாய்) நின்று ஊசல் ஆட, (பிறவி முதல்) கண்ணிலான் (ஒருவன் சிறிது நேரம் கண்ணை) பெற்று (பிரபஞ்சக் காக்ஷியின் வைபவத்தை அனுபவிக்கா முன் னம், மறுபடி அதை) இழந்தான் என்ன, (பகைவர்க்கு) காலன் போன்ற வேலான் (ஆகிய தயரதன்) கடும் துயரம் உழந்தான். [மருமம்-மார்பு. புழை-துவாரம்.]

குறிப்பு:—எண்ணிலா என்பதை (1) எண்+இலா-கணக் கில்லாத அரும் தவத்தோன் என்றும் (2) எள்+நிலா-அருளிலோ, சபித்தலிலோ எள்ளளவேனும் நிறுத்தி வைக்காத அரும் தவத்தோன் என்றும் (3) எண்ணில்+ஆ-யோசிக்கு மிடத்தில் வசிட்டனுடன் வெகுண்டு காமதேனுவாகிய ஒரு ஆ வின் நிமித்தம் செய்யப் புகுந்த அரும் தவத்தோன் என்றும், பொருள்படுத்திக் கொள்ளலாம். "பெருந்தவன், கோபமுள்ளவன், நினைத்ததை முடிப்போன் இம்முனிவன். ஆகையால் அவன் வேண்டியதை மறுத்து நாம் பிழைத்தற் கில்லை" என்று தயரதன் மனதில் ஒரு எண்ணம் அந்தச் சந்தர்ப்பத்தில் அவனை அறியாமலே உறுத்திக்கொண் டிருப் பது இயல்பு. எனவே இம்மூன்று பொருள்களையும் அத் தொடரிற்கு ஒருங்கே கொள்வதும் பிழையாகாது.

12\. தொடையூற்றுந் தேன்றுளிக்கு நறுந்தாரா
னொருவண்ணந் துயர நீங்கிப்
படையூற்ற மிலன்சிறிய னிவன்பெரியோய்
பணியிதுவேற் பனிநீர்க் கங்கை
புடையூற்றுஞ் சடையானும் நான்முகனும்
புரந்தரனும் புகுந்து செய்யும்
இடையூற்றுக் கிடையூறு யான்காப்பன்
பெருவேள்விக் கெழுக வென்றான்.

தொடையாக ஊற்றும் தேன் துளிக்கும் நறும் தாரான் (ஆகிய தயரதன்) ஒரு வண்ணம் துயரம்நீங்கி (முனிவனைப்பார்த்து), "பெரியோய், (இராமனாகிய) இவன் படை ஊற்றம் இலன், (மேலும்) சிறியன். (ஆதலால் அவனை விடுத்து நீ விதிக்கும்) பணி இதுவேல், (நிருபர் அன்றி சிவனாகிய) பனி நீர்கங்கை புடையில் ஊற்றும் சடையானும், (பிரமனாகிய) நான்முகனும், புரந்தரனும் புகுந்து (யாகத்தில்) செய்யும் இடையுற்றுக்கும் இடையூறாய் யானே காப்பன். பெரும் வேள்விக்கு எழுக" என்றான். [தாரான்-மாலையை அணிந்தவன். ஊற்றம்-பயிர்சி. புடை-பக்கம்],

குறிப்பு :—எஞ்ஞேவை விஷ்ணு : என்பது வேதவாக்கியமாதலால் தனக்குத் தானே இடையூறாக விஷ்ணு வாரான் என்று எண்ணித் தயரதன் அவனையும் கூட்டிச் சொல்லாது விடுத்ததாகக் கொள்ளல் வேண்டும்.

13\. என்றனனென் றலுமுனிவோ டெழுந்தனன்மண்
படைத்தமுனி யிறுதிக் காலம்
அன்றெனவா மெனவிமையோ ரயிர்த்தனர்மேல்
வெயில்கரந்த தங்கு மிங்கும்
நின்றனவுந் திரிந்தனமீ நிவந்தகொழுங்
கடைப்புருவ நெற்றி முற்றச்
சென்றனவந் ததுநகையுஞ் சிவந்தனகண்
ணிருண்டனபோய்த் திசைக ளெல்லாம்.

என்றனன் (தயரதன்) என்றலோடும் (விச்வாமித்திரன்) முனிவோடு எழுந்தனன், (அப்பொழுது) இமையோர், (பிரமனாகிய) மண்ணைப் படைத்த முனியின் இறுதி காலம் 'அன்று' எனவும் 'ஆகும்' எனவும் அயிர்த்தனர். வெயில் மேல் கரந்தது. நின்றனவும் அங்கும் இங்கும் திரிந்தன. மீ நிவந்த கொழும் கடை புருவம் நெற்றி முற்ற சென்றன. நகையும் வந்தது. கண்கள் சிவந்தன. (கோவத் தீயிலுண்டாகிய புகை) போய் திசைகள் எல்லாம் இருண்

டன. [முனிவு-கோபம். வெயில்-சூரியன். கரந்தது-மறைந்தது. மீ நிவந்த-மேல் ஏறிய.]

14. கறுத்த மாமுனி கருத்தை யுன்னிநீ
பொறுத்தி யென்றவற் புகன்று நின்மகற்
குறுத்த லாகலா வுறுதி யெய்துநாள்
மறுத்தியோ வெனு வசிட்டன் கூறுவான்.

(அப்பொழுது, அருகிருந்த) வசிட்டன், கறுத்த மா (விச்வாமித்திர) முனியின் கருத்தை உன்னி அவர்கு 'நீ பொறுத்தி என்று' புகன்று, (தயரதனைப் பார்த்து) 'நின் மகற்கு உறுத்தல் ஆகலா உறுதி (பொருள்கள்) எய்தும் நாளை (விச்வாமித்திரனுடன் அனுப்பாது) மறுத்தியோ' எனு கூறுவான். [கறுத்த-கோபித்த. உறுத்தல் ஆகலா உறுதி-மற்றவரால் செய்வித்தற்கு அரிய நலங்கள்.]

15. பெய்யு மாரியாற் பெருகு வெள்ளம்போய்
மொய்கொள் வேலைவாய் முடுகு மாறுபோல்
ஐய நின்மகற் களவில் விஞ்சைவந்
தெய்து காலமின் றெதிர்ந்த தென்னவே.

(வசிட்டன் பின்னும்), "பெய்யும் மாரியால் பெருகும் வெள்ளம் போய் (அலைகள்) மொய் கொண்ட வேலைவாய் முடுகுமாறு போல், ஐய, நின் மகற்கு அளவு இல்லாத விஞ்சைகள் வந்து எய்து காலம் இன்று எதிர்ந்தது" என்ன. [விஞ்சை-வித்தை.]

குறிப்பு :—கடல் நீரே மழையாகப் பெய்து ஆறாக ஓடி மறுபடி கடலினிடமே அடைவதுபோல் சகல வித்தைகளுக்கும் மூலப்பொருளான இராமனிடத்திலேயே மறுபடி விசுவாமித்திரன் வழியாக அவ் வித்தைகள் சென்றடையும் என்பது வசிட்டர் கருத்து.

16. குருவின் வாசகங் கொண்டு கொற்றவன்
திருவின் கேள்வனைக் கொணர்மின் சென்றென
வருக வென்றன னென்ற லோடும்வந்
தருகு சார்ந்தன னறிவி னும்பரான்.

கொற்றவன் (வசிட்ட) குருவின் வாசகத்தை (ஏற்றுக்) கொண்டு (ஏவலாளரை நோக்கி) 'சென்று திருவின் கேள்வனை கொணர்மின்' என, (அவர்கள் இராமனிடம் போய்) '(உன் தந்தை) வருக என்றனன்' என்றலோடும், (வேதம் முதலியவற்றின்) அறிவிற்கும் உம்பரான் (ஆகிய இராமன்) வந்து (தந்தையின்) அருகு சார்ந்தனன். [உம்பரான்-எட்டாத மேலானவன்.]

குறிப்பு :—திருவின் கேள்வன், என்பதைத் தயரதன் 'அழகிற்குடையவன்' என்னும் பொருளில் உபயோகித்துளானாயினும், விச்வாமித்திரனுடன் செல்வதால் இராமன் இலக்ஷ்மிக்கு நாயகன் ஆகப்போகின்றானதால் தன்னை யறியாமலே இவ்விரு பொருளும் கொள்ளத்தயரதன் கூறியது ஆங்கிலத்தில் 'Dramatic irony' என்னும் அலங்காரத்தின் பால் படும்.

17. வந்த நம்பியைத் தம்பி தன்னொடு
முந்தை நான்மறை முனிக்குக் காட்டிநற்
றந்தை நீதனித் தாயுநீ யிவர்க்
கெந்தை தந்தன னியைந்த செய்கென்றான்.

(தயரதன்), வந்த நம்பியை (அவன்) தம்பி தன்னொடும் முந்தை நால் மறை (வல்ல விச்வாமித்திர) முனிக்கு காட்டி "எந்தை, இவர்க்கு நீ நல் தந்தை, தாயும் நீ, (உனது இஷ்டப் பிரகாரம் அவர்களை உன்னிடம்) தந்தனன். (உனக்கு) இயைந்த செய்க" என்றான்.

குறிப்பு :—இராமனும் இலக்குமணனும், இழைபெனநிலை திரிவாராகையால், தம்பி அழைக்காமல் வந்ததும், அவனைத் தயரதன் விசுவாமித்திரனுக்குக் கேழ்க்காமல் கொடுத்ததும் வியப்பன்று.

18. கொடுத்த மைந்தரைக் கொண்டு சிந்தைமுந்
தெடுத்த சீற்றம்விட் டினிது வாழ்த்திமேல்
அடுத்த வேள்விபோய் முடித்து நாமெனா
நடத்தன் மேயினா னவைக்க ணீங்கினான்.

நவைக்கண் (நின்று) நீங்கினான் (ஆகிய விச்வாமித்திரன்) கொடுத்த மைந்தரை (பெற்று) கொண்டு, முந்து (தன்) சிந்தையில் எடுத்த சீற்றத்தைவிட்டு (அனைவரையும்) இனிது வாழ்த்தி, மேல், 'நாம் அடுத்த வேள்வியை போய் முடித்தும்' எனா (அவைக்கண் நீங்கி) நடத்தல் மேவினான். [நவை-குற்றம். சீற்றம்-கோபம்.]

19. வென்றி வாள்புடை விசித்து மெய்ம்மைபோல்
என்றுந் தேய்வுறாத் தூணி யார்த்திரு
குன்று போன்றுயர் தோளிற் கொற்றவில்
ஒன்று தாங்கினா னுலகந் தாங்கினான்.

(அப்பொழுது); உலகத்தை (பிரளய காலத்தில் வயிற்றுள் வைத்து) தாங்கினான் (ஆகிய ஸ்ரீராமன்) வென்றி பொருந்திய

வாளை புடை விசித்து, மெய்ம்மையை போல் என்றும் தேய்வு உறாத (அம்புறா) தூணியை ஆர்த்து, இரு குன்று போன்று உயர்ந்த தோளில் கொற்றம் பொருந்திய வில் ஒன்றும் தாங்கினான். [வென்றி, கொற்றம்-சயம். விசித்து, ஆர்த்து-கட்டி.]

20. அன்ன தம்பியுந் தானு மையனும்
மன்ன னின்னுயிர் வழிக்கொண் டாலெனச்
சொன்ன மாதவற் றொடர்ந்து சாயைபோல்
பொன்னின் மாநகர்ப் புரிசை நீங்கினான்.

அன்ன (போர்க்கோலம் கொண்ட) தம்பியும் தானும் (தம்) ஐயன் ஆகும் மன்னனது இனிய உயிர் வழிக்கொண்டால் என, சொன்ன(நிறமான) மாதவனை தொடர்ந்து (அவனது) சாயைபோல் பொன்னால் ஆகிய (அந்த) மா நகரத்தின் புரிசையை நீங்கினான். [ஐயன்-தந்தை. சொன்னம்-பொன். புரிசை-மதில்.]

21. வரங்கண் மாசறத் தவஞ்செய் தோர்கள்வாழ்
புரங்க ளோரிலா நகரநீங் கிப்போய்
அரங்கி னாடுவார் சிலம்பி னன்னநின்
றிரங்கு வார்புனற் சரயு வெய்தினார்.

(சென்ற மூவரும்), மாசு அற தவம் செய்தோர்கள் (பெற்ற) வரங்கள் (பலனாக) வாழும் (வைகுண்டம் கைலாசம் அமராவதி போன்ற) புரங்களும் நேர் (ஆவது) இல்லாத (அயோத்தி) நகரை நீங்கி போய், அரங்கில் ஆடுவார் சிலம்புபோல் நின்று அன்னம் இரங்கும் வார் புனல் சரயு (நதியை) எய்தினார்.

22. கரும்பு கால்பொரக் கமுகின் வார்ந்ததேன்
வரம்பை மீதிடு மருத வேலிவாய்
அரும்பு கொங்கையா ரம்மெ லோதிபோல்
சுரும்பு வாழ்வதோர் சோலை நண்ணினார்.

(பிறகு அவர்)கரும்புகள் கால்ஆல் பொரகமுகினிலிருந்து வார்ந்த தேன் வரம்பின் மீது இடும் மருத வேலிவாய், (மூகை போல்) அரும்பும் கொங்கையர்ரது அம்மெல் ஓதிபோல் சுரும்புகள் வாழ்வதாகிய ஓர் சோலையை நண்ணினார். [கால் பொர-காற்றால் மோத. அம்-அழகிய. ஓதி-கூந்தல். சுரும்பு-வண்டு.]

23. தாழு மாமழை தழுவு நெற்றியால்
சூழி யானைபோற் றோன்று மால்வரைப்
பாழி மாமுகட் டுச்சி பச்சைமா
ஏழு மேறப்போ யாறு மேறினார்.

தாழும் மா மழைகள் தழுவும் நெற்றியால் சூழி அணிந்த யானை போல் தோன்றும் (உலகம்) மாலை (அடைவதற்குக் காரணமாகிய) வரையின் மா முகடின் உச்சியில் (சூரியனுடைய) பாழி பொருந்திய பச்சை மா எழும் ஏற (அப்பொழுது இவர்களும்) போய் ஆறும் ஏறினர். [தாழும்-தங்கும். சூழி-முகபடாம். மால்-கருமை, இருள். மால்வரை-அஸ்தமனகிரி. பாழி-வலிமை].

24. தேவு மாதவற் றொழுது தேவர்தம்
நாவு ளாகுதி நயக்கும் வேள்விவாய்த்
தாவு மாபுகை தழுவு சோலைகண்
டியாவ தீதென்றா னெவர்க்கு மேலுளான்.

(அக்கரை சென்றதும்), தேவர்தம் நாவுள் ஆகுதி நயக்கம் வேள்வி வாயினின்று தாவும் மா புகை தழுவும் சோலையைகண்டு, எவர்க்கும் மேல் உளான் (ஆகிய இராமன்) தேவும் மாதமனை தொழுது 'இது யாவது' என்றான். [தேவும்-தெய்வதன்மை பொருந்திய.] யாக குண்டத்தைத் தேவர்களது வாயாகவும், அக்கினியை அவர்கள் நாவாகவும் இச் செய்யுளில் கொள்ளல் வேண்டும்.

---

8. தாடகை வதைப் படலம்.

விச்வாமித்திரன் காமனாசிரமத்தின் விருத்தாந்தத்தைக் கூறுகின்றார்.

1. திங்கண்மே வுஞ்சடைத் தேவன்மேன் மாரவேள்
இங்குநின் றெய்யவும் மெரிதரும் நுதல்விழிப்
பொங்குகோ பஞ்சுடப் பூளைவீ யன்னதன்
அங்கம்வெந் தன்றுதொட் டநங்கனே யாயினான்.

(பரமசிவனாகிய) "திங்கள் மேவும் சடையையுடைய தேவன் மேல் மாரவேள் இங்கு நின்று (புஷ்பபாணங்களை) எய்யவும், எரியை தரும் நுதலில் உள்ள விழியில் பொங்கும் கோபம் சுட (மாரவேள்) பூளை வீ அன்ன தன் அங்கம் வெந்து அன்று தொட்டு அநங்கனே ஆயினான்." [திங்கள்-சந்திரன். மாரவேள்-மன்மதன். எரி-நெருப்பு. நுதல்-நெற்றி. பூளைவீ-பூளைப்பூ.]

2. வாரணத் துரிவையான் மதனனைச் சினவுநாள்
ஈரமற் றங்கமிங் குகுதலா லிவணெலாம்
ஆரணத் துறையுளா யங்கநா டிதுவுமக்
காரணக் குறியுடைக் காமனாச் சிரமமே.

ஆரணத்தை உறை (இடமாக) உள்ளாய், வாரணத்தின் உரிவையான் (ஆகியபரமசிவன்) மதனனை சினந்த (அந்த) நாள், (மன்மதன்) ஈரம் அற்று இங்கு உகுதலால் இவண் எலாம் அங்கநாடு (என்று வழங்கப்படும்). (சோலையாகிய) இதுவும் அ காரணத்தை குறியாக உடைத்து காமன் ஆசிரமம் (என்று வழங்கப்படும்)." [ஆரணம்-வேதம். வாரணத்து உரிவையான்-யானைத்தோல் போர்த்தவன்].

3. பற்றவா வேரொடும் பசையறப் பிறவிபோய்
முற்றவா லுணர்மேன் முடுகினா ரறிவுசென்
றற்றவா னவனிருந் தியோகுசெய் தனனெனிற்
சொற்றவா மளவதோ மற்றிதன் றூய்மையே.

பற்று அவா (இரண்டும்) வேரொடும் பசை அற (அதனால்) பிறவி போய் முற்ற (ஏதுவாகிய) வால் உணர்வின் மேல் (கருத்தை) முடுகினார் (ஆகிய ஞானிகளது) அறிவிற்குள் சென்று உற்ற (பரமசிவனாகிய) வானவனே, (இங்கு) இருந்து யோகு செய்தனன் என்னில், (காமனாசிரமம் என்கிற) இதன் தூய்மை (ஒருவரால்) சொற்ற ஆகும் அளவதோ." [வால்-மெய். யோகு-யோகம். சொற்ற-சொல்ல].

அம்மூவரும் காமனாசிரமத்தை விட்டகன்று ஒரு பாலைநிலத்தை அடைந்தார்.

4. என்றவந் தணனியம் பலும்வியந் தவ்வயிற்
சென்றுவந் தெதிரெழுஞ் செந்நெறிச் செல்வரோ
டன்றுறைந் தலர்கதிர்ப் பரிதிமண் டிலமகன்
குன்றினின் றிவரவோர் சுடுசுரங் குறுகினார்.

என்று அ அந்தணன் இயம்பலும் (சிறுவர்) வியந்து அ வயின் சென்று, உவந்து (இவர்களை) எதிர் (கொண்டு) எழும் செம் நெறி செல்வரோடு அன்று உறைந்து, (மறுநாள்) அலர்ந்த கதிர்களுடன் கூடிய பரிதிமண்டிலமகன் (அதாவது சூரியன்), (உதயகிரி) குன்றினின்று இவர, (இம்மூவரும்) ஓர் சுடும் சுரத்தை குறுகினார். [செந்நெறிச் செல்வர்-சன்மார்க்க முனிவர். இவர-ஏற. சுரம்-பாலைநிலம்].

இதுமுதல் 16-வது செய்யுள் வரையிலும் பாலைநிலவர்ணனை.

5. பரிதிவா னவனிலம் பசையறப் பருகுவான்
விருதுமேற் கொண்டுலாம் வேனிலே யல்லதோர்
இருதுவே றின்மையா லெரிசுடர்க் கடவுளுங்
கருதின்வே முள்ளமுங் காணின்வே நயனமும்.

(அந்தப் பாலை நிலத்தில்) பரிதிவானவன் நிலம் பசை அற (அதன் கண் உள்ள ஈரத்தை எல்லாம்) பருக விருது மேல் கொண்டு உலா

வும் வேனில் காலமே அல்லாது வேறு ஓர் இருதுவும் இன்மையால், (வெப்பம் எப்படி இருக்கிறதென்றால்) எரிசுடர்க்கடவுளும் (அந்தப் பாலைநிலத்தைத் தன் மனதில்) கருதின் உள்ளமும் வேகும், காணின் (அவன்) நயனமும் வேகும். [விருது-வெற்றிச்சின்னம். இருது-பருவம். எரிசுடர்க்கடவுள்-அக்கினிதேவன்.]

6. படியின்மேல் வெம்மையைப் பகரினும் பகரும்நா
முடியவே முடியமூ டிருளும்வான் முகடும்வேம்
விடியுமேல் வெயிலும்வே மழையும்வே மின்னினோ
டிடியும்வே மென்னில்வே றியாவைவே வாதவே.

(அந்தப்பாலை), படியின் மேல் (உள்ள) வெம்மையை (நாம்) பகரினும் பகரும் நா முடிய வேகும். (உலகம்) முடிய மூடும் இருளும் வான் முகடும் வேகும். (இருள் ஒழிந்து) விடியுமேல் வெயிலும் வேகும். மழையும் வேகும். மின்னின் ஓடு இடியும் வேகும். என்னில், வேறு வேவாதவை யாவையே! [படி-நிலம். நா-நாக்கு.]

7. விஞ்சுவான் மழையின்மே லம்பும்வே லும்படச்
செஞ்சவே செருமுகத் தன்றியே திறனிலா
வஞ்சர்தீ வினைகளான் மானமா மணியிழந்து
அஞ்சினார் நெஞ்சுபோ லென்றுமா றுதரோ.

வான் (பெய்து) விஞ்சும் மழைக்கு மேலாக அம்பும் வேலும்பட செருமுகத்தில் செஞ்சவே (தோல்வியடைதல்) அன்றியே, (போர் செய்யும்) திறன் இல்லா வஞ்சர்களுடைய தீ வினைகளால் மானம் ஆகிய மணியை இழந்து அஞ்சினவர் நெஞ்சுபோல் (அப்பாலை நிலம்) என்றும் (கொதிப்பு) ஆறாது. [வான்-மேகம். விஞ்சும்-மிகும். செரு-போர். அஞ்சினவர்-தோல்வியடைந்தவர்.]

8. பேய்பிளந் தொக்கநின் றுலர்பெருங் கள்ளியின்
தாய்பிளந் துக்ககா ரகில்களுந் தழையிலா
வேய்பிளந் துக்கவெண் டரளமும் விடவரா
வாய்பிளந் துக்கசெம் மணியுமே வனமெலாம்.

பேய்கள் பிளந்ததை ஒக்க நின்று உலர்கின்ற பெரும் கள்ளியின் தாய் பிளந்து உக்க கார் அகில்களும், தழை இல்லாத வேய் பிளந்து உக்க வெண் தரளமும், விடம் உடைய அரா வாய் பிளந்து உக்க செம்மணியுமே (அந்தப் பாலை) வனம் எலாம் (கிடந்தன). [உக்க-உகுத்த. வேய்-மூங்கில். தரளம்-முத்து. அரா-பாம்பு.]

9. பாருமோ டாதுநீ டாதெனும் பாலதே
சூருமோ டாதுகூ டாதரோ சூரியன்
தேருமோ டாதுமா மாகமீ தேறிநேர்
காருமோ டாதுநீள் காலுமோ டாதரோ.

(இன்னும் அதன் வெம்மையைச் சொல்லப்புகின்) பாரும் ஓடாது (இன்னும் காலம்) நீடாது எனும் பாலது. சூரும் ஓடாது (இனி அவ்விடம் இருக்க) கூடாது. மா மாகம் மீது எறி (அதற்கு நேர்) சூரியனது தேரும் ஓடாது. காரும் ஓடாது. நீண்ட காலும்ஓடாது. [சூர்-துர்க்கை. மாகம்-ஆகாயம். கார்-மேகம். கால்-காற்று].

10. கண்கிழித் துமிழ்விடக் கனலரா வரசுகார்
விண்கிழித் தொளிருமின் னனையபன் மணிவெயில்
மண்கிழித் திடவெழுஞ் சுடர்க்கண்மண் மகளுடல்
புண்கிழித் திடவெழுங் குருதியே போலுமே.

விடமாகிய கனலை கண்கிழித்து உமிழும் (திட்டிவிடம் என்னும்) அராஅரசினுடைய விண்ணில் கார்களை கிழித்து ஒளிரும் மின் அனைய பல் மணிகளது, மண் கிழிந்திட (அப்பிளப்புகளின்று)எழும் வெயில் சுடர்களானவை, மண்மகளின் உடலில் உள்ள புண் கிழித்து இட எழும் குருதியை மானும். [வெயில்-பிரகாசம். மண்மகள்-பூமாதேவி. குருதி-இரத்தம்.]

11. புழுங்குவெம் பசியொடு புரளும் பேரரா
விழுங்கவந் தெதிரெதிர் விரித்த வாயின்வாய்
முழங்குதிண் கரிபுகு முடுகி மீமிசை
வழங்குவெங் கதிர்சுட மறைவு தேடியே.

மீமிசை வழங்கும் (சூரியனது) வெம் கதிர் சுட (அதற்கு ஆற்றாமல்) முழங்கும் திண் கரிகள் மறைவு தேடி, புழுங்கும் வெம்பசியொடு புரளும் பெரிய அராக்கள் எதிர் எதிர் விரித்த வாயின்வாய் (அவை) விழுங்க முடுகி வந்து புகும். [வாயின்வாய்-வாயினிடத்தில்.]

12. ஏகவெங் கனலர சிருந்த காட்டினில்
காகமுங் கரிகளுங் கரிந்து சாம்பின
மாகவெங் கனலெனும் வடவைத் தீச்சுட
மேகமுங் கரிந்திடை வீழ்ந்த போலுமே.

(வேறு ஒப்பில்லாது) ஏகமான கனல்அரசு (வீற்று) இருந்த (அந்தப் பாலை) காட்டினில் காகமும் கரிகளும் கரிந்து சாம்பின. (அவை) மாகம் (உள்ள) வடவைத்தீ எனும் வெம் கனல் சுட மேகமும் கரிந்து (மண்) இடை வீழ்ந்த போலும். [கனல்-அக்கினி. வடவைத்தீ-கடலில் இருக்கும் ஊழித்தீ.]

13. கானகத் தியங்கிய கழுதின் றேர்க்குலம்
தானகத் தெழுதலாற் றலைக்கொண் டோடிப்போய்
மேனிமிர்ந் தெழுந்திடின் விசும்பும் வேமெனா
வானவர்க் கிரங்கிநீர் வளைந்த தொத்ததே.

(அந்தப் பாலை) கானகத்தில் இயங்கிய கழுதின் தேர்க்குலம், (தீ) தான் (அப் பாலையின்) அகத்தில் எழுதலால் தலை கொண்டு ஓடிப் போய் மேல் நிமிர்ந்து எழுந்திடின் விசும்பும் வேகும் என (மதித்து) வானவர்க்கு இரங்கி (விசும்பைச் சுற்றி) நீர் வளைந்தது ஒத்தது. [கழுதின் தேர்-கானல் தேர், மசரதம், கானல்நீர், பேய்த்தேர் Mirage-வெப்பத்தால் எழும் நீராவி ஆகாயத்தில் நீர் நிலைபோல் காணப்படும் பாலைக்குரிய ஒரு பொய்த்தோற்றம்.]

14. ஏய்ந்தவக் கனலிடை யெழுந்த கானற்றேர்
காய்ந்தவக் கடுவனங் காக்கும் வேனிலின்
வேந்தனுக் கரசுவீற் றிருக்கச் செய்ததோர்
பாய்ந்தபொற் காலுடைப் பளிக்குப் பீடமே.

ஏய்ந்த அ கனல் இடை எழுந்த கானல்தேர் ஆனது, காய்ந்த அ கடும் வனத்தை காக்கும் வேனில் ஆகிய வேந்தனுக்கு அரசு வீற்றிருக்க செய்த ஓர் (தரையில்) பாய்ந்த (தீக்கொழுந்தாகிய) பொன் கால்களை உடைய பளிங்கு பீடம் (ஒக்கும்). [ஏய்ந்த-நிறைந்த].

15. தாவரு மிருவினை செற்றுத் தள்ளரு
மூவகைப் பகையரண் கடந்து முத்தியில்
போவது புரிபவர் மனமும் பொன்விலைப்
பாவையர் மனமும்போற் பசையு மற்றதே.

(கடந்து) தாவுதற்கு அரிய (பாபம் புண்ணியம் என்கிற) இரு வினைகளை செற்று (தகர்த்து) தள்ளுதற்கு அரிய (காமம் வெகுளி மயக்கம் என்கிற) மூன்றுவகை பகை அரண்களை கடந்து முத்தியில் போவதை புரிபவர்களது மனம் போலவும், பொன் விலை (பெற்றுத் தம் போகத்தை விற்கும் பரத்தை) பாவையர்களது மனம் போலவும் (அந்நிலம்) பசை அற்றது (ஆகி இருந்தது). [புரிபவர்-விரும்புபவர். பசை-பற்று, அன்பு.]

16. பொரிபரற் படர்நிலம் பொடிந்து கீழுற
விரிதலிற் பெருவழி விளங்கித் தோன்றலால்
அரிமணிப் பணத்தரா வரசர் நாட்டினும்
எரிகதிர்க் கினிதுபுக் கியங்க லாயதே.

(வெயிலால்) பொரிந்த பரல் (கற்கள்) படர்ந்த (அந்த) நிலம் பொடிந்து கீழ் உற விரிதலில் பெரு வழி விளங்கி தோன்றலால் அரி மணிகள் பொருந்திய பணத்தை உடைய அரா அரசர் (நாக) நாட்டினும் (சூரியனது) எரிகின்ற கதிர்க்கு இனிது புக்கு இயங்கல் ஆயது. [அரி-அழகிய. பணம்-படம்.]

17. எரிந்தெழு கொடுஞ்சுர மினைய தெய்தலும்
அருந்தவ னிவர்பெரி தளவி லாற்றலைப்
பொருந்தின ராயினும் பூவின் மெல்லியர்
வருந்துவர் சிறிதென மனத்தி னோக்கினான்.

இனையது ஆன எரிந்து எழும் கொடும் சுரத்தை (அவர்கள்) எய்தலும், (விச்வாமித்திர) அரிய தவன், (இராம லக்ஷமணர்களாகிய) 'இவர், அளவில்லாத ஆற்றலை பெரிது பொருந்தினர் ஆயினும் பூவினும் மெல்லியர் (ஆகையால்) சிறிது வருந்துவர்' என (தன்) மனத்தில் நோக்கினான். [ஆற்றல்-வல்லமை.]

18. நோக்கின னவர்முக நோக்க நோக்குடைக்
கோக்குமா ரருமடி குறுக நான்முகன்
ஆக்கின விஞ்சைக ளிரண்டு மவ்வழி
ஊக்கின னவைபவ ருள்ளத் துள்ளினார்.

(அவ்வாறு எண்ணிய விச்வாமித்திரன்) அவர் முகம் நோக்கினன். நோக்க, (பிறர்) நோக்கத்தை (அறியும் திறம்) உடைய கோவின் குமாரரும் (முனிவனது) அடிகளை குறுக, (தனக்கு) நான்முகன் (உபதேசித்து) ஆக்கிய (பலை, அதிபலை என்னும்) விஞ்சைகள் இரண்டையும் அவ்வழி (அச் சிறுவர்களுக்கு) ஊக்கினன். அவைகளை அவர் (தம்) உள்ளத்து உள்ளினார். [கோ-சக்ரவர்த்தி. விஞ்சை-வித்தை. ஊக்கினன்-உபதேசித்தான். உள்ளினார்-சிந்தித்தார்.]

19. உள்ளிய காலையி னூழித் தீயையும்
எள்ளுறு கொழுங்கன லெரியும் வெஞ்சுரம்
தெள்ளுதண் புனலிடைச் சேற லொத்தது
வள்ளலு முனிவனை வணங்கிக் கூறுவான்.

(அந்த மந்திரங்களை) உள்ளிய காலையில் ஊழித்தீயையும் (சுட) எள்ளுதல் உற்ற (அந்த) கொழும் கனல் எரியும் வெம் சுரமானது, தெள்ளிய தண் புனல் இடை சேறல் ஒத்தது. (ஸ்ரீராம) வள்ளலும் முனிவனை வணங்கி (பின் வருமாறு) கூறுவான். [எள்ளுதல்-இகழ்தல். தண் புனல்-குளிர்ந்த நீர்.]

20. சுழிபடு கங்கையந் தொங்கன் மௌலியான்
விழிபட வெந்ததோ வேறு தானுண்டோ
பழிபடா மன்னவன் படைத்த நாட்டினூங்
கழிவதென் காரண மறிஞ கூறென்றான்.

"சுழிகள் படுகின்ற கங்கையையும் அம் (கொன்றை) தொங்கலையும் (அணிந்த) மௌலியான் (ஆகிய பரமசிவனது நுதல்) விழிபட

(முன் மன்மதன் வெந்தவாறு இந்த வனமும் ஈரம் அற்று) வெந்ததோ; (அல்லது காரணம்) வேறுதான் உண்டோ? அறிஞனே: பழி படாத (தயரத) மன்னவன் படைத்த நாட்டின் ஊங்கு அழிவது என் காரணம்? கூறு" என்றான். [தொங்கல்-மாலை. மௌலி-சடை. ஊங்கு-உவ்விடம்.]

தாடகையின் வர்ணனை.

21. என்றலு மிராமனை நோக்கி யின்னுயிர்
கொன்றுழல் வாழ்க்கையள் கூற்றின் றோற்றத்தள்
அன்றியு மையிரு நூறு மையன்மா
ஒன்றிய வலியின ளுறுதி கேளென.

(இராமன்) என்றலும், (முனிவன்) இராமனை நோக்கி "இன் உயிர்களை கொன்று உழலும் வாழ்க்கையள். கூற்றினது தோற்றத்தள். அன்றியும் ஐ இரு நூறு (ஆயிரம்) மையல் (மயக்கமுள்ள யானையாகிய) மாக்கள் ஒன்றிய வலியினள் (ஆகிய அரக்கி ஒருத்தியின்) உறுதியை கேள்" என, [கூற்று-யமன். மையல்-மதம். ஒன்றிய-சேர்ந்த. உறுதி-வல்லமை.]

22. மண்ணுருத் தெடுப்பினுங் கடலை வாரினும்
விண்ணுருத் திடிப்பினும் வேண்டிற் செய்கிற்பாள்
எண்ணுருத் தெரிவரும் பாவ மீண்டியோர்
பெண்ணுருக் கொண்டெனத் தெரியும் பெற்றியாள்.

(அவள்) மண்ணை உருத்து எடுப்பினும் கடலை வாரினும் விண்ணை உருத்து இடிப்பினும் (தான் செய்ய) வேண்டில் செய்கிற்பாள். எண்ணும் உருவும் தெரிவு அரிய பாவம் ஈண்டி (கண் கூடாக) ஓர் பெண்ணின் உருவை கொண்டது என தெரியும் பெற்றியாள். [உருத்து-கோபித்து. ஈண்டி-திரண்டு.]

23. பெருவரை யிரண்டொடும் பிறந்த நஞ்சொடு
உருமுறழ் முழக்கொடு மூழித் தீயொடும்
இருபிறை செறிந்தெழு கடலுண் டாமெனின்
வெருவரு தோற்றத்தண் மேனி மானுமே.

பெரும்வரைகள் இரண்டொடும் (முலைகள்), பிறந்த நஞ்சொடும் (கண்), உருமுவை உறழ் முழக்கொடும் (ஆரவாரம்), ஊழித் தீயொடும் (தலைமயிர்), இரு பிறைகள் (கோரதந்தங்கள்) செறிந்து எழுகின்ற (ஒரு கரும்) கடல் உண்டாம் எனின் (அது) வெருவரும் தோற்றத்தன் (ஆகிய அவ்வரக்கியின்) மேனியை மானும்" [வரை-மலை. உரும்-இடி. உறழ்-ஒத்த. வெரு-அச்சம்.]

24. சூடக வரவுறழ் சூலக் கையினள்
காடுறை வாழ்க்கையள் கண்ணிற் காண்பரேல்
ஆடவர் பெண்மையை யவாவுந் தோளினாய்
தாடகை யென்பதச் சழக்கி நாமமே.

கண்ணில் காண்பரேல் ஆடவர் (கூடப் பொருந்தி இன்பம் பெற விரும்பி) பெண்மையை அவாவும் (அழகமைந்த) தோளினாய், சூடகம் ஆக, அரவு உறழ்ந்த சூலம் (ஏந்திய) கையினள், காட்டில் உறைகின்ற வாழ்க்கையள். அ சழக்கியின் நாமம் தாடகை என்பது. [அவாவும்-இச்சிக்கின்ற. சூடகம்-கங்கணம். சழக்கி-தீயவள்] ஆடவர் என்பதை ஆள்-தவர் எனப்பிரித்தும் பொருள் கொள்ளலாம்.

குறிப்பு :—இராமரது தோள்களின் அழகை எடுத்துக் காட்ட, 'ஆடவரும்கூட அத்தோள்களுடன் கூடி இன்பம் அனுபவித்தற்கு இச்சித்துத்தாம் பெண்களாய்ப் பிறந்திருந்தலாகாதா என்று இரங்குவார்' எனக் கம்பர் திறம்படக் கூறுகின்றார். இவ்விதமே சிந்தாமணியிலும் காந்தருவதத்தையைப் "பெண்டிருமாண்மைவெஃகிப்பேதுறு முலையினாள்" என்றுச் சிறப்பித்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. பாலை மாற்றி இவ்விருவிதமாய்க் கூறுவதும் அமையும். பின் கோலம் காண் படலத்தில் கம்பர் கூறுகின்றவாறு "மஞ்சர்க்கு மாதரார்க்கு மனமேன்ப தோன்றேயன்றே."

25. கன்னவி றோளினாய் கமலத் தோனருள்
மன்னுயி ரனைத்தையும் வாரி வாய்ப்படுத்
தின்னுயிர் வளர்க்குமோ ரெரிகொள் கூற்றநேர்
அன்னவள் யாவளென் றறையக் கேட்டியால்.

"கல்லை (ஒத்து) நவில்கின்ற தோளினாய், கமலத்தோன் (ஆகிய பிரமன் படைத்து) அருளிய மன் உயிர் அனைத்தையும் வாரி வாயில் படுத்து (தன்) இனிய உயிரை வளர்க்கும் ஓர் (கோப) எரிகொண்ட கூற்றத்திற்கு நேரான அன்னவள் யாவள் என்று (நான்) அறைய கேட்டி (நீ)" [நவில்கின்ற-சொல்லப்படுகின்ற.]

தாடகை வரலாறு.

26. இயக்கர்தங் குலத்துளா னுலக மெங்கணும்
வியக்குறு மொய்ம்பினா னெறியின் வெம்மையான்
மயக்கில்சற் சரனெனும் வலத்தி னனருள்
துயக்கிலன் சுகேதுவென் றுளனொர் தூய்மையான்.

இயக்கர்தம் குலத்தில் உள்ளானும், உலகம் எங்கணும் வியக்கு

உறும் மொய்ம்பினானும், எரிபோல் வெம்மையானும், (ஆகிய) மயக்கு இல்லாத சற்சரன் எனும் வலத்தினன் (பெற்று) அருளிய துயக்கு இலன் (ஆகிய) சுகேது என்று ஓர் தூயமையான் உளன் [இயக்கர்-யக்ஷர் என்னுமோர் தேவ ஜாதியார். மொய்ம்பு-பலம். துயக்கு-தளர்ச்சி.]

27. அன்னவன் மகவிலா தயருஞ் சிந்தையான்
மன்னெடுந் தாமரை மலரின் வைகுறு
நன்னெடு முதல்வனை வழுத்தி நற்றவம்
பன்னெடும் பகலெலாம் பயின்ற பான்மையான்.

அன்னவன் (ஆகிய சுகேது) மகவு இலாது அயரும் சிந்தையனாய் மன் நெடும் தாமரை மலரின் வைகுறும் நல்நெடும் (பிரமனாகிய) முதல்வனை வழுத்தி நல்தவங்களை பல் நெடும் பகல் எலாம் பயின்ற பான்மையால்—[வழுத்தி-ஆராதித்து.]

28. முந்தின னருமறைக் கிழவன் முற்றுநின்
சிந்தனை யென்னெனச் சிறுவ ரின்மையான்
நொந்தன னருள்கென நுணங்கு கேள்வியாய்
மைந்தர்க ளிலையொரு மகளுண்டா மென்றான்.

அரு மறை கிழவன் (ஆகிய பிரமன்) முந்தினன். (முந்தி) 'நின் சிந்தனை முற்றும் என்?' என (கேழ்க்க, அவன்) 'சிறவர் இன்மையால் (நான்) நொந்தனன், (சிறவர் பிறக்குமாறு) அருள்க' என (வேண்ட பிரமன்) 'நுணங்கு கேள்வியாய், (உனக்கு) மைந்தர்கள் இல்லை. (ஆனால்) ஒரு மகள் உண்டாகும்' என்றான். [முந்தினன்-பிரத்யக்ஷமானான். நுணங்கு-நுட்பமான.]

29. பூமட மயிலினைப் பொருவும் பொற்பொடும்
ஏமுறு மதமலை யீரைஞ் ஞாறுடைத்
தாமிகு வலியொடுந் தனைய டோன்றுநீ
போவென மலரயன் புகன்று போயினான்.

(என்று) "தாமரை பூவில் இருக்கும் மடமை பொருந்திய மயில் போன்ற சாயலையுடைய திருமகளை பொருவும் பொற்புடனும், எமம் உற்ற ஈர் ஐஞ்ஞூறு மதம் பொழியும் மலை போன்ற யானைகள் உடைத்தாயிருக்கிற (பெண்களுக் கியையாத) தா மிகு வலியுடனும் கூடிய தனையள் (உனக்கு) தோன்றும் 'நீ போ' என மலரில் வாழும் அயன் புகன்று போயினான். [மடமை-இளமை. பொருவும்-நிகர்க்கின்ற. எமம்-களிப்பு. தா-குற்றம். தனையள்-மகள். அயன்-பிரமன்.]

30\. ஆயவ னருள்வழி யலர்ந்த தாமரைச்
சேயவ ளெனவளர் செவ்வி கண்டிவட்
காயவன் யார்கொலென் றாய்ந்து தன்கிளை
நாயகன் சுந்தனென் றவர்க்கு நல்கினான்.

ஆயவன் அருளிய வழி (பெண் பிறந்து) அலர்ந்த தாமரை (பூவில் வாழும்) சேயவள் என வளர்கின்ற செவ்வியை (சுகேது) கண்டு 'இவளுக்கு (கணவன்) ஆயவன் யார்' என்று ஆய்ந்து, தன் கிளைக்கு நாயகன் ஆகிய சுந்தன் என்றவர்கு (அப்பெண்ணை மணம் செய்து) நல்கினான். [சேயவள்-திருமகள். செவ்வி-பருவம்.]

31\. காமனு மிரதியுங் கலந்த காட்சியி
தாமென வியக்கனு மணங்க னாளும்வே
றியாமமும் பகலுமோ ரீறின் றென்னலாய்த்
தாமுறு பெருங்களிச் சலதி மூழ்கினார்.

காமனும் இரதியும் கலந்த காட்சி இது ஆகும் என (சுந்தன் எனும்) இயக்கனும் (அந்த) அணங்கு அன்னாளும் யாமமும் பகலும் வேறு ஓர் ஈறு இன்று என்னலாய் தாம் உற்ற பெரும் களியாகிய சலதியில் மூழ்கினார். [அணங்கு-தெய்வப்பெண். 3-வது அடி-இரவு பகல் என்று வேறான எல்லை முடிவு இல்லை என்னும்படி.]

32\. பற்பல நாட்செலீப் பதுமை போலிய
பொற்பினாள் வயிற்றிடைப் புவன மேங்கிட
வெற்பணி புயத்துமா ரீசனும் விறல்
மற்பொரு சுவாகுவும் வந்து தோன்றினார்.

(இவ்வாறு) பல்பல நாள் சென்று, (அந்த) பதுமை போலிய பொற்பினாளது வயிற்றிடை (பின்னால் வரும் துன்பங்களைக் கருதி) புவனத்தில் உள்ளோர் ஏங்கி இட வெற்பை அணிந்த புயத்து மாரீசனும் மல் பொரும் சுவாகுவும் வந்து தோன்றினார். [புவனம்-உலகம். வெற்பு-மலை. மல்-மற்போர்.]

33\. மாயமும் வஞ்சமும் வரம்பி லாற்றலும்
தாயினும் பழகினார் தமக்குந் தேர்வொணா
தாயவர் வளர்வுழி யவரை யீன்றவக்
காய்சினத் தியக்கனுங் களிப்பின் மேன்மையால்.

(மாரீசன் சுவாகு) ஆயவர், தாயினும் (அதிகமாய்த் தம்மிடம்) பழகினார் தமக்கும் (இவ்வளவு என்று) தேர்வு ஒண்ணாது மாயமும் வஞ்சமும் வரம்பு இல்லாத ஆற்றலும் (அடைந்து) வளர்வுழி, அவரை ஈன்ற அ காயும் சினத்து (சுந்தன் எனும்) இயக்கனும் களிப்பின் மேன்மையால்,—

34. தீதுறு மவுணர்க டீமை தீர்தர
மோதுறு கடலெலா மொருகை மொண்டிடு
மாதவ னுறைவிட மதனில் வந்துநீள்
பாதவ மனைத்தையும் பறித்து வீசினான்.

தீது உறும் அவுணர்கள் செய்யும் தீமை தீர்தர மோதுதல் உற்ற கடல் எல்லாம் ஒரு கையில் மொண்டு (குடித்து) இடும் (அகஸ்திய) மா தவன் உறைவிடம் அதனில் வந்து நீண்ட பாதவம் அனைத்தையும் பறித்து வீசினான். [அவுணர்-அசுரர். பாதவம்-மரம்.]

35. விழைவுறு மாதவம் வெஃகி னோர்விரும்
புழைகலை இரலையை யுயிருண் டோங்கிய
வழையொடு மரனெலா மடிப்ப மாதவன்
தழலெழ விழித்தனன் சாம்ப ராயினான்.

(வீசி) விழைவு உறும் மா தவத்தை வெஃகினோர் (ஆகிய முனிவரும்) விரும்பும் உழை கலை இரலை (இவைகளின்) உயிரை உண்டு ஓங்கிய வழையுடன் மரம் எலாம் மடிப்ப (அதனால்) மா தவன் (கோபம் கொண்டு) தழல் எழ விழித்தனன். (உடனே சுந்தன்) சாம்பல் ஆயினான். [விழைவுறும்-எவராலும் விரும்பப் படுகின்ற. வெஃகினோர்-விரும்பினவர். உழை-பெண்மான். கலை-ஆண்மான். இரலை-புல்வாய் என்னும் மான் ஜாதி.]

36. மற்றவன் விளிந்தமை மைந்தர் தம்மொடும்
பொற்றொடி கேட்டுவெங் கனலிற் பொங்குரு
முற்றுற முடிக்குவன் முனியை யென்றெழா
நற்றவ னுறைவிட மதனை நண்ணினாள்.

(இவ்வாறு) அவன் விளிந்தமை, பொன் தொடி (அணிந்த அவன் மனைவி) மைந்தர் தம்மொடும் கேட்டு வெம் கனல்போல் பொங்குதலை உற்று, '(அகஸ்திய) முனியை முற்றுற முடிக்குவன்' என்று எழுந்து (அந்த) நல் தவன் உறைவிடம் அதனை நண்ணினாள். [விளிந்தமை-இறந்ததை.]

37. இடியொடு மடங்கலும் வளியு மேங்கிடக்
கடிகெட வமரர்கள் கதிரு முட்குறத்
தடியுடை முகிற்குலஞ் சலிப்ப வண்டமும்
வெடிபட வதிர்த்தெதிர் விளித்து மண்டவே.

(நண்ணியவள்), இடியும் மடங்கலும் வளியும் ஏங்கி இட, கடிகள் கெட, அமரர்களும் (சூரிய சந்திரர்களாகிய இரு) கதிரும் உட்கு உற தடியை உடைய முகில் குலம் சலிப்ப, அண்டமும் வெடிபட,

அதிர்த்து எதிர் விளித்து மண்ட, [மடங்கல்-ஊழித்தீ. வளி-ஊழிக் காற்று. கடி-பேய். உட்குற-அச்சமடைய. தடி-மின்னல்.]

38. தமிழெனு மளப்பருஞ் சலதி தந்தவன்
உமிழ்கனல் விழிவழி யொழுக வுங்கரித்
தழிவன செய்தலா லரக்க ராகியே
இழிகென வுரைத்தன னசனி யெஞ்சவே.

(மண்டுவதைக் கண்ட) தமிழ் எனும் அளப்பு அரிய சலதியை (வெளியிட்டு) தந்தவன் (ஆகிய அகஸ்தியன்) உமிழ் கனல் (பொறிகள்) விழிவழி ஒழுக, உங்கரித்து, (அவர்களைப் பார்த்து) "அழிவன செய்தலால் (நீங்கள்) அரக்கர் ஆகியே இழிக" என அசனி எஞ்ச உரைத்தனன். [அசனி-இடி.]

39. வெருக்கொள வுலகையும் விண்ணு ளோரையும்
முருக்கியெவ் வுயிருமுண் டுழலு மூர்க்கராம்
அரக்கர்க ளாயின ரக்க ணத்தினில்
உருக்கிய செம்பென வுமிழ்கட் டீயினர்.

(அகஸ்தியன் சபித்த) அ கணத்தில் உருக்கிய செம்பு என கண் உமிழும் தீயினராய், வெரு கொள்ள உலகத்தோரையும் விண் உள்ளோரையும் எ உயிரையும் முருக்கி உண்டு உழலும் மூர்க்கராகும் அரக்கர்கள் அம் மூவரும் ஆயினர். [வெரு-அச்சம்.]

40. ஆங்கவன் வெகுளியு மறைந்த சாபமுந்
தாங்கின ரெதிர்செயுந் தருக்கி லாமையின்
நீங்கினர் சுமாலியை நேர்ந்து நிற்கியாம்
ஓங்கிய புதல்வரென் றுறவு கூர்ந்தனர்.

ஆங்கு (அகஸ்தியனை) அவன் வெகுளியும் அறைந்த சாபமும், எதிர் செயும் தருக்கு இலாமையின், தாங்கினர். (அவ்விடம் விட்டு) நீங்கினர், (நீங்கி மாரீசனும் சுவாகுவும்) சுமாலியை நேர்ந்து "நினக்கு யாம் ஓங்கிய புதல்வர்' என்று உறவு கூர்ந்தனர். [வெகுளி- கோபம். தருக்கு-வல்லமை. சுமாலி-இராவணனது தாயின் தந்தை.]

41. அவனொடும் பாதலத் தனேக நாட்செலீஇத்
தவனுறு தசமுகன் றனக்கு மாதுலர்
இவரெனப் புடைத்தழித் துலக மெங்கணும்
பவனனிற் றிரிகுநர் பதகி மைந்தர்கள்.

(உறவு கூர்ந்து) அவனொடும் பாதலத்தில் அனேக நாள் சென்று (கழித்துப் பின்), பாதகி மைந்தர்கள், தவம் உற்ற (இராவணன் ஆகிய) தசமுகன் தனக்கு இவர் மாதுலர் என, உலகம் எங்கணும்

புடைத்து அழித்து பவனனைப்போல் திரிகுநர். [மாதுலர்-மாமன், பவனன்-வாயு, இங்கு ஊழிக் காற்று.]

42. மிகுந்திறன் மைந்தரை வேறு நீங்குறுத்
தகுந்தொழின் முனிவரன் சலத்தை யுன்னியே
வகுந்துவின் வசுவரி வதிந்த திவ்வனம்
புகுந்தன ளழலெழப் புழுங்கு நெஞ்சினாள்.

மிகும் திறல் (அமைந்த தன் சுவாகு மாரீசர்களாகிய) மைந்தரை (விட்டு) வேறு நீங்கி, (தவம் ஆகிய) தகும் தொழில் (புரியும் அகஸ்திய) முனிவரனின் சலத்தை உன்னி, அழல் எழ புழுங்கும் நெஞ்சினளாய் (தாடகை) இவ் வனத்தின் வகுந்துவின் புகுந்தனள். (அன்று தொட்டு) இங்கு வசு அரிவதிந்தது. [சலம்-தீராக் கோபம், வசுவரி-வசுவாகிய அரி. வசு-தீ. வகுந்து-வழி.]

43. உளப்பரும் பிணிப்புறு வுலோப மொன்றுமே
அளப்பருங் குணங்களை யழிக்கு மாறுபோல்
கிளப்பருங் கொடுமைய வரக்கி கேடிலா
வளப்பரு மருதவைப் பழித்து மாற்றினாள்.

(ஒருவன்) உள்ளத்தில் பரும் பிணிப்பு உற்று (அதனால்) உலோப குணம் (அவனுக்கு இருக்குமாயின்) (அது) ஒன்றுமே, அளப்பு அரும் (மற்ற எல்லா குணங்களையும் அழிக்குமாறு போல், கிளப்பு அரிய கொடுமைய (அந்த) அரக்கி கேடு இல்லாத வளம் பருத்த மருத வைப்பை அழித்து மாற்றினாள். [பிணிப்பு-பற்று, ஆசை. கிளப்பு-சொல்லுதல்.]

44. இலங்கையர சன்பணியின் மைந்தரிடை யூறாய்
விலங்கல்வலி கொண்டெனது வேள்விநலி கின்றார்
அலங்கன்முகி லேயவளிவ் வங்கநில மெங்கும்
குலங்களொட டங்கநனி கொன்றுதிரி கின்றாள்.

அலங்கல் தரித்த முகில் போன்றவனே, (சுவாகு மாரீசராகிய) மைந்தர் (இராவணனாகிய) இலங்கை அரசனது பணியில் (இருந்து) (எனக்கு) இடையூறு ஆய், விலங்கலை ஒத்தவலி கொண்டு எனது வேள்வியை நலிகின்றார். (தாடகையாகிய) அவளோ, இ அங்க நிலம் எங்கும் (உயிர்களை எல்லாம்) குலங்களொடு அடங்க நனி கொன்று திரிகின்றாள். [அலங்கல்-மாலை. விலங்கல்-மலை. நலிகின்றார்-கெடுக்கின்றார். நனி-மிகுதியாய்.]

45. முன்னுலக ளித்துமுறை நின்றவுயி ரெல்லாந்
தன்னுயி ரெனக்கருது தன்மையவன் மைந்த
என்னினியு ணர்த்துவதி னிச்சிறிது நாளின்
மன்னுயிர னைத்தையும்வ யிற்றிலிடு மென்றான்.

46. அங்கிறைவ னப்பரிசு ரைப்பவது கேளா
கொங்குறை நறைக்குலம லர்ச்செனி குலுக்கா
எங்குறைவ தித்தொழிலி யற்றுபவ ளென்றுன்
சங்குறைக ரத்தொருத னிச்சிலைத ரித்தான்.

[பரிசு-விஷயம். சிலை-வில். கொங்குவா-சனை. நறை-தேன்.]

47 கைவரையெ னத்தகைய காளையுரை கேளா
ஐவரைய கத்திடைய டைத்தமுனி யைய
இவ்வரையி ருப்பதவ ளென்பதனின் முன்போர்
மைவரைநெ ருப்பெரிய வந்ததென வந்தாள்.

துதிக்கையுடைய வரை என தகைய காளை (ஆகிய இராமன்) உரையை கேட்டு, (புலன்கள்) ஐவரை அகத்து இடை அடைத்த (அந்த விச்வாமித்திர) முனி "ஐய இ வரையில் இருப்பது அவள்" என்பதனின் முன்பு ஓர் மைவரையானது நெருப்பு எரிய வந்தது என (தாடகையே) வந்தாள். [கைவரை-யானை. இவ்வரை-இந்த எல்லை. மைவரை-கரியமலை.]

48. சிலம்புகள்சி லம்பிடைசெ றித்தகழ லோடு
நிலம்புகமி தித்தனணெ ளித்தகுழி வேலைச்
சலம்புகவ னற்றறுக ணந்தகனு மஞ்சிப்
பிலம்புக நிலக்கிரிகள் பின்றொடர வந்தாள்.

சிலம்புகள் சிலம்பு இடையில் (பருக்கைக் கற்களாக) செறிந்த கழல்களால் நிலம் (அழுந்தி) புக மிதித்தனள். (அவ்விதம்) நெளித்த குழிகளில் வேலையினது சலம் புகவும், அனல்போல் தறுகண் உடையவனாகிய அந்தகனும் அஞ்சி பிலம்புகவும், நிலத்திலுள்ள கிரிகள் (எல்லாம், வருகின்ற விசைக் காற்றினாலே பிடுங்குண்டு) பின் தொடரவும் வந்தாள். [சிலம்பு-மலை, கால் அணி. கழல்-கால். வேலை-கடல். அந்தகன்-யமன். பிலம்-பாதாளம்.]

49. இறைக்கடைது டித்தபுரு வத்தளெயி றென்னும்
பிறைக்கடைபி றங்கிடம டித்தபில வாயள்
மறைக்கடைய ரக்கிவட வைக்கனலி ரண்டாய்
நிறைக்கடன்மு ளைத்தெனநெ ருப்பெழவி ழித்தாள்.

(வந்து) கடை இறை துடித்த புருவத்தள், எயிறு என்னும் பிறைகள் கடை பிறங்கிட மடித்த பிலம் போன்ற வாயள். (ஆகிய) மறைக்குக் கடையாகிய (ஒழுக்கமுடைய) அரக்கி வடவை கனல் இரண்டு ஆய் (நீர்) நிறைந்த கடலிலிருந்து முளைத்தது என நெருப்பு எழ விழித்தாள். [இறை-சிறிது. பிறங்கிட-விளங்க.]

50. கடங்கலுழ்த டங்களிறு கையொடுகை தெற்றா
வடங்கொள நு டங்குமிடை யாண்மறுகி வானோர்
இடங்களுநெ டுந்திசையு மேழுலகு மெங்கும்
அடங்கலு நடுங்கவுரு மஞ்சநனி யார்த்தாள்.

(விழித்து), கடத்தை கலுழும் தடம் களிறுகளை, (அவைகளின்) துதிக்கைகளுடன் துதிக்கை தெற்றி (அந்த யானை மாலையை) வடம் ஆக கொள்ள (அதற்கு) நுடங்கும் இடையாள், வானோர் இடங்களும் நெடும் திசையும் ஏழ் உலகமும் எங்கும் அடங்கலும் மறுகி நடுங்க, உரும் அஞ்ச நனி ஆர்த்தாள். [கடம்-மதஜலம். கலுழும்-சிந்தும். தடம்-பெரிய. தெற்றி-முடிந்து. நுடங்கும்-துவளும். மறுகி-கலங்கி. உரும்-இடி.]

51. ஆர்த்தவரை நோக்கிநகை செய்தெவரு மஞ்சக்
கூர்த்தநுதி முத்தலைய யிற்கொடிய கூற்றைப்
பார்த்தெயிறு தின்றுபடு வாய் முழைதி றந்தோர்
வார்த்தையுரை செய்தனளி டிக்குமழை யன்னாள்.

ஆர்த்து, அவரை நோக்கி நகை செய்து எவரும் அஞ்ச கூர்த்த நுதியையும் மூன்று தலையையும் உடைய (தன்) அயில் ஆகிய கொடிய கூற்றை பார்த்து எயிறை தின்று பகுவாய் ஆகிய முழையை திறந்து, இடிக்கும் மழை அன்னாள் ஓர் வார்த்தை உரை செய்தனள். [அயில்-சூலம். எயிறு தின்று-பல்லைக்கடித்து. முழை-குகை.]

52. கடக்கரும்வ லத்தெனது காவலிது யாவும்
கெடக்கருவ றுத்தனனி னிச்சுவைகி டக்கும்
விடக்கரிதெ னக்கருதி யோவிதிக டுந்தப்
படக்கருதி யோபகர்மின் வந்தபரி சென்றே.

"கடக்க அரும் வலத்து எனது காவல் இது. யாவும் கெட நான் கரு அறுத்தனன், இனி (எனக்கு) சுவை கிடக்கும் விடக்கு (கிடைப்பது) அரிது என கருதியோ, (அல்லது) (உங்களது) விதி கொண்டு உந்த (என் கையால்) பட கருதியோ, இங்கு (நீங்கள்) வந்த பரிசு பகர்மின்" என்று, ..(தாடகை உரை செய்தனள்). [விடக்கு-மாமிசம்.]

53. மேகமவை யிற்றுகவி ழித்தனள்பு ழுங்கா
மாகவரை யற்றுகவு தைத்தனண்ம தித்திண்
பாகமெனு முற்றெயிற துக்கியயில் பற்றா
ஆகமுற வுய்த்தெறிவ னென்றெதி ரழன்றாள்.

மேகம் அவை இற்று உக விழித்தனள், (மனம்) புழுங்கி மாகம் (அளவு உயர்ந்த) வரை அற்று உக உதைத்தனள். மதியின் திண் பாகம் எனும் முற்று எயிறுகளை அதுக்கி, அயிலை (கையில்) பற்றி (வந்தவர்களின்) 'ஆகங்களின் உற உய்த்து (சூலத்தை) எறிவன்' என்றுஎதிர்அழன்றாள். [முற்றுஎயிறு-கோரதந்தம். ஆகம்-மார்பு.]

54. அண்ணன்முனி வற்கதுக ருத்தெனினு மாவி
உண்ணெனவ டிக்கணைதொ டுக்கிலனு யிர்க்கே
துண்ணெனும்வி னைத்தொழிறொ டங்கியுள ளேனும்
பெண்ணெனம னத்திடைபெ ருந்தகைநி னைந்தான்.

(விச்வாமித்திர) முனிவற்கு (தாடகையைக் கொன்றுவிட வேண்டும் என்னும்) அது கருத்து எனினும், (நமது இராமனாகிய) அண்ணல், (அவள்) 'ஆவியை உண்' என (கூர்மை) வடித்த கணையை தொடுக்கிலன். (ஏனெனில்), (தனது) உயிர்க்கே துண் எனும் (கொடு) வினை தொழில் தொடங்கி உளள் எனும், பெருந்தகை (ஆகிய ஸ்ரீராமன்) (அவள்) பெண் என (தன் மனத்திடை நினைந்தான். [துண் எனும்-அச்சம் உண்டாகும். பெருந்தகை-உதார சித்தமுடையவன்.]

55. வெறிந்த செம்மயிர் வெள்ளெயிற் றாளயில்
எறிந்து கொல்வனென் றேற்கவும் பார்க்கிலாச்
செறிந்த தாரவன் சிந்தைக்க ருத்தெலாம்
அறிந்து நான்மறை யந்தணன் கூறுவான்.

வெறிந்த செம் மயிரையும் வெள் எயிற்றையும் உடையாள் ஆகிய அரக்கி, 'எயில் எறிந்து கொல்வன்' என்று ஏற்கவும், (அதை ஒரு பொருள்படுத்தி) பார்க்கிலாத (இதழ்கள்) செறிந்த தாரவன் (ஆகிய ஸ்ரீராமன்) சிந்தையுள் இருந்த கருத்தை எலாம், நான் மறை அந்தணன் (ஆகிய விச்வாமித்திரன்) அறிந்து (பின்வருமாறு) கூறுவான். [வெறிந்த-நெருங்கிய. ஏற்கவும்-எதிர்க்கவும்.]

56. தீதென் றுள்ளவை யாவையுஞ் செய்தெமைக்
கோதென் றுண்டில ளித்தனை யேகுறை
யாதென் றெண்ணுவ திக்கொடி யாளையும்
மாதென் றெண்ணுதி யோமணிப் பூணினாய்.

"மணிகள் நிறைந்த பூணினாய், தீது என்று உள்ளவை யாவையும் செய்து (முனிவர்களாகிய) எம்மை (தவத்தால் வாடிச் சாரமில்லாத) கோது என்று உண்டிலள். குறை இத்தனையே. யாது என்று எண்ணுவது. இ கொடியாளையும் (ஒரு) மாது என்று எண்ணுதியோ!" [கோது-திப்பி,]

57. நாண்மை யேயுடை யார்பிழைத் தார்நகு
வாண்மை யேபெற்ற வன்றிற லாடவர்
தோண்மை யேயிவள் பேர்சொலத் தோற்பரேல்
ஆண்மை யென்னுமஃ தாரிடை வைகுமே.

"நகும் வாள்மை பெற்ற வல் திறல் (பொருந்திய) ஆடவர், இவள் பேரை சொல்ல (கேட்ட மாத்திரத்தில் தம்) தோள்மை தோற்பர்எல், (பின்) ஆண்மை என்னும் அது ஆர் இடை வைகும்? (இவளுடன் போர் செய்ய) நாண்மையே உடையவர் (உயிர்) பிழைத்தார்" ஆவர். [வாண்மை-வாள் வல்லமை. தோண்மை-புயவலி].

58. இந்தி ரன்னிடைந் தானுடைந் தோடினர்
தந்தி ரம்படத் தானவர் வானவர்
மந்த ரம்மிவ டோளெனின் மைந்தரோ
டந்த ரம்மினி யாதுகொ லாண்மையே.

"இந்திரன் (இவளுக்கு) இடைந்தான். தானவரும் வானவரும் தந்திரம் பட உடைந்து ஓடினர். இவள் தோள் மந்திர மலையை ஒக்கும் எனின், மைந்தரோடு (இவளுக்கு) ஆண்மையில் இனி அந்தரம் யாது கொல்" [இடைந்தான்-தோற்றான். தந்திரம்-சேனை. தானவர்-அசுரர். அந்தரம்-வித்தியாசம்.]

59. மன்னர் மன்னவன் காதல மற்றுமொன்
றின்னம் யானுரைக் கின்றதி யாதெனில்
முன்னொர் காலநி கழ்ந்தமு றைமையீ
தென்ன வோதலுற் றான்றவத் தீறிலான்.

60. பிருகு வென்னும்பெ ருந்தவன் றன்மனை
வருக யற்கட்கி யாதிவல் லாசுரர்க்
குருகு காதலு றவுற வாதலே
கருதி யாவிக வர்ந்தன னேமியான்.

பிருகு என்னும் பெரும் தவன்தன் மனைவரும் கயல்போன்ற கண்களுடைய கியாதி (என்பவள்) வல் அசுரர்க்கு உருகும் காதல் உற (அவர்களுக்கு) உறவு ஆதலே கருதி, நேமியான் (ஆகிய திருமால்) அவளது ஆவியை கவர்ந்தனன்."

61. வான கத்தினின் மண்ணினின் மன்னுயிர்
போன கந்தனக் கென்றெணும் புந்தியள்
தான வள்குமதிப் பெய ராடனை
ஊனொ ழித்தனன் வச்சிரத் தும்பர்கோன்.

வானகத்தினிலும் மண்ணினிலும் (இருக்கும்) மன் உயிர் (அனைத்தும்) தனக்கு போனகம் என்று எண்ணும் புத்தியளும் தானவளும்

(ஆகிய) குமதி பெயராள் தன்னை, உம்பர்களுக்கு கோன் (ஆகிய இந்திரன்) வச்சிரத்தால் ஊனை ஒழித்தனன். [போனகம்-உணவு.]

62. ஆத லாலரிக் காகண்ட லன்றனக்
கோது கீர்த்தியுண் டாயதல் லாதிடை
ஏத மென்பன வெய்திய வோசொலாய்
தாத டார்ந்துத யங்கிய தாரினாய்.

ஆதலால், தாது அடர்ந்து தயங்கிய தாரினாய், அரிக்கும் ஆகண்டலன் தனக்கும் ஓதும் கீர்த்தி உண்டாயது அல்லாது இடையில் ஏதம் என்பன (அவர்களுக்கு) எய்தியவோ, (நீயே) சொல்லாய்." [அரி-திருமால். ஆகண்டலன்-இந்திரன். தாது-மகரந்தம்.]

63. கறங்கி டத்திகி ரிப்படி காத்தவர்
பிறங்க டைப்பெரி யோய்பெரி யோரொடும்
மறங்கொ டித்தரை மன்னுயிர் மாய்த்துநின்
றறங்கெ டுத்தவட் காண்மையும் வேண்டுமோ.

"திகிரி கறங்கிட படியை காத்தவர் (ஆகிய சூரிய குல அரசரது) பிறங்கடை(ஆகிய)பெரியோய், பெரியோரொடும் மறம் கொண்டு இ தரையிலுள்ள மன் உயிர்களை மாய்த்து நின்று அறம் கெடுத்தவட்கு (அவளைக் கொல்ல வேண்டுமானால் அவளிடம்) ஆண்மையும் வேண்டுமோ? (நீயே சொல்)." [திகிரி-ஆஜ்ஞாசக்ரம். கறங்கிட-சுழல. படி-பூமி. பிறங்கடை-வழித்தோன்றல். மறம்-பகை.]

64. சாற்று நாளற்ற தெண்ணித் தருமம்பார்த்
தேற்றும் விண்ணென்ப தன்றியி வளைப்போல்
நாற்றங் கேட்டலுந் தின்ன நயப்பதோர்
கூற்றுண் டோசொலாய் கூற்றுறழ் வேலினாய்.

"(பகைவர்க்கு) கூற்றை உறழ் வேலினாய், சாற்றும் நாள் அற்றதை எண்ணி தருமம் பார்த்து விண் ஏற்றும் என்பது அன்றி இவளைப்போல் (உயிர்) நாற்றம் கேட்டலும் தின்ன நயப்பது (ஆகிய) ஓர் கூற்றும் உண்டோ (நீயே) சொல்லாய்." [சாற்று.......... அன்றி—விதித்துள ஆயுள் முடிந்ததை எண்ணி, உயிர்கள் செய்துள புண்ணியத்தையும் கருதி, மேலுலகத்தில் கொண்டு செல்லும் என்பதன்றி. உறழ்-ஒத்த.]

65 மன்னும் பல்லுயிர் வாரித்தன் வாய்ப்பெய்து
தின்னும் புன்மையிற் றீமைய தோவைய
பின்னுந் தாழ்குழற் பேதமைப் பெண்ணிவள்
என்னுந் தன்மை யெளிமையின் பாலதே.

"மன்னும் பல உயிர்களை வாரி தன் வாயில் பெய்து தின்னும்

புன்மையினும் (வேறு) தீமை எதோ! ஐயனே, பின்னும் தாழ்ந்த குழலையும் பேதமையையும் உடைய பெண் இவள் என்னும் தன் மையானது எளிமையின் பாலது ஆகும்." [எளிமை-அறியாமை.]

66. ஈறி னல்லறம் பார்த்திசைத் தேனிவட்
சீறி நின்றிது செப்புகின் றேனலேன்
ஆறி நின்றத றன்ற ரக்கியைக்
கோறி யென்றெதி ரந்தணன் கூறினான்.

இவள்மேல் சீறி நின்று இதை செப்புகின்றேன் அல்லேன். (நீ) ஆறி நின்றது அறன், (அது) நன்று, "(ஆயினும்) ஈறு இல் நல் அறம் பார்த்து இசைத்தேன்: அரக்கியை கோறி" என்று (விச்வா மித்திரனாகிய) அந்தணன் எதிர் கூறினான். [சீறி-கோபித்து. கோறி-கொல்லுவாய்.]

67. ஐய னங்கது கேட்டற னல்லவும்
எய்தி னாலது செய்கவென் றேவினால்
மெய்ய நின்னுரை வேதமெ னக்கொடு
செய்கை யன்றோ வறஞ்செயு மாறென்றான்.

(ஸ்ரீராமபிரானாகிய) ஐயன், அங்கு (விச்வாமித்திரன் சொன்ன) அது கேட்டு "மெய்யனே, அறம் அல்லவும் எய்தினால் 'அதை செய்க' என்று (நீ) ஏவினால், நின் உரையை வேதம் என கொண்டு (என் போன்றவர்கள் அதை) செய்கை அன்றோ அறம் செய்யும் ஆறு (ஆகும்)" என்றனன். [ஆறு-முறைமை.]

குறிப்பு:—எனவே, தாடகை கொடியள் ஆயினும் பெண்ணே யாகையால் முனிவர் கூறிய மெய்ம்மொழி யத்தனையும் கேட்டும், இராமர், அவளைக் கொல்வது அறம் ஆகும் என்றாவது அன்று என்றாவது தன்மனப் பூர்வமாய் ஒரு தீர்மானத்திற்கு வரக் கூடாதவராகவே இருந்து பாரத்தை விச்வாமித்திரருக்கே உரியதாக்கி அவர் கட்டளையை முன்னிட்டே இக் கன்னிப்போர் செய்யத் தான் உடம்படுவதாகத் தெரிவிக்கின்றார். பின்னும் இச் செய்கைக்குத் தூண்டிய விச்வாமித்திரரன்றி இராமனது வெற்றித் திறத்தை எடுத்து ஓதுவார் எவரும் இத் தாடகை வதத்தைக் குறித்துப் பேசாமலே விடுத்து மிருக்கின்றனர். பண்டை நாள் இராகவன் பாணி வில்லுமிழ் உண்டை உண்டதனைத் தன்னுள்ளத்து உள்ளுபவளாய் மந்தரை "ஆடவர் நகையுற ஆண்மைமாசுற, தாடகை எனும் பெயர்த் தையலாள் பட, கோடிய வரி சிலை யிராமன்" என்று இகழ்ந்

துள்ளது பகையின் பாற்படுமெனினும், அவ்வித அபிப்பிராயம் ஏற்படுவதற்கு இப் போரில் இடமுள தென இராமன் கூசி யஞ்சியது முற்றிலும் பொய்க்கவில்லை என்பதும் தெரிகின்றது.

68. கங்கைத் தீம்புன லுடன்க ருத்தையம்
மங்கைத் தீயனை யாளுமன க்கொளாச்
செங்கைச் சூலவெந் தீயினைத் தீயதன்
வெங்கட் டீயொடு மேற்செல வீசினாள்.

தீம் புனல் உடைய கங்கை (நதி சூழ்ந்த கோசல நாடன் ஆகிய இராமனது) கருத்தை அ மங்கை (உருக்கொண்ட) தீ அனையாளும் (தன்) மனத்தில் கொண்டு, (தன்) செம் கையிலுள்ள சூலம் ஆகிய வெம் தீயினை தீய தன் வெம் கண் (கக்கும்) தீயொடு (சேர்த்து எதிர் நின்றவர்) மேல் செல்ல வீசினாள்.

69. புதிய கூற்றனை யாள்புகைந் தேவிய
கதிர்கொண் மூவிலைக் காலவெந் தீமுனி
விதியை மேற்கொண்டு நின்றவன் மேலுவா
மதியின் மேல்வருங் கோளென வந்ததே.

(உயிர் நாற்றம் கேட்டதும் தின்ன நயப்பவளாகிய) புதிய கூற்று அனையாள் புகைந்து ஏவிய கதிர்களை கொண்ட மூ இலைகள் உடைய வெம் தீ (ஆகிய சூலம்), (விச்வாமித்திர) முனி (இட்ட) விதியை மேல் கொண்டு நின்றவன்மேல் உவா மதியின்மேல் வரும் (இராகுவாகிய) கோள் என வந்ததே. [உவாமதி-பூர்ணசந்திரன். கோள்-கிரகம்.]

70. மாலு மக்கணம் வாளியைத் தொட்டதும்
கோல விற்கால் குனித்ததுங் கண்டிலர்
காலனைப்பறித் தக்கடி யாள்விட்ட
சூல மற்றன துண்டங்கள் கண்டனர்.

(திரு) மாலும் அ கணம் வாளியை தொட்டதும் (அல்லது) கோலம் உடையவில்லை கால் குனித்ததும் (யாரும்) கண்டிலர். (மற்று எதைக் கண்டார் என்றால்) காலன் இடமிருந்து பறித்து அ கடியாள் விட்ட சூலம் அற்றனவாய் விழுந்த துண்டங்களை கண்டனர். [வாளி-பாணம். கோலம்-அழகு.]

71. அல்லின் மாரிய னையநி றத்தவள்
சொல்லின் மாத்திரை யிற்கட றார்ப்பன
கல்லின் மாரியைக் கைவகுத் தாளது
வில்லின் மாரியின் வீரன்வி லக்கினான்.

அல்லில் காணும் மாரி அனைய நிறத்தவள் (ஆகிய தாடகை) சொல்லின் மாத்திரையில் கடலை தூர்ப்பன ஆகிய கல்லின் மாரியை கை வகுத்தாள் அதை வில்லின் மாரியால் வீரன் விலக்கினான். [அல்-இரவு. மாரி-மேகம். மாத்திரை-அளவு.]

72. சொல்லொக்குங் கடிய வேகச் சுடுசரங் கரிய செம்மல்
அல்லொக்கு நிறத்தி னாண்மேல் விடுதலும் வயிரக் குன்றக்
கல்லொக்கு நெஞ்சிற் றங்கா தப்புறங் கழன்று கல்லாப்
புல்லர்க்குநல்லோர்சொன்னபொருளெனப்போயிற்றன்றே.

கரிய செம்மல் (ஆகிய இராமன் தவறாத தனது) சொல்லையே ஒக்கும் கடிய வேகம் உடைய சுடும் சரத்தை அல்லை ஒக்கும் நிறத்தினாள்மேல் விடுதலும், (அது அவளது) வயிர குன்றத்தினது கல்லை ஒக்கும் நெஞ்சில் தங்காது அப்புறம் கழன்று கல்லாத புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள் என (சிறிது நேரம் கூடத் தங்காமல் உடனே) போயிற்று.

குறிப்பு:—இராமனுக்கு ஒரு சொல் ஒருவில் ஒரு இல் ஆதலால், ஒரே பாணத்தில் தாடகை மாண்டாள் என்பது தோன்ற அவர் சொல்லையே ஒக்கும் சரம் எனக் கொண்டோம். அநுக்கிரகமாகவோ சாபமாகவோ மேலோர் கூற அவ்வப் பயன்களைப் பயந்தேவிடும் சொல்லை ஒக்கும் சரம் எனப் பொருள் கொள்வாரும் உளர்.

73. பொன்னெடுங் குன்ற மன்னான் புகர்முகப் பகழி யென்னும்
அந்நெடுங் கால வன்காற் றடித்தலு மிடித்து வானிற்
கன்னெடு மாரி பெய்யக் கடையுகத் தெழுந்த மேகம்
மின்னொடு மிடியி னோடும் வீழ்வதே போல வீழ்ந்தாள்.

நெடும் பொன் குன்றம் அன்னான் (விடுத்த) புகர் முகம் பகழி என்னும் அ நெடும் வன்மை பொருந்திய (ஊழி) கால காற்று அடித்தலும், கடையுகத்தில் கல் நெடும் மாரி பெய்ய வானில் இடித்து எழுந்தமேகம் ஆனது மின்னலொடும் இடியினோடும் வீழ்வதே போல (தாடகை, கோரதந்தம் விளங்கக் கதறிக் கொண்டு) வீழ்ந்தாள். [புகர்முகப்பகழி-கபில நிறம் பொருந்திய, (அல்லது) யானை உருவம் வாய்ந்த, பாணம்.]

74. பொடியுடைக் கானமெங்குங் குருதிநீர்பொங்க வீழ்ந்த
தடியுடையெயிற்றுப்பேழ்வாய்த்தாடகைதலைகடோறும்
முடியுடை யரக்கற் கந்நாண் முந்தியுற் பாத மாகப்
படியிடையற்றுவீழ்ந்தவெற்றியம்பதாகையொத்தாள்.

பொடியை உடைய (அப்பாலை) கானம் எங்கும் குருதி நீர் பொங்க வீழ்ந்த தடியை உடைய எயிற்று பேழ்வாய் (உடைய)

தாடகையானவள், (பத்து) தலைகள் தோறும் முடியை உடைய (இராவணன் ஆகிய) அரக்கர்க்கு (பின்னால் மாளப் போகிற) அந் நாளுக்கு முந்தி உற்பாதமாக படி இடை அற்று வீழ்ந்த வெற்றி பதாகையை ஒத்தாள். [பொடி-புழுதி. குருதிநீர்-இரத்தம். தடி-மாமிசம். எயிறு-பல். உற்பாதம்-பின் நேரிடுவதற்கு அடையாள மான துர் நிமித்தம். படி-பூமி. வெற்றிபதாகை-வெற்றிக்கொடி.]

75. கான்றிரிந் தாழி யாகத் தாடகை கடின மார்பத்
தூன்றிய பகழி வாயூ டொழுகிய குருதி வெள்ளம்
ஆன்றவக் கானமெல்லா மாயின வந்தி மாலைத்
தோன்றியசெக்கர்வானந்தொடக்கற்றுவீழ்ந்ததொத்தே.

(அந்தப் பாலை) கான் ஆனது (தன் நிலை) திரிந்து ஆழி ஆக, தாடகையின் கடின மார்பத்து ஊன்றிய பகழியின் வாய் ஊடு ஒழுகிய குருதி வெள்ளத்தால், ஆன்ற அ கானம் எல்லாம், அந்தி மாலையில் தோன்றிய செக்கர் வானம் தொடக்கு அற்று (தரையில்) வீழ்ந்தது ஒத்து ஆயின. [கான்-வனம் ஆழி-கடல். ஆன்ற-அகன்ற. செக்கர்வானம்-செவ்வானம். தொடக்கு-ஆதாரம்.]

76. வாச நாண் மலரோ னன்ன மாமுனி பணிம றுத
காசுலாங்கனகப்பைம்பூட்காகுத்தன்கன்னிப்போரிற்
கூசிவா ளரக்கர் தங்கள் குலத்துயிர் குடிக்க வஞ்சி
ஆசையா லுழலுங் கூற்றுஞ் சுவைசிறி தறிந்த தன்றே.

வாசம் பொருந்திய நாள் மலரோன் (ஆகிய பிரம்மன்) அன்ன (விச்வாமித்திர) மாமுனி (இட்ட) பணியை மறுத காசுகள் உலாவும் கனக பைம் பூண்கள் (அணிந்த) (ககுத்தன் மரபில் பிறந்த இராமனாகிய) காகுத்தன் (செய்து வென்ற) கன்னிப்போரில், வாள்களுடைய அரக்கர் தங்கள் குலத்து உயிரை குடிக்க (இதுவரையில்) கூசி அஞ்சி ஆசையுடன் உழலும் கூற்றும் (அரக்கரது) சுவையை சிறிது அறிந்தது. [வாசநாள் மலர்-வாசனை பொருந்திய அன்று மலர்ந்த மலர். காசுலாம் கனகப்பைம்பூண்-இரத்திநங்களிழைத்த பசும்பொன் ஆபரணங்கள். கன்னிப் போர்-முதல்போர், இவ்விடத்தில் சிலேடையாகக் கன்னியுடன் செய்த போருமாம்.]

77. யாமுமெம் மிருக்கை பெற்றே முனக்கிடை யூறு மில்லைக்
கோமகற் கினிய தெய்வப் படைக்கலங் கொடுத்தி யென்னு
மாமுனிக் குரைத்துப் பின்னர் விற்கொண்ட மழைய னுன்மேல்
பூமழை பொழிந்து வாழ்த்தி விண்ணவர் போயி னாரே.

விண்ணவர், "யாமும் எம் இருக்கையை பெற்றேம், முனிக்கு இடையூறும் இல்லை, கோமகற்கு இனிய தெய்வ (தன்மைபொருந்திய) படை கலங்கள் கொடுத்தி" என்று மாமுனிக்கு உரைத்து;

பின்னர் வில்லை (தன்னிடத்தில்) கொண்ட (இராமனாகிய) மழை அன்னான் மேல் பூ மழை பொழிந்து வாழ்த்தி போயினார். [மழை-மேகம்]

---

9. வேள்விப் படலம்.

1. விண்ணவர் போய பின்றை விரிந்தபூ மழையி னாலே
தண்ணெனுங் கான நீங்கித் தாங்கருந் தவத்தின் மிக்கோன்
மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்தன சடையன் வெண்ணெய்
அண்ணறன் சொல்லே யன்ன படைக்கல மருளி னானே.

(இராமனை வாழ்த்தி) விண்ணவர் போயபின் விரிந்த பூமழையினாலே தண் எனும் (அந்த) கானம் நீங்கி, தாங்க அரும் தவத்தில் மிக்கோன் (ஆகிய விச்வாமித்திரன்), மண்ணவர்களது வறுமை ஆகிய நோய்க்கு மருந்து அன்ன வெண்ணெய் (நல்லூரிலுள்ள) சடையன் (என்னும்) அண்ணல் தன் சொல்லே அன்ன படைக்கலங்களை (இராமனுக்கு) அளித்தான். [தண்எனும்-குளிர்ந்திருக்கிற]

ஆறிய வறிஞன் கூறி யளித்தலு மண்ண றன்பால்
ஊறிய வுவகை யோடு மும்பர்தம் படைக ளெல்லாம்
தேறிய மனத்தான் செய்த நல்வினைப் பயன்க ளெல்லாம்
மாறிய பிறப்பிற் றேடி வருவபோல் வந்த வன்றே.

(அரக்கரால் உண்டாகும் துயர்கள்) ஆறிய அறிஞன் (ஆகிய விச்வாமித்திரன், தக்க மந்திரங்களை) கூறி (தேவாஸ்திரங்களை இராமனுக்கு) அளித்தலும், (அந்த) அண்ணல்தன்பால் உம்பர்தம் படைகள் எல்லாம் ஊறிய உவகையோடும் (பயன் விரும்பி) தேறிய மனத்தான் (ஒருவன்) செய்த நல்வினைகளது பயன்கள் எல்லாம் மாறிய பிறப்பில் (அவனை) தேடி வருவனபோல் வந்தன. [உவகை-சந்தோஷம்.]

மேவினம் பிரித லாற்றேம் வீரநீ விதியி னெம்மை
ஏவின செய்து நிற்று மிளையவன் போல வென்று
தேவர்தம் படைகள் செப்பச் செவ்விதென் றவனுநேரப்
பூவைபோ னிறத்தி னாற்குப் புறத்தொழில் புரிந்த வன்றே.

(அவ்வாறு அடைந்த) தேவர்தம் படைகள் (இராமனை நோக்கி), வீரனே, (உன்னிடம்) மேவினம், (இனி உன்னை விட்டு) பிரிதல் ஆற்றேம், விதிப்படி (நீ) எம்மை ஏவின (தொழில்களை உன்) இளையவன்போல (யாம்) செய்து நிற்றும்" என்று செப்ப, (அதற்கு இராமனாகிய) அவனும் 'செவ்விது' என்று நேர (அன்று முதல்

அவ் வஸ்திரங்கள்) (காயாம்) பூவை போல் நிறத்தினுற்கு புறத் தொழில் புறிந்தன.

இனையன நிகழ்ந்த பின்னர்க் காவத மிரண்டு சென்றார்
அனையவர் கேட்க வாண்டோ ரரவமதெழுந்த தாங்கே
முனைவவீ தியாவ தென்று முன்னவன் வினவப் பின்னர்
வினையற நோற்று நின்ற மேலவன் விளம்ப லுற்றான்.

இனையன நிகழ்ந்த பின்னர் (அம் மூவரும்) காவதம் இரண்டு சென்றார். அனையவர் கேட்க ஆண்டு ஓர் அரவம் எழுந்தது. ஆங்கு, முன்னவன் (ஆகிய இராமன்) "முனிவ, ஈது யாவது?" என்று வினவ, பின்னர் வினைகள் அற நோற்று நின்ற (விச்வா மித்திரனாகிய) மேலவன் (பின் வருமாறு) விளம்பல் உற்றான். [காவதம்-காதவழி. நோற்று-தவம் செய்து.]

மானச மடுவிற் றோன்றி வருதலாற் சரயு வென்றே
மேன்முறை யமரர் போற்றும் விழுநதி யதினிேனாடும்
ஆனகோ மதிவந் தெய்து மரவம தென்ன வப்பால்
போனபின் பவங்க டீர்க்கும் புனிதமா நதியை யுற்றார்.

(பிரம்மாவின் மனசினால் செய்யப்பட்டுக் கைலைக்குச் சமீபத்தில் இருக்கும்) "மானசம் (என்னும்) மடுவில் தோன்றி வருதலால் 'சரயு' என்றே மேலான முறையை உடைய அமரர் போற்றும் விழுநதி அதனினோடும் கோமதி (என்னும் நதி) வந்து எய்தும் அரவம் அது" என்ன, அப்பால் போனபின் (முழுகுவோரின்) பவங்களை தீர்க்கும் புனிதம் ஆகும் நதியை (அவர்கள்) உற்றார். [மடு-வாவி. அமரர்-தேவர். விழு-பெருமைபொருந்திய. பவம்-பிறப்பு]

சுரர்தொழு திறைஞ்சற் கொத்த தூநதி யாவ தென்று
வரமுனி தன்னை யண்ணல் வினவுற மலருள் வைகும்
பிரமனன் றளித்தவென் றிப்பெருந் தகைகுசனென்றோதும்
அரசர்கோன் மனைவிதன்பா லளித்தவர் நால்வராகும்.

(சென்றவுடன்) அண்ணல், "சுரர் தொழுது இறைஞ்சற்கு ஒத்த (இந்த) தூ நதி யாவது?" என்று வர (சிரேஷ்டனான) முனிவனை வினவுற, (முனிவன் சொல்லுகின்றான்) "(தாமரை) மலருள் வைகும் பிரமன் அன்று (பெற்று) அளித்த வெற்றி பெரும் தகை யாகிய குசன் என்று ஓதும் அரசர் கோன் தன் மனைவி பால் (பெற்று) அளித்தவர் நால்வர் ஆகும்—[சுரர்-தேவர். இறைஞ்சற்கு-வணங்குதற்கு.]

குசன்குசநாபன்கோதில்குணத்தினதூர்த்தன்கொற்றத்
திசைகெழு வசுவென் றோது மிவர்பெய ரிவர்க டம்மில்
குசன்கவு சாம்பி நாபன் குளிர்மகோ தயம தூர்த்தன்
வசையிறன் மவன மற்றை வசுகிரி விரசம் வாழ்ந்தார்.

"குசன், குசநாபன், கோது இல்லாத குணத்தினனான அதூர்த்தன், கொற்றத்தின் இசை கெழு வசு என்று ஓதும் (நால்வராகிய) இவர் பெயர். இவர்கள் தம்மில் குசன் கவுசாம்பி நகரத்திலும், (குச) நாபன் குளிர்ந்த மகோதய நகரத்திலும், அதூர்த்தன் வசை இல்லாத தன் மவன நகரத்திலும், மற்றை வசு கிரிவிரச நகரத்திலும், (அரசு புரிந்து) வாழ்ந்தார். [கோது, வசை-குற்றம். கொற்றத்திசைகெழு-வெற்றியால் கீர்த்தி பொருந்திய.]

அவர்களிற் குசநா பற்கே யையிரு பதின்ம ரஞ்சொல்
துவரிதழ்த் தெரிவை நல்லார் தோன்றினர் வளரு நாளில்
இவர்பொழிற் றலைக்க ணாயத் தெய்துபு வாயு வெய்திக்
கவர்மனத் தினனா யந்தக் கன்னியர் தம்மை நோக்கி,

(நால்வரான) அவர்களில் குசநாபற்கே அம் சொல்லும் துவர் போன்ற இதழும் உடைய தெரிவைகளாகிய நல்லார் ஐ இருபதின்மர் (நூறுபேர்) தோன்றினர். இவர் வளரும் நாளில் பொழில் தலைக்கண் ஆயத்துடன் எய்த (அங்கு) வாயுபகவான் எய்தி அந்த கன்னியர் தம்மை நோக்கி, (அவர்களை) கவரும் மனத்தினன் ஆய். ......[துவர்-பவளம். இதழ்-அதரம். ஆயம்-தோழியர் கூட்டம். பொழில்-சோலை.]

கொடித்தனிமகரங்கொண்டான்குனிசிலைச்சரத்தானொந்தேன்
வடித்தடங்கண்ணீரென்னைமணத்திரென்றுரைப்பவெந்தை
அடித்தலத் துரைத்து நீரோ டளித்திடி னணைது மென்ன
ஒடித்தனன் வெரிநை வீழ்ந்தா ரொளிவளை மகளிரெல்லாம்

"தனி மகரத்தை கொடியாக கொண்டான் (ஆகிய மன்மதனது) குனிந்த (கரும்பு) சிலை (யில் கோத்து எய்த புஷ்ப) சரத்தால் நொந்தேன். (ஆகையால்) வடித்த தடம் கண்ணீர், என்னை மணத்திர்' என்று (வாயு தேவன்) உரைப்ப (அதற்கு அக்கன்னியர்) 'எம் தந்தை அடி தலத்து உரைத்து (அவர்) நீரோடு (எங்களைக் கன்னிகாதானமாக உமக்கு) அளித்திடின் (நீர் விரும்பியவாறே உம்மை) அணைதும்' என்ன, (வாயு வெகுண்டு அவர்களது) வெரிநை ஒடித்தனன். ஒளி பொருந்திய வளைகளை அணிந்த (அந்த) மகளிர் எல்லாம் (தரையில்) வீழ்ந்தார். [தனி-ஒப்பற்ற. மகரம்-மீன். வடித்த-நீண்ட. தடம்-விசாலமான. வெரிந்-முதுகு.]

சமிரண னகன்ற பின்னர்த் தையலார் தவழ்ந்து சென்றே
அமிர்துகு குதலை மாழ்கி யரசன்மாட் டுரைப்ப வன்னோன்
நிமிர்குழன் மடவார்த் தேற்றி நிறைதவன் சூளி நல்குந்
திமிரறு பிரம தத்தற் களித்தன னிருவ னுரை.

சமிரணன் அகன்ற பின் (அந்த) தையலார் தவழ்ந்து சென்று

அமிர்தம் உகும் குதலை (சொற்கள்) மாழ்கி அரசன்மாட்டு (நடந்ததை) உரைப்ப, அன்னான், நிமிர்ந்த குழலை உடைய மடவாரை தேற்றி, நிறைந்த தவன் (ஆகிய) சூளி (என்பவன் பெற்று) நல்கும் திமிர் அற்ற பிரமதத்தற்கு (அந்த) திரு அன்னாரை (மணம் செய்து) அளித்தனன். [சமிரணன்-வாயு. உகும்-சொரிகின்ற. மாழ்கி-மயங்கி. குழல்-கூந்தல். மடவார்-பெண்கள். திமிர்-அகங்காரம். திரு-இலக்குமி.]

அவன்மலர்க் கைக டீண்டக் கூனுமிர்ந் தழகு வாய்ந்தார்
புவன முற்றுடைய கோவும் புதல்வரில் லாமை வேள்வி
தவர்களிற் புரித லோடுந் தகவுறத் தழலி னாப்பட்
கவனவே கத்து ரங்கக் காதிவந் துதயஞ் செய்தான்.

(பிரமதத்தன் ஆன) அவனது மலர் போன்ற கைகள் தீண்ட (அப் பெண்கள்) கூன் நிமிர்ந்து (முன்போல்) அழகு வாய்ந்தார். புவனம் முற்றும் உடைய (குசநாபன் ஆகிய) கோவும் புதல்வர் இல்லாமையால் (புத்ர காமேஷ்டி) வேள்வியை தவர்களைக் கொண்டு புரிதலோடும் தழலின் நாப்பண் வேகமான கவனத்து துரங்கப் படைகளோடு கூடிய காதி (என்பவன்) தகவு உற வந்து உதயம் செய்தான். [புவனம்-உலகம். கோ-அரசன். நாப்பண்-நடுவில். கவனம்-நடை. துரங்கம்-குதிரை. தகவு உற-அழகு பெற.]

அன்னவன் றனக்கு வேந்த னரசொடு முடியு மீந்து
பொன்னகரடைந்தபின்னர்ப்புகழ்மகோதயத்தில்வாழும்
மன்னவன் காதிக் கியானுங் கவுசிகை யென்னு மாதும்
முன்னர் வந்துதிப்ப வந்த முடியுடை வேந்தர் வேந்தன்.

(குசநாப) வேந்தன் (காதி என்னும்) அன்னவன் தனக்கு அரசொடு முடியும் ஈந்து பொன் நகரை அடைந்த பின்னர், புகழப்படும் மகோதயம் (என்னும் நகரத்தில் வாழும்) மன்னவன் (ஆகிய அந்த) காதிக்கு யானும் கவுசிகை என்னும் மாதும் முன்னர் வந்து உதிப்ப, அந்த (காதியாகிய) முடியை உடைய வேந்தர் வேந்தன், [முடி-கிரீடம். பொன்நகர்-சுவர்க்கம்.]

பிருகுவின் மதலை யாய பெருந்தகைப் பிதாவு மொவ்வா
இருசிக னென்ப வற்கு மெல்லிய லாளை யீந்தான்
அருமறை யவனுஞ் சின்னா ளறம்பொரு ளின்ப முற்றி
விரிமலர்த்தவிசோன்றன்பால்விழுத்தவம்புரிந்துமீண்டான்

(அவ்வாறு நாங்கள் பிறந்து வளரு நாளில் எம் பிதாவாகிய காதி மன்னன்), பிருகுவின் மதலை ஆகிய (தன்) பெரும் தகை பிதாவும் (தவத்தில்) ஒவ்வாத இருசிகன் என்பவற்கு (கவுசிகை ஆகிய) மெல் இயலாளை (மணம் செய்து) ஈந்தான். (அந்த) அரும் மறையவனும்

சில்நாள் அறம் பொருள் இன்பம் முற்றி (பிறகு) விழு தவம் புரிந்து விரிந்த மலர் தவிசோன் (ஆகிய பிரமன்) தன்பால் மீண்டான். [மதலை-புத்திரன். விழு-சிறந்த. தவிசு-ஆசனம்.]

காதலன் சேணி னீங்கக் கவுசிகை தரிக்க லாற்ருள்
மீதுறப் படர லுற்ருள் விழுநதி வடிவ மாகி
மாதவர்க் கரசு நோக்கி மாநிலத் துறுக ணீக்கப்
போதுக நதியா யென்னுப் பூமக னுலகு புக்கான்.

(அப்பொழுது), (தன்) காதலன் சேணில் நீங்க (அதற்கு) கவுசிகை தரிக்கல் ஆற்ருள்ஆய் (ஒரு) விழு நதி வடிவம் ஆகி மீது உற படரல் உற்ருள். (அதை) மாதவர்க்கு அரசு (ஆன இருசிக முனிவன்) நோக்கி 'மா நிலத்து (வசிப்பவர்களது) உறுகண்களை நீக்க நதி ஆய் (நீ) போதுக' என்று பூ மகன் உலகுள் புக்கான். [சேணில்-விண்ணுலகில். உறுகண்-துன்பம்.]

எம்முனு ணங்கை யிந்த விருநதி யாயி னுளென்
றம்முனி புகலக் கேளா வதிசய மிகவுந் தோன்றச்
செம்மலு மிளைய கோவுஞ் சிறிதிடந் தீர்ந்த பின்னர்
மைம்மலி பொழில்யா தென்ன மாதவன் கூறலுற்ருன்

(இவ்விதம்) எம் முன்னுள் (ஆகிய கவுசிகை என்னும்) நங்கை இந்த (சரயுவாம்) இரு நதி ஆயினுள்" என்று அ (விச்வாமித்திர) முனி புகல (அதை) கேட்டு செம்மலும் (இலக்குமணனுகிய) இளைய கோவும் சிறிது (தூர) இடம் (நடந்து) தீர்ந்த பின்னர் (அங்கு கண்ட) "மை மலி பொழில் (இது) யாது" என்ன, மாதவன் (பின் வருமாறு) கூறலுற்ருன். [இரு-பெரிய. மை மலி பொழில்-இருள் மிகுந்த சோலை.]

தங்களு யகரிற் றெய்வந் தவம்பிறி திலவென் றெண்ணும்
மங்கைமார் சிந்தை போலத் தூயது மற்றுங் கேளாய்
எங்களுன் மறைக்குந் தேவரறிவிற்கும் பிறர்க்கு மெட்டாச்
செங்கண்மா லிருந்து மேனுட் செய்தவஞ் செய்த தன்றே.

"(இந்தச் சோலை) தங்கள் நாயகரை விட தெய்வமும் தவமும் பிறிது இல என்று எண்ணும் (கற்பிற் சிறந்த) மங்கைமாரது சிந்தையை போல தூயது. (இதன் பெருமையை) மற்றும் கேளாய். எங்களுக்கு உரிய நால் மறைக்கும் தேவர்களது அறிவிற்கும் பிறர்க்கும் எட்டாதவராகிய (செந்தாமரை போல்) செம் கண்களுடைய திரு) மால் மேல்நாள் இருந்து செய் தவத்தை செய்தது." [தூயது-பரிசுத்தமானது.]

பாரின்பால் விசும்பின் பாலும் பற்றறப் படிப்ப தன்னான்
பேரென்பா னவன்செய் மாயப் பெரும்பிணக் கொருங்கு [தேர்வார்
ஆரென்பா னமலமூர்த்தி கருதிய தறித றேற்றும்
ஈரைம்பா னூழி கால மிருந்தவ மியற்றி யிட்டான்.

பாரின் பால் (உள்ளாரும்) விசும்பின் பால் (உள்ளாரும்) (தமது இருவினைகளாகிய) பற்று அற படிப்பது அன்னான் (ஆகிய திருமாலின்) பேர் (ஆகும்). என்பான் அவன் செய்யும் மாயம் (ஆகிய) பெரும் பிணக்கை ஒருங்கு தேர்வார் ஆர்? (ஒருவருமிலர்). அமலமூர்த்தி என்பான் கருதியது அறிதல் (யாம்) தேற்றும். (ஆனல்) ஈர் ஐம்பான் ஊழிகாலம் (இவ்விடத்தில்) இரும் தவம் இயற்றி இட்டான். [படிப்பது-ஓதுவது. பிணக்கு-மாறுபாடு]

மாவலி வரலாறு.

18. ஆனவ னிங்குறை கின்றவ் நாள்வாய்
ஊனமின் ஞால மொடுங்கு மெயிற்றாண்
ஏனமெனுந் திறன் மாவலி யென்பான்
வானமும் வையமும் வெளவுதல் செய்தான்.

(திருமாலாகிய) ஆனவன் இங்கு உறைகின்ற அ நாள்வாய், ஊனம் இல்லாத ஞாலம் ஒடுங்கும் எயிறு உடைய ஆண் ஏனம் எனும் திறல் (வாய்ந்த) மாவலி என்பான் வானத்தையும் வையத்தையும் (தவத்தால்) வெளவுதல் செய்தான். [ஞாலம், வையகம்-உலகம், எயிறு-தந்தம். ஏனம்-ஆதிவராகம். திறல்-வல்லமை.]

19. செய்தவர் வானவ ருஞ்செய லாற்று
நெய்தவழ் வேள்வியை முற்றிட நின்றான்
ஐயமில் சிந்தைய னந்தணர் தம்பால்
வையமும் யாவும் வழங்க வலித்தான்.

செய் தவர்களும் வானவரும் செய்தல் ஆற்றாத, நெய் (புகை) தவழும் வேள்வியை முற்றிட (எத்தனித்து) நின்றானாய், அந்தணர் தம்பால் வையமும் யாவும் வழங்க ஐயம் இல்லாத சிந்தையன் (ஆக) (மாவலி) வலித்தான். [வலித்தான்-தீர்மானித்தான்.]

20. ஆயத றிந்தனர் வானவ ரந்நாள்
மாயனை வந்து வணங்கி யிரந்தார்
தீயவன் வெந்தொழி றீரென நின்றார்
நாயக னும்மது செய்ய நயந்தான்.

வானவர் ஆயது அறிந்தனர். (அறிந்த) அ நாள் மாயனை வந்து வணங்கி இரந்து (மாவலியாகிய) 'தீயவன் (இழைக்கும்) வெம் தொழில்களை தீர்' என நின்றார். (தேவர்களது) நாயகனும் அதை

செய்ய நயந்தான். [வேள்வி நற்கருமமே யாயினும், இந்திரனது பதவியைப்பெற அவ்வேள்வியை மாவலி செய்தான் ஆகையால், அசுரரிடம் பகை பூண்ட தேவர் அதை வெம் தொழில் என்றுகூறு கின்றனர்.]

21. கால நுனித்துணர் காசிப னுக்கும்
வால திதிக்குமொர் மாமக வாகி
நீல நிறத்து நெடுந்தகை வந்தோர்
ஆலமர் வித்தி னருங்குற ளானான்.

(அவ்வாறு நயந்த) நீலம் நிறத்தையுடைய நெடும்தகை (ஆகிய நெடுமால்). (மூன்று) காலங்களையும் நுனித்து உணரும் காசிப னுக்கும் (அவன் மனைவியாம்) வால் அதிதிக்கும் ஓர் மா மகவு ஆகி வந்து, ஓர் அலமரம் (தன்னுள்) அடங்கிய வித்தைப்போல்அரிய குறள் ஆனான். [வால்-தூய்மையான. காசிபன்-மரீசமுனிவரது புதல்வன், சுரர் அசுரர் மக்கள் விலங்கு பறவை ஊர்வன முதலிய ஜீவகோடிகள் அத்தனையும் இவரிட மிருந்தே உற்பத்தியாயின.]

22. முப்புரி நூலினன் முஞ்சியன் விஞ்சை
கற்பதொர் நாவ னனற்படு கையன்
அற்புத னற்புத ரேயறி யுந்தன்
சிற்பத மொப்பதொர் மெய்க்கொடு சென்றான்.

(குறளாய்ப் பிறந்த நெடுமால்) மூன்று புரிகள் அமைந்த பூணூலி னனும் முஞ்சியனும் (வேதமுதலாகிய) விஞ்சைகளை கற்பது ஆகிய ஓர் நாவனும் (அக்னிஹோத்ரமாகிய) அனல்படும் கையனும் அற் புதனும் (ஆகி). அற்புதரே அறியும் தன் சிற்பதம் ஒப்பது ஆன ஓர் மெய் கொண்டு (மாவலி வேள்விச் சாலைக்கண்) சென்றான். [முஞ்சி-முஞ்சம் புல்லால் செய்த அரைஞாண். அற்புதன்-ஞானஸ்வரூபன். சிற்பதம்-ஞானபதம். மெய்-வடிவம்.]

23. அன்றவன் வந்த தறிந்துல கெல்லாம்
வென்றவன் முந்தி விரைந்தெதிர் கொண்டான்
நின்றனி னந்தண ரில்லை நிறைந்தோய்
என்றனி னுய்ந்தவர் யாரினி யென்றான்.

(வாமனன் ஆகி) அவன் அன்று வந்ததை அறிந்து உலகை எல் லாம் வென்றவன் (ஆகிய மாவலி) வியந்து முந்தி எதிர்கொண்டு "நின்தனின் (சிறந்த) அந்தணர் (வேறு) இல்லை, (உருவம் சிறியதா யினும் தவம்) நிறைந்தோய், (உன்னைத் தரிசிக்கப் பெற்றேனாகை யால்) என்தனின் இனி உய்ந்தவர் யார்" என்றான்.

24. ஆண்டகை யவ்வகை கூற வறிந்தோன்
வேண்டினர் வேட்கையின் மேற்பட வீசி
நீண்டகை யாயினி நின்னுழை வந்தோர்
மாண்டவ ரல்லவர் மாண்பில ரென்றான்.

ஆண்தகை (ஆகிய மாவலி) அ வகை கூற, (அதற்கு) (எல்லாவற்றையும்) அறிந்தோன் (ஆகிய திருமால்) "(வந்து) வேண்டினர்களது வேட்கைக்கு மேல்பட வீசி (வீசிக்கொடுத்து அது காரணமாக) நீண்ட கையாய், இனி, நின் உழைவந்தோர் மாண்டவர் (ஆவர்), அல்லவர் மாண்பு இலர்" என்றான். [வேட்கை-விருப்பம். உழை-இடம். மாண்டவர்-மாட்சிமைப்பட்டவர்.]

25. சிந்தை யுவந்தெதி ரென்செய வென்றான்
அந்தணன் மூவடி மண்ணரு ளுண்டேல்
வெந்திற லாயிது வேண்டு மெனுமுன்
தந்தன னென்றனன் வெள்ளி தடுத்தான்.

(அதைக்கேட்டு மாவலி) சிந்தை உவந்து எதிராக "(நான்) என் செய" என்றான். (அப்பொழுது வாமன) அந்தணன் "மூன்று அடி மண் அருள், வெம் திறலாய், (உன்னிடம்) உண்டேல் (எனக்கு) இதுதான் வேண்டும்" எனுமுன் (மாவலி) "தந்தனன்" என்றனன். (அருகிருந்த) வெள்ளி (உடனே) தடுத்தான். [வெள்ளி-அசுரரது குருவாகிய சுக்ராசாரி.]

26. கண்ட திறத்திது கைதவ மைய
கொண்ட னிறக்குற ளென்பது கொள்ளேல்
அண்டமு முற்று மகண்டமு மேனாள்
உண்டவ னுமி துணர்ந்துகொ ளென்றான்.

(வெள்ளி தடுத்து மாவலியை நோக்கி) "ஐயனே, (நாம்) கண்ட திறத்து இது கைதவம். (இவன்) கொண்டல் நிறம் (வாய்ந்த) குறள் என்பது கொள்ளேல்! அண்டமும் (அவற்றிலுள்ள பொருள்கள்) முற்றும் அகண்டமும் மேல்நாள் (இவன்) உண்டவன் ஆகும்; (கேட்பதைக் கொடுப்பதற்குமுன்) இதை உணர்ந்து கொள்" என்றான். [கைதவம்-கபடம். கொண்டல்-மேகம்.]

27. நினைக்கிலை யென்கை நிமிர்ந்திட வந்து
தனக்கிய லாவகை தாழ்வது தாழ்வில்
கனக்கரி யானது கைத்தல மென்னின்
எனக்கிதன் மேனலம் யாதுகொ லென்றான்.

(அதைக்கேட்ட மாவலி சுக்கிராசாரியை நோக்கி) "(கொடுக்கும்) என் கை நிமிர்ந்து இட, (ஒருபோதும்) தாழ்வு இல்லாத கனம்

போன்ற கரியானது கைத்தலம் தனக்கு இயலாதவகை வந்து (என்னிடம் பெற்றுக்கொள்ள) தாழ்வது எனின், எனக்கு இதன்மேல் நலம் யாது கொல்? (இதை நீ) நினைக்க இல்லையே!'' என்றான். [கனம்-மேகம். இயலாவகை-தகாதவிதம்.]

28. துன்னினர் துன்னல ரென்பது சொல்லார்
முன்னிய நன்னெறி நூலவர் முன்வந்
துன்னிய தான முயர்ந்தவர் கொள்க
என்னி னிவன்றுணை யாவ ருயர்ந்தார்.

(பின்னும் மாவலி கூறுகின்றான்), முன்னிய நல்நெறி (புகலும்) நூலவர் (தானம் கொள்வோரைக் குறித்து இவர்) துன்னினர், (இவர்) துன்னலர், என்பது (ஒரு போதும்) சொல்லார். (நூலறிந்தவர்கள்) உன்னியதானத்தை முன் வந்து உயர்ந்தவர் கொள்க என்னின், இவன் துணை யாவர் உயர்ந்தார்!'' [முன்னிய-மதிக்கும். துன்னினர்-நட்பாளர். துன்னலர்-பகைவர்]

29. வெள்ளியை யாதல் விளம்பினை மேலோய்
வள்ளிய ராகி வழங்குவ தல்லார்
எள்ளுவ தென்சில வின்னுயி ரேனும்
கொள்ளுத றீது கொடுப்பது நன்றால்.

மேலோய், நீ வெள்ளியை ஆதல் (இவ்வாறு) விளம்பினை. வள்ளியராகி (தம்மிடத்திருப்பவைகளை) வழங்குவது அல்லார் சில(பேசிப் பெறுவோரை) எள்ளுவது என்! இன்-உயிரேனும் (பிறரையாசித்து) கொள்ளுதல் தீது. (அதைப் பிறர்யாசிக்குங்கால் மறுக்காமல்) கொடுப்பது நன்று. [வெள்ளி, சுக்கிரன்-கபடமற்றவன். வழங்குவதல்லார்-கொடாதவர். எள்ளுவது இகழ்வது.]

30. மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கண் மாயா
தேந்திய கைகொடி ரந்தவ ரெந்தாய்
வீந்தவ ரென்பவர் வீந்தவ ரேனும்
ஈந்தவ ரல்ல திருந்தவர் யாரே.

('இன்னும்) "எம்தந்தாய், மாய்ந்தவர் (எல்லாரும்) மாய்ந்தவர் அல்லர். ஏந்திய கைகள் கொண்டு இரந்தவர்தாம், கண்மாயாது வீந்தவர் என்பவர். ஈந்தவர், (கண் மாய்ந்து) வீந்தவரேனும் (அவர்) அல்லது இருந்தவர் யாரே''! [வீந்தவர்-இறந்தவர். இரந்தவர்-யாசித்தவர். கண்மாயாது-கண்மூடாமல்]

31. அடுப்ப வரும்பழி செய்ஞ்ஞரு மல்லர்
கொடுப்பவர் முன்பு கொடேலென நின்று
தடுப்பவ ரேபகை தம்மையு மன்னர்
கெடுப்ப ரன்னதோர் கேடிலை யென்றான்.

"அடுப்ப அரும் பழியை (ஒருவனுக்கு) செய்ஞ்ஞரும் (கூட அவனுக்குப் பகைவர்) அல்லர். (பின் யார் பகைவர் எனின்) கொடுப்பவர்களுக்கு முன்பு நின்று 'கொடேல்' என தடுப்பவரே பகை (ஆகும்). (தடுக்கும்) அன்னர், தம்மையும் (ஈதல் விலக்கல் என்னும் பாவத்தால்) கெடுப்பவர் (ஆவர்). (தன்னையும் கெடுத்துப் பிறரையும் கெடுக்கக்கூடியதால்) அன்னது ஓர் கேடு வேறு இல்லை" என்றான் (மாவலி).

32. கட்டுரை யிற்றம கைத்துள போழ்தே
இட்டிசை கொண்டற மெய்த முயன்றோர்
உட்டெறு வெம்பகை யாவது லோபம்
விட்டிட லென்று விலக்கினர் தாமே.

"தமது கைத்து உளபோழ்தே (அதை இரப்போர்க்கு) இட்டு (இம்மையில்) இசை கொண்டு (மறுமையில்) அறம் எய்த முயன்றோர்களை உள் (நின்று) தெறுகின்ற வெம்பகை ஆவது உலோபம். (ஆகையால், அந்தக்குணத்தை) விட்டிடல் என்று (மேலோர்) தாம் (தம்) கட்டு உரையால் விலக்கினர்." [கைத்து-பொருள். இசை-புகழ். கட்டுரை-உறுதிவார்த்தை. விட்டிடல்-விட்டு விடக் கடவீர்.]

33. எடுத்தொரு வருக்கொருவ ரீதனின் முன்னே
தடுப்பது நினக்கழகி தோதகவில் வெள்ளி
கொடுப்பது விலக்குகொடி யோயுனது சுற்றம்
உடுப்பதுவு முண்பதுவு மின்றிவிடு கின்றாய்.

(முடிவில் மாவலி) "ஒருவருக்கு ஒருவர் எடுத்து ஈதனின் முன்னே, தகவு இல்லாத வெள்ளியே, (அதை) தடுப்பது (ஆசாரியனுக்கு) நினக்கு அழகிதோ! கொடுப்பதை விலக்கும் கொடியோய், உனது சுற்றத்தை உடுப்பதும் உண்பதும் இன்றி (கெடுத்து) விடுகின்றாய்" (என்று சினந்து கூறினான்). [தகவு-நடுவுநிலை.]

குறிப்பு:—கம்பர் குறட்பாக்களின் கட்டுரைகளை எடுத்துப் பல விடங்களில் கையாண்டிருக்கின்றனர். இது "கொடுப் பதழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ முண்பதூஉ மின்றிக் கெடும்" என்னும் குறளைப் பின்பற்றியது.

34. முடியவிம் மொழியெலா மொழிந்து மந்திரி
கொடியனென் றுரைத்தசொ லொன் றுங்கொண்டிலன்
அடியொரு மூன்றுநீ யளந்து கொள்கென
நெடியவன் குறியகை நீரி னீட்டினான்.

(மாவலி) இ மொழி எல்லாம் முடிய மொழிந்து (தன்) மந்திரி (ஸ்தானத்தில் தடுத்த சுக்கிரன்) 'கொடியன்' என்று (மதித்து)

உரைத்த சொல் ஒன்றும் (ஏற்று) கொண்டிலனாய், (வாமனனை நோக்கி) " அடி ஒரு மூன்று நீயே அளந்து கொள்க " என, (திருமாலாகிய) நெடியவனது குறிய கைகளில் (தானநீரை) நீட்டினான்.

35. கயந்தரு நறும்புனல் கையிற் றீண்டலும்
பயந்தவர் களுமிகழ் குறளன் பார்த்தெதிர்
வியந்தவர் வெருக்கொள விசும்பி னோங்கினான்
உயர்ந்தவர்க் குதவிய வுதவி யொப்பவே.

கயம் தரும் நறும் புனல் (நெடியவன்) கையில் தீண்டலும், (தன்னை) பயந்தவர்களும் இகழும் குறளன் (தன்னை) எதிரில் (இவ்வளவு சிறியவனும் இருத்தல் கூடுமோ என்று) வியந்தவர், (இப்பொழுது) வெரு கொள்ள, (அறிவு ஒழுக்கங்களால்) உயர்ந்தவர்க்கு உதவிய உதவியை ஒப்ப, விசும்பு வரை ஓங்கினான். [கயம்-குளம். வெரு-அச்சம். பயந்தவர் பெற்றவர்.]

குறிப்பு :—இச்செய்யுளின் நான்காம் அடி " உதவி வரைத்தன் றுதவி யுதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து " என்னும் குறளின் கருத்தைத் தழுவியுள்ளது.

36. நின்றகால் மண்ணெலா நிரப்பி யப்புறம்
சென்றுபா விற்றிலை சிறிது பாரென
ஒன்றவா னகமெலா மொடுக்கி யும்பரை
வென்றகால் மீண்டது வெளியே ருமையால்.

(இவ்வாறு திருமால் திரிவிக்கிரம ரூபம் எடுக்க) மண் எலாம் நிரப்பி நின்ற (அவரது) கால் (ஒன்று) அப்புறம் சென்று பாவிற்று இல்லை. பார் சிறிது என (சென்று) வான் அகம் எல்லாம் (தன்னில்) ஒன்ற ஒடுக்கி உம்பரை வென்ற (மற்ற) கால் (மூன்றாவது அடி அளப்பதற்கு) வெளி (இடம்) பெருமையால் மீண்டது. [உம்பர்-விண் உலகு]

37. உலகெலா முள்ளடி யடக்கி யோரடி
அலகிலா தவ்வடிக் கன்பன் மெய்யதாம்
இலைகுலாந் துழாய்முடி யேக நாயகன்
சிலைகுலாந் தோளினாய் சிறியன் சாலவே.

உலகு எல்லாம் (மேற்சொன்னபடி இரண்டு) அடி உள் அடக்கி, (மற்று) ஓர் அடிக்கு அலகு இடம் இல்லாது (போக), அ அடிக்கு, அன்பன் (ஆன மாவலியின்) மெய் அது ஆகும் (எனவே) சிலை குலாவும் துழாய் முடியுடைய ஏக நாயகன் சால சிறியன் ! (அல்லவா !) [அலகு-அளவு. சால-மிகவும்] [மூன்றாமடிக்கு அளவுஇடம்

அடியேன் முடிதான் இருக்கிற தென்று மாவலி இயம்ப, பகவான் அதில் தன் திருவடியை வைத்தழுத்தினர் என்பது சரித்திரம்]

38. உரியதிந் திரற்கிதென் றுலக மீந்துபோய்
விரிதிரைப் பாற்கடற் பள்ளி மேவினன்
கரியவ னுலகெலாங் கடந்த தாளிணை
திருமகள் கரந்தொடச் செவந்து காட்டவே.

(மாவலியைப்பாதாளத்தில் அழுத்தியபின்) கரியவன், இந்திரற்கு 'இது உரியது' என்று (மாவலிபால்கொண்ட) உலகத்தை (அவனுக்கு) ஈந்து போய், உலகம் எல்லாம் கடந்த தாள் இணைகளை திருமகள் (சிரமபரிகாரமாக வருடி) கரம் தொட (அவை அதற்கும்) செவந்து காட்ட, விரிந்த திரைகளையுடைய பால்கடலில் (சர்ப்ப) பள்ளியில் மேவினன்.

39. ஆதலா லருவினை யறுக்கு மாரிய
காதலாற் கண்டவர் பிறவி காண்குறுர்
வேதநூன் முறைமையால் வேள்வி முற்றுவேற்
கீதலா தில்லைவே றிருக்கற் பாலதே.

(திருமால் இருந்து தவம்செய்த சோலை இது) "ஆதலால், (பிறரால் அறுத்தற்கு) அரிய (இரு) வினைகளை அறுக்கும் ஆரியனே, (இச்சோலையை) காதலோடு கண்டவர் (மறு) பிறவியை காண்கு உறுர். வேதம்நூல் முறைமைபடி வேள்வி முற்றும் எனக்கு இருக்கற்பாலது (ஆன இடம்) இது அல்லாது வேறு இல்லை." [காதலால்-பக்தியுடன். காண்குறுர்-காணமாட்டார்கள்]

40. ஈண்டிருந் தியற்றுவன் யாகம் யானெனு
நீண்டபூம் பழுவத்து நெறியி னெய்திப்பின்
வேண்டுவ கொண்டுதன் வேள்வி மேவினன்
காண்டகு குமரரைக் காவ லேவியே.

[காண்தகு-காண்வதற்குத்தகுந்த அழகு வாய்ந்த. பழுவம்-வனம்].

41. எண்ணுதற் காக்கரி திரண்டு மூன்றுநாள்
விண்ணவர்க் காக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற விமையிற் காத்தனர்.

(பிறரால்) எண்ணுதற்கும் ஆக்குதற்கும் அரியதாய் (விச்வாமித்திர) முனிவன் விண்ணவர்க்கு ஆக்கிய வேள்வியை, மண்ணினை காக்கின்ற மன்னன் (ஆகியதயரதன்) மைந்தர்கள், இரண்டு மூன்று நாள் கண்ணினை காக்கின்ற இமைபோல் காத்தனர்.

குறிப்பு:—மேலிமை கீழிமை என்னும் கண்ணிமை இர

ண்டில், பெரியவனாகிய இராமன் மேல்இமைபோல் ஆசிரமத்தைச் சுற்றிவந்து இராக்கதர் உபத்திரவம் செய்யாமல் தடுத்தான் என்றும், கீழிமைபோல் இளையவன் ஆசிரமத்தின் வாசலிலேயே நின்று காத்தான் என்றும், இமைக்கும்கால் மேலிமை கீழிமையைத் தீண்டுவதுபோல், இராமன் இலக்குமணனை அடிக்கடி தட்டிச் சாக்கிரதை கூறினானென்றும், இச்செய்யுளில் அமைந்துள கண்இமை உபமானத்தை விரித்துக் கம்பரே பொருள் படுத்தியுளதாக ஒரு அபவாதம் உண்டு. இது சுவைக்கவில்லை. மேலும் இதுவரையில் அரக்கர் வரவில்லை என்பதும் பின் பாசுரத்தால்தெரிகின்றபடியால் இந்த அர்த்தம் ஒவ்வாது. பார்க்கப்போனால் கண்ணும் இமையும் ஒரே உறாப்பின்பால் படுமாகையால், "எஞ்ஞே வை விஷ்ணு" என்னும் வேதவாக்கின்படி இராமன் தன்னையேதான் காத்துக்கொண்டான் என்று கம்பர் குறிப்பாகக் கூறுவதாகக் கொள்ளும்பொருளே சிறந்ததாகும்.

42. காத்தனர் திரிகின்ற காளை வீரரில்
மூத்தவன் முழுதுணர் முனியை முன்னிநீ
தீத்தொழி லியற்றுவ ரென்ற தீயவர்
ஏத்தருங் குணத்தினாய் வருவ தென்றென்றான்.

(இவ்வாறுயாகத்தை) காத்தனர்களாய் திரிகின்ற காளைப் பருவமுடைய வீரரில் மூத்தவன் (மெய்ப்பொருள்) முழுதும் உணர்ந்த முனிவனை முன்னி, "ஏதரும் குணத்தினாய், நீ தீ தொழில் இயற்றுவர் என்ற தீயவர் வருவது என்று?" என்றான். [ஏ-உயர்ச்சி. தரும்-பொருந்திய].

43. வார்த்தைமா றுரைத்திலன் முனிவன் மௌனியாய்ப்
போர்த்தொழிற் குமரனுந் தொழுது போந்தபின்
பார்த்தனன் விசும்பினைப் பருவ மேகம்போல்
ஆர்த்தன ரிடித்தன ரசனி யஞ்சவே.

(அந்தக் கேள்விக்கு) முனிவன் மௌனி ஆய் மறு வார்த்தை உரைத்திலன். போர் தொழில் (பூண்ட) குமரனும் (முனிவனை) தொழுது போந்தபின் விசும்பினை பார்த்தனன். (அங்கு), (கார்) பருவ மேகம்போல் அரக்கர் ஆர்த்தனர், அசனி அஞ்ச இடித்தனர்.

44. எய்தன ரெறிந்தன ரெரியு நீருமாப்
பெய்தனர் பெருவரை பிடுங்கி வீசினர்
வைதனர் தெழித்தனர் மழுக்க ளோச்சினர்
செய்தன ரொன்றலாத் தீய மாயமே.

[தெழித்தனர்-அதட்டினர். மழு-எரிஇரும்பு, அல்லது பரசு ஆயுதம்]

45. ஊனகு படைக்கல முருத்து வீசின
கானக மறைத்தன கால மாரிபோல்
மீனகு திரைக்கடல் விசும்பு போர்த்தென
வானக மறைத்தது வளைந்த சேனையே.

(அரக்கர்) உருத்து வீசின ஊன்உடன் நகும் படைக்கலங்கள் (ஊழி) கால மாரிபோல் கானகத்தை மறைத்தன. (மேல்வந்து) வளைந்த (அரக்கர்) சேனை, மீன்கள் நகும் திரைகளுடைய கடல் விசும்பை போர்த்தது என வானகத்தை மறைத்தது. [உருத்து-கோபித்து. ஊன்-மாமிசம். நகும்-விளங்கும்].

46. வில்லொடு பகழிவா ணிடைந்து லாவிடப்
பல்லியங் கடிப்பினி னிடிக்கும் பல்படை
ஒல்லென வுரறிய வூழிப் பேர்ச்சியுள்
வல்லைவந் தெழுந்ததோர் மழையும் போன்றவே.

வில்லொடு பகழியும் வாளும் மிடைந்து உலாவிட, பல் இயங்கள் கடிப்பினின் இடிக்கும் (அரக்கரது) பல படை ஒல் என உரறியன. (அவை) ஊழிக்காலத்தில் (உண்டாகும்) பேர்ச்சிஉள் வல்லை வந்து எழுந்தது (ஆன) ஓர் மழையும் போன்றன. [இயம்-வாத்தியம் கடிப்பு-குறுந்தடி. உரறிய-ஒலித்தன. வல்லை-கடிதில்].

47. கவருடை யெயிற்றினர் கடித்த வாயினர்
துவர்நிறப் பங்கியர் சுழல்கட் டீயினர்
பவர்சடை யந்தணன் பணித்த தீயவர்
இவரென விலக்குவற் கிராமன் காட்டினான்.

பவர்சடை அந்தணன்-அடர்ந்த சடையுடைய விச்வாமித்திரன். பங்கி-தலைமயிர். கவர்-பிளவு]

48. கண்டவக் குமரனுங் கடைக்கண் டீயுக
விண்டனை நோக்கித்தன் வில்லை நோக்கினான்
அண்டர்நா யகவினிக் காண்டி யீண்டிவர்
துண்டம்வீழ் வனவெனத் தொழுது சொல்லினான்.

49. தூமவே லரக்கர்தந் நிணமுஞ் சோரியும்
ஓமவெங் கனலிடை யுகுமென் றுன்னியே
தாமரைக் கண்ணனுஞ் சரங்க ளேகொடு
கோமுனி யிருக்கையோர் கூட மாக்கினான்.

[தூமம்-புகை. நிணம்-மாமிசம். சோரி-இரத்தம்.]

50. நஞ்சட வெழுதலு நடுங்கி நாண்மதிச்
செஞ்சடைக் கடவுளை யடையுந் தேவர்போல்
வெஞ்சின வரக்கரை வெருவி மாதவர்
அஞ்சன வண்ணநின் னபயம் யாமென்றார்.

(பாற் கடல் கடையும்கால் உண்டான ஆலகால) நஞ்சு அட எழுதலும் நடுங்கி (பரமசிவனாகிய) நாள் மதி (தரித்த) செம் சடை (விளங்கும்) கடவுளை அடையும் தேவரை போல், (அங்கிருந்த) மாதவர்கள் வெம் சினம்உடைய அரக்கருக்கு வெருவி (இராமனை அடைந்து) ' அஞ்சன வண்ணனே யாம் நின் அபயம் " என்றனர். [நாள்-புதிய. அஞ்சனம்-நீலம் அல்லது கறுப்பு நிறம்]

51. கவித்தனன் கரதலங் கலங்க லீரெனச்
செவித்தல நிறுத்தினன் சிலையின் றெய்வநாண்
புவித்தலங் குருதியின் புணரி யாக்கினன்
குவித்தன னரக்கர்தஞ் சிரத்தின் குன்றமே.

(அம்முனிவரை நோக்கி இராமன்) ' கலங்கலீர் ' என (தன்) கரதலம் கவித்தனன். (பின்) சிலையின் தெய்வ நாணை (இழுத்து) செவிதலத்தில் நிறுத்தினன். (உடனே) புவிதலத்தை குருதியால் புணரி ஆக்கினன். அரக்கர்தம் சிரங்களை (அறுத்து) குன்றம்போல் குவித்தனன். [கரதலம் கவித்தனன்-கை அமைத்து அருளினன். குருதி-இரத்தம். புணரி-கடல்].

52. திருமக ணாயகன் றெய்வ வாளிதான்
வெருவரு தாடகை பயந்த வீரர்கள்
இருவரி லொருவனைக் கடலி னிட்டதங்
கொருவனை யந்தக புரத்தி லுய்த்ததே.

[வாளி-அஸ்திரம். வெரு-அச்சம். அந்தகபுரம்-யமபட்டினம்.]

53. துணர்த்தபூந் தொடையலான் பகழி தூவினான்
கணத்திடை விசும்பினைக் கவித்துத் தூர்த்தலால்
பிணத்திடை நடந்திவர் பிடிப்ப ரீண்டென
உணர்த்தின ரொருவர்மு னொருவ ரோடினார்.

துணர்த்த பூம் தொடையலான் (ஆகிய இராமன்) பகழிகளை தூவினான், (அவ் வம்புகள்) கணம் இடை விசும்பினை கவித்து தூர்த்தலால், (குவியலாகிக் குன்றுபோல் இருக்கிற) பிணத்தின் இடை இவர் ஈண்டு (வந்து நம்மை) பிடிப்பர் என (அரக்கர்கள் உணர்த்தினவர்களாய் ஒருவர் முன் ஒருவர் ஓடினார். [துணர்-பூங்கொத்து. தொடையல்-மாலை. தூர்த்தல்-அடைத்தல்].

54. ஓடின வரக்கரை யுருமின் வெங்கணை
கூடின குறைத்தலை மிறைத்துக் கூத்துநின்
றாடின வலகையு மையன் கீர்த்தியைப்
பாடின பரந்தன பறவைப் பந்தரே.

(அவ்வாறு) ஓடின அரக்கரை (இராமனது) உருமுபோன்ற வெம் கணைகள் (துரத்தி) கூடின. குறைத்தலைகள் மிறைத்து நின்று கூத்து ஆடின. அலகைகளும் (இராமனுகிய) ஐயனது கீர்த்தியை பாடின. (கழுகுமுதலிய) பறவைகள் பந்தல்போல் பரந்தன. [உருமு-இடி. குறைத்தலை-கவந்தம், தலை அற்ற உடல். மிறைத்து-குதித்து. அலகை-பிசாசு].

55. பந்தரைக் கிழித்துப் பரந்த பூமழை
அந்தர துந்துபி முகிலி னார்த்தன
இந்திரன் முதலிய வமர ரீண்டினர்
சுந்தர வில்லியைத் தொழுது வாழ்த்தினர்.

[சுந்தரவில்லி-அழகிய கோதண்டம் தாங்கிய இராமன். முகிலின்-மேகம்போல்].

56. புனித மாதவ ராசியின் பூமழை பொழிந்தார்
அனைய கானத்து மரங்களு மலர்மழை சொரிந்த
முனியு மவ்வழி வேள்வியை முறைமையின் முற்றி
இனிய சிந்தையி னிராமனுக் கினையன விசைத்தான்.

57. பாக்கி யம்மெனக் குளதென நினைவுறும் பான்மை
போக்கி நிற்கிது பெருளென வுணர்கிலேன் புவனம்
ஆக்கி மற்றவை யகிலமு மணிவயிற் றடக்கிக்
காக்கு நீயொரு வேள்விகாத் தனையெனுங் கருத்தே.

"(ஏ ராமா) புவனங்களை ஆக்கி அவை அகிலமும் (பிரளயகாலத்தில் உன்) மணி வயிற்றில் அடக்கி காக்கும் நீ (எனது) ஒரு வேள்வியைகாத்தனை என்னும் கருத்தானது, எனக்கு (அப்படிப் பட்ட நீ என்யாகத்தைக் காக்க வரத்தக்க) பாக்கியம் உளது என நினைவு உறும் பான்மையது. (அக்கருத்தை) போக்கி நிற்கு (சிறியதோர்யாகத்தைக் காத்தலாகிய) இது ஒரு பொருள் என நான் உணர்கிலேன்."

58. என்று கூறிய பின்னரவ் வெழின்மலர்க் கானத்
தன்று தானுறைந் தருந்தவ முனிவரோ டிருந்த
குன்று போற்குணத் தானெதிர் கோசலைக் குரிசில்
இன்றுயான்செயும்பணியென்கொல்பணியெனவிசைத்தான்.

என்று (விச்வாமித்திரன் முகமன்) கூறிய பின்னர் அ எழில்

உடைய மலர் (நிறைந்த) கானத்தில் அன்று உறைந்து அரும் தவ முனிவரோடு இருந்த கோசலை நாட்டு குரிசில், குன்றுபோல் (சலனமற்ற) குணத்தான் (ஆகிய விச்வாமித்திரன்) எதிரில்வந்து "இன்று யான் செய்யும் பணி என் கொல் (அதை) பணி (த்தருள்)" என இசைத்தான். [எழில்-அழகு. குரிசில்-இளவரசன்],

59. அரிய யான்சொலி னையநிற் கரியதொன் றில்லை
பெரிய காரிய முளவவை முடிப்பது பின்னர்
விரியும் வார்புனன் மருதஞ்சூழ் மிதிலையர் கோமான்
புரியும் வேள்வியுங் காண்டுநா மெழுகென்று போனார்.

(அதற்கு விச்வாமித்திரன், செய்தற்கு) அரியவை (என்று நினைத்து) நான்சொல்லினும் ஐயனே, நிற்கு அரியது ஒன்று இல்லை. (நீ இன்னும் செய்வதற்கு) பெரிய காரியம் உள, அவை பின்னர் முடிப்பது. (ஆனால், இப்பொழுது அதற்கு ஆரம்பமாம்) விரியும் வார் புனல் (வளமுள்ள) மருதம்(நிலம்) சூழ்ந்த மிதிலையர் கோமான் (ஆகிய ஜனகன்) புரியும் வேள்வியையும் நாம் காண்தும், எழுக" என்று (கூறி) (அம்மூவரும்) போனார். [பெரியகாரியம் என்பது பின் இராவண ஸம்ஹாரத்தைக்குறித்து]

10 அகலிகைப் படலம்

சோணையாற்றிற்கும் பெண்ணிற்கும் சிலேடை.

1. அலம்பு மாமணி யாரத்தோ டகிலளை புளின
நலம்பெய் பூண்முலை நாகிள வஞ்சியா மருங்குல்
புலம்பு மேகலைப் புதுமலர்ப் புனையறற் கூந்தல் [தார்
சிலம்பு சூழுங்காற் சோணமாந் தெரிவையைச் சேர்ந்

(யாகம் நிறைவேறியபின் மிதிலை நோக்கிப்புறப்பட்ட விசுவாமித்திரர் இராமர் இலக்குமணர் ஆகிய மூவரும் வழியில்) அலம்பும் மாமணிகளும் ஆரமும் அகிலும் அளைந்த புளினங்களை, நலம் பெய்த (ஆபரணங்கள்) பூண்ட முலைகளாகவும், நாகு இள வஞ்சியை மருங்குல் ஆகவும், (அலைகளை) புலம்பும் மேகலைளாகவும், புது மலர்கள் புனைந்த அறலை கூந்தலாகவும், சிலம்பு சூழும் கால்களையும் உடைய சோணம் ஆகும் (நதியாகிய) தெரிவையை சேர்ந்தார். [அலம்பும்-அசைகின்ற. ஆரம்-சந்தனம். புளினம்-மணல்குன்று. நாகு இள-மிகவும் இளமை பொருந்திய. வஞ்சி-பூங்கொடி. மருங்குல்-இடை அறல்-கருமணல். சிலம்பு சூழும்கால்-பெண்ணைக்குறிக்கும்போது சிலம்பாகிய அணி பொருந்திய கால் எனவும் நதியைக்குறிக்கும் போது மலையைச் சூழ்ந்த வாய்க்கால் எனவும் பொருள்படும். சோணம்-சரசுவதியாறு. தெரிவை-பெண்.]

அவர்கள் நதியண்டை வந்து சேரச் சூரியனும் அஸ்தமித்தான்.

2. நதிக்கு வந்தவ ரெய்தலு மருணன்ற னயனக்
கதிக்கு முந்துறு கலினமான் றேரொடுங் கதிரோன்
உதிக்குங் காலையிற் றண்மைசெய் வான்றன துருவிற்
கொதிக்கும்வெம்மையையாற்றுவான்போற்கடற்குளித்தான்.

அவர் வந்து நதியை எய்தலும், (சாரதியாகிய) அருணன் தன் நயனத்தின் கதிக்கு முந்து உறும் (வேகமுடைய) கலினம் (பூட்டிய) மா (கட்டிய) தேரொடும் கதிரோன், உதிக்கும் காலையில் தண்மை செய்ய தன்து உருவில் கொதிக்கும் வெம்மையை ஆற்றுவான்போல் கடலில் குளித்தான். [நயனகதி-கண்வேகம். கலினம்-கடிவாளம்.]

3. கறங்கு தண்புனற் கடிநெடுந் தாளுடைக் கமலத்
தறங்கொ ளாண்மலர்க் கோயில்க ளிதழ்க்கத வடைப்பப்
பிறங்கு தாமரை வனம்விட்டுப் பெடையொடு களிவண்
டுறங்கு கின்றதோர் நறுமலர்ச் சோலைபுக் குறைந்தார்.

கறங்கும் தண் புனலில் கடி நெடும் தாளை உடைய கமலத்தின் நாள் மலர்களாகிய (தேன் உதவும்) அறம்கொண்ட கோயில்கள் இதழ்களாகிய (தம்) கதவை (சூரியாஸ்தமனமான போது) அடைப்ப, (அதனால்) களிவண்டுகள் தம் பெடைகளோடு பிறங்கும் தாமரை வனத்தை விட்டு வந்து உறங்குவதாகிய ஓர் நறும் மலர் சோலைபுக்கு உறைந்தார். [கறங்கும்-சுழல்கின்ற. கடி, நறும்-வாசனை பொருந்திய. நாள்-புதிய. பிறங்கும்-விளங்குகின்ற.]

4. இனைய சோலைமற் றியாதென விராகவன் வினவ
வினையெ லாமற நோற்றவன் விளம்புவான் மேனாள்
தனைய ரானவர்க் கிரங்கியே காசிபன் றனது
மனையு ளாடவம் புரிந்தன ளிவணென வலித்தான்.

'இனைய சோலை யாது?' என இராகவன் வினவ, (அதற்கு) வினைகள் எல்லாம் அற நோற்றவன் (ஆகிய விச்வாமித்திரன்) விளம்புவானாய் "மேல் நாள் (தன்) தனையர் ஆனவர்க்கு இரங்கி காசிபன்தனது மனையுளாள் (ஆகிய திதி) இவண் தவம் புரிந்தனள்" என வலித்தான். [நோற்றவன்-தவம் செய்தவன்.]
இதுமுதல் 30-வது பாசுரம் வரையில் விச்வாமித்திரர் வாக்கு. திதி அச்சோலையில் தவம் செய்ய நேர்ந்த வண்ணத்தைக் கூறுகின்றார்.

5. அண்ட கோளகைக் கப்புறத் தென்னையா ளுடைய
கொண்ட னீள்பதத் தெய்தியோர் விஞ்சையர் கோதை
புண்ட ரீகமென் பதத்தியைப் புகழ்ந்தனள் புகழ
வண்ட றுமது மாலைகைக் கொடுத்தனள் மகிழ்ந்து.

ஓர் விஞ்சையர் கோதை, அண்ட கோளகைக்கு அப்புறத்து (உள்ள) என்னை ஆளுடைய கொண்டல் (போன்ற நாராயணனது) நீண்ட பதத்தை எய்தி, (அங்கு) புண்டரீகம் போன்ற மெல் பாதத்தையுடைய இலக்குமியை புகழ்ந்தனள். புகழ (அவள்) வண்டுகள் அருந்த மது பொருந்திய மாலையை (அந்த வித்தியாதர மாதின்) கையில் மகிழ்ந்து கொடுத்தனள். [கொண்டல்-மேகம்.]

6. அன்ன மாலையை யாழிடைப் பிணித்தய னுலகங்
கன்னி மீடலுங் கசட்டுறு முனியெதிர் காணு
வென்னை யாளுடை நாயகிக் கிசையெடுப் பவளென்
றன்ன டாளிணை வணங்கிநின் றேத்தலு மனையாள்.

(அந்தவித்தியாதர) கன்னி(திருமகளிடம்பெற்ற)அன்னமாலையை (தன்) யாழின் இடையில் பிணித்து அயன் உலகத்திற்கு மீள்தலும், (கோபம் ஆகிய) கசடு உற்ற (துர்வாசமுனி) (அவளை) எதிர்கண்டு, 'என்னை ஆளுடைய நாயகிக்கு இவள் இசை எடுப்பவள்' என்று அன்னள் தாள் இணைகளை வணங்கி நின்று ஏத்தலும், அனையாள்— [கசடு-குற்றம். இசை எடுப்பவள்-கீதம்பாடுகின்றவள்].

7. உலகம் யாவையும் படைத்தளித் துண்டுமி ழொருவன்
இலகு மார்பகத் திருந்துயிர் யாவையு மீன்றாள்
திலக வாணுதற் சென்னியிற் சூட்டிய தெரியல்
அலகின் மாமுனி பெறுகென வளித்தன ளளியால்.

"(தவத்தில்) அலகு இல்லாத மா முனியே, உலகம் யாவையும் படைத்து அளித்து உண்டு உமிழும் (இறைவனாகிய) ஒருவனது இலகும் மார்பின் அகத்தில் இருந்து உயிர் யாவையும் ஈன்றாள் (ஆகிய) திலகம் அணிந்த வாள் பொருந்திய நுதல் ஓடும் கூடிய பெரிய பிராட்டியின் சென்னியில் சூட்டிய தெரியல் (ஆன இதை நீ) பெறுக" என அளியால் அளித்தனள் [அலகு-அளவு. இலகும் பிரகாசிக்கும். வாள்-ஒளி. தெரியல்-மாலை. அளி-கிருபை].

8. தெய்வ நாயகி சென்னியிற் சூட்டிய தெரியல்
ஐய யான்பெறப் புரிந்ததெத் தவமென வாடி
வெய்ய மாமுனி சென்னியிற் சூடியே வினைபோய்
உய்யு மாறிதென் றுவந்துவந் தும்பர்நா டடைந்தான்.

(அந்த மாலையைப்பெற்ற) வெய்ய மா (துர்வாச) முனி, ஐய! தெய்வநாயகி சென்னியில் சூட்டிய தெரியலை யான் பெற புரிந்தது [illegible] (ஆனந்தத்தால் கூத்து) ஆடி (அதைத்தன்) சென்னியில் சூடி 'வினைகள் போய்(நான்)உய்யும் ஆறு இது' என்று உவந்து வந்து உம்பர் நாட்டை அடைந்தான். [ஐய-என்ன ஆச்சரியம். வெய்ய-கொடுங்கோபியாகிய. உம்பர்-தேவர்]

9. பெய்யு மாமுகில் வெள்ளியம் பிறங்கன்மீப் பிறழுஞ்
செய்ய தாமரை யாயிர மலர்ந்துசெங் கதிரின்
மொய்யசோதியைமிலைச்சியமுறைமைபோன்றொளிரும்
மெய்யி னோடயி ராவதக் களிற்றின்மேல் விளங்க.

(அடைந்து, இந்திரன்), (மழை) பெய்யும் மா (கரு) முகிலானது, அம் வெள்ளி பிறங்கல் மீது பிறழும் செய்ய தாமரை ஆயிரம் மலர்ந்து செம் கதிரின் மொய்ய சோதியை மிலைச்சிய முறைமை போன்று ஒளிரும் மெய்யினோடு அயிராவதம் (என்கிற) களிற்றின் மேல் விளங்கவும், [பிறங்கல்-மலை. பிறழும்-பிரகாசிக்கும். கதிர்-சூரியன். மொய்ய-நெருங்கிய. மிலைச்சிய-சூடிய. களிறு-ஆண்யானை வெள்ளிமலை அயிராவதத்திற்கும், மேகம் இந்திரனிற்கும், தாமரை அவனது கண்களுக்கும், சூரியன் ஒளி அவனது ஆபரணங்களுக்கும் உவமையாகின்றன].

10. அரம்பை மேனகை திலோத்தமை யுருப்பசி அனங்கன்
சரம்பெய் தூணியிற் றளிரடி நூபுரந் தழைப்பக்
கரும்பை யுஞ்சுவை கைப்பித்த குதலையர் விளரி
நிரம்பு பாடலோ டாடினர் வீதிக ணெருங்க.

கரும்பையும் சுவையில் கைப்பித்த குதலை மொழியர், ஆகிய அரம்பை மேனகை திலோத்தமை உருப்பசி (நால்வரும்) விளரி (என்னும் பண்) நிரம்பும் பாடலோடு அனங்கனது சரங்களை பெய் (வதற்குரிய அம்புறு) தூணி போன்ற கணைக்காலோடு கூடிய தளிர்போன்ற அடிகளில் நூபுரம் தழைப்ப, ஆடினர்களாய் வீதிகளில் நெருங்கவும்— [அனங்கன்சரம்-மன்மதபாணம். நூபுரம்-பாதசரம். தழைப்ப-ஒலிக்க.]

11. நீல மால்வரை தவழ்தரு கதிர்நிலாக் கற்றை
போல வேயிரு புடையினுஞ் சாமரை புரளக்
கோல மாமதி குறைவற நிறைந்தொளி குலாவி
மேலி வர்ந்தென வெள்ளியந் தனிக்குடை விளங்க.

நீல மால் வரையின்மேல் (இருபுறத்தும்) தவழ்தரும் நிலாவின் கதிர் கற்றை போலவே இரு புடைஇனும் சாமரை புரளவும், கோலம் பொருந்திய மா மதி குறைவு அற நிறைந்து ஒளி குலாவி மேல் இவர்ந்து என வெள்ளி அம் தனி குடை விளங்கவும்—[வரை-மலை. கோலம்-அழகு. மதி, நிலா-சந்திரன். இவர்ந்து-ஏறியது.]

12. தழங்கு பேரியுங் குறட்டொடு பாண்டிலுஞ் சங்கும்
வழங்கு கம்பலை மங்கல கீதத்தை மறைப்ப
முழங்கு நான்மறை மூரிநீர் முழக்கென வுலகை
விழுங்கு மாவரும் விழாவணி கண்டுளம் வியந்தான்.

தழங்கும்பேரியும் குறடும் பாண்டிலும் சங்கும், வழங்கும் கம்பலை யானது மங்கல கீதத்தை மறைப்பவும், முழங்கும் நால்மறை மூரி நீரின் முழக்கு எனவும் உலகை விழுங்குமாறு வரும் (இந்திரபவனி) விழாவணியை கண்டு (துர்வாச முனிவன்) உளம் வியந்தான். [குறடு-ஒரு வாத்தியம். பாண்டில்-தாளம். கம்பலை-சப்தம். மூரி நீர்-கடல்.] 'உலகை விழுங்குமாவரும் விழா' என்பது பின் நிகழ் வதைக் கருதுங்கால் எழுத்தானந்தத்தின்பால் படும்.

13. தனையொவ் வாதவன் மகிழ்ச்சியால் வாசவன் றன்கை
வனையு மாலையை நீட்டலுந் தோட்டியால் வாங்கித்
துனைவ லத்தயி ராவதத் தெருத்திடைத் தொடுத்தான்
பனைசெய் கையினுற் பறித்தடிப் படுத்ததப் பகடு.

(அவ்விந்திர பவனியைக்கண்டு) மகிழ்ச்சியால் (பிறர் எவரும்) தன்னை ஒவ்வாத தவன் (ஆகிய துர்வாசன்) வாசவன்தன் கையில் (மகாலட்சுமி) வனைந்த மாலையை நீட்டலும் அவன் (அதை) தோட்டியால் வாங்கி துனைகின்ற வலத்து அயிராவதத்தின் எருத்தின் இடை தொடுத்தான். அ பகடு (தன்) பனை ஒத்த துதிக்கையினுல் (அம்மாலையை) பறித்து அடியில் படுத்தது. [வாசவன்-இந்திரன். தோட்டி-அங்குசம். துனைகின்ற-விரைந்து செல்கின்ற. எருத்து-பிடர்.]

14. கண்ட மாமுனி விழிவழி யொழுகுவெங் கனலால்
அண்ட கூடமுஞ் சாம்பரா யொழியுமென் றழியா
விண்டு நீங்கினர் விண்ணவ ரிருசுடர் மீண்ட
எண்டி சாமுக மிருண்டது சுழன்றதெவ் வுலகும்.

(இச்சம்பவத்தை) கண்ட மா முனியின் விழி வழியாக ஒழுகும் வெம் (கோப) கனலால் அண்ட கூடமும் சாம்பல் ஆய் ஒழியும் என்று (மனம்) அழிந்து (தம்தம்பதங்களை) விண்ணவர் விட்டு நீங்கினர். (சூரியசந்திரர்களாகிய) இரு சுடர்களும் (இடம்) மீண்டன. எண் திசை முகம் இருண்டது. எந்த உலகும் சுழன்றது. [மீண்டனர்-மாறினர். எண்திசை முகம்-எட்டுத்திக்கு.]

15. புகையெ ழுந்தன வுயிர்தொறு மெயில்பொடித் தவனி
நகையெ ழுந்தன நிவந்தன புருவநன் னுதலிற் [ன்
சிகையெ ழுஞ்சுடர் விழியின னசனியுந் திகைப்ப
மிகையெ ழுந்திடு சதமக கேளென வெருண்டான்.

(அந்த முனிவன்) உயிர்க்கும்தோறும் புகை எழுந்தன, (பொன் வெள்ளி இரும்பு ஆகியமூன்று) எயில்களை பொடித்த உருத்திரனது (நகைபோன்ற) நகை (முனிவனுக்கு) எழுந்தன, நல்நுதலில் புருவம் நிவந்தன. சிகை எழும் சுடர் போன்ற விழியினனுய் "மிகை

(ஆன ஆடம்பரத்தோடு) எழுந்திடும் சதமகனே கேள்' என அசனி யும் திகைப்ப வெகுண்டான். [எயில்-மதில். சதமகன்-ஆயிரம் யாகம் செய்தவன், இந்திரன். அசனி-இடி. சிகை-ஜ்வாலை.]

16. பூத நாயகன் புவிமக ளுாயகன் பொருவில்
வேத நாயகன் மார்பகத் தினிதுவீற் றிருக்கும்
ஆதி நாயகி விருப்புறு தெரியல்கொண் டணைந்த
மாத ராள்வயிற் பெற்றனென் முயன்றமா தவத்தால்.

"(பஞ்ச) பூதங்களுக்கு நாயகனும், புவிமகள் நாயகனும், பொருவு இல்லாத வேதங்களுக்கு நாயகனும் (ஆகிய ஸ்ரீமந் நாராயணனது) மார்பு அகத்து இனிது வீற்று இருக்கும் ஆதி நாயகி விருப்பு உற்ற தெரியலை கொண்டு அணைந்த (வித்தியாதர) மாத ராள் வயின் (யான்) முயன்ற மாதவத்தால் (அதனை) பெற்றனன். [பொருவில்-சமானமில்லாத].

17. இன்று நின்பெருஞ் செவ்விகண் டுவகையி னீந்த
மன்ற லந்தொடை யிகழ்ந்தனை நினதுமா நிதியும்
ஒன்ற லாதபல் வளங்களு முவரிபுக் கொளிப்பக்
குன்றி நீதுய ருறுகென வுரைத்தனன் கொடியோன்.

(இன்னும் அந்த துர்வாசனாகிய) கொடியோன், "இன்று (உலா வரும்) நின் பெரும் செவ்வியை கண்டு உவகையால் (நான்) ஈந்த மன்றல் பொருந்திய அம் தொடையை இகழ்ந்தனை. (ஆதலால்) நினது மா நிதியும் ஒன்று அல்லாத பல் வளங்களும் உவரி புக்கு ஒளிப்ப நீ (பெருமை) குன்றி துயர் உறுக" என உரைத்தனன். [செவ்வி-அழகு. மன்றல்-வாசனை. உவரி-கடல்.]

18. அரம டந்தையர் கற்பக நவநிதி யமிர்தச்
சுரபி வாம்பரி மதமலை முதலிய தொடக்கற்
றொருபெ ரும்பொரு ளின்றியே யுவரிபுக் கொளிப்ப
வெருவியோடின வெண்ணெய்வாழ்கண்ணன்மேவாரின்.

(அவ்வாறு முனிவன் சபிக்க), அரமடந்தையர் கற்பகம் நவநிதி அமிர்தம் சுரபி வாவும்பரி மதமலை முதலியவை தொடக்கு அற்று ஒரு பெரும் பொருளும் இன்றி உவரிபுக்கு ஒளிப்ப வெண்ணெய் (நல்லூரில்)வாழும்(சடையப்பவள்ளலின் தம்பியாகிய) கண்ணனது மேவாரைப்போல் வெருவி ஓடின. [அரமடந்தையர்-தெய்வப்பெண் கள். சுரபி-காமதேனு. பரி-உச்சைச்சிரவம் என்னும் குதிரை. மத மலை-மதம் பொழிகின்ற மலைபோன்ற யானை. மேவார்-பகைவர்].

19. வெய்ய மாமுனி வெகுளியால் விண்ணக முதலாம்
வையம் யாவையும் வறுமைநோய் நலிதர வானோர்
தையல் பாகனுஞ் சதுமுகக் கடவுளுங் கூடிச்
செய்ய தாமரைத் திருமறு மார்பனைச் சேர்ந்தார்.

(அந்த) வெய்ய மா முனியின் வெகுளியால் விண்ணகம் முதலான வையம் யாவையும் வறுமை நோய் நலிதர வானோரும் தையல்பாகனும் சதுமுக கடவுளும் கூடி செய்ய தாமரையில்வாழும் திருவும் (ஸ்ரீவத்ஸம் என்கிற) மறுவும் தங்கிய (ஸ்ரீமந்நாராயணனாகிய) மார்பனை சேர்ந்தார். [தையல்பாகன்-பரமசிவன். சதுமுகன்-பிரம்மன்.]

20. வெஞ்சொன் மாமுனி வெகுளியால் விளைந்தமை விளம்பிக்
கஞ்ச நாண்மலர்க் கிழவனுங் கடவுளர் பிறரும்
தஞ்ச மில்லைநின் சரணமே சரணெனச் சலியா
தஞ்ச லஞ்சலென் றுரைத்தன னுலகெலா மளந்தோன்

(சேர்ந்து) வெம் சொல் மா முனியின் வெகுளியால் விளைந்தமை விளம்பி, கஞ்சம் நாள் மலர் (மேவிய பிரம்மனாகிய) கிழவனும் கடவுளர் பிறரும் "(எங்களுக்கு வேறு) தஞ்சம் இல்லை, நின் சரணமே சரண்" என (செப்ப), (அது கேட்டு) உலகு எல்லாம் (மாவலிபால் பெற) அளந்தோன் (ஆகிய நாராயணனும்) சலியாது 'அஞ்சல் அஞ்சல்' என்று உரைத்தனன். [கஞ்சம்-தாமரை. தஞ்சம், சரண்-அடைக்கலம். சரணம்-பாதம். அஞ்சல்-பயப்படவேண்டா].

21. மத்து மந்தரம் வாசுகி கடைகயி றடைதூண்
மெத்து சந்திரன் சுராசுரர் வேறுவே றுள்ள
கொத்தி ரண்டுபால் வலிப்பவ ரோடதி கொடுத்துக்
கத்து வாரிதி மறுகுற வமிழ்தெழக் கடைமின்.

(அபயம் கொடுத்துப் பின்னும்) "மந்தரம் (கிரியை) மத்து ஆகவும் வாசுகி (என்னும் பாம்பை) கடையும் கயிறு ஆகவும், மெத்து சந்திரனை அடைதூண் ஆகவும் சுரரையும் அசுரரையும் வேறு வேறு உள்ள கொத்துகள் இரண்டு பாலும் வலிப்பவராகவும் (கொண்டு) ஓடதி கொடுத்து, கத்தும் வாரிதி மறுகுஉற அமிழ்து எழ கடைமின்". [மெத்து-மெல்லிய. ஓடதி-அம்ரதவல்லி என்னும் ஔஷதக் கொடி. கத்தும்வாரிதி மறுகுற-ஒலிக்கின்றகடல் கலங்க.]

22. யாமு மவ்வயின் வருதுநீர் கதுமென வெழுந்து
போமி னென்றருள் புரிதலு மிறைஞ்சினர் புகழ்ந்தார்
நாம மின்றெனக் குனித்தனர் நல்குர வொழிந்த
தாமெ னும்பெருங் களிதுளக் குறுதலா லமரர்.

'யாமும் அவ்வயின் வருதும், நீர் கதும் என எழுந்து போமின்' என்று (திருமால் சொல்லி) அருள் புரிதலும், அமரர், (அவனை) இறைஞ்சினர் புகழ்ந்தார், (தம்) நல்குரவு ஒழிந்தது ஆகும் எனும் பெரும் களி துளக்குஉறுதலால், (இனி) 'நாமம் இன்று' என குனித்தனர். [கதுமென-விரைவாக. இறைஞ்சினர்-வணங்கினார். நல்குரவு-வறுமை. நாமம்-அச்சம். துளக்குறுதலால்-ஆட்டுதலால். குனித்தனர்-துதித்தனர்.]

23. மலைபி டுங்கினர் வாசுகி பிணித்தனர் மதியம்
நிலைபெ றும்படி நட்டன ரோடதி நிரைத்தார்
அலைபெ றும்படி பயோததி கடைந்தன ரவனி
நிலைத ளர்ந்திட வனந்தனுங் கீழுற நெளித்தான்.

(பிறகு அத்தேவர்), (மந்தர) மலையை பிடுங்கினர், வாசுகியை பிணித்தனர், மதியை நிலைபெறும்படி நட்டனர், ஓடதியை நிரைத்தார். அலைபெறும்படி பயோததியை கடைந்தனர். (அப்பொழுது) அவனி நிலைதளர்ந்து இட அனந்தனும் கீழ்உற நெளித்தான். [பயோததி-பால்கடல். அவனி-பூமி. அனந்தன்-ஆதிசேஷன்.]

24. திறல்கொ ளாமையாய் முதுகினின் மந்தரந் திரிய
விறல்கொ ளாயிரந் தடக்கைகள் பரப்பிமீ வலிப்ப
மறமு லாமுனி வெகுளியின் மடிந்தன வரவே
அறனி லார்மனத் தடையலா நெடுந்தகை யமைத்தான்

(அப்பொழுது) அறம் இல்லார் மனத்தில் அடையலாத நெடும் தகை (ஆகிய திருமால்), திறல் கொண்ட ஆமை ஆய், முதுகினில் மந்தரம் திரிய விறல் கொண்ட ஆயிரம் தடம்கைகள் பரப்பி மீது வலிப்ப, மறம் உலாவும் (துர்வாச) முனியின் வெகுளியால் மடிந்தன (மீண்டும்) வரவே அமைத்தான். [திறல், விறல்-வலி. மறம் உலாவும்-பாவம் தங்கிய.]

குறிப்பு :—கோபத்தில் குறைவுபடாத கௌசிகன், 'கசடறுமுனிவன்' என்றும், 'வெய்யமாமுனி' என்றும், 'கொடியோன்' என்றும் 'மறம் உலாம்முனி' என்றும் துர்வாசரை அடிக்கொருதரம் குறித்துப் பேசுவது மானுட இயற்கைக்கு உடன்பட்டிருப்பதாகவே காண்கின்றது. குடித்துவந்தவர் குடிப்பதைப் பழிக்கத்தினம் பார்க்கிறோம். மதுரைமூதூர் பரத்தையர் வீதியில் படர்வோர் செவிக்குத் தாசியுந் தாசியும் 'வேசிமகளே' என வைதுக்கொள்வது எட்டாமல் போகாது. தன்பால் உள்ள குற்றம் பிறர்பால் தோன்றுங்கால் அதைப் பெரிதும் பழிப்பது உலகியல். அவ்விதம் பழிப்பதால் தன் குற்றம் தோன்றாது ஒருவாறு மறைந்தொழியும் என்னும் நம்பிக்கையாலோ யாதோ! யாம் அறியோம். முனிவர் உலகத்தைத் துறந்தவரேனும் இவ்வுலக இயல் அவர்களையும் பின்பற்றியே செல்கின்றது போலும்.

25. இறந்து நீங்கின யாவையு மெம்பிரா னருளால்
பிறந்த வவ்வயிற் சுராசுரர் தங்களிற் பிணங்கச்
சிறந்த மோகினி மடந்தையா லவுணர்தஞ் செய்கை
துறந்து மாண்டன ராரமிர் தமரர்க டுய்த்தார்.

(முன்) இறந்து நீங்கின யாவையும் எம்பிரான் அருளால் (மீண்டும்) பிறந்தன. அவ்வயின் (அமிர்தம் காரணமாக) சுரரும் அசுரரும் தங்களில் பிணங்க, (அப்பொழுது திருமால் கொண்ட) சிறந்த (உருவமாகிய) மோகினி மடந்தையால் அவுணர் (அமிர்தத்திற்காகப் பிணங்கிய) தம் செய்கையை துறந்து (மோகினியின் பொருட்டுத் தம்முள் பொருது) மாண்டனர். அரிய அமிர்தத்தை அமரர்கள் துய்த்தார். [அவ்வயின்-அப்பொழுது. பிணங்க-மாறுபட. அவுணர்-அசுரர். துய்த்தார்-உண்டார்.]

26. வெருவு மாலமும் பிறையும்வெள் விடையவற் கீந்து
தருவும் வேறுள தகைமையுஞ் சதமகற் கருளி
மருவும் பல்பெரு வளங்களும் வேறுற வழங்கித்
திருவு மாரமு மணிந்தனன் சீதர மூர்த்தி.

(பாற்கடலினின்று வந்தவைகளுள்)—(கண்டோர்) வெருவும் ஆலத்தையும்பிறையையும்வெள்விடையவன் (ஆகிய பரமசிவனுக்கு) ஈந்து, (கற்பக) தருவையும் வேறு உள தகைமையை (யுடையபொருள்களை) சதமகற்கு (கொடுத்து) அருளி, மருவும் பல்பெரும் வளங்களையும் (குபேரன் முதலான) வேறு (தேவர்களுக்கு) உற வழங்கி, சீதரமூர்த்தி திருவையும் (கௌஸ்துபரத்ந) ஆரத்தையும் (தானே) அணிந்தனன். [விடை-இரஷபம். மருவும்-திரண்டுள்ள.]

27. அந்த வேலையிற் றிதிபெருந் துயருழந் தழுவாள்
வந்து காசிபன் மலரடி வணங்கியென் மைந்தர்
இந்தி ராதியர் புணர்ப்பினான் மடிந்தன ரெனக்கோர்
மைந்த னீயரு ளவர்தமை மடித்தலுக் கென்றாள்.

அந்த வேலையில் (அசுரர்களுக்குத்தாயாகிய) திதியானவள், பெரும் துயர் உழந்து அழிவாளாய் வந்து (தன் கணவனாகிய) காசிபனது மலர்போன்ற அடிகளை வணங்கி 'என் மைந்தர் இந்திராதியர் புணர்ப்பினால் மடிந்தனர். (அவ்வாறு மடியச்செய்த தேவர்களாகிய) அவர் தம்மை மடித்தலுக்கு, எனக்கு ஓர் மைந்தனை நீ அருள்' என்றாள். [புணர்ப்பினால்-சூழ்ச்சியால்.]

28. என்று கூறலு மகவுனக் களித்தன மினிநீ
சென்று பாரிடைப் பருவமொ ராயிரந் தீர
நின்று மாதவம் புரிதியே னினைவுமுற் றுதியென்
றன்று கூறிடப் புரிந்தன ளருந்தவ மனையாள்.

என்று (திதி) கூறலும், (காசிபன்) 'மகவு உனக்கு அளித்தனம். இனி, நீ பார் இடை (சென்று) ஒரு ஆயிரம் பருவம் தீர நின்று மாதவத்தை புரிதியேல் (நின்) நினைவு முற்றுதி' என்று அன்று கூறிட, அனையாள் (அவ்வாறே) அருந்தவம் புரிந்தனள்.

29. கேட்ட வாசவ னன்னவட் கடிமையிற் கிடைத்து
வாட்ட மாதவத் துணர்ந்தவள் வயிற்றுறு மகவை
வீட்டி யேயெழு கூறுசெய் திடுதலும் விம்மி
நாட்ட நீர்தர மருத்தெனு நாமமு நவின்றான்.

(இந்தச் செய்தியை) கேட்ட வாசவன் (மாறுவேஷம் கொண்டு) (திதியாகிய) அன்னவட்கு அடிமைபோல் கிடைத்து, (அவள்) மாதவத்தில் சிறிது வாட்டம் (உற்றசமயம்) உணர்ந்து அவள் வயிற்றில் உற்ற (தேவரை அழிப்பதற்கு என்று வளரும்) மகவை வீட்டி (அதை) ஏழு கூறுகளாக செய்து இடுதலும், (அக்கூறுகள்) விம்மி நாட்டம் நீர் தர (அவைகட்கு) 'மருத்து' என்னும் நாமமும் நவின்றான். [கிடைத்து-கிட்டி. மருது-அழேல்.]

30. ஆய திவ்விட மவ்விட மவிர்மதி யணிந்த
தூய வன்றனக் குமைவயிற் றோன்றிய தொல்லை
வாயு வும்புனற் கங்கையும் பொறுக்கலா வலத்த
சேய்வ ளர்ந்தருள் சரவண மென்பதுந் தெரித்தான்.

"(இத்தகையது) ஆயது இவ்விடம். (இன்னொரு இடத்தைக் காட்டி) அவ்விடம், அவிர்கின்ற மதியை அணிந்த (பரமசிவனாகிய) தூயவன் தனக்கு உமைவயின் தோன்றிய, தொல்லை வாயுவும் புனல் உடைய கங்கையும் பொறுக்கலாத வலத்தையுடைய, சேய் வளர்ந்து அருளிய சரவணப்பொய்கை" என்பதும் (விச்வாமித்திரன் இராம லக்ஷ்மணர்களுக்கு) தெரிவித்தான். [அவிர்-பிரகாசிக்கின்ற. சேய்-முருகக்கடவுள்.]

திருமால் நாபியில் முளைத்த செந்தாமரைபோல் சூரியன் கடலினின்றும் சிவந்து எழுந்து உதயம் ஆயினான்.

31. காலன் மேனியிற் கருகிருள் கடிந்துல களிப்பான்
நீல வார்கலித் தேரொடு நிறைகதிர்க் கடவுள்
மாலின் மாமணி யுந்தியி லயனொடு வந்த
மூல தாமரை முழுமலர் முளைத்தென முளைத்தான்.

(திரு) மாலின் மா மணி உந்தியில் அயன் உடன் வந்த மூல தாமரை முழு மலர் முளைத்தது என, நிறைந்த கதிர்களையுடைய (சூரியனாகிய) கடவுள், காலனது மேனிபோல் கருகும் இருளை கடிந்து (ஓட்டி) உலகை அளிக்க, நீல ஆர்கலியினின்று தேரொடு முளைத்தான். [காலன்-யமன். உந்தி-நாபி. ஆர்கலி-கடல்.]

32 அங்கு நின்றெழுந் தயன்முதன் மூவரு மனையார்
செங்கணேற்றவன்செறிசடைப்பழுவத்தினிறைதேன்
பொங்குகொன்றையீர்த்தொழுகலாற்பொன்னியைப்பொருவுங்
கங்கை யென்னுமக் கரைபொரு திருநதி கண்டார்.

(சூரியோதயம் ஆனதும்) அயன் முதலாக (உள்ள கடவுளர்) மூவரும் அனையார் (ஆன விச்வாமித்திரனும் இராமனும் இலக்குமணனும்) அங்கு நின்று எழுந்து (சென்று) செம் கண்களுடைய எற்றை வாகனமாயுடையவனாகிய சிவனது செறிந்த சடையாகிய பழுவத்திலுள்ள நிறைந்த தேன் பொங்கும் கொன்றையை ஈர்த்து ஒழுகலால் பொன்னியை பொருவும் கங்கை என்னும் அ கரையை (மோதி) பொரும் திரு நதியை கண்டார். [பழுவம்-காடு. பொன்னி-காவிரியாறு. பொருவும்-நிகர்க்கின்ற. ஈர்த்து-இழுத்து.]

இது முதல் 62-வது பாசுரம் வரையில் விச்வாமித்திரர் வாக்கு கங்கைமாநதியின் சரித்திரத்தைக் கூறுகின்றார்.

33. இந்த மாநதிக் குற்றுள தகைமைய யாவும்
எந்தை கூறுகென் றிராகவன் வினவுற வெனையாள்
மைந்த நின்றிரு மரபுளா னயோத்திமா நகர்வாழ்
விந்தை சேர்புயன் சகரனிம் மேதினி புரந்தோன்.

(காணவும்) "இந்த மா நதிக்கு உற்று உள்ள தகைமைய யாவும், எந்தையே, (எமக்கு) கூறுக" என்று இராகவன் வினவ, (விச்வாமித்திரன் கூறுகின்றான் :—) "என்னை ஆள்கொண்ட மைந்தனே, நின் திருமரபில் (வந்து) உள்ளானும், அயோத்தி மா நகரில் வாழ்ந்தவனும் விந்தை சேர்ந்த புயத்தையுடையவனும் ஆகிய சகரன் இ மேதினியை புரந்தோன். [விந்தை-வீரலக்ஷ்மி. மேதினி-உலகம்.]

34. விறல்கொள் வேந்தனுக் குரியவ ரிருவரில் விதர்ப்பை
பொறையி னல்கிய போசண னென்றொரு புதல்வன்
பறவை வேந்தனுக் கிளையமென் சுமதிமுற் பயந்த
அறனின் மைந்தரா றயுதர்மற் றஞ்சுமா னவன்சேய்.

"விறல் கொண்ட (அந்தச் சகரன் என்னும்) வேந்தனுக்கு (மனைவியராய்) உரியவர் இருவரில் விதர்ப்பை பொறையில் நல்கிய போசணன் என்று ஒரு புதல்வன் (இருந்தான்), அவன் சேய் அஞ்சுமான் (என்பவன்). (கருடனாகிய) பறவை வேந்தனுக்கு இளையவளாகிய மெல்லிய சுமதி (என்னும் சகரனின் மற்ற மனைவி) முன் பயந்த அறம் (நெறியமைந்த) மைந்தர் ஆறு அயுதர் (ஆவார்). [பொறையில் நல்கிய-கர்ப்பங்கொண்டு பெற்ற. ஆறு அயுதர்-அறுபதினாயிரம் பேர். விதர்ப்பை-விதர்ப்பராசன் மகள், கேசினி.]

35. திண்டி றற்புனை சகரனுந் தனையர்சே வகந்தான்
கண்டு முற்றிய வயமகம் புரிதலுங் கனன்று
வண்டு துற்றதார் வாசவற் குணர்த்தினர் வானோர்
ஒண்டி றற்பரி கபிலன திடையினி லொளித்தான்.

"திண் திறல் புனைந்த சகரனும் (தன்) தனையர்களது சேவகத்

தைத்தான் கண்டு, அயம் மகம் முற்ற புரிதலும், வானோர் கனன்று வண்டுகள் துற்ற தாரை அணிந்த வாசவற்கு (அதை) உணர்த்தினர். (இந்திரனும் பிறர் அசுவமேதம் முற்றினால் தன் பதவி போகுமெனப் பயந்து) ஒள்ளிய திறல் உடைய (அந்த) பரியை கபிலமுனிவனது இடையினில் (கொண்டுபோய்) ஒளித்தான். [புனைந்த-பொருந்திய. சேவகம்-பராக்கிரமம். அயமகம்-அசுவமேதயாகம். கனன்று-கோவித்து. துற்ற-நெருங்கிய. தார்-பூமாலை.]

36\. வாவும் வாசிபின் சென்றன னஞ்சுமான் மறுகிப்
பூவி லோரிட மின்றியே நாடினன் புகுந்து
தேவர் கோன்பரி கரந்தமை யறிந்திலன் றிகைத்து
மேவு தாதைதன் றாதைபா லுரைத்தனன் மீண்டு.

வாவும் (அந்தயாக) வாசியின் பின் சென்றனன் (ஆகிய) அஞ்சுமான், (குதிரையைக்காணாது) மறுகி, பூஇல் ஓர் இடம் இன்றியே புகுந்து நாடினன். தேவர்கோன் (ஆகிய இந்திரன்) பரியை கரந்தமை (அவன்) அறிந்திலன் (ஆகையால்) திகைத்து, மீண்டும் மேவும் தன் தாதையின் தாதை (யாகிய சகரன்) பால் (குதிரை காணாதை) உரைத்தனன். [வாவும்-தாவுகின்ற. வாசி, பரி-குதிரை மறுகி-கலங்கி. பூ-பூமி. நாடினன்-தேடினன்.]

37\. கேட்ட வேந்தனு மதலையர்க் கம்மொழி கிளத்த
வாட்ட மீக்கொளச் சகரர்கள் வடவையின் மறுகி
நாட்டம் வெங்கனல் பொழிதர நானிலந் தடவித்
தோட்டு நுங்கினர் புவியினைப் பாதலந் தோன்ற.

"(அதை) கேட்ட (சகர) வேந்தனும் (தன் அறுபதினாயிரம்) மதலையர்க்கு அ மொழியை கிளத்த, (கேட்ட) சகரர்கள் வாட்டம் மீகொண்டு, வடவை (தீ) போல் மறுகி, (தம்) நாட்டங்கள் (கோப) வெம் கனலை பொழிய, (குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்கிற) நால் நிலங்களை தடவி (குதிரையைக்காணாது பின்) புவியினை பாதலம் தோன்ற தோட்டு நுங்கினர். (கிளத்த-சொல்ல. வாட்டம்-சோர்வு. நாட்டம்-கண். தோட்டு நுங்கினர்-தோண்டி எடுத்தார்.]

38\. நூறி யோசனை யகலமு மாழமு நுடங்கக்
கூறு செய்தன ரென்பரால் வடகுண திசையில்
ஏறு மாதவக் கபிலனி லிவுளிகண் டெரியிற்
சீறி வைதனர் தருக்கினர் நெருக்கினர் செறுத்தார்.

(அவ்வாறு சகரர்) நூறு யோசனை அகலமும் ஆழமும் (பூமாதேவி) நுடங்க கூறு செய்தனர் என்பர் (அறிந்தோர்). (பிறகு) வடகுண திசையில் ஏறும் மாதவனாகிய கபிலனது இல்லில் (யாக) இவுளியை கண்டு (அவர்) எரிபோல் சீறி (முனிவனை) வைதனர், தருக்கினர்

நெருக்கினர் செறுத்தார். [இல்-ஆச்சிரமம். இவுளி-குதிரை. எரி-நெருப்பு. தருக்கினர்-அகங்காரம் கொண்டனர். குணம்-கிழக்கு.]

39. மூளும் வெஞ்சினத் தருந்தவன் முனிந்தெரி விழிப்பப்
பூளை சூடிதன் னகையினி லெயில்பொடிந் தனபோல்
ஆளு மைந்தரா றயுதருஞ் சாம்பரா யவிந்தார்
வேள்வி கொண்டநல் வேந்தனுக் குரைத்தனர் வேகர்.

(அதைக்கண்டு) மூளும் வெஞ்சினத்தையுடைய (கபிலன் ஆகிய) அரியதவன் முனிந்து எரி (எழ) விழிப்ப, பூளை (மலர் மாலையை) சூடி (ஆகிய பரமசிவன்) தன் நகையில் (மூன்று) எயில்களும் (முன்) பொடிந்தனபோல், (உலகை) ஆளும் (சகர) மைந்தர்ஆறு அயுதரும் சாம்பலாய் அவிந்தார். (இச்செய்தியை) வேகர் (அசுவமேத) வேள்வியை கொண்ட நல் (சகர) வேந்தனுக்கு உரைத்தனர். [முனிந்து-கோபித்து. வேகர்-தூதர்.]

40. உழைத்து வெந்துயர்க் கீறுகாண் கிலனுணர் வொழியா
தழைத்து மைந்தன்றன் மைந்தனை யவர்கழிந் தனரேல்
இழைத்தவேள்வியின் றிழப்பதோவெனவவனெழுந்து
தழைத்த மாதவக் கபிலன்வாழ் பாதலஞ் சார்ந்தான்.

"(அதைக் கேட்டுச் சகரராஜன்) உழைத்து (தன்) துயர்க்கு ஈறு காண்கிலன் (ஆயினும்) உணர்வு ஒழியாமல் (அஞ்சுமானாகியதன்) மைந்தன் தன் மைந்தனை அழைத்து "(நின்சகோதரராகிய சகரர்) கழிந்தனரேல் (நாம்) இழைத்தவேள்வி இன்று இழப்பதோ!" என (உடனே) அவன் எழுந்து தழைத்த மாதவ கபிலன் வாழும் பாதல லோகத்தை சார்ந்தான். [உழைத்து-வருந்தி.]

41. விண்டு நீங்கின ருடலுகு பிறங்கல்வெண் ணீற்றைக்
கண்டு துண்ணெ னு மனத்தினன் கபிலமா முனிதன்
புண்ட ரீகமென் றூடொழா தெழுந்தனன் புகலக்
கொண்டு போகநின் னிவுளியென் றுற்றதுங் குறித்தான்.

(சார்ந்து) "(உயிர்) விண்டு நீங்கினர்களது உடல்கள் உகுந்த பிறங்கல் போன்ற வெண் நீற்றை கண்டு (அஞ்சுமான்) துண் எனும் மனத்தினனாய் கபில மா முனிதன் பூண்டரீகம்போன்ற மெல் தாள்களை தொழுது எழுந்து (வந்த காரியத்தை) புகல, (முனிவன்) 'நின் இவுளியை கொண்டு போக' என்று (முன்) உற்றவைகளையும் குறித்தான். [பிறங்கல்-மலை. இவுளி-குதிரை.]

42. பழுதி லாதவ னுரைத்த சொற் கேட்டலும் பரிவால்
தொழுது வாம்பரி கொணர்ந்தவி சுரர்களுக் கியா
முழுதும் வேள்வியை முற்றுவித் தரசனு முடிந்தான்
எழுது கீர்த்தியாய் மைந்தனுக் கரசிய லீந்து.

"பழுது இலாதவன் (ஆகிய கபிலன்) உரைத்த சொல்லை கேட்டலும் (அஞ்சுமான் அவனை) பரிவோடு தொழுது வாவும் பரியை கொணர, (சகர) அரசனும் வேள்வியை முழுதும் முற்றுவித்து, சுரர்களுக்கு அவியை ஈந்து, (சில காலம் சென்ற பின் போசனன் என்னும்) மைந்தனுக்கு அரசு இயலை ஈந்து (உயிர்) முடிந்தான். (புகழ்ந்து) எழுதும் கீர்த்தியாய்,—[அவி-அவிர்ப்பாகம்.]

43. சகரர் தொட்டலாற் சாகர மெனப்பெயர் தழைப்ப
மகர வாரிதி சிறந்தது மகிதல முழுதும்
நிகரின் மைந்தனே புரந்தன னவனெடு மரபில்
பகிர தன்னெனும் பார்த்திபன் வந்தவ தரித்தான்.

"(சகரன் மக்களாகிய) சகரர் (என்பவர்) தொட்டலால் மகரம் (நிறைந்த) வாரிதி சாகரம் என பெயர் தழைப்ப சிறந்தது. மகிதலம் முழுதும் (அந்த) நிகர் இல்லாத மைந்தனே புரந்தனன். அவன் நெடும் மரபில் பகிரதன் என்னும் பார்த்திபன் வந்து அவதரித்தான். [தொட்டலால்-தோண்டினதால். மகிதலம்-உலகம். பார்த்திபன்—அரசன். மகரம்-சுருமீன்.]

44. உலகம் யாவையும் பொதுவறத் திகிரியை யுருட்டி
இலகு மன்னவ னிருந்துழி யிறந்தமை வினவ
அலகி ெைன்முனி யுரைத்திடக் கேட்டன னரசன்
திலக மண்ணுற வணங்கிநின் ெைருமொழி செப்பும்.

45. கொடிய மாமுனி வெகுளியின் மடிந்த வெங்குரவர்
முடிய நீணிர யத்தினி லழுந்திடு முறைமை
கடியு மாறெனக் கருந்தவ மதற்குறு கருமம்
அடிகள் சாற்றுக வென்றனு மந்தண னறைவான்.

[குரவர்-முன்னோர். நிரயம்-நரகம். கடியுமாறு-நீக்கும்வழி]

46. வைய மாளுடை மன்னர் மன்னவ மடிந்தோர்
உய்ய நீடவ மொழிவறு பகலெலா மொருங்கே
செய்ய நாண்மலர்க் கிழவனை நோக்கிநீ செய்தி
நைய லென்றினி துரைத்தன னவையறு முனிவன்.

(காமவெருளிமயக்க மாகிற) நவைகள் அற்ற (வசிஷ்ட) முனிவன், "வையத்தை ஆளுதல் உடைய மன்னர்களுக்கெல்லாம் மன்னவனே நையல், மடிந்தோர் (நிரையத்தினின்றும்) உய்ய, செய்ய நாள் (தாமரை) மலரை (ஆசனமாக உடைய பிரம்மனாகிய) கிழவனை நோக்கி, நீ ஒழிவு அற்ற பகல் எல்லாம் ஒருங்கே, நீண்டதவம் செய்தி" என்று இனிது உரைத்தனன். [நையல்-வருந்தவேண்டாம். நாள் புதிய. ஒழிவறுபகல்-அநேகநாள்கள்]

47. ஞாலம் யாவையுஞ் சுமந்திரன் றன்வயி னல்கிக்
கோல மாதவத் திமகிரி மருங்கினிற் குறுகிக்
கால மோர்பதி னுயிர மருந்தவங் கழிப்ப
மூல தாமரை முழுமுதற் கிழவன்முந் தினனே.

(அதுகேட்டுப் பகிரதன்) ஞாலம்யாவையும் சுமந்திரன் தன்வயில் நல்கி (பின்) மாதவத்திற்குரிய கோலம் அமைந்த இமயகிரி மருங்கினில் குறுகி, ஓர் பதினுயிரம் காலம் அரியதவம் (செய்து) கழிப்ப, மூலதாமரையில் தோன்றிய (பிரம்மனுகிய) முழுமுதல் கிழவன் முந்தினன். [முந்தினன்-தோன்றினுன்.]

48. நின்பெ ருந்தவம் வியந்தனம் நினதுநீள் குரவர்
முன்பி றந்தன ரருந்தவன் முனிவினு தலினுல்
மன்பெ ரும்புவி யதனில்வா னதிகடி தணுகி
என்பு தோயுமே லிருங்கதி பெறுவரென் றிசைத்தான்.

(முந்தியபிரம்மன்) 'நின் பெரும் தவத்தை வியந்தனம். (கபிலனுகிய) அரியதவனது முனிவினுல் நினது நீண்ட குரவர் முன்பு இறந்தனர். ஆதலினுல், மன்னிய (இந்த) பெரும்புவி அதனில் வான்நதியானது கடிது அணுகி (மாண்ட சகரரது) என்பில் தோயுமேல் (அவர்) இருமைபொருந்திய கதியை பெறுவர்' என்று இசைத்தான். [மன்னிய-நிலைபெற்ற. வான்நதி-ஆகாயகங்கை. என்பு-எலும்பு. இருமை-பெருமை.]

49. மாக நன்னதி புவியிடை வருகின்மற் றவடன்
வேக மாற்றுதல் கண்ணுதற் கன்றிவே றரிதால்
தோகை பாகனை நோக்கிநீ யருந்தவந் தொடங்கென்
றேகி னுனுல கனைத்துமெவ் வுயிர்களு மீய்ந்தான்.

(இசைத்துப் பின்னும்) உலகு அனைத்தும் எ உயிர்களும் ஈந்தான் (ஆகிய பிரமன்), (ஆனுல்) "மாகத்தில் (உள்ள அந்த) நல்நதி புவி இடைவரின், அவள்தன்வேகத்தை ஆற்றுதல் கண்ணுதல்கடவுளிற்கு அன்றி வேறு (யாவர்க்கும்) அரிது. (ஆகையால்) தோகை பாகனை நோக்கி நீ அரும்தவம் (செய்ய) தொடங்கு" என்று (பகிரதனுக்குச்சொல்லி) ஏகினுன். [மாகம்-ஆகாயம். கண்ணுதல், தோகைபாகன்-பரமசிவன்.]

50. மங்கை பாகனை நோக்கிமுன் மொழிந்தன வருடந்
தங்கி மாதவம் புரிதலுந் தழனிறக் கடவுள்
அங்கு வந்துநின் கருத்தினை முடித்துமென் றகன்றுன்
கங்கை யைத்தொழக் கால மையாயிரங் கழித்தான்.

(அவ்வாறே பகிரதன்) மங்கைபாகனை நோக்கி முன் மொழிந்தன வான (பதினாயிர) வருடங்கள் தங்கி மாதவம் புரிதலும், தழல்நிறக் கடவுள் (ஆகிய பரமசிவன்) அங்குவந்து 'நின்கருத்தை முடித்தும்' என்று (கூறி) அகன்றான். (அதன்பின்) கங்கையை தொழகாலம் ஐயாயிரம் கழித்தான்.

51. ஒருமடக்கொடி யாகிவந் துனதுமா தவமென்
பொருபு னற்கொடி வரினவள் வேகமார் பொறுப்பார்
அரனு ரைத்தசொல் வினைதமற் றின்னுநீ யறிந்து
பெருகு நற்றவம் புரியென வரநதி பெயர்ந்தாள்.

(கழிக்க), வரநதி (ஆகியகங்கை) ஒருமடமை பொருந்திய கொடி போன்ற பெண் உருவாகிவந்து, உனதுமாதவத்திற்கு (காரணம்) என்ன? (அலைகள்) பொருகின்ற புனல்கொடிவரின் அவள் வேகத்தை ஆர் பொறுப்பார். அரன் (உனக்கு) உரைத்த சொல்வினைதம். (ஆதலால் இவ்விஷயத்தை) இன்னும் நீ (சந்தேகமில்லாமல்) அறிந்து (பின்நதி) பெருக நல்தவம் புரி என (உரைத்து) பெயர்ந்தாள். [அரன்-பரமசிவன்.]

52. கரந்தை மத்தமோ டெருக்கலர் கூவிளை கடுக்கை
நிரந்த பொற்சடை நின்மலக் கொழுந்தினை நினையா
அரந்தை யுற்றவ னிரண்டரை யாயிர மாண்டு
புரிந்து நற்றவம் பொலிதர வரைமகள் புனிதன்.

(தன் மூதாதை நிமித்தமாக) அரந்தை உற்றவன் (ஆகிய பகிரதன்) கரந்தையும், மத்தையும் எருக்கு அலரையும் கூவிளையும் கடுக்கையும் நிரந்த (செம்) பொன் (நிறமுடைய) சடையையுடைய (பரமசிவனாகிய) நின்மல கொழுந்தினை நினைத்து இரண்டரை ஆயிரம் ஆண்டு நல்தவம் பொலிதர புரிய, (இமைய) வரையனின் மகள் (ஆகிய பார்வதியின் பதியாகிய அந்த) புனிதன்—[அரந்தை-துன்பம். கரந்தை- ஓர்பூண்டு. மத்தை-ஊமத்தை. கூவிளை-வில்வம். கடுக்கை-கொன்றை. நிரந்த-அணிந்த.]

53. எதிர்ந்துநின்னினைவென்னென விறைஞ்சியெம்பெரும
அதிர்ந்து கங்கையீ தறைந்தன ளென்றலு மஞ்சேல்
பிதிர்ந்தி டாவகை காத்துமென் றேகிய பின்றை
முதிர்ந்த மாதவ மிரண்டரை யாயிர முடித்தான்.

"எதிர்ந்து, நின்நினைவு என்?" என, (பகிரதன்) இறைஞ்சி, 'எம் பெருமானே, கங்கை அதிர்ந்து இது உறைத்தனள்' என்றலும், (பரமசிவன்) 'அஞ்சல், (நீர் சிறிதும்) பிதிர்ந்து இடாதவகை (யாம்) காத்தும்' என்று (வாக்களித்து) ஏகிய பின், (அரசன்) முதிர்ந்த

மாதவம் இரண்டரை ஆயிரத்தையும் முடித்தான். [அதிர்ந்து-முழங்கி. பிதிர்ந்து இடாவகை-சிந்தாதபடி]

54. பெருகு நீரோடு பூதியும் வாயுவும் பிறங்கு
சருகும் வெங்கதி ரொளியையுந் துய்த்துமற் றதையும்
பருக லின்றியு முப்பதினா யிரம் பருவ
முருகு காதலின் மன்னவ னருந்தவ முயன்றான்.

பெருகும் நீரும் பூதியையும் வாயுவையும் பிறங்கு சருகையும் வெம்கதிரின் ஒளியையும் (பகிரதன்) துய்த்தும், அதையும் (கூட) பருகல் இன்றியும் (மேல்சொன்ன வாறு) முப்பதினாயிரம் பருவம் உருகுகின்ற காதலோடு (அந்த) மன்னவன் அரிய தவத்தை முயன்றான். [பூதி-சாமபல். துய்த்தும்-உண்டும்]

55. உந்தி யம்புயத் துதித்தவ னுறைதரு முலகும்
இந்தி ராதிய ருலகமு நடுக்குற விரைத்து
வந்து தோன்றினள் வரநதி மலைமகள் கொழுநன்
சிந்தி டாதொரு சடையினிற் கரந்தனன் சேர.

"(பகிரதன் தவம் முடிய), வரநதி (யானகங்கை) (திருமாலின்) உந்தி அம்புயத்தில் உதித்தவன் (ஆகிய பிரம்மன்) உறைதரும் உலகும், இந்திராதியர்களது உலகும் நடுக்கு உற இரைத்து வந்து தோன்றினள். (அதை) மலைமகளின் கொழுநன் (ஆன பரமசிவன்) சிந்திடாது (தன்) ஒரு சடையினில் சேர கரந்தனன். [உந்தி அம்புயம்-நாபிக்கமலம். இரைத்து-ஆரவாரித்து]

56. புன்னு னித்தரு பனியென வரநதி புனிதன்
சென்னி யிற்கரந் தொளிதர வணங்கினன் றிகைத்து
மன்ன னிற்றலும் வருந்தனஞ் சடையள்வா னதியின்
றென்ன விட்டன னொருசிறி தவனிபோந் திழிந்தாள்.

"புல்லின் நுனியில் தரும் பனி (துளி) என (அந்த) வரநதி (சிவனுகிய) புனிதனின் சென்னியில் கரந்து ஒளிதர, (அதைக் கண்ட) மன்னன் வணங்கி திகைத்து நிற்றலும், (பரமசிவன்) 'வருந்தல், வான்நதி இன்று நம சடையள்' என்ன ஒரு சிறிது (நீரை) விட்டனன். (கங்கையும்) அவனியில் போந்து இழிந்தாள். [இழிந்தாள்-இறங்கினுள்]

57. இழிந்த கங்கைமுன் மன்னவன் விரைவொடு மேகக்
கழிந்த மன்னவர் கதிபெற முடுகிய கதியால்
அழுந்து மாதவச் சந்நுவின் வேள்வினை யழிப்பக்
கொழுந்துவிட்டெரிவெகுளியன்குடங்கையிற்கொள்ளா.

"(இப்படி) இழிந்த கங்கைமுன் (பகிரத) மன்னவன் விரைவோடும் ஏக, (ஆதியில் இறந்து) கழிந்த (சகரர்களாகிய) மன்னவர் நல்) கதி பெற (வேண்டி) முடுகிய கதியால், அழுந்தும் மாதவம் (உடைய) சந்நு முனிவரின் வேள்வியை அழிப்ப, (அவன்) கொழுந்துவிட்டு எரியும் வெகுளியனாய் (அந்த நீரைத்தன் குடங்கையில்) கொண்டு—[கதியால்-வேகத்தால். அழுந்தும்-முதிர்ந்த. குடங்கை-அகங்கை.]

58\. உண்டு வந்தனன் மறைமுனிக் கணங்கள்கண் டுவப்பக்
கண்டு வேந்தனும் வணங்கிமுன் னிகழ்ந்தன கழறக்
கொண்டு போகெனச் செவிவழி கொடுத்தனன் குதித்து
விண்டு நீங்கின ருடலுகு பொடியின்மே வினளே.

(கொண்டு), மறைமுனிகணங்கள்கண்டு உவப்ப (அந்தச்சந்நுமுனி கங்கையை) உண்டுஉவந்தனன். (பகிரத) வேந்தனும்கண்டு வணங்கி (இந்நதியைக் கொண்டுவர அவன் செய்த பிரயத்தனமாகிய) முன் நிகழ்ந்தன (எல்லாம் சந்நுவுக்கு) கழற, (முனிகேட்டு மனமிரங்கி) கொண்டுபோக என தன் செவிவழியாய் (உண்டநீரைமறுபடி) கொடுத்தனன். (கங்கை செவியினின்று) குதித்து (ஓடி)விண்டு நீங்கின (சகரர்களது) உடல்உகுந்த பொடியில் மேவினாள். [கழற-சொல்ல. பொடியின் மேவினள்-சாம்பலில் படிந்தாள்.]

59\. நிரைய முற்றிய சகரர்க ணெடுங்கதி செல்ல
விரைம லர்ப்பொழிந் தார்த்தன விண்ணவர் குழாங்கள்
முரைச முற்றிய பல்லிய முறைமுறை முழங்க
அரைசனப்பொழு தணிமதி லயோத்திமீண் டடைந்தான்

(மேவவும்) நிரயம் முற்றிய சகரர்கள் நெடும்கதி செல்ல, விண்ணவர் குழாங்கள் விரையுள்ள மலர் மாரி பொழிந்து ஆர்த்தனர். அப்பொழுது (பகிரத) அரசன் முரசம் முற்றிய பல்இயம் முறை முறை முழங்க, அணிமதில் (சூழ்ந்த) அயோத்தியைமீண்டு அடைந்தான். [குழாம்-கூட்டம். விரை-வாசனை. இயம்-வாத்தியம்.]

60\. அண்ட கோளகைக் கப்புறத் ததா யகிலமன் றளந்த
புண்ட ரீகமென் பதத்திடைப் பிறந்துபூ மகனார்
கொண்ட தீர்த்தமா யரன்கொளப் பகிரதன் கொணர
மண்ட லத்துவந் தடைந்ததிம் மாநதி மைந்த.

(கடைசியாகவிச்வாமித்திரன்கங்கையைக்காட்டி) "மைந்தா, இ மாநதி அண்டகோளகைக்கு அப்புறத்தது ஆகிஅன்று (மாவலிபால் மூன்றடிவேண்டி) அகிலம் அளந்த புண்டரீகம் போன்ற மெல்லிய (திருமாலின்)பாதத்து இடைபிறந்து, (பிரம்மனாகிய) பூமகனார்(தன்)

கமண்டலத்தில் கொண்ட தீர்த்தம்ஆய், அரன் (சடையில்) கொள்ள பகிரதன் (தவம்செய்து) கொணர, (இந்தப் பூ) மண்டலத்து வந்து அடைந்தது."

61. சகரர் தம்பொருட் டருந்தவம் பெரும்பக றள்ளிப்
பகிர தன்கொணர்ந் திடுதலாற் பகீரதி யாகி
மகித லத்திடைச் சந்நுவின் செவிவழி வரலால்
நிகரில் சாநவி யெனப்பெயர் படைத்ததிந் நீத்தம்.

"இ நீத்தம், சகரர் தம்பொருட்டு அரும்தவம் பெரும்பகல் தள்ளி பகிரதன் கொணர்ந்து இடுதலால் பகீரதி ஆகி, மகிதலத்தின் இடை சந்நுவின் செவிவழி வரலால் (தனக்கு) நிகர் இல்லாத சாநவி என பெயர் படைத்தது" [நீத்தம்-வெள்ளம்.]

62. என்று கூறலும் வியப்பினோ டுவந்தன ரிறைஞ்சச்
சென்று தீர்த்தனர் கங்கையை விசாலைவாழ் சிகரக்
குன்று போர்புயத் தரசன்வந் தடியிணை குறுக
நின்று நல்லுரை விளம்பிமற் றவ்வயி னீங்கா.

என்று (விச்வாமித்திரன் கங்கோர்ப்பத்திவிருத்தாந்தத்தை) கூறலும் (இராமலக்ஷ்மணர்கள் கேட்டு) வியப்பினோடு உவந்தனர். (பிறகு முனிவனை) இறைஞ்சி சென்று கங்கயை (கடந்து) தீர்த்தனர். (அதற்கப்பால்) விசாலைநகரத்தில்வாழ்கிறசிகரங்களுடைய குன்றுபோன்ற புயத்தையுடைய அரசன் (ஆகிய சுமதி என்பவன்) வந்து அடிஇணைகளைகுறுக. (மூவரும்) நின்று நல்உரைவிளம்பி பின் அவ்வயின்நீங்கி.

இதுமுதல் 69-வது கவிவரை விதேகநாட்டு வர்ணனை.

63. பள்ளி நீங்கிய பங்கயப் பழனநன் னாரை
வெள்ள வான்கனை களைவுறு கடைசியர் மிளிர்ந்த
கள்ள வாணெடுங் கண்ணிழல் கயலெனக் கருதா
அள்ளி நாணுறு மகன்பணை மிதிலைநா டடைந்தார்.

பங்கய பழனங்களில் பள்ளிநீங்கிய நல்ல நாரைகள், வான் (தாமரைகுவளைகளாகிய)களைகளை களைவுறும் கடைசியர்களது வெள்ளத்தில் மிளிர்ந்த கள்ளம் உள்ள வாள்பொருந்திய நெடும் கண்ணின் நிழலைகயல்என(மயங்கி)கருதி (அலகினால்) அள்ளி (நினைத்தபடிமீனல்லாமையால்) நாண்உறும் அகன்றபணை சூழ்ந்த மிதிலை நாட்டை அடைந்தார். [பழனம், பணை-வயல். மிளிர்ந்த-விளங்குகின்ற. வான்-சிறந்த. கடைசியர்-மள்ளஸ்த்ரீகள். கள்ளம்-கரவு. வாள்-ஒளி.]

64. வரம்பில் வான்சிறை மதகுகண் முழவொலி வழங்க
அரும்பு நாண்மல ரசோகங்க ளலர்விளக் கெடுப்ப
நரம்பி னன்றதேன் றூரைகொ ணறுமலர் யாழின்
சுரும்புபாண்செயத் தோகைநின் றூடுவ சோலை.

(அந்த விதேகநாட்டு) சோலைகளில், வரம்பு இல்லாத வான்சிறை மதகுகள் முழவு ஒலிவழங்கவும், அரும்பும் நாள்மலர்களுடைய அசோகங்கள் அலர்களாகிய விளக்கை எடுப்பவும், நரம்புபோல்நான்ற தேனை தாரையாகக்கொண்ட நறு மலர்களாகிய யாழில் சுரும்புகள் பாண் செய்யவும், தோகைகள்(நாடகமகளிர்போல்) ஆடுவன. [வான் சிறை-பெரிய நீர்க்கரை. முழவு-மத்தளம். நான்ற-தொங்குகின்ற. சுரும்பு-வண்டு. தோகை-மயில்.]

65. பட்ட வாணுதன் மடந்தையர் பார்ப்பெனுந் தூதால்
எட்ட வாதரித் துழல்பவ ரிதயங்கள் வெறுப்ப
வட்ட நாண்மரை மலரின்மேல் வயலிடை மள்ளர்
கட்ட காவியங் கட்கடை கழிப்பன கழனி.

(பொன்)பட்டம் (கட்டிய) வாள்பொருந்திய நுதலையுடைய மடந்தையர்கள் (செலுத்தும்) பார்ப்புஎன்னும் தூதுஆல் அவர்களைஎட்ட ஆதரித்துஉழல்பவர் (ஆகியஆடவர்களது) இதயங்கள் வெறுப்படையும்படி, (மாதர்முகம்போன்று)வட்டமாயிருக்கின்ற நாள் தாமரை மலரின்மேல் மள்ளர்கள்வயல்இடை கட்டகாவி (மலர்கள் அந்தமாதர்களின்) அம் கடைகண்கள்போல் கழனிகளில் கழிப்பன. [நுதல்-நெற்றி. பார்ப்பு-பார்வை. எட்டஆதரித்து உழல்பவர்-அணையஆவல் கொண்டு திரிபவர். கட்ட-களைந்த. கழிப்பன-மிகுதியாக உள்ளன.]

மள்ளர் களைந்துஎறிந்த காவிமலர்கள் தாமரைமலர்கள்மேல்போய் விழுந்து கிடக்க, மாதர்கண்சாடை காட்டித்தம்மை அழைக்கவிரும்பித்திரியும் காமுகர்கள் மேற்சொன்னவாறு கண்போன்றதாமரை மலர்களைக்கண்டு அவை மடந்தையர்தாம் என மயங்கித்தமக்குக்கண் சாடை காட்டி அழைப்பார்கள் என்று வெகுநேரம் ஆவலுடன்எதிர் பார்த்திருந்தும் அவை தாமரையும் காவியுமே யாகையால் அச்சாடையொன்றும் வாராமல்போக அவர்மனம் வெறுத்து அகல்வார் என்பது இச்செய்யுளின் கருத்தாகும்.

66. தூவி யன்னந்த மினமென்று நடைகண்டு தொடரக்
கூவு மென்குயிற் குதலையர் குடைந்ததண் புனல்வாய்
ஒவில் குங்குமச் சுவடுற வொன்றோடொன் றூடிப்
பூவு றங்கினும் புள்ளுறங் காதன பொய்கை.

மெல்லிய குயில்போல் கூவும் குதலையர் (ஆகியமாதர்களது) நடையைகண்டு தம் இனம்என்று தூவி(பொருந்திய)அன்னங்கள் அம்மாதர் குடைந்த தண்புனல்வாய் தொடர அவைகள்மேல் குங்குமகுழம்பின் சுவடுஉற அதனால் ஒன்றோடொன்று ஊடி பொய்கைகளில் பூஉறங்கினும் (அன்ன)புள்கள் உறங்காதன. [தூவி-இறகு. ஓவில்-நீங்காத. ஊடி-பிணங்கி].

67. முறையி னின்முது மேதியின் முலைவழி பாலும்
துறையி னின்றுயர் மரங்கனி தூங்கிய சாறும்
அறையு மென்கரும் பாட்டிய வமுதமு மழிதேம்
நறையு மல்லது நளிர்புனல் பெருகலா நதிகள்

நதிகளில் முறையினில் (வருகின்ற) முதுமேதியின் முலையினின்று வழியும் பாலும், துறையில் நின்று உயர்ந்தமரங்களினின்று தூங்கிய சாறும், அறையும்மெல் கரும்பை (ஆலையில்) ஆட்டிய அமுதம்போன்ற சாறும், அழிகின்ற தேம்நறையும் அல்லது நளிர் (பொருந்திய) வேறு புனல்கள் பெருகலா. [மேதி-எருமை. தூங்கிய-ஒழுகிய. அறையும்-அறுக்கப்பட்ட. அழிகின்ற-பெருகுகின்ற. தேம்-இனிய. நறை-தேன்.]

68. இழைக்கு நுண்ணிடை யிடைதர முகடுயர் கொங்கை
மழைக்கண் மங்கைய ரரங்கினில் வயிரியர் முழவம்
முழக்கு மின்னிசை வெருவிய மோட்டிள மூரி
உழக்க வாளைகள் பாளையிற் குதிப்பன வோடை.

(நூல்) இழைக்கும் நுண்ணிய இடைகள் இடைதர முகடுபோல் உயர்ந்த கொங்கைகளையும்மழைபொருந்தியகண்களையும்உடைய மங்கையர் (நாட்டியம்) புரியும் அரங்கினில், வயிரியர்கள்முழவங்களை முழக்கும் இன்இசைக்கு வெருவிய மோடுஇளமூரிகள் ஓடைகளில் (விழுந்து) உழக்க (அதற்குஅஞ்சி) வாளைமீன்கள் (தெங்கு கமுகுமுதலியவற்றின்) பாளையில் குதிப்பன.

[இடைதர-மெலிய. முகடு-சிகரம். கொங்கை-முலை. வயிரியர்-கூத்தர். மோடு-பெரிய. மூரி-எருது.]

69. படைநெ டுங்கண்க ளுறைபுகப் படர்புனன் மூழ்கிக்
கடையு முன்கடற் செழுந்திரு வெழும்படி காட்டி
மிடையும் வெள்வளை புள்ளொடு மொலிப்பமெல் லியலார்
குடைய வண்டினங் கடிமலர் குடைவன குளங்கள்.

மெல் இயலார் (ஆகிய மாதர், தம்) படைபோன்ற நெடும் கண்கள் (இமையாகிய) உறையில் புக (மூடி) படர்ந்த புனலில் மூழ்கியும், முன் (தேவர்கள்) கடையும் (பால்) கடலில் செழிய திரு(மகள்) எழும் படியை காட்டி (எழுந்திருந்தும்), மிடையும் வெள் வளைகள் புள்களோடும் ஒலிப்பவும் குளங்களில் குடைய (அதற்கு வெருவி) வண்டு இனம் கடிபொருந்திய மலர்களுக்குள் குடைவன. [படி-தன்மை. மிடையும்-நெருங்கிய. கடி-வாசனை.]

அகலிகையின் வரலாறு.

70. இனைய நாட்டினை யினிதுசென் றஞ்சிசூழ் மிதிலை
புனையு நீள்கொடிப் புரிசையின் புறத்துவந் திறுத்தார்
மனையின் மாட்சியை யழித்திழி மாதவன் பன்னி
கனையு மேட்டுயர் கருங்கலோர் வெள்ளிடைக் கண்டார்.

இனையது ஆன (விதேக) நாட்டினை இனிது சென்று (அந்நாட்டின் தலை நகரமான) இஞ்சி சூழ்ந்த மிதிலையை புனையும் நீண்ட கொடிகள் (கட்டின) புரிசையின் புறத்து வந்து (அம்மூவரும்) இறுத்தார். (அப்பொழுது) மனையின் மாட்சியை அழித்து (தானும்) இழிந்த (அகலிகையாகிய) (கௌதம) மாதவனது பன்னியானவள் (சாபரூபமாய்க்கிடந்த) கனையும் மேட்டு உயர்ந்த ஓர் கருங்கல்லை வெள்ளிடையில் கண்டார். [இஞ்சி, புரிசை-மதில். மனையின் மாட்சி-இல்லறச்சிறப்பு, கற்பு. பன்னி-பத்நி. கனையு மேட்டுயர்-நெருங்கியமேடாய் உயர்ந்த. வெள்ளிடை-வெற்றிடம்]

71. கண்ட கன்மிசைக் காகுத்தன் கழற்றுகள் கதுவ
உண்ட பேதைமை மயக்கற வேறுபட் டுருவங்
கொண்டு மெய்யுணர் வவன்கழல் கூடிய தொப்பப்
பண்டை வண்ணமாய் நின்றனண் மாமுனி பணிப்பான்.

(அவ்வாறு) கண்ட கல்மிசை காகுத்தனது கழல்துகள் கதுவவும், (உடனே), (ஜீவாத்மாவை) உண்ட பேதைமை மயக்கம் அற (அவ்வாத்மா) உருவம் வேறுபட்டு (நித்திய சூரியாகி) மெய் உணர்வு கொண்டு (ஸ்ரீமந் நாராயணனாகிய) அவன் கழலை கூடியது ஒப்ப, (கல்லுருவமாய் இருந்த அவ்வகலிகை) பண்டை வண்ணம் ஆய் நின்றனள். (அதுகண்டு விச்வாமித்திர) மா முனி (இராமனை நோக்கி) பணிப்பான். [காகுத்தன்-இராமன். கழல்-கால். பேதைமை-அஞ்ஞானம்]. பண்டை வண்ணம் என்றதால் அகலிகை பெண்ணுருவம் பெற்றதன்றி இராமன் கால் படத்தோஷமும் நீங்கி இந்திரன் அணுகுவதற்குமுன் அவள் இருந்த தன்மையளாயினள் என்பது தெரிகின்றது.

72. மாயிரு விசும்பின் கங்கை மண்மிசை யிழித்தோன் மைந்த
மேயின வுவகை யோடு மின்னென வொதுங்கி நின்றாள்
தீவினை நயந்து செய்த தேவர்கோன் றனக்குச் செங்கண்
ஆயிர மளித்தோன் பன்னி யகலிகை யாகு மென்றான்.

(விச்வாமித்திரன்) "மா இரு விசும்பின் கங்கையை மண்மிசை இழித்தோன் (ஆகிய பகிரதனின் மரபில் வந்த) மைந்தனே, மேயின உவகையோடு மின் என ஒதுங்கி நின்றாள் (ஆகிய இவள்), தீ வினையை நயந்து செய்த (இந்திரனாகிய) தேவர்கோன் தனக்கு (உடலெங்கும்) ஆயிரம் செம் கண்களை அளித்தோன் (ஆகிய கௌதம ரிஷியின்) பன்னியான அகலிகை ஆகும்." என்றான். [மாயிருவிசும்பின் கங்கை-மிகுந்தபெருமை வாய்ந்த ஆகாயகங்கை. நயந்து-விரும்பி]

73. பொன்னையேய் சடையான் கூறக் கேட்டலும் பூமி கேள்வன்
என்னையே யென்னை யேயிவ் வுலகிய லிருந்த வண்ணம்
முன்னையூழ் வினையி னாலோ நடுவொன்று முடிந்த துண்டோ
அன்னையே யனையாட்கிவ்வா றடுத்தவா றருளு கென்றான்.

பொன்னை எய் சடையான் (ஆன விச்வாமித்திரன் அவ்வாறு) கூற, அதை கேட்டலும் பூமி (தேவிக்கு) கேள்வன் (ஆன இராமன்), 'என்னையே! என்னையே! இவ்வுலகின் இயல் இருந்தவண்ணம்!(என வியந்து) அன்னையை அனையாளுக்கு இவ்வாறு அடுத்தவாறு, முன்னை ஊழ் வினையினாலோ (அல்லது) நடுவில் ஒன்று முடிந்தது உண்டோ, (அதைச்சொல்லி) அருளுக" என்றான்.

74. அவ்வுரை யிராமன் கூற வறிஞனு மவனை நோக்கிச்
செவ்வியோய் கேட்டி மேனாட் செறிசுடர்க் குலிசத் தண்ணல்
அவ்விய மவித்த சிந்தை முனிவனை யற்ற நோக்கி
நவ்விபோல் விழியி னாடன் வனமுலை நணுக லுற்றான்.

இராமன் அ உரை கூற, (விச்வாமித்திரனாகிய) அறிஞனும் அவனை நோக்கி "செவ்வியோய், (சொல்கிறேன்) கேள், மேல்நாள் செறிந்த சுடர்பொருத்திய குலிசம் (உடைய) அண்ணல் (ஆகிய இந்திரன்), அவ்வியத்தை அவித்த சிந்தை(யனான கௌதம முனிவனது) அற்றம் நோக்கி, (இவ்வகலிகையாகிய) நவ்விபோல் விழியினாள் தன் வனம் பொருந்திய முலையை நணுகல் உற்றான். [குலிசம்-வஜ்ராயுதம். அவ்வியம்-பொறாமை, Jealousy. அவித்த-நீக்கிய. அற்றம்-இல்லாதசமயம். நவ்வி-மான். வனம்-அழகு. நணுகல்-சேர்தல்.]

75. தையலா ணயன வேலு மன்மதன் சரமும் பாய
உய்யலா முறுதி நாடி யுழல்பவ னொருநா ளுற்ற
மையலா லறிவு நீங்கி மாமுனிக் கற்றஞ் செய்து
பொய்யிலா வுள்ளத் தான்ற னுருவமே கொண்டு புக்கான்.

"(அது எவ்வாறு நிகழ்ந்தது எனில்), (இந்த) தையலாள் நயனம் ஆகிய வேலும் மன்மதன் சரமும் பாய, (இவைகளால் உண்டான வருத்தம் நீங்கி) உய்யல் ஆகும் உறுதியை நாடி உழல்பவன் (ஆன இந்திரன்) ஒருநாள் (அவன்) உற்ற (கரைகடந்த) மையலால் அறிவு நீங்கி, (கௌதம) மா முனிக்கு (வஞ்சனையால்) அற்றம் செய்து, (அகன்ற அந்த) பொய் இல்லாத உள்ளத்தான் தன் உருவமே கொண்டு (இவளிடத்தில்) புக்கான். [உய்யலாமுறுதி-பிழைக்கும்வழி. மையல்-காமவெறி.]

76. புக்கவ ளோடுங் காமப் புதுமண மதுவின் றேறல்
ஒக்கவுண் டிருத்த லோடு முணர்ந்தன ளுணர்ந்த பின்னும்
தக்கதன் றென்ன வோரா டாழ்ந்தன ளிருப்பத் தாழா
முக்கணா னனைய வாற்றன் முனிவனு முடுக வந்தான்.

"புக்கு, (இந்திரன்) காமம் (என்னும்) புதுமணமாகிய மது உடைய தேறலை அவளோடும் ஒக்க உண்டு இருத்தலோடும் (அகலிகை) உணர்ந்தனள். உணர்ந்த பின்னும் (இக்காரியம்) 'தக்கது (அல்லது) (தக்கது) அன்று,' என்ன ஓராள் (ஆகி அதை) தாழ்ந்தன

ளாய் இருப்ப, (அந்தச் சமத்தில்) மூக்கணன் (ஆகிய பரமசிவன்) அனைய ஆற்றல்(வாய்ந்த கௌதம) முனிவனும் தாழாது மூடுகி வந்தான் [மது-இன்பம். தேறல்-தேன். ஒக்க-சமமாக. ஓராள்-ஆராயாதவளாகி. தாழ்ந்தனள்-மகிழ்ந்து விரும்பினள். தாழாது-தாமதிக்காமல்.]

77. சரந்தரு சாப மல்லாற் றடுப்பருஞ் சாபம் வல்ல
வரந்தரு முனிவ னெய்த வருதலும் வெருவி மாயா
நிரந்தர முலகி னிற்கு நெடும்பழி பூண்டா ணின்றாள்
புரந்தர னடுங்கி யாங்கோர் பூசையாய்ப் போக லுற்றான்.

"(அவ்வாறு முடுகி) சரங்களை தருகின்ற சாபம் (உபயோகப் படுத்துவதில்) அல்லால் தடுப்பதற்கு அரிய சாபம் (இடுதலில்) வல்ல, வரங்களையும் (தக்க காலத்தில்) தரும், (கௌதம) முனிவன் எய்த வருதலும், உலகினில் நிரந்தரம் மாயாது நிற்கும் நெடும் பழியை பூண்டாள் (ஆகிய இந்த அகலிகை) வெருவி நின்றாள். புரந்தரன் நடுங்கி ஆங்கு ஓர் பூசை ஆய் போகல் உற்றான். [சாபம்-வில், சபித்தல். நிரந்தரம்-எக்காலத்தும். புரந்தரன்-இந்திரன். பூசை-பூனை.] (அடாத இச்செய்கையால் உலகிற்கே ஒரு பெரும் பழியைச் சுமத்தினாள் என்றும் மூன்றாமடி பொருள்படும்).

78. தீவிழி சிந்த நோக்கிச் செய்ததை யுணர்ந்து செய்ய
தூயவ னவனை நின்கைச் சுடுசர மனைய சொல்லால்
ஆயிர மாதர்க் குள்ள வறிகுறி யுனக்குண் டாகென்
றேயினனவையெலாம்வந்தியைந்தனவிமைப்பின்முன்னம்.

"(அப்பொழுது) செய்ய தூயவன் (ஆன கௌதமன்), செய்ததை உணர்ந்து, விழிகள் தீயை சிந்த (கோபித்து) நோக்கி, (ஏ இராமா,) நின் கையில் உள்ள சுடும் சரம் அனைய (தவறாத ஒரே) சொல்லால், (இந்திரனை) அவனை 'மாதர்க்கு உள்ள அறிகுறி ஆயிரம் உனக்கு உண்டாக' என்று ஏயினன். அவை எலாம் இமைப்பின் முன்னம் வந்து இயைந்தன. [செய்ய-நடுநிலைமையுள்ள. ஏயினன்-சபித்தான்.]

79. எல்லையி னாண மெய்தி யாவர்க்கு நகைவந் தெய்தப்
புல்லிய பழியி னோடும் புரந்தரன் போய பின்றை
மெல்லிய லாளை நோக்கி விலைமக ளனைய நீயும்
கல்லிய லாதியென்றான் கருங்கலாய் மருங்கு வீழ்வாள்.

"புரந்தரன் எல்லை இல்லாத நாணம் எய்தி (கண்டோர்) யாவர்க்கும் நகைவந்து எய்த புல்லிய பழியினோடும் போயபின், (கௌதம முனி) இந்த மெல் இயலாளை நோக்கி 'விலைமகள் அனைய நீயும்

கல் இயல் ஆதி' என்றான். (அச்சாபத்தைத்தாங்கி) கருங்கல்லாய் மருங்கு வீழ்வாளான இவள்,

80. பிழைத்தது பொறுத்த லென்றும் பெரியவர் கடனே யென்பர்
அழற்றருங் கடவுளன்னாய் முடிவிதற்கருளு கென்னத்
தழைத்துவண்டிமிருந்தண்டார்த்தசரதராமனென்பான்
கழற்றுகள் கதுவ விந்தக் கல்லுருத் தவிர்தி யென்றான்.

'பிழைத்ததை பொறுத்தல் என்றும் பெரியவர் கடனே என்பர் (அறிஞர்) அழல் (நிறம்) தரும்கடவுள் (ஆன சிவன்) அன்னாய், (நீ கொடுத்தசாபமாகிய) இதற்கு முடிவு (சொல்லி) அருளுக' என்ன (கௌதமன்) 'வண்டுகள் தழைத்து இமிரும் தண்தாரை அணிந்த தசரதராமன் என்பானது கழல்துகள் கதுவ இந்த கல்உருவை (நீ) தவிர்தி' என்றான்.

81. அந்தவிந் திரனைக்கண்ட வமரர்கள் பிரமன் முன்னா
வந்துகோ தமனைவேண்ட மற்றவை தவிர்த்து மாறாச்
சிந்தையின்முனிவு தீர்ந்து சிறந்தவா யிரங்கண் ணாக்கத்
தந்த மதுலகு புக்கார் தையலுங் கிடந்தாள் கல்லாய்.

82. இவ்வண்ண நிகழ்ந்தவண்ணமினியிந்தவுலகுக்கெல்லாம்
உய்வண்ணமன்றிமற்றோர் துயர்வண்ணமுறுவதுண்டோ
மைவண்ணத் தரக்கி போரின் மழைவண்ணத் தண்ணலேயுன்
கைவண்ண மங்குக் கண்டேன்கால்வண்ண மிங்குக்கண்டேன்

(முன் அகலிகைபால்) நிகழ்ந்தவண்ணம் இவ்வண்ணம். மழையின் வண்ணத்தையுடைய அண்ணலே, அங்கு மைவண்ணத்து அரக்கி (ஆகியதாடகையை சம்ஹாரம்செய்த) போரில் (உன்) கையினது வண்ணத்தை கண்டேன். (இங்கு) (அகலியைப்பரிபாலனம் செய்ததில்) (உன்) காலின் வண்ணத்தை கண்டேன். (இவ்வாறு நீ துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனாதி தொழில்களைத் துவக்கிவிட்டாயாகையால்) இனி, இந்தஉலகுக்குஎல்லாம் உய்யும் வண்ணம்அன்றி மற்று ஓர்துயர் (பெறும்) வண்ணம் உறுவது உண்டோ" (என விச்வாமித்திரன் சொல்லிமுடித்தான்.) [வண்ணம் என்பது முறையே;- விதம், விதம், நிறம், நிறம், திறம், திறம், தன்மை, தன்மை, எனப் பொருள்படும். மழை-மேகம். மை-கருமை.]

83. தீதிலா வுதவி செய்த சேவடிக் கரியசெம்மல் [ண்டு
கோதிலாகுணத்தான்சொன்னபொருளெலாமனத்திற்கொ
மாதவ னருளுண்டாக வழிபடு படருறாதே
போதுநீயன்னையென்றுபொன்னடிவணங்கிப்போனான்

தீது இல்லாக உதவி செய்த சேஅடி (உடைய) கரிய செம்மல் (ஆன இராமன்), கோது இல்லாத குணத்தான் (ஆன விச்வாமித்திரன்) சொன்ன பொருளை எல்லாம் (தன்) மனத்தில் கொண்டு, (அகலிகையைப் பார்த்து) 'அன்னையே, மாதவன் (ஆகிய உன் கணவனது) அருள் உண்டாக (என்னுடன்) வழிபடு. படர் உறாதே, நீ போது' என்று (அவளைத் தேற்றியழைத்துக்கொண்டு, முனிவனின்) பொன் போன்ற அடியைவணங்கி (புறப்பட்டு) போனான். [கோது-குற்றம். படர்-துன்பம்.]

84. அருந்தவ னுறையு ளன்னை யனையவ ரணுக லோடும்
விருந்தினர் தம்மைக் காணு மெய்ம்முனி வியந்த நெஞ்சன்
பரிந்தெதிர் கொண்டு புக்குக் கடன்முறை பழுது றாமல்
புரிந்தபின் காதி செம்மல் புனிதமா தவனை நோக்கி.

அரும் தவன் (ஆகிய கௌதமனது) உறையுளை அனையவர் அணுக, (அந்த) மெய் (ஞானமுடைய) முனி விருந்தினர்தம்மை கண்டு வியந்த நெஞ்சனாய் பரிந்து எதிர்கொண்டு (அழைத்து) புக்கு (செய்ய வேண்டிய) கடன் முறைகளை எல்லாம் பழுது உறாமல் புரிந்தபின், காதி (என்னும் அரசனின்) செம்மல் (ஆன விச்வாமித்திரன், கௌதமனாகிய) புனித மா தவனை நோக்கி, [உறையுள்-ஆசிரமம்.]

85. அஞ்சன வண்ணத் தான்ற னடித்துகள் கதுவா முன்னம்
வஞ்சிபோ லிடையா ளன்னை வண்ணத்த ளாகி நின்றாள்
நெஞ்சினாற் பிழைப்பி லாளை நீயழைத் திடுக வென்னக்
கஞ்சமா முனிவ னன்ன முனிவனுங் கருத்துட் கொண்டான்

"அஞ்சன வண்ணத்தான் (ஆகிய இந்த இராமன்) தன் அடி துகள் கதுவா முன் (இந்த) வஞ்சிபோல் இடையாள் (ஆன அகலிகை) முன்னை வண்ணத்தள் ஆகி நின்றாள். நீ (இந்த) நெஞ்சினால் பிழைப்பு (செய்து) இலாளை (மறுபடி) அழைத்து இடுக" என்ன, கஞ்சம் (மலரிலுள்ள பிரமனாகிய) மா முனிவன் அன்ன (கௌதம) முனிவனும் (விச்வாமித்திரனுடைய) கருத்தை உள்கொண்டான். [அஞ்சனம்-கருமை.]

86. குணங்களா லுயர்ந்த வள்ளல் கோதமன் கமலத் தாள்கள்
வணங்கினன் வலங்கொண் டேத்தி மாசறு கற்பின் மிக்க
அணங்கினை யவன்கை யீந்தாண் டருந்தவ னோடும் வாச
மணங்கிளர் சோலை நீங்கி மணிமதிற் கிடக்கை கண்டான்.

(பின்), குணங்களால் உயர்ந்த வள்ளல் (ஆன இராமன்) கோதமனது கமலம் போன்ற தாள்களை வணங்கி, வலம்கொண்டு ஏத்தி, மாசு அற்ற கற்பில் மிக்க (அகலிகையாகிய) அணங்கினை அவன் கைகளில் ஈந்து, ஆண்டு (நின்று புறப்பட்டு) (விச்வாமித்திரனான) அரும் தவனோடு வாசம் மணம் கிளர்கின்ற சோலை நீங்கி (மிதிலாநகரின்) மணி மதில்கிடக்கையை கண்டான். [அணங்கு-மாது. வாச மணம்-மிக்கமணம். மணி-அழகிய. மதில்கிடக்கை-மதில்நிலை.]

11. மிதிலைக்காட்சிப் படலம்.

1. மையறு மலரி னீங்கி யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவ ளிருந்தா ளென்று செழுமணிக் கொடிக ளென்னும்
கைகளை நீட்டி யந்தக் கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை யொல்லை வாவென் றழைப்பது போன்ற தம்மா.

'யான்செய்த மாதவத்தால் (தாமரை) மலரினின்று நீங்கி (தன்னிடத்தில்) வந்து செய்யவள் இருக்கிறாள்' என்று அந்த கடி (பொருந்திய) நகர், செழும் மணி (இழைத்துள) கொடிகள் என்னும் (தன்) கைகளை நீட்டி, கமலம் போன்ற செம்கண்களை உடைய (இராமனை) அய்யனை, 'ஒல்லை வா' என்று அழைப்பது போன்றது. [செய்யவள்-திருமகள். மை-குற்றம். கடி-காவல். ஒல்லை-விரைவாக.]

மாடங்களில் கொடிகள் ஆடுவது அரம்பையர் ஆனந்த நடனம்செய்வதுபோன்றிருந்தது.

2. நிரம்பிய மாடத் தும்பர் நிரைமணிக் கொடிக ளெல்லாந்
தரம்பிற ரின்மை யுன்னித் தருமமே தூது செல்ல
வரம்பில்பே ரழகி னானை மணஞ்செய்வான் வருகின் றானென்
றரம்பையர் விசும்பி னூடு மாடலி னாடக் கண்டார்.

(தூதாகச் செல்லும்) தரம் பிறர்க்கு இன்மையை உன்னி தருமதேவதையே தூதாக செல்ல, வரம்புஇல்லாத பேர்அழகினானை மணம் செய்ய (ஸ்ரீராமன்) வருகின்றான் என்று (மகிழ்ந்து) அரம்பையர் விசும்பில் ஆடல்போல், (சிற்பத் தொழில்) நிரம்பிய மாடத்து உம்பர் நிரையாக மணி கொடிகள் எல்லாம் ஆட கண்டார். [தரம்-யோக்யதை. உம்பர்-மேல்நிலை. நிரை-வரிசை.]

அந் நகர் புறத்தில் நாயகநாயகிபோல் நெருங்கி யானைகள் போர்புரிந்தன.

3. தயிருறு மத்திற் காமன் சரம்படத் தலைப்பட் டோடும்
உயிருறு காத லாரி னொன்றையொன் றொருவ கில்லா
செயிருறு மனத்த வாகித் தீத்திரள் செங்கண் சிந்த
வயிரவான் மருப்பி யானை மலையென மலையக் கண்டார்.

தயிர் உற்ற மத்தைப்போல் உயிரை உற்ற காமன் சரம்பட (அதனால்) ஓடி தலைப்படும் காதலார்போல் ஒன்றை ஒன்று ஒருவகில்லாதனவாய், செயிர் உற்ற மனத்தஆகி, செம்கண் தீ திரள் சிந்த வயிரம் பெற்ற வால் மருப்பு (உடைய) யானைகள் மலைஎன மலைய கண்டார். [காமன்சரம்-மன்மதபாணம். தலைப்படும்-சேரும்.

ஒருவகில்லா-பிரியாது. செயிர்-கோபம். வால்மருப்பு-வெண்மை யானதந்தம். மலைவன-போர்புரிவன.]

கொடிகள் மாறிமாறி மேகம்பட்டு நனைந்தும் பின் அகில் புகைபட்டு உலர்ந்தும் ஆடுவனவாயின.

4 பகற்கதிர் மறைய வானம் பாற்கடல் கடுப்ப நீண்ட
துகிற்கொடி மிதிலை மாடத் தும்பரிற் றுவன்றி நின்ற
முகிற்குலந் தடவுந் தோறு நனைவன முகிலிற் சூழ்ந்த
அகிற்புகைதுவுந்தோறும்புலர்வனவாடக்கண்டார்.

பகல்கதிர் (ஆன சூரியன்) மறையவும், வானமானது பால்கடலை கடுப்ப (தோன்ற) வும், நீண்ட துகில்கொடிகளானவை, மிதிலை மாடத்து உம்பரில் துவன்றி நின்ற முகில்குலம் தடவும்தோறும் நனைவனவாகியும் (பின்) முகில்போல் (அம்மாடங்களில்) சூழ்ந்த அகில்புகை கதுவும்தோறும் புலர்வனவாகியும் ஆட கண்டார். [கடுப்ப-ஒத்து. துவன்றி-நெருங்கி. முகில்—மேகம்.]

தாமரை மலர்போல் பொலியும் மதில் சூழ்ந்த மிதிலைக்குள் அம்மூவரும் சென்றனர்.

5. ஆதரித் தமுதிற் கோலந் தோய்த் தவயவ மமைக்குந் தன்மை
யாதெனத் திகைக்குமல்லான் மதனற்கு மெழுத வொண்ணாச்
சீதையைத் தருத லாலே திருமக ளிருந்த செய்ய
போதெனப்பொலிந்துதோன்றும்பொன்மதின்மிதிலைபுக்கார்.

(இவளைப்போல் சித்திரம் எழுத) ஆதரித்து, அமுதில் (எழுது) கோலை தோய்த்து (எழுத ஆரம்பிக்கும் சமயத்தில்) அவயம் அமைக்கும் தன்மை யாது என (அறியாது) திகைப்பான் அல்லால், மதனற்கும் எழுத ஒண்ணாத (வடிவழகு வாய்ந்த) சீதையை தருதலாலே—திருமகள் இருந்த செய்ய (தாமரை) போது என பொலிந்து தோன்றும் பொன் மதில் (சூழ்ந்த) மிதிலைக்குள் புக்கார். [ஆதரித்து-விரும்பி. போது-மலர்]

இது முதல் 22வது செய்யுள் வரையில் மிதலாநகர் வருணனை.

6. சொற்கலை முனிவ னுண்ட சுடர்மணிக் கடலுந் துன்னி
அற்கலந் திலங்கு பன்மீ னரும்பிய வானும் போல
விற்கலை நுதலி னாரு மைந்தரும் வெறுத்து நீத்த
பொற்கலன்கிடந்தமாடநெடுந்தெருவதனிற்போனார்.

(புக்கு), சொல்லால் ஆகிய கலை (வல்ல அகஸ்திய) முனிவன் (நீர் வற்ற) உண்ட சுடர் (வீசும்) மணிகள் (நிரம்பிய) கடலும், அல் உடன் கலந்து துன்னி இலங்கும் பல் மீன் அரும்பிய வானும் போல—வில்லையும் (சந்திர) கலையையும் (போன்ற) நுதலினாரும் மைந்தரும் (கலவியில்) வெறுத்து நீத்த பொன் கலன்கள் (கொள்வாரிலாமல்)

கிடந்த மாடங்கள்(உடைய)நெடும் தெருஅதனில் போனார். [சுடர்-ஒளி. அல்-இருள். இலங்கும்-பிரகாசிக்கின்ற. மீன்-நட்சத்திரம்].

7. தாறுமாய் தறுகட் குன்றந் தடமத வருவி தாழ்ப்ப
ஆறுமாய்க் கலின மாவி லாழியு மிழிந்தோ ராறுய்ச்
சேறுமாய்த் தேர்க ளோடத் துகளுமா யொன்றே டொன்று
மாறுமா ருகி வாளாக் கிடக்கிலா மறுகிற் சென்ருர்.

தாறுஐ மாய்க்கின்ற தறுகண் (மிகுந்த) குன்றம் (போன்ற யானைகள்) தடம் மதம் (நீராகிய) அருவிகளை தாழ்ப்ப, (இதனால்) ஆறும் ஆய், (பின்) கலினம் (பூட்டிய) மாவினது விலாழி இழிந்து (வேறு) ஓர் ஆறு ஆய், தேர்கள் ஓட சேறும் ஆய் (பின் உலர்ந்து) துகளும் ஆய், (அவ்விதம்) ஒன்ரோடு ஒன்று மாறு மாறு ஆகி வாளா கிடக்கிலாத மறுகில் சென்ருர். [தாறுமாய்-அங்குசத்தைமுறிக்கின்ற. தறுகண்-உக்கிரம். கலினமா-கடிவாளம்பூட்டியகுதிரை. விலாழி-நுரை. வாளா-சும்மா. மறுகு-வீதி.]

கலவியில் இளைத்த மகளிர்போல் அவர் புலவியில்
நீத்த பூமாலைகள் தெருக்களில் வாடிக்கிடந்தன.

8. தண்டுத லின்றி யொன்றித் தலைத்தலை சிறந்த காதல்
உண்டபின் கலவிப் போரி ஞெசிந்தமென் மகளி ரேபோற்
பண்டரு கிளவி யார்தம் புலவியிற் பரிந்த கோதை
வண்டொடுகிடந்த தேன்சோர்மணிநெடுந்தெருவிற்சென்ருர்.

தண்டுதல் இன்றி ஒன்றி தலைதலை சிறந்த காதலை உண்டபின் கலவிபோரில் ஒசிந்த மெல் மகளிரேபோல்—(அந்த) பண் போன்ற கிளவியார் (கலவிக்குமுன் நிகழ்ந்த) தம் புலவியில் பரிந்த கோதைகள் (வாடித் துவண்டு) வண்டு உடன் கிடந்து தேனை சோர் கின்ற மணி நெடும் தெருவில் சென்ருர். [தண்டுதல்-பிரிதல். தலைதலை-இருவர்க்கும். ஒசிந்த-இளைத்த. புலவி-ஊடல். பரிந்த-நீக்கிவிட்ட. கோதை-பூமாலை,]

9. நெய்திர ணரம்பிற் றந்த மழலையி னியன்ற பாடல்
தைவரு மகர வீணை தண்ணுமை தழுவித் தூங்கக்
கைவழி நயனஞ் செல்லக் கண்வழி மனமுஞ் செல்ல
ஐயநுண் ணிடையா ராடு நாடக வரங்கு கண்டார்.

நெய் திரண்ட நரம்பு (ஓசை) போல் தந்த மழலைமொழியால் இயன்ற பாடலானது, தைவரும் மகரவீணையுடனும் தண்ணுமையுடனும் தழுவி (சுருதி ஒத்து) தூங்கவும், (அபிநயிக்கிற) கையின் வழி நயனம் செல்லவும், (அந்த) கண் வழி மனமும் செல்லவும், (உண்டோ இல்லையோ என்னும்) ஐயத்திற்கு இடமான நுண்ணிய இடையார் (ஆன நாட்டியப் பெண்கள்) ஆடும், நாடக அரங்கை

கண்டார். [இயன்ற-அமைந்த. தைவரும்-வருடப்படுகின்ற. தண்ணுமை-மத்தளம். அரங்கு-மேடை]

10. பூசலி னெழுந்த வண்டு மருங்கினுக் கிரங்கிப் பொங்க
மாசுறு பிறவி போல வருவது போவ தாகிக்
காசறு பவளச் செங்காய் மரகதக் கமுகு பூண்ட
ஊசலின் மகளிர் மைந்தர் சிந்தையோ டுலவக் கண்டார்.

மருங்கினுக்கு இரங்கி பூசலோடு எழுந்த வண்டுகள் பொங்க, காசு அற்ற பவளத்தால் செய்த செம் காய்கள் பதித்த மரகதத்தால் செய்த கமுகுமரங்களில் பூட்டிய ஊசலில் மாசுஉற்ற பிறவிபோல் (மேல்கீழாய்) வருவதும் போவதும் ஆகி மகளிர் (தம்மைக் கண்டு கருதி நிற்கும்) மைந்தர்களின் சிந்தையோடு உலவுதலை கண்டார். [பூசல்-ஆரவாரம். மருங்கு-இடை. பொங்க-மிகுதியாக. காசு-குற்றம். கமுகு-பாக்குமரம். சிந்தையோடு-மனதோடு. ஊசல்-ஊஞ்சல்.]

காவிரைக்கரைபோல் மலைவளம் நிறைந்த கடைவீதியை மிதிலையில் கண்டார்.

11. வரப்பறு மணியும் பொன்னு மாரமுங் கவரி வாலும்
சுரத்திடையகிலு மஞ்ஞைத்தோகையுந்தும்பிக்கொம்பும்
குரப்பணை நிரப்பு மள்ளர் குவிப்புறக் கரைக டோறும்
பரப்பிய பொன்னி யன்ன வாவணம் பலவுங் கண்டார்.

வரம்பு அற்ற மணியும், பொன்னும், ஆரமும், கவரி (மானின்) வாலும், சுரம் இடையில் (உண்டாகும்) அகிலும், மஞ்ஞைதோகையும், தும்பியின் கொம்பும்—குரம்பு அணை (கோலி) நிரப்பும் மள்ளர் குவிக்கும்படி கரைகள் தோறும் பரப்பிய பொன்னி அன்ன, ஆவணம் பலவும் கண்டார். [ஆரம்-சந்தனம். சுரம்-பாலைநிலம். மஞ்ஞை மயில். தும்பி-யானை. குரம்பு-செய்கரை. மள்ளர்-உழவர். பொன்னி-காவிரிநதி. ஆவணம்-கடைவீதி].

12. வள்ளுகிர்த் தளிர்க்கை நோவ மாடகம் பற்றி வார்ந்த
கள்ளென நரம்பு வீக்கிக் கண்ணொடு மனமுங் கூட்டி
வெள்ளிய முறுவ றோன்ற விருந்தென மகளி ரீந்த
தெள்விளிப்பாணித்தீந்தேன்செவிமடுத்தினிதுசென்றார்.

வள் உகிர் (பொருந்திய) தளிர்போன்ற கைகள்நோவ (வீணையின்) மாடகம் பற்றி வார்ந்த கள் என (தோன்றும்) நரம்பை வீக்கி, (அர்த்தஞானம் தோன்ற,தம்) கண்ணோடு மனமும் கூட்டி, வெள்ளிய முறுவல் தோன்ற விருந்து என மகளிர் ஈந்த தெள் விளி பாணி (ஆகிய) தீம் தேனை (அம்மூவரும்) செவிகளால் மடுத்து இனிது சென்றார். [வள்-கூரிய. உகிர்-நகம், மாடகம்-முறுக்காணி. வார்ந்த-ஒழுகின. வீக்கி-அழுத்திக்கட்டி. முறுவல்-பல். தெள்விளிபாணி-தெளிந்தஇசையோடுகூடியபாட்டு. தீம்-மதுரமான. மடுத்து-உண்டு.]

13. கொட்புறு கலினப் பாய்மா குலான்மகன் முடுக்கி விட்ட
மட்கலத் திகிரி போல வாளியின் வருவ மேலோர்
நட்பினி னிடைய ருவாய் ஞானிக ளுணர்வி னொன்ருய்க்
கட்புலத் தினைய வென்று தெரிவில தெரியக் கண்டார்.

மேலோர்களது நட்பைபோல் இடை அருவாய், ஞானிகள் உணர்வுபோல் (சலனமில்லாத) ஒன்ருய், கண்புலனால் இனைய என்று தெரிவிலவாய்—கொட்பு உற்ற கலினம் பாய்மா (ஆகிய குதிரைகள்), குலால்மகன் முடுக்கி விட்ட மண்கலம் (செய்யும்) திகிரிபோல் வாளியின் வருவனவற்றை, தெரிய கண்டார். [கொட்பு-சுழல்தல். குலால்மகன்-குயவன். திகிரி-சக்கரம். வாளியின்-வட்டமாக].

மாளிகையின் சாளரந்தோறும் சந்திரோதயம் போல் மாதர் முகங்கள் தென்பட்டன.

14. வாளரம் பொருத வேலு மன்மதன் சிலையும் வண்டின்
கேளொடுகிடந்தநீலச்சுருளுஞ்செங்கிடையுங்கொண்டு
நீளிருங் களங்க நீக்கி நிரைமணி மாட நெற்றிச்
சாளரந் தோறுந் தோன்றுஞ் சந்திர வுதயங் கண்டார்.

வாளரம் பொருத (கண்ணாகிய) வேலும், (நெற்றியாகிய) மன்மதன் சிலையும், (கூந்தலாகிய) வண்டின் கேள்ஒடு கிடந்த நீல சுருளும் (அதரமாகிய) செங்கிடையும் (தன்னிடத்தில்) கொண்டு, நீண்ட இரும் களங்கத்தை நீக்கி, நிரை (யாக உள்ள) மாடங்களின் நெற்றி (யில் இருக்கும்) சாளரம்தோறும் (மாதர்களது முகவிகாச பாகிய) சந்திர உதயத்தை கண்டார். [வாளரம்பொருத வேல்-கூரிய அரத்தால் அராவப்பட்ட வேல். கேள்-கூட்டம். செங்கிடை-சிவந்த நெட்டி.]

15. பளிக்குவள் ளத்து வார்த்த பசுநறுந் தேறன் மாந்தி
வெளிப்படு நகைய வாகி வெறியன மிழற்று கின்ற
ஒளிக்கினு மொளிக்க வொட்டா வூடலை யுணர்த்து மாபோல்
களிப்பினையுணர்த்துஞ்செவ்விக்கமலங்கள்பலவுங்கண்டார்.

பளிங்கு வள்ளத்தில் வார்த்த பசும் நறும் தேறலை மாந்தி, (அதனால்) வெளிப்படும் நகையை உடையன ஆகி, வெறியன (ஆனவார்த்தைகளை) மிழற்றுகின்றதான ஒளிப்பினும் ஒளிக்க ஒட்டாத (தாம் கொண்ட) ஊடலை (பிறர்க்கு) உணர்த்துவதுபோலவே, (உள்ள) களிப்பினை உணர்த்தும் செவ்வி கமலங்கள் (ஆகிய மாதரின் வாய்கள் பலவும் கண்டார் [பளிங்கு-ஸ்படிகம். வள்ளம்-கிண்ணம். ஊடல்-பிணங்கல். செவ்வி-அழகிய.]

16. மெய்வரு போகமொக்க வுடனுண்டு விலையுங்கொள்ளும்
பையரவல்கு லார்த முள்ளமும் பளிங்கும் போல
மையரி நெடுங்க ணோக்கம் படுதலுங் கருகி வந்து
கைபுகிற் செவந்து காட்டுங் கந்துகம் பலவுங் கண்டார்.

மெய்யினால் வரும் போகத்தை (ஆடவர்கள்) உடன் ஒக்க உண்டு (பின் அதற்கு) விலையும் கொள்ளும் அரவின் பைபோன்ற அல்குலார் (ஆன பரத்தையர்களது) உள்ளத்தையும், பளிங்கையும் போல —(மாதர்களது) மைஇட்ட செவ்வரிபடர்ந்த கண்களின் நோக்கம் படுதலும் கருகியும், வந்து (அவர்கள்) கைகளில் புகுந்தால் செவந்தும் காட்டும் கந்துகம் பலவும் கண்டார். [ஒக்க-சமமாக. பை-படம். கந்துகம்-பந்து] கண்டது கலந்து தம் தன்மையை மாற்றிக்காட்டும் பரத்தையர் மனமும் பளிங்கும்போல-கண்ணொளியால் கறுத்தும், கையொளியால் செவந்தும் காணப்படுகிற பந்துகளை மாதர்ஆடக் கண்டார், என்பது இச்செய்யுளின் கருத்து.

17. கடகமுங் குழையும் பூணு மாரமுங் கலிங்க நுண்ணூல்
வடகமு மகர யாழும் வட்டினி கொடுத்து வாசத் [ட்டுப்
தொடையலங் கோதை சோரப் பளிக்குநாய் செவப்பத்தொ
படைநெடுங் கண்ணார் வட்டாட் டாடிடம் பலவுங் கண்டார்.

கடகமும் குழையும் பூணும் (இரத்ந) ஆரமும் கலிங்கநாட்டில் நுண்ணிய நூலால் நெய்த வடகமும், மகரயாழும் வட்டினியாக கொடுத்து, வாசம் பொருந்திய தொடையல் (தரித்த) அம் கோதை சோர, பளிங்கால் செய்த நாய் (உருவமான சூதாடு பாச்சிகை) செவப்ப தொட்டு, (வேல்) படைபோன்ற நெடும் கண்ணார் (ஆகிய மாதர்) வட்டாட்டு ஆடும் இடம் பலவும் கண்டார். [வடகம்-மேல் ஆடை. வட்டினி-பந்தயப்பொருள். வட்டாட்டு-சூதாட்டம்.]

18. பங்கயங் குவளை யாம்பல் படர்கொடி வள்ளை நீலம்
செங்கிடை தரங்கங்கெண்டை சிலைவராலாமைதேம்பத்
தங்கள்வே றுவமை யில்லா வவயவந் தழுவிச் சாலும்
மங்கையர் விரும்பி யாடும் வாவிகள் பலவுங் கண்டார்.

பங்கயம் குவளை ஆம்பல் படர்கின்ற கொடிவள்ளை நீலம் செங்கிடை. தரங்கம் கெண்டை சிலைவரால் ஆமை (இவைய முகம் கண் வாய் கூந்தல் அதரம் வயிற்றின்வரை கண் கணைக்கால் ஆகிய அவயவங்களுக்கு நேராகாததுகண்டு) தேம்ப,—தங்களுக்கு வேறுஉவமை இல்லாத அவயவங்களை தழுவி சாலும் மங்கையர் விரும்பி ஆடும் வாவிகள் பலவும் கண்டார். [தரங்கம்-அலை. சாலும்-நிறைந்த]

இந்திரியங்களின் வசப்பட்டுச் சுழலும் அறிவுபோல்
வாலிபர் வாளைச்சுழற்றிப் பயிலிடம் கண்டார்.

19. இயங்குறு புலன்க ளங்கு மிங்குங்கொண்டேக வேகி
மயங்குபு திரிந்து நின்று மறுகுறு முணர்வி தென்னப்
புயங்களிற் கலவைச் சாந்தும் புணர்முலைச் சுவடு நீங்கா
வயங்கெழிற் குமரர்வாளாட் டாடிடம்பலவுங்கண்டார்.

இயங்குதலை உற்ற (ஐம்) புலன்கள் (விஷயங்களில் ஒன்றைவிட்டு

ஒன்றைப்பற்றி) அங்கும் இங்கும் கொண்டு ஏக (அவ்வாறு) எகி மயங்கி திரிந்துநின்று மறுகுறும் உணர்வு இது தான் என்னும்படி-- புயங்களில் கலவை சாந்தும் (மாதர்களது) புணர்ந்த முலைகளின் சுவடும் நீங்காத வயங்கும் எழில் (வாய்ந்த) குமரர் வாள் ஆட்டு ஆடும் இடம் பலவும் கண்டார். [இயக்கம்-சலனம். மறுகுறும்-சுழலும். சுவடு-வடு. வயங்கும்-விளங்கும். எழில்-அழகு]

20. வெஞ்சின முருவிற் றென்னு மேனியர் வேண்டிற் றீயும்
நெஞ்சின ரீசன் கண்ணி னெருப்புரு வனங்க னன்னார்
செஞ்சிலைக் கரத்தர் மாதர் புலவிக டிருத்திச் சேந்த
குஞ்சியர் சூழ நின்ற மைந்தர்தங் குழாங்கள் கண்டார்.

வெம் சினத்தின் உருவு 'இற்று' என்னும் மேனியர்--வேண்டிற்று ஈயும் நெஞ்சினர், ஈசனது (நெற்றி) கண்ணின் நெருப்பு உருத அனங்கன் அன்னவர், செம்சிலையை கரத்துடையவர்--மாதர் (உற்ற) புலவியை திருத்த (அப்போது அவர்களதுசெம்பஞ்சூட்டிய காலால் உதைபட்டு) செவந்த குஞ்சியர் (இன்னபல தன்மையரான) மைந்தர்கள் சூழநின்ற குழாங்கள் கண்டார். [குஞ்சி-தலைமயிர்]

21. பாகொக் குஞ்சொற் பைங்கிளி யோடும் பலபேசி
மாகத் தும்பர் மங்கையர் நாண மலர்கொய்யும்
தோகைக் கொம்பி னன்னவர்க் கன்ன நடைதோற்றுப்
போகக் கண்டு வண்டின மார்க்கும் பொழில் கண்டார்.

பைங்கிளியோடும் பாகை ஒக்கும் சொற்கள் பல பேசிக்கொண்டு மாகத்து உம்பர் (உள்ள தெய்வ) மங்கையர் நாணும்படி மலர்களை கொய்யும் தோகை (சாயலையுடைய) பூங்கொம்பின் அன்னவர்க்கு (அங்குள்ள) அன்னங்கள் நடையில் தோற்று போக (அதை) கண்டு (பரிகாசம் செய்து) வண்டு இனம் ஆர்க்கும் பொழிலை கண்டார். [பாகு-சர்க்கரைப்பாகு. மாகம்-ஆகாயம். தோகை-மயில். ஆர்க்கும்-ஆரவாரம்செய்யும். பொழில்-சோலை.]

22. உம்பர்க் கேயும் மாளிகை யொளி நிழல்பாய
இம்பர்த் தோன்றும் நாகர்த நாட்டி னெழில்காட்டிப்
பம்பிப் பொங்குங் கங்கையி னாழ்ந்த படைமன்னன்
அம்பொற் கோயிற் பொன்மதிள் சுற்றும் மகழ்கண்டார்

உம்பர்க்கு ஏயும் மாளிகைகளின் ஒளியின் நிழலானது பாய்வதால், இம்பரில் தோன்றும் (பாதளத்திலிருக்கும்) நாகர்தம் நாட்டின் எழிலை (மேல்கொண்டுவந்து) காட்டி, (சதுரங்க) படைகளுடைய (ஜனக மன்னனின்) அம்பொன்னால் அமைத்த கோயில் மதிளை சுற்றும், பம்பி பொங்கும் கங்கையைபோல் ஆழ்ந்த அகழை கண்டார். [உம்பர்க்கு ஏயும்-தேவர்கள் வசிக்கத் தகுந்த. ஒளி-வரிசை இம்பர்-பூலோகம். நாகர்தம் நாடு-நாகலோகம்.]

இதுமுதல் 32 வது விருத்தம் வரையில் சீதாபிராட்டியின் சிறப்பு.

23. பொன்னின் சோதி போதினி னாற்றம் பொலிவேபோல்
தென்னுண் டேனிற் றீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்
கன்னிம் மாடத் தும்பரின் மாடே கழிபேடோ
டன்னம் மாடு முன்றுறை கண்டங் கயனின்றார்.

பொன்னின் சோதி, போதினின் நாற்றம் (இவைகளின்) பொலிவு போல் உண்ணும் தேனின் தீம் சுவை (வாய்ந்த) தென் செம் சொல் கவி இன்பம் (போல் வாளாகிய சீதாபிராட்டியை) கன்னி மாடத்து உம்பரின் மாடு கழி பேடோடு அன்னம் ஆடும் முன் துறையில் கண்டு அங்கு அயல் நின்றார். [போது-புஷ்பம். பொலிவு-சிறப்பு. தென் சொல்-தமிழ்மொழி. கழி-(அன்பின்) மிக்க.]

24. செப்புங் காலைச் செங்க மலத்தோன் முதல்யாரும்
எப்பெண் பாலுங் கொண்டுவ மிப்போ ருவமிக்கும்
அப்பெண் டானே யாயின போதிங் கயல்வேறோர்
ஒப்பெங் கேகொண் டெவ்வகை நாடி யுரைசெய்வோம்.

எ பெண்பாலும் கொண்டு உவமிப்போர் செங்கமலத்தோன் (ஆகிய பிரமன்) முதல் யாரும், செப்புங்கால், உவமிக்கும், அ (திரு மகளான) பெண் தானே (இந்தச்சீதாபிராட்டி) ஆயினபோது இங்கு அயலாகவேறு ஓர் ஒப்பு எங்கு கொண்டு எவ்வகைநாடி உரைசெய் வோம்.

25. உமையா ளொக்கும் மங்கைய ருச்சிக் கரம்வைக்கும்
கமையாண் மேனி கண்டவர் காட்சிக் கரைகாணார்
இமையா நாட்டம் பெற்றில மென்றா ரிருகண்ணால்
அமையா தென்றா ரந்தர வானத் தவரெல்லாம்.

(அவ்வாறு ஒரு ஒப்புக் கூறவேண்டுமானால் சீதை) 'உமையாளை ஒக்கும்' (என்னலாம்). மங்கையர் (அவளழகைத் தொழுதவர்க ளாய்த்தம்) உச்சியில் கரம் வைக்கும் கமையாள் (ஆகிய சீதையின்) மேனியின் (அழகினது) காட்சிக்கு கரை காணாராய் 'இமையாத நாட்டம் பெற்றிலம்' என்றார். (இமையாநாட்டம் பெற்றுள) அந்த ரம் வானத்தவர் எல்லாம் (அதன் கரையைக்காண்வது) 'இரு கண் ணால் அமையாது' என்றார். [உமை-பார்வதி. கமையாள்-பொறுமை யுடையவள்.]

26. வென்றம் மானைத் தாரயில் வேலும் கொலைவாளும்
பின்றம் மானப் பேர்கய லஞ்சப் பிறழ்கண்ணாள்
குன்றம் மாடக் கோவி னளிக்குங் கடலன்றி
அன்றம் மாடத் தும்பர ளிக்கும் மமுதன்னாள்.

(நூல்களில் உவமையாகக் கூறப்படும்) அ மானை (பார்வையில்) வென்றும், தார் அணிந்த அயில்பொருந்திய வேலும் கொலை செய்வதற்குரிய வாளும் (நிகராகாது) பின்றவும், மான பேர் கயல் (கண்டு) அஞ்சவும் பிறழ்கின்ற கண்ணாள் (ஆகிய பிராட்டி), (மந்தர) குன்றம் (கடைந்து) ஆட கோ வினால் அளிக்கும் கடல் அன்றி, அ மாடத்து உம்பர் அளிக்கும் அமுதை அன்னாள். [தார்-மாலை. அயில்-கூர்மை. பின்ற-பின்னிட. மானபேர்-சிறந்த பெரிய. பிறழ்-திரிகின்ற. கோ-விஷ்ணு.]

27. பெருந்தே ரல்குற் பெண்ணிவ ளொப்பா ளொருபெண்ணைத்
தருந்தா னென்றா னான்முக னின்னுந் தரலாமே
அருந்தா வந்தத் தேவரி ரந்தா லமிர்தென்னும்
மருந்தே யல்லா தென்னினி நல்கும் மணியாழி.

பெரும் தேர்தட்டினையொத்த அல்குல்உடைய பெண்ணாகிய இவளை ஒப்பாள் ஆகிய ஒருபெண்ணை நான்முகன்தான் (சிருஷ்டித்து) தரும் என்றால் இன்னும் தரல்ஆமே! (முன்கிடைத்ததை) அருந்தி வந்து தேவர் (பின்னும்) இரந்தால், (திருப்பாற்கடல் ஆகிய) மணி ஆழி (அவர்களுக்கு) அமிர்து என்னும் மருந்தே அல்லாது இனி (வேறு) என் நல்கும். [இரந்தால்-வேண்டினால். மருந்து-அமிர்தம்.]

சீதையைக்கண்டபின் மேனகையாதி மாதர்முகம் பகற்கால
சந்திரன்போல ஒளி மழுங்கின.

28. அனையாண் மேனி கண்டபி னண்டத் தரசாளும்
வினையோன் மேவும் மேனகை யாதி மிளிர்வேற்கண்
இனையோ ருள்ளத் தின்னலி னோர்தம் முகமென்னும்
பனிதோய் வானின் வெண்மதிக் கென்றும் பகலன்றே.

அனையாளின் மேனியை கண்டபின், அண்டத்தை அரசு ஆளும் வினையோன் (ஆகிய இந்திரன்) மேவும் மேனகைஆதி மிளிர்கின்ற வேல்போன்ற கண்களையுடைய இனையோர், உள்ளத்தில் இன்னலினோர்தம் முகம் என்னும் பனிதோய்ந்த வானின் உள்ள வெண்மதிக்கு (சீதையின் முகம்) என்றும் பகல் அன்றே! [அண்டம்-விண்ணுலகம். மேவும்-விரும்பும். இன்னல்-துன்பம். பகல்-சூரியன்.]

29. மலர்மே னின்றிம் மங்கையிவ் வையத் திடைவைகப்
பலகா லுந்தம் மெய்ந்நனி வாடும் படிநோற்றார்
அலகோ வில்லா வந்தண ரோநல் லறமேயோ
உலகோ வானோ வும்பர்கொ லோவீ துணரேமால்.

(தாமரை) மலர்மேல்நின்று (அகன்று) இ மங்கை இ வையத்து

இடை (வந்து) வைக, தம் மெய் நனிவாடும்படி பலகாலும் நோற்றார்கள் அலகு இல்லாத அந்தணரோ, நல் அறமேயோ, உலகோ, வானோ, உம்பர்சோலோ, (யாரோ) ஈது (நாம்) உணரேம். [வைக-தங்க. நனி-மிகவும். நோற்றார்-தவம் செய்தவர். அலகு-அளவு.]

30. தந்நே ரில்லா மங்கையர் செங்கைத் தளிர்மானே
அன்னே தேனே யாரமிர் தேயென் றடிபோற்றி
முன்னே முன்னே மொய்ம்மலர் தூவி முறைசாரப்
பொன்னே சூழும் பூவி னொதுங்கிப் பொலிகின்றாள்.

(பிறரெவரும் அழகு குணம் முதலிய நலங்களில்) தமக்கு நேர் இல்லாதமங்கையர் 'செம்கை தளிர் மானே, அன்னே, தேனே, அரிய அமிர்தே' என்று (சீதாபிராட்டியின்) அடிகளை போற்றி மொய்த்த மலர்களைதூவி (அவளுக்கு) முன்னே முன்னே முறையாகசார (அவர்கள் தூவிய) பொன் சூழும் பூவில் ஒதுங்கி (நடந்து) பொலிகின்றாள். [அன்னை-தாயே. பொன்-மகரந்தம்.]

31. பொன்சேர் மென்காற் கிண்கிணி யாரம் புனையாரம்
கொன்சே ரல்குன் மேகலை தாங்குங் கொடியன்னார்
தன்சேர் கோலத் தின்னெழில் காணச் சதகோடி
மின்சே விக்க மின்னர செனனும் படிநின்றாள்.

பொன்சேர்ந்த மென்காலில் கிண்கிணியும், ஆரமும், புனையும் ஆரமும், கொன் சேர்ந்த அல்குல் மேகலையும், தாங்கும் (பூங்)கொடி அன்னார் (ஆகியமங்கையர்) தனது சேர்ந்தகோலத்தின் எழிலை காண சதகோடி மின்கள் சேவிக்க மின் அரசுஎன்னும்படி (பிராட்டி) நின்றாள். [பொன்-அழகு. சேர்ந்த-திரண்ட. ஆரம்-மாலை பதக்கம். கொன்-பெருமை. எழில்-அழகு. மின்-மின்னல்.]

32. கொல்லும் வேலுங் கூற்றமு மென்னும் மிவையெல்லாம்
வெல்லும்வெல்லும்மென்னமதர்க்கும்விழிகொண்டாள்
சொல்லுந் தன்மைத் தன்றது குன்றுஞ் சுவருந்திண்
கல்லும் புல்லுங் கண்டுரு கப்பெண் கனிநின்றாள்.

வேலும் கூற்றமும் என்னும் கொல்லும் இவை எல்லாம் (யாம்) 'வெல்லும் வெல்லும்' என்ன மதர்க்கும் விழிகளை கொண்டாள் (ஆகியசீதாபிராட்டியின் நிலையாகிய) அது சொல்லும் தன்மைத்து அன்று, குன்றும் சுவரும் திண்கல்லும் புல்லும் (அந்நிலையை) கண்டு உருக பெண் (உருக்கொண்ட ஒரு இனிய) கனி (போன்ற பிராட்டி) நின்றாள். [மதர்க்கும்-களிக்கும்.]

மங்கையர்க்கே மருந்து போல்வாளான சீதை
இராமனுக்கு யாது ஆவளோ?

33. வெங்களி விழிக்கொரு விழவு மாயவர்
கண்களிற் காணவே களிப்பு நல்கலால்
மங்கையர்க் கினியதோர் மருந்து மாயவள்
எங்கணா யகற்கினி யாவ தாங்கொலோ.

வெம் களிக்கும் விழிக்கு ஒரு விழவும் ஆய், அவர் கண்களில் காணவே களிப்பு நல்கலால், மங்கையர்க்கு இனியது ஓர் மருந்தும் ஆயவள் (ஆன பிராட்டி) எங்கள் நாயகற்கு இனி யாவது ஆகும் கொல்? [வெம்-விருப்பத்தைத்தரும். விழவு-திருவிழா. மருந்து-அமிர்தம்.]

சீதை அணிந்ததால் ஆபரணங்கள் அழகு பெற்றன அல்லாது
ஆபரணங்களால் அவள் அழகு பெறவில்லை.

34. இழைகளுங் குழைகளு மின்ன முன்னமே
மழைபொரு கண்ணிணை மடந்தை மாரொடும்
பழகிய வெனினுமிப் பாவை தோன்றலால்
அழகெனு மணியுமோ ரழகு பெற்றவே.

இழைகளும் குழைகளும் இன்ன (ஆபரணங்கள்) முன்னமே மழையை பொரும் கண் இணைகளுடைய மடந்தைமாரொடும் (அலங்காரமாய்) பழகியன எனினும் இ பாவை போல்வாள் (பிராட்டி) தோன்றுலால், அழகு எனும் (அந்த) அணிகளும் (இவளணிய) ஓர் அழகு பெற்றன. [இழை-நகை. குழை-காதணி. மழை-மேகம். பொரும்-ஒக்கும்.]

35. எண்ணரு நலத்தினா ளிணைய ணின்றுழி
கண்ணொடு கண்ணிணை கௌவி யொன்றையொன்
றுண்ணவு நிலைபெறா துணர்வு மொன்றிட
அண்ணலு நோக்கினா னவளு நோக்கினாள்.

எண்ணவும் அரிய நலத்தினாள் (ஆகிய சீதை மேற்சொல்லியவாறு) இணையளாய் நின்றுழி (ஒருவர்) கண்ணொடு (மற்றொருவர்) கண் இணை கௌவி ஒன்றைஒன்று உண்ணவும், நிலைபெறாது (அவர்கள்) உணர்வும் ஒன்றிட அண்ணலும் (அவளை) (நேராக) நோக்கினான், அவளும் (எதிர்) நோக்கினாள்.

36. நோக்கிய நோக்கெனும் நுதிகொள் வேலிணை
ஆக்கிய மதுகையான் றோளி லாழ்ந்தன
வீக்கிய கனைகழல் வீரன் செங்கணுந்
தாக்கணங் கனையவ டனத்திற் றைத்தவே.

(சீதாபிராட்டி) நோக்கிய நோக்கு என்னும் நுதிகொண்ட வேல் இணைகள் மதுகை ஆக்கியான் (ஆகிய இராமனது) தோளில் ஆழ்ந்தன. கனைக்கின்ற கழல்களை (காலில்) வீக்கிய வீரனது செம்கண்ணும் தாக்கணங்கு அனையவள் தனங்களில் தைத்தன. [நுதி-கூர்மை. மதுகை-பலம். கனை-ஒலிக்கின்ற. வீக்கிய-கட்டிய. தாக்கணங்கு-இலக்குமி]

37. பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்
தொருவரை யொருவர்தம் முள்ள மீர்த்தலால்
வரிசிலை யண்ணலும் வாட்க ணங்கையும்
இருவரு மாறிப்புக் கிதய மெய்தினார்.

(நலங்களை எல்லாம்) பருகிய நோக்கு என்னும் பாசத்தால் பிணித்து ஒருவரைஒருவர்தம் (தம்) உள்ளங்கள் ஈர்த்தலால், வரியமைந்த சிலை தாங்கிய அண்ணலும் வாள்போன்ற கண் உடைய நங்கையும் இருவரும் மாறி (மாறி) புக்கு (ஒருவர்) இதயத்தில் (மற்றொருவர்) எய்தினார். [பாசம்-கயிறு. ஈர்த்தலால்-இழுத்தலால்.]

38. மருங்கிலா நங்கையும் வசையி லையனும்
ஒருங்கிய விரண்டுடற் குயிரொன் றாயினார்
கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப்போய்ப்
பிரிந்தவர் கூடினாற் பேசல் வேண்டுமோ.

மருங்கு இல்லாத நங்கையும் வசை இல்லாத ஐயனும் ஒருங்கிய இரண்டு உடலுக்கு உயிர் ஒன்று ஆயினார். கரும் (திருப்பால்) கடல் பள்ளியில் கலவி நீங்கிப்போய் பிரிந்தவர் (ஆகிய அவர் மீட்டும் ஓர் இடத்தில்) கூடினால் பேசல் வேண்டுமோ?—(ஆதையால் அவர்கள் காட்சிக்குப்பின் காதல் கூறிப் பேச்சொன்றும் புகல வில்லை.) [மருங்கு-இடை. வசை-குற்றம். கரும்-பெருமைபொருந்திய.]

39. அந்தமி லழகனை யணைகி லாமையால்
பைந்தொடி யோவியப் பாவை போன்றனள்
சிந்தையு நிறையுமெய்ந் நலனும் பின்செல
மைந்தனு முனியொடு மறையப் போயினான்.

பைந்தொடி (அணிந்த சீதாபிராட்டி) அந்தம் இல்லாத அழகனை அணைகிலாமையால் (அசைவற்று) ஓவியப்பாவையை போன்றனள். (அவளது) சிந்தையும் நிறையும் மெய்நலனும் (அவளைவிட்டுத்தன்) பின்செல்ல, மைந்தனும் (விச்வாமித்திர) முனியொடு மறைய போயினான். [பைந்தொடி-பசுமையானபொன்னால் செய்த வளையல். ஓவியம்-சித்திரம். சிந்தை-ஸ்மரணை. நிறை-மனஉறுதி. மெய்நலன்-அவயவங்களின் அழகு.]

40. பிறையன நுதலவள் பெண்மை யென்படும்
நறைகம ழலங்கலா னயன கோசரம்
மறைதலு மனமெனு மத்த யானையின்
நிறையெனு மங்குச நிமிர்ந்து போயதே.

நறை கமழும் அலங்கலான் (ஆகிய இராமன்) (சீதையின்) நயன கோசரத்துக்கு மறைதலும் (அவள்) மனம் என்னும் மதயானையினால் நிறை என்னும் அங்குசம், (அடக்க முடியாது) நிமிர்ந்து போயது. (எனவே) பிறை அன்ன நுதலவள் (நாணம் முதலிய) பெண்மை (குணங்கள்) என்ன (பாடு) படும்! [நறை-வாசனை. அலங்கலான்-மாலைதரித்தவன். நயனகோசரம்-கண்பார்வையினெல்லை.]

41. மாலுற வருதலு மனமு மெய்யுந்தன்
நூலுறு மருங்குல்போ னுடங்கு வாணெடுங்
காலுறு கண்வழி புகுந்த காதனோய்
பாலுறு பிரையெனப் பரந்த தெங்குமே.

மால் உற வருதலும், மனமும் மெய்யும் தன் நூல் உற்ற மருங்குல் போல் நுடங்குவாளது (இராமனுடைய) கால உற்ற நெடும் கண்ணின் வழியாக புகுந்த காதல் நோய் பாலை உற்ற பிரை என்ன (தேகம்) எங்கும் பரந்தது. [மால்-திருமால், வேட்கை, மயக்கம். நூல் உற்ற-நூலிழைபோன்ற, வேத நூல் போன்ற. நுடங்குவாள்-தளர்பவள். காலைஉற்ற-காலினழகைக்கண்டுஅதிலேபதிந்துகிடந்த]

42. நோமுறு நோய்நிலை நுவல கிற்றிலள்
ஊமரின் மனத்திடை யுன்னி விம்மினாள்
காமனு மொருசரங் கருத்தி லெய்தனன்
வேமெரி யதனிடை விறகிட் டென்னவே.

(அவ்வாறு) நோகுமவள், (தான்) உற்ற (காம) நோய்நிலையை (ஒருவரோடும்) நுவலகிற்றிலள். (சொல்லாது) ஊமரைப்போல்மனத்திடை உன்னி விம்மினாள். (அப்பொழுது) வேகும் எரியதன் இடை விறகு இட்டு என்ன, காமனும் ஒரு (தாமரைமலர்) சரத்தை (அவள்) கருத்தில் எய்தனன். [சரம்-அம்பு.]

43. நிழலிடு குண்டல மதனி னெய்யிடா
அழலிடா மிளிர்ந்திடு மயில்கொள் கண்ணினாள்
சுழலிடு கூந்தலுந் துகிலுஞ் சோர்தரத்
தழலிடு வல்லியே போலச் சாம்பினாள்.

நிழலை இடும் குண்டலம் அதனில் (சென்று எட்டி), நெய் இடாமல் அழலில் (காய்ச்சி) இடாமல் மிளிர்ந்து இடும் (வேல் ஒன்று உளதாயின் அந்த) அயில் போன்ற கண்ணினாள் (ஆகிய சீதை),

சுழல்இடும் கூந்தலும் துகிலும் சோர்தர தழலில் இட்ட வல்லியே போல் சாம்பினாள். [நிழல்-ஒளி. சாம்பினாள்-வாடினாள்]

44. தழங்கிய கலைகளு நிறையுஞ் சங்கமும்
அழுங்கிய வுள்ளமு மறிவு மாமையும்
இழந்தவ ளிமையவர் கடைய யாவையும்
வழங்கிய கடலென வறிய ளாயினாள்.

(இவ்வாறு வாட்டமுற்று) தழங்கிய கலைகளும், நிறையும், சங்கமும், அழுங்கிய உள்ளமும், அறிவும், மாமையும் இழந்து, அவள் இமையவர் கடைய யாவையும் வழங்கிய (திருப்பால்) கடல் என வறியவள் ஆயினாள். [தழங்கிய-ஒலிக்கின்ற. கலை-மேகலை, சந்திரன். நிறை-மனஉறுதி, அழிவில்லாத அமிர்தம். சங்கம்-வளையல். சங்கநிதி, மாமை-அழகு]

45. கலங்குழைந் துகநெடு நாணும் கண்ணற
நலங்குழை தரநகின் முகத்தி னேவுண்டு
மலங்குழை யெனவுயிர் வருந்திச் சோர்வுறும்
பொலங்குழை மயிலைக்கொண் டரிதிற் போயினார்.

(அணி) கலங்கள் குழைந்து உக, நெடும் நாணும் கண்அற, நலங்கள் (எல்லாம்) குழைதர, நகிலின் முகத்தில் (மன்மதனின் பாணமாகிய மாமலர்) ஏவை உண்டு, மலங்கும் உழைஎன உயிர் வருந்தி சோர்வு உறும் பொலம் குழை (அணிந்த) மயில் போல்வாளை (அழைத்துக்) கொண்டு (மங்கையர்) அரிதில் போயினார். [குழைதல்-நெகிழ்தல். கண் அற-அகல. நகில்-முலை. ஏ-அம்பு. மலங்கும்-கலங்கும். உழை-மான். பொலம்-பொன்.]

46. காதொடு கடைபொருங் கயற்கண் மங்கைதன்
பாதமுங் கரங்களு மனைய பல்லவத்
தாதொடுங் குழையொடு மடுத்த தண்பனிச்
சீதநுண் டுளிமல ரமளி சேர்த்தினார்.

காதுஉடன் கயல்போன்ற கண்ணின் கடை பொரும் மங்கைதன் பாதமும் கரங்களும் அனைய பல்லவத்தாலும் தாதுஓடும் குழையொடும் அடுத்த தண்பனியின் சீதநுண் துளிபொருந்திய மலராலும் அமைந்த அமளியில் (அவளை) சேர்த்தினார். [பல்லவம், குழை-தளிர்.]

47. நாளறு நறுமல ரமளி நண்ணினாள்
பூளைவீ புரைபனிப் புயற்குத் தேம்பிய
தாளதா மரைமலர் ததைந்த பொய்கையும்
வாளரா நுங்கிய மதியும் போன்றனள்.

நாள் அறுத நறுமலர் அமளி நண்ணினாள் (ஆகிய சீதை) பூளை

வீயை புரை பனியான புயலுக்கு தேம்பிய தாள்களையுடைய தாமரை மலர் ததைந்த பொய்கையும் வாள் (போன்ற பற்களை உடைய) (இராகுவென்னும்) அனரா நுங்கியமதியும் போன்றனள். [நாள்அறு) புதுமை நீங்காத. பூளை வீ-பூளைச்செடியின் மலர். தேம்பிய-வாடிய. நுங்கிய-விழுங்கிய.]

48. மலைமிசைத் தடத்துகு மழைக்க ணாலிபோல்
முலைமுகட் டுதிர்ந்தன நெடுங்கண் முத்தினம்
சிலைநுதற் கடையுறை செறிந்த வேர்வுதன்
உலைமுகப் புகைநிக ருயிர்ப்பின் மாய்ந்ததே.

மலைமிசை தடத்தில் உகும் மழைக்கண் உண்டாகின்ற ஆலிபோல் (சீதாபிராட்டியின்) முலைமுகட்டில் (அளது) நெடும் கண்ணின்று வரும் முத்தினம் (போன்ற விழிநீர்) உதிர்ந்தன. (அவளது) சிலை போன்ற நுதலின் கடையில் உறைந்து செறிந்த வேர்வு, தனது கொல்லன் உலை முகத்தில் எழுகின்ற புகையை நிகர்க்கும் (வெப்பம் பொருந்திய) உயிர்ப்பினால் (வறண்டு) மாய்ந்தது. [ஆலி-துளி. நுதல்-புருவம். வேர்வு-வியர்வை. உயிர்ப்பு-சுவாசம்.]

49. கம்பமில் கொடுமனக் கான வேடன்கை
அம்பொடு சோர்வதோர் மயிலு மன்னவள்
வெம்புறு மனத்தனல் வெதுப்ப மென்மலர்க்
கொம்பென வமளியிற் குழைந்து சாய்ந்தனள்.

கம்பம் இல்லாத கொடும்மன கானவேடன் கைஅம்பினால் சோர்வதான ஓர் மயிலும் அன்னவள், வெப்பு உற்ற மனத்தின் அனல் வெதுப்ப மெல் மலர்கொம்பு என அமளியில் குழைந்து சாய்ந்தனள். [கம்பம்-சலநம், இரக்கம். வெப்பு-வெப்பம். வெதுப்ப-சுட.]

50. சொரிந்தன நறுமலர் சுறுக்கொண் டேறின
பொரிந்தன கலவைகள் பொறியிற் சிந்தின
எரிந்தவெங் கனல்சுட விழையிற் கோத்தநூல்
பரிந்தன கரிந்தன பல்ல வங்களே.

(அமளியில்) சொரிந்தன வாகிய நறுமலர் சுறுக்கொண்டு ஏறின, பொரிந்தனவான கலவைச்சாந்துகள் பொறிபோல் சிந்தின. எரிந்த வெம் கனல்சுட இழையில் கோத்த நூல் பரிந்தன. பல்லவங்கள் கரிந்தன. [ஏறின-தைத்தன. இழையில் கோத்த நூல் பரிந்தன—ஆபரணங்களில் கோத்த நூல், இழைக்கப்பட்ட வஸ்திரநூல் இரண்டும் அறுந்தன. பல்லவம்-தளிர்.]

51. தாதியர் செவிலியர் தாயர் தவ்வையர்
மாதுய ருழந்தனர் விழுந்து மாழ்கினர்
யாதுகொ லிதுவென வெண்ண றேற்றலர்
போதுட னயினிநீர் சுழற்றிப் போக்கினர்.

(சீதாபிராட்டியின் நிலையைக்கண்ட) தாதியர் செவிலியர் தாயர் தவ்வையர் (முதலானோர்) மா துயர் உழந்தனர், விழுந்து மாழ்கினர். இதுயாது கொல் என, (சீதையின்) எண்ணல் தேற்றலர். (பலநிற) போதும் அயினியும் நீரும் (திருஷ்டிப்பரிகாரமாக) சுற்றி போக்கினர். [தவ்வை-தமக்கை. போது-மலர். அயினி-சோறு.]

52. அருகினின் றசைக்கின்ற வால வட்டக்கால்
எரியினை மிகுத்திட விழையு மாலையும்
கரிகுவ தீகுவ கனல்வ காட்டலால்
உருகுபொற் பாவையு மொத்துத் தோன்றினாள்.

(தாதியர்) அருகில் நின்று அசைக்கின்ற ஆலவட்டத்தின் கால், ஆனது, (விரஹ) எரியினை மிகுத்திட, (அதனால்) இழையும் மாலையும் கரிகுவவாயும் தீகுவவாயும் கனல்வனவாயும் காட்டலால் (பிராட்டி) உருகும் பொன்பாவையும் ஒத்து தோன்றினாள். [ஆலவட்டம்-விசிறி. கால்-காற்று.]

53. அல்லினை வகுத்ததோ ரலங்கற் காடெனும்
வல்லெழு வல்லவோர் மரக தப்பெருங்
கல்லெனு மிருபுயங் கமலங் கண்ணெனும்
வில்லொடு மிழிந்ததோர் மேக மென்னும்.

(இவ்வாறு விரகதாபத்தால் வருந்திய சீதாபிராட்டி ஸ்ரீராமபிரானது திரு உருவத்தை மனதிற் கொண்டவளாய்), (அவனணிந்திருந்த) 'ஓர் அலங்கல் காடு அல்லினை (இருகூறாய்) வகுத்தது' என்னும். 'இருபுயங்கள் வல் எழு அல்ல ஓர் மரகதபெரும் கல்' என்னும். 'கண் கமலம்' என்னும். வில் உடன் (இப்பூமியில்) இழிந்தது ஆன ஓர் மேகம்' என்னும். [அல்-இருள், இங்கு குஞ்சி அல்லது மார்பு. எழு-தூண்.]

54. நெருக்கியுட் புகுந்தரு நிறையும் பெண்மையும்
உருக்கியென் னுயிரொடு முண்டு போனவன்
பொருப்புறழ் தோள்புணர் புண்ணியத்தது
கருப்புவில் லன்றவன் காம னல்லனே.

'(என் மனத்தின்) உள்நெருக்கி புகுந்து (என்) அரும் நிறையையும் பெண்மையையும் உருக்கி, (அவற்றை) என் உயிரொடும் உண்டு போனவனது பொருப்பை உறழ் தோளுடன் புணரும் புண்ணியத்தது கரும்புவில் அன்று, (ஆகையால் அவன்) காமன் அல்லன்.' [பொருப்பு-மலை. உறழ்-ஒத்த.]

55. பெண்வழி நலனொடும் பிறந்த நாணொடும்
எண்வழி யுணர்வுநா னெங்குங் காண்கிலன்
மண்வழி நடந்தடி வருந்தப் போனவன்
கண்வழி நுழையுமோர் கள்வ னேகொலாம்.

'பெண்வழியான நலனொடும் (என்னுடன்) பிறந்த நாண் ஓடும் எண்ணத்தின் வழியதான உணர்வும் (என்னைதேடியும்) நான் (என்னிடத்தில்) எங்கும் காண்கிலன். அடிகள் வருந்த மண்வழியாக நடந்து போனவன், (ஆகையால்) கண்வழி (அவைகளை அபகரிக்க) நுழையும் ஓர் கள்வனே கொல்?''

56. இந்திர நில மொத் திருண்ட குஞ்சியும்
சந்திர வதனமுந் தாழ்ந்த கைகளும்
சுந்தர மணிவரைத் தோளு மேயல
முந்தியென் னுயிரையம் முறுவ லுண்டதே.

[குஞ்சி-தலைமயிர். மணிவரை-நீலமலை. அல-அல்லாமலும். அமுறுவல். எதிர் நோக்கிச் செய்த அந்தப் புன்னகை.]

57. படர்ந்தொளி பரந்துயிர் பருகு மாகமுந்
தடந்தரு தாமரைத் தாளு மேயல
கடந்தரு மதங்கலுழ் களிநல் யானைபோல்
நடந்தது கிடந்ததென் னுள்ள நண்ணியே.

''படர்ந்து ஒளிபரந்து (என்) உயிரை பருகும் (அவரது) ஆகமும் தடம் தரும் தாமரைபோன்ற தாள்களுமே அல்லாது, கடம் தரும் மதமானது கலுழும் களிப்புடைய நல்யானைபோல் அவர் நடந்தது என்உள்ளத்தில் நண்ணி கிடந்தது.'' [ஆகம்-மார்பு. தடம் தரும்-பெருமைகொண்ட. கடம்-மதநீர் வரும்துளை. கலுழும்-ஒழுகுகின்ற. நடந்தது-நடை. நண்ணி-பொருந்தி.]

58. உரைசெயிற் றேவர்தம் முலகு ளானலன்
விரைசெறி தாமரை யிமைக்கு மெய்ம்மையால்
வரிசிலைத் தடக்கையன் மார்பி னூலினன்
அரசிளங் குமரனே யாகல் வேண்டும்.

''உரை செய்யில் விரை செறிந்த தாமரை (போன்ற அவன் கண்கள்) இமைக்கும் மெய்ம்மையால் (அவன்) தேவர்தம் உலகில் உளான் அல்லன், (மற்று) வரிசிலை (தாங்கிய) தடம்கையன், மார்பில் பூணூலினன், (ஆகையால்) (அவன்) அரசிளம் குமரனே ஆகல் வேண்டும் [விரைசெறி-வாசனை மிகுந்த.]

59. பிறந்துடை நலனிறை பிணித்த வெந்திரம்
கறங்குபு திரியுமென் கன்னி மாமதில்
எறிந்தவக் குமரனை யின்னுங் கண்ணிற்கண்
டறிந்துயி ரிழக்கவு மாகு மேகொலாம்.

''(என்னுடன்) பிறந்து (எனக்கு) உடைமையாயுள்ள நலனும் நிறையும் (ஆகிய இவற்றால்) பிணித்த எந்திரங்கள் (எப்பொழுதும்

காவலாய்) கறங்குபு திரியும் என் கன்னி (பருவத்தைக்காக்கும்) மா மதிலை எறிந்த அ குமரனை இன்னும் (ஒருதரம்) கண்ணினால் கண்டு (அவன் குணாதிசயங்களை) அறிந்து (பின் என்) உயிரை இழக்கவும் ஆகுமோ !'' [கறங்குபு-சுழன்று. எறிந்த-தகர்த்த.]

60. என்றிவை யினையன வெண்ணு மென்வயின்
நின்றன னிவனெனு நீங்கி னானெனும்
கன்றிய மனத்துறு காம வேட்கையால்
ஒன்றல பலநினைந் துணங்குங் காலையே.

என்று, இவை இனையன (சீதை) எண்ணும். 'என்வயின் இவண் நின்றனன்' என்னும். 'நீங்கினான்' என்னும். கன்றிய மனத்தில் உற்ற காமவேட்கையால், ஒன்று அல்ல, பலநினைந்து (அவள்) உணங்கும் காலை, [உணங்கும்-வருந்தும்.]

சூரியன் அஸ்தமித்தான்.

61. அன்னமென் னடையவட் கமைந்த காமத்தீ
தன்னையுஞ் சுடவது தரிக்கி லானென
நன்னெடுங் கரங்களை நடுக்கி யோடிப்போய்
முன்னைவெங் கதிரவன் கடலின் மூழ்கினான்.

அன்னம்போன்ற மெல்நடையவளாகிய சீதைக்கு அமைந்த காமத் தீயானது தன்னையும் சுட அது தரிக்கிலான் என, முன்னையே வெம் கதிரவன், நல்நெடும் (கிரணங்களாகிய) கரங்களை நடுக்கி ஓடிப் போய்க்கடலில் மூழ்கினான். [முன்னையே-ஏற்கனவே. தரிக்கி லான்-சகிக்காதவன்.]

அஸ்தமிக்கச் சீதைக்கு நமன் போல் அந்திமாலை வந்தது.

62. விரிமலர்த் தென்றலாம் வீசு பாசமும்
எரிநிறச் செக்கரு மிருளுங் காட்டலால்
அரியவட் கனறரு மந்தி மாலையாம்
கருநிறச் செம்மயிர்க் காலன் றோன்றினான்.

விரிந்த மலர் (மணம் கொண்டுவரும்) தென்றல் ஆகிய வீசுகின்ற பாசக்கயிறும், எரியின் நிறம்பொருந்திய செக்கரும், இருளும் காட்ட லால், (சீதையாகிய) அரியவளுக்கு (காய) அனலை (அதிகமாய்) தரும் அந்திமாலையாகிய கருநிறத்தையும் செவந்த மயிரையும் கொண்ட காலன் தோன்றினான். [செக்கர்-செவ்வானம்.]

63. மீதறை பறவையாம் பறையுங் கீழ்விளி
ஓதமென் சிலம்பொடு முதிரச் செக்கரும்
பாதக விருள்செய்கஞ் சுகமும் பற்றலால்
சாதக மென்னவுந் தகைத்தம் மாலையே.

அந்த மாலைப்பொழுது, மீது அறைகின்ற பறவையாகிய பறையும், கீழே விளிகின்ற ஓதம் என்கிற சிலம்பும், செக்கராகிய உதிரத்தையும், பாதக (ரூபமான) இருளால் செய்த கஞ்சுகமும் பற்றலால், சாதகம் என்னவும் தகைத்து. [அறை, விளி-ஒலிக்கின்ற. ஓதம்-கடல். கஞ்சுகம்-சட்டை. சாதகம்-பூதம்]. மாலைக்காலமானது, கடலாகிய சிலம்பைக் காலில் அணிந்து, இருளாகிய கருஞ்சட்டை தரித்து, செக்கராகிய உதிரம்படிந்து, பறவையொலியாகிய பறை கொட்டி ஆடும் ஒரு பூதம் போல் இருந்தது; என்பது, இச்செய்யுளின் கருத்து. கடலும் பறவைகளும் அந்தியில் மிகுதியாய் ஒலிக்கின்றவை.

64. கயங்க ளென்னுங் கனற்றோய்ந்து கடிநாண் மலரின் விடம்பூசி
இயங்கு தென்றன் மன்மதவே ளெய்த புண்ணி னிடைநுழைய
உயங்கு முணர்வு நன்னலமு முருகிச் சோர்வா ளுயிருண்ண
வயங்கு மாலை வானோக்கி யிதுவோ கூற்றின் வடிவென்றாள்.

கயம்கள் என்னும் கனலில் தோய்ந்து கடிநாள் மலரின் விடம் பூசி இயங்கும் தென்றலானது (தன்மேல்) மன்மதவேள் (பாணம்) எய்த புண்ணின் இடை நுழைய, உயங்கும் உணர்வும் நல்நலமும் உருகி சோர்வாள் (ஆகிய சீதை) உயிரை உண்ண வயங்கும் மாலை வானை நோக்கி 'இதுவோ கூற்றின் வடிவம்' என்றாள். [கயம்-குளம். நாள்-புதிய. இயங்கும்-உலாவுகின்ற. வயங்கும்-விளங்கும்]

65. கடலோ மழையோ முழுநீலக் கல்லோ காயா நறும்போதோ
படர்பூங் குவளை நாண்மலரோ நீலோற் பலமோ பானலோ
இடர்சேர் மடவா ருயிருண்ப தியாதோ வென்று தளர்வாண்
மடல்சேர் தாரா னிறம்போலு மந்தி மாலை வந்ததுவே. [முன்

இடர்சேர்ந்த மடவாரது உயிரை உண்பது யாதோ—'கடலோ, மழையோ..............பானலோ' என்று (எண்ணி) தளர்வாள் (ஆகிய சீதையின்) முன், பூமடல்கள் சேர்ந்த தாரான் (ஆகிய இராமனது) நிறம்போலும் அந்திமாலை வந்தது. [மழை-மேகம். பானல்-கருநெய்தல். இடர்சேர்-துன்பமடைந்த]

சீதை அந்திக்கு ஆற்றாது இரங்குகின்றாள்.

66. மைவானிறத்துமீனெயிற்றுவாடையுயிர்ப்பின்வளர்செக்கர்ப்
பைவா யந்திப் படவரவே யின்று விளைத்துப் பகைத்தியால்
எய்வா னொருவன் கையோயா னுயிரு மொன்றே யினியில்லை
உய்வானுறவிப்பழிபூணவுன்னேடெனக்குப்பகையுண்டோ.

"வானின் மைநிறத்தையும், மீனை எயிறாகவும், வாடைக்காற்றை உயிர்ப்பாகவும், வளர்கின்ற செக்கரை பை போன்ற வாயாகவும், அந்திப்பொழுதை படமாகவும் உடைய, அரவே--(என்மேல் பாணங்களை) எய்வான் ஆன (மன்மதன்) ஒருவன் கை ஓயான், (எனக்கோ இருப்பது) உயிரும் ஒன்றே—இனி இல்லை—(அவனுக்குத்தப்பி)

உய்ய (நான்முயர்சி) உற, (இந்தச் சமையத்தில், நீயும் எனக்கு) இன்னுதன இழைத்து பகைத்தி—(ஏன்?) இ (பெண்) பழியை (நீ) பூண உன்னேடு எனக்கு பகையுண்டோ!" [மீன்-நட்சத்திரம்.]

அந்திப்பொழுது கழிய இருளிற்கு ஆற்றுது சீதை இரங்குகின்ருள்.

67. ஆல முலகிற் பரந்ததுவோ வாழி கிளர்ந்த தோவவர்தந்
நீல நிறத்தை யெல்லாரு நினைக்க வதுவாய் நிரம்பியதோ
கால னிறத்தை யஞ்சனத்திற் கலந்து குழைத்துக் காயத்தின்
மேலுநிலத்துமெழூகியதோவிளைக்குமிருளாய்விளைந்ததுவே.

"(தலைவனைச் சேராதமகளிர்) இளைக்கும் இருளாய் விளைந்தது— ஆலம் உலகில் பரந்ததோ,! ஆழி (பொங்கி) கிளர்ந்ததோ! (நான் கண்ட) அவரது நீல நிரத்தை (உலகுள்ளோர்) எல்லாரும் நினைக்க அதுவேயாய் (எங்கும் வியாபித்து) நிரம்பியதோ! காலனுடைய நிறத்தை அஞ்சனத்தில் கலந்து குழைத்து காயத்தின் மேலும் நிலத்தும் மெழூகியதோ!(என்னென் றுகொள்வது)." [ஆலம்-விஷம். ஆழி-கடல். காலன்-எமன். அஞ்சனம்-மை. காயம்-ஆகாயம்].

சீதை அன்றில் பறவைக்கு ஆற்ருது இரங்குகின்ருள்.

68. வெளிநின் றவரோ போய்மறைந்தார் விலக்க வொருவர்தமை
[க்காணேன்
எளியள் பெண்ணென் றிரங்காதே யெல்லி யாமத்திருளூடே
ஒளியம் பெய்யு மன்மதனு ருனக்கிம் மாய முரைத்தாரோ
அளியென் செய்த தீவினையே யன்றி லாகி வந்தாயோ.

வெளியில் நின்றவரோ போய் மறைந்தார். (அவ்வாறு போகாமல்) விலக்க ஒருவர்தமை காணேன். எல்லியின் யாமத்து இருள் ஊடு, (நான்) எளியள் பெண் என்று இரங்காது, ஒளிந்து அம்பு எய்யும் மன்மதனுர் உனக்கும் (என்னைவருத்தும்) இ மாயம் உரைத்தாரோ! (அல்லது) அளியேன் செய்த தீவினையே அன்றில் (பறவை) ஆகி (நீ) வந்தாயோ!" [எல்லி-இரவு]

ஆண்டங் கனையா ளினையநினைந் தழுங்கும் வேலை யகல்வானந்
தீண்ட நிமிர்ந்த பெருங்கோயிற் சீத மணியின் வேதிகைவாய்
நீண்ட சோதி நெய்விளக்கம் வெய்ய வென்றங் கவைநீக்கித்
தூண்டல்செய்யாமணிவிளக்கின்சுடராலிரவைப்பகல்செய்தார் 69.

ஆண்டு, அங்கனையாள் (ஆன சீதாபிராட்டி) இனையன நினைந்து அழுங்கும் வேலையில்—அகன்றவானத்தை தீண்ட நிமிர்ந்த பெரும் கோயிலில் சீதமணியினுல் செய்த வேதிகைவாய் (ஏற்றப்பட்டிருக் கிற) நீண்ட சோதிபொருந்திய நெய்விளக்கம்கள் வெய்யன என்று அங்கு அவைகளை நீக்கி, தூண்டல் செய்யாத மணிவிளக்கின் சுட ரால் (மாளிகைகளில் உள்ளோர்)இரவை பகல் செய்தார். [அங்கனை- பெண். அழுங்கும் வேலை-வருந்தும் சமயம். கோயில்-அரண்மனை.

சீதமணி-சந்திரகாந்தக்கல். வேதிகை-திண்ணை. வெய்ய-வெப்பமானவை. மணிவிளக்கு-மாணிக்கதீபம்.]

அமிர்த கலசம்போல் சந்திரனும் இருளை அகற்றி உதயம் ஆயிற்று.

70. பெருந்திண்ணெடுமால்வரைநிறுவிப்பிணித்தபாம்பின்மணித் [தாம்பின்
விரிந்த திவலை யுதிர்ந்தமணி விசும்பின் மீனின் மேல்விளங்க
அருந்த வமரர் கலக்கியநா ளமுது நிறைந்த பொற்கலசம்
இருந்ததிடைவந்தெழுந்ததெனவெழுந்ததாழிவெண்டிங்கள்.

பெரும் திண் நெடுமால் (மந்தர) வரையை நிறவி (அதில்) பிணித்த (வாசுகி என்னும்) பாம்பாகிய மணிதாம்பிலிருந்து, விரிந்த திவலையும், உதிர்ந்த மணிகளும், விசும்பின்மேல் மீன்போல் விளங்க, அமரர் (அமிர்தம்) அருந்த (பால்கடலை) கலக்கிய நாளில், (அதில்) இருந்தது ஆன அமுது நிறைந்த பொன் கலசம் இடைவந்து எழுந்ததுஎன, ஆழியினின்று வெண்திங்கள் எழுந்தது. [ஆழி-கடல்.]

71. வண்டா யயனுன் மறைபாட மலர்ந்த தொருதா மரைப்போது
பண்டா லிலையின் மிசைக்கிடந்து பாரு நீரும் பசித்தான்போல்
உண்டா னுந்திக் கடல்பூத்த தோதக் கடலுந் தான்வேறோர்
வெண்டா மரையின் மலர்பூத்த தொத்த தாழி வெண்டிங்கள்.

அயன் வண்டு ஆய் நான்கு மறைகளை பாட மலர்ந்ததான ஒரு தாமரைப் போதை பண்டு ஆல் இலையின் மிசை கிடந்து பாரையும் நீரையும் பசித்தான்போல் உண்டான் (ஆகிய திருமாலின்) உந்தியாகிய கடல் பூத்தது. (அதைக்கண்டு) ஓதம் உடைய கடலும் தான் வேறு ஓர் வெண்தாமரையின் மலர் பூத்ததை, ஆழியிலிருந்து எழும் வெண்திங்கள் ஒத்தது. [பார்-பூமி. அயன்-பிரமன். உந்தி-நாபி.]

குறிப்பு:—அந்தி கழிய இருள் மூண்டு யாமமாகி அன்றிலும் கத்தியதாக முன்னும் பின்னும் பாசுரங்களில் வருகின்றமையால், நள்ளிரவில் பூர்ணசந்திரன் உதயமாவது இயலாது பற்றி இங்செய்யுளிலும், இதன்முன் செய்யுளிலும் 'ஆழி' என்பதை 'வட்டமான' எனப்பொருள் படுத்தல் பொருந்தாது.

புள்ளிக் குறியிட் டெனப்பன்மீன் பூத்த வானம் பொலிகங்குல்
நள்ளிற் செறிந்த விருட்பிழம்பை நக்கி நிமிர்ந்த நிலாக்கற்றை
கிள்ளைக் கிளவிக் கென்னுங் கொல் கீழ்பாற் றிசையின் மிசைவைத்த
வெள்ளிக்கும்பத்திளங்கமுகின்பாளைபோன்றுவிரிந்துளதால். 72.

(கோலமிடுவதற்கு) புள்ளிகுறி இட்டதென பல மீன்கள் பூத்த வானத்தில் பொலிகின்ற கங்குல்நள்ளில் செறிந்த இருள்பிழம்பை நக்கி நிமிர்ந்த நிலவின் கற்றையானது—கீழ்பால் திசையின் வெள்ளி கும்பத்தின் மிசை வைத்த இளம் கமுகின் பாளைபோன்று விரிந்து

உளது. (பார்ப்பதற்கு அவ்வாறு இருந்தாலும்) கிள்ளை போன்ற கிளவி உடையாளாகிய சீதைக்கு (அது) என்ன ஆகும் கொல்!" [கங்குல் நள்ளில்-நடு இரவில். பிழம்பு-குழம்பு. நிலாக்கற்றை-சந்திரகிரணங்கள். கமுகு-பாக்குமரம். கிள்ளை-கிளி.]

சந்திரன் உதயமானதும் தாமரைகுவிய அல்லி மலர்ந்தது.

73. விரைசெய்கமலப்பெரும்போதுவிரும்பிப்புகுந்ததிருவினொடும்
குரைசெய்வண்டின்குழாமிரியக்கூம்பிச்சாம்பிக்குவிந்துளதால்
உரைசெய்திகிரிதனையுருட்டியொருகோலோச்சியுலகாண்ட
அரைசனொதுங்கத்தலையெடுத்தகுறும்பர்போன்றதரக்காம்பல்

விரைசெய்கின்ற கமலம் (ஆகிய) பெரும்போது (தன்னுள்) விரும்பி புகுந்த திருவினொடும், குரைசெய்கின்ற வண்டின் குழாம் இரிய, கூம்பி சாம்பி குவிந்து உளது. (பூசக்ரவர்த்தியாகிய தாமரை ஒடுங்க, மலர்ந்த) அரக்கு ஆம்பலானது, உரைசெய்யும் (ஆஜ்ஞா) திகிரிதனை உருட்டி ஒரு (செங்)கோல் ஒச்சி உலகை ஆண்ட (பூசக்கரவர்த்தியான) அரசன் ஒதுங்க (அப்பொழுது) தலை எடுத்த குறும்பர் போன்றது. [குரை-சப்தம். இரிய-ஓட. கூம்பிச்சாம்பி-குவிந்து வாடி. திகிரி-சக்கரம். குறும்பர்-குறுநிலச் சிற்றரசர்.]

சடையப்ப வள்ளல் புகழ் எங்கும் பரந்ததுபோல் சந்திரிகை எங்கும் பரந்தது.

74. வண்ணமாலைக்கைபரப்பியுலகைவளைந்தவிருளெல்லாம்
உண்ணவெண்ணித்தண்மதியத்துதயத்தெழுந்தநிலாக்கற்றை
விண்ணு மண்ணுந் திசையனைத்தும் விழுங்கிக் கொண்ட [விரிநன்னீர்ப்
பண்ணை வெண்ணெய்ச் சடையன்தன் புகழ்போ லெங்கும் [பரந்துளதால்.

வண்ணமான மாலை (பொழுதென்னும்) கைகளை பரப்பி உலகை வளைந்த இருளை எல்லாம் (நக்கி) உண்ண எண்ணி தண்மையான மதியின் உதயத்தில் எழுந்த நிலா கற்றை—விரிந்த நல் நீர்வளம் பொருந்திய பண்ணைகள் சூழ்ந்த திருவெண்ணெய் நல்லூர் (வாழும்) சடையன் தன், விண்ணும் மண்ணும் திசைகள் அனைத்தையும் விழுங்கிகொண்ட, புகழைப்போல் எங்கும் பரந்துளது. [வண்ணம்-அழகு தண்மை-குளிர்ச்சி. பண்ணை-வயல்.]

75. நீத்தமதனின்முளைத்தெழுந்தநெடுவெண்டிங்களெனுந்தச்சன்
மீத்தன்கரங்களவைபரப்பிமிகுவெண்ணிலவாம்வெண்சுதையா
காத்த கண்ணன் மணியுந்திக் கமல நாளத் திடைப்பண்டு [ல்
பூத்தவண்டம்பழையதென்றுபுதுக்குவானும்போன்றுளதால்

– (இவ்வாறு எங்கும் பரந்தசந்திரிகை), (சமுத்திரத்தின்) நீத்தமதனில் முளைத்து எழுந்த நெடும் வெண் திங்கள் எனும் தச்சன்,—

(உலகங்களை) காத்த கண்ணனது மணி உந்திகமலநாளத்தினது இடை பண்டு பூத்த அண்டம் பழையது என்று, மீ தன் கரங்களவைபரப்பி மிகுவெண் நிலவாம் வெண் சுதையால் (அவ்வண்டத்தை) புதுக்கு வான் போன்று உளது. [நீத்தம்-வெள்ளம். மீ-மேல். சுதை-சுண் ணச்சாந்து. புதுக்குவான்-புதுப்பிப்பான்.]

சந்திரிகைக்கு ஆற்ருது சீதை அதைப் பழிக்கின்ருள்.

நீங்கா மாயை யவர்தமக்கு நிறமே தோற்றுப் புறமேபோய்
எங்காக் கிடக்கு மெறிகடற்கு மெனக்குங் கொடியை யானுயே
ஓங்கா நின்ற விருளாய்வந் துலகை விழுங்கி மேன்மேலும்
வீங்காநின்றகருநெருப்பினிடையேயெழுந்தவெண்ணெருப்பே. 76.

"ஓங்கிநின்ற இருளாய் வந்து உலகை விழுங்கி மேல்மேலும் வீங்கிநின்ற கருநெருப்பின் இடையே எழுந்த வெண்நெருப்பே,— நீங்காத மாயையுடைய அவர்தமக்கு நிறத்தில் தோற்று (உலகிற்கு) புறமாய் போய் ஏங்கி கிடக்கும் (அலைகளை) எறிகின்ற கடலுக்கும் எனக்கும் கொடியை யானுயே"

77. கொடியை யல்லைநீ யாரையுங் கொல்கிலாய்
மடிவி லின்னமு தத்தொடும் வந்தனை
பிடியின் மென்னடைப் பெண்ணொடென் ருலெனைச்
சுடுதி யோகடற் ரேன்றிய திங்களே.

(குளிர்ச்சியான) கடலில் தோன்றிய திங்களே, (எவ்வளவுதான் வருத்தினுலும்) நீ யாரையும் கொல்கிலாய், (ஆகையால்) கொடியை அல்லை. (கொல்லாததற்குக் காரணம்), (உண்டவர்க்கு) மடிவு இல் லாத இனிய அமுதத்தொடும் (திருப்பால் கடலைக் கடைந்த காலத் தில்) வந்தனை, (அதனுல்தானே?). (அன்றியும்) பிடியினது மெல் நடை (போன்ற நடையையுடைய ஒரு) பெண்ணொடும் (வந்தாய்) என்ருல் (பின்னும்) என்னை சுடுதியோ!" [பிடி-பெண்யானை]

குறிப்பு:—"உனக்கு உடன் பிறந்தாள் ஒருத்தி உண் டாததால் பெண்கஷ்டம் அறிந்த நீ என்னைச் சுடலாமோ, மேலும் அப்பெண்தான் நான் என்பதையும் சொல்லிவிட் டால் பிறகு நீ என்னை வருத்துதல் தர்மமாகுமா?" என்பது பின் இரண்டடிகளின் கருத்தாகும்.

78. மீது மொய்த்தெழு வெண்ணில வின்கதிர்
மோது மத்திகை மென்முலை மேற்பட
ஓதி மப்பெடை வெங்கன லுற்றெனப்
போது மொய்த்தம ளிப்புரண் டாளரோ.

மீது மொய்த்து எழும் வெண் நிலவின் கதிர்களாகிய மோதும் மத்திகை மெல் முலைமேல் பட, (சகிக்காதவளாய்) பெடை ஓதிமம்

வெம்கனல் உற்றது என (சீதை) போதுகள் மொய்த்த அமளியில் புரண்டாள். [மொய்த்த-நெருங்கிய. மத்திகை-குதிரைச் சவுக்கு. பெடைஓதிமம்-பெண் அன்னம். போது-மலர்] சீதை அன்னத்திற்கும் மலர்கள் கனலிற்கும் உவமை.

79. நீக்க மின்றி நிமிர்ந்த நிலாக்கதிர்
தாக்க வெந்து தளர்ந்து சரிந்தனள்
சேக்கை யாகி மலர்ந்தசெந் தாமரைப்
பூக்கள் பட்டதப் பூவையும் பட்டனள்.

நீக்கம் இன்றி நிமிர்ந்த நிலாகதிர்கள் தாக்க (பொறுமல்) வெந்து தளர்ந்து சரிந்தனள். (அவளுக்கு) சேக்கை ஆகி மலர்ந்த செம் தாமரை பூக்கள் (கூம்பிச்சாம்பிக்குவிந்து) பட்டதை அ பூவையும் பட்டனள். [சேக்கை-இருப்பிடம், படுக்கை. பூவை-பெண்.]

80. வாச மென்கல வைக்களி வாரிமேற்
பூசப் பூசப் புலர்ந்து புழுங்கினள்
வீச வீச வெதும்பினண் மென்முலை
ஆசை நோய்க்கு மருந்துமுண் டாங்கொலோ.

வாசம் பொருந்திய மெல் கலவை களியை வாரி (தோழிகள் சைத்யோபசாரமாய் அவள்) மேல் பூசபூச (சீதை) புலர்ந்து புழுங்கினள். (கவரியால்) வீச வீச (அவள்) மெல் முலை வெதும்பினள். ஆசை நோய்க்கு மருந்தும் உண்டாம் கொல்! [புலர்ந்து-வாடி.]

81. தாய ரிற்பரி சேடியர் தாதுகு
வீய ரித்தளிர் மெல்லணை மேனியில்
காயெ ரிக்கரி யக்கரி யக்கொணர்ந்
தாயி ரத்தி னிரட்டி யடுக்கினர்.

தாயரிலும் பரிகின்ற சேடியர் தாது உகும் வீக்களும் அரிதளிர்களும் (ஆகிய) மெல் அணை—(சீதையின்) மேனியில் காயும் எரியினால் கரிய கரிய கொணர்ந்து ஆயிரத்தின் இரட்டி அடுக்கினர். [பரிகின்ற-அன்பு பாராட்டுகின்ற. வீ-மலர். அரி-மெல்லிய.]

சீதை இவ்வாறாக, இனி இராமனுக்கு உற்றதைச் சொல்லுவாம்.

82. கன்னி நன்னக ரிற்கமழ் சேக்கையுள்
அன்ன மின்னன மாயின ளாயவள்
மின்னின் மின்னிய மேனிகண் டானெனச்
சொன்ன வண்ணலுக் குற்றது சொல்லுவாம்.

83. ஏகி மன்னனைக் கண்டெதிர் கொண்டவன்
ஓகை யோடு மினிது கொண் டுய்த்திடப்
போக பூமியிற் பொன்னக ரன்னதோர்
மாக மாடத் தனைவரும் வைகினர்.

(கன்னிமாடத்தில் சீதையை நோக்கிப் பின்) ஏகி, (ஜனக) மன்னனை கண்டு, அவன் எதிர்கொண்டு ஓகையோடும் இனிது கொண்டு உய்த்திட, போக பூமியிலிருக்கும் பொன்நகர் அன்னதான ஓர்மாகம் (அளாவிய) மாடத்தில் அனைவரும் வைகினர். [ஓகை-சந்தோஷம். உய்த்திட-சேர்க்க. மாகம்-ஆகாயம்]

84. வைகு மவ்வழி மாதவம்யா வுமோர்
செய்கை கொண்டு நடந்தனத் தீதறு
மொய்கொள் வீரன் முளரியந் தாளினால்
மெய்கொ ணங்கை யருண்முனி மேவினான்.

(அந்தமாடத்தில்அவர்கள்) வைகும் அவ்வழி, மா தவம் யாவும் ஒரு செய்கை கொண்டு நடந்து என, தீது அற்ற மொய் கொண்ட (ரகு) வீரனது முளரி போன்ற அம்தாளினால் (தன்) மெய்யை (மீண்டும்) கொண்ட நங்கை (ஆகிய அகலிகை பெற்ற) அருளிய (சதானந்த) முனி மேவினான். [மொய்-வலிமை. முளரி-தாமரை]

85. வந்தெ திர்ந்த முனிவனை வள்ளலும்
சிந்தை யார வணங்கலுஞ் சென்றெதிர்
அந்த மில்குணத் தானெடி தாசிகள்
தந்து கோசிகன் தன்மருங் கெய்தினான்.

[வள்ளல்-இராமன். நெடிது ஆசிகள்-மிகுந்த ஆசீர்வாதங்கள்.]

86. கோத மன்றரு கோமுனி கோசிக
மாத வன்றனை மாமுக நோக்கியிப்
போது நீயிவண் போதவிப் பூதலம்
ஏது செய்த தவமென் றியம்பினான்.

[கோதமன்தரும்-கௌதமன்பெற்ற. இவண்-இவ்விடம். போத-வர.]

87. பூந்தண் சேக்கைப் புனிதனை யேபொரு
வேய்ந்த கேண்மைச் சதானந்த னென்றெனும்
வாய்ந்த மாதவன் மாமுக நோக்கிநூல்
தோய்ந்த சிந்தைக் கௌசிகன் சொல்லுவான்.

தண்மையான (தாமரை) பூ சேக்கை (உடைய பிரமனாகிய) புனிதனையே பொருவு எய்ந்த கேண்மை உள்ள சதானந்தன் என்று எனும் மா தவம் வாய்ந்தவனது மா முகம் நோக்கி, (வேத) நூல் (பொருள்கள்) தோய்ந்த சிந்தையையுடைய கௌசிகன் (பின்வருமாறு) சொல்லுவான். [பொருவு எய்ந்த-ஒத்த. கேண்மை-கண்ணோட்டம், அன்பு.]

88. வடித்த மாதவ கேட்டியிவ் வள்ளறான்
இடித்த வெங்குரற் றாடகை யாக்கையும்
அடுத்தென் வேள்வியு நின்னன்னை சாபமும்
முடித்தென் னெஞ்சத் திடர்முடித் தானென்றான்.

"வடித்த மாதவனே கேள், (இராமபிரானாகிய) இ வள்ளல்தான், இடிபோன்ற வெம் குரல்உடைய தாடகையின் யாக்கையும், (அவளை) அடுத்த என் வேள்வியும், நின் அன்னையின் சாபமும் முடித்து—என் நெஞ்சத்து இடரையும் முடித்தான்" என்றான்.

89. என்று கோசிகன் கூறிட வீறிலா
வன்ற போதனன் மாதவ நின்னருள்
இன்று தானுள தேலரி தியாதிந்த
வென்றி வீரர்க் கெனவும் விளம்பிமேல்.

என்று கோசிகன் (இராமனைச்சதானந்த முனிவனுக்கு அறிமுகப் படுத்தி) கூறிட, ஈறு இல்லாத வலிய தவத்தை தனமாக உடைய வன் (ஆகிய சதானந்தன்) (கௌசிகனை நோக்கி) "மாதவனே, நின் அருள் இன்றுதான் உளதேல் இந்த வெற்றி வீரர்க்கு அரிதுயாது" எனவும் விளம்பி, மேல்,

சதானந்தர் இராமனுக்குவிச்வாமித்திரனது வரலாற்றைக்கூறுதல்.

90. எள்ளில் பூவையு மிந்திர நீலமும்
அள்ளல் வேலையு மம்புத சாலமும்
விள்ளும் வீயுடைப் பானலும் போன்றமெய்
வள்ள றன்னை மதிமுக நோக்கியே.

[எள்ளில்-பழிப்பில்லாத. பூவை-காயாமலர். அள்ளல்வேலை-சேறுள்ளகடல். அம்புதசாலம்-மேகக்கூட்டம். விள்ளும் வீ உடை பானல்-மலர்கின்ற மலர்கள் உள்ள கருங்குவளை. மெய்வள்ளல்-சரீரம் உடைய இராமன்.]

91. நறு மலர்த்தொடை நாயக நானுனக்
கறிவு றுத்துவன் கேளிவ் வருந்தவன்
இறையெ னப்புவிக் கீறில்பல் லாண்டெலாம்
முறையி னிற்புரந் தேயருண் முற்றினான்.

"நறு மலர்த்தொடை (அணிந்த) நாயகனே, நான் உனக்கு அறிவு உறுத்துவன் கேள், (விச்வாமித்திரனாகிய) இ அரும்தவன் புவிக்கு இறை என ஈறு இல்லாத பல் ஆண்டு எலாம் (மனு) முறை யினில் (அதை) புரந்து அருள் முற்றினான். [இறை-அரசன்]

92. அரைசின் வைகி யறனி னமைந்துழி
விரசு கானிடைச் சென்றனன் வேட்டைமேல்
உரைசெய் மாதவத் தோங்கு வசிட்டனை
பரசு வானவன் பாலணைந் தானரோ.

"(அவ்வாறு) அரசில்வைகி அறனில் அமைந்துழி, வேட்டை மேல் (விருப்புக்கொண்டு) விரசும் கான் இடை சென்றனன். (சென்று) (யாவராலும் புகழ்ந்து) உரைசெய்யப்படுகின்ற மாதவத்தினால் ஓங்கும் வசிட்டனை பரசுவான், அவன் பால் அணைந்தனன். [விரசும்-அடர்ந்த. பரசுவான்-பரசுவதற்கு; துதிக்கும்பொருட்டு.]

93. அருந்ததிகணவன்வேந்தற்கருங்கடன்முறையினாற்றி
இருந்தருடருதியென்னவிருந்துழியினிதுநிற்கு
விருந்தினியமைப்பனென்னாச்சுரபியைவிளித்துநீயே
சுரந்தருளமிர்தமென்னவருண்முறைசுரந்ததன்றே.

அருந்ததிக்கு கணவன் (ஆகிய வசிஷ்டன்) (விச்வாமித்திர) வேந்தற்கு அரிய கடன்களை (தக்க) முறையில் ஆற்றி 'இருந்து அருள் தருதி' என்ன (விச்வாமித்திரன்) இருந்துழி, "நிற்கு விருந்து இனிது இனி, "அமைப்பன்" என்று (வசிஷ்டன்) சுரபியை விளித்து 'நீயே அமிர்தம் சுரந்து அருள்' என்ன, (அதுவும், முனிவன் கட்டளையிட்டு) அருளிய முறைப்படி சுரந்தது. [சுரபி-காம தேநு.]

94. அறுசுவைத் தாய வுண்டி யரசநின் னனிகத் தோடும்
பெறுகெனவளித்துவேந்தோடியாவருந்துய்த்தபின்னர்
நறுமலர்த் தாரும் வாசக் கலவையு நல்க லோடும்
உறுதுயர்தணிந்துமன்னனுய்த்துணர்ந்துரைக்கலுற்றான்.

(சுரக்க, வசிஷ்டன்) 'அரசனே, அறுசுவைத்து ஆகிய உண்டியை நின் அனிகத்தோடும் (உண்ண) பெறுக', என அளித்து, வேந்தனோடு யாவரும் துய்த்தபின், நறுமலர் தாரும் வாசம் கலவையும் நல்கலோடும், (விச்வாமித்திர) மன்னன், (பசியாலும் நடந்த இளைப்பாலும்) உற்றதுயர் தணிந்து, உய்த்து உணர்ந்து (பின் வருமாறு) உரைக்கலுற்றான். [அனிகம்-சேனை. துய்த்தபின்-உண்டபின்.]

95. மாதவவெழுந்திலாய்நீவயப்புடைப்படைகட்கெல்லாம்
கோதறு மமிர்த மிக்கோ வுதவிய கொள்கை தன்னால்
தீதறு குணத்தான் மிக்க செழுமறை தெரிந்த நூலோர்
மேதகு பொருள்கள்யாவும்வேந்தருக்கென்கைதன்னால்

(என்) புடையில் உள்ள வயம் (கொண்ட) படைகளுக்கு எல்லாம் இகோ, கோது அற்ற அமிர்தத்தை உதவிய கொள்கை தன்னால்

மாதவனே, நீயோ எழுந்திலாய். தீது அற்ற குணத்தால் மிக்க செழுமையான மறைதெரிந்த நூலோர் மேதகுபொருள்கள் யாவும் வேந்ருக்கு (உரியவை) என்கை தன்ஞல்—[வயம்-வெற்றி. கோ-பசு. மேதகு-மேன்மையான. என்கை-என்று சொல்லல்.]

96. நிற்கிது தருவ தன்று னீடருஞ் சுரபி தன்னை
எற்கரு ளென்ற லோடு மியம்பலன் யாதும் பின்னர்
வற்கலை யுடையென் யானே வழங்கலெஞ் வருவ தாகில்
கொற்கொள்வே லுழவ நீயே கொண்டகல் கென்று கூற

"(ஆகையால் வசிஷ்டமுனிவனே) நிற்கு இது தருவது அன்று. நீடு அரிய சுரபி தன்னை எற்கு (கொடுத்து) அருள்' என்றலோடும் (வசிஷ்டன்) யாதும் இயம்பலன் பின் '(பகைவர்) கொன் கொள்ளும் வேலால் (பகைவர் படையை) உழுபவனே, வற்கலை உடையென்(ஆகிய) யானே (சுரபியை) வழங்கலென்; (அது) வருவது ஆகில் நீயேகொண்டு அகல்க' என்று கூற. [நீடு அரிய-மிகவும் அருமையான. கொன்-அச்சம். வற்கலை-மரவுரி. வழங்கலென்-கொடுக்கும் ஆற்றல் இல்லேன்.]

97. பணித்ததுபுரிவனென்னுப்பார்த்திபனெழுந்துபொங்கிப்
பிணித்தனன்சுரபிதன்னைப்பெயர்வுழிப்பிணியைவீட்டி
மணித்தடந்தோளினற்குக்கொடுத்தியோமறைகள்யாவும்
கணித்தவெம்பெருமவென்னக்கலைமறைமுனிவன்சொல்வான்

(வசிஷ்டன்) பணித்ததை புரிவன்என்று, (விச்வாமித்திரனுகிய) பார்த்திபன் பொங்கி எழுந்து, சுரபிதன்னை பிணித்து பெயர்வுழி, (அது) பிணியை வீட்டி (வசிஷ்டனைப்பார்த்து) 'மறைகள் யாவும் கணித்த எம்பெருமானே, (இந்த) மணிதடம்தோளினற்கு (என்னை) கொடுத்தியோ' என்ன, கலைகளையும் மறைகளையும் உணர்ந்த முனிவன் சொல்வான். [வீட்டி-அறுத்து. கணித்த-ஆராய்ந்து அறிந்த.]

98. கொடுத்திலன்யானெமற்றிக்குடைகெழுவேந்தன்றானே
பிடித்தகல்வுற்றதென்னப்பெருஞ்சினங்கதுவுநெஞ்சோ
டிடித்தெழுமுரசவேந்தன்சேனையையானேயின்று
முடிக்குவென்காண்டியென்னுமொய்ம்மயிர்சிலிர்த்ததன்றே.

(அதற்கு வசிஷ்டன்) 'யான் (உன்னை) கொடுத்திலன். இ குடை வேந்தன் தானே (உன்னை) பிடித்து அகல்வுற்றது' என்ன, (கேட்டசுரபி) பெரும் சினம் கதுவும் நெஞ்சோடு 'இடித்து எழும் முரசம் உடைய (இந்த) வேந்தனது சேனையை யானே இன்று (கொன்று) முடிக்குவென் காண்தி' என்று (தன்) மொய்த்த மயிரை சிலிர்த்தது.

99. பப்பரர் யவனர் சீன ரவந்திகர் முதல பல்லோர்
கைப்படையதனினேடுங்கபிலைமாட்டுதித்துவேந்தன்
துப்புடைச்சேனையாவுந்துணித்தனர்துணித்தலோடும்
வெப்புடைக்கொடியமன்னன்றனயர்கள்வெகுண்டுமிக்கார்.

(அவ்வாறு காமதேனு மயிர் சிலிர்த்ததும்) பப்பரர் யவனர் சீனர் அவந்திகர் முதலான பல்லோர் (தத்தம்) கைபடை யதனேடும் கபிலைமாட்டு உதித்து (விச்வாமித்திர) வேந்தனது துப்பு உடைய சேனையாவும் துணித்தனர். (அவ்வாறு) துணித்தலோடும் (அந்த) வெப்பு உடைய கொடிய மன்னனது தனயர்கள் வெகுண்டு மிக்கார். [கபிலை-பசு. துப்பு-பலம். வெப்பு-கோபம்.]

100. சுரபியின் வலியி தன்றுற் சுருதிநூ லுணர வல்ல
வரமுனி வஞ்ச மென்று மற்றிவன் சிரத்தை யின்னே
அரிகுதுமென்னப்பொங்கியடர்த்தனரடர்ப்பவன்னுன்
எரியெழ விழித்த லோடு மிறந்தனர் குமர ரெல்லாம்.

இது சுரபியின் வலி அன்று, சுருதிநூல் உணரவல்ல (வசிஷ்டனுகிய) வரம் முனியின் வஞ்சம் என்று (எண்ணி) 'இவன் சிரத்தை இன்னே அரிகுதும்' என்ன பொங்கி (முனிவனை) அடர்த்தனர். அடர்ப்ப அன்னுன் எரிஎழ விழித்தலோடும் (விச்வாமித்திரனது) குமாரர் எல்லாம் இறந்தனர். [வரமுனி-மேன்மை பொருந்திய முனி. இன்னே-இப்பொழுதே.]

101 ஐயிரு பதின்மர் மைந்த ரவிந்தமை யரசன் காணு
நெய்சொரிதழலிற்பொங்கிநெடுங்கொடித்தேர்கடாவிக்
கைதொடர் கணையி னேடுங் கார்முகம் வளைய வாங்கி
எய்தனன்முனியுந்தன்கைத்தண்டினையெதிர்கவென்றுன்.

(இவ்வாறு தன்) ஐ இருபதின்மர் மைந்தர் அவிந்தமை அரசன் கண்டு, நெய்சொரிந்த தழல்போல் பொங்கி, நெடும் கொடிகள் கட்டிய தேரை கடாவி, கையில்தொடர்ந்த கணையினேடும் கார்முகத்தை வளையவாங்கி (பாணங்களை) எய்தனன். (அதற்கு) (வசிஷ்ட) முனியும் தன்கைதண்டை (நோக்கி, நீ இப்பாணங்களை) எதிர் என்றுன். [அவிந்தமை-இறந்ததை. கார்முகம்-வில்.]

102. கடவுளர் படைக ளீருக் கற்றன படைகள் யாவும்
விடவிடமுனிவன்றண்டம்விழுங்கிமேல்விளங்கல்காணு
வடவரை வில்லிதன்னை வணங்கினன் வழுத்த லோடும்
அடலுறுபடையொன்றீயாவன்னவனகன்றுனன்றே.

(விச்வாமித்திரன்) கடவுள் படைகள் ஈருக (தான்) கற்றனவான படைகள்யாவும் விடவிட (அந்த) முனிவனது தண்டம் (அவைகளை) விழுங்கி மேலாக விளங்க கண்டு, (அரசன்) வடவரை வில்லிதன்னை

வணங்கி வழுத்த, அன்னவன் அடல் உற்றபடை ஒன்றை (விச்வா மித்திரனுக்கு) ஈந்து அகன்றான். [கடவுள்படை-தேவாஸ்திரம். வடவரைவில்லி-மேருமலையை வில்லாகக்கொண்டவன், சிவன்.]

103. விட்டனன்படையைவேந்தன்விண்ணுளோருலகையெல்லாம்
சுட்டனனென்னவஞ்சித்துளங்கினர்முனியுந்தோன்றி
கிட்டிய படையை யுண்டு கிளர்ந்தனன் கிளரு மேனி
முட்டவெம்பொறிகள்சிந்திப்பொருபடைமுறணிற்ற

(சிவனிடத்தில் பெற்ற) படையை வேந்தன் விட்டனன். (அப்பொழுது) விண்உள்ளோர் உலகை எல்லாம் (இவன்) சுட்டனன் என்ன அஞ்சி துளங்கினர். (வசிஷ்ட) முனியோ (அதற்கு எதிரில்) தோன்றி கிட்டிய படையை உண்டு கிளர்ந்தனன். கிளரும் (அவன்) மேனியினின்றும் வெம் பொறிகள் (ஒன்றோடொன்று) முட்ட சிந்தி (அந்த) பொரும் படையின் முரண் இற்றது. [துளங்கினர்-நடுங்கினர். கிளர்ந்தனன்-விளங்கினன். முரண்-வலி. இற்ற-அழிந்தது.]

104. கண்டன னரசன் காணக் கலைமறை முனிவர்க் கல்லால்
திண்டிறல் வலியுந் தேசு முளவெனல் சீரி தல்ல
மண்டலமுழுதுங்காக்குமொய்ம்பொருவலியன்றென்று
ஒண்டவம் புரிய வெண்ணி யும்பர்கோன் றிசையை யுற்றான்

அரசன் (சிவ அஸ்திரம் பயனற்றதை) கண்டனன். கண்டு, கலை மறை முனிவர்க்கு அல்லாது திண்ணிய திறல் அமைந்த வலியும் தேசும் உள எனல் சீரிது அல்ல. மண்டலம் முழுதும் காக்கும் (இராஜ பலமாகிய) மொய்ம்பு ஒருவலி அன்று, என்று (தீர்மானித்து) (தபோபலம்பெற) ஒண்மையான தவம்புரிய எண்ணி உம்பர்களுக்கு கோன் (ஆகிய இந்திரனது கிழக்கு) திசையை உற்றான். [திண்மை-திடம். ஒண்மை-ஒழுங்கு. மொய்ம்பு-வலி.]

105. மாண்டமாதவத்தோன்செய்தவலனையேமனத்திலெண்ணிப்
பூண்டமா தவத்த னாகி யரசர்கோன் பொலியு நீர்மை
காண்டலு மமரர்வேந்தன் றுணுக்குறுகருத்தினோடும்
தூண்டினனரம்பைமாருட்டிலோத்தமையெனுஞ்சொன்மானை

மாண்ட மா தவத்தோன் (ஆகிய வசிஷ்டன்) செய்த வலனையே மனத்தில் எண்ணி மாதவம் பூண்டவன் (ஆகி) (விச்வாமித்திரன் ஆகிய) அரசர்கோன் பொலியும் நீர்மையை அமரர்வேந்தன் காண்டலும், துணுக்கு உற்ற கருத்தினோடும், அரம்பைமாருள் திலோத்தமை என்னும் (பலரால் புகழ்ந்து) சொல்லப்படும் மான்போன்ற பெண்ணை, (அவன் தவத்தைக்கலைத்தற்கு) தூண்டினன். [மாண்ட-மாட்சிமையடைந்த. வலன்-வெற்றிச்செய்கை. துணுக்கு-அச்சம்.]

106. அன்னவண் மேனி காணு வனங்கவேள் சரங்கள் பாயத்
தன்னுணர் வழிந்து காதற் சலதியி லழுந்தி வேந்தன்
பன்னரும் பகறீர் வுற்றுப் பரிணதர் தெரிந்த நூலின்
நன்னயமுணர்ந்தோனுகிநஞ்செனக்கனன் றுநக்கான்.

(அவ்வாறு இந்திரனுல் அனுப்பப்பட்ட) அன்னவள் மேனியை கண்டு, அனங்க வேளின் (புஷ்ப) சரங்கள் பாய, (அதனுல்) தன் உணர்வு அழிந்து காதல் சலதியில் அழுந்தி (இருந்த விச்வாமித்திர) வேந்தன், அரிய பல் பகல் தீர்வுற்று, (பின்பு) பரிணதர் தெரிந்த நூல்களின் நல்நயங்களை உணர்ந்தோன் ஆகி, நஞ்சு எனக் கனன்று நக்கான். [சலதி-கடல். பரிணதர்-அறிஞர். நக்கான்-சிரித்தான்.]

107. விண்முழுதாளிசெய்தவினையெனவெகுண்டுநீபோய்
மண்மக ளாதி யென்று மடவர றன்னை யேவிக்
கண்மலர் சிவப்ப வுள்ளங் கறுப்புறக் கடிதி னேகி
எண்மரின் வலிய னுய யமன்றிசை தன்னை யுற்றுன்.

(சிரித்து) விண்முழுதும் ஆள்பவன் (ஆகிய இந்திரன்) செய்த (வஞ்ச) வினை என (உணர்ந்து) வெகுண்டு, "நீ போய் மண்மகள் ஆகுதி" என்று (அந்த) மடவரல்தன்னை (சபித்து) ஏவி, (கோபத்தால்) கண்மலர் சிவப்பவும் உள்ளம் கறுப்பு உறவும் கடிதின் ஏகி, (திக்குப்பாலகர்) எண்மரில் வலியன் ஆகிய யமனது (தெற்கு) திசை தன்னை உற்றுன். [மடவரல்-பெண்.]

108. தென்றிசையதனை நண்ணிச்செய்தவஞ்செய்யுஞ்செவ்வி
வன்றிறலயோத்திவாழுமன்னவன் றிரிசங்கென்பான்
தன்றுணைக்குருவைநண்ணித்தனுவொடுந்துறக்கமெய்த
இன்றெனக்கருளுகென்னவாண்டிறந்தெய்துகென்றுன்.

(இவ்வாறு விச்வாமித்திரன்) தென்திசை அதனை நண்ணி (மெய்ஞானம்பெற இருப்போர்) செய்கின்ற தவத்தை (அவன்) செய்யும் செவ்வியில், வல்திறல்வாய்ந்த அயோத்தியில் வாழும் மன்னவன் திரிசங்கு என்பவன், தன் துணையாகிய (வசிஷ்ட) குருவை நண்ணி 'தனுவொடு துறக்கம் எய்த, இன்று எனக்கு அருளுக' என்ன வேண்ட, (வசிஷ்டன்) 'ஆண்டு இறந்து எய்துக' என்றுன். [செவ்வியில்-காலத்தில். தனு-சரீரம். துறக்கம்-சுவர்க்கம். ஆண்டு-அவ்விடம், ஆயுள்.]

109. நினக்கொலா தாகி னைய நீணிலத் தியாவ ரேனும்
மனக்கினியாரைநாடிவகுப்பல்யான்வேள்வியென்னச்
சினக்கொடுந்திறலோய்முன்னைத்தேசிகற்பிழைத்துவே
நினக்கிதனுடிநின்றுய்நீசனுய்விடுதியென்றுன். [றேர்

(அதற்குத் திரிசங்கு வசிஷ்டனைப் பார்த்து) 'நினக்கு ஒல்லாது ஆகில் ஐய, (இந்த) நீண்ட நிலத்தில் (என்) மனதிற்கு இனியார் (வேறு) யாவரைஎனும் நாடி, (உடலுடன் சுவர்க்கம் செல்வதைக் குறித்து) யான் வேள்வி வகுப்பல்' என்ன, (இதுகேட்ட வசிஷ்டன்) 'சினக்கொடுந்திறலோய். முன்தேசிகனை பிழைத்து வேறு ஓர்ஹிதன் நினக்கு நாடி நின்றாய், (அல்லவா! ஆதலால் நீ) நீசன் ஆய்விடுதி' என்றான். [ஒல்லாது-இயலாது. முன்தேசிகன்-பூர்வாசாரியன். நீசன்-புலையன்.]

110. மலருளோன் மைந்தன் மைந்த வழங்கிய சாபந்தன்னால்
அலரியோன் றானு நாணு மொளியிழந் தரசர் கோமான்
புலரியங்கமலம்போலும்பொலிவொரீஇவதனம்பூவில்
பலருமாங் கிகழ்தற் கொத்த படிவம்வந் துற்ற தன்றே.

"(ஓ தசரத) மைந்தனே, (தாமரை) மலர் உளோன் (ஆகிய பிரமனின்) மைந்தன் (ஆகிய வசிஷ்டன்) வழங்கிய சாபம் தன்னால், அரசர் கோமான் (ஆகிய திரிசங்கு) அலரியோன் தானும் (தன் குலத்தில் வந்தவன் இவ்வாறு ஆயினனே என்று) நாணும்படி ஒளி இழக்க, புலரி (இல் மலரும்) அம் கமலம் போலும் வதனம் (தன்) பொலிவை ஒருங்கி, பூவில் உள்ள பலரும் ஆங்கு இகழ்தற்கு ஒத்த படிவம் வந்து (அவனுக்கு) உற்றது. [அலரியோன்-சூரியன். புலரி-அருணோதயம். ஒருங்கி-அழிய. பூ-பூமி. படிவம்-உருவம்.]

111. காசொடு முடியும் பூணுங் கரியதாங் கனகம் போன்றும்
தூசொடுமணியுமுந்நூறோறருந்தோற்றம்போன்றும்
மாசொடு கருகி மேனி வனப்பழிந் திடவூர் வந்தான்
சீசியென்றியாருமெள்ளத்திகைப்பொடுபழுவஞ்சேர்ந்தான்.

"காசும் முடியும் பூண்களும் கரியது ஆகும் கனகம் போன்றும், தூசும் மணியும் முந்நூலும் தோல்தரும் தோற்றம் போன்றும், மேனி மாசுஉடன் கருகி வனப்பு அழிந்திட (சாபம் பெற்ற அந்தத் திரிசங்கு) ஊர் வந்தான். (ஊரில் அவனைக்கண்டு) யாரும் 'சீசி!' என்று எள்ள (அவன் சகிக்காது) திகைப்பு ஒடு (மறுபடி) பழுவம் சேர்ந்தான். [காசு, மணி-இரத்நம். கரியக்னகம்-கரும்பொன், இரும்பு. தூசு-ஆடை. மாசு-அழுக்கு. பழுவம்-காடு.]

112. கானிடைச்சிறிதுவைகல்கழித்தொர்நாட்கௌசிகப்பேர்
கோனினிதுறையுஞ்சோலைகுறுகினன்குறுகவன்னான்
ஈனனீ யாவ னென்னை நேர்ந்ததிவ் விடையி னென்ன,
மேனிகழ்பொருள்களெல்லாம்விளம்பினன்வணங்கிவேந்தன்.

"கான் இடை வைகல் சிறிது கழித்து ஓர் நாள், (அந்தத் திரிசங்கு) கௌசிகன் (என்னும்) பேர் (கொண்ட) கோன் இனிது

உறையும் சோலையை குறுகினன். குறுக அன்னான், 'ஈனன் (ஆகிய) நீ யாவன், இ இடையில் என்ன நேர்ந்தது' என்ன, (அதற்குத்திரிசங்கு) வேந்தன் வணங்கி (கௌசிகனுக்கு) மேல் நிகழ்ந்த பொருள்கள் எல்லாம் விளம்பினன். [வைகல்-தங்குதல்.]

113. இற்றிதோ வெனநக் கன்னான் யானிரு வேள்வி முற்றி
மற்றுல களிப்ப னென்று மாதவர் தம்மைக் கூவச்
சுற்றுறுமுனிவர்யாருந்தொக்கனர்வசிட்டன்மைந்தர்
கற்றில மரசன் வேள்வி கனற்றுறை புலையற் கீவான்.

"(விளம்பக்கேட்ட கௌசிகன்) '(உனக்கு நேர்ந்தது) இற்றிதோ' என நக்கு, அன்னான் (திரிசங்குவைப் பார்த்து) 'யான் (உன்) இருமையான வேள்வியை முற்றி (உனக்கு) மறு உலகை அளிப்பன்' என்று, (யாகம் செய்ய) மா தவர் தம்மை கூவ, சுற்று உறும் முனிவர் யாரும் தொக்கனர். (அப்பொழுது) வசிட்டனது மைந்தர்கள், 'அரசன் (ஒருவன்) புலையனுக்கு வேள்வியையும் கனல் துறையையும் (செய்து) ஈவதை (யாம் எப்பொழுதும்) கற்று இலம்'—[இற்றிதோ-இத்தன்மையதோ. நக்கு-சிரித்து. கனற்றுறை-அக்கினிகாரியம். இருமை-பெருமை.]

114. என்றுரைத்தியாங்களொல்லோமென்றனரென்னப்பொங்கிப்
புன்றொழிற் கிராத ராகிப் போகெனப் புகற லோடும்
அன்றவ ரெயின ராகி யடவிக டோருஞ் சென்றார்
நின்றுவேள் வியையு முற்றி நித்தரை வருக வென்றான்.

என்று (வசிஷ்டன் மைந்தர்) உரைத்து 'யாங்கள் ஒல்லோம்' என்றனர். என்ன (கௌசிகன்) பொங்கி (அவர்களைப்பார்த்து) புல் தொழில் (செய்யும்) கிராதர் ஆகி போக' என புகல்தலோடும், அன்று அவர் எயினர் ஆகி அடவிகள்தோறும் சென்றார். (பிறகு கௌசிகன் சலியாது) நின்று வேள்வியை முற்றி நித்தரை 'வருக' என்றான். [கிராதர், எயினர்-வேடர். அடவி-காடு. நித்தர்-தேவர்.]

115. அரசனிப்புலையற்கென்னேயனற்றுறைமுற்றியெம்மை
விரசுகவல்லேஎன்பான்விழுமிதென்றிகழ்ந்துநக்கார்
புரசைமாகளிற்றுவேந்தைப்போகநீதுறக்கம்யானே
உரைசெய்தேன்றவத்தினென்னவோங்கினன்விமானத்தும்பர்

(அந்தத்தேவர்) அரசன் இ புலையனுக்கு அனல்துறை முற்றி எம்மை 'வல்லே விரசுக' என்பான் (இது) என்னே! விழுமம் (உடைத்தோ) இது!' என்று இகழ்ந்து நக்கார். (அது கண்ட கௌசிகன்) புரசைகட்டிய மா களிறுடைய (திரிசங்கு) வேந்தை (பார்த்து) '(என்) தவத்தினால் யானே உரை செய்தேன். நீ துறக்கம் போக'

என்ன, (திரிசங்கு) விமானத்தில் (ஏறி) உம்பர் ஓங்கினன். [வல்லை விரசுக-சீக்கிரம் வாருங்கள். விழுமம்-சிறப்பு. புரசை-யானைகழுத்தில் கட்டும் கயிறு. களிறு-யானை. உம்பர்-மேலே.]

116. ஆங்கவன் றுறக்க மெய்த வமரர்கள் வெகுண்டு நீசன்
இங்குவந் திடுவ தென்னே யிருநிலத் திழிக வென்னத்
தாங்கலில் கவிழ்வான் மற்றுத் தாபத சரண மென்ன
ஓங்கினனின்னில்லென்ன வுரைத்துருமொக்கநக்கான்.

(திரிசங்குவாகிய) அவன் ஆங்குதுறக்கம் எய்த, அமரர்கள்வெகுண்டு 'நீசன் (ஆகியநீ) இங்கு வந்திடுவது என்னே! இருநிலத்து இழிக' என்ன, தாங்கல் இல்லாது கவிழ்வான் (ஆகிய திரிசங்கு) (விச்வாமித்திரனைக் குறித்து) 'தாபத, சரணம்' என்ன, (விச்வாமித்திரன்) ஓங்கி "நில்நில்" என்ன உரைத்து உரும் ஒக்க நக்கான். [தாபத-முனிவனே. ஓங்கி-எழுந்து. உரும்-இடி.]

117. பேணலாதிகழ்ந்தவிண்ணோர்பெரும்பதமுதலாமற்றைச்
சேண்முழுதமைப்பலென்னாச்செழுங்கதிர்கோணாடிங்கள்
மாணொளி கெடாதுதெற்குவடக்கவாய் வருக வென்று
தாணுவோடூர்வவெல்லாஞ்சமைக்குவனென்னும்வேலை

(சிரித்து), (என் சொல்லை) 'பேணலாது இகழ்ந்த விண்ணோர் பெரும்பதம் முதலாம் மற்ற சேண் முழுது அமைப்பல்' என்று, 'செழும்கதிர் கோள் நாள் திங்கள் (யாவையும்தம்தம்) மாண் (பொருந்திய) ஒளி கெடாது தெற்குவடக்கவாய் வருக' என்று 'தாணுவும் ஊர்வனவும் எல்லாம் (திரிசங்குவின் பொருட்டு வேறாக) சமைக்குவன்? என்னும் வேலையில்—[பேணலாது-மதிக்காமல். சேண்-விண்ணுலகம். கதிர்-சூரியன். கோள்-சிகரம். நாள்-நக்ஷத்ரம். மாண்-பெருமை. தாணு-தாவரம். ஊர்வ-சங்கமம். வேலை-சமயம்.]

118. நறைத்தரு வுடைய கோனு நான்முகக் கடவு டானும்
கறைத்தரு களனு மற்றைக் கடவுளர் பிறருந் தொக்குப்
பொறுத்தருண்முனிவநின்னைப்புகல்புகுந்தவனைப்போற்றும்
அறத்திறனன்றுதாராகணத்தொடுமமைகஅன்னான்

நறை (பொருந்திய கற்பக) தருவைஉடைய (இந்திரனாகிய) கோனும், (பிரமனாகிய) நால்முககடவுள் தானும், (சிவனாகிய) கறைதரும் களனும் மற்ற கடவுளரும்; (முனிவர்முதலான) பிறரும், (அவ்விடம் ஒன்று) தொக்கு, (கௌசிகனைநோக்கி) முனிவனே, பொறுத்து அருள். நின்னை புகல்புகுந்தவனை (நீ) போற்றும் அறத்தின் திறன் நன்று, (திரிசங்குவாகிய) அன்னான் தாராகணத் தொடும் அமைக— [நறை-மது, மணம். கறைதரும்களன்-விஷம்தங்கிய கழுத்துடையவன், புகல்-சரண். தாராகணம்-நக்ஷத்ரக்கூட்டம்.]

119. அரசமா தவனீ யாதி யைந்துநா டென்பால் வந்துன்
புரைவிளக் கிடுகெ வென்னக் கடவுளர் போய பின்றை
நிரைதவன் விரைவினேகி நெடுங்கடற் கிறைவன் வைகும்
உரைவிட மதனை நண்ணி யுறுதவ முஞற்றுங் காலை.

நீயும் அரசமாதவன் ஆதி. ஐந்து நாள்கள் தென்பால் வந்து உன் புரையை விளக்கி இடுக' என்று (விதித்து) கடவுளர் போயபின், நிரையாகிய தவன் (ஆகியவிச்வாமித்திரன்) விரைவில் ஏகி நெடும் கடலுக்கு இறைவன் (ஆனவருணன்) வைகும் உரம் (பொருந்திய) இடம் அதனை நண்ணி உறுதவம் உஞற்றும் காலையில்—[அரசமாத வன்-ராஜரிஷி. ஐந்துநாள்-ஐந்துநக்ஷத்ரங்கள், அவை அநுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம். புரை-மேன்மை. உரம்-வலிமை. உஞற்றும்-முயன்று செய்யும்.]

120. குதைவரி சிலைவாட் டானைக் கோமக னம்ப ரீடன்
சுதைதருமொழியன் வையத்துயிர்க்குயிராயதோன்றல்
வதைபுரிபுருடமேதம்வகுப்பவோர்மைந்தற்கொள்வான்
சிதைவிலன்கனகந்தேர்கொண்டடவிகடுருவிச்சென்றான்

குதையையும் வரியையும் உடைய சிலையும் வாளும் கொண்ட தானையுடைய கோமகனும், சுதைதரும் (இனிய) மொழியனும் வையத்துள்ள உயிர்களுக்கு உயிர் ஆகிய தோன்றலும், (ஆன) அம்பரீடன் (என்பவன்), வதைபுரியும் புருஷமேதம் வகுப்பதற்கு ஓர் மைந்தன் கொள்ள (எண்ணி) (மனத்தில்) சிதைவு இலனாய், (வேண்டிய) கனகத்தை தேரில்கொண்டு (புருஷயாகத்தில் வதைப் பதற்குச் சிருவன் ஒருவன் பொன் விலைக்குக் கிடைப்பனோ என்று) அடவிகளில் துருவி சென்றான். [குதை-அடிக்கட்டு. சிலை-வில். தானை-சேனை. சுதைதரும்-அமிர்தம்போன்ற. தோன்றல்-சிறந்த வன். மேதம்-யாகம். சிதைவு-சலிப்பு. துருவி-தேடி.]

121. நற்றவ ரிசிகன் வைகு நனைவரு பழுவம் நண்ணிக்
கொற்றவன் வினவலோடு மிசைந்தனர் குமரர் தம்முள்
பெற்றவ ளிளவ லெற்கே யென்றனள் பிதாமுன் னென்றான்
மற்றைய மைந்த னக்கு மன்னவன் றன்னை நோக்கி.

"(அவ்வாறு சென்ற அம்பரீடன்ஆகிய) கொற்றவன், நல்தவம் (வாய்ந்த) இரிசிகன் (என்பவன்) வைகும் நனைவரும் பழுவத்தை நண்ணி (யாகத்திற்குப் பிள்ளைவேண்டுமென்று) வினவ, (அம்முனி வனும் பத்தினியும்) இசைந்தனர். (ஆனால் அவர்களது) குமரர் (மூவர்) தம்முள், பெற்றவள் 'இளவல் எனக்கு (வேண்டும்)' என் றனள். பிதா 'முன் (எனக்கு வேண்டும்)' என்றான். மற்ற (இடை யான சுனச்சேபன் என்கிற) மைந்தன், (நான் தானே இருவருக்கும் வேண்டாதுபோனேன் என்று வருந்தி) நக்கு, (பின்) மன்னவன் தன்னை நோக்கி—[நனை-மலர். பழுவம்-காடு. முன்-மூத்தவன்.]

122. கொடுத்தருள்வெறுக்கைவேண்டிற்றெற்கமாம்விழுமங்குன்ற
எடுத்தெனைவளர்த்ததாதைக்கென்றவற்றொழுதுவேந்தன்
தடுப்பருந் தேரி னேறித் தடையிலாப் படர்த லோடும்
சுடர்க்கதிர்க் கடவுள் வானத் துச்சியஞ் சூழல் புக்கான்.

(சிரித்துப் அந்தச் சுனச்சேபன்),' என்னை எடுத்து வளர்த்த தாதைக்கு, (அவர்) ஒற்கம் ஆம் விழுமம் குன்ற வேண்டிற்று வெறுக்கை கொடுத்து அருள்' என்று (அரசனுக்குக் கூறி) (தந்தையாகிய) அவனை தொழுது வேந்தனது தடுப்பு அரிய தேரில் ஏறி தடை இல்லாமல், படர்த்தலோடும், சுடர் பொருந்திய கதிர்களுடைய கடவுள் (ஆகிய சூரியன்) வானத்து உச்சி அம்சூழல் புக்கான். [ஒற்கம்-வறுமை. விழுமம்-துன்பம். வெறுக்கை-பொன். சூழல்-இடம்.]

123. அவ்வயி னிழிந்து வேந்த னருங்கடன் முறையி னாற்றச்
செவ்விய குரிசி றானுஞ் சென்றன னியமஞ் செய்வான்
அவ்விய மவித்த சிந்தை முனிவனை யாண்டுக் காணாக்
கவ்வையி னோடும் பாத கமலம துச்சி சேர்த்தான்.

வேந்தன் அவ்வயின் இழிந்து, அரிய (நித்திய) கடன்களை முறையில் ஆற்ற, செவ்வியகுரிசில் (ஆகிய சுனச்சேபன்) தானும், நியமம் செய்ய சென்றனன். (சென்ற) ஆண்டு அவ்வியம் அவித்தசிந்தையை உடைய (விச்வாமித்திர) முனிவனை கண்டு, கவ்வையோடு (அவன்) பாதகமலங்களை (தன்) உச்சியில் சேர்த்தான். [குரிசில்-சிறுவன். அவ்வியம்-பொறாமை. கவ்வை-துன்பம்.]

124. விறப்பொடு வணக்கஞ் செய்த விடலையை யினிது நோக்கிச்
சிறப்புடைமுனிவனென்னைதெருமரல்செப்புகென்ன
அறப்பொருளுணர்ந்தோயென்றனன்னைநும்முன்னையென்னை
உறப்பொருள்கொண்டுவேந்தற்குதவினளென்றானுற்றோன்.

(இவ்வாறு)விறப்புடன்வணக்கம் செய்தவிடலையை, சிறப்பு உடைய முனிவன் இனிது நோக்கி 'தெருமரல் என்ன, செப்புக?' என்ன, உற்றோன் ஆகிய (அச்சுனச்சேபன்), 'அறம் பொருள் உணர்ந்தோய், என்தன் அன்னை (ஆகிய) நும் முன்னை, பொருள் உறகொண்டு, என்னை வேந்தற்கு உதவினள்' என்றான். [விறப்பு-அச்சம். விடலை-சிறுவன். தெருமரல்-கலக்கம். உற்றோன்-உறவினன். நும்முன்னை-உனக்கு மூத்தவள்.]

125. மைத்துனனோடுமுன்னாள்வழங்கியமுறைமைகேளாத்
தத்துறலொழிநீயானேதடுப்பனின்னுயிரையென்னாப்
புத்திரர் தம்மை நோக்கிப் போகவேந் தோடுமென்ன
அத்தகு முனிவன் கூற வவர்மறுத் தகறல் காணா.

(அவ்வாறு தன்) மைத்துனனும் முன்னாளும் (அவர் சிறுவனை) வழங்கிய முறைமையை கேட்டு, அந்த தகும் முனிவன், (அவனைப்

பார்த்து) நீ தத்துஉறல் ஒழி, நின் உயிரை யானே தடுப்பன்' என்று, புத்திரர் தம்மை நோக்கி '(நீங்கள் சுனச்சேபனுக்குப் பதிலாய்), வேந்தனோடு போந்திடுக' என்ன கூற, அவர் மறுத்து அகல்தலை கண்டு—[தத்துறல்-கலங்குதல்.]

126. எழுங்கதி ரவனு நாணச் சிவந்தன னிருக ணெஞ்சம்
புழுங்கினன்வடவைதீயமயிர்ப்புறம்பொறியிற்றுள்ள
அழுங்கலில் சிந்தை யீர்நீ ரடவிக டோறுஞ் சென்றே
ஒழுங்கறு புளிஞ ராகி யுறுதுய ருறுக வென்றான்.

எழும் கதிரவனும் நாண இருகண் சிவந்தனன், நெஞ்சம் புழுங்கினன், வடவை (கனலும்) தீய புறம் மயிர் பொறிகள்போல் துள்ள (தன்மைந்தரைப் பார்த்து) 'அழுங்கல் இல்லாத சிந்தையீர், நீர் அடவிகள்தோறும் சென்று ஒழுங்கு அற்ற புளிஞராகி (அந்நிலைமைக்கு) உறும் துயரை உறுக' என்றான். [எழும்-உதயமாகும். அழுங்கல்-இரக்கம். புளிஞர்-வேடர்.]

127. மாமுனி வெகுளி தன்னான் மடிகலா மைந்தர் நால்வர்
தாமுறு சவர ராகச் சபித்தெதிர் சலித்த சிந்தை
ஏமுற லொழிக வின்னே பெறுகென விரண்டு விஞ்சை
கோமரு கனுக்கு நல்கிப் பின்னருங் குணிக்க லுற்றான்

(முன் வசிஷ்டனாகிய) மாமுனியின் வெகுளி தன்னால் (காமதேனுவின் பொருட்டுப் போர் தொடர்ந்து) மடிகலாத மைந்தர் நால்வரும் தாம் உற்ற சவரர் ஆகச்சபித்து, எதிர் (நின்றதன்) கோமருமகனுக்கு 'சலித்த சிந்தையனாய் (நீ) ஏமுறல் ஒழிக, இரண்டு விஞ்சை இன்னே பெறுக' என, (அவைகளை) நல்கி, பின்னரும் குணிக்கல் உற்றான். [சவரர்-வேடர். ஏமுறல்-கலங்கல். விஞ்சை-மந்திரம். குணிக்கல்-மதித்துரைத்தல்.]

128. அரைசனோ டேகி யூபத் தணைக்குபிம் மறையை யாய்தி
விரசுவர்விண் ணுளோரும்விரிஞ்சனும்விடைவலோனும்
உரைசெறி வேள்வி முற்று முனதுயிர்க் கீறுண் டாகா
பிரசமென்றாரோயென்னப்பழிச்சொடும்பெயர்ந்துபோனான்.

'பிரசம் பொருந்திய மெல் தாரோய், அரசனோடு ஏகி (உன்னை) யூபத்து அணைக்குபு இ மறையை ஆய்தி. (ஜபிப்பாயானால்) விண்ணில் உளோரும் விரிஞ்சனும் விடைவலோனும் விரசுவர். (புகழ்) உரை செறிந்த வேள்வி முற்றும். உனது உயிர்க்கு ஈறு உண்டாகாது' என்ன (கேட்டசிறுவன்) பழிச்சு ஒடும் பெயர்ந்து போனான். [பிரசம்-தேன். யூபத்தணைக்குபு-யாகத்தம்பதில் அணைக்கும்போது. மறையைஆய்தி-மந்திரத்தைஜபி. விரிஞ்சன்-பிரமன். விடைவலோன்-இரஷபவாகனன், சிவன்.]

129. மறைமுனி யுரைத்த வண்ண மகத்துறை மைந்த னுயச்
சிறையுறு கலுழ னன்னஞ் சேமுதற் பிறவு மூரும்
இறைவர்தொக்கமரர்சூழவிளவறன் னுயிரும்வேந்தன்
முறைதருமகமுங்காத்தார்வடதிசைமுனியுஞ்சென்றான்

(விச்வாமித்திர) முனி உறைத்தவண்ணம் மகம்துறையில் மறைகளை ஆய, சிறைஉறு கலுழன் அன்னம் சே முதல்பிறவும் ஊரும் இறைவர்தொக்கு அமரர் சூழ (அந்த) இளவல்தன் உயிரையும் (அம்பரீட) வேந்தனது (வேத) முறையில் தரும் மகமும் காத்தார். (விச்வாமித்திர) முனியும் வடதிசை சென்றான். [மகம்-யாகம். கலுழன் கருடன். சே-இரஷபம். ஊரும்-வாகனமாய்ச் செலுத்தும்.]

130. வடாதிசை முனியு நண்ணி மலர்க்கர நாசி வைத்தாங்
கிடாவுபிங்கலைதாநையவிதயத்தூடெழுத்தொன்றெண்ணி
விடாதுபல் பருவ நிற்ப மூலமா முகடு விண்டு
தடாதிருட் படலை மூடச் சலித்ததெத் தலமுந் தாவி.

(அவ்வாறு) முனியும் வடதிசை நண்ணி மலர்போன்ற கரத்தை நாசியில் வைத்து ஆங்கு இடைபிங்கலை தாம் நைய இதயத்துஊடு (பிரணவமாகிய) எழுத்து ஒன்று எண்ணி பலபருவம் விடாது நிற்ப, மா மூலமுகடு விண்டு இருள்படலை தடாது தாவிமூட எ தலமும் சலித்தது. [நாசி-மூக்கு. இடைபிங்கலை-வலஇட நாடிகள். நைய ஒடுங்க.]

131. எயிலெ ரித்தவன் யானை யுரித்தநாட்
பயிலு றுத்துரி போர்த்திடும் பண்பெனப்
புயல்வி ரித்தெழுந் தாலெனப் பூதலம்
குயில்வு றுத்திக் கொழும்புகை விம்மவே.

(மூன்று) எயில்களை எரித்தவன் (ஆனசிவன்) யானையை உரித்த நாள், (அந்த) உரியை (தன் உடம்போடு) பயில்உறுத்து போர்த்து இடும் பண்புஎனவும், புயல்கள் விரிந்துஎழுந்தால் எனவும் (எழுந்த) கொழும்புகை பூதலத்தை குயில்வு உறுத்தி விம்ம—[எயில்-புரங்கள் உரி-தோல். பயில்வுறுத்து-சேர்த்து. புயல்-மேகம். குயில்வு றுத்தி-நெருக்கி. விம்ம-அதிகரிக்க.]

132 தமந்தி ரண்டுல கியாவையுந் தாவுற
நிமிர்ந்த வெங்கதிர்க் கற்றையு நீங்குறக்
கமந்த மாதிரக் காவலர் கண்ணொடும்
சுமந்த நாகமுங் கண்சும் புளித்தவே.

தமம்திரண்டு உலகுயாவையும் தாவ,நிமிர்ந்த (வெயிலாகிய) வெம் கதிர் கற்றையும் நீங்க, கமந்த மாதிரங்கள் காவலர் (ஆகிய அஷ்ட

திக்குப் பாலகர்) கண்ணும் (அஷ்டதிக்குகளை) சுமந்த நாகமும் கண் சும்புளித்தன. [தமம்-இருள். சுமந்த-நிறைந்த. மாதிரம்-திக்குகள் நாகம்-யானை. சும்புளித்த-கூசின.]

133. திரிவ நிற்ப செகதலத் தியாவையும்
வெருவ லுற்றன வெங்கதிர் மீண்டன
கருவி யுற்ற ககன மெலாம்புகை
உருவி யுற்றிட வும்பர் துளங்கினர்.

(இன்னும்) செகம்தலத்து திரிவன நிற்பன (ஆகிய) யாவையும் வெருவல் உற்றன, வெம்கதிர்கள் மீண்டன, (தமக்கு) கருவிபோல் உற்ற ககனம் எலாம் புகையானது உருவி உற்றிட உம்பர் துளங்கினர். [வெருவல்-பயம். மீண்டன-திரும்பின. கருவி-கவசம். ககனம்-ஆகாயம். துளங்கினர்-நடுங்கினர்.]

134. புண்ட ரீகனும் புட்டிருப் பாகனும்
குண்டை யூர்தி குலிசியு மற்றுள
அண்டர் தாமும்வந் தவ்வயி னெய்திவே
றெண்ட போதனன் றன்னை யெதிர்ந்தனர்.

(அப்பொழுது), புண்டரீகவாசியான பிரமனும், (கருடப்) புள்ளை (ஊரும்) திருபாகனான விஷ்ணுவும். குண்டையை (வாகனமாக) ஊர்தியாகிய சிவனும். குலிசத்தை ஆயுதமாக உடைய இந்திரனும், மற்று உள அண்டர்தாமும் வந்து அவ்வயின் எய்தி, (முனிசிரேஷ்டன் என்று) வேறாகஎண்ணப்படுகிற தபோதனன் (ஆனவிச்வாமித்திரன்) தன்னை எதிர்ந்தனர். [புண்டரீகம்-தாமரை. குண்டை-இரஷபம். குலிசம்-வச்சிராயுதம்.]

135. பாதி மாமதி சூடியும் பைந்துழாய்ச்
சோதி யோனுமத் தூய்மல ராளியும்
வேத பாரகர் வேறிலர் நீயலால்
மாத போதன வென்ன வழங்கினர்.

(எய்தி) மாமதி பாதிசூடியும், பைந்துழாய்சோதியோனும், அதூய (தாமரை) மலராளியும், (அந்த விச்வாமித்திரனை நோக்கி) 'மாதபோதனனே, நீயல்லாமல் வேதபாரகர் வேறஇலர்' என்ன வழங்கினர். [துழாய்-துளசி. வேதபாரகர்-வேதத்தின் கரைகண்டவர்.]

136. அன்ன வாசகங் கேட்டுண ரந்தணன்
சென்னி தாழ்த்திரு செங்கம லங்குவித்
துன்னு நல்வினை யுற்றதென் றேங்கினன்
துன்னு தேவர்தஞ் சூழலுட் போயினர்.

அன்னவாசகத்தை கேட்டு உணர்ந்த (விச்வாமித்திரனான) அந்த

ணன், (வணக்கமாய்த்தன்) சென்னியை தாழ்த்து இருசெம்கமலம் (போன்றதன் கைகளை) குவித்து '(நான்) உன்னிய நல்வினை (வந்து) உற்றது' என்று (சந்தோஷத்தால்) ஓங்கினான். (பின்) துன்னிய தேவர்கள்தம் சூழல்உள் போயினர். [உன்னிய-கருதிய. துன்னிய-நெருங்கிய. சூழல்-இடம்.]

137. ஈது முன்னர் நிகழ்ந்த திவன் றுணை
மாத வத்துயர் மாண்புடை யாரிலை
நீதி வித்தகன் றன்னரு ணேர்ந்தனிர்
யாது மக்கரி தென்றன னீறிலான்.

(இவ்வாறு விச்வாமித்திரனது விருத்தாந்தத்தைச்சொல்லி முடித்து இராமலக்ஷ்மணர்களைப் பார்த்துச் சதானந்தனாகிய அந்த) ஈறு இல்லான் "இது முன்நிகழ்ந்தது. இவன் துணையான மாதவத்தால் உயர்ந்த மாண்பு உடையார் (வேறு) இல்லை (இந்த) நீதிவித்தகன் தன் அருளை (நீவிர்) நேர்ந்தனிர் (ஆகையால்) உமக்குஅரிதுயாது!" என்றனன். [ஈறிலான்-அழிவில்லாதவன். துணை-சமானமான வித்தகன்-ஞானவொழுக்கமுடையவன்.]

138. என்று கோதமன் காதலன் கூறிட
வென்றி வீரர் வியப்பொ டுவந்தெழா
ஒன்று மாதவன் றாடொழு தோங்கிய
பின்றை யேத்திப் பெயர்ந்தனன் றன்னிடம்.

என்றுகோதமன் காதலன் (ஆகியசதானந்தன்) கூறிஇட, வெற்றி வீரர் வியப்பொடு உவந்து எழுந்து, (அந்த) ஒன்றும் மாதவனது தாள்களை தொழுது ஓங்கியபின், (அம்முனிவன் அவர்களை) ஏத்தி தன் இடத்திற்கு பெயர்ந்தனன். [காதலன்-மகன். ஒன்றும்-பொருந்திய. ஏத்தி-ஆசீர்வதித்து.]

சீதையைக் கண்ட இராமனுக்குண்டான விரகதாபம்

139. முனியுந் தம்பியும் போய்முறை யாற்றமக்
கினிய பள்ளிக ளெய்திய பின்னிருட்
கனியும் போல்பவன் கங்குலுந் திங்களும்
தனியுந் தானுமத் தையலு மாயினான்.

(விச்வாமித்திர) முனியும் (இலக்ஷ்மணனான) தம்பியும்போய் தமக்குஇனியபள்ளிகள் முறையால்எய்தியபின், இருள்கனிபோல்பவன் (ஆனஇராமன்) கங்குலும் திங்களும் தனியும் தானும் (சீதையாகிய) அ தையலும் (துணையாகக்கொண்டவன்) ஆயினான். [இருள்கனி-இருள்பழம், முற்றிய இருள். கங்குல்-இரவு. தையல்-சீதையின் உருவெளித்தோற்றம்.]

140. விண்ணி னீங்கிய மின்னுரு விம்முறை
பெண்ணி னன்னலம் பெற்றதுண் டேகொலோ
எண்ணி னீதல தென்றறி யேனிரு
கண்ணி னுள்ளுங் கருத்துள்ளுங் காண்பனால்.

(அவ்வுருவைககண்ட இராமன்) விண்ணில் இருந்து நீங்கிய மின் உருவானது, இ முறை பெண்ணின் நல்நலம் பெற்றது உண்டே கொல்! (பெண்அழகு பெற்ற அந்தமின்னல் உருவத்தை) இரு கண்ணின் உள்ளும் கருத்துஉள்ளும் காண்கிறேன். (ஆனால்) எண்ணில், இது (கண்ணில்காண்பது) அலது (இதுகருத்தில் காண்பது) என்று அறியேன்' (எனத்திகைத்தான்). [விண்-மேகம். இம்முறை இந்தப்பிரகாரம்.]

141. வள்ளற் சேக்கைக் கரியவன் வைகுறும்
வெள்ளப் பாற்கடல் போன்மிளிர் கண்ணினாள்
அள்ளல் பூமக ளாகுங்கொ லோவென
துள்ளத் தாமரை யுள்ளுறை கின்றதே.

(பின்னும் இராமன்) வள்ளல்சேக்கையில் (கருவிழிபோல்) கரியவன் (ஆனதிருமால்) வைகுறம் பால்கடலின் வெள்ளம்போல் (அமிர்தத்தைத்தன்னுள்) மிளிர்கின்ற கண்ணினாள் (ஒருவேளை திருமகளாயிருத்தல் கூடுமோ! இல்லை இல்லை) எனது உள்ளம் (ஆகிய) தாமரையுள் உறைகின்றது அள்ளலில் உண்டாகும் பூ (வில்வசிக்கும்) மகள் ஆகும் கொலோ! (என்று ஐயற்றுத் தெளிந்தான்). [வள்ளல் வளை தலையுடையது, சர்ப்பம். சேக்கை-சயனம். மிளிர்-பிரகாசி அள்ளல்பூ-சேற்றில் உண்டாகும்பூ, பங்கயம்.]

142. அருளி லாளெனி னும்மனத் தாசையால்
வெருளு நோய்விடக் கண்ணின் விழுங்கலால்
தெருளி லாவுல கிற்சென்று நின்றுவாழ்
பொருளெ லாமவள் பொன்னுரு வானவே.

அருள் இல்லாள் எனினும், மனத்து ஆசையால் (நான்) வெருளும் (காம) நோய் (என்னை) விட கண்களால் அவள் உருவத்தை ஆர்வத்தோடு) விழுங்கலால் (இந்த) தெருள் இல்லாத உலகில்சென்றும் நின்றும் வாழும் பொருள் எலாம் (என்கண்ணிறகு) அவளது பொன். உரு ஆனவே. [வெருளும்-பயப்படும். சென்று நின்றுவாழ் பொருள்-சராசரங்கள்.]

143. பூணு லாவிய பொற்கல சங்களென்
ஏணி லாகத் தெழுதல வென்னினும்
வாணி லாமுறு வற்கனி வாய்மதி
காண லாவதோர் காலமுண் டாங்கொலோ.

பூண்கள் உலாவிய (அவளது) பொன்கலசங்கள் (ஆகியமுலைகள்)

என் (அவளை அணைத்துத்தழுவும்) எண் இல்லாத ஆகத்தில் (தோய்ந்து எழுதல எனினும், (மறுபடி அவள் முகமாகிய) வாள்நிலாவும் முறுவல் கனிந்தவாய் உடையை மதியை (நான்) காணல்ஆவதோர் காலம் உண்டாகும்கொல்!'' (என்று இராமன் ஏங்கினான்). [பூண்-ஆபரணங்கள். எண்-பெருமை. வாள்-ஒளி. முறுவல்-புன்னகை.]

144. வண்ண மேகலைத் தேரொன்று வாணெடுங்
கண்ணி ரண்டு கதிமுலை தாமிரண்
டுண்ணிவந்த நகையுமுண் டாமெனில்
எண்ணுங் கூற்றினுக் கித்தனை வேண்டுமோ.

வண்ணம் (பொருந்திய) மேகலையை அணிந்ததேர் (போன்ற அல்குல்) ஒன்று, வாள்போன்ற நெடும்கண் இரண்டு, (இதழ்களுக்கு) உள்நிவந்தநகையும் உண்டாம் எனில், (யாவரும்மதித்து) எண்ணும் கூற்றினுக்கு (என்னைக்கொல்வதற்கு அவைகளுள் யாதாம் ஒன்றே போதுமாயிருக்க) இத்தனையும் வேண்டுமோ! (என இராமன் வருந்தினான்). [வண்ணம்-அழகு. கதிக்கும்-விம்மிப் பூரிக்கும்.]

145. கன்ன லின்கருப் புச்சிலை யான்விரைப்
பொன்னை முன்னிய பூங்கணை மாரியால்
என்னை யெய்து தொலைக்குமென் றாலினி
வன்மை யென்னுமி தாரிடை வைகுமோ.

கன்னல்கரும்பு சிலையான் (ஆகியமன்மதன்), விரையமைந்த பொன்னை (நான்) முன்ன, பூ கணை மாரியால் எய்து என்னை தொலைக்கும் என்றால், இனி, வன்மை என்னும் இது ஆர்இடை வைகுமோ!'' (என, இராமன் வியந்தான்). [விரை-வாசனை. பொன்-திருமகள். வன்மை-வலி.]

146. கொள்ளை கொள்ளக் கொதித் தெழும் பாற்கடல்
பள்ள வெள்ள மெனப்பட ருந்நிலா
உள்ள வுள்ள வுயிரைத் துருவிட
வெள்ளை வண்ண விடமுமுண் டாங்கொலோ.

(என் உயிரை) கொள்ளை கொள்ள கொதித்து எழும் பால்கடலானது பள்ளத்தில்பாயும் வெள்ளம் எனபடரும் (தன்மையதான) நிலா, (நான் அவளது திரு உருவத்தை) உள்ள உள்ள (என்) உயிரை துருவி (உண்டு) இட, (கருநிறமல்லாத) வெள்ளை வண்ணம் (உடைய) விடமும் உண்டாம்கொல்!'' (என் இராமன் சந்திரிகைக்கு ஆற்றாது இயம்பினான்). [உள்ள-நினைக்க. துருவி-தேடி.]

147. ஏகு நல்வழி யல்வழி யென்மனம்
ஆகு மோவதற் காகிய காரணம்
பாகு போன்மொழிப் பைந்தொடி கன்னியே
ஆகும் வேறிதற் கையுற வில்லையே.

"என்மனம் (எப்பொழுதும்) நல்வழி ஏகும் (அவ்வாறு இருக்க அதுஇப்பொழுது) (நல்வழி) அல்லாத (பிறன்மனை நயத்த லானதீய) வழிஆகுமோ! (ஆகாது) ஆகையால் என்மனம் அவளிடம் நாடிச்செல்லும்) அதற்கு ஆசியகாரணம் (ஆன) பாகுபோல் மொழியையும் பைந்தொடியையும் உடைய அவள் (விவாகமாகாத) கன்னியே ஆகும். இதற்குஐயுறவுஇல்லை." (என தன் மனத்தூய்மையையே ஆதாரமாகக்கொண்டு தான்கண்ட அப்பெண்தனக்குவாய்க்கத்தகுந்தவளேதான் என இராமன் துணிந்தான்). [பைந்தொடி-பசும்பொன் வளையல்.]

சந்திராஸ்தமன மாயிற்று.

148. கழிந்த கங்கு லரசன் கதிர்க்குடை
விழுந்த தென்னவு மேற்றிசை யாள்சுடர்க்
கொழுந்து சேர்நுதற் கோதறு சுட்டிபோய்
அழிந்த தென்னவு மாழ்ந்தது திங்களே.

கழிந்த கங்குல் என்னும் அரசனது கதிர்பொருந்திய குடை விழுந்தது என்னவும், மேல்திசையாள் (ஆகிய மாதின்) சுடர்கொழுந்து சேர்ந்தநுதலில் அணிந்தகோதுஅற்ற சுட்டியானது போய் அழிந்தது என்னவும், திங்கள் ஆழ்ந்தது. [கங்குல்-இரவு. சுட்டி-மாதர் நெற்றியில் அணியும் ஓர் ஆபரணம்.]

சந்திரன் மறைய நிலா ஒடுங்கிற்று.

149. வீசு கின்ற நிலாச்சுடர் வீய்ந்ததால்
ஈச னும்மதி யேகலுஞ் சோகத்தால்
பூசு வெண்கலை வைப்புனை சாந்தினை
ஆசை மாத ரழித்தன ரென்னவே

ஆசைகள் (ஆகிய) மாதர், (தமது) ஈசன் ஆகும் மதியானவன் ஏகலும், சோகத்தால், (தாம்) பூசின வெண்கலவை (ஆகிய) புனையும் சாந்தினை அழித்தனர் என்ன—வீசுகின்ற நிலாசுடர் வீய்ந்தது- [ஆசை-திசைகள், ஈசன்-தலைவன். புனையும்-அலங்கரிக்கும். வீய்ந்தது-அழிந்தது.]

150. ததையுமலர்த் தாரண்ண லிவ்வண்ண மயலுழந்து
தளரு மெல்லை
சிதையுமனத் திடருடையச் செங்கமல முகமலரச்
செய்ய வெய்யோன்
புதையிருளி னெழுகின்ற புகர்முகயா னையினுரிவைப்
போர்வை போர்த்த
உதயகிரி யெனுங்கடவு ளுதல்கிழித்த விழியேபோ
லுதயஞ் செய்தான்.

ததையும் மலர் தார் (அணிந்த இராமனாகிய) அண்ணல் இ வண்ணம் மயல் (கொண்டு) உழந்துதளரும் எல்வையில் புகர் அமைந்த முகம்உடையயானையின் உரிவைஆகிய போர்வையை போர்த்த (சிவபெருமான்போல்) புதைந்த இருளின் (நடுவில் ஓங்கி) எழுகின்ற உதயகிரி எனும்கடவுளின் நுதலைகிழித்த விழியேபோல் (தம்நாயகனை இரவில்பிரிந்திருந்ததால்) சிதையும் மனத்தில் இடர்உடைய செம்கமலங்கள் முகம்மலர செய்யவெய்யோன் உதயம்செய்தான். [ததையும்-நெருங்கிய. மயல்-காமம். எல்வையில்-சமயத்தில். புகர்-புள்ளிகள். உரிவை-தோல். இடர்-துன்பம். செய்ய-சிவந்த. வெய்யோன்-சூரியன்.]

151. விசையாடற் பசும்புரவிக் குரமிதிப்ப உதயகிரி
விரிந்த தூளி
பசையாக மறையவர்கைந் நறைமலரு நிறைபுனலும்
பரந்து பாய
அசையாத நெடுவரையின் முகடுதொறு மிளங்கதிர்
றளைந்து வெய்யோன் [சென்
றிசையாளு மதகரியைச் சிந்தூர மப்பியபோற்
சிவந்த மாதோ.

(சூரியனது) விசையையும் அடலையும் உடைய பசும்புரவிகள் குரம்களால் மிதிப்பதால் உதயகிரியின்மேல்விரிந்ததூளி பசைஆகும் வண்ணம், மறையவர் (உதயகாலம் பூசைசெய்து) கையால்தூவும் நறை உள்ளமலரும் நிறைந்தபுனலும் பரந்துபாய, அசையாதநெடும் வரையின் முகடுதொறும் வெய்யோனது இளம்கதிர் சென்று அளைந்து, திசையை ஆளும் மதகரிகளுக்கு சிந்தூரம் அப்பியதுபோல் (அச்சிகரங்கள்) சிவந்தன. [விசை-வேகம். அடல்-வெற்றி. பசும் புரவி-பச்சைக்குதிரைகள். குரம்-குளம்பு. பசைஆக-நனைய.]

152. பண்டுவருங் குறிபகர்ந்து பாசறையின் பொருள்வயி
பிரிந்து போன [னிற்
வண்டுதொடர் நறுந்தெரிய லுயிரனைய கொழுநர்வர
மணித்தே ரோடும்
கண்டுமனங் களிசிறப்ப வொளிசிறந்து மெலிவகலுங்
கற்பி னார்போல்
புண்டரிக முகமலர வகமலர்ந்து பொலிந்தனபூம்
பொய்கை யெல்லாம்.

(திரும்பி) வரும் (காலம்முதலிய) குறிகளை (தம்நாயகிக்கு) பகர்ந்து, பாசறையின்பொருட்டோ பொருள்வயின்பொருட்டோ பண்டு பிரிந்துபோன வண்டுகள் தொடரும் நறும்தெரியல் அணிந்த

உயிர் அனையகொழுநர் மணிதேரொடும் வர (கண்டு) மனத்தில் களி சிறப்ப (முகம்) ஒளிசிறந்து (பிரிவால்கொண்டிருந்த) மெலிவு அகலும் கற்பினாரைபோல் பூபொய்கைஎல்லாம் புண்டரிகம்ஆகியமுகம் மலர அகம்மலர்ந்து பொலிந்தன. [குறி-அடையாளம். பாசறையின், பொருள்வயின்-போர்செய்யவோ பொருள்தேடவோ. தெரியல்-மாலை. புண்டரிகம்-தாமரை. பண்டு-முன்காலத்தில்.]

153. எண்ணரிய மறையினொடு கின்னரர்க ளிசைபாட வுலக மேத்த
விண்ணவரு முனிவர்களும் வேதியருங் கரங்குவிப்ப வேலை யென்னும்
மண்ணுமணி முழவதிர வானரங்கி னடம்புரிவா ளிரவி யென்னும்
கண்ணுதல்வா னவன்கனகச் சடைவிரித்தா லெனவி கதிர்க ளெல்லாம். [ரிந்த

எண்ணுவதற்கு அரிய மறையோடு கின்னரர்கள் இசைபாட, உலகம்ஏத்த, விண்ணவரும் முனிவர்களும் வேதியரும் (வணங்கி) கரம்களை குவிப்ப, வேலை என்னும் மண் (அமைக்கப்பட்ட) மணி முழவு அதிர, வான்(ஆகிய)அரங்கில் நடம்புரிகின்ற வாள்பொருந்திய நுதலில் இரவிஎன்னும்கண உடையவானவன் (ஆகியசிவபிரான்) கனகம்சடை விரித்தால் எனகதிர்களெல்லாம் விரிந்தன. [ஏத்த-துதிக்க. வேலை-கடல். மண்-மத்தளத்திற்கு தடவும் மாப்பசை. முழவு-மத்தளம். வானரங்கு-ஆகாயசபை. வாள்-ஒளி.]

154. கொல்லாழி நீத்தங்கோர் குனிவயிரச் சிலைதடக்கை கொண்ட கொண்டல்
எல்லாழித் தேரிரவி யிளங்கரத்தா லடிவருடி யனந்த றீர்ப்ப
அல்லாழிக் கரைகண்டா னாயிரவாய் மணிவிளக்க மழலுஞ் சேக்கைத்
தொல்லாழித் துயிலாதே துயராழி யிடைக்கிடந்து துயில்கின் றானே.

ஆயிரம் வாய்களிலும் (மாணிக்க) மணிகளாகிய விளக்கு அழலும் (ஆதிசேஷன் ஆகிய) சேக்கையில் (பள்ளிகொண்டு) தொல் (பால் ஆழியில் துயிலாது, (மனிதனாகப்பிறந்து) துயர் ஆழிஇடைகிடந்து துயில்கின்றான் (ஆன அந்த) (தீயோரை) கொல்லும் (சுதர்சனம் என்னும்) ஆழியை நீத்து, குனிந்த வயிரம் பொருந்திய சிலையை தடம்கையில்கொண்ட கொண்டல் (போன்ற இராமன்)—எல் வீசும் ஆழியைஉடையதேர்(மீதுவரும்) இரவி(தன்கதிர்கள்என்னும்

இளம்கரத்தால் (மிக்கவணக்கத்துடன் இராமனது) அடிகளைவருடி அனந்தல்தீர்ப்ப, (துயிலெழுந்து) அல்லாகிய ஆழியின் கரையை கண்டான். [அழலும்-எரியும். தொல்-பழமையான. குனிவயிரச சிலை-வளைந்த வலியமைந்தவில். தடம்-பெரிய. கொண்டல்-மேகம். எல்-ஒளி. வருடி-தடவி. அனந்தல்-நித்திரை. அல்-இரவு. ஆழி-கடல், கடல், சக்ராயுதம், தேர்உருளை, கடல்.]

155. ஊழிபெயர்ந் தெனக்கங்கு லொருவண்ணம் புடை
வுறக்க நீத்த [பெயர
சூழியா னையினெழுந்து தொன்னியமத் துறைமுடித்
சுருதியன்ன [துச்
வாழிமா தவற்பணிந்து மனக்கினிய தம்பியொடும்
வம்பின் மாலை
வாழுமா மணிமௌலித் தார்ச்சனகன் பெருவேள்விச்
சாலை சார்ந்தான்.

ஊழி (காலம்) பெயர்ந்தது என கங்குல் ஒருவண்ணம் புடை பெயர, உறக்கம் நீத்த சூழி (அணிந்த) யானைபோல் (இராமன்) எழுந்து, தொல் நியமத்துறைகளை முடித்து, சுருதி அன்ன (விசுவா மித்திர) மாதவனை பணிந்து, மனத்திற்கு இனிய (தன்) தம்பியோடும் வம்புஉடைய மாலை தாழும் மாமணிமௌலியையும் தாரையும் தரித்த சனகனது பெரும் வேள்விசாலையை சார்ந்தான். [புடை பெயர-அகல. சூழி-முகபடாம். சுருதி-வேதம். வம்பு-வாசனை. மௌலி-கிரீடம். தார்-பூமாலை.]

156. முடிச்சனகர் பெருமானு முறையாலே மறைவேள்வி
முற்றிச்சுற்றும் [றேய்
இடிக்குரலின் முரசியம்ப விந்திரன்போற் சந்திரன்
கோயி லெய்தி
எடுத்தமணி மண்டபத்து ளெண்டவத்து முனிவரொடு
மிருந்தான் பைந்தார்
வடித்தகுனி வரிசிலைக்கை மைந்தனுந்தம் பியுமருங்கி
னிருப்ப மாதோ.

முடிதரித்த சனகர்பெருமானும், முறையால் மறைகள் கூறும் வேள்வியைமுற்றி, இடியின் குரல்போல் முரசு சுற்றும் இயம்ப, சந்திரன் தோயும் (தன் உயர்ந்த) கோயிலில் இந்திரன்போல் எய்தி (அங்கு), எடுத்த மணிமண்டபத்துள், பசுமையான தாரை அணிந்ததும் வடித்ததும் குனிந்ததும் வரிஅமைந்ததும் ஆன சிலையை கையில்கொண்ட (இராமனாகிய) மைந்தனும் (அவன்) தம்பியும் மருங்கின் இருப்ப, (எல்லோரும்மதித்து) எண்ணும் தவத்து முனி

வரொடும் இருந்தான். [மறை-வேதம். எடுத்த-உயர்ந்த. வடித்த-நீண்ட.]

157. இருந்தகுலக் குமரர்தமை யிருகண்ணின் முகத்தழகு
பருக நோக்கி
அருந்தவனை யடிவணங்கி யாரிவரை உரைத்திடுமி
னடிக ளென்ன
விருந்தினர்க ணின்னுடைய வேள்விகா ணியவந்தார்
வில்லுங் காண்பார் [தகைமை.
பெருந்தகைமைத் தயரதன்றன் புதல்வரென அவர்
பேச லுற்றான்.

(தன்னுடன்)இருந்த (நல்ல)குலகுமரர்தமை (சனகன்) இருகண்ணினாலும் (அவர்களது) முகத்து அழகை பருக நோக்கி, (விச்வாமித்திரனாகிய) அரியதவனை அடிவணங்கி, "யார் இவர்? அடிகள் உரைத்திடுமின்" என்ன, (அதற்கு அந்தமுனிவன்) 'விருந்தினர்கள் நின்உடைய வேள்வியை காணவந்தார், வில்லும் காண்பார் பெரும் தகைமை உடைய தயரதன்தன் புதவர்' என, அவர்களது தகைமையை எடுத்துபேசல் உற்றான்.

12. குலமுறை கிளத்து படலம்.

சூர்யவம்சப் பெருமையும் இராமனது வரலாறும் விச்வாமித்திரன் ஜனகமகாராஜனுக்கு எடுத்துக் கூறுகின்ற படலம்.

1. ஆதித்தன் குலமுதல்வன் மனுவினையா ரறியாதார்
பேதித்த வுயிரனைத்தும் பெரும்பசியால் வருந்தாமல்
சோதித்தன் வரிசிலையா னிலமடந்தை முலைசுரப்பச்
சாதித்த பெருந்தகையு மிவர்குலத்தோர் தராபதிகாண்.

ஆதித்தனது குலத்தில் முதல்வனாகிய மனுவினை அறியாதவர் யார்? (எழுவகைப் பிறவிகளாய்) பேதித்த உயிர் அனைத்தும் பெரும்பசியால் வருந்தாமல் நிலமடந்தை (பசு வடிவமாய் வந்து) முலையால் (உணவுப் பொருள்களை எல்லாம் பாலாக) சுரக்க, சோதிபொருந்திய தன் வரிய மைந்த சிலையால் சாதித்த (பிருது சக்ரவர்த்தி என்னும்) பெருந்தகையும் இவர்குலத்து (வந்த) ஓர் தராபதி காண்! [ஆதித்தன்-சூரியன் பேதித்த-பலவகைப்பட்ட. சாதித்த-செய்து முடித்த. பெருந்தகை-பெருங்குணமுடையவன். தராபதி-அரசன்]

2. பிணியரங்க வினையகலப் பெருங்காலந் தவம்பேணி
மணியரங்க நெடுமுடியாய் மலரயனை வழிபட்டுப்
பணியரங்கப் பெரும்பாயற் பரஞ்சுடரை யாங்காண
அணியரங்கந் தந்தானை யறியாதா ரறியாதார்.

மணிகள் அரங்கு அம் நெடு முடியாய்! (பிறவி) பிணி அரங்கவும், (அவைகளுக்குக் காரணமாகிய) வினைகள் அகலவும், (தாமரை) மலரில் வாழும் அயனை தவம் பேணி பெரும்காலம் வழிபட்டு, (அவனிடம் பெற்ற), பணியை பெரும்பாயல் அரங்கமாகக் கொண்ட (ஸ்ரீ ரங்கநாத ராகிய) பரம்சுடரை யாமெல்லாம் காணும் வண்ணம் அணி அரங்க (க்ஷேத்திர) த்தில் (கொண்டுவந்து) தந்த (இக்ஷ்வாகு சக்ரவர்த்தியாகிய) அவனை அறியாதவர் (யாதொன்றும்) அறியாதார் (ஆவர்). [அரங்கு-அழுத்திய. அரங்க-கெட. பணி-ஆதிசேடன். அரங்கமாக-இடமாக].

3. தான்றனக்கு வெலற்கரிய தானவரைத் தலைதுமித்தென்
வான்றரக்கிற் றிகொலென்று குறையிரப்ப வரங்கொடுத்தாங்
கேன்றெடுத்த சிலையினனு யிகல்புரிந்த விவர்குலத்தோர்
தோன்றலைப் பண்டிந்திரன்காண் விடையேறாய்ச் சுமந்தானும்.

(இந்திரன்) தனக்கு "வெல்லுதற்கு அரிய தானவரை தலைதுமித்து என் வானை (மீண்டும்) தாக்கிற்றி கொல்?" என்று (தனது) குறையை (சொல்லி) இரப்ப, (அதைக் கேட்டு 'அவ்வாறே செய்வேன்' என்று இந்திரனுக்கு) வரம் கொடுத்து, (கையில்) ஏன்று எடுத்த சிலையினனாய் (அசுரருடன்) இகல் புரிந்த இவர் குலத்து (வந்த காகுஸ்தன் என்னும்) ஒரு தோன்றலை விடை ஏறாய் பண்டு சுமந்தவனும் (அந்த) இந்திரன் தான், காண். [வான்-தேவலோகம். தாக்கிற்றிகொல்-தருவாயோ. ஏன்று-ஏற்று. இகல்-போர். விடைஏறு-ரிஷபவாகனம். துமித்து-அறுத்து]

4. அரசனவன் பின்னோரை யென்றுணு மளப்பரிதால்
உரைகுறுக நிமிர்கீர்த்தி யிவர்குலத்தோ ரொருவன்காண்
நரைதிரைமூப் பிவைமாற்றி யிந்திரனு நந்தாமல்
குரைகடலை நெடுவரையாற் கடைந்தமுதங் கொடுத்தானும்.

[உரை குறுக நிமிர் கீர்த்தி-சொல்லளவிற்கு எட்டாமல் மேன்மேல் வளர்கின்ற கீர்த்தியையுடைய இவர்களது குலத்தில் தோன்றிய நிமி என்பர். நந்தாமல்-கெடாமல். குரை-ஒலிக்கின்ற]

5. கருதலரும் பெருங்குணத்தோ ரிவர்முதலோர் கணக்கிறந்தார்
திரிபுவன முழுதாண்டு சுடர்நேமி செலநின்றோர்
பொருதுறைசேர் வேலினாய்ப் புலிப்போத்தும் புல்வாயும்
ஒருதுறையி னீருண்ண வுலகாண்டோ னுளனொருவன்.

(போர்களெல்லாம்) பொருது (இப்பொழுது பகைவர் இன்மையால்) உறையில் சேர்ந்த வேலினாய்! கருதற்கு அருமையான பெரும் குணத்தோர் (ஆன இராம லட்சுமணர்களாகிய) இவர்களுக்கு முதலோர் (ஆன) திரிபுவனம் முழுதும் ஆண்டு (தமது) சுடர்போன்ற நேமி செல்ல நின்றோர் கணக்கு இறந்தோர் (ஆவர்). (அவர்களுள்) புலிப்போத்தும் புல்வாயும் ஒரு துறையில் நீர் உண்ணும்வண்ணம் உலகை ஆண்டோன் (மாந்தாதா) என்போன் ஒருவன் உளன். [திரிபுவனம் - மூன்றுலோகம். சுடர்நேமி - சூரியன்போன்ற ஆக்ஞாசக்கரம். இறந்தோர்-அற்றவர். புலிப்போத்து - ஆண்புலி. புல்வாய்-மான்]

6. மறைமன்னு மணிமுடியு மாரமும்வா ளொடுமின்னப்
பொறைமன்னு வானவருந் தானவரும் பொருமொருநாள்
விறல்மன்னர் தொழுகழலா யிவர்குலத்தோன் விற்பிடித்த
அறமென்ன வொருதனியே திரிந்தமரா பதிகாத்தோன்.

[மறை...முடியும் - சிற்பநூல் வேலைப்பாடமைந்த மணிகள் பதித்த கிரீடமும். பொறை மன்னும் - பொறுமை மிகுந்த. விறல்-வெற்றி. இங்குக் குறிக்கப்பட்டவன் திலீபன்].

7. இன்னுயிர்க்கு மின்னுயிரா யிருநிலங்காத் தாரென்று
பொன்னுயிர்க்கும் கழலவரை யாம்போலும் புகழ்கிற்பாம்
மின்னுயிர்க்கு நெடுவேலா யிவர்குலத்தோன் மேற்பறவை
மன்னுயிர்க்குத் தன்னுயிரை மாறாக வழங்கினனால்.

[இருநிலம்-பெரிய உலகம். பொன்னு......கிற்பாம்-பொன்னொளி வீசும் வீரக்கழலணிந்த அரசரை நாமோ புகழவல்லோம். மின் உயிர்க்கும்-மின்னலொளியை வீசுகின்ற. இதில் குறிக்கப்பட்டவன் சிபி].

8. இடரோட்ட வினநெடிய வரையுருட்டி யிவ்வுலகம்
திடரோட்ட மெனக்கிடக்கும் வகையிரங்கித் தெவ்வேந்தர்
உடரோட்ட நெடுவேலா யிவர்குலத்தோ ருவரிநீர்க்
கடரோட்ட ரெனின்வேறோர் கட்டுரையும் வேண்டுமோ.

தெவ்வேந்தர்களது உடலை (முற்காலத்தில்) தோட்ட நெடிய வேலாய்! இவர்களது குலத்தோர் (ஆன சகரர்), (கபிலனிடம் மறைந்த குதிரைக்காக) இரங்கி, (அதைத் தேடிச் சென்றாராய்) இ உலகம் திடல் (அமைந்த) தோட்டம் என கிடக்கும் வகை, இடறை ஓட்ட நெடியவரை இனங்களை உருட்டி (தள்ளி) உவரி நீர் கடலை தொட்டார் எனின் (சூர்யகுலப் பெருமையை விளக்க) வேறு ஓர் கட்டுரையும் வேண்டுமோ! [தெவ்-பகை. தோட்ட-தொளைத்த. திடல்-கரைமேடு. தோட்டம்-பள்ளம். இடறு-தமது பாட்டனாருடைய வேள்விக்கு நேர்ந்த இடையூறு. தொட்டார்-தோண்டினார். கட்டுரை-உறுதிச்சொல்.]

9. தூநின்ற சுடர்வேலோ யனந்தனே சொல்லானேல்
யானின்று புகழ்ந்தேத்தற் கெளிதேயே டவிழ்கொன்றைப்
பூநின்ற மவுலியையும் புக்களைந்த புனற்கங்கை
வானின்று கொணர்ந்தானு மிவர்குலத்தோர் மன்னவன்காண்.

(குருதிக் கறையின்றி) தூநின்ற சுடர் பொருந்திய வேலாய்! (இவர் குலத்தோர் சிறப்பை) அனந்தனே சொல்லானேல் யான் இன்று புகழ்ந்து ஏத்தற்கு எளிதோ! ஏடு அவிழ்கின்ற கொன்றைப்பூ நின்ற பரமசிவனது) மவுலியையும் புக்கு அளைந்த புனல்உடைய கங்கையை வான்நின்று கொணர்ந்தானும் இவர் குலத்து ஓர் மன்னவன் (ஆனபகீரதன்) காண். [தூநின்ற-சுத்தமான. அனந்தன்-ஆதிசேஷன். ஏடு-இதழ். மவுலி-ஜடாபாரம். புக்கு-புகுந்து. புனல்-நீர்.]

10. கயற்கடல்சூ ழுலகெல்லாங் கைநெல்லிக் கனியாக்கி
இயற்கைநெறி முறையாலே யிந்திரற்கு மிடரியற்றி
முயற்கறையின் மதிக்குடையா யிவர்குலத்தோன் முன்னொருவன்
செயற்கரிய பெருவேள்வி ஒருநூறுஞ் செய்தனமைத்தான்.

[முயற்......குடையாய்—முயலுருவக் களங்கமில்லாத சந்திரனென் றுளதாயின் அதுபோன்ற குடையை உடையவனே. இச்செய்யுள் கூறுவது சுதாசன்].

11. சந்திரனை வென்றானு முருத்திரனைச் சாய்த்தானும்
துந்துவெனுந் தானவனைச் சுடுசரத்தா லானித்தானும்
வந்தகுலத் திடைவந்த ரகுவென்பான் வரிசிலையால்
இந்திரனை வென்றதிசை யிருநான்குஞ் செருவென்றான்

[செரு-போர். இவ்வரசர் முறையே, திலீபன், பகீரதன், குவலயாசுவன், இரகு என்பர்]

12. வில்லென்னு நெடுவரையால் வேந்தென்னுங் கடல்கலக்கி
எல்லென்னு மணிமுறுவ லிந்துமதி யெனுந்திருவை
அல்லென்னுந் திருநிறத்த வரியென்ன வயனென்பான்
மல்லென்னுந் திரள்புயத்துக் கணியென்ன வைத்தானே.

(இவர்குலத்து முன்னோன்) அயன் என்பான் (ஒருவன்), (தனது) வில் என்னும் நெடியவரையால் (சத்ரு) வேந்து என்னும் கடலை கலக்கி, எல் என்னும் அணி முறுவல் (வாய்ந்த) இந்துமதி எனும் திருவை-(பாற்கடல் கலக்கி அதில் வந்த திருமகளைத் தன் மார்பிலணிந்த) அல் என்னும் (கரிய) திருநிறத்த அரி என்ன—மல்என்னும் (தனது) திரண்ட புயத்திற்கு அணி என்ன வைத்தானே. [எல்என்னும்-ஒளி வீசும். முறுவல்-நகை. அல் என்னும்-இருள் போன்ற. அரி-விஷ்ணு. மல் என்னும்-மல்போர் அவாவும். இந்துமதி-விதர்ப்ப ராஜன்மகள். பேர்அளவில் அரியைப்போல் அயனும் திருமகள் பெற்றான் என்பது கருத்து]

13. அயன்புதல்வன் தயரதனை யறிதா ரில்லையவன்
பயந்தகுலக் குமரரிவர் தம்மையுள்ள பரிசெல்லாம்
நயந்துரைத்துக் கரையேற நான்முகற்கு மரிதாம்பல்
இயந்துவைத்த கடைத்தலையா யானறிந்த படிகேளாய்.

[பயந்த-பெற்ற. உள்ளபரிசு-உள்ளவாறு. நயந்து-விரும்பி. பல் இயம் துவைத்த கடைத்தலையாய்-பல வாத்தியங்களை முழக்குகின்ற கடைவாயிலை உடைய ஜனகனே!]

14. துனியின்றி யுயிர்செல்லச் சுடராழிப் படைவெய்யோன்
பனிவென்ற படியென்னப் பகைவென்று படிகாப்போன்
தனுவன்றித் துணையில்லான் றருமத்தின் கவசத்தான்
மனுவென்ற நீதியான் மகவின்றி வருந்துவான்.

(தான் காக்கும்) உயிர்கள் எல்லாம் துனி இன்றி (வாழ்க்கையில்) செல்ல, சுடர் ஆழிப்படை (ஆகிய சுதர்சனம் போன்ற) வெய்யோன் பனியை வென்றபடி என்ன (உள் புறம் ஆகிய இரு) பகைகளையும் வென்று படியை காப்போனும், (கூட்டு ஒருவரையும் வேண்டாது

தன் கை) தனு அன்றி (வேறு ஓர்) துணை இல்லானும், (தற்காப்பிற்கு) தருமத்தையே கவசமாக உடையானும், (இவனேதான்) 'மனுவோ' என்ற நீதியானும் (ஆகிய அத்தயாதன்) மகவு இன்றி (வெகுகாலம்) வருந்துவான். [துனி-துன்பம். வெய்யோன்-சூரியன். படியை-பூமியை. தனு-வில்.]

15. சிலைக்கோட்டு நுதற்குதலைச் செங்கனிவாய்க் கருநெடுங்கண்
விலைக்கோட்டும் பேரல்குன் மின்னுடங்கு மிடையாரை
முலைக்கோட்டு விலங்கென்றங் குடனணுகி முன்னின்ற
கலைக்கோட்டுப் பெயர்முனியாற் றுயர்நீங்கக் கருதினன்.

சிலைபோல் கோட்டு நுதலையும், குதலை (மொழியோடு கூடிய) செவந்த (கொவ்வை) கனிபோன்ற வாயையும், கரிய நெடிய கண்களை யும், (பொன்) விலைக்கு ஒட்டும் பேர் அல்குலையும், மின்னலைப்போல் நுடங்கும் இடையையும் உடைய மாதரை—முலைகளாகிய கோடுகளை யுடைய 'விலங்கு' என்று (கருதி) ஆங்கு உடன் அணுகி (அவர்) முன் நின்ற கலைக்கோட்டு (முனிவன் என்கிற) பெயரை உடைய முனியால் (வசிட்டன் சொன்னவண்ணம்) துயர்நீங்க (அத்தயாதன்) கருதினன். [கோட்டு-வளைந்த. நுடங்கும்-துவளும். கோடு-கொம்பு]

16. தார்காத்த நறுங்குஞ்சித் தநயர்களென் றவமின்மை
வார்காத்த வனமுலையார் மணிவயிறு வாய்த்திலரால்
நீர்காத்த கடல்காத்த நிலங்காத்தே னென்னிற்பின்
பார்காத்தற் குரியாரைப் பணிநீயென் றடிபணிந்தான்.

"எனக்கு தவம் இன்மையால், (எனது பத்தினிமார்களாகிய) வார் காத்த வனமுலையார்களது மணிவயிற்றில், தார்காத்த நறிய குஞ்சியு டைய தநயர்கள் வாய்த்திலர். (ஆகையால்) நீர்காத்த கடல்காத்த நிலத்தை (அறுபதினாயிரம் ஆண்டு) காத்தேன், (இனி) என்னின்பின் (இந்த) பாரை காத்தற்கு உரியாரை நீ பணி" என்று (தயாதன் கலைக் கோட்டு முனிவனது) அடியை பணிந்தான். [வார்காத்த வனமுலை-கச்சு இறுக்கிய அழகிய முலை. நீர்.....காத்தேன்—நீர் நிறைந்த கடல் சூழ்ந்த உலகை ஓம்பினேன். தார்.....தநயர்—பூமாலை சூடிய வாசனை பொருந்திய சிகையையுடைய புத்திரர்]

17. அவ்வுரைகேட் டம்முனியு மருள்சுரந்த வுவகையனாய்
இவ்வுலக மன்றியே யெவ்வுலகு மினிதளிக்கும்
செவ்வியிளஞ் சிறுவர்களைத் தருகின்றே னினித்தேவர்
வவ்விநுகர் பெருவேள்விக் குரியவெலாம் வருகென்றான்.

[செவ்வி-அழகிய. வவ்விநுகர்-அவிர்ப்பாகத்தை விரும்பி உண்கிற]

18. காதலரைத் தரும்வேள்விக் குரியவெலாங் கடிதமைப்ப
மாதவரிற் பெரியோனு மற்றதனை முற்றுவித்தான்
சோதிமணிப் பொற்கலத்துச் சுதையனைய வெண்சோறோர்
பூதகணத் தரசேந்தி யனனின்றும் புறப்பட்டான்.

[சுதை-அமிர்தம். அனல்நின்றும்-யாகத்தீயினின்று]

19. பொன்னின்மணிப் பரிகலத்திற் புறப்பட்ட வின்னமுதைப்
பன்னுமறைப் பொருளுணர்ந்த பெரியோன்றன் பணியினால்
தன்னனைய நிறைகுணத்துத் தசரதனும் வரன்முறையால்
நன்னுதலார் மூவருக்கும் நாலுகூ றிட்டளித்தான்.

[பரிகலம்-பாத்திரம். பன்னும்-துதித்தற்குரிய. தன் அனைய-தனக்குத்தானே நிகரான. வரல்முறையால்-கிரமப்படி]

20. விரிந்திடுதீ வினைசெய்த வெவ்வியதீ வினையாலும்
அருங்கடையின் மறையறைந்த வறஞ்செய்த வறத்தாலும்
இருங்கடகக் கரதலத்திவ் வெழுதரிய திருமேனிக்
கருங்கடலைச் செங்கனிவாய்க் கவுசலையென் பாள்பயந்தாள்.

விரிந்து இடுகின்ற தீவினையே செய்த வெவ்விய தீவினையாலும், கடைஇல்லாத அருமறைகள் அறைந்த அறங்களே செய்த அறத்தாலும், இருமையான கடகம்தரித்த கரதலத்தோடு கூடிய இந்த (ஓவியத்திலும்) எழுத அரிய திருமேனி (வாய்ந்த) கருங்கடல்போன்ற இராமனை செம்கனிபோன்ற வாய்உடைய கவுசலை என்பாள் பயந்தாள். [வெவ்விய-கொடிய. அறைந்த-சொன்ன. இரு-பெருமைபொருந்திய.]

குறிப்பு :—தீவினையே செய்த தீவினையால் இதுகாறும் விரிந்திட்டுப் பரவிய அது அழியவும், அறங்களெல்லாம் கூடிச்செய்ததோர் பேரறத்தால் அவை நிலைக்கவும், இராமன் அவதரித்தான் என்பது கருத்து. இவ்வாறே, கைகேசி "முனியும் முனியும் செய்கைக்கொடியாள்" ஆனதும், இலக்குமணன் "விதிக்கு விதியாகும் என் விற்றொழில் காண்டி" எனச் சேவகம் கூறியதும், "இங்ஙனின நாட்டத்தான் தவன் செயத் தவன் செய்ததவனேன்," எனத் தவக்கோலங்கொண்ட இராமனைக் கண்டு சூர்ப்பநகை அயிர்த்ததும், பொதுவறப் புனைந்துரைக்கும் கம்பனது திறமையின்பாற் பட்டனவாகும்.

21. தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
பள்ளமெனுந் தகையானைப் பரதனெனும் பெயரானை
எள்ளரிய குணத்தாலு மெழிலாலு மிவ்விருந்த
வள்ளலையே யனையானைக் கேகயர்கோன் மகள்பயந்தாள்.

[தள்ளரிய.....தகையானை—தள்ள ஒண்ணாப் பெரிய நீதியாகிய நிகரற்ற ஆறு புக மிகுந்துபாயும் பள்ளம் போன்ற தன்மையுடையவனை]

22. அருவலிய திறலினரா யறங்கெடுக்கும் விறலரக்கர்
வெருவருதிண் டிறலார்கள் வில்லேந்து மெனிற்செம்பொற்
பருவரையு நெடுவெள்ளிப் பருப்பதமும் போல்வார்கள்
இருவரையு மிவ்விருவர்க் கிளையாளு மீன்றெடுத்தாள்.

(வெல்வதற்கு) அரியவலியுடைய திறலினராய் அறம் கெடுக்கும் விறல் (வாய்ந்த) அரக்கர் வெருவரும் திண்திறலார்களும், செம்பொன் பருவரையாகிய மேருவும் நெடிய வெள்ளி பருப்பதமாகிய கைலாயமும் வில்லை எந்தும் எனின் (அவை) போல்வார்களும் (ஆகிய இலக்ஷ்மண சத்ருக்நர்களை) இருவரையும், (கவுசலை கைகேசி ஆகிய) இவ்விருவர்க்கும் இளையாள் (ஆகிய சுமித்திரையும்) ஈன்று எடுத்தாள். [விறல்-வெற்றி வெருவரு-அஞ்சுதற்குரிய. பருப்பதம்-மலை]

23. தலையாய பொருளுணர்விற் கலைமகட்குத் தலைவராய்ச்
சிலையாயுந் தனுவேதந் தெவ்வரைப்போற் பணிசெய்யக்
கலையாழிக் கதிர்த்திங்க ளுதயத்திற் கலித்தோங்கும்
ஆலையாழி யெனவளர்ந்தார் மறைநான்கு மனையார்கள்.

நான்கு மறை அனையார்கள் (ஆன அந்நான்கு குமாரரும்),—தலையாய பொருள்களின் உணர்வில் கலைமகளுக்கு தலைவர் ஆகியும், சிலையை ஆய்வதற்குரிய தனுவேதம் (அவர் வென்ற) தெவ்வரை போல் (அவர்கட்கு) பணி செய்யவும், கலைநிறைந்த ஆழிபோன்ற கதிர்த்திங்களது உதயத்தில் கலித்து ஓங்குகின்ற அலைகளையுடைய ஆழிஎன வளர்ந்தார். [தலையாய-முதன்மையான. சிலை ஆயும் தனுவேதம்-வில்வித்தைபயிற்றும் தனுர் சாஸ்திரம். ஆழி-சக்கரம், கடல்].

24. திறையோடு மரசிறைஞ்சுஞ் செறிகழற்காற் றசரதனும்
பொறையோடுந்தொடர்மனத்தான்புதல்வரெனும்பெயரேகாண்
உறையோடு நெடுவேலா யுபநயன விதிமுடித்து
மறையோடு வித்திவரை வளர்த்தானும் வசிட்டன்காண்.

(பகைவென்று) உறை ஓடும் நெடுவேலாய்! அரசர் திறையோடு (வந்து) இறைஞ்சும் செறிந்த கழல் அணிந்த கால்களையுடைய தசரதனாகிய பொறையோடு தொடர்ந்த மனத்தானுக்கு (இந்நால்வரும்) புதல்வர் எனும் பெயர் மாத்திரமே காண். (இவர்க்கு) உபநயன விதி முடித்து மறை ஓடுவித்து இவரை வளர்த்தானும் வசிட்டன் (ஆவான்) காண்! [பொறை-பொறுமை. மறை ஓடுவித்து-சாஸ்திரப்பயிற்சி உண்டாக்கி]

25. ஈங்கிவரா லென்வேள்விக் கிடையூறு கடிதியற்றும்
தீங்குடைய கொடியோரைக் கொல்விக்குஞ் சிந்தையனாய்ப்
பூங்கழலார்க் கொண்டுபோய் வனம்புக்கேன் புகாமுன்னம்
தாங்கரிய பேராற்றல் தாடகையே தலைப்பட்டாள்.

[பூங்கழலார்—அழகிய வீரகண்டையணிந்த இராம லக்ஷ்மணர்களை]

26. அலையுருவக் கடலுருவத் தாண்டகைதன் னீண்டுயர்ந்த
நிலையுருவப் புயவலியை நீயுருவ நோக்கையா
உலையுருவக் கனலுமிழ்கட் டாடகைதன் னுரமுருவி
மலையுருவி மரமுருவி மண்ணுருவிற் றொருவாளி.

(தலைப்பட), ஐயா (ஜனகமகாராஜனே !) அலைகள் உருவும் அ கடல் உருவத்து (இராமனாகிய) ஆண் தகைதன் நீண்டு உயர்ந்த நிலைபோன்ற (திரண்ட) உருவமுடைய புயத்தின்வலியை நீ உருவ நோக்கு ! (கொல்லனது) உலையில் உள்ள (செவந்த) உருவம் உடைய கனலை உமிழ்கின்ற கண்களுடைய தாடகைதன் உரத்தை உருவி (கழன்று அப்புறம் சென்று) ஒருவாளி மலையை உருவி மரத்தை உருவி மண்ணை யும் உருவிற்று. [நிலை-பூமி. உருவ-உற்று. உரம்-மார்பு. வாளி-அம்பு]

27. செக்கர்நிறத் தெரிகுஞ்சிச் சிரக்குவைகள் பொருப்பென்ன
உக்கனவோ முடிவில்லை யோரம்பி னொருமாக்கி
மக்களிலங் கொருவன்போய் வான்புக்கான் மற்றையவன்
புக்கவிட மறிந்திலேன் போந்தனெனென் வினைமுடித்தே.

[செக்கர்......முடிவில்லை.— செவ்வான நிறத்தோடு தீக்கொழுந்து போன்ற சிகையோடு கூடிய அரக்கர்களது தலைகளினது குவியல்கள் மலைபோல் உகுந்தனவோ முடிவு இல்லை]

28. ஆய்ந்தேற வுணரய்ய வயற்கேயு மறிவரிய
காய்ந்தேவி லுலகனைத்துங் கடலோடு மலையோடும்
தீய்ந்தேறச் சுடுகிற்கும் படைக்கலங்கள் செய்தவத்தால்
ஈய்ந்தேனு மனமுட்க விவற்கேவல் செய்குனவால்.

ஐய, (விஷயங்களை) ஆய்ந்து ஏற உணர் ! அயனுக்கும் அறிதற்கு அரியனவும், காய்ந்து ஏவில் உலகு அனைத்தும் கடலோடும் மலையோ டும் தீய்ந்து ஏற சுடக்கூடியனவும் ஆன படைக்கலங்கள் (என்) செய்த வத்தால் ஈந்த நானும் மனம் உட்க இவனுக்கு (இப்போது) ஏவல் செய் குன. [ஏற-முடிய. காய்ந்து-கோபித்து. உட்க-நாண]

29. கோதமன்றன் பன்னிக்கு முன்னையுருக் கொடுத்ததிவன்
போதுநின் றதெனப்பொலிந்தபொலன்கழற்கால்பொடிகண்டாய்
காதலென்ற னுயிர்மேலு மிக்கரிபோன் பாலுண்டால்
ஈதிவன்றன் வரலாறும் புயவலியு மெனவுரைத்தான்.

[பன்னி - மனைவி, அகலிகை. போது-தாமரைப்பூ. பொலன்- பொன்]

13. கார்முகப் படலம்.

இராமன் வில்லை முறித்த படலம்.

1. மாற்றம்யா துரைப்பது மாய விற்குநான்
தோற்றவா றெனமனந் துளங்கு கின்றதால்
நோற்றன ணங்கையு நொய்தி னையன்வில்
ஏற்றுமே லிடர்க்கட லேற்று மென்றனன்.

(இராமனது பிரதாபத்தை எல்லாம் கேட்ட சனகன், முன் விச்வா மித்திரன் கூறிய "வில்லும் சாண்பார்' என்பதை எண்ணினவனாய்) "மாற்றம் யாது உரைப்பது. மாயவில்லிற்கு நான் தோற்றவாறு என் மனம் துளங்குகின்றது. (இந்த) வில்லிற்கு நொய்தின் ஐயன் (நாண்) ஏற்றுமேல், நங்கையும் நோற்றனள் (ஆகும்), (என்னையும்) இடர் கடலினின்று (கரை) ஏற்றும்" என்றனன். [துளங்குகின்றது-வருந்துகின்றது. தோற்றவாறுஎன-தோல்வியடைந்தேனே என்று. நொய்தின்-இள. நோற்றனள்-தவம் செய்தவள்].

2. என்றன னென்றுதன் னெதிர்நின் றாரையக்
குன்றுறழ் வரிசிலை கொணர்மி னீண்டென
நன்றென வணங்கினர் நால்வ ரோடினர்
பொன்றிணி கார்முகச் சாலை புக்கனர்.

(ஜனகன்) என்றனன். என்று தன் எதிர் நின்றாரை (நோக்கி) "அ குன்று உறழ் வரிசிலையை ஈண்டு கொணர்மின் என", (அதுகேட்டு) நால்வர் 'நன்று' என வணங்கி ஓடி, பொன்திணிந்த கார்முகசாலை புக்கனர். [கார்முகச்சாலை-வில் சாலை. உறழ்-போன்ற].

3. உறுவலி யானையை யொத்த மேனியர்
செறிமயிர்க் கல்லெனத் திரண்ட தோளினர்
அறுபதி னாயிர ரளவி லாற்றலர்
தறிமடுத் திடையிடை தண்டிற் றூக்கினர்.

[உறுவலி-மிக்கவலி. மேனியர்-சரீரத்தையுடையவர். செறி மயிர் கல்-மயிர் செறிந்தகல். தறிமடுத்து-தூண்களைக் குறுக்கே அணைத்து].

4. நெடுநில மகண்முது காற்ற நின்றுயர்
தடகிரி டவரை தானு நாணுற
இடமிலை யுலகென வந்த தெங்கணும்
கடல்புரை திருநக ரிரைத்துக் காணவே.

(அவ்வாறு வில்லை எடுத்ததால்) நெடும் நிலமகள் (பாரம் நீங்கிச்சிறிது) முதுகை ஆற்றிக்கொள்ளவும், நின்று உயர்ந்த தடம்நிமிர்ந்த (மேருவாகிய) வடவரைதானும் (வில்லிற்கு நிகராகாமையால்) நாணம் உறவும், கடலை புரையும் (அந்தமிதிலையாகிய) திருநகர் (ஜனங்கள்) இரைத்து காணவும், உலகு எங்கணும் (அதற்கு) இடம் இல்லை என (வில்லானது) வந்தது. [தடம் நிமிர்-பெருமைமிகுந்த. புரையம்-ஒக்கும். இரைத்து-ஆரவாரம் செய்து].

இதுமுதல் ஐந்து திருவிருத்தங்களில், வில்லைக்கண்டு சபையிலுள்ளவர் இயம்பியனவற்றைக் கவி கூறுகின்றார்.

5. சங்கொடு சக்கரந் தரித்த செங்கையச்
சிங்கவே றல்லனே லிதனைத் தீண்டுவான்
எங்குள னொருவனின் றேற்றி னிச்சிலை
மங்கைதன் றிருமணம் வாழுமா லென்பார்.

"சங்கும் சக்கரமும் தரித்த செங்கையுடைய சிங்க ஏறு (போன்ற திருமால்) அல்லனேல், இதனை தீண்டுவான் ஒருவன் எங்கு உளன். (ஆனால் எவனாயினும்) இன்று இ சிலைக்கு (நாண்) ஏற்றின் மங்கை தன் திருமணம் வாழும்" என்பார். [சிங்க ஏறு-ஆண் சிங்கம்.]

6. கைதவந் தனுவெனல் கனகக் குன்றென்பார்
எய்தவன் யாவனோ வேற்றிப் பண்டென்பார்
செய்ததத் திசைமுகன் றீண்டி யன்றுதன்
மொய்தவப் பெருமையின் முயற்சி யாலென்பார்.

(இன்னும் சிலர்), '(இதை) தனு எனல் கைதவம். (இதுமேருவாகிய) கனகக்குன்று' என்பார். 'பண்டு (இதற்கு நாண்) ஏற்றி (அம்பு) எய்தவன் யாவனோ' என்பார். (கைகளால்) தீண்டி அன்று திசைமுகன் (ஆகிய பிரமன்) (இதை) செய்தது. தன் மொய்த்த தவ பெருமையின் முயற்சியால் (தான் செய்தது)' என்பார். [கைதவம்-கபடம். மொய்த்த-நிறைந்த].

7. திண்ணெடு மேருவைத் திரட்டிற் றோவென்பார்
வண்ணவான் கடல்பண்டு கடைந்த மத்தென்பார்
அண்ணல்வா ளரவினுக் கரசனோ வென்பார்
விண்ணிடு நெடியவில் வீழ்ந்த தோவென்பார்.

"(இவ்வில்) திண்மை பொருந்திய நெடிய மேருவை திரட்டிற்றோ' என்பார். வண்ணம் பொருந்திய வான் (பால்) கடலை பண்டு கடைந்த (மந்தரமலையாகிய) மத்தோ' என்பார். '(இது மந்தரமாயின் இதன் நாண்) அண்ணல் வாள்தாங்கிய அரவினுக்கு அரசனோ—(அதாவது, மந்தரத்திற்குக் கடைகயிறாயிருந்த வாசுகியோ)" என்பார். "விண்

இடுகின்ற நெடிய (இந்திர) வில் (பூமியில்) விழுந்ததோ' என்பார்- [கிரட்டிற்றோ-திரட்டிச் செய்ததோ. வண்ணம்-அழகு. அண்ணல்-சிறப்பு, பெருமை. வான்-சிறந்த. வாள்-ஒளி. விண்-ஆகாயம்].

8. என்னிது கொணர்கென வியம்பி னானென்பார்
மன்னவ ருளர்கொலோ மதிகெட் டாரென்பார்
முன்னையூழ் வினையினான் முடிக்கி லாமென்பார்
கன்னியு மிச்சிலை காணு மோவென்பார்.

"இதை கொணர்கஎன (ஜனகன்) இயம்பினான், (காரணம்) என்ன!" என்பார். (இந்த வில்லை வளைக்கத்துணிந்து) மதிகெட்டார் (யாராவது) மன்னவர் (இங்குவந்து) உளர்கொல்!" என்பார். (யாராய்த் தான் இருந்தாலும்) முன்னை ஊழின் வினையினால் (இக்காரியம்) முடிக்கில் (அது) ஆகும்-(மற்றபடி சுயபராக்கிரமத்தால் ஆவதன்று)" என்பார். (சீதையாகிய) கன்னியும் (ஒரு நாள்) இ சிலை (நாண் ஏற) காணுமோ" என்பார். [ஊழ்-விதி. வினை-பயன்.]

9. இச்சிலை யுதைத்தகோற் கிலக்கம் யாதென்பார்
நச்சிலை நங்கைமே னாட்டும் வேந்தனென்பார்
நிச்சய மெடுக்குங்கொ னேமி யானென்பார்
சிற்சிலர் விதிசெய்த தீமை தானென்பார்.

"இ சிலை உதைத்த கோலுக்கு இலக்கம் யாது?" என்பார். "(ஜனக) வேந்தனுக்கு (சீதையாகிய) நங்கைமேல் நாட்டும் நச்சு இல்லை" என்பார். (இருந்தால், யாவராலும் வளைத்தற்கு இயலாத இவ்வில்லிற்கு நாண் ஏற்றியவற்கே சீதையை மணம் செய்து கொடுப்பேன் என்று விரதம் கூறி இருப்பானோ!.) நேமியான் (ஆகிய திருமால்தான்) (இதை) நிச்சயமாய் எடுக்கும் கொல்?" என்பார். சிற்சிலர் "(யாரை நொந்து என் செய்வது) விதி சேய்த தீமைதான் (இந்தவில் சீதையின் விவாகத்திற்கு இடையூறாயிருப்பது)" என்பார். [இலக்கம்-லக்ஷ்யம், குறி. நாட்டும் நச்சு-நாடிய ஆசை. கோல்-அம்பு].

10. மொய்த்தன ரின்னண மொழிய மன்னன்முன்
உய்த்தவர் நிலமுது குளுக்கிக் கீழுற
வைத்தனர் வாங்குனர் யாவ ரோவெனாக்
கைத்தலம் விதிர்த்தனர் கண்ட வேந்தரே.

மொய்த்தனர் (ஆன அச்சபையோர்) இன்னணம் மொழிய, (வில்லை எடுத்து வந்தவர்கள்) மன்னன் முன் உய்த்தனர். (உய்த்து) நிலம் முதுகு உளுக்கி கீழ்உற வைத்தனர். (வைக்க) கண்ட வேந்தர், (இதை) வாங்குனர் யாவரோ என்று (தம்) கைதலம் விதிர்த்தனர். [மொய்த்தனர்-நெருங்கி நின்றவர்கள். உய்த்தனர்-சுமந்து வந்தனர்.

உளுக்கி-சுளுக்குற்று. வாங்குனர்-வளைப்பவர். விதிர்த்தனர்-ஒருவரும் இல்லை என்பது தோன்ற கையை ஆட்டினர்].

11. போதக மனையவன் பொலிவை நோக்கியவ்
வேதனை தருகின்ற வில்லை நோக்கித்தன்
மாதினை நோக்குவான் மனத்தை நோக்கிய
கோதமன் காதலன் கூறன் மேயினான்.

(அப்பொழுது) போதகம் அனையவன் (ஆகிய இராமனது) பொலிவை நோக்கி, (இவனே தன் மகளுக்கு இயைந்தவன் என்று எண்ணுங்கால், இருவர்க்கும் இடையே இடையூறாய்க்கிடந்து) வேதனை தருகின்ற அ வில்லையும் நோக்கி, (இவ்வில்வினாலா உன் நலம் பயன்படாது போதல் வேண்டும் என்று இரங்கி) தன் மாதினை நோக்குவான் (ஆகிய ஜனகனது) மனதை (சலிக்கச் செய்யும் இவ்வித எண்ணங்களை எல்லாம் கருதி) நோக்கிய கோதமன் தன் காதலன் (ஆகிய சதானந்தர்) (பின் வருமாறு) கூறல் மேயினான். [போதகம்-யானைக்கன்று, சிங்கக் குட்டி. பொலிவு-வனப்பு].

இது முதல் 24வது செய்யுள்வரையிலும் சதானந்தர் வில்லின் வரலாற்றையும் சீதையின் வரலாற்றையும் கூறுகின்றார்.

12. இமைபவில் வாங்கிய வீசன் பங்குறை
உமையினை யிகழ்ந்தன னென்ன வோங்கிய
கமையறு சினத்தனிக் கார்மு கங்கொளாச்
சமைவுறு தக்கனார் வேள்வி சாரவே.

"(திரிபுர சம்ஹார காலத்தில்) இமையத்தை வில்லாக வாங்கிய ஈசனது பங்கில் உறையும் உமையினை (தக்கன்) இகழ்ந்தனன் என்ன ஓங்கிய கமை அற்ற சினத்தன் (ஆகிய வீரபத்ரன்) இ கார்முகத்தை கொண்டு சமைவுஉற்ற (அந்த) தக்கனார் வேள்வியை சார—[இமையம்-மேருமலை. பங்கு-பாகம். ஓங்கிய-உயர்ந்த. கமை-பொறுமை].

13. உக்கனர் பல்லொடு கரங்க ளோடினர்
புக்கனர் வானவர் புகாத சூழல்கள்
தக்கனல் வேளவியிற் றழலு மாறின
முக்கணெண் டோளவன் முனிவு மாறினான்.

[புகாத சூழல்கள்-இதுவரையில் சென்றிராத இடங்கள். முனிவு—கோடம்]

14. தாளுடை வரிசிலை சம்பு வும்பர்தம்
நாளுடை மையினவர் நடுக்க நோக்கியிக்
கோளுடை விடையவன் குலத்துட் டோன்றிய
வாளுடை யுழவனோர் மன்னன் பால்வைத்தான்.

(சோபம் ஆறிய) சர்பு, உம்பர்தம் நாள் உடைமையின் (அவர்களை அழிக்காமல் அவர்கொண்ட) நடுக்கம் நோக்கி (பின்) இ கோள் உடைய விடை அன்னான் குலத்துள் தோன்றிய வாள்உடைய உழவன் (ஆகு தேவராத அரசன் என்னும்) ஓர் மன்னவன்பால் (இந்த) தாள் உடைய வரி அமைந்த சிலையை வைத்தான். [கோள்-வலி. தாள்-குதை]

15. கார்முக வலியையான் கழறல் வேண்டுமோ
வார்சடை யரனிகர் வரத நீயலால்
யாருள ரறிபவ ரிதற்குத் தோன்றிய
தேர்முக வல்குலாள் செவ்வி கேளென.

வார் சடை (தரித்த) அரனை நிகர்க்கும் வரதனே,—(இந்த) கார்முகத்தின் வலியை யான் கழறல் வேண்டுமோ! (அதை) நீ அல்லால் அறிபவர் யார் உளர்! (இனி) (இவ்வலி கொண்ட வில்லை வளைப்பதான) இதற்கு (இலக்ஷ்யமாக) தோன்றிய (சீதையாகிய) தேர்முகம் போன்ற அல்குலாளது செவ்வியை கேள்," என்று (சதானந்தர் கூறுகின்றார்). [வார்-நீண்ட. அரன்-சிவன். செவ்வி-வரலாறு].

16 இரும்பனைய கருநெடுங்கோட் டிணையேற்றின் பணையேற்ற
பெரும்பியலிற் பளிக்குநுகம் பிணைத்ததனோ டணைத்தீர்க்கும்
வரம்பின்மணிப் பொற்கலப்பை வயிரத்தின் கொழுமடுத்திட்
டுரம்பொருவி னிலம்வேள்விக் கலகில்பல சாலுழுதேம்.

இரும்பு அனைய கரும் நெடும் கோடுகள் உடைய இணை ஏற்றின் பணையை ஏற்ற பெரும் பியலில், பளிங்கு நுகம் (தடி) பிணைத்து, அதனோடு அணைத்து ஈர்க்கும் வரம்பு இல்லாத மணிகள் புதைத்த பொன் கலப்பைக்கு வயிரத்தால் (செய்து) கொழு மடுத்து இட்டு, உரத்தில் (தனக்கு) பொரு இல்லாத நிலத்தை வேள்விக்கு அலகு இல்லாமல் பாலசால் உழுதோம். [கோடு-கொம்பு. இணை ஏறு-இரண்டு எருதுகள். பணை ஏற்ற-பெருமை தங்கிய. பியல்-பிடரி. உரம் பொரு வில்-பலத்தினால் தனக்கு ஒப்பு இல்லாத. அலகு இல்-அளவற்ற].

17. உழுகின்ற கொழுமுகத்தி னுதிக்கின்ற கதிரினொளி
பொழிகின்ற புவிமடந்தை யுருவெளிப்பட் டெனப்புணரி
எழுகின்ற தெள்ளமுதோ டெழுந்தவளு மிழிந்தொதுங்கித்
தொழுகின்ற நன்னலத்துப் பெண்ணரசி தோன்றினாள்.

உதிக்கின்ற கதிரைப்போல் ஒளி பொழிகின்ற புவிமடந்தையின் உரு வெளிப்பட்டது என, புணரியில் எழுகின்ற தெள் அமுதோடு எழுந்தவளும் (ஆகிய இலக்குமியும்) இழிந்து ஒதுங்கி தொழுகின்ற (தன்மையுடைய) நல் நலத்து பெண் அரசி உழுகின்ற கொழுவின் முகத்தில் தோன்றினாள். [கதிர்-சூரியன். புணரி-கடல். இழிந்து-அவமானப்பட்டு].

18. குணங்களை யென் கூறுவது கொம்பினைச்சேர்ந் துய்யப்
பிணங்குவன வழகிவளைத் தவஞ்செய்து பெற்றதுகாண்
கணங்குழையா ளெழுந்ததற்பின் கதிர்வானிற் கங்கையெனும்
அணங்கிழியப் பொலிவழிந்த வாறொத்தார் வேறுற்றார்.

"(அவ்வாறு தோன்றியவளது) குணங்களை கூறுவது என்! அவை (இந்தப் பூம்) கொம்பு போல்வாளை சேர்ந்து உய்ய (நீயோ நானோ முதல் செல்வது என்று ஒன்றோடொன்று தம்முள்) பிணங்குவன. அழகு தவம் செய்து இவளை பெற்றது காண். கணம் குழையாள் (ஆன இச் சீதை) எழுந்ததன்பின் வேறு (பெண்களாய்) உற்றார் (எல்லாம்), கதிர் பொருந்திய வானிலிருந்து கங்கை எனும் அணங்கு இழிய பொலிவு அழிந்த (மற்ற) ஆறுகளை ஒத்தார். [பிணங்குவன-மாறுபடுவன. கணம்-திரண்ட.]

19. சித்திரமிங் கிதுவொப்ப தெங்குண்டு செய்வினையால்
வித்தகமும் விதிவசமும் வெவ்வேறே புறங்கிடப்ப
அத்திருவை யமரர்குல மாதரித்தா ரெனவறிஞ
இத்திருவை நிலவேந்த ரெல்லாருங் காதலித்தார்.

இங்கு, (ஜாநகியின் உருவமாகிய) இதை ஒப்பது (ஆன) சித்திரம் (தான்) எங்கு உண்டு! (திருப்பால்கடல் கடைந்த காலத்தில் தோன்றிய) அ திருவை அமரர்குலம் ஆதரித்தார் என, —அறிஞனே, (தாம் தாம்) செய்த வினையால், (இன்னாருக்கு இன்னார் என்கிற) வித்தகமும் விதிவசமும் வெவ்வேறே புறங்கிடப்ப, நிலம் வேந்தர் எல்லாம் (சீதையாகிய) இ திருவை காதலித்தார். [வித்தகம்-அறிவு. விதிவசம்-ஆதி சங்கற்பம்]

20. கலித்தானைக் கடலோடுங் கைத்தானக் களிற்றரசர்
ஒலித்தானை யெனவந்து மணமொழிந்தார்க் கெதிருடுத்த
புலித்தானைக் களிற்றுரிவைப் போர்வையான்போர்வில்லை
வலித்தானை மங்கைதிரு மணத்தானென் றியாம்வலித்தேம்.

"கலியை உடைய தானைகடலோடும், (துதிக்) கையும் தானமும் பொருந்திய களிறு உடைய அரசர்கள் ஒலித்து ஆனை என வந்து மணம் மொழிந்தார்க்கு— 'புலி (தோலை) தானையாக உடுத்த களிற்று உரிவை போர்வையான் (ஆகிய சிவனது) போர்வில்லை. வலித்தான் (எவனோ அவன் தான்) மங்கை திருமணத்தான்' என்று யாம் எதிர் வலித்தேம். [கலி-வலி. தானம்-மதம். தானை-சேனை, வஸ்திரம். ஒலித்து-ஆரவாரம் செய்து. வலித்தான்-வளைக்கின்றவன். வலித்தேம்-சொன்னோம்.]

21. வல்வில்லுக் காற்றார்கண் மாரவேள் வளைகருப்பின்
மெல்வில்லுக் காற்றாராய்த் தாமெம்மை விளிகுற்றார்
கல்வில்லோ டுலகீய்ந்த கணங்குழையைக் காதலித்துச்
சொல்வில்லா வுலகளிப்பாய் போர்செய்யத் தொடங்கினார்.

"(உன்) சொல் (போன்ற ஒரே) வில்லால் உலகை அளிப்பாய், (ஆகிய இராமா,) (வந்த அரசர்) ஒல் வில்லுக்கு ஆற்றார்கள். (ஆனல்) மாரவேளது வளைந்த கரும்பின் மெல் வில்லுக்கு ஆற்றாராய்-உலகு ஈந்த கணம்குழை (ஆகிய சீதையை) காதலித்து, தாம் எம்மை விளிகுற்று, கல் போன்ற வில்களோடு போர் செய்ய தொடங்கினர். [ஆற்றார்-வலிமையில்லார், சகியார். விளிகுற்று-அழைத்து. கல்-மலை]

22. எம் மன்னன் பெருஞ்சேனை யீவதனை மேற்கொண்ட
செம்மன்னர் புகழ்வேட்ட பொருளேபோற் றேய்ந்ததால்
பொம்மென்ன வண்டலம்பும் புரிகுழலைக் காதலித்த
அம்மன்னர் சேனைதம தாசைபோ லாயிற்றால்.

"(அப்போரில்) எம் மன்னன் (ஆகிய ஜனகனது) பெரும் சேனை, ஈவதை மேல் கொண்ட செம் மன்னர்களது புகழை வேட்ட பொருளே போல தேய்ந்தது. வண்டுகள் பொம் என்ன அலம்பும் புரித்த குழல் உடையவளாகிய சீதையை காதலித்த அ மன்னர்களது சேனை தமது ஆசைபோல் (வளர்வது) ஆயிற்று. [ஈவதை-கொடுப்பதை. வேட்ட-விரும்பிய. அலம்பும்-ஒலிக்கின்ற. புரி-சுருண்ட]

23 மற்காக்கு மணிப்புயத்து மன்னனிவன் மழவிடையோன்
விற்காக்கும் வாளமருள் மெலிகின்றா னெனவிரங்கி
எற்காக்கு முடிவிண்ணோர் படையீந்தா ரெனவேந்தர்
அற்காக்கை கூகையைக்கண் டஞ்சினவா மெனவகன்றார்

"எல்லை காக்கும் முடிகளையுடைய விண்ணோர், மல் (போரை) காக்கும் மணி புயத்து (ஜனகனாகிய) மன்னன் இவன், மழவிடையோன் (ஆகிய சிவனது) வில்லை காக்கும் வாள் அமருள் மெலிகின்றான் என இரங்கி, (அவனுக்கு) படைகளை ஈந்தார் என (கேள்வியுற்று) வேந்தர் அல்லில் காக்கை கூகையை கண்டு அஞ்சின ஆம் என அகன்றார். [எல்-ஒளி. மழவிடை-இளமை பொருந்திய இரஷபம். அல்-இரவு. கூகை-கோட்டான்.]

24. அன்றுமுத லின்றளவு யாருமிந்தச் சிலையருகு
சென்றுமிலர் போயொளித்த தேர்வேந்தர் திரிந்துமிலர்
என்றுமினி மணமுமிலை யென்றிருந்தே மிவனேற்றின்
நன்றுமலர்க் குழற்சீதை நலம்பழுதா காதென்றான்.

[திரிந்தும் இலர்-திரும்பி வந்தவரும் அல்லர். இவன் எற்றின் நன்று-இந்த இராமன் நாண் எற்றின் நன்மையே. நலம் பழுது அகாது-அழகு பயனற்றுப் போகாது.]

25. நினைந்தமுனி பகர்ந்தவெலா நெறியுன்னி யறிவனுந்தன்
புனைந்தசடை முடிதுளக்கிப் போரேற்றின் முகம்பார்த்தான்
வனைந்தனைய திருமேனி வள்ளலுமம் மாதவத்தோன்
நினைந்தவெலா நினைந்தந்த நெடுஞ்சிலையை நோக்கினான்.

நினைந்து அ (சதானந்த) முனி பகர்ந்த எல்லாம், (கேட்டு) அறிவனும் (ஆகிய கௌசிகனும்) (செய்வதற்குத்தகுந்த) நெறியை உன்னி, தன் புனைந்த சடைமுடியை துளக்கி, போரில்ஏறுபோன்ற இராமனின் முகத்தை பார்த்தான். வனைந்த அனைய திருமேனி (வாய்ந்த) வள்ளலும், (அந்த) மாதவத்தோன் நினைந்த எல்லாம் (தானும்) நினைந்து அந்த நெடும் சிலையை நோக்கினான். [புனைந்த-அலங்கரிக்கப்பட்ட. துளக்கி-அசைத்து. ஏறு-ஆண் சிங்கம். வனைந்தனைய-சித்தாத்தில் எழுதியதை ஒத்த]

26. பொழிந்தநெய் யாகுதி வாய்வழி பொங்கி
எழுந்த கொழுங்கன லென்ன வெழுந்தான்
அழிந்தது வில்லென விண்ணவ ரார்த்தார்
மொழிந்தன ராசிகள் முப்பகை வென்றார்.

[ஆர்த்தார்-ஆரவாரித்தார். முப்பகை வென்றார்-காம வெகுளி மயக்கங்களை வென்ற முனிவர்.]

27. தூய தவங்க டொடங்கிய தொல்லோன்
ஏயவன் வல்வி லிறுப்பதன் முன்னம்
சேயிழை மங்கையர் சிந்தைதொ றெய்யா
ஆயிரம் வில்லை யனங்க னிறுத்தான்.

தூய தவங்கள் தொடங்கிய (விச்வாமித்திரனாகிய) தொல்லோனால் ஏயவன் (ஆன இராமன்) (இந்த) வல் வில்லை இறுப்பதன் முன், (இராமனது அழகிற்கு ஈடுபட்ட) சே இழைகளை அணிந்த மங்கையர் சிந்தை தொறும் (புஷ்பபாணங்களை இடைவிடாமல்) எய்து அனங்கள் (தன் கரும்புவில்) ஆயிரம் வில்லை இறுத்தான். [ஏயவன்-ஏவப்பட்டவன். இறுத்தல்-ஒடித்தல். சே இழை-செம்பொன் ஆபாணம்]

28. காணு நெடுஞ்சிலை கால்வலி தென்பார்
நாணுடை நங்கை நலங்கிளர் செங்கேழ்ப்
பாணி யிவன்படர் செங்கை புகாதேல்
வாணுதன் மங்கையும் வாழ்வில ளென்பார்.

(அத்தகையமாதர்களுள் சிலர்) '(நாம்) காணும் நெடும் சிலை கால் வலிது' என்பார். (சிலர்) 'நாண் உடைய நங்கையின் நலம்கிளர்கின்ற செம்கேழ்பாணி இவனது படர்ந்த செம்கை புகாதுஎல், வாள்பொருந்

திய நுதல்உடைய மங்கையும் வாழ்வு இலள், என்பார். [நாண்-நாணம் நலம் கிளர் செம் கேழ் பாணி-அழகு விளங்குகின்ற செந்நிறம் அமைந்த கை. படர்ந்த-அகன்ற. வாள் நுதல்-ஒளிபொருந்திய நெற்றி].

29 கரங்கள் குவித்திரு கண்கள் பனிப்ப
இரங்களி றிச்சிலை யேற்றில னாயின்
நரந்த நறைக்குழ னங்கையு நாமும்
முருங்கெரி யிற்புக மூழ்குது மென்பார்.

(இன்னும் சிலர், தம்தம் இஷ்ட தேவதைகளைத் துதித்து) கரங்களை குவித்து இருகண்கள் நீர் பனிப்ப, இருமை பொருந்திய களிறு (போன்ற இந்த இராமன்) இ சிலையை (நாண்) ஏற்றிலன் ஆயின்— நரந்தத்தின் நறை (கமழும்) குழல் உடைய (சீதையாகிய) நங்கையும் நாமும் முருங்கும் எரியில் புக மூழ்குதும்' என்பார். [இருமை-பெருமை. நரந்தம்-கஸ்தூரி. நறை-வாசனை. முருங்கும்-அழியும்.]

30. வள்ளன் மணத்தை மகிழ்ந்தன னென்றால்
கொள்ளென முன்பு கொடுப்பதை யல்லால்
வெள்ள மணைத்தவன் வில்லை யெடுத்திப்
பிள்ளைமுன் னிட்டது பேதைமை யென்பார்.

(சிலர்), "(சனக மகாராஜனாகிய) வள்ளல் (சீதையின்) மணத்தை (உண்மையில்) மகிழ்ந்தனன் என்றால், (கேட்பதற்கு) முன்பு 'கொள்' என (இராமனுக்கு இவளை) கொடுப்பதை அல்லாமல்—(கங்கையின்) வெள்ளத்தை (தன் சடாபாரத்தில்) அணைத்தவன் (ஆகிய சிவனது) வில்லை எடுத்து இ (சிறு) பிள்ளை முன் இட்டது பேதைமை' என்பார். [மகிழ்ந்தனன்-விரும்பினவன்] (வள்ளல் மணத்தை மகிழ்ந்தனன் என்றால்-வள்ளலாகிய இராமனே சீதையை மணக்க விரும்பினான் என்றால், என்றும் பொருள் கொள்ளலாம். வெள்ளமணைத்தவன்-மதுரையில் புட்டுக்கு மண் சுமந்து வைகையின் வெள்ளத்தைத் தடுத்த சிவன், என்பதும் பொருந்தும்)

31. ஞான முனிக்கொரு நாணிலை யென்பார்
கோனிவ னிற்கொடி யாரிலை யென்பார்
மானவ னிச்சிலை கால்வளை யானேல்
மீன தனத்தவள் பேறில ளென்பார்.

(சிலர்) '(இப்பிள்ளையை ஏவி அவ்வில் லேற்றச்சொல்லுகின்ற) ஞானமுனி (என்று வழங்கும் விச்வாமித்திரனுக்கு) ஒரு நாண் இல்லை என்பார். (சிலர்) '(இவ்வில்லை ஏற்றினால்தான் சீதையைக் கொடுப்பேன் என்கிற ஜனகனாகிய) கோன் இவனில் கொடியார் (வேறு) இல்லை' என்பார். (சிலர்) மானவன் (ஆகிய இராமன்) இ சிலையின்

கால்களை வளையானேல் (பின் சீதை) பீன தனத்தவள் (அன்றி) (தவ) பேறு (பெரிது) இலன்'' என்பார். [நாண்-நாணம், வெட்கம். மானவன்-வீரன். பீனதனத்தவள்-பெரிய முலைகளையுடையவள். பேறு-தவப்பயன்.]

குறிப்பு:—முதலடி, ஸர்வஞ்ஞன பரமசிவனது வில் விற்கு ஒரு நாண் (கயிறு) இல்லாமல் போயிற்றே, என்று அம்மாதர் வில்லையும் நோக்கி நொந்ததாகப் பொருள் படுகின்றது. (முனி-வில்). சீதைக்கு இந்த நாயகன் வாய்க்காமல் போனால் அவள் தனம் பெருத்தவளே யன்றி தவம் பெருத்தவளல்லள் என்று அவளையும் மாதர் ஆசைபற்றி வைவது உலக இயலோடு ஒத்திருக்கும் நயம் பாராட்டத்தக்கது. ஜனகனைக் கொடியோன் என்றவர் கூறுவதும் சீதையின் மீது தமக்குள்ள ஒரு ஆசையாற்றான். ஸத்தியத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பவரும் நிந்தனைக்குச் சிற்சில வேளைகளில் ஆளாகின்றனர்.

32. தோகைய ரின்னன சொல்லிட நல்லோர்
ஓகை விளம்பிட வும்ப ருவப்ப
மாக மடங்கலு மால்விடை யும்பொன்
னாகமு நாகமு நாண நடந்தான்.

தோகையர் இன்னன சொல்லிடவும், நல்லோர் ஓகை (வசனங்கள்) விளம்பிடவும், உம்பர் உவப்பவும், மாகம் (பொருந்திய) மடங்கலும் மால்விடையும் (மேருவாகிய) பொன்நாகமும், நாகமும் நாண, (இராமன் அந்த வில்லை நோக்கி) நடந்தான். [ஓகை-சந்தோஷம். உம்பர்-தேவர். மாகம்-பெருமை. மடங்கல்-சிங்கம். மால்விடை-பெரிய இரஷபம். நாகம்-மலை, யானை.]

குறிப்பு:— இலக்ஷக்கணக்காய்த் தமிழ் பாடியுள்ள வித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள், இச்செய்யுளில் அமைந்துள்ள ஓசை நயம் தம் நூலில் எவ்விடத்திலும் வாய்க்கவில்லை என இரங்குவாராம்.

33. ஆடக மால்வரை யன்னது தன்னைத்
தேடரு மாமணி சீதை யெனும்பொற்
சூடக வால்வளை சூட்டிட நீட்டும்
ஏடவிழ் மாலையி தென்ன வெடுத்தான்.

மால் ஆடகவ்வரை அன்னது (ஆன அந்தவில்) தன்னை, (இராமன்), தேடுவற்கு அரிய மாமணியொத்த சீதை என்னும் பொன் சூடகமும்

வால்வளையும் அணிந்த அவளுக்கு (விவாகத்தில்) சூட்டிஇட நீட்டும் எடு அவிழ்கின்ற மாலை இது என்ன, (எளிதாக) எடுத்தான். [ஆடகம் வரை-பொன்மலை. சூடகம்-கடகம். வால்-வெண்மை. எடு-இதழ்].

34. தடுத்திமை யாம லிருந்தவர் தாளின்
மடுத்தது நாணுதி வைத்தது நோக்கார்
கடுப்பினை யாரு மறிந்திலர் கையால்
எடுத்தது கண்டன ரிற்றது கேட்டார்.

(அப்பொழுது இராமனது ஸாஹஸத்தைக் காணவேண்டி) (இமைப் பதை) தடுத்து இமையாமல் இருந்தவர், (இராமன் வில்லை) கையால் எடுத்தது கண்டனர் (உடனே அது) இற்றது கேட்டார். (அல்லாமல் இவைகளுக்கு இடையில்) தாளில் மடுத்ததையாவது நாணை நுதியில் வைத்ததை யாவது நோக்கார். (அச்செயலின்) கடுப்பினை யாரும் (கருத்தினால் கூட) அறிந்து இலர். [மடுத்தது-மிதித்தது. கடுப்பினை-வேகத்தை. இற்றது-ஒடிந்தது]

35. ஆரிடைப் புகுது நாமென் றமரர்கள் கமலத் தோன் றன்
பேருடை யண்ட கோளம் பிளந்ததென் றேங்கி நைந்தார்
பாரிடை யுற்ற தன்மை பகர்வதென் பாரைத் தாங்கி
வேரிடைக் கிடந்த நாக மிடியென வெருவிற் றன்றே.

(வில்இற்ற ஓசையைக்கேட்டு), கமலத்தோன் (ஆகிய பிரமன்) தன் அண்டகோளம் பிளந்தது என்று ஏங்கி, அமரர்கள் (இனி) ஆர்இடை நாம் புகுதும் என்று நைந்தார். (இந்த) பார் இடையில் (அவ்வோசை யால்) உற்ற தன்மையை பகர்வது என்! பாரை தாங்கி வேர் இடை கிடந்த (ஆதிசேஷனை) நாகம் (இது) இடி என வெருவிற்று. [வேர்இடை-அடியில்]

36. பூமழை சொரிந்தார் விண்ணோர் பொன்மழை பொழிந்த மேகம்
பாமமா கடல்க ளெல்லாம் பன்மணி தூவி யார்த்த
கோமுனிக் கணங்க ளெல்லாங் கூறின வாசி கொற்ற
நாமவேற் சனகற் கின்று நல்வினை பயந்த தென்று.

(அப்பொழுது) கொற்றமும் (பகைவர்க்கு) நாமமும் தருகின்ற வேல் உடைய சனகற்கு இன்று (அவன் செய்துள) நல்வினைபயந்தது என்று, விண்ணோர் பூமழை சொரிந்தார். மேகம் பொன் மழை பொழிந்தன. பாமம் மா கடல்கள் எல்லாம் பல் மணி தூவி ஆர்த்தன. கோமுனி கணங்கள் எல்லாம் ஆசி கூறின. [நாமம்-அச்சம். பாமமாகடல்-பரந்த பெரிய கடல்கள். பயந்தது-பயன் தந்தது].

37. மாலையு மிழையுஞ் சாந்துஞ் சுண்ணமும் வாச நெய்யும்
வேலைவெண் முத்தும் பொன்னுங் காசுநுண் டுகிலும் வீசிப்
பால்வளை வயிர்க ளார்ப்பப் பல்லியந் துவைப்ப முந்நீர்
ஒல்கிளர்ந் துவாவுற் றென்ன வொலிநகர் கிளர்ந்த தன்றே.

முந்நீர் உவா உற்று ஒல் கிளர்ந்தது என்ன—(அம்மிதிலா) நகர், மாலையும் இழையும் சாந்தும் சுண்ணமும் வாசநெய்யும், வேலையில் உண்டான வெண் முத்தும் பொன்னும் காசும் நுண்ணிய துகிலும் (இராமன்வில் முறித்த வதந்தியைக் கூறினோர்க்கெல்லாம்) வீசி, பால் போன்ற வளைகளும் வயிர்களும் ஆர்ப்ப பல் இயம் துவைப்ப, (எங்கும்) ஒலி கிளர்ந்தது. [முந்நீர், வேலை-கடல். வாசநெய்-புழுகு. வளை-சங்கு. வயிர்-கொம்பு. உவா-பூர்ணசந்திரன். பல் இயம்-பல வாத்தியங்கள் ஒல்-ஒலி].

38. நல்லியன் மகர வீணைத் தேனுக நகையுந் தோடும்
வில்லிட வாளும் வீச வேல்கிடந் தனைய நாட்டத்
தெல்லியன் மதியமன்ன முகத்திய ரெழிலி தோன்றச்
சொல்லிய பருவ நோக்குந் தோகையி னாடினாரே.

வேல் கிடந்தனைய நாட்டத்து எல் (காலத்திலும் விளங்கும்) இயல் கூடிய மதியம்அன்ன முகத்தியர், எழிலி தோன்ற சொல்லிய (கார்) பருவம் நோக்கும் தோகைபோல்,—நல் இயல் மகரவீணை (இனிய கீத மாகிய) தேனை உக, (அவர்) நகை (விட்டுவிட்டு) வில் இட, தோடும் (இடைவிடாது) வாள் வீசவும், (நடனம்) ஆடினர். [நாட்டத்து-கண்களையுடைய. எல்-பகல். எழிலி-மேகம். நகை-பல். வில், வாள்-ஒளி.]

39. உண்ணற வருந்தி னாரிற் சிவந்தொளிர் கருங்கண் மாதர்
புண்ணுறு புலவி நீங்கிக் கொழுநரைப் புல்லிக் கொண்டார்
வெண்ணிற மேக மேன்மேல் விரிகடல் பருகு மாபோல்
மண்ணிறை வேந்தன் செல்வம் வறியவர் முகந்து கொண்டார்.

(அறிவை) உண்ணும் நறவை அருந்தினர் போல் (புலவியில்) சிவந்து ஒளிர்கின்ற கரும் கண் மாதர் (மனத்தில்) புண் உறும் புலவி நீங்கி (வில் இறுத்த ஒலிக்குப் பயந்தவர்களாய்த் தம்) கொழுநரை புல்லி கொண்டார். வெண்மை நிறம் (பொருந்திய) மேகம் மேன்மேல் விரிந்த கடல் (நீரை) பருகுமா போல், மண்ணிற்கு இறையான (அந்த ஜனகனது) செல்வத்தை வறியவர் முகந்து கொண்டார். [நறவு-கள்.]

40. வயிரியர் மதுர கீத மங்கைய ரமுத கீதம்
செயிரியர் மகர யாழின் றேம்பிழி தெய்வ கீதம்
பயிரியர் குயிலின் கீத மென்றிவை பருகி விண்ணோர்
உயிருடை யுடம்பெல்லா மோவிய மொப்ப நின்றார்.

வயிரியர்களது மதுரகீதம், மங்கையரது அமுதகீதம், செயிரியர்களது மகரயாழின் தேம்பிழி தெய்வகீதம், பயிரியரது வேயின்கீதம், என்று இவை பருகி விண்ணோர் உயிர் உடைய உடம்பும் எல்லாம் ஓவியம் ஒப்ப நின்றார். [வயிரியர், செயிரியர், பயிரியர்-சாதிப்பெயர்கள். தேம்பிழி-தேன் போன்று இனிமையான. வேய்-புள்ளாங்குழல்.]

41 ஐயன்வில் லிறுத்த வாற்றல் காணிய வமரர் நாட்டுத்
தையலா ரிழிந்து பாரின் மகளிரைத் தழுவிக் கொண்டார்
செய்கையின் வடிவி னாடல் பாடலிற் றெளித றேற்றார்
மையரி நெடுங்க ணோக்க மிமைத்தலு மயங்கி நின்றார்.

(இராமனாகிய) ஐயன் வில்லை இறுத்த ஆற்றலை காண அமரர் நாட்டு தையலார் (வந்து) இழிந்து பாரின் மகளிரை (தம் இனத்தவரென்று எண்ணி) தழுவிக் கொண்டார். செய்கையினாலும் வடிவினாலும் ஆடலினாலும் பாடலினாலும் (மிதிலாநகரமாதர் தெய்வப் பெண்கள் அல்லர் என்று) தெளிதல் தேற்றார். (ஆனால்) மை உண்ட அரிபடர்ந்த நெடும் கண் நோக்கம் இமைத்தலும் (அத்தேவமகளிர், அறியாமல் தழுவினோமே என்று) மயங்கிநின்றார்.

42. தயரதன் புதல்வ னென்பார் தாமரைக் கண்ண னென்பார்
புயலிவன் மேனி யென்பார் பூவையும் பொருவு மென்பார்
மயலுடைத் துலக மென்பார் மானுட னல்ல னென்பார்
கயல்பொரு கடலுள் வைகுங் கடவுளே காணு மென்பார்.

[பூவையும் பொருவும்-காயா மலரையும் ஒக்கும். மயல் உடைத்து உலகம்-உலகம் இவனிடத்து விருப்பமுள்ளது. கயல் பொருகடல்-கயல் மீன்கள் புரள்கிற பாற்கடல்]

43. நம்பியைக் காண நங்கைக் காயிர நயனம் வேண்டும்
கொம்பினைக் காணுந் தோறுங் குரிசிற்கு மன்ன தேயாம்
தம்பியைக் காண்மி னென்பார் தவமுடைத் துலக மென்பார்
இம்பரிந் நகரிற் றந்த முனிவனை யிறைஞ்சு மென்பார்.

[2 வது அடி!—பூங்கொம்பு போன்ற சீதையைப் பார்க்கும் போதெல்லாம் நம்பிக்குத் தடவைக்குத் தடவை ஆயிரம் ஆயிரம் கண்கள் வேண்டும். இம்பர்-இவ்வுலகிலுள்ள. முனிவனை இறைஞ்சும்-விசுவாமித்திரனை வணங்குங்கள்]

44. இற்றிவ னின்ன தாக மதியொடு மெல்லி நீங்கப்
பெற்றுயிர் பின்னுங் காணு மாசையாற் சிறிது பெற்ற
சிற்றிடைப் பெரிய கொங்கைச் சேயரிக் கரிய வாட்கண்
பொற்றொடி மடந்தைக் கப்பா லுற்றது புகல லுற்றாம்.

இவண் இற்று இன்னது ஆக—மதியொடும் எல்லி நீங்கப்பெற்று, (சக்ரவர்த்தி திருமகனை) பின்னும் காணும் ஆசையாலேயே உயிர் சிறிது பெற்ற (அர்த்த) சிறு இடை, பெரிய கொங்கை, சேஅரி படர்ந்த கரிய வாள் போன்ற கண், பொன்தொடி (உடைய சீதையாகிய) மடந்தைக்கு அப்பால் உற்றது புகலல் உற்றும். [எல்லி-இரவு. செ வரி-செவ்வரி]

45. ஊசலா டுயிரி னோடு முருகுபூம் பள்ளி நீங்கிப்
பாசிழை மகளிர் சூழப் போயொரு பளிக்கு மாடக்
காசிறு மரையின் பொய்கைச் சந்திர காந்த மீன்ற
சீதநீர் தெளித்த மென்பூஞ் சேக்கையை யரிதிற் சேர்ந்தாள்.

(போவதும் வருவதுமாகி) ஊஞ்சல் ஆடும் உயிரினோடும் உருகும் பள்ளியை (விட்டு) நீங்கி பாசு இழை (அணிந்த) மகளிர் சூழ போய், காசு இல்லாத தாமரை பொய்கை (நடுவில் உள்ள) ஒரு பளிங்கு மாடத்தில், சந்திரகாந்தம் ஈன்ற சீதம் நீர் தெளித்த மெல் பூ சேக்கையை (சீதை) அரிதில் சேர்ந்தாள். [பாசிழை-பசும் பொன்னால் செய்த ஆபரணம். காசு-குற்றம். சீதம்-குளிர்ந்த. சேக்கை-சயனம்]

46. பெண்ணிவ னுற்ற தென்னும் பெருமையா லருமை யான
வண்ணமு மிலை களாலே காட்டலால் வாட்டந் தீர்ந்தேன்
தண்ணறுங் கமலங் காளென் றளிர்நிற முண்ட கண்ணின்
உண்ணிறங் காட்டி நீரென் னுயிர்தர வுலோவி னீரே.

(அவ்வாறு சேர்ந்த சீதை) "இவண் (வந்து) உற்றது பெண் என்னும் பெருமையால் (இத்தடாகம்) அருமையான (அவ்வரசிளங் குமரனது) வண்ணமும் இலைகளாலே காட்டலால் (சிறிது ஆறுதல் பெற்று) வாட்டம் தீர்ந்தேன். (ஆனால்) தண் நறும் கமலம்காள்! என் (மாந்) தளிர்போன்ற நிறத்தை (பார்வையாலே) உண்ட (அவரது) கண்ணின் உள்நிறம்காட்டி நீர் என் உயிரை தர உலோவினீரே!" [பெருமையால்-பெருந்தன்மையால். உலோவினீரே-லோபம் செய்தீர்களே.] பச்சை இலைகள் இராமபிரானது நிறத்தைக் காட்டின. இன்னும் சூரியன் உதயம் ஆகாததால் குவிந்திருக்கும் தாமரைகள் இராமனது கண்ணின் உள் நிறத்தைக் காட்டாவாயின.

47. நாணுலாவு மேருவோடு நாணுலாவு பாணியும்
தூணுலாவு தோளும் வாளி யோடுலாவு தூணியும்
வாணிலாவி னூலுலாவு மாலைமார்பு மீளவும்
காணலாகு மாகினாவி காணலாகு மேகொலாம்.

நாண் உலாவும் மேருவோடு-இதைக்கண்டு வெட்கம் கொண்ட மேரு மலை போன்ற வில்லும்; நாண் உலாவும் பாணியும்-வில்லின் நாண் கயிறு தங்கிய கையும்; தூண் உலாவும் தோளும்-தூண் போன்ற

தோளும்; வாளியோடு உலாவும் தூணியும்-அம்புகள் நிறைந்த அம்பறாத் தூணியும்; வாள்நிலாவின் நூல் உலாவும் மாலைமார்பும்-ஒளிபொருந்திய நிலா போன்ற முப்புரி நூல் அசைந்தாடுகின்ற மாலை அணிந்த மார்பும்,—(மீண்டும்) (நான்) காணல் ஆகுமாகின் (என்) ஆவியையும் காணல் ஆகுமே!

48. விண்டலங் கலந்திலங்கு திங்களோடு மீதுசூழ்
வண்டலம் பலங்கறங்கு பங்கியோடும் வார்சிலைக் [ஞவியை
கொண்டலொன் றிரண்டுகண்ணின் மொண்டுகொண்டென்
உண்டதுண்டெ னெஞ்சினின்று முண்டதென்று முண்டரோ.

"விண்தலத்தில் கலந்து இலங்கும் திங்களோடும் (அதன்) மீது சூழ்ந்த வண்டுகள் அலம்பும் அலங்கல் தங்கும் பங்கியோடும், வார்சிலையோடும் கொண்டல் ஒன்று (வந்து அதன்) இரண்டு கண்களால் என் ஆவியை மொண்டு கொண்டு உண்டது உண்டு. (அவ்வுருவம்) என் நெஞ்சில் இன்றும் உண்டு. அது என்றும் உண்டு. (ஒருபோதும் நீங்காது)". [பங்கி-சிகை. வார்-நீண்ட]

49 பஞ்சரங்கு தீயினாவி பற்றநீடு கொற்றவில்
வெஞ்சரங்க ணெஞ்சரங்க வெய்யகாம னெய்யவே
சஞ்சலங் கலந்தபோது தையலாரை யுய்யவந்
தஞ்சலஞ்ச லென்கிலாத வாண்மையென்ன வாண்மையோ.

"வெய்ய காமன் (தன்) நீடுகொடுற்ற வில்லால், என் நெஞ்சு அரங்க, பஞ்சை அரங்கும் தீயைப்போல், என் ஆவியை பற்ற வெம் சரங்கள் எய்ய, சஞ்சலம் கலந்தபோது தையலாரை உய்ய வந்து 'அஞ்சல் அஞ்சல்' என்கிலாத ஆண்மை என்ன ஆண்மையோ! [அரங்க-அழிய]

50. இளைக்கலாத கொங்கைகா ளெழுந்துவிம்மி யென்செய்தீர்
முளைக்கலா மதிக்கொழுந்து போலும்வாண் முகத்தினான்
வளைக்கலாத விற்கையாளி வள்ளன்மார்பி னுள்ளுறத்
திளைக்கலாகு மாகிலான செய்தவங்கள் செய்மினே.

"(திருமகனை நினைக்க நினைக்க) இளைக்கலாத கொங்கைகாள்! (நீங்கள்) எழுந்து விம்மி என் செய்தீர், (ஒருபயனும் அடையவில்லை). முளைக்கின்ற கலைகள் நிறைந்த மதிக்கொழுந்து போலும் வாள் பொருந்திய முகத்தினனும் (ஒருவராலும்) வளைக்கலாத வில்லை கையில் பிடித்த ஆளி போன்றவனும் ஆகிய (அந்த) வள்ளலது மார்பினுள் உற (நீங்கள்) திளைக்கல் ஆகும் (பயன் உங்களுக்கு வேண்டும்) ஆகில் (அதற்கு) ஆன செய்யும் தவங்களை செய்மின்!" [ஆளி-சிங்கம். திளைக்கல்-ஆழ்ந்து அனுபவித்தல்]

51. எங்குநின் றெழுந்ததிந்த விந்துவந்தெ னெஞ்சுலா
அங்கியன் றனங்க னெய்த வம்பின்வந்த சிந்தைநோய்
பொங்குகின்ற கொங்கைமேல் விடம்பொழிந்த தென்னினும்
கங்குல்வந்த திங்களன் றகங்களங்க மில்லையே.

“(இந்நாள்வரை) எங்கு நின்று (இப்பொழுது) வந்து இந்த இந்து எழுந்தது! (அது) என் நெஞ்சில் உலாவி அங்கு இயன்று அனங்கன் எய்த அம்பினால் வந்த சிந்தைநோயால் பொங்குகின்ற கொங்கைமேல் (பார்வையாகிய) விடம் பொழிந்தது என்னினும் (நேற்று) கங்குலில் வந்த திங்கள் அன்று. (ஏனெனில் இதன்) அகத்தில் களங்கம் இல்லையே.” [இந்து-சந்திரன். இயன்று-தங்கி]

குறிப்பு:—இது இராமனது முகத்தைக் கருதிக் கூறியதாகக் கொள்ளல் வேண்டும். மேல் 48 வது செய்யுளில் சீதை இராமனது முகத்தை மதியாகக் கொண்டதும், மிதிலைக் காட்சிப் படலம் 35 வது செய்யுளில் வீரனது செங்கண் சீதையின் தனத்தில் தைத்ததாகக் கூறப்பட்டிருப்பதும் இவ்வாறு பொருள் கொள்வதற்கு ஆதாரம் ஆகின்றன. சூரியனை நோக்கி இவ் வார்த்தைகள் சீதை சொன்னதாகக் கொள்வது பொருந்தாது. செய்யுளும் இடம் கொடுக்கவில்லை.

52. அடர்ந்துவந் தனங்கனெஞ் சழன்றுசிந்து மம்பெனும்
விடங்குடைந்த மெய்யினின்று வெந்திடா தெழுந்துவெங்
கடந்துதைந்த காரியானை யன்னகாளை தாளடைந்
துடன்றொடர்ந்து போனவாவி வந்தவாறென் னுள்ளமே.

“உள்ளமே, அனங்கன் அடர்ந்து வந்து நெஞ்சு அழன்று சிந்தும் அம்பு எனும் விஷத்தில் குடைந்த (என்) மெய்யில் வெந்து இடாது நின்று எழுந்து வெம் கடம் துதைந்த கார்யானை அன்ன (அவ்வரச குமாரனை) காளைப் பருவத்தவனது (மண்வழி நடந்து அடிவருந்தப் போன) தாள்களை அடைந்து (அவைகளுடன்) தொடர்ந்து போன (எனது) ஆவி (அங்கேயே தங்கிவிடாமல், திரும்பி) வந்த ஆறு என்ன! [அடர்ந்து-நெருங்கி. அழன்று-கொதித்து. குடைந்த-முழுகின. வெம்கடம் துதைந்த-வெவ்விய மதம் செறிந்த]

53. விண்ணுளே யெழுந்தமேக மார்பினூலின் மின்னொடும்
மண்ணுளே யிழிந்ததென்ன வந்துபோன மைந்தனார்
எண்ணுளே யிருந்தபோதும் யாவரென்று தேர்கிலென்
கண்ணுளே யிருந்தபோது மென்கொல்காண்கி லாதவே.

“விண் உள் எழுந்த மேகம் மார்பில் (தரித்த) நூல் ஆகிய மின் ஒடு இ மண் உள்ளே இழிந்தது என்ன (கன்னிமாடத்தருகு) வந்து போன

மைந்தனூர்—(என்) எண்ணத்தினுள் இருந்தபோதும் யாவர் என்று தேர்கிலேன். (என்) கண்ணினுள்ளே இருந்தபோதும் காண்கிலாதது என் கொல்!''

54. பெய்கடற் பிறந்தயற் பெறற்கொணு மருந்துபெற்
றையபொற் கலத்தொடங்கை விட்டிருந்த வாதர்போல்
மொய்கிடக்கு மண்ணலேோண் முயங்கிடாது முன்னமே
கைகடக்க விட்டிருந்து கட்டுரைப்ப தென்கொலோ.

(இந்திரனது செல்வங்களெல்லாம் தூர்வாச முனிவர் சாபத்தால்) பெய்த (பால்) கடலில் பிறந்து அயலில் (எங்கும்) பெறற்கு ஒண்ணாத மருந்தை (எளிதில்) பெற்று, ஐய! (அதை உண்டனுபவியாமல்) பொன் கலத்தோடு அகம்கை விட்டு இருந்த ஆதர்களைப்போல், மொய் கிடக்கும் அண்ணலுடைய தோள்களை முயங்கிடாது முன்னமே கை கடக்கவிட்டு இருந்து (இப்பொழுது) கட்டு உரைப்பது என்ன (மதியீனம்) கொல்! [மருந்து-அமிர்தம். ஆதர்-அறிவில்லாதவர். மொய்-வலி. முயங்கிடாது-தழுவாமல். கட்டுரைப்பது-புலப்புவது]

55. என்றுகொண்டு ணைந்துநைந் திரங்கிவிம்மி விம்மியே
பொன்றிணிந்தகொங்கைமங்கையிடரின்மூழ்குபோழ்தின்வாய்க்
குன்றமன்ன சிலைமுரிந்த கொள்கைகொண்டு குளிர்மனத்
தொன்றுமுண்கண் மதிமுகத் தொருத்திசெய்த துரைசெய்வாம்.

பொன் திணிந்த கொங்கைகளுடைய (சீதையாகிய) மங்கை, (மேல் கூறியவாறெல்லாம்) என்று, (தன் மனத்தின்) உள் (இராமனது திருவுருவத்தை) கொண்டு, நைந்து நைந்து இரங்கி விம்மி விம்மி, இடரில் மூழ்கும் போழ்தில்—குன்றம் அன்ன சிலை முரிந்த கொள்கையை கொண்டு குளிர்ந்த மனத்தோடு ஒன்றும் (மை) உண்ட கண்களும் மதி போன்ற முகமும் (உடைய) ஒருத்தி செய்ததை உரை செய்வாம். [பொன்-சுணங்கு, தேமல். இடர்-துன்பம். கொள்கை-செய்தி. ஒன்றும்-பொருந்தும்].

56. வடங்களுங் குழைகளும் வான வில்லிடத்
தொடர்ந்தபூங் கலைகளுங் குழலுஞ் சோரதர
நுடங்கிய மின்னென நொய்தி னெய்தினுள்
நெடுந்தடங் கிடந்தகண் ணீல மாலையே.

நெடும் தடம் கிடந்த கண்கள் உடைய நீலமாலை (என்னும் சேடி), வடம்களும் குழைகளும் வானம் வில்லை (போல் பலவர்ணங்கள் பிரகாசித்து) இடவும், தொடர்ந்த பூம் கலைகளும் குழலும் சோரவும், நுடங்கிய மின் என நொய்தின் எய்தினுள். [தடம்கிடந்த-விசாலமான. பூம்-அழகிய. கலை-வஸ்திரம், மேகலை. நுடங்கிய-துவளுகின்ற. நொய்தின்-விரைவாக].

57. வந்தடி வணங்கிலள் வழங்கு மோதையள்
அந்தமி லுவகைய ளாடிப் பாடினள்
சிந்தையுண் மகிழ்ச்சியும் புகுந்த செய்கையும்
சுந்தரி சொல்லெனத் தொழுது சொல்லுவாள்.

(அந்த நீலமாலை) வந்து (சீதையை) அடி வணங்கிலள். (ஆனால்) வழங்கும் ஓதையளாய் அந்தம் இல்லாத உவகையளாய் ஆடி பாடினள். (அதைக்கண்ட சீதை அவளை நோக்கி) சுந்தரியே, "(உன்) சிந்தையுள் மகிழ்ச்சியும் (அதற்குக் காரணமாய்) புகுந்த செய்கையும் (என்ன வென்று) சொல்" என, (அவள்) தொழுது சொல்லுவாள்.

58. கயரத துரகமாக் கடலன் கல்வியன்
தயரத னெனும்பெயர்த் தனிச்செ னேமியான்
புயல்பொழி தடக்கையான் புதல்வன் பூங்கணை
மயல்விளை மதனற்கும் வடிவின் மேன்மையான்.

"கயம் ரதம் துரகம் (ஆகிய) மா கடலன். கல்வியன். தயரதன் என்னும் பெயர் உடைய (பொதுக்கடிந்து உலகம் எங்கும்) தனியே செல்லும் நேமியான் (ஆகிய) புயல்போல் (கைம்மாறு வேண்டாது கேட்டவர்களுக்குக் கேட்டதை) பொழியும் தடம் கையானது புதல்வன். பூ கணையால் மயல் விளக்கும் மதனற்கும் வடிவில் மேன்மையான் [கயம்-யானை. துரகம்-குதிரை. மா, தடம்-பெரிய. நேமி-ஆக்ஞாசக்ரம். மயல்-காமமயக்கம்].

59. மராமர மிவையென வளர்ந்த தோளினன்
அராவணை யமலனென் றயிர்க்கு மாற்றலான்
இராமனென் பதுபெய ரிளைய கோவொடும்
பராவரு முனியொடும் பதிவந் தெய்தினன்.

[2-வது அடி. சர்ப்பசயனத்தையுடைய திருமால் என்று சந்தேகிக்கும் வலியை உடையவன். இளையகோ-தம்பி. பராவருமுனி-யாவரும் துதித்தற்குரிய விசுவாமித்திரமுனி. பதி-நகரம்].

60. பூணியன் மொய்ம்பினன் புனித னெய்தவில்
காணிய வந்தன னென்னக் காவலன்
ஆணையி னடைந்தவில் லதனை யாண்டகை
நாணினி தேற்றின னடுங்கிற் றும்பரே.

"(முனிவன்), பூண்கள் இயன்ற மொய்ம்பினன் (ஆகிய இராமன்), புனிதன் (ஆகிய சிவன் முன் காலத்தில்) எய்த வில்லை காண வந்தனன்' என்ன, (நம் சனகனாகிய) காவலனது ஆணையினால் (இராச சபை) அடைந்த வில்லதனை ஆண்தகை நாண் இனிது எற்றினான்; உம்பர்

நடுங்கிற்று.'' [பூண்-ஆபரணம். மொய்ம்பு-தோள். ஆண்தகை-புருஷோத்தமன். உம்பர்-மேலுலகம்].

61. மாத்திரை யளவிற்றாண் மடுத்து முன்பயில்
சூத்திர மிதுவெனத் தோளின் வாங்கினான்
ஏத்தின ரிமையவ ரிழிந்த பூமழை
வேத்தவை நடுக்குற முறிந்து வீழ்ந்ததே.

"மாத்திரை அளவில் தாளால் மடுத்து, முன் (தான்) பயின்ற சூத்திரம் இது என (கண்டோர் சொல்லும்படி) தோளில் வாங்கினான். (அப்பொழுது) இமையவர் ஏத்தினர், பூமழை இழிந்தது. வேந்து அவை நடுக்கு உற (அவ்வில்) முறிந்து வீழ்ந்தது.'' [மாத்திரை-ஒரு நொடி. மடுத்து-மிதித்து. சூத்திரம்-உபாயம். ஏத்தினர்-புகழ்ந்தனர். வேத்தவை-ராஜசபை].

62. கோமுனி யுடன்வரு கொண்ட லென்றபின்
தாமரைக் கண்ணனா னென்ற தன்மையால்
ஆமவ னேகொலென் றைய நீங்கினாள்
வாமமே கலையினுள் வளர்ந்த தல்குலே.

(இவ்வாறு நீலமாலை சொல்லி முடிந்ததும்) (சீதை), 'கோமுனியுடன் வரும் கொண்டல் என்றபின், தாமரை கண்ணினான் என்ற தன்மையால்-ஆம்-(யான் கன்னிமாடத்திற்கு எதிரில் கண்ட) அவனே-(வில்லை முறித்த இவன்)' என்று ஐயம் நீங்கினாள். (அப்பொழுது வேட்கையால் பூரித்த) அல்குல் வாமம் மேகலையினுள் வளர்ந்தது. [கோமுனி-ராஜரிஷி. கொண்டல்-மேகம். வாமம்-அழகிய].

குறிப்பு :—நீலமாலை, முனியுடன் வந்தவன் என்றாளேயன்றிக் கொண்டல் என்று குறிக்கவில்லை. 'தாமரைக் கண்ணினான்' என்பதும் அவள் குறிப்பிட்ட அடையாளமன்று. நமது இச்சையை ஸ்தாபிக்கச் சாட்சிகள் சிருஷ்டித்துக் கொள்வது சகஜம்.

63. இல்லையே நுசுப்பென்ப ருண்டுண் டென்னவும்
மெல்லியன் முலைகளும் விம்ம விம்முவாள்
சொல்லிய குறியினத் தோன்ற லேயவன்
அல்லனே லிறப்பனென் றகத்து ளுன்னினாள்.

(காட்சிப்பிரமாணத்தால் இவளுக்கு) 'நுசுப்பு இல்லையே' என்பவர், (இல்லாவிட்டால் இம்முலைகளை எது தாங்கும் என அனுமானப் பிரமாணத்தால்) 'உண்டு உண்டு' என்னவும், மெல் இயல் உடைய முலைகளும் விம்ம விம்முவாள் (ஆன சீதை), (நீலமாலை) சொல்லிய குறியி

ஞல் (அவன்) அ தோன்றலே! அல்லனேல், (நான்) இறப்பன்' என்று அகத்துள் உன்னினுள். [விம்ம-பூரிக்க.]

64. ஆசையுற் றயர்பவ ளன்ன ளாயினள்
பாசடைக் கமலத்தோன் படைத்த வில்லிறும்
ஓசையிற் பெரியதோ ருவகை யெய்தியக்
கோசிகற் கொருமொழி சனகன் கூறுவான்.

(இராமன் மேல்) ஆசை உற்று அயர்பவள் அன்னள் ஆயினள். பாசு அடைகள் உடைய கமலத்தோன் (ஆகிய பிரமன்) படைத்த வில் இறும் ஓசையினும் பெரிது (ஆன) ஓர் உவகை எய்தி, சனகன், அ கோசிகற்கு ஒரு மொழி கூறுவான். [பாசடை-பசிய இலை, உவகை-சந்தோஷம்.]

65. உரைசெயெம் பெருமவுன் புதல்வன் வேள்விதான்
விரைவினின் றொருபகன் முடித்தல் வேட்கையோ
முரைசெறிந் ததிர்கழன் முழங்கு தானையவ்
வரைசையு மிவ்வழி யழைத்தல் வேட்கையோ.

பெருமானே, (இனி) உன் புதல்வன் (போன்ற இந்த இராமனது) வேள்வியைத்தான் விரைவில் இன்று ஒரு பகலே முடித்தல் உனக்கு வேட்கையோ? (அல்லது) முரசு எறிந்து, அதிர்கின்ற கழல்கள் முழங்கும் தானையோடு அ (தசரத) அரசையும் இ வழி அழைத்தல் (பின் மணமுடித்தல்) வேட்கையோ? உரை செய்." (என்றனன் சனகன்). [வேள்வி-கலியாணம். இன்றொருபகல்-இன்றையத்தினமே. வேட்கையோ-இஷ்டமோ. தானை-சேனை].

66. மல்வலா னவ்வுரை பகர மாதவன்
ஒல்லையி லவனும்வந் துறுத னன்றென
எல்லையி லுவகையா னியைந்த வாறெலாம்
சொல்லுகென் றோலையுந் தூதும் போக்கினுன்.

மல் (போர்) வல்லான் (ஆகிய சனகன்) அ உரை பகர, (கேட்ட) மாதவன் (ஆகிய கௌசிகன்) 'ஒல்லையில் அவனும் (இவ்விடம்) வந்து உறுதல் நன்று' என, எல்லை இல்லாத உவகையான் (ஆன சனகன்) (இவ்விடம்) இயைந்த ஆறு எல்லாம் (போய்) சொல்லுக' என்று, ஓலையும் தூதும் (தயாதன்பால்) போக்கினுன். [ஒல்லையில்-விரைவில் இயைந்த-நேர்ந்த. ஓலை-திருமுகம்.]

14. எழுச்சிப் படலம்.

தயரதன் தனது பரிவாரங்களுடன் மிதிலைக்குப் பயணப்படுவதைக் கூறுகின்ற படலம்.

1. கடுகிய தூதருங் காலிற் காலிற்சென்
றிடிகுரன் முரசதி ரயோத்தி யெய்தினர்
அடியிணை தொழுவிட மின்றி மன்னர்தம்
முடியொடு முடிபொரு வாயின் முன்னினர்.

[கடுகிய-விரைந்து சென்ற. கால்-காற்று.]

2. முகந்தனர் திருவருண் முறையி னெய்தினர்
திகழ்ந்தொளிர் கழலிணை தொழுது செல்வனைப்
புகழ்ந்தன ரரசநின் புதல்வர் போயபின்
நிகழ்ந்ததை யிதுவென நெடிது கூறினர்.

[1வது அடி:— உள்ளே செல்ல உத்தரவு பெற்று, தாம் செல்ல வேண்டிய முறைமைப்படி போய்.]

3. கூறியதூதருங் கொணர்ந்த வோலையை
ஈறில்வண் புகழின யிதுவ தென்றனர்
வேறொரு புலமகன் விரும்பி வாங்கினன்
மாறதிர் கழலினன் வாசி யென்றனன்.

[மாறதிர்-மாறிமாறி அதிர்கின்ற.]

4. இலைமுகப் படத்தவ ரெழுதிக் காட்டிய
தலைமகன் சிலைத்தொழில் செவியிற் சார்தலும்
நிலைமுக வலயங்க ணிமிர்ந்து நீங்கிட
மலையென வளர்ந்தன வயிரத் தோள்களே.

[இலைமுகப்படத்து-ஓலையின் மேர்புறமாகிய படத்தில், சிலைத்தொழில்-வில்லாண்மை, நிலைமுக-நிலைத்த இடம் பெற்ற, நிமிர்ந்து நீங்கிட- வளைவுதீர்ந்து கழல.]

5. வெற்றிவேன் மன்னவன் றக்கன் வேள்வியில்
கற்றைவார் சடைமுடிக் கணிச்சி வானவன்
முற்றவே மூலகையும் வென்ற மூரிவில்
இற்றபே ரொலிகொலோ விடித்த தீங்கென்றான்.

[தக்கன் வேள்வி-தக்ஷன் செய்த யாகத்தில். வார்-நீண்ட. கணிச்சி-மழுவையுடையவன். மூரி-வலிய.]

6. என்றுரைத் தெதிரெதி ரிடைவி டாதுநேர்
துன்றிய கனைகழல் தூதர் கொள்கெனப்
பொன்திணி கலன்களுந் தூசும் போக்கினான்
குன்றென வுயரிய குவவுத் தோளினான்.

[தூசு-வஸ்திரம். குவவு-திரண்ட. கலன்-ஆபரணம்.]

7. வானவன் குலத்தெமர் வரத்தி னல்வரும்
வேனில்வே ளிருந்தவம் மிதிலை நோக்கிநம்
சேனையு மரசருஞ் செல்க முந்தென
ஆனைமே லணிமுர சறைகென் றேவினான்.

[1வது அடி:—சூரியகுலத்து எம் முன்னோர் பெற்ற வரத்தினால் அவதரித்த. வேனில்வேள்-மன்மதன்போன்ற இராமன்.]

8. வாம்பரி விரிதிரைக் கடலை வள்ளுவன்
தேம்பொழி துழாய்முடிச் செங்கண் மாலவன்
ஆம்பரி சுலகெலா மளந்து கொண்டநாள்
சாம்புவன் றிரிந்தெனத் திரிந்து சாற்றினான்.

(மாவலியிடம் மண் வேண்டித் தாவித் தாவி) தேம் பொழிகின்ற துழாய் முடி யுடைய செம் கண் மால், உலகு எலாம் அளந்து கொண்ட நாள் ஆகும்பரிசு—வள்ளுவனும், தாவும் பரிகளாகிய விரிந்த திரைகளையுடைய(சேனை) கடலை (இராமனுக்குக் கலியாணம் என்னும் உற்சாகத்தால் தாவித் தாவி) திரிந்து, சாம்பு, அன்று (அடிக்கும் தீவிரத்தால்) இரிந்துஎன, சாற்றினான். [தேம்-தேன், வள்ளுவன்-பறையறைபவன். வாம்பரிவிரிதிரைக்கடல்-தாவுகின்ற குதிரைகளாகிய விரிந்த அலைகளையுடைய கடல்போன்ற சேனை. பரிசு-விதம், வண்ணம். சாம்பு-பறை. இரிந்துஎன-உடைந்துபோகும்படி.]

9. சாற்றிய முரசொலி செவியிற் சாருமுன்
கோற்றொடி மகளிருங் கோல மைந்தரும்
வேற்றரு குமரரும் வென்றி வேந்தரும்
காற்றெறி கடலெனக் களிப்பி னேங்கினார்.

[கோல் தொடி-வளைவாகிய வளையல் அணிந்த. கோல மைந்தர்-அவர்களது அழகிய கணவர். வேல்தருகுமரர்-வேலை உபயோகிக்கும் இராச குமாரர். காற்றுஎறிகடல்-காற்றினால் அலைவீசுகின்றகடல்].

10. விடைபொரு நடையினான் சேனை வெள்ளமோர்
இடையிலை யுலகினி லென்ன வீண்டியக்
கடையுக முடிவினி லெவையுங் கால்படப்
புடைபெயர் கடலென வெழுந்து போயதே.

[விடை பொரு நடையினான்-இரஷபத்தை நடையில் ஒக்கும் தயரதன். ஈண்டி-நெருங்கி. கால்பட-சண்டமாருதத்தால் அழிய].

11. சில்லிட முலகெனச் செறிந்த தேர்கடாம்
புல்லிடு சுடரெனப் பொலிந்த வேந்தரால்
எல்லிடு கதிர்மணி யெறிக்கு மோடையால்
வில்லிடு முகிலெனப் பொலிந்த வேழமே.

(இந்த) உலகம் சில் இடம் (உடைத்து) எனும்படி செறிந்த தேர்கள், தம்மை புல்லிடும் வேந்தரால் சுடர் என பொலிந்தன. எல் இடும் கதிர்மணி எறிக்கும் ஓடையால் (வான) வில்லை இடும் முகிலென வேழங்கள் பொலிந்தன. [சில் இடம்-சிறிதிடம் புல்லிடும்-பற்றியிருக்கும். சுடர்-சூரியன். எல்-ஒளி. ஓடை-முகபடாம்].

12. கால்விரிந் தெழுகுடை கணக்கி லோதிமம்
பால்விரிந் ததுவெனப் பறப்ப போன்றன
மேல்விரிந் தெழுகொடிப் படலை விண்ணெலாம்
தோலுரிந் துகுவன போன்று தோன்றுமால்.

காலில் (இருந்து) விரிந்து எழும் (வெண்) குடைகள், கணக்கு இல்லா ஓதிமம், பால் விரிந்தது என, பறப்பன போன்றன. மேல் விரிந்து எழும் கொடிபடலை விண் எலாம் தோல் உரிந்து உகுவன போன்று தோன்றும். [ஓதிமம்-அன்னம். படல்-திரள்].

13. நுடங்கிய துகிற்கொடி நுழைக் கைம்மலைக்
கடங்கலுழ் சேனையைக் கடலி தாமென
இடம்பட வெங்கணு மெழுந்த வெண்முகில்
தடம்புனல் பருகிடத் தாழ்வ போன்றவே.

நுடங்கிய துகில் கொடிகள்--நுழைபொருந்திய கைம்மலைகள் கடம் கலுழும் சேனையை 'இது கடல் ஆம்' என, இடம்பட வெண்முகில் எங்கணும் எழுந்து, தடம்புனலை பருகிட தாழ்வன போன்றன. [நுழை-துவாரம். கைம்மலை-யானை. கடம் கலுழும்-மதம் ஒழுகும். இடம்பட-விசாலமாக. தடம் புனலை-பெரிய நீரை].

14. இழையிடை யிளவெயி லெறிக்கு மவ்வெயில்
தழையிடை நிழல்கெடத் தவழு மத்தழை
மழையிடை யெழில்கெட மலரு மம்மழை
குழைவுற முழங்கிடுங் குழாங்கொள் பேரியே.

இழைகளில் இளம் வெயில் எறிக்கும். அ வெயில் தழைகள் இட்ட நிழல் கெட தவழும். அ தழைகள் மழையின் எழில் கெட மலரும். அ மழைகள் குழைவு உற குழாம்கொள் பேரிகள் முழங்கிடும். [இழை-ஆபரணம். தழை-பீலிக்குஞ்சக்குடை. மழை-மேகம். எழில்-அழகு. குழைவுற-சிதைய. குழாம் கொள்-கூட்டமாக இருக்கும்].

15. மன்னணிப் புரவிகண் மகளி ரூர்வன
அன்னமுந் தியதிரை யாறு போன்றன
பொன்னணி புணர்முலைப் புரிமென் கூந்தலார்
மின்னென மடப்பிடி மேகம் போன்றவே.

மகளிர் ஊர்வன ஆகிய மன் அணிகளை உடைய புரவிகள், அன்னங்களை உந்திய திரைகளையுடைய ஆறு போன்றன: பொன் (ஆபரணங்களை) அணிந்த புணர்ந்த முலைகளையும் புரித்த மெல்லிய கூந்தலையும் உடைய மாதர் மின் என (அவர்கள் ஊரும்) மட பிடிகள் மேகம் போன்றன. [மன்-மிகுந்த. உந்திய-செலுத்திய. புரிந்த-சுருண்ட. மடப்பிடி-இளம் பெண் யானை].

16. இணையடுத் திடையிடை நெருக்க வேழையர்
துணைமுலைக் குங்குமச் சுவடு மாடவர்
மணிவரைப் புயத்துமென் சாந்து மாழ்கிமெல்
அணையெனப் பொலிந்ததக் கடல்செ லாறரோ.

அ (சேனை) கடல் செல்லும் ஆறு— (முலையும் தோள்களும்) இணையாக அடுத்து இடைஇடைநெருக்க, ஏழையர்களது துணைமுலை (இல் அணிந்த) குங்கும சுவடும் ஆடவர் மணிவரை போன்ற புயத்து (அணிந்த)மெல் சாந்தும் மாழ்கி, மெல்லிய அணையென பொலிந்தது. [ஏழையர்-மாதர். மணிவரை-அழகிய மலை. மாழ்கி-உதிர்ந்து, கலந்து. அணை-படுக்கை. ஆறு-வழி].

17. முத்தினுன் முழுநிலா வெறிக்கு மொய்ம்மணிப்
பத்தியா விளவெயில் பரப்பும் பாகினும்
தித்தியா நின்றசொற் சிவந்த வாய்ச்சியர்
உத்தரா சங்கமிட் டொளிக்குங் கூற்றமே.

(சர்க்கரை) பாகினும் தித்திக்கின்ற சொறகள் (பேசும்) சிவந்த வாய்ச்சியர்களான மாதர்களது உத்தராசங்கம் இட்டு ஒளிக்கும் கூற்றம்

(ஆகிய முலைகள்), (அவை அணிந்த) முத்தினால் முழுநிலா எறிக்கும். மொய்த்த மணிகளின் பத்தியால் இளம் வெயில் பரப்பும். [உத்தரா சங்கம்-மேலாடை. கூற்றம்-எமன். மொய்த்த-நெருங்கின. பத்தி-வரிசை].

18. வில்லினர் வாளினர் வெறித்த குஞ்சியர்
கல்லினைப் பழித்துயர் கனகத் தோளினர்
வல்லியின் மருங்கினர் மருங்கு மாப்பிடி
புல்லிய களிறென மைந்தர் போயினர்.

வில்லினர் வாளினர் வெறித்த குஞ்சியர் கல்லை பழித்து உயர்ந்த கனகம்போன்ற தோளினர் (ஆகிய) மைந்தர், வல்லிக்கொடிபோல் மருங்கினர் (ஆனமாதர்) மருங்கு மா பிடியை புல்லிய களிறு என போயினர். [வெறித்த-வாசனை வீசும். குஞ்சி-சிகை. கல்-மலை. மருங்கு-இடை, பக்கத்தில்]

19. மன்றலம் புதுமலர் மழையிற் சூழ்ந்தெனத்
துன்றிருங் கூந்தலார் முகங்க டோன்றலால்
ஒன்றலா முழுமதி யூர்வி மானம்போல்
சென்றன வாலவர் சிவிகை யீட்டமே.

மன்றல் (பொருந்திய) அம் புது மலர் மழையில் சூழ்ந்தென—துன்றும் இரும் கூந்தலார் (ஆகிய மாதர்களின்) முகங்கள் தோன்றலால் அவர் (செல்லும்) சிவிகை ஈட்டம், ஒன்று அல்லாத (பல) முழு மதிகள் ஊரும் விமானம்போல் சென்றன. [மன்றல்-வாசனை. மழை-மேகம். துன்றிரும்-நெருங்கிய பெரிய. சிவிகை-பல்லக்கு.]

20. மொய்திரைக் கடலென முழங்கு மூக்குடைக்
கைகளிற் றிசைநிலைக் களிற்றை யாய்வன
மையலுற் றிழிமத மழைய றாமையால்
தொய்யலைக் கடந்தில சூழி யானையே.

சூழி அணிந்த யானைகள், மையல் உற்று இழிகின்ற மதமழை அறாமையால் (அதனால் ஆன) தொய்யலை கடந்திலவாய், (அவை காலாழ்ந்து நின்று தம் துதிக்கைகளை நீட்டி அசைத்ததால்) மொய்த்த திரைகளுடைய கடல் என முழங்கும் மூக்கை உடைய (துதி) கைகளால் திசைகளில் நிலைத்திருக்கும் களிற்றை (போர் செய்ய) ஆய்வன, (போன்றன) [சூழி-முகபடாம். மையல்-மதம். அறாமையால்-நீங்காமையால். தொய்யல்-சேறு. மொய்த்த-நெருங்கிய. திசைநிலைக்களிறு-திக்கு யானைகள்

21. சூருடை நிலையெனத் தோய்ந்துந் தோய்கிலா
வாருடை வனமுலை மகளிர் சிந்தைபோல்
தாரொடுஞ் சதியொடுந் தாவு மாயினும்
பாரிடை மிதிக்கில பரியின் பந்தியே.

பரியின் பந்திகள்—தோய்ந்தும் (மனம்) தோய்கிலாத, வார் (கட்டிய) வனம் முலை மகளிர் (ஆகிய விலைமாதரது) சிந்தைபோல்,—தாரொடும் சதியொடும் தாவும் ஆயினும் (நிலத்தில் கால்படாத) சூர் உடைய நிலை யென பார் இடை மிதிக்கில. [சதி-தாளவொத்து. சூர்-தெய்வம்]

குறிப்பு :—திருவள்ளுவர் வரைவின் மகளிரை இருமனப் பெண்டிர் என்று கூறுவதின் கருத்து இச்செய்யுளில் எடுத்தாளப்பட்டிருக்கின்றது.

22. ஊடிய மனத்தினர் உறுத நோக்கினர்
நீடிய வுயிர்ப்பினர் நெறித்த நெற்றியர்
தோடவிழ் கோதையுந் துறந்த கூந்தலார்
ஆடவ ருயிரென வருகு போயினார்.

[உறுத நோக்கினர்-ஏறெடுத்துப் பார்க்காதவர். தோடு-இதழ்: கோதை-பூமாலை.]

23. மாறெனத் தடங்களைப் பொருது மாமரம்
ஊறுபட் டிடைவிடை யொடித்துச் சாய்த்துராய்
ஆறெனச் சென்றன வருவி பாய்கவுட்
டாறெனக் கனலுமிழ் தறுகண் யானையே.

(பாகன்) 'தாறு' (எடுக்கின்றேன் பார்)' என, (கோபத்தால்) (மலை) அருவிபோல் (மதம்) பாய் கவுள்களினின்று கனலை உமிழும் தறுகண் உடைய யானைகள்—(தமக்கு) மாறு என (கருதி) தடங்களை பொருது மா மரங்களை இடை ஊறுபட்டிட ஒடித்து சாய்த்து உராய்கின்ற (ஒரு) ஆறு என, சென்றன. [தறுகண்-குரூரம். மாறு-பகை. தடம்-மலை. ஆறு-நதி].

24. உழுந்திட விடமிலை யுலக மெங்கணும்
அழுந்திய வுயிர்க்கெலாம் அருட்கொம் பாயினன்
எழுந்திலனெழுந்திடைப் படருஞ் சேனையின்
கொழுந்துபோய்க் கொடிமதின் மிதிலை கூடிற்றே.

(யாக்கையில்) அழுந்திய உயிர்க்கு எல்லாம் அருளாகிய கொம்பு ஆயினன் (ஆகிய தயாத சக்ரவர்த்தி, இன்னும் தன் இருக்கையை விட்டுக்கூட) எழுந்திலன். (ஆனால் அவன் ஆணைப்படி) உலகம்

எங்கணும் உழுந்து இட இடம் இல்லை (என்னும்படி திரண்டு) (அயோத்திக்கும் மிதிலைக்கும்) இடையில் படரும் சேனையின் கொழுந்துபோய் கொடிகள் நாட்டிய மதில் சூழ்ந்த மிதிலையை கூடிற்று. [கொம்பு-ஊன்றுகோல். உழுந்து-ஓர் பயறு.]

25. கண்டவர் மனங்கள்கை கோப்பக் காதலின்
வண்டமர் கோதையர் வதன ராசியால்
பண்டிகள் பண்திகழ் பரிசிற் செல்வன
புண்டரீ கத்தடம் போவ பொன்றதே.

பண்திகழ்கின்ற பரிசில் செல்வன (ஆகிய) பண்டிகள்—கண்டவர்களது மனங்கள் காதலினால் கைகோப்ப வண்டு அமர்கின்ற (அவ்வண்டிகளிலிருந்த) கோதையர்களது வதன ராசியால்—புண்டரீக தடம் போவன போன்றன. [பண்-இசை. கைகோப்ப-அகப்பட்டுச்சிக்க. வதனராசி-முகக்கூட்டம். புண்டரீகத்தடம்-தாமரைத்தடாகம்.]

26. பாண்டிலின் வைத்தவோர் பாவை தன்னொடும்
ஈண்டிய அன்பின னேகு வானிடைக்
காண்டலு நோக்கிய கடைக்க ணஞ்சனம்
ஆண்டகைக் கினியதோ ரமுத மாயதே.

பாண்டிலில் வைத்த ஓர் பாவை தன்னொடு ஈண்டிய அன்பினன் (ஆகி) ஏகுவான் (ஆன ஒருவனை), (அவள்) இடையில் காண்தலும், (அவள்) நோக்கிய கடைக்கண் அஞ்சனம் (அந்த) ஆண்தகைக்கு (வழி இளைப்புத் தோன்றாதொழிய) இனியதான ஓர் அமுதம் (போல்) ஆயது. [பாண்டில்-குதிரைவண்டி. பாவை-பதுமை போன்றவள். அஞ்சனம்-மை. ஆண் தகை-புருஷன்.]

27. பிள்ளைமா னோக்கியைப் பிரிந்து போகின்றான்
அள்ளனீர் மருதவைப் பதனி லன்னத்தின்
புள்ளுமென் றாமரைப் போது நோக்கினான்
உள்ளமுந் தானுநின் றூச லாடினான்.

பிள்ளைமான் போன்ற நோக்கமுடைய ஒருத்தியை (நெருக்கத்தினால்) பிரிந்து போகின்றவன் (ஒருவன்) அள்ளல் நீர் மருதவைப்பதனில் அன்னத்தின் புள்ளையும் மென்தாமரைபோதையும் நோக்கி (தாமரை போன்ற கால்களையும் அன்னம்போன்ற நடையையும் உடைய இவள் எவ்வாறு தனியே நடக்க ஆற்றுவாள் என எண்ணி வருந்தி) உள்ளமும் தானும் நின்று, (அவளைத் தொடர்வதா அல்லவாவென்று) ஊசல் ஆடினான். [பிள்ளைமான்-மான்கன்று. அள்ளல்-சேறு. ஊசல்-ஊஞ்சல்.]

28. அங்கண் ஞாலத் தரசு மிடைந்தவர்
பொங்கு வெண்குடை சாமரை போர்த்தலால்
கங்கை யாறு கடுத்தது காரெனச்
சங்க பேரி முழங்கிய தானையே.

மிடைந்தவர்களான அம் கண் ஞாலத்து அரசர்களது பொங்கும் வெண் குடையும் (வெண்) சாமரையும் போர்த்தலால், கார் என சங்கமும் பேரியும் முழங்கிய தானையானது (வெள்ளை நிறமுற்று) கங்கை ஆற்றை கடுத்தது. [அம்கண் ஞாலம்-அழகிய இடமகன்ற பூமி. மிடைந்தவர்-நெருங்கியவர். கார்-மேகம் கடுத்தது-ஒத்தது.]

29. அமர ரஞ்சவ் வணங்கனை யாருயிர்
கவருங் கூர்நுதிக் கண்ணெனும் காலவேல்
குமரர் நெஞ்சு குளிப்ப வழங்கலால்
சமர பூமியு மொத்தது தானையே.

அமரர் அஞ்சும் (காதல் காட்டி உயிர் கொள்ளும்) அ அணங்கு அனையார் (ஆடவர்களது) உயிரை கவரும் கூரிய நுதியுடைய கண் என்னும் காலனை ஒத்த வேல்கள் குமரர்களது நெஞ்சில் குளிப்ப வழங்கலால்—அ தானை சமர பூமியும் ஒத்தது. [நுதி-நுனி. காலன்-யமன் குளிப்ப-தைக்க. சமரபூமி-யுத்தகளம்]

30. தோண்மி டைந்தன தூண மிடைந்தென
வாண்மி டைந்தன வான்மின் மிடைந்தெனத்
தாண்மி டைந்தன தம்மி மிடைந்தென
ஆண்மி டைந்தன வாளி மிடைந்தென.

தூண் மிடைந்து என தோள்கள் மிடைந்தன. வானில் மின்னல் மிடைந்து என வாள்கள் மிடைந்தன. தம்மி மிடைந்தென தாள்கள் மிடைந்தன. ஆளி மிடைந்தென ஆள்கள் மிடைந்தன. [மிடைந்தென-நெருங்கினல்போல். தம்மி-தாமரைப்பூ. ஆளி-சிங்கம்]

31. வார்கு லாமுலை வைத்தகண் வாங்கிடப்
பேர்கி லாது பிறங்கு முகத்தினன்
தேர்கி லானெறி யந்தரிற் சென்றொரு
மூரி மாமத யானையை முட்டினன்.

வார் குலாவும் முலைமேல் வைத்த கண்ணை வாங்கிட பேர்கிலாது (களிப்பினல்) பிறங்கும் முகத்தினன் (ஒருவன்), (தான் போகின்ற) நெறியை தேர்கிலானய் அந்தரைபோல் சென்று ஒரு மூரி (உடைய) மா மதயானையை முட்டினன். [வார்-கச்சு. பேர்கிலாது-இயலாது. பிறங்கும்-பிரகாசிக்கும். அந்தர்-குருடர். மூரி-வலிமை.]

32. சுழிகொள் வாம்பரி துள்ளவோர் தோகையாள்
வழுவி வீழலுற் றாளையோர் வள்ளறான்
எழுவி னீள்புயத் தாலெடுத் தேந்தினான்
தழுவி நின்றொழி யான்றரை மேல்வையான்.

(நல்ல) சுழிகொண்ட வாவும் பரி துள்ள, (அதனால்) ஓர் தோகை போன்ற சாயலாள் வழுவி வீழல் உற்றாளை, ஓர் வள்ளல் தான் எழு போன்ற நீண்ட புயத்தால் எடுத்து ஏந்தினான். (பிறகு அவளை) தழுவி நின்று ஒழியான். தரைமேல் வையான். [எழு-தூண்].

33. துணைத்த தாமரை நோவத் தொடர்ந்தடர்
கணைக்க ருங்கணி னாளையோர் காளைதான்
பணைத்த வெம்முலைப் பாய்மத யானையை
அணைக்க நங்கைக் ககலிட மில்லென்றான்.

துணைத்த தாமரை (போன்ற பாதங்கள்) நோவ (தன்னை) தொடர்ந்து அடர்க்கின்ற கணைகளையொத்த கரும்கண்ணாளை (பார்த்து), ஓர் காளை போல்வான், 'பணைத்த (இவளது) வெம் முலை (களாகிய கோட்டையுடைய) பாயும் மதயானையை அணைக்க நம் கைக்கு அகன்ற இடம் இல்லை' என்றான். [துணைத்த-இரண்டாக அமைந்த. அடர்க்கின்ற-போர் செய்கின்ற. கணை-அம்பு. பணைத்த-பெருத்த. வெம்-விருப்பத்தை உண்டாக்குகின்ற]

34. சுழியுங் குஞ்சி மிசைச்சுரும் பார்த்திடப்
பொழியு மும்மத யானையிற் போகின்றான்
கழிய கூரிய வென்றொரு காரிகை
விழியை நோக்கித்தன் வேலையு நோக்கினான்.

சுழியும் குஞ்சியின்மிசை சுரும்புகள் ஆர்த்திட, மும்மதம் பொழியும் யானையில் போகின்றான் (ஒருவன்), ஒரு காரிகையின் விழியை நோக்கி (அது) 'கழிய கூரிய என்று (அப்பார்வையுடன் ஒப்புப்பார்க்க) தன் வேலையும் நோக்கினான். [சுழியும் குஞ்சி-சுழித்த மயிர். சுரும்பு-வண்டு. காரிகை-பெண். கழிய-மிகவும்.]

குறிப்பு :—தன் வேல் உடலிலன்றி அவள் பார்வை போல் உயிருள் பாயாதாகையால் வேல் விழிக்குக் கூர்மையில் தோற்றதாகும்.

35. தரங்க வார்குழற் றாமரை சீறடிக்
கருங்கண் வாளுடை யாளைப்போர் காளைதான்
நெருங்கு பூண்முலை நீள்வளைந் தோளினிர்
மருங்கு லெங்கு மறந்தது நீரென்றான்.

தரங்கம் (போல் சுருண்ட) வார் குழலும் தாமரை (போன்ற) சிறிய அடிகளையும் கரும் கண்களாகிய (இரண்டு) வாள்களையும் உடையாளை (நோக்கி), ஓர் காளை (போல்வான், அவளுடன் வார்த்தையாட விரும்பி) 'நெருங்கும் பூண்களை யணிந்த முலைகளும், நீண்ட வளைகளை அணிந்த தோள்களையும் உடையீரே, நீர் (உமது) மருங்குலை எங்கு (வைத்து) மறந்தது?' என்றான். [தரங்கம்-அலை. குழல்-கூந்தல். மருங்குல்-இடை.]

36. கூற்றம் போலுங் கொலைக்கண்ணி னாலன்றி
மாற்றம் பேசுகி லாளையோர் வள்ளறான்
ஆற்று நீரிடை யங்கைக ளாலெடுத்
தேற்று வாருமை யாவர்கொ லோவென்றான்.

கூற்றம் போலும் கொலை (புரியும்) கண்ணினால் அன்றி, (வாய் திறந்து) மாற்றம் பேசுகிலாளை ஓர் வள்ளல் (நோக்கி வார்த்தையாட விரும்பி) 'உம்மை ஆற்றின் நீர்இடை அம்கைகளால் எடுத்து ஏற்று வார் யாவர் கொல்?' என்றான். [மாற்றம்-பேச்சு].

37. தள்ள ரும்பரந் தாங்கிய வொட்டகம்
தெள்ளு தேன்கரும்பு யாவையுந் தின்கில
உள்ள மென்னதம் வாயு முலர்ந்தன
கள்ளுண் மாந்தரிற் கைப்பன தேடியே.

தள்ளுவதற்கு அரிய பாரம் தாங்கிய ஒட்டகம்—கள்ளை உண்ணும் மாந்தரைப் போல் கைப்பன தேடி—தெள்ளு தேன் கரும்பு யாவையும் தின்கிலஆகி தம்உள்ளம்என்னவாயும்உலர்ந்தன. [தெள்ளு-தெளிந்த.]

38. அரத்த நோக்கின ரற்றிரண் மேனியர்
பரித்த காவினர் பப்பர ரேகினார்
திருத்து கூடத்தைத் திண்கணை யத்தொடும்
எருத்தி னேந்திய மால்களி றென்னவே.

அரத்தம் போன்ற நோக்கினர், அல்திரண்டதுபோன்ற மேனியர் (ஆகிய) பப்பரர், திருத்தும் கூடத்தை திண்கணையத்தொடும் எருத்தில் ஏந்திய மால் களிறு என்ன, பரித்த காவினராய், ஏகினார். [அரத்தம்-அரக்கு. அல்-இருள். பப்பரர்-குஜராத்து தேசத்தவர். கூடம்-சம்மட்டி. கணையம்-மதயானையைத் தடுக்கும் மரம். எருத்து-பிடர். பரித்த-தாங்கிய. கா-காவடி.]

39. பித்த யானை பிணங்கிப் பிடியிற்கை
வைத்த மேலிருந் தஞ்சிய மங்கைமார்
எய்த்தி டுக்கணுற் றார்புதைத் தார்க்கிரு
கைத்த லங்களிற் கண்ணடங் காமையே.

பித்தம்கொண்ட யானை (பாகனொடு) பிணங்கி (அருகில் வந்த ஒரு) பிடியின்மேல் (தன்) கையை வத்தது. (அப்பிடியின்) மேல் இருந்து அஞ்சிய மங்கைமார், (தம் கண்களைக் கைகளால் மூடிக்கொள்ளப் பார்த்தார்கள், ஆனால் அவ்வாறு) புதைத்தார்க்கு (தம்) இரு கைத்தலங்களில் கண் அடங்காமை (கண்டு) எய்த்து இடுக்கண் உற்றார். [பிணங்கி-மாறுபட்டு. எய்த்து-இளைத்து. இடுக்கண் உற்றார்-துன்பம் அடைந்தார்.]

40. வாம மேகலை யாரிடை வாலதி
பூமி தோய்பிடிச் சிந்தரும் போயினார்
காமர் தாமரை நாண்மலர்க் கானத்துள்
ஆமை மேல்வருந் தேரையி னையரோ.

வாமம் மேகலையார் (ஆகிய மாதர்கள்) இடை (அவர் மெய்காப்பாளர்களான) சிந்தரும், வாலதி பூமியில் தோயும் பிடியின்மேல் போயினார். (அப்பொழுது) காமர் தாமரை நாள்மலர் கானத்துள் ஆமையின்மேல் வரும் தேரையைப்போல் (அச்சிந்தர்) ஆயினார். [வாமம், காமர்-அழகிய. வாலதி-வால். சிந்தர்-குள்ளர் நாள்-புதிய.]

41. இம்பர் நாட்டின் றரமல்ல ளிங்கிவள்
உம்பர் கோமகற் கென்கிற தொக்குமால்
கம்ப மாவரக் கால்கள் வளைத்தொரு
கொம்ப னாளைக்கொண் டோடுங் குதிரையே.

மால்கொண்டு (ஒரு) கம்பம் மா வர (மருண்டு) கால் வளைத்து (தன்மேல் இருந்த) ஒரு (பூங்) கொம்பு அன்னாளைக்கொண்டு ஓடும் குதிரை-"இங்கு இவள் இம்பர் நாட்டின் தரம் அல்லள். உம்பர் கோமகற்கு (உரியவள்)" என்கிறதை ஒக்கும். [மால்-மதம். கம்பம் மா-எப்பொழுதும் அசைகின்ற மிருகம், யானை. தரம்-தகுதி. உம்பர் கோமகன்-தேவேந்திரன்.]

42. சந்த வார்குழல் சோர்பவை தாங்கலார்
சிந்து மேகலை சிந்தையுஞ் செய்கலார்
எந்தை வில்லிறுத் தானென வின்சொலை
மைந்தர் பேச மனங்களித் தோடுவார்.

எந்தை வில்லை இறுத்தான் என்னும் இன்சொல்லை மைந்தர் பேச (அச்சரிதத்தைக் கேட்கும்பொருட்டு மகளிர்) சோர்பவையாகிய (தம்) சந்தம் (பூசிய) வார்குழலை தாங்கலராய், சிந்தும் மேகலையை சிந்தையும் செய்கலராய் மனம் களித்து ஓடுவார். [சந்தம்-மயிர்ச்சாந்து.]

43\. குடையர் குண்டிகை தூக்கினர் குந்திய
நடையர் நாசி புதைத்தகை நாற்றலர்
கடக ளிற்றையுங் காரிகை யாரையும்
அடைய வஞ்சிய அந்தணர் முந்தினர்.

குடையர்களாயும் குண்டிகையை தூக்கினர்களாயும் குந்திய நடையர்களாயும் நாசி புதைத்த கையை நாற்றலர்களாயும், கடம் பொழியும் களிற்றையும் காரிகையாரையும் அடைய அஞ்சிய அந்தணர் முந்தினர். [குண்டிகை-கமண்டலம். நாற்றலர்-தொங்கவிடாதவர். கடம்-மதம்.]

44\. நாறு பூங்குழ னங்கையர் கண்கணீர்
ஊறு நேர்வந் துருவு வெளிப்பட
மாறு கொண்டனை வந்தனை யாகில்வந்
தேறு தேரெனக் கைக ளிழிச்சுவார்.

நாறும் பூ (அணிந்த) குழல் உடைய நங்கையர்களது நீர் ஊறும் கண்களுக்கு நேர் வந்து (பிரிந்துபோன தம் காதலர்) உருவு வெளிப்பட, (அதைப்பார்த்து) "(முன் என்னுடன்) மாறுகொண்டனை, (இப்பொழுது நீயே) வந்தனையாகில் வந்து (என்) தேர்மேல் ஏறு" என கைகள் இழிச்சுவார். [நாறும்-மணக்கும். உருவெளிப்பாடு-பிரிந்த காதலரது உருவம் தோன்றுதல். இழிச்சுவார்-தாழ்த்துவார்.]

45\. குரைத்த தேருங் களிறுங் குதிரையும்
நிரைத்த வார்முர சுங்கெளிந் தெங்கணும்
இரைத்த பேரொலி யாலிடை யாவரும்
உரைத்து ணர்ந்தில ரூமரி னேகினர்.

[குரைத்த-ஒலித்த. நிரைத்த-வரிசையாக. உரைத்துணர்ந்திலர்-பேசுவதைக் கேட்டிலர். ஊமர்-ஊமைகள்.]

46\. நுட்சி லம்பி வலந்தன நுண்டுகில்
கட்சி லம்பு கருங்குழ லார்குழு
உட்சி லம்பு சிலம்ப வொதுங்கலால்
புட்சி லம்பிடு பொய்கையும் போன்றதே.

நுண்ணிய சிலம்பி (பூச்சிகள்) வலந்தன (போன்ற) நுண் துகில் (அணிந்த) கள் சிலம்பும் கரும் குழலார்களது குழு-உள் சிலம்பு சிலம்ப ஒதுங்கலால் (அன்ன) புள் சிலம்பிடும் பொய்கையும் போன்றது. [வலந்தன-பின்னின. கள்-வண்டு. குழு-கூட்டம். சிலம்பும்-ஒலிக்கும். ஒதுங்கலால்-நடத்தலால்.]

47. தெண்டி ரைப்பர வைத்திரு வன்னவர்
நுண்டி ரைப்புரை நோக்கிய நோக்கினைக்
கண்டி ரைப்பன வாடவர் கண்களி
வண்டி ரைப்பன யானை மதங்களே.

தெள்ளிய திரைகளையுடைய (பால்) பரவையில் தோன்றிய திரு அன்னவர், (அவர் தரித்திருந்த நுண்ணிய திரைச் சீலையின்) புரையின் வழியே நோக்கிய நோக்கினை கண்டு ஆடவர் கண்கள் (தமக்கு) இரைப் பண. யானை மதங்களில் களித்த வண்டுகள் இரைப்பன. [திரை-அலை, திரைச்சீலை. பரவை-கடல். புரை-துவாரம். இரைப்பன-இரை தேடுவன, ஒலிப்பன.]

48. உழைக வித்தன வென்ன வுயிர்த்துணை
நுழைக விக்கருங் கண்ணியர் நூபுர
இழைக வித்தன வின்னிய மாயெழு
மழைக வித்தன வாசி கலித்தவே.

(ஆடவர்களுடைய) உயிர்துணையும் நுழையும் கலிபொருந்திய கரும் கண்களையுடைய மாதர் அணிந்திருக்கிற நூபுரம் ஆகிய இழைகள், உழை கலித்தன என்ன இன் இயமாய் கலித்தன, எழு மழைகள் கலித் தனபோல் வாசிகள் கலித்தன. [துணையும்-அளவும். கலி-வலி, வஞ்ச கம். நூபுரம்-சிலம்பு. உழை-யாழின் ஓர் நரம்பு. இயம்-வாத்தியம். கலித்தன-சப்தம்செய்தன. எழு-எழ். மழை-மேகம். வாசி-குதிரை.]

49. மண்க ளிப்ப நடப்பவர் வாண்முக
ஒண்க ளிக்கம லங்களி னுள்ளுறை
திண்க ளிச்சிறு தும்பி யெனச்சிலர்
கண்க ளித்தன காமன் களிக்கவே.

காமன் (தனக்கு இப்பொழுது போர் வாய்த்ததென்று) களிக்க, (என்மீது இவர்கள் நடக்கப்பெற்றேனே என்று) மண் (மகள்) களிப்ப-நடப்பவர் (ஆகிய மாதரது) வாள்பொருந்திய முகங்களாகிய ஒண்மை பொருந்திய களிக்கின்ற கமலங்களின் உள் உறையும் திண்களி உடைய சிறு தும்பி என, (ஆடவர்) சிலர் கண்கள் களித்தன. [வாள்-ஒளி. ஒண்மை-பிரகாசம். திண்களி-மிகுந்தகளிப்பு. தும்பி-வண்டு.]

50. எண்ண மாத்திர மும்மரி தாமிடை
வண்ண மார்த்த துவர்க்கனி வாய்ச்சியர்
திண்ண மார்த்தொளிர் செவ்விள நீரிழி
சுண்ண மார்த்தன தூளியு மார்த்தவே.

(காண்பதற்கன்றி மனத்தினால்) எண்ண மாத்திரமும் அரிது ஆகும் இடையையும் வண்ணம் ஆர்த்த துவர்கனிபோன்ற வாயையும் உடையவர்களது, திண்ணமாய் (கச்சினால்) ஆர்த்து ஒளிர்கின்ற செவந்த இளநீர் (போன்ற முலைகளிலிருந்து) இழிகின்ற சுண்ணம் (எங்கும்) ஆர்த்தன, தூளியும் ஆர்த்தன. [ஆர்த்த-பொருந்திய. துவர்-சிவப்பு. ஆர்த்து-கட்டி. ஆர்த்தன-நிறைந்தன. தூளி-மகரந்தப் பொடி.]

51. சித்தி ரத்தடந் தேர்மைந்தர் மங்கையர்
உய்த்து ரைப்ப நினைப்ப வுலப்பிலர்
இத்தி றத்தின ரெத்தனை யோபலர்
மொய்த்தி ரைத்து வழிக்கொண்டு முன்னினார்.

[தடம்-பெரிய. உய்த்து-ஊகித்து. உலப்பிலர்-அளவில்லாதவர்.]

52. குசையுறு பரியுந் தேரும் வீரரும் குழூமி யெங்கும்
விசையொடு முடுகப் பொங்கி வீங்கிய தூளி விம்மப்
பசையுறு துளியின் றாரைப் பசுந்துளை யடைத்த மேகந்
திசைதொறு நின்ற யானை மதத்துளை செறித்த வன்றே.

குசை உற்ற பரியும் தேரும் வீரரும் குழூமி எங்கும் விசையொடு முடுக, (அதனால்) பொங்கி வீங்கிய தூளி விம்ம, (அத்தூளிகள் போய்) பசை உற்ற (நீர்) துளியின் தாரை (பாயும்) பசும் துளைகளை மேகத்தில் அடைத்தன. திசை தொறும் நின்ற யானைகளின் மதம் (பாயும்) துளைகளையும் செறித்தன. [குசை-கடிவாளம். தூளி-புழுதி. விம்ம-பரவ. பசை-ஈரம். பசும்-பசிய. செறித்தன-அடைத்தன].

யானையினது மதத்தில் வழுக்கி விழாமல் தம் நாயகிகளை ஆடவர் அழைத்துச் சென்றனர்.

53. கேடகத் தடக்கை யாலே கிளரொளி வாளும் பற்றிச்
சூடகத் தளிர்க்கை மற்றைச் சுடர்மணித் தடக்கை பற்றி
ஆடகத் தோடை யானை யழிமதத் திழுக்க லாற்றின்
பாடகக் காலி னாரைப் பயப்பயக் கொண்டு போனார்.

(ஆடவர்) கேடகம் தரித்த தடம்கையலே கிளர்கின்ற ஒளி உடைய வாளையும் பற்றி, சூடகம் அணிந்த தளிர்போன்ற (தன் நாயகியின்) கையை, மற்ற சுடர் பொருந்திய மணிகள் அணிந்த தடம் கையில் பற்றி (யவர்களாய்), ஆடகத்தால் செய்த ஓடை சூட்டிய யானையினின்று அழியும் மதத்தால் உண்டாகிய இழுக்கல் ஆற்றில் (அந்த) பாடகம் அணிந்த காலினாரை பயப்பய கொண்டு போனார். [சூடகம்-வளை. ஆடகம்-பொன். ஓடை-முகபடாம். அழியும்-பெருகும். இழுக்கல் ஆற்றில்-வழுக்கும் வழியில். பயப்பய-மெல்லமெல்ல],

மாதர் தம் நாயகரைப் பூப்பறித்துத் தர வேண்டிக்கொண்டனர்.

54. செய்ரளின் மடுவி னன்னீர்ச் சிறைகளி னிறையப் பூத்த
நெய்தலுங் குமுதப் பூவு நெகிழ்ந்தசெங் கமலப் போதும்
மைசளு முகமும் வாயுங் கண்களுங் காட்டக் கண்டு
கொய்திவை தருதி ரென்று கொழுநரைத் தொழுகின் றாரும்.

[செய்-வயல். நன்னீர்ச் சிறை-நல்லநீர் நிலை]

யானை வந்தது எனக்கேட்டு மாதர் குதிரைகளினின்றும் இறங்கிச் சிதறியோடுவார்.

55. பந்தியம் புரவி நின்றும் பாரிடை யிழிந்து வாசக்
கொந்தள பாரஞ் சோரக் குலமணிக் கலன்கள் சிந்தச்
சந்தநுண் துகிலும் வீழத் தளிர்க்கையா லணைத்துச் சார
வந்தது வேழ மென்ன மயிலென விரியல் போவார்.

[கொந்து அளகம் பாரம்-பூங்கொத்து அணிந்த கூந்தல். சந்தம்-அழகு.]

குடை முதலானவற்றால் இருளும் படை முதலானவற்றால் ஒளியும் மாறிமாறித் தோன்றின.

56. குடையொடு களிருந் தொங்கற் குழாங்களுங் கொடியின் காடும்
இடையிடை மயங்கி யெங்கும் வெளிகரந் திருளைச் செய்யப்
படைகளு முடியும் பூணும் படர்வெயில் பரப்பிச் செல்ல
இடையொரு கணத்தினுள்ளே யிரவுண்டு பகலு முண்டே.

[தொங்கல் குழாம்-பீலிக்குஞ்சத் தொகுதி. வெளிகரந்து-ஆகாயத்தை மறைத்து.]

57. முருக்கிதழ் முத்த மூரல் முறுவல ர் முகங்க ளென்னும்
திருக்கிளர் கமலப் போதிற் றீட்டின கிடந்த கூர்வாள்
நெருக்கிடை யறுக்கு நீர்க ணீங்குமி னீங்கு மென்றென்
றருக்கனி லொளிரு மேனி யாடவ ரகலப் போவார்.

முருக்கம்பூப்போன்ற இதழையும் முத்தம்போன்ற மூரல்களையும் முறுவலையும் உடையார்களாகிய மாதர்களது முகங்கள் என்னும் திருகிளர்கின்ற கமலம் போதில் தீட்டினவாய் கிடந்த (கண்கள் ஆகிய) கூர்வாள், (நம்மை) நெருக்கின் இடையில் அறுக்கும் (ஆகையால்) நீங்கள் நீங்குமின் நீங்குமின்' என்று என்று அருக்கன்போல் ஒளிரும் மேனியர்களான ஆடவர் அகல போவார். [மூரல்-பல் முறுவல்-நகை. திருகிளர்-இலக்ஷ்மி விளங்குகின்ற. அருக்கன்-சூரியன்.]

58. நீந்தரு நெறியி னுற்ற நெருக்கினாற் சுருக்குண் டற்றுக்
காந்தின மணியு முத்துஞ் சிந்தின கலாபஞ் சூழ்ந்த
பாந்தளி னல்கு லார்தம் பரிபுரம் புலம்பப் பைம்பொற்
பூந்தளி ருறைப்ப மாழ்கிப் போக்கரி தென்ன நிற்பார்.

(சேனையின் வெள்ளத்தின் வழியாய்) நீந்த அரிய நெறியில் உற்ற நெருக்கினால் சுருக்கு உண்டு அற்று காந்தும் இனமான மணியும் முத்தும் சிந்தின. (அவை) கலாபம் சூழ்ந்த பாந்தளைப்போன்ற அல்குல் உடைய மாதர்கள் தம் பரிபுரம் புலம்பும் அ பசும் பொன் (அணியணிந்த) பூம் தளிர் (போன்ற பாதங்களில்) உறைப்ப அவர் மாழ்கி போக்கு அரிது என்ன நிற்பார். [காந்தும்-ஒளிவீசும். இனமான-கூட்டமான. கலாபம்-இடையில் அணியும் ஆபரணம். பரிபுரம்-சிலம்பு. பூம்-அழகிய. மாழ்கி-மயங்கி].

59. கொற்றபல் லியங்க ளெங்குங் கொண்டலிற் றுவைப்ப பண்டிப்
பெற்றவே றன்னப் புள்ளிற் பேதையற் வெருவி நீங்க
முற்றுறு பரங்க ளெல்லா முறைமுறை பாசத் தோடும்
பற்றற வீசி யேகி யோகியிற் பரிவு தீர்ந்த.

கொற்றம் பொருந்திய பல இயங்கள் எங்கும் கொண்டல்போல் துவைப்ப, (அதற்கு மருண்டு) பண்டி (யில் கட்டிய) பெற்றம் ஏறுகள், முற்று உற்ற பாரங்களை எல்லாம் முறைமுறையாக (பிணித்த) பாசத்தோடு பற்று அற வீசி, பேதையர் அன்னம் புள்போல் வெருவி நீங்க, ஏகி யோகிகளைப்போல் பரிவு தீர்ந்தன. [பெற்ற ஏறு-இரவஷபம். பாசம்-கயிறு, ஆசை. பரிவு-பாரம், துன்பம். பேதையர்-பெண்கள்.]

60. காற்செறி வேகப் பாகர் கார்முக வுண்டை பாரா
வார்ச்சிறைக் கொங்கை யன்ன கும்பமும் மருப்புங் காணப்
பாற்செறி கடலிற் றோன்றும் பணைக்கைமால் யானை யென்ன
நீர்ச்சிறை பற்றி யேறா நின்றகுன் றனைய வேழம்.

குன்று அனைய வேழங்கள்,—பாகர் (அடிக்கும்) கால்செறி வேகம் உள்ள கார்முக உண்டைகளை பாராமலும், நீர்சிறையை பற்றி ஏறாமலும், வார் (ஆகிய) சிறையில் அகப்பட்ட (மாதரது) கொங்கைகள் அன்ன கும்பமும் மருப்பும் (மேலே) காண, பால் செறிந்த கடலில் தோன்றும் பணை கை மால் யானை (ஆகிய ஐராவதம்) என்ன (தடாகங்களில்) நின்றன. [கால் செறி-காற்றை ஒத்த. கார்முக உண்டை-வில்லுண்டை. நீர்ச்சிறை-நீர்க்கரை. கும்பம்-மத்தகம்.]

61. அறலியற் கூந்தல் கண்வா ளமுதுகு குமுதச் செவ்வாய்
விறலிய ரோடு நல்யாழ்ச் செயிரியர் புரவி மேலார்
நறைசெவிப் பெய்வ தென்ன நனைவளர் மேகப் பாடல்
முறைமுறை நணுகப் போனார் கின்னர மிதுன மொப்பார்.

அறலின் இயல் உடைய கூந்தலும் கண்களாகிய வாளும் (பேச்சாகிய) அமுதை உகும் குமுதம் போன்ற செவந்த வாயும் உடைய விறலியரோடு, நல்ல யாழ்வாசிக்கும் செயிரியர்களும் புரவியின் மேலார்களாய், நறையை (கேட்போர்) செவியில் பெய்வது என்ன நளேவளர்ந்த மேகராக (குறிஞ்சி) பாடலே முறை முறை நணுக போனார்கள். (அவர்) மிதுனம் ஆன கின்னர (புள்களை) ஒப்பார். [அறல்-கருமணல். விறலியர்-பாண் மகளிர். செயிரியர்-பாணர். நறை-தேன். நளேவளர்-குளிர்ச்சி மிகுந்த. நணுக-பொருந்த. மிதுனம்-ஆணும் பெண்ணுமான இரட்டை. கின்னரம்-இசை அறியும் ஒரு பறவை.]

62. அருவிபெய் வரையிற் பொங்கி யங்குச நிமிர வெங்கும்
இரியலிற் சனங்கள் சிந்த விளங்களிச் செங்கண் யானை
விரிசிறைத் தும்பி வேறோர் வீழ்மதந் தோய்ந்து மாதர்
சுரிகுழல் படிய வேற்றின் பிடியொடுந் தொடர்ந்து செல்வ.

களிப்புடைய இள செம்கண் யானை,-அருவிபெய்கின்ற வரைபோல் பொங்கி அங்குசம் நிமிர எங்கும் இரியலினால், சனங்கள் சிந்தவும் (அந்த யானை மதத்தில் மொய்த்திருந்த) விரிந்த சிறையுடைய தும்பிகள் (மாதர் அணிந்த பூவின் தேனாகிய) வேறு ஓர் வீழ் மதத்தில் தோய்ந்து, மாதர்களது சுரிந்த குழலில் படியவும், வேற்று இனிய பிடியொடும் தொடர்ந்து செல்வன (ஆயின). [வரை-மலை. இரியலினால்-ஓடுவதால். சிந்த-சிதற. தும்பி-வண்டு. வேற்று-வேறான.]

63. நிறைமதித் தோற்றங் கண்ட நீனெடுங் கடலிற்றாகி
அறைபறை துவைப்பத் தேரு மானையு மாடன் மாவும்
கறைகெழு வேற்க ணாரு மைந்தரும் கவினி யொல்லை
நெறியிடைப் படர வேந்த னேயமங் கைய ரெழுந்தார்.

(பதினெட்டு கலைகளும்) நிறைந்த மதியின் தோற்றம் கண்ட நீல நெடும் கடல் இற்று ஆகி, அறைகின்ற பறை துவைப்ப, தேரும் ஆனையும் ஆடல் (செய்யும்) மாவும், கறை கெழும் வேல் கண்ணாரும் மைந்தரும் கவினி ஒல்லை நெறி இடை படர (தயாத) வேந்தனது நேயம் மங்கையர் எழுந்தார். [இற்று-போன்றன. கறை-கறுப்பு. கெழும்-நிறைந்த. கவினி-அழகாகக்கூடி. ஒல்லை-விரைவாக. படர-செல்ல]

கைகேசி வழிப்பட்டாள்.

64. பொய்கையங் கமலக் கானிற் பொலிவதோ ரன்ன மென்னக்
கைகயர் வேந்தன் பாவை கணிகைய ரீட்டம் பொங்கி
ஐயிரு நூறு சூழ்ந்த வாய்மணிச் சிவிகை தன்மேல்
தெய்வமங் கையரு நாணத் தேனிசை முரலப் போனாள்.

கைகயர்களுக்கு வேந்தன் (ஆகிய உதாஜித் என்பவனுடைய) பாவை (போன்ற புத்திரியாகிய கைகேசி) ஐ இருநூறு கணிகையர் ஈட்டம் பொங்கி சூழ்ந்த, ஆய்ந்த மணிகளால் செய்த சிவிகைதன் மேல் தெய்வமங்கையரும் நாண, பொய்கையில் உள்ள அம் கமலம் கானில் பொலிவது ஆன ஓர் அன்னம் என்ன, தேன்கள் இசைமுரல போனாள். [ஈட்டம்-கூட்டம். ஆய்-ஆராய்ந்தெடுத்த. சிவிகை-பல்லக்கு. தேன்-வண்டுகள். இசைமுரல-இசைப்பாட்டுகள் ஒலிக்க.]

சுமித்திரை சென்றாள்.

65. விரிமணித் தார்கள் பூண்ட வேசரி வெரிநிற் றோன்றும்
அரிமலர்த் தடங்க ணல்லா ராயிரத் திரட்டி சூழக்
குருமணிச் சிவிகை தன்மேற் கொண்டலின் மின்னி தென்ன
இருவரைப் பயந்த நங்கை யாழிசை முரலப் போனாள்.

(ஒளி) விரிக்கும் மணித்தார்கள் பூண்ட வேசரியின் வெரிந் இல் தோன்றும் (செவ்) அரி (படர்ந்த குவளை) மலர் போன்ற தடம் கண்களை யுடைய ஆயிரத்து இரட்டி நல்லார் சூழ, குரு (பொருந்திய) மணி (களால் செய்த) சிவிகைதன்மேல், கொண்டலில் உள்ள மின் இது என்ன, (லக்ஷ்மண சத்ருக்னராகிய) இருவரை பயந்த நங்கை யாழின் இசை முரல போனாள். [வேசரி-கோவேறு கழுதை. வெரிந்-முதுகு. தடம்-பெரிய. நல்லார்-மாதர்]

கௌசலை சென்றனள்.

66. வெள்ளெயிற் றிலவச் செவ்வாய் முகத்தைவெண் மதிய மென்று
கொள்ளையிற் சுற்றி மீன்கள் குழுமிய வனைய வூர்தி
தெள்ளரிப் பாண்டிற் பாணிச் செயிரிய ரிசைத்தேன் சிந்த
வள்ளலைப் பயந்த நங்கை வானவர் வணங்கப் போனாள்.

வெள் எயிறும் இலவம் போன்ற செவந்த வாயும் கூடிய முகத்தை வெண் மதியம் என்று (எண்ணி) மீன்கள் கொள்ளையில் சுற்றி குழுமிய அனைய (பல இரத்தினங்கள் பதித்த) ஊர்தி(யில் ஏறி), தெளிந்த அரி (யின் இசையை ஒத்த) பாண்டில் (உடன் கூடிய) பாணி (யைப் பாடுகின்ற) செயிரியர்களது இசை (ஆகிய) தேன் சிந்த (ஸ்ரீராமனாகிய) வள்ளலை பயந்த நங்கை வானவர் வணங்க போனாள்.

[எயிறு-பல். இலவம்-முருக்கம்பூ. மீன்-நக்ஷத்ரம். குழுமிய அனைய-மொய்த்ததை ஒத்த. ஊர்தி-வாகனம், பல்லக்கு. அரி-வண்டு. பாண்டில்-கைத்தாளம். செயிரியர்-பாணர்.]

67. செங்கையின் மஞ்ஞை யன்னஞ் சிறுகிளி பூவை பாவை
சங்குறை கழித்த தன்ன சாமரை முதல தாங்கி
இங்கல தெண்ணுங் கான்மற் றெழுதிரை வளாகத் துள்ளும்
மங்கைய ரில்லை யென்ன மடந்தையர் மருங்கு போனார்.

இங்கு அல்லாது எண்ணுங்கால் ஏழுதிரைகள் சூழ்ந்த வளாகத்து உள்ளும் மற்று மங்கையர் இல்லை என்ன, மடந்தையர் (எண்ணிறந்தோர் தம்) செம் கையில் மஞ்ஞை அன்னம் சிறுகிளி பூவை பாவை, சங்கை உறையினின்று கழித்தது அன்ன சாமரை, முதல தாங்கி (தயரதனது தேவியர் மூவர்) மருங்கும், போனார். [எழுதிரை-ஏழுகடல்கள். வளாகம்-பூமி. மஞ்ஞை-மயில். பூவை-நாகணவாய்ப்புள்.]

68. காரண மின்றி யேயுங் கனலெழ விழிக்குங் கண்ணார்
வீரர்வேத் திரத்தார் தாழ்ந்து விரிந்தகஞ் சுகத்து மெய்யார்
தாரணி புரவி மேலார் தலத்துளார் கதித்த சொல்லார்
ஆரணங் கனைய மாத ரடிமுறை காத்துப் போனார்.

(இன்னும்), (பிறர் அணுகா வண்ணம்) காரணமே இன்றியும் கனல் எழ விழிக்கும் கண்ணார், வேத்திரத்தார், தாழ்ந்து விரிந்த கஞ்சுகத்து மெய்யார், தாரை அணிந்த புரவியின் மேலார், தலத்து உள்ளார், கதித்த சொல்லார் (ஆகிய) வீரர் (பலர்), ஆர் (பொருந்திய) அணங்கு அனைய மாதர் (ஆகிய அரசபத்னிகளின்) அடிகளை முறையாக காத்துபோனார். [வேத்திரம்-பிரம்பு. கஞ்சுகம்-சட்டை. கதித்த-உரத்த. ஆர்-சோதி.]

69. கூனொடு குறளுஞ் சிந்துஞ் சிலதியர் குழாமுங் கொண்ட
பானிறப் புரவியன்னப் புள்ளெனப் பாரிற் செல்லத்
தேனொடு மிஞிறும் வண்டுந் தும்பியும் பந்தர் செய்யப்
பூநிறை கூந்தன் மாதர் புடைமடப் பிடியிற் போனார்.

கூனரும் குறளும் சிந்தரும் சிலதியர் குழாமும் (ஏறிக்) கொண்ட பால் நிறம்புரவி பாரில் அன்னம்புள் என செல்ல, தேன் ஞிமிறு வண்டு தும்பி (இவைகள் மேல் நின்று) பந்தல் செய்ய, பூ நிறைந்த கூந்தல் உடைய மாதர் (அவ்வரசிகளுக்கு) புடையில் பிடியைப்போல் (நடந்து) சென்றார். [சிலதியர்-ஏவல் பெண்கள். புடை-பக்கத்தில். தேன் முதலியன பலவகை வண்டுகள்.]

தயரதன் அறுபதினாயிரம் பெண்டிரும் புறப்பட்டனர்.

70. துப்பினின் மணியிற் பொன்னிற் சுடர்மர கதத்தின் முத்தின்
ஒப்பற வமைந்த பைம்பூ ணோவியம் புகழ வேறி
முப்பதிற் றிரட்டி கொண்ட வாயிர முகிழ்மென் கொங்கைச்
செப்பருந் திருவி னல்லார் தெரிவையர் சூழப் போனார்.

முகிழ்ந்த மெல் கொங்கைகளையுடைய செப்பு அரிய திருவைப் போன்ற நல்லார் முப்பதிற்றிரட்டி கொண்ட ஆயிரம் (பேர்)-துப்பில் மணியில் பொன்னில் சுடரும் மரகதத்தில் முத்தில் (தமக்கு) ஒப்பு அற அமைத்த பைம் பூண் (அணிந்த) ஓவியம் (போன்றமாதர்) புகழ (ஊர்திகளில்) ஏறி, தெரிவையர் (தம்மை) சூழ போனார். [முகிழ்ந்த-குவிந்த. செப்பரும்-புகழ்தற்கரிய. துப்பு-பவழம். ஒப்பற-சமானமில்லாமல். தெரிவையர்-மாதர்.]

71. செவிவயி னமிர்த கேள்வி தெவிட்டினார் தேவர் நாவின்
அவிகையி னளிக்கு நீரா ராயிர கோடி சூழக்
கவிகையி னீழற் கற்பி னருந்ததி கணவன் வெள்ளைச்
சிவிகையி னன்ன மூருந் திசைமுக னென்னச் சென்றான்.

செவி வயின் அமிர்தம் (போன்ற) கேள்வி (அறிவு) தெவிட்டினா ரும், தேவர்களது நாவில் (நேராகவே) அவியை (தம்) கையினால் அளிக்கும் நீராரும் (ஆகியவர்) ஆயிரம் கோடி சூழ, கவிகையின் நிழ லில், கற்புடைய அருந்ததியோடு (அவள்) கணவன் (ஆகிய வசிட்டன்) வெள்ளை சிவிகையின் (மீது) அன்னத்திலேறி ஊரும் திசைமுகன் என்ன சென்றான். [வயின்-இடத்தில். தெவிட்டினார்-நிறைந்தவர். நீரார்-தன்மையையுடையவர். கவிகை-குடை. திசைமுகன்-பிரமன்].

பரத சத்ருக்நரும் புறப்பட்டேகினர்.

72. பொருகளி றிவுளி பொற்றேர் பொலங்கழற் குமரர் முந்நீர்
அருவரை சூழ்ந்த தென்ன வருகுபின் முன்னுஞ் செல்லத்
திருவளர் மார்பர் தெய்வச் சிலையினர் தோரர் வீரர்
இருவரு முனிபின் போன விருவரு மென்னப் போனார்.

பொரும்களிறு இவுளி பொன்தேர் பொலம் கழல் குமரர் (ஆகிய நான்கு வித சேனைகளும்) (அளத்தற்கு) அரிய வரையை முந்நீர் சூழ்ந்தது என்ன, (அவர்களுக்கு) அருகு பின்னும் முன்னும் செல்ல— திருவளர் மார்பர்களும் தெய்வ சிலையினர்களும் தோரர்களும் வீரர்களும் (ஆகிய பரத சத்ருக்நர்) இருவரும், (விசுவாமித்திர) முனி பின்போன (ராமலக்ஷ்மண) இருவரும் என்ன போனார். [இவுளி-குதிரை. பொலம்-பொன். முந்நீர்-கடல். சிலை-வில்.]

சுபமுகூர்த்தத்தில் சக்ரவர்த்தியும் சென்றனன்.

73. நித்திய நியம முற்றி நேமியான் பாதஞ் சென்னி
வைத்தபின் மறைவ லோர்க்கு வரம்பறு மணியும் பொன்னும்
பத்தியா னிரையும் பாரும் பரிவுட னல்கிப் போனான்
முத்தணி வயிரப் பூணான் மங்கல முகூர்த்த நன்னாள்.

[நேமியான்-விஷ்ணு. பத்தி ஆன் நிரை-வரிசையாகிய பசுக்கூட்டம்.]

அந்தணர் வேதமோத மங்கையர் பல்லாண்டு பாடத்
தயரதன் போனான்.

74. இருபிறப் பாள ரெண்ணா யிரர்மணிக் கலச மேந்தி
அருமறை வருக்க மோதி யறுகுநீர் தெளித்து வாழ்த்தி
வரன்முறை வந்தார் கோடி மங்கல மழலைச் செவ்வாய்ப்
பருமணி கலாபத் தார்பல் லாண்டிசை பரவப் போனான்.

[மறைவருக்கம்-வேத சாகை. அறுகுநீர்-தருப்பை நீர்.]

மண்தல அரசர் பலர் வந்து சேர்ந்தனர்.

75. கண்டில னென்னை யென்பார் கண்டன னென்னை யென்பார்
குண்டலம் வீழ்ந்த தென்பார் குறுகரி தினிச்சென் றென்பார்
உண்டுகொ லெழுச்சி யென்பா ரொலித்தது சங்க மென்பார்
மண்டல வேந்தர் வந்து நெருங்கினர் மயங்கி மாதோ.

[குறுகரிதினிச் சென்றென்பார்-இனி அரசனைக் கிட்டுதல் அருமை என்பார். மயங்கி-கலந்து]

தயரதன், மாதர் முகம் மலரச் செல்வதால் சூரியனைப் போலவும் மன்னர் கைக்கமலம் குவியச் செல்வதால் சந்திரன் போலவும், ஆயினான்.

76. பொற்றொடி மகளி ரூரும் பொலன் கொடார்ப் புரவி வெள்ளம்
சுற்றுறு கமலம் பூத்த தொடுகடற் றிரையிற் செல்லக்
கொற்றவேன் மன்னர் செங்கைப் பங்கயக் குழாங்கள் கூம்ப
மற்றொரு கதிரோ னென்ன மணிநெடுந் தேறிற் போனான்.

(தயரதன்), பொன் தொடி (அணிந்த) மகளிர் ஊரும் பொலன் கொண்ட தார் அணிந்த புரவி வெள்ளம், சுற்றும் உற்ற கமலம் பூத்த (சகரர்) தொட்ட கடலின் திரைபோல் செல்ல (சூரியன்போலவும்), கொற்றம் பொருந்திய வேல்களையுடைய மன்னர்களது செம் கைகளாகிய பங்கயம் குழாங்கள் கூம்ப (சூரியனல்லாத) மற்றொரு கதிரோன் (ஆகிய சந்திரன்) என்னவும் மணி நெடும் தேரில் போனான். [தொட்ட-தோண்டின. திரை-அலை. கூம்ப-குவிய.]

77. ஆர்த்தது விசும்பை முட்டி மீண்டகன் றிசைக ளெங்கும்
போர்த்தங் கொருவர் தம்மை யொருவர்கட் புலங்கொ ளாமைச்
சீர்த்தது செறிந்த தோடித் திரைநெடுங் கடலை யெல்லாம்
தூர்த்தது சகர ரோடு பகைத்தெனத் தூளி வெள்ளம்.

(சேனைகள் சென்றதால் எழுந்த) தூளிவெள்ளம், விசும்பை முட்டி ஆர்த்தது, மீண்டு அகன்ற திசைகள் எங்கும் போர்த்தது, அங்கு ஒருவர்தம்மை ஒருவர் கண்புலம் கொள்ளாமை சீர்த்தது, செறிந்தது, (கடல் தோண்டிய) சகரரோடு பகைத்தது என்ன ஓடி திரை உடைய நெடும் கடலை எல்லாம் (அவர் செய்ததற்கு மாறாய்) தூர்த்தது. [விசும்பு-ஆகாயம். கண் புலம் கொள்ளாமை-பார்க்க முடியாமல். ஆர்த்தது, சீர்த்தது-நிறைத்தது. செறிந்தது-நெருங்கிற்று.]

மேகத்தை அடக்கும் வாத்திய கோஷத்துடனும், வெளிச்சத்தை மறைக்கும் தொங்கல் முதலிய சின்னங்களுடனும், சந்திரனை வெல்லும் குடையுடனும் தயரதன் சென்றான்.

78. சங்கமும் பணையுங் கொம்புந் தாளமுங் காளத் தோடு
மங்கல பேரி செய்த பேரொலி மழையை யோட்டத்
தொங்கலுங் குடையுந் தோகைப் பிச்சமுஞ் சுடரை யோட்டத்
திங்கள்வெண் குடைகண் டோடத் தேவரு மருளச் சென்றான்.

[பணை-பறை. காளம்-எக்காளம். மழை-மேகம். சுடர்-வெளிச்சம்.]

79. மந்திர கீத வோதை வலம்புரி முழங்கு மோதை
அந்தண ராசி யோதை யார்த்தெழு முரசி னோதை
கந்துகொல் களிற்றி னோதை கடிகையர் கவிதை யோதை
இந்திர திருவன் செல்ல வெழுந்தன திசைக ளெல்லாம்.

[கந்து கொல்-கட்டுத்தறியை முறிக்கின்ற. கடிகையர்-அரசனுடனேயே இருந்து மங்கலக்கவிபாடி அவனுக்கு நாழிகை தெரிவிப்பவர். இந்திரதிருவன்-இந்திரனைப் போன்ற செல்வத்தையுடைய தயரதன்.]

எழுந்த தூளி விண்ணில்படியப் பொன்னுலகும்
மண்ணு லகாயது.

80. நோக்கிய திசைக ளெல்லாந் தன்னையே நோக்கிச் செல்ல
வீக்கிய கழற்கால் வேந்தர் விரிந்தகைம் மலர்கள் கூப்பத்
தாக்கிய களிறுந் தேரும் புரவியும் படைஞர் தாளும்
ஆக்கிய தூளி விண்ணு மண்ணுல காக்கப் போனான்.

[திசைகள்-திசையிலுள்ளவர்கள். வீக்கிய-கட்டிய]

குறிப்பு:—நகரப்படலம் 40-வது செய்யுளில், தமனியத் தொழில் தழைத்தவவ் வயோத்தி மாநகரனின் நிழல் தழுவியே தேவலோகமும் பொன்னுலகாயது எனக் கம்பர் கூறுகின்றார். அக்கருத்துடன் இச்செய்யுளின் பொருளையும் பொருத்தி நோக்குங்கால் வானவரது நாட்டின் சிறப்பிழிவிரண்டிற்கும் அயோத்தியே காரணமாயிருக்கின்றது.

81. வீரருங் களிறுந் தேரும் புரவியு மிடைந்த சேனை
பேர்விட மில்லை மற்றோ ருலகில்லை பெயர்க்க லாகா
நீருடை யாடை யாளு நெளித்தனள் முதுகை யென்றால்
பார்பொறை நீக்கி னானென் றுரைத்ததெப் பரிசு மன்னோ.

[மிடைந்த-நெருங்கின. நீர்உடை ஆடையாள்-பூமிதேவி. எப்பரிசு-எவ்வண்ணம்].

குறிப்பு:—இப்பாசுரம், நாட்டுப் படலம் 20-வது செய்யுளிற் சொல்லியுள்ளதை மறுப்பது போல் நின்றுத் தயரதன் அளவற்ற சேனையுடையான் என்பதை மிக்க நயத்துடன் விளக்குகின்றது.

82. இன்னண மேகி மன்னன் யோசனை யிரண்டு சென்றான்
பொன்வரை போலு மிந்து சயிலத்தின் சாரல் புக்கான்
மன்மதக் களிறு மாதர் கொங்கையு மார னம்பும்
தென்வரைச் சாந்து நாறுஞ் சேனையு மிறுத்த தன்றே.

[மன்மதனது களிறு ஆகிய இருள் போன்ற கூந்தல் மாரன் அம்பாகிய மலர்களையும், மாதரது கொங்கைகள் பொதிய மலைச் சாந்தும், நாறும் சேனை சந்திரசைலத்தில் தங்கியது.]

---

15. வரைக்காட்சிப் படலம்.

தயரதன் பரிவாரங்களுடன் சந்திரசைலம் என்னும் மலையை அடைந்து தங்கியது.

தம்முடன் யானைமீது ஊர்ந்து வந்த மாதர்களை ஆடவர் இறக்கிவிட்டு அந்த யானைகளை மரங்களில் கட்டினார்.

1. கோவை யார்வடக் கொழுங்குவ டொடிதர நிவந்த
ஆவி வேட்டன வரிசிலை யனங்கன்மேற் கொண்ட
பூவை வாய்ச்சியர் முலைசிலர் புயத்தொடும் பூட்டத்
தேவ தாரத்துஞ் சந்தினும் பூட்டின சிலமா.

முலை.	யானை.
கோவை - ஆகாயத்தை	வரிசையாக
ஆர் - பொருந்திய	பொருந்திய
வட - வடக்கிலுள்ள	ஆலமரத்தின்
கொழும் - செழிப்பான	செழிப்பான
குவடு - (மேரு) மலை	கிளைகள்
ஒடிதர - நிகராகாது பின்னிட	ஒடிய (அவ்வளவு)
நிவந்த - உயர்ந்தனவும்,	உயர்ந்தனவும்,
ஆவி - ஆடவர்களது ஆவியை	தடாகத்தை
வேட்டன - விரும்பினவும்,	விரும்பினவும்,
வரிசிலை - கட்டு அமைந்த வில்லைத் தாங்கிய	கட்டு அமைந்த வில்லைத் தாங்கிய
அனங்கன் - மன்மதன் உருவத்தை	மன்மதன் போன்ற ஆடவர்களை
மேல் - தம்மேல்	தம்மேல்
கொண்டன - தொய்யிலாக எழுதப் பெற்றனவும்	ஏறக்கொண்டனவும் (ஆன)

ஆகிய, நாகணவாய்ப் புள்போல் பேசும் மாதர் தம் முலைகள் சில ஆடவர்கள் புயங்களுடன் அணைய சில யானைகள் தேவதார மரங்களிலும் சந்தன மரங்களிலும் கட்டப்பட்டன.

இறங்கிய பின்

பகைவனை வேரோடும் தொலைக்கும் வீரன்போல் ஒரு யானை மரத்தை வேரோடும் பறித்து மலைபோல் நடந்தது.

2. நேரொ டுங்கலில் பகையினை நீதியால் வெல்லும்
சோர்வி டம்பெறு வுணர்வினன் சூழ்ச்சியே போலக்
காரொ டுந்தொடர் கவட்டொடு மராமரக் குவட்டை
வேரொ டுங்கொடு கிரியென நடந்ததோர் வேழம்.

[நேர்-போர். சோர்விடம் பெறு-மறவாத. சூழ்ச்சி-உபாயம். கார்-மேகம். கவடு-கழுத்தில் கட்டும் கயிறு. குவடு-மரக்கிளை. கிரி-மலை]

3. திரண்ட தாளொடுஞ் செறிபணை மருதிடை யொடியப்
புரண்டு பின்வரு முரலொடு போனவன் போல
உருண்டு காலுறுடர் பிறகிடு தறியொடு மொருங்கே
இரண்டு மாமர மிடையிற நடந்ததோர் யானை.

(தனக்கு) பின் புரண்டு வரும் உரலொடு, திரண்டதாளும் நெடும் செறிந்த பணைகளும் உடைய மருது இடை ஒடிய போனவன் (ஆகிய கண்ணன்) போல—உருண்டு காலை தொடர்ந்து பிறகிடும் தறியொடு இரண்டு மா மரம் ஒருங்கு இடை இற ஓர் யானை நடந்தது. [திரண்ட-பருத்த. பணை-கிளை. பிறகிடும்-பின் ஆகும். தறி-கட்டுத் தூண்].

4. கதங்கொள் சீற்றத்தை யாற்றுவா னினியன கழறிப்
பதங்கொள் பாகனும் மந்திரி யொத்தனன் பன்னூல்
விதங்க ளாலவன் மெல்லென மெல்லென விளம்பும்
இதங்கள் கொள்கிலா மன்னனை யொத்ததோர் யானை.

(யானையின்) கதம் கொண்ட சீற்றத்தை ஆற்ற இனியன கழறி (அதை)பதம் கொள்கின்ற பாகன் (ஒரு) மந்திரியை ஒத்தனன். அவன் பலநூல் விதங்களால் மெல்லென மெல்லென விளம்பும் இதங்களை (ஏற்றுக்)கொள்கிலாத மன்னனை ஓர் யானை ஒத்தது. [கதம்-உக்கிரம். சீற்றம்-கோபம். கழறி-சொல்லி. பதங்கொள்—பதப்படுத்துகின்ற—அல்லது, பாதத்தைப் பிடித்துக்கொள்கிற. இதம்-நலம்பயப்பவை].

5. மாறு காண்கில தாய்நின்று மழையென முழங்கும்
தாறு பாய்கரி வனகரி தண்டத்தைத் தடவிப்
பாறு பின்செலக் காலெனச் செல்வது பண்டோர்
ஆறு போகிய வாறுபோ மாறுபோன் றதுவே.

மாறு காண்கிலதாய் நின்று மழை என முழங்கும் தாறு பாய்கின்ற கரியானது, வனத்திலுள்ள கரி (கள் சென்ற) தண்டத்தை தடவி (கொம்பிலுள்ள மாமிசம் வேண்டி) பாறுகள் (அதற்கு) பின் செல்ல, கால் என செல்வது—பண்டு ஓர் ஆறுபோகிய ஆற்றில் போகும் ஆறு போன்றது. [மாறு-பகை. மழை-மேகம். தாறு-அங்குசம். கரி-யானை. தண்டம்-யானை செல்லும் வழி. பாறு-பருந்து. கால்-காற்று. ஆற்றில்-வழியில்.] ஆற்றைக் குறிக்கின் :—பாறு-தோணி, கால்-வழி.]

6. பாத்த யானையின் பதங்களிற் படுமத நாறக்
காத்த வங்குச நிமிர்ந்திடக் கால்பிடித் தோடிப்
பூத்த வேழிலைப் பாலையைப் பொடிப்பொடி யாக்கிக்
காத்தி ரங்களாற் றலத்தொடுந் தேய்த்ததோர் களிறு.

பாத்த யானையின் பதம்களில் படும் மதம் நாற, ஓர் களிறு (அந்த மணத்தை) கால் பிடித்து (தன்னைப் பாகன்) காத்த அங்குசம் நிமிர்ந்திட ஓடி, பூத்த எழிலைப்பாலையை (அம்மரத்தின் மணம் யானையினது மணம்போல் இருத்தலால் அதனைப் பகையானை எனக்கருதி) பொடிப் பொடி ஆக்கி (அதைத் தன்) காத்திரம்களால் தலத்தொடும் தேய்த்தது. [பாத்த-பகுத்துக்கட்டிய. பதம்-வரிசை. படும்-பாயும். கால் பிடித்து-வாசனை பிடித்து. காத்திரம்-முன்னம்கால். தலம்-தரை.]

7. அலகி லானைக ளனேகமு மவற்றொ டுமிடைந்த
திலக வாணுதற் பிடிகளுங் குருளையுஞ் செறிந்த
உலவை நீள்வனத் தூதமே யொத்தன வூதத்
தலைவ னேயொத்துப் பொலிந்தது சந்திர சயிலம்.

அலகு இல்லாத ஆனைகள் அனேகமும், அவற்றொடும் மிடைந்த திலகம் அணிந்த வாள் பொருந்திய நுதல் உடைய பிடிகளும், (அவைகளின்) குருளையும் செறிந்தன. (அந்த அடர்ச்சி) உலவைகள் நீண்ட வனத்து (திரியும்) ஊதமே ஒத்தன. சந்திர சயிலம் அ ஊதத்தின் தலைவனே ஒத்து பொலிந்தது. [அலகு-அளவு. வாள்-ஒளி. நுதல்-நெற்றி. பிடி-பெண் யானை. குருளை-குட்டி. உலவை-கொம்பு. ஊதம்-யானைக்கூட்டம். மிடைந்த-நெருங்கிய.]

8. தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினு மவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவ ரெனுமிது வழக்கே
உருண்ட வாய்தொறும் பொன்னுரு ளுரைத்துரைத் தோடி
இருண்ட கல்லையுந் தன்னிற மாக்கிய விரதம்.

தெருண்ட மேலவர் சிறியவர்களை சேரினும், அவர்தம் (நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல்லை என்னும்) மருண்ட தன்மையை மாற்றுவர், என்னும் இது (உலக) வழக்கே. (ஆகையால்),' இரதங்கள், பொன் உருள் உருண்ட வாய்தொறும் பொன்னை உரைத்து

உரைத்து ஓடி, (மலையிற்கிடந்த) இருண்ட கல்லையும் தன் நிறம் ஆக்கி யன —(அன்றிப் பொன் இரதத்தில் கல்லினது நிறமே படியவில்லை). [தெருண்ட—அறிவில் தெளிந்த. மருண்ட—மயங்கிய. உருள்—சக்கரம். வாய்—இடம்]

குறிப்பு:— நன்மை தீமைகளைச் செவ்வனே தேர்ந்தவர்கள் சிறியோர்பால் சேர்வாராயின் அச்சேர்க்கையால் சிறியோர்க்கு நலம்வரின் வரலாகுமேயன்றி மேலோர் குணம் எவ்வகையாலும் மாசுருது. மற்றுச் சிற்றினம் சேராமை வேண்டியது, கடுகத்துணை தீயவித்து ஒருவன் உள்ளத்தில் கரந்து கிடக்குமாயினும், அது சகவாச பலத்தினுல் வேரூன்றிப் பாவப் பெரும்பணைகள் போக்கிவிடுதல் கூடுமென்பதைக் கருதியேயாகும். இச்சிந்தாத்தைக் கம்பர் மீண்டும் கோலங்காண் படலம் 9-வது திருவிருத்தத்தில் 'செய்பரைச் சேர்ந்துளாருஞ் செய்பராய்த் திகழ்வரன்றே' என எடுத்துக் காட்டுகின்ருர். அன்றியும், உள்ளும் புறமும் ஒருங்கே தூயவராய மேலோர், தம் சேர்க்கையால் சிறியோர்க்கு நற்பயன் உண்டாகாது, தமக்கே பழுதுபடிகின்றதெனை உணர்வாராயின் அம்மாத்திரையிலேயே, கீழ் 20-வது செய்யுளிற் காணும் பரிகள் போலத் தீயவருறவை உதறித்துறப்பர்.

9. கொவ்வை நோக்கிய வாய்களை யிந்திர கோபம்
கவ்வி நோக்கின வென்றுகொல் காட்டின மயில்கள்
நவ்வி நோக்கியர் நலங்கொண்மே கலைபொலஞ் சாயல்
செவ்வி நோக்கின திரிவன போல்வன திரிந்த.

(இதன் அழகை நாம் கவர வேண்டுமென்று) கொவ்வை (கனிகள் வெகுகாலமாய்) நோக்கிய வாய்களை (இப்பொழுது) இந்திர கோபங்கள் கவ்வி நோக்கின, என்று (எண்ணி) கொல், காட்டில் இனமாகிய மயில்கள், நவ்வி போன்ற நோக்கியர் (ஆகிய மாதர்களது) நலம்கொண்ட மேகலை (அணிந்த) பொலம் (மயமாகிய) சாயலின் செவ்வியை (தாமும் கவரவேண்டுமென்று) நோக்கி திரிவன போல்வனவாய் (அவர்களைச் சுற்றி) திரிந்தன. [இந்திர கோபம்—தம்பலப்பூச்சி. இனம்—கூட்டம். நவ்வி—மான். நலம், செவ்வி—அழகு].

10. உய்க்கும் வாசிக ளிழிந்திள வன்னத்தி னுதுங்கி
மெய்க்க லாபமுங் குழைகளு மிழைகளும் விளங்கத்
தொக்க மென்மர நிழல்படத் துவன்றிய சூழல்
புக்க மங்கையர் பூத்தகொம் பாமெனப் பொலிந்தார்.

உய்க்கும் வாசிகளினின்றும் இழிந்து, இள அன்னத்தைப்போல் ஒதுங்கி, தொக்க மெல் மரம் நிழல்பட துவன்றிய சூழல் புக்க மங்கையர் (தம்) மெய்யில் கலாபமும் குழைகளும் இழைகளும் விளங்க, (அதனால்) பூத்த கொம்பு ஆகும் என பொலிந்தார். [உய்க்கும்-ஏறி நடத்திய வாசி-குதிரை. ஒதுங்கி-நடந்து தொக்க-அடர்ந்த. துவன்றிய-நிறைந்த. சூழல்-இடம். கலாபம்-அரையில் அணியும் ஆபரணம். குழை-காதணி. இழை-ஆபரணம். பொலிந்தார்-தோன்றினார்].

தம் உருவ பிம்பம் பளிங்குக்கல்களில் தோன்ற மாதர் துயின்றார்.

11. தளங்கொ டாமரை யெனத்தளி ரடியினு முகத்தும்
வளங்கொண் மாலைவண் டலமர வழிவருந் தினராய்
விளங்கு தம்முருப் பளிங்கிடை வெளிப்பட வேறோர்
துளங்கு பாறையிற் றோழிய ரயிர்த்திடத் துயின்றார்.

(மாதர்கள்) வழி (நடந்ததால்) வருந்தினராய், (அவர்களது) தளிர் போன்ற அடிகளிலும் முகத்தும் (அவை) தளம் கொண்ட தாமரை என (எண்ணி) மாலையாக வண்டுகள் அலமர, விளங்கும் தம் உரு பளிங்கு இடை வெளிப்பட, (அவ்வுருதான் தம் தலைவியரோவென்று) தோழியர் அயிர்த்து இட, வேறு ஓர் துளங்கும் பாறையில் துயின்றார். [தளம்-இதழ். அயிர்த்து இட-சந்தேகப்பட].

12. பிடிபுக் காயிடை மின்னொடும் பிறங்கிய மேகம்
படிபுக் காலெனப் படிதரப் பரிபுரம் புலம்பத்
துடிபுக் காவிடைத் திருமக டாமரை துறந்து
குடிபுக் காலெனக் குடிபுக்கார் கொடியன்ன மடவார்.

மின் ஓடும் பிறங்கிய மேகம் படியில் புக்கால் என்ன, ஆயிடை (மாதர்களைத் தாங்கிய) பிடிகள் புக்கு படி தர, துடி (உவமையாக) புகாத இடை உடைய திருமகள் தாமரையை துறந்து குடிபுக்கால் என்ன, (பூங்) கொடி அன்ன மடவார், (யானைகளினின்றும் இறங்கித் தம்) பரிபுரம் புலம்ப (கூடாரங்களுக்குள்) குடிபுக்கார். [பிறங்கிய-விளங்கிய. படி-தரை. பிடி-பெண் யானை. பரிபுரம்-சிலம்பு].

13. உண்ணமுத மூட்டியிளை யோர்நகர் கொணர்ந்த
துண்ணெனு முழக்கின துருக்கர்தர வந்த
மண்மகடன் மார்பினணி வன்னசர மென்னப்
பண்ணியல் வயப்பரிகள் பந்தியி னிரைத்தார்.

இளையோர் உண்ணும் அமுதத்தை ஊட்டி நகரிலிருந்து கொணர்ந்தனவும், துண் என்னும் முழக்கினவும், துருக்கர் தர வந்தனவும், பண் இயன்றனவும் (ஆகிய) வயம் (பொருந்திய) பரிகளை, மண்மகள் தன்

மார்பின் அணிந்த (பல) வன்னம் (அமைந்த) சரம் என்ன, பந்தியின் நிரைத்தார். [துண் எனும்-அச்சம் தருகின்ற. வன்னம்-நிறம். பண்-குதிரைக்கிடும் கல்லணே. வயம்-வெற்றி. நிரைத்தார்-முறையாகக் கட்டினுர்.]

14. நீர்திரை நிரைத்தவென நீடிரை நிரைத்தார்
ஆர்கலி நிரைத்தவென வாவண நிரைத்தார்
கார்நிரை யெனக்களிறு காவிடை நிரைத்தார்
மாருத நிரைத்தவென வாசிக ணிரைத்தார்.

[திரை-அலை, திரைச்சீலை. ஆர்கலி-கடல். ஆவணம்-கடைத்தெரு. கார்-மேகம். நிரை-வரிசை. கா-சோலை. மாருதம்-காற்று. வாசி-குதிரை]

15. நடிக்குமயி லென்னவரு நவ்விவிழி யாரும்
வடிக்குமயில் வீரரு மயங்கினர் திரிந்தார்
இடிக்குமுர சக்குரலி னெங்குமுரல் சங்கின்
கொடிக்களி னுணர்ந்தரசர் கோநக ரடைந்தார்.

நடிக்கும் மயில் என்ன வரும் நவ்விபோன்ற விழியாரும், வடிக்கும் அயில் உடைய வீரரும், இடிக்கும் முரசங்களின் குரலினுலும் எங்கும் முரல்கின்ற சங்கினுலும் மயங்கி (அவரவர் சேரவேண்டிய இடம் எது என்பது தெரியாது) திரிந்தார். (ஆனுல்), (கட்டியுள்ள) கொடிகளால் உணர்ந்து (தம் தம்) கோநகர்களை அடைந்தார். [வடிக்கும் அயில்-கூராக்கியிருக்கின்ற வேல். கோநகர்-இராஜக்ரஹம்.]

மாதர் தூசுதீர்ந்து விளக்கிய பதுமைபோல் பொலிந்தனர்.

16. மிதிக்கநிமிர் தூளியின் விளக்கமறு மெய்யைச்
சுதைக்கணுரை யைப்பொருவு தூசுகொடு தூய்தா
உதிர்த்தன ரிளங்குமர ரோவியரி லோவம்
புதுக்கின ரெனத்தருண மங்கையர் பொலிந்தார்.

மிதிக்க நிமிர்ந்த தூளியினுல் விளக்கம் அற்ற (தம்மாதர்களது) மெய்யை, இளம் குமரர் ஓவியரைப்போல், சுதையின் கண் உள்ள நுரையை பொருவும் தூசுகொண்டு தூய்து ஆக உதிர்த்தனர். (அப்பொழுது அந்த), தருண மங்கையர், ஓவம் புதுக்கினர் என பொலிந்தார். [மெய்-சரீரம். சுதை-பால். பொருவும்-ஒக்கும். தூசு-துகில். தருண-இள. ஓவியர்-சித்திரம் வரைவோர். ஓவம்-சித்திரம். புதுக்கினர்-புதியதாக்கினர்.]

17. தாளுயர் தடக்கிரி யிழிந்துதரை சேரும்
கோளரி யெனக்கரிகொள் கொற்றவ ரிழிந்தார்
பாளைவிரி யொத்துலவு சாமரை படப்போய்
வாளெழ நிரைத்தபட மாடமவை புக்கார்.

தாள் உயர்ந்த தடம் கிரியினின்று இழிந்து தரையை சேரும் கோள் பொருந்திய அரி என, கரிகள் (மேல்) கொண்ட கொற்றவர் இழிந்தார். (இறங்கி), விரிந்த பாளையை ஒத்து உலவும் சாமரை (காற்று) பட போய், வாள் எழ நிரைத்த படமாடம் அவை புக்கார். [கிரி-மலை. கோள்-வலி. அரி-சிங்கம். கரி-யானை. கொற்றவர்-அரசர். வாள்-ஒளி. படமாடம்-கூடாரம்.]

படமாடத்தில் மாதர் நடமாடியது பாற்கடலில் சந்திர விம்பம் தோன்றியது போன்றிருந்தது.

18. தூசினெடு வெண்பட முடைக்குடில்க டோறும்
வாசநகை மங்கையர் முகங்கள்மழை வானில்
காசின்மதி யின்கதிர் வழங்குநிழ லெங்கும்
வீசுதிரை வெண்புனல் விழுங்கியன போலும்.

தூசினல் ஆகிய நெடும் வெண்படம் உடைய குடில்கள்தோறும் (இயற்கை) வாசம் பொருந்திய நகையை உடைய மங்கையர்களது முகங்கள்—மழைகள் (உலாவப்பெற்ற) வானில் உள்ள காசு இல்லாத மதியின் கதிர் வழங்குகின்ற நிழலை, வீசுகின்ற திரைகளையுடைய வெண்மையான புனலோடு கூடிய பால்கடல், எங்கும் விழுங்கியன போலும். [தூசு-சீலை. மழை-மேகம். காசு-குற்றம். நிழல்-பிரதி விம்பம். திரை-அலை].

19. மண்ணுற விழுந்துநெடு வானுற வெழுந்து
கண்ணுதல் பொருந்தவரு கண்ணனில் வருங்கார்
உண்ணிற நறும்பொடியை வீசியொரு பாகம்
வெண்ணிற நறும்பொடி புனைந்தமத வேழம்.

மண் உற விழுந்து (தனது) கார் (நிறத்தை) உண்ட நறும்பொடியை வீசி (விட்டு) ஒரு பாகம் வெண் நிற நறும் பொடியை புனைந்த (ஒரு) மதவேழம், கண் நுதல் (ஆகிய பரமசிவன்) பொருந்த (கற்பகாலத்தில்) வரும் கண்ணனைப்போல் வான்உற எழுந்து வரும். [வேழம்-யானை]

கால் தரையில் படாது குதிரைகள் விரைந்தோடின.

20. தீயவரொ டொன்றிய திறத்தரு நலத்தோர்
ஆயவரை யந்நிலை யறிந்தனர் துறந்தாங்
கேயவரு நுண்பொடி படிந்துட னெழுந்தே
பாய்பரி விரைந்துதறி நின்றன பரந்தே.

தீயவரோடு ஒன்றிய, திறத்தை உடைய அருமையாகிய நலத்தோர், ஆயவரை அ நிலை அறிந்து துறந்தாங்கு, ஏய வரும் நுண்பொடிபடிந்த உடன் பாய்கின்ற பரிகள் எழுந்து (அப்புழுதியை) விரைந்து உதறி பரந்து நின்றன. [ஆயவரை-அத்தகையவரை. ஏய-பொருந்த].

ஞானிகளுக்கும் குதிரைக்கும் சிலேடை.

21. மும்மைபுரி வன்கயிறு கொய்துசெயன் மொய்ம்பால்
தம்மையுமு ணர்ந்துதரை கண்டுவிரை கின்ற
அம்மையினொ டிம்மையை யறிந்துநெறி செல்லும்
செம்மையவ ரென்னநனி சென்றன துரங்கம்.

குதிரை.	ஞானி.
மும்மைபுரி-மூன்று புரியாகிய	ஆணவம் கன்மம் மாயை என்னும் மூன்றாகிய
வன்கயிறு-வலியகயிற்றை	கொடிய பாசத்தை
கொய்து-அறுத்து,	விலக்கி,
செயல்-போர் முதலிய செயல்களின்	கர்மத்தின்
மொய்ம்பால்-வலியால்	பலத்தினால்
தம்மையும்-தம் திறத்தையும்	பசுக்களாகிய தம் இலக்கணத்தையும்
உணர்ந்து-அறிந்து,	தேர்ந்து,
தரைகண்டு-பூமியைப் பார்த்துக் கொண்டு;	உலகத்தின் இயல்பையும் தெளிந்து,
விரைகின்ற-வேகமாய்ச் செல்கின்ற	முத்தியைக் கருதிச் செல்கின்ற
அம்மையினொடு-சுயேச்சை அடையப் போகும் அவ்விடத்தினது தன்மையையும்	பிறப் பிறப்பற்ற மறுமையின் தன்மையையும்
இம்மையை-தற்காலம் பாகற்கடங்கி இருந்ததையும்	இகலோக பந்தங்களையும்
அறிந்து-சீர் தூக்கிப்பார்த்து,	சீர்தூக்கிப்பார்த்து,
நெறிசெல்லும்-காட்டு வழி செல்லும்	நல்நெறி செல்லும்
	செம்மையவர்என்ன

துரங்கம் நனி சென்றன.

குறிப்பு:—முன் எழுச்சிப் படலம் 59-வது செய்யுளும் இச்செய்யுளும் ஒரே கருத்தை இருமுறை கூறப்பெற்றன அல்ல. அங்குச் சம்சார பயங்களுக்கு வெருவி, கர்ம பாரங்களை உதறி, மயல்தரும் மாதரை இரியல் போக்கிப் பாசா பந்தங்களை வலியின் அறுத்துத் துன்பம் மாத்திரம் நீங்கிய யோகிக்கு இருஷபமும், இங்கு ஸம்ஸாரத்திலிருந்தே ஆசா பாசங்களை விலக்கித் தாம் செய்யவேண்டிய கர்மங்களை நிஷ்காம்யமாக ஆற்றி, இருமையின் பயனையும் நன்கு

ஆராய்ந்து நன்னெறி படரும் ஞானிகளுக்குக் குதிரையும் பொருத்தமான உவமைகளாய் அமைந்த நுண்ணிய வேறு பாடு கருதத்தக்கது.

அலையிடையில் கபல்களென்னத் திரைச்சீலைகளுக்கிடையில்
கழங்காடும் மாதர்களது கண்கள் காணப்பட்டன.

22. விழுந்தபனி யன்னதிரை வீசுபுரை தோறும்
கழங்குபயின் மங்கையர் கருங்கண்மிளிர் கின்ற
தழங்குதளி சிந்திப சலம்பயி றரங்கத்
தெழுந்திடை பிறழுந்தொளிர் கொழுங்கபல்க ளென்ன.

[திரைவீசுபுரை-திரையைக்காற்று எறிவதனால் உண்டாகும் இடைவெளி. தழங்கு-ஒலிக்கின்ற. தளி-துளி. தரங்கம்-அலை].

23. வெள்ளநெடு வாரியற வீசியுள வேனும்
கிள்ளவெழு கின்றபுனல் கேளிரின் விரும்பித்
தெள்ளுபுன லாறுசிறி தேயுதவு கின்ற
உள்ளது மறாதுதவும் வள்ளலையு மொத்த.

தெள்ளிய புனல் உடைய ஆறுகள், வெள்ளமாகிய(தம்)நெடுவாரியை அற (அரச பரிவாரங்களுக்கு) வீசி உளவேனும் (இன்னும்) கிள்ள எழுகின்ற புனலை சிறிதே உதவுகின்றன. (ஆகலால் அவை) (இரப் போரை) கேளிர்போல் விரும்பி (தம்மிடத்து) உள்ளதை மறவாது உதவும் வள்ளலை ஒத்தன. [புனல், வாரி-நீர். அற-வறள. வீசி-கொடுத்து. கேளிர்-உறவினர்.]

குறிப்பு:—உள்ளி உள்ளவெல்லம் உவந்தீயும் வள்ளியோரைப்போன்ற மேகத்தினடத்தினின்றே ஆறுகள் நீர் பெறுகின்றன வாதலின் தாம்கொண்ட தன்மையேபோல் நீரை பிறர்க்குக் கொடுத்தும் விடுகின்றன. மேலோர்கைத் தானம் தழைப்பது இவ்வாறாகும்.

24. துன்றிநெறி பங்கிக டுளங்கவழ லோடும்
மின்றிரிவ வென்னமணி யாரமிளிர் மார்பர்
மன்றன்மண நாறுபட மாடநுழை கின்றார்
குன்றின்முழை தோறுநுழை கோளரிக ளொத்தார்.

துன்றி நெறித்த பங்கிகள் துளங்க அழலோடு மின் திரிவன என்ன மணி ஆரம் மிளிர்கின்ற மார்பர், மன்றல் மணம் நாறும் படமாடம் நுழைகின்றார். (அப்பொழுது அவர்) குன்றின் முழைதோறும்

நுழைகின்ற கோளரிகளை ஒத்தார். [துன்றி-அடர்ந்து. பங்கி-சிகை. மின்-மின்னல். முழை-குகை. கோளரி-ஆண்சிங்கம்]

25. நெருங்கயி லெயிற்றநெறி செம்மயிரி னெற்றிப்
பொருங்குலிக மப்பியன போர்மணிக ளார்ப்ப
பெருங்களி றலைப்புனல் கலக்குவன பெட்டுக்
கருங்கடல் கலக்குமது கயிடவரை யொத்த.

நெருங்கிய அயில்போன்ற எயிற்றை உடையனவாகியும், நெறித்த செம்மயிரினையுடைய நெற்றியில் பொரும் குலிகம் அப்பியனவாகியும், (ஒன்றோடொன்று) போர் (செய்வதுபோல் கழுத்தில் கட்டிய) மணிகள் ஆர்ப்ப, பெரும் களிறுகள் அலைகளுடைய புனலை பெட்டு கலக்குவன. (அவை) கரும் கடலை கலக்கும் மதுகைடவரை ஒத்தன. [பொரும் குலிகம்-நிகரற்ற சாதிலிங்கம். பெட்டு-விரும்பி. கரும் கடல்-பெரிய கடல்.]

26. ஒக்கநெறி யுய்ப்பவ ருரைத்தகுறி கொள்ளா
பக்கமின மொய்க்கய லலைக்கநனி பாரா
கைக்கரி மதத்தவிலை மாதர்கலை யல்குல்
புக்கவரை யொத்தன புனற்சிறைக ளேறு.

(இருவருக்கும்) ஒக்க (சரியான) நெறியில் உய்ப்பவர் (ஆன பாகர்) உரைத்த குறிகளை கொள்ளாதனவாகி, (தமது) பக்கத்தில் இனமான மொய் உடைய கயல்கள் நனி அலைக்க பாராதனவாகி, மதத்தனவான (துதிக்)கையையுடை கரிகள், புனல் சிறைகளை (விட்டு) ஏறுதன ஆயின. (ஆகையால் அவை, நற்புத்தி கூறுவோர் வார்த்தைகளைக் கேளாமல், மனைவியினது கயல்போன்ற கண்கள் எப்பொழுதும் விலைமகளை விடுத்துத் தன்னலம்கொள்ள இரந்து நோக்கிய வண்ணமாயிருத்தலையும் மதியாது) விலை மாதர்களது (பல ஆடவர்களது சேக்கையால்) கலைந்த அல்குலில் புக்கவரை ஒத்தன. [இனம்-கூட்டம். மொய்-வலி. புனல் சிறை-நீர்நிலை.]

27. துகிலிடை மடந்தையரொ டாடவர் துவன்றிப்
பகலிடைய வட்டிலின் மடுத்தெரி பரப்பும்
அகிலிடு கொழும்புகை யழுங்கலின் முழங்கா
முகில்படு நெடுங்கடலை யொத்துள தம் மூதூர்.

துகில் (மாடங்களின்) இடையில் மடந்தையரொடு ஆடவர் துவன்றி, வட்டிலில் எரிமடுத்து பகல் இடைய பரப்பும் அகில் இடுகின்ற கொழும்புகை அழுங்கல் இல்லாது முழங்கி (அதனால்) அ மூதூர் முகில்கள் (தோய்ந்து) படுகின்ற நெடும் கடலை ஒத்து உளது.

[துவன்றி-நெருங்கி. வட்டில்-புகை இடும் வள்ளம். எரிமடுத்து தீ மூட்டி. பகல் இடைய-சூரியன் மறைய. அழுங்கல்-கெடுதல்].

28. கமருறு பொருப்பின் வாழும் விஞ்சையர் காண வந்தார்
தமரையு மறியார் நின்று திகைப்புறு தகைமை சான்ற
குமரரு மங்கை மாருங் குழுவலால் வழுவி விண்ணின்
றமரர்நா டிழிந்த தென்னப் பொலிந்ததவ் வனீக வெள்ளம்.

கமர்உற்ற பொருப்பில்வாழும் விஞ்சையர் (அப் படமாட ஊரை) காண வந்தாராய் (தம்மொடு வந்த) தமரையும் (அவ்வூராருடன் கலக்க வித்தியாசம்) அறியாராய் நின்று, திகைப்பு உறும் தகைமைசான்ற குமரரும் மங்கைமாரும் குழுவலால், அ அனீகவெள்ளம் அமரர் நாடு விண் நின்று வழுவி இழிந்தது என்ன பொலிந்தது. [கமர்-பிளவு. பொருப்பு-மலை. விஞ்சையர்-வித்யாதரர். குழுவல்-கூடுதல். அனீக வெள்ளம்-சேனை வெள்ளம்.]

29. வெயினிறங் குறைபச் சோதி மின்னிழல் பரப்ப முன்னாள்
துயிலுணர் செவ்வி யோருந் துனியுறு முனிவி னோரும்
குயிலொடு மினிது பேசிச் சிலம்பொடு மினிது கூவி
மயிலினந் திரிவ தென்னத் திரிந்தனர் மகளி ரெல்லாம்

முன்னாள் (நாயகருடன்கூடி) துயில் உணர்ந்த செவ்வியோரும், (பிணங்கி) துனி உற்ற முனிவினோரும் (ஆகிய) மகளிர் எல்லாம், (தம் தேகத்தின்) சோதி, வெயிலின் நிறம் குறையும்படி, மின்னினது நிழலை பரப்ப, (அங்கு) குயிலொடு இனிது பேசியும், (எதிரொலிக்கெதிரொலி யாய்) சிலம்பொடு இனிது கூவியும், மயில் இனம் திரிவது என்ன திரிந்தனர். [வெயில் நிறம் குறைய-சூரியனது ஒளிகெட. நிழல்-பிரகாசம். துயிலுணர் செவ்வியோர்-நித்திரை நீங்கிய நலத்தை உடையோர். துனி-ஊடல். சிலம்பு-மலை.]

30. தாளிணை கழல்க ளார்ப்பத் தாரிடை யளிக ளார்ப்ப
வாள்புடை யிலங்கச் செங்கேழ் மணியணி வலய மின்னத்
தோளென வுயர்ந்த குன்றின் சூழல்க ளினிது நோக்கி
வாளரி திரிவ தென்னத் திரிந்தனர் மைந்த ரெல்லாம்.

மைந்தர் எல்லாம்— தாள் இணைகளில் கழல்கள் ஆர்ப்பவும், தாரின் இடையில் அளிகள் ஆர்ப்பவும், வாள்கள் புடையில் இலங்கவும், செம் கேழ்பொருந்திய மணியால் ஆகிய அணிகளும் வலயமும் மின்னவும்,-- (தம்) தோள்கள் என உயர்ந்த (அந்த) குன்றின் சூழல்களை இனிது நோக்கி, வாள் (தங்கிய) அரிகள் திரிவன என்ன, திரிந்தனர். [தார்-மாலை. அளி-வண்டு. கேழ்-நிறம். வலயம்-தோளணி. வாள்-ஒளி. அரி-சிங்கம். சூழல்-இடம்].

இனிச் சந்திரசைலத்தின் நிலைமை உரைப்போம்.

31. சுற்றிய கடல்க ளெல்லாஞ் சுடர்மணிக் கனகக் குன்றைப்
பற்றிய வளைந்த தென்னப் பாசறை வந் திறுத்த சேனைக்
கொற்றவன் றேவி மார்கண் மைந்தர்கள் கொம்ப னார்வந்
துற்றவர் காண வுற்ற மலைநிலை புரைத்து மன்றோ.

ஆண் யானைகள் மரக்கிளைகளை யொடித்துத் தம் பிடிகளுக்குக் கொடுத்தன.

32. பம்புதேன் மிஞிறு தும்பி பரந்திசை பாடி யாட
உம்பர்வா னகத்து நின்ற வொளிவளர் தருவி னெங்கும்
கொம்புகள்பனைக்கைநீட்டிக்குழையொடுமொடித்துக்கோட்டுத்
தும்பிக ளுயிரே யன்ன துணைமடப் பிடிக்கு நல்கும்.

[பம்பும்-நெருங்கிய. தேன், மிஞிறு, தும்பி-வண்டு. தரு-தேவலோகத்துப் பஞ்சதருக்கள். குழை-தளிர். கோட்டுத் தும்பிகள்-தந்தங்களையுடைய ஆண் யானைகள்.]

33. பண்மலர் பவளச் செவ்வாய்ப் பனிமலர் குவளை யன்ன
கண்மலர்க் கொடிச்சி மார்க்குக் கணித்தொழில் புரியும் வேங்கை
உண்மலர் வெறுத்த தும்பி புதியதே னுதவு நாகத்
தண்மல ரென்று வானத் தாரகை தாவு மன்றே.

பண்கள் மலர்கின்ற பவளம்போன்ற செவந்த வாயையும் பனி (பொருந்திய)குவளை (மலர்)அன்ன கண்மலர்களையும் உடைய கொடிச்சிமார்க்கு கணித்தொழில் புரிகின்ற வேங்கை மரத்தின் (தாம்) உண்ட மலர்களை வெறுத்த தும்பிகள், வானத்தில் உள்ள தாரகைகளை, புதிய தேன் உதவும் நாகமரத்தின் தண்மலர் என்று (எண்ணி அவைகள்பால்) தாவும். [பண்-இசை. கொடிச்சி-குறத்தி. கணித்தொழில்-ஜோதிடம். தும்பி-வண்டு. தாரகை-நக்ஷத்திரம். நாகம்-புன்னைமரம்].

குறிப்பு:—கணித்தொழில் புரியும் வேங்கை:—வேங்கை மலரக் குறத்தியர் தினைக்கதிர் கொய்து தினைப் புனம் காவலொழிந்து தம் குறிச்சி சேர்வர் என்பர்.

34. மீனெனும் பிடிக ளோடும் விளங்கும்வெண் மதிநல் வேழம்
கூனல்வான் கோடு நீட்டிக் குத்திடக் குமுறிப் பாயும்
தேனுகு மடையை மாற்றிச் செந்தினைக் குறவர் முந்தி
வானநீ ராறு பாய்ச்சி யைவனம் விளைப்பர் மாதோ.

(விண்) மீன் எனும் பிடிகளோடு விளங்கும் வெண்மதியாகிய நல் வேழம், (தன்) கூனலாகிய வான் கோட்டை நீட்டி (அம்மலைமேல் உள்ள தேன் கூடுகளை) குத்தி இட, செந்தினை (கொல்லைகள் உடைய) குறவர், குமுறி பாயும் தேன் உகும் மடையை மாற்றி, முந்தி வானம் ஆற்றின் நீரை பாய்ச்சி ஐவனம் விளைப்பர். [மீன்-நக்ஷத்திரம். கோடு-இருபுற நுனிகள். வான ஆறு-ஆகாய கங்கை. ஐவனம்-மலை நெல். முந்தி-முன்போல்].

35. குப்புறற் கருமை யாலக் குலவரைச் சாரல் வைகி
ஒப்புறத் துளங்கு கின்ற வுடுபதி யாடி யின்கண்
இப்புறத் தேயுங் காண்பார் குறத்திய ரியைந்த கோலம்
அப்புறத் தேயுங் காண்பா ரரம்பைய ரழகு மாதோ.

குப்புறற்கு அருமையால் அ குலவரையின் சாரலில் வைகி (மாதர் முகங்களுக்கு) ஒப்பு உற துளங்குகின்ற உடுக்களுக்கு பதி (ஆகிய சந்திரனாகிய இருபுறமும் நிழல் காட்டும்) ஆடியின்கண் குறத்தியர் (தமது) இயைந்த கோலத்தை இப்புறத்தேயும் காண்பார். அரம்பையர் (தமது) அழகை (சந்திரனாகிய அக்கண்ணாடியில்) அப்புறத்தேயும் காண்பார். [குப்புறற்கு-கடப்பதற்கு. குலவரை-சிறந்த மலை. உடு-நக்ஷத்திரம். ஆடி-கண்ணாடி.]

36. உதியுறு துருத்தி யூது முலையுறு தீயும் வாயின்
அதிவிட நீரும் நெய்யு முண்கிலா தாவி யுண்ணும்
கொதிநுனை வேற்கண் மாதர் குறத்தியர் நுதலி னோடு
மதியினை வாங்கி யொப்புக் காண்குவர் குறவர் மன்னோ.

(காற்றுகொள்ளுதலால்) உதிஉற்ற துருத்தியால் ஊதும் உலையில் உற்ற தீயும், அதி விடமும், நீரும், நெய்யும் உண்கிலாது, வாயின் (ஆடவர்களது) ஆவியை உண்ணும் கொதிக்கின்ற நுனையுடைய வேல் (ஒன்று உளதாயின் அது போன்ற) கண்களையுடைய மாதர் குறத்தியர்களது நுதலினோடு மதியினை வாங்கி (எது அழகிற் சிறந்ததென்று) குறவர் ஒப்பு காண்குவர். [உதி-பருத்தல். உண்கிலாது-ஏற்காமல். வாயின்-வாய்ப்பின், கிடைத்தால். மாதர்-மாதர்களாகிய, அழகிய. நுதல்-நெற்றி] தீயில் காய்ச்சி நீரில் துவைத்து விடம் நெய் பூசப்பெற்ற பின்னே வேல்கள் ஆடவர் உயிரை உண்ணக்கூடியவாகின்றன. மாதர்கண்ணோ இவையொன்றுமில்லாமலே அவ்வுயிரைக் குடிக்கின்றன, என்பது முன்னிரண்டடிகளின் கருத்து.

37. பேணுதற் கரிய சீயக் குருளையும் பிடிக ளீன்ற
காணுதற் கினிய வேழக் கன்றொடு களிக்கு முன்றில்
கோணுதற் குரிய திங்கட் குழவியுங் குறவர் தங்கள்
வாணுதற் கொடிச்சி மாதர் மகவொடு தவழு மாதோ

பிடிகள் ஈன்ற காணுதற்கு இனிய வேழத்தின் கன்றொடு களிக்கும் முன்றிலில், பேணுதற்கு அரிய சீயத்தின் குருளையும், கோணுதற்கு உரிய திங்கள் குழவியும், குறவர் தங்களது (மனைவியர் ஆகிய) வாள் போன்ற நுதல்பொருந்திய கொடிச்சி மாதரது மகவொடு தவழும். [பேணுதற்கு-வளர்ப்பதற்கு. சீயக்குருளை-சிங்கக்குட்டி. முன்றில்-முற்றம். களிக்கும்-விளையாடும்.]

38. அஞ்சனக் கிரியி னன்ன வழிகவுள் யானை கொன்ற
வெஞ்சினத் தரியின் றிண்காற் சுவட்டொடு விஞ்சை வேந்தர்
குஞ்சியந் தலத்து நீலக் குலமணித் தலத்து மாதர்
பஞ்சியங் கமலம் பூத்த பசுஞ்சுவ டுடைத்து மன்னோ.

(அம்மலை) நீல குலமணி தலங்களில்—(அருவி பாய்கின்ற) அஞ்சன கிரி அன்ன (மதநீர்) வழிகின்ற கவுள் உடைய யானையை கொன்ற வெம் சினத்து அரியின் திண்ணிய (செவந்த) கால் சுவடு, (அதன் பக்கத்தில்) விஞ்சை வேந்தர்களது குஞ்சி அம் தலத்து (ஊடினராய் உதைத்து நின்ற) மாதர்களது செம்பஞ்சி (ஊட்டிய) அம் கமலம் போன்ற (கால்பட்டு) பூத்த (மற்றொரு) பசும் சுவடும் உடையது. [நீல குலமணி தலம்-சிறந்த மரகதப் பாறை. அஞ்சனக்கிரி-கரிய மலை. கவுள்-மதம் பாயுமிடம். அரி-சிங்கம்.]

39. செங்கய லனைய நாட்டஞ் செவியுறா முறுவ றோன்றா
பொங்கிருங் கூந்தல் சோரா புருவங்க ணெரியா பூவின்
அங்கையு மிடறுங் கூட்டி நரம்பளைந் தமிர்த மூறும்
மங்கையர் பாடல் கேட்டுக் கின்னர மயங்கு மாதோ.

(அந்த மலையில்) செம்கயல் அனைய நாட்டம் (ஆடி) செவியை உறாமலும், முறுவல் தோன்றாமலும், பொங்கு இரும் கூந்தல் சோராமலும் புருவங்கள் நெரியாமலும் (அல்லது புருவம் கண்மீது நெரியாமலும்) (தாமரை,) பூ போன்ற அம் கையும் மிடறும் கூட்டி (யாழின்) நரம்பை அளைந்து அமிர்தம் ஊறும் மங்கையர் (பாடும்) பாடலை கேட்டு, கின்னரம் (நம்மினத்தினன்றி இன்னணம் இனிமையாய் இசை கூட்டவல்லார் உளரோ என) மயங்கும். [முறுவல்-பல். பொங்கிரும்-பொங்கியிருந்த. நெரியா-சாயாமலும். மிடறு-தொண்டை. கின்னரம்-இசையறியும் ஒரு பறவை. நாட்டம்-கண்].

40. கள்ளவிழ் கோதை மாதர் காதொடு முறவு செய்யும்
கொள்ளைவாட் கண்ணி னார்தங் குங்குமக் குழம்பு தங்கும்
தெள்ளிய பளிக்குப் பாறைத் தெளிசுனை மணியிற் றேய்த்த
வள்ளமு நறவு மென்ன வரம்பில பொலிவ மன்னோ.

(ஆடவர் உயிரை) கொள்ளை (கொள்ளும்) வாள் போன்ற, காதோடும் உறவு செய்யும், கண்ணினார் (ஆகிய) கள் அவிழ்கின்ற கோதை (சூடிய) மாதர்தம் குங்கும குழம்பு தங்கும் தெள்ளிய பளிங்குபாறை (களுக்கு இடையே இருக்கும்) தெளிந்த (நீர் உடைய) சுனைகள், மணியில் தேய்த்த வள்ளமும் (அதில் வார்த்திருக்கும்) நறவும் என்ன வரம்பில வாய் பொலியும். [வள்ளம்-கிண்ணம். நறவு-தேன்.]

41. ஆடவ ராவி சோர வஞ்சன வாரி சோர
ஊடலிற் சிவந்த நாட்டத் தும்பர்தம் மரம்பை மாதர்
தோடலர் கோதை நின்றுந் துறந்தமந் தார மாலை
வாடல நறவ ருந வயின்வயின் வயங்கு மாதோ.

ஆடவர்களது ஆவி சோரவும் (தமது) அஞ்சனம் (தோய்ந்த கண்) வாரி சோரவும், ஊடலில் சிவந்த நாட்டத்தினரான உம்பர்தம் (மனைவியராகிய) அரம்பை மாதர், (தமது) கோதைநின்றும் துறந்த தோடு அலர்ந்த பூந்தாரமாலைகள் வாடலவாய் நறவு அருந்தனவாய் வயின்வயின் (அம்மலைமீது) வயங்கும். [அஞ்சனம்-மை. வாரி-நீர். உம்பர்-தேவர். கோதை-கூந்தல். தோடு-இதழ். வயின்வயின்-இடந்தோறும்.]

42. மாந்தளி ரனைய மேனிக் குறத்தியர் மாலை சூட்டிக்
கூந்தலின் கமுகின் பாளை குழலினோ டொப்புக் காண்பார்
ஏர்திழை யரம்பை மாத ரெரிமணிக் கடகம் வாங்கிக்
காந்தளம் போதிற் பெய்து கைகளோ டொப்புக் காண்பார்.

[கூந்தல்கமுகு-ஒரு விதப் பாக்குமரம். குழல்-கூந்தல். காந்தள்-ஒரு வகைப்பூ. பெய்து-பூட்டி]

43. சரம்பயில் சாப மென்னப் புருவங்க டம்மி னாட
நரம்பினோ டினிது பாடி நாடக மயிலோ டாடி
அரம்பையர் வெறுத்து நீத்தவவிர்மணிக்கோவையாரம்
மரம்பயில் கடுவன் பூண மந்திகண் டுவக்கு மாதோ.

அரம்பையர், சரம்பயில்கின்ற சாபம் என்ன புருவங்கள் தம்மின் ஆட, (வீணையின்) நரம்பினோடு இனிதுபாடி மயிலொடு நாடகம் ஆடி, வெறுத்து நீத்த அவிர்கின்ற மணிக்கோவையையும் ஆரத்தையும் (அம்மலையின் மீது) மரத்தில் பயில்கின்ற கடுவன் (எடுத்து) பூண (அதை) கண்டு மந்தி உவக்கும்.. [சரம்பயில்கின்ற-அம்பு பிரயோகிக்கின்ற. சாபம்-வில். அவிர்-விளங்குகின்ற. ஆரம்-முத்துமாலை. பயில்கின்ற-சஞ்சரிக்கின்ற. கடுவன்-ஆண்குரங்கு. மந்தி-பெண்குரங்கு.

44. சாந்துசாய் தடங்க டோறுந் தாதுரா கத்திற் சார்ந்த
கூந்தலம் பிடிக ளெல்லாங் குங்கும மணிந்த போலும்
காந்தின மணியின் சோதி கதிரொடுங் கலந்து மூசச்
சேந்துவா னகமெப் போதுஞ் செக்கரை யொக்கு மாதோ.

சாந்துகள் (தழைத்து) சாய்கின்ற (மலை) தடங்கள்தோறும் (உள்ள) தாதுராகத்தில் சார்ந்த கூந்தலுடைய அம்பிடிகள் எல்லாம் குங்குமம் அணிந்தபோலும். காந்தும் மணி இனத்தின் சோதி கதிரொடும் கலந்து மூச (அதனால்) வானம் செவந்து எப்போதும் செக்கரை ஒக்

கும். [சாந்து-சந்தனமரம். தடம்-மலைச்சாரல். தாதுராகம்-காவிக்கல். காந்தும்-ஒளி வீசும். கதிர்-சூரியன். மூச-மொய்க்க. செக்கர்-அந்தி வானம்.]

45. நிலமகட் கணிக மென்ன நிறைகதிர் முத்தஞ் சிந்தி
மலைமகள் கொழுநன் சென்னி வந்துவீழ் கங்கை மான
அலகில்பொன் னலம்பி யாரஞ் சார்ந்துவீ ழருவி மாலை
உலகளந் தவன்றன் மார்பி னுத்தரீ யத்தை யொத்த.

[மான-நிகர்க்க. அலகில்-அளவில்லாத. ஆரம்-முத்து, சந்தனம்]

46. கோடுலா நாகப் பூவோ டிலவங்க மலருங் கூட்டிச்
சூடுவார் களிவண் டோச்சித் தூநறுந் தேற லுண்பார்
கேடிலா மகர யாழிற் கின்னர மிதுனம் பாடும்
பாடலா லூட னீங்கும் பரிமுக மாக்கள் கண்டார்.

கோடு உலாவும் நாகமரத்தின் பூவோடு இலவங்க மலரும் கூட்டி சூடுவாரையும்: களிக்கின்ற வண்டை ஓச்சி தூ நறும் தேறலை உண்பாரையும்: கேடு இல்லாத மகரயாழைப்போல் கின்னரமிதுனம் பாடும் பாடலால் ஊடல் நீங்கும் பரியின் முகம் உடைய மாக்கள் (ஆகிய கின்னரரையும்) கண்டார். [கோடுலாம்-கிளைகள் தழைத்த. நாகம்-புன்னை கின்னரமிதுனம்-இரட்டைக்கின்னரப்பறவைகள். பரி-குதிரை.]

47. பெருங்களி றேயு மைந்தர் பேரெழி லாகத் தோடு
பொருந்துணைக்கொங்கையன்னபொருவில்கோங்கரும்பின்மாடே
மருங்கெனக் குழையுங் கொம்பின் மடப்பெடை வண்டுந் தங்கள்
கருங்குழற் களிக்கும் வண்டுங் கடிமணம் புணரக் கண்டார்.

பொரும் களிறை ஏயும் மைந்தர்களது பேர் எழில் (வாய்ந்த) ஆகத் தோடு பொரும் துணைக்கொங்கை அன்ன பொருவில் கோங்கின் அரும்பின்மாடு, (தம்) மருங்கு என குழையும் கொம்பில், மடம் பெடை வண்டும் (தங்கள்) கரும்குழலில் களிக்கும் வண்டும் கடிமணம் புணர (மாதர்) கண்டார். [ஏயும்-நிகர்க்கும். எழில்-அழகு. பொரும்-தாக்கும். துணை-இரட்டை. பொருவில்-சமானமில்லாத. கோங்கு-ஓர்மரம்.]

48. படிகத்தின் றலமென் றெண்ணிப் படர்சுனை முடுகிப் புக்க
சுடிகைப்பூங் கமல மன்ன சுடர்மதி முகத்தி னார்தம்
வடகத்தோ டுடுத்த தூசை மாசினீர் நனைப்ப நோக்கிக்
கடகக்கை யெறிந்து தம்மிற் கருங்கழல் வீரர் நக்கார்.

படர்ந்த சுனையில், (அது) படிகத்தின் தலம் என்று எண்ணி, முடுகி புக்க, சுடிகை தரித்த பூம் கமலம் அன்ன சுடர்மதி முகத்தினார் (ஆகிய மாதர்) தம் வடகத்தோடு (அவர்) உடுத்த தூசை மாசு இல் (சுனை) நீர்

நனைப்ப (அதை) நோக்கி, கரும் கழல் தரித்த வீரர் (தம்) கடகம் (அணிந்த) கை எறிந்து தம்மில் நக்கார். [சுடிகை-நெற்றிச்சுட்டி. வடகம்-உத்தரீயம். தூசு-ஆடை. கரும்-பெரிய. கை எறிந்து-கை தட்டி. நக்கார்-சிரித்தார்.]

49. பூவணை பலவுங் கண்டார் பொன்னரி மாலை கண்டார்
மேவருங் கோப மன்ன வெள்ளிலைத் தம்பல் கண்டார்
ஆவியி னினிய கொண்கர்ப் பிரிந்தறி வழிந்த விஞ்சைப்
பாவையர் வைகத் தீந்த பல்லவ சயனங் கண்டார்.

[கோபம்-இந்திரகோபம் என்னும் சிவந்தநிறப் பூச்சி. வெள்ளிலைத்தம்பல்-வெற்றிலைத் தம்பலம். கொண்கர்-நாயகர். தீந்த பல்லவ சயனம்-காம வெப்பத்தால் வெந்துபோன தளிராலாக்கிய படுக்கை.]

50. பானலங் கண்க ளாடப் பவளவாய் முறுவ லாடப்
பீனவெம் முலையி னிட்ட பெருவிலை யார மாடத்
தேன்முரன் றளகத் தாடத் திருமணிக் குழைக ளாட
வானவர் மகளி ராடும் வாசநா றூசல் கண்டார்.

பானல்(போன்ற) அம் கண்கள் ஆட, பவளம் (போன்ற)வாயில் முறுவல் ஆட, பீன வெம் முலையில் இட்ட பெருவிலைஆரம் ஆட, தேன் முரன்று அளகத்தில் ஆட, திரு மணிகுழைகள் ஆட, வானவர்மகளிர் ஆடும் வாசம்நாறும் ஊசல்களை கண்டார். [பானல்-கருங்குவளை. முறுவல்-புன்னகை. பீன வெம் முலை-பெருத்துக் கண்டார்க்கு விருப்பத்தை உண்டாக்கும் முலை. தேன் முரன்று-வண்டுகள் ஒலித்து. அளகம்-கூந்தல். குழை-காதணி. வாசம்நாறும்-வாசனைவீசும். ஊசல்-ஊஞ்சல்.]

51. சுந்தர வான மாதர் துவரிதழ்ப் பவள வாயும்
அந்தமில் சுரும்புந் தேனு மிஞிறுமுண் டல்குல் விற்கும்
பைந்தொடி மகளிர் கைத்தோர் பசையில்லை யென்ன விட்ட
மைந்தரி னீத்த தீந்தேன் வள்ளங்கள் பலவுங் கண்டார்

அல்குல்விற்கும் பைந்தொடி அணிந்த (வேசி) மகளிர் (தம்பால் சேர்ந்த ஆடவரிடத்து உள்ளவெல்லாம் அபகரித்தபின், இனி, அவர்களிடம்) ஓர் கைத்து பசை இல்லை என்ன (அவ்வேசியர், நீக்கி) விட்ட மைந்தரைப்போல்—சுந்தரம் பொருந்திய வானமாதர்களது துவர் (நிறமான) இதழ்களோடு கூடிய பவளம் போன்ற வாயும், அந்தம் இல்லாத சுரும்பும் தேனும் மிஞிறும் (உள்ள மதுவை) உண்டு நீத்த தீம் தேன் வள்ளங்கள் பலவும் கண்டார். [கைத்து-பொருள்]

52. அற்பக லாக்குஞ் சோதிப் பளிக்கறை யமளிப் பாங்கர்
மற்பக மலர்ந்த திண்டோள் வானவர் மணந்த கோல
விற்பகை நுதலி னார்தங் கலவியின் வெறுத்து நீத்த
கற்பக மீன்ற மாலை கலனொடுங் கிடப்பக் கண்டார்.

வில்லை பகைக்கின்ற நுதலினாரை, மற்பு அகம் மலர்ந்த திண்தோள் வானவர் மணந்த கோலத்தை, (அவர்கள்) தம் கலவியில் வெறுத்து நீத்த கற்பகம் ஈன்ற மாலைகள் (அணி) கலன்களொடும், அல்லை பகல் ஆக்கும் சோதி உடைய பளிக்கு அறையில் அமளிபாங்கர், கிடப்ப கண்டார். [மற்பு-வலிமை. அல்-இரவு. அமளிபாங்கர்-சயனத்திற் கருகில்.]

53. கையென மலரவேண்டி யரும்பிய காந்த ணோக்கிப்
பையர விவையென் றஞ்சிப் படைக்கண்கள் புதைக்கின் றாரும்
நெய்தவழ் வயிரப் பாறை நிழலிடைத் தோன்றும் போதைக்
கொய்திவை தருதி ரென்று கொழுநரைத் தொழுகின் றாரும்.

1-வது அடி:—மாதர் கைக்கு நிகராக நாம் மலரவேண்டும் என்னும் அவாவுடன் அரும்பிய காந்தள் பூவைப்பார்த்து. பை அரவு-படத்தோடு கூடிய பாம்பு. நெய்தவழ்-நெய்போல் தெளிந்த. போது-பூ.]

54. பின்னங்க ளுகிரிற் செய்து பிண்டியந் தளிரிற் கொண்ட
சின்னங்கள் முலையி னப்பித் தேமலர் கொய்கின் றாரும்
வன்னங்கள் பலவுந் தோன்ற மணியொளிர் மலையி னில்லா
அன்னங்கள் புகுந்த வென்ன அகன்சுனை குடைகின் றாரும்.

பிண்டியினது அம் தளிரில், உகிரினால் பின்னங்கள் செய்து கொண்ட சின்னங்களை (கயலையும் அதனைச்சூழ காபவல்லியும் சிற்பமாக, தம்) முலையில் அப்பி தேம் மலர் கொய்கின்றாரும்; வர்னங்கள் பலவும் தோன்ற (நவ) மணி ஒளிர்கின்ற மலையில் இல்லா அன்னங்கள் புகுந்தன என்ன (மாதர்) அகன்ற சுனைகளில் குடைகின்றாரும் (கண்டார்). [பிண்டி-அசோக மரம். உகிர்-நகம். பின்னம் செய்து-கிழித்து. சின்னம்-துண்டு. குடைதல்-நீராடுதல்.]

55. ஈனு மாழை யிளந்தளி ரேயொளி
ஈனு மாழை யிளந்தளி ரேயிடை
மானு வேழமு நாகமு மாதர்தோள்
மானு வேழமு நாகமு மாடெலாம்.

இடை - அம்மலையினிடையில், ஈனும் - காய்களைக் கொடுக்கும், மாழை-மாமரத்தின், இளம் தளிர்-இளந்தளிரை, ஏய்-ஒக்கும், ஒளி-பிரகாசத்தை, மாழை-பொன்னினது, இளம் தளிரே - மெல்லிய தகடுகளே; ஈனும்-கொடுக்கின்ற, மாடெலாம் - மலையினிடமெல்லாம்,

மானும்-மான் கூட்டங்களும், வேழமும்-யானையும், நாகமும்-குரங்கும், மாதர் தோள்-மாதர்களது தோள்களை, மானும்-நிகர்க்கும், வேழமும்-மூங்கிலும், நாகமும்-புன்னை மரங்களும் (இருக்கின்றன).

56. திமிர மாவுடற் குங்குமச் சேதகந்
திமிர மாவொடுஞ் சந்தொடுந் தேய்க்குமால்
அமர மாதரை யொத்தொளிரஞ் சொலார்
அமர மாதரை யொத்ததவ் வானமே.

திமிரம்-இருள்போன்ற நிறமுடைய, மா-யானைகள், உடல்-தமதுடலில் உள்ள, குங்கும சேதகம்-குங்குமக்குழம்பு, திமிர-உதிரும்படி, மாவொடும்-மாமரத்தோடும், சந்தொடும்-சந்தனமரத்தோடும், தேய்க்கும்-உராயும். அமரமாதரை-தேவகன்னிகைகளை, ஒத்து-நிகர்த்து, ஒளிர்-விளங்கும், அம்சொலார்-அழகிய சொல் பேசும் அம்மங்கையர், அமர-தங்குவதால், மா-சிறந்த, தரை-மலையிடம், அ வானம்-அந்த சுவர்க்கத்தை, ஒத்தது-நிகர்த்தது.

57. பேர வாவொடு மாசுணம் பேரவே
பேர வாவொடு மாசுணம் பேருமால்
ஆர வாரத்தி னோடு மருவியே
ஆர வாரத்தி னோடு மருவியே.

பேர் அவா ஒடு-பெரிய ஆசையால், மாசுணம்-பெரும் பாம்புகள், பேர-இடம் விட்டுப்போகவும், வே-மூங்கில்கள், பேர-அசைந்து பெயரவும், ஆ ஒடு-ஆச்சாமரங்களோடு, மா-சிறந்த, சுணம்-(கொடிச்சியரிடித்த) சுண்ணப்பொடியும், பேர-பெயரவும், ஆரவாரத்தினோடு-பெருமோசையோடு, ஆர-நிறைந்த, ஆரத்தின்-முத்துக்களுடன், மருவி-கலந்து, அருவி-அந்த மலையருவி, ஓடும்-பாயும்.

58. புகலும் வாளரிக் கண்ணியர் பொற்புயம்
புகலும் வாளரிக் கண்ணியர் பூண்முலை
அகிலு மாரமு மாரவங் கோங்குமே
அகிலு மாரமு மாரவங் கோங்குமே.

புகலும்-புகழ்ந்து கூறப்படும், வாள்-ஒளிபொருந்திய, அரி-வண்டுகள் மொய்க்கும், கண்ணியர்-மாலையணிந்த மைந்தரது, பொன்புயம்-பொன்வலயம் அணிந்த புயங்களில், வாள்-வாள்போன்று, அரி-செவ்வரி படர்ந்த, கண்ணியர்-கண்களையுடைய மாதர்களது, பூண்முலை-அணிதங்கிய முலைகள், புகலும்-சேர்கின்ற, அகிலும்-அகிற்குழம்பும், ஆரமும்-முத்துமாலையும், ஆர-நிறைய, அங்கு-அந்தப் புயம் முலை இரண்டிலும், ஓங்கும்-சிறக்கும். அகில்-அம்மலையினிடையில், ஆரமும்-சந்தன மரமும், ஆர்-ஆத்தி மரமும், அ அம்-அந்த அழகிய, கோங்கும்-கோங்கு மரமும், மே-மேவி இருப்பன.

59. துன்ன ரம்பை நிரம்பிய தொல்வரை
துன்ன ரம்பைய ரூருவிற் றோன்றுமால்
கின்ன ரம்பயில் கீதங்க ளென்னவாங்
கின்ன ரம்பயில் கின்றன ரேழைமார்.

துன்னு-அடர்ந்த, அரம்பை-வாழை மரங்கள், நிரம்பிய-நிறைந்த, தொல்வரை-அந்தப் பழமையாகிய மலைக்கு, துன்-வந்த, அரம்பையர்-தெய்வ மாதர்களது, ஊருவின்-தொடைகளைப்போல், தோன்றும்-விளங்கும். கின்னரம்-கின்னர பக்ஷிகள், பயில்-பாடுகின்ற, கீதங்கள் என்ன-இசைகளைப்போல், ஆங்கு-அவ்விடம், இன்-இனிய, நரம்பு-யாழொலியை, ஏழைமார்-மாதர், அயில்கின்றனர்-(செவிகளால்) அருந்துகின்றனர்.

60. ஊறு மாகட மாவுற வூங்கெலாம்
ஊறு மாகட மாமத மோடுமே
ஆறு சேர்வன மாவரை யாடுமே
ஆறு சேர்வன மாவரை யாடுமே.

மா-பெரிய, கடம்-காட்டிலுள்ள, மா-மாமரங்கள், ஊறு உற-சிதைவை அடைய, ஊங்கு எலாம்-மலை இடமெல்லாம், ஊறும் ஆ-ஊற, கடமா-யானைகளது, மதம்-மதசலம், ஓடும்-ஓடும், ஆறு-வழியில், சேர்-சேர்ந்த, வனம்-வனங்களில், ஆ-ஆச்சாமரமும், வரை-மூங்கிலும், ஆடும்-அசையும். ஆறு-ஆறுகளில், சேர்வன-அடைவன, மா-மிருகங்களும், வரையாடும்-மலை ஆடும்.

61. கல்லி யங்கு கருங்குற மங்கையர்
கல்லி யங்ககழ் காமர் கிழங்கெடா
வல்லி யங்க ணெருங்கு மருங்கெலாம்
வல்லி யங்க ணெருங்கி மயங்குமே.

கல்-அந்த மலையில், இயங்கும்-சஞ்சரிக்கும், கரும்குறமங்கையர்-பெருமைபொருந்திய குறத்தியர், கல்லி-கல்லியாகிய கருவியால், அங்கு-அங்கு, அகழ்-தோண்டி, காமர்-ஒளிபொருந்திய, கிழங்கு-கிழங்கை, எடா-எடுப்பதற்கு—வல்லியங்கள்-புலிகள், நெருங்கும்-அடர்ந்த, மருங்கு எலாம்-இடம் எல்லாம், வல்-வலிய, இயங்கள்-தோல் வாத்தியங்கள், நெருங்கி-சேர்ந்து, மயங்கும்-ஒலித்து மயங்கும்.

62. கோளி பங்கய மூழ்கக் குளிர்கயங்
கோளி பங்கய மூழ்கக் குலைந்தவால்
ஆளி பொங்கு மருவரை யூடிழிந்
தாளி பொங்கு மரம்பைய ரோதியே.

குளிர்-குளிர்ச்சியான, கயம்-குளங்களில், கோள்-வலிய, இபம்-யானைகளும், கயம்-கன்றுகளும், மூழ்க-முழுகுவதினால், கோளி-(அங்

குள்ள) அத்தி ஆல்போன்ற பூவாக்காய்க்கு மரமும், பங்கயம்-தாமரையும், மூழ்க-அமிழ, குலைந்த-குலைந்தன. ஆளி-சிங்கம், பொங்கும்-நிறைகின்ற, அரு-அளவிடலருமையாகிய, வரைஊடு-மலையிலிருந்து, ஆளி-வண்டுகள், இழிந்து-நீங்கி, அரம்பையர்-அரம்பையர்களது, ஓதி-கூந்தலில், பொங்கும்-களிக்கும்.

63. ஆக மாலய மாகவு ளாள்பொலி
வாக மாலென லாகிய தம்மலை
மேக மாலை மிடைந்தன மேலெலாம்
மேகீ மாலை மிடைந்தன கீழெலாம்.

மேகமாலை-மேகவரிசைகள், மேல் எலாம்-மேல் பக்கமெல்லாம், மிடைந்தன-நெருங்கி, மேக-தங்க, கீழ் எலாம்-கீழ்ப்பக்கமெல்லாம், மாலை-சாயங்காலச் சூரியனொளியால், மிடைந்தன-செறியப்பட்டன. (ஆதலால்) அ மலை-அந்தச் சந்திரசைலமலை, ஆகம்-மார்பை, ஆலயமாக-வசிக்குமிடமாக, உளாள்-உடைய திருமகள், பொலி-விளங்குகின்ற, வாக-அழகிய, மால் எனல் ஆகியது-திருமால் எனத் தகையதாயிற்று.

64. பொங்கு தேனுகர் பூமினி ருமென
எங்கு மாதரு மைந்தரு மீண்டியபத்
துங்க மால்வரைச் சூழல்கள் யாவையுந்
தங்கி நீங்கிலர் தாமினி தாடுவார்.

[பொங்கும்-பெருகும். துங்க-உயர்ந்த. ஆடுவார்-விளையாடுவார்]

65. இறக்க மென்பதை யெண்ணில ரெண்ணுங்காற்
பிறக்கு மென்பதோர் பீழைய தாதலால்
துறக்க மெய்திய தூயவ ரேயென
மறக்கி றிற்றில ரன்னதன் மாண்பெலாம்.

[இறக்கம்-இறங்குதல். பிறக்கும்-உண்டாகும். துறக்கம்-சுவர்க்கம். பீழையது-துன்பத்தைத் தருவது.]

66. மஞ்சார் மலைவா ரணமொத்தது வானி னோடும்
வெஞ்சா யையுடைக் கதிரங்கதன் மீது பாயும்
பஞ்சா னனமொத் ததுமற்றது பாய வேறுஞ்
செஞ்சோ ரியெனப் பொலிவுற்றது செக்கர் வானம்.

மஞ்சு ஆர் (அந்த) மலை வாரணம் ஒத்தது. வானில் ஓடும் வெம் சாயை உடைய கதிர் அங்கு அதன்மீது பாயும் பஞ்சானனம் ஒத்தது. மற்று, அது பாய ஏறும் செம்சோரி என செக்கர்வானம் பொலிவு உற்றது. [மஞ்சு-மேகம். ஆர்-பொருந்திய. வாரணம்-யானை. சாயை-கிரணம். கதிர்-சூரியன். பஞ்சானனம்-சிங்கம். சோரி-இரத்தம்.]

67. திணியார் சினைமா மரம்யாவையுஞ் செக்கர் பாயத்
தணியா நறுந் தளிர்தந்தன போன்று தாழ
அணியா ரொளிவந் திரம்பலி னங்க மெங்கும்
மணியா லியன்ற மலையொத்தத மைமயில் குன்றம்.

திணி ஆர்ந்த சினைகளையுடைய மாமரம் யாவையும் செக்கர் பாய (அதனால்) தணியாத நறும் தளிர் (அவை) தந்தன போன்று தாழ, அணி ஆர்ந்த (செவ்வான) ஒளி வந்து நிரம்பலால் அமை இல்லாத குன்றம் (தன்) அங்கம் எங்கும் மணியால் இயன்ற (ஒரு) மலையை ஒத்தது. [திணி-வலிமை. ஆர்-நிறைந்த. தாழ-தளிர்க்க. மை-குற்றம்]

சந்திரசைலம் திருமாலை ஒத்தது.

68. கண்ணுக் கினிதா கிவிளங்கிய காட்சி யாலும்
எண்ணற் கரிதா கியிலங்கு சிரங்க ளாலும்
வண்ணக் கொழுந்சந் தனச்சேதக மார்ப ணிந்த
அண்ணற் கரிபோன் றனையொத்தவ் வாசில் குன்றம்.

[சிரம்-சிகரம். சேதகம்-குழம்பு. அண்ணல்-பெரியோன்.]

பரிவாரத்தினர் மலையினின்றும் இறங்கினர்.

69. ஊனும் முயிரும் மனையாரொடு வர்க்கொ ருவர்
தேனும் மிஞிறுஞ் சிறுதும்பியும் பம்பி யார்ப்ப
ஆனை யினமும் பிடியுமிக லாளி யேறும்
மானுங் கலையும் மெனமால்வரை வந்தி ழிந்தார்.

[பம்பி ஆர்ப்ப-நெருங்கி ஆரவாரம் செய்ய. இகல்-வலியமைந்த. ஆளி-சிங்கம். ஏறு-ஆண்.]

சூரியன் அஸ்தமிக்க இருள்பரந்தது.

70. கால்வா னகத்தே ருடைவெய்யவன் காய்க டுங்கட்
கோல்மாய் கதிர்ப்புல் லுளைக்கொல்சினக் கோள ரிம்மா
மேல்பான் மலையிற் புகவீங்கிருள் வேறி ருந்த
மால்யானை யீட்ட மெனவந்து பரந்த தன்றே.

வானகத்தில் (ஒற்றை) கால் (அமைந்த) தேரை உடைய வெய்யவன் (ஆகிய) காய்கின்ற கடுங்கண் உடைய கோலை மாய்க்கின்ற கதிர்களாகிய புல்லிய உளை உடைய கொல்கின்ற சினத்தோடு கூடிய கோள் அரிமா ஆனது, (அஸ்தமனகிரியாகிய) மேல்பால் உள்ள மலையில் புக (அதுவரையில்) வேறு இருந்த வீங்கு இருள் மால் உடைய யானை ஈட்டம் என (எங்கும்) வந்து பரந்தது.

கால் சக்கரம். கடுங்கண்-அஞ்சாமை. கோல்-அம்பு. அரிமா-ஆண் சிங்கம். மால்-மதமயக்கம்.—"கால் வானகத்தேருடை" என்பதற்கு

காலிலே வெண்மையான நகத்தின் அழகையுடைய, எனப்பொருள் கூறிச் சிலேடை வகையில் அரிமாவுடன் கொண்டு முடிக்கலாம். அப்பொழுது காலில் வால் நகத்து ஏர் உடைய எனப் பிரித்தல் வேண்டும்.]

இரவானதும் அச்சேனையில் தீபம் வைத்தனர்.

71. மந்தார முந்து மகரந்த மணங்கு லாவும்
அந்தா ரரசர்க் கரசன்ற னனீக வெள்ளம்
நந்தா தொலிக்குந் நரலைப்பெரு வேலை யெல்லாம்
செந்தா மரைபூத் தெனத்தீப மெடுத்த வன்றே.

மந்தாரம் உந்தும் மகரந்தத்தின் மணம் குலாவும் அம்தார் (அணிந்த) அரசர்க்கு அரசன் (ஆகிய தயரதன்) தன் அனீக வெள்ளம்—நந்தாது ஒலிக்கும் நரலையை உடைய பெரும் வேலை எல்லாம் செம்தாமரை பூத்த என—தீபம் எடுத்தன. [உந்தும்-வெளிப்படுத்தும். நந்தாது-குறையாது. நரலை-ஒலி. வேலை-கடல்.]

72. தண்ணக் கடலிற் றளிசிந்து தரங்க நீங்கி
விண்ணிற் சுடர்வெண் மதிவந்தது மீன்கள் சூழ
வண்ணக் கதிர்வெண் ணிலவின்றிரள் வாலு கத்தோ
டொண்ணித் திலமீன் றொளிர்வால்வளை யூர்வ தொத்தே.

(கடலினின்று நீங்கி) வாலுகத்தில் ஒள் நித்திலம் ஈன்று ஒளிர்கின்ற வால்வளை கரையில் ஊர்வதை ஒத்து—தண்கடலில் தளிசிந்தும் தரங்கம் நீங்கி-வண்ணம் கதிர் வெண் நிலவின் திரளோடு, மீன்கள் சூழ,—விண்ணில் சுடர் வெண்மதி வந்தது. [வாலுகம்-வெண் மணல், நிலவிற்குவமை. நித்திலம்-முத்து, விண் மீன்களுக்குவமை. வளை-சங்கு, மதிக்குவமை. தளி-துளி. தரங்கம்-அலை. வண்ணம்-அழகிய.]

73. மீனாறு வேலை யொருவெண்மதி யீனும் வேலை
நோனா ததனை நுவலற்கருங் கோடி வெள்ளம்
வானா டியரிற் பொலிமாதர் முகங்க ளென்னும்
ஆனா மதியங் கண்மலர்ந்த தனீக வெள்ளம்.

மீன் நாறும் வேலை ஒரு வெண் மதியை ஈனும் வேலையில், அனீக வெள்ளம் அதனை நோனாது, நுவலற்கு அரும் வான் நாடியர்போல் பொலியும் மாதர்களது முகங்கள் என்னும் ஆனாத மதியங்கள் கோடி வெள்ளம் மலர்ந்தது. [வேலை-கடல், சமயம். நோனாது-பொறுக்காமல். ஆனாத-குறையாத. வெள்ளப்-கடல், எண்ணல் தொகுதிஒன்று.]

74. மண்ணும் முழவின் னொலிமங்கையர் பாட லோதை
பண்ணுந் நரம்பிற் பகையாவியற் பாணி யோதை
கண்ணும் முடைவே யிசைகண்ணுள ராட ரோதும்
விண்ணும் மருளும் படிவிம்மி யெழுந்த வன்றே.

மண் பூசிய முழவின் ஒலியும், மங்கையர் பாடல் ஓசையும், பண் (பொருந்திய யாழ் முதலிய கருவிகளின்) நரம்போடு பகையாத இயல் உடைய பாணியின் ஓசையும், கணுக்கள் உடைய வேயின் இசையும், கண்ணுளர் ஆடல்தோறும் விண்ணும் மருளும்படி விம்மி எழுந்தன. [மண்-மத்தளத்தின் மார்ச்சனை. பாணி-தாளம். வேய்-புள்ளாங்குழல். கண்ணுளர்-வேஷம் தரித்து நாடகம் ஆடுபவர்.]

75. மணியின் னணிநீக்கி வயங்கொளி முத்தம் வாங்கி
அணியும் முலைபா ரகிலாவி புலர்த்து நல்லார்
தணியும் மதுமல் லிகைத்தாமம் வெறுத்து வாசந்
திணியும் மிதழ்ப்பித் திகைக்கத் திகை சேர்த்து வாரும்.

மணியின் அணிகளை நீக்கி வயங்குகின்ற ஒளிபொருந்திய முத்துக்களை வாங்கி, (தம்) முலையில் அணியும் ஆரை அகிலின் ஆவியினால் புலர்த்தும் நல்லார்—தணியும் மது (பொருந்திய) மல்லிகை தாமத்தை வெறுத்து வாசம் திணிந்த இதழ் உடைய பித்திகை கத்திகையை சேர்த்துவார் (ஆயினார்). [ஆர், ஆரம்-சந்தனம். தாமம், கத்திகை-மாலை. பித்திகை-சண்பகம்.]

76. புதுக்கொண்ட வேழம் பிணிப்போர்புனை பாட லோதை
மதுக்கொண்ட மாந்தர் மடவாரின் மிழற்று மோதை
பொதுப்பெண்டி ரல்குற் புனைமேகலைப் பூச லோதை
கதக்கொண்ட யானை களியாற்களிக் கின்ற வோதை.

புதியதாக (பிடித்துக்)கொண்ட வேழத்தை பிணிப்போர் புனையும் (போது பாடும்) பாடல் ஓதை—மதுவை (உள்)கொண்ட மாந்தர் (தம்) மடவாரொடு (குழறி) மிழற்றும் ஓதை—பொதுப்பெண்டிர் அல்குலில் புனைகின்ற மேகலையின் பூசல் ஓதை—கதம்கொண்ட யானை களியால் களிக்கின்ற ஓசை—(எங்கும் நிறைந்தன). [கதம்-கோபம்.]

77. உண்ணா வமுதன்ன கலைப்பொரு ளுள்ளத் துண்டும்
பெண்ணா ரமுதம் மனையார்மனத் தூடல் பேர்த்தும்
பண்ணார்ந்த பாடல் செவிமாந்திப் பயன்கொ ளாடல்
கண்ணா னனிதுய்க் கவுங்கங்குல் கழிந்த தன்றே.

(வாயினால்) உண்ணப்படாத அமுது அன்ன கலைகளின் பொருளை உள்ளத்தால் உண்டும், பெண்களுக்குள் அருமையாகிய அமுதம் அனையார் (ஆன தம்தம் மனைவியரது) மனத்து (தோன்றிய) ஊடலை பேர்த்தும், பண் ஆர்ந்த பாடல்களை செவியினால் மாந்தியும், (பாடலின் அர்த்த) பயனைக்கொண்ட ஆடலை கண்ணால் நனி துய்க்கவும், கங்குல் கழிந்தது. [கலை-காவியம், தத்துவம், சாஸ்திரம் முதலியன. துய்த்து, மாந்தி-உண்டு. கங்குல்-இரவு.]

16. பூக்கொய் படலம்.

இரவாகிய இரணியனைப் பிளக்கச் சூரியன் உதயகிரியினின்றும் நரசிங்க மூர்த்தியைப்போல் தோன்றினான்.

1. மீனுடை யெயிற்றுக் கங்குற் கனகனை வெகுண்டு வெய்ய
காநுடைக் கதிர்க ளென்னு மாயிரங் கரங்க ளோச்சித்
தானுடை யுதயமென்னுந் தமனியத் தறியு ணின்று
மானுட மடங்க லென்னத் தோன்றினன் வயங்கு வெய்யோன்.

மீன்களாகிய எயிறு உடைய கங்குல் ஆகிய கனகனை வெகுண்டு, கான் (போன்ற அடர்ச்சியை) உடைய கதிர்கள் என்னும் ஆயிரம் கரம்கள் ஓச்சி, தன் உடைய உதயம் (கிரி) என்னும் தமனியம் தறியுள்நின்றும், மானுட மடங்கல் என்ன வயங்கும் வெய்யோன் தோன்றினன். [மீன்-நக்ஷத்ரம். எயிறு-பல். கங்குல்-இரவு. கனகன்-ஹிரண்யன். கான்-காடு. ஒச்சி-நீட்டி. தமனியத்தறி-பொன்தூண். வயங்கும்-விளங்கும்]

2. முறையெலா முடித்த பின்னர் மன்னனு மூரித் தேர்மேல் [ளம்
இறையெலாம் வணங்கப் போனு னெழுந்துடன் சேனை வெள்
குறையெலாஞ் சோலை யாகிக் குழியெலாங் கழுநீ ராகித்
துறையெலாங் கமல மான சோணையா றடைந்த தன்றே.

(நித்ய கர்மாநுஷ்டான) முறைகளை எல்லாம் முடித்த பின் (தயாத) மன்னனும், மூரி (அமைந்த) தேர்மேல் இறை எல்லாம் (தன்னை) வணங்க போனான். உடனே சேனை வெள்ளம் எழுந்து, குறை எலாம் சோலை ஆகி குழிஎலாம் கழுநீர் (மலர்கள்) ஆகி, துறைஎலாம் கமலம் ஆன சோணைஆற்றை, அடைந்தது. [மூரி-வலிமை. இறை-அரசர். குறை-நீர்பாயாத இடம்.]

3. அடைந்தவ ணிருத்த பின்ன ரருக்கனு மும்பர்ச் சேர்ந்தான்
மடந்தையர் குழாங்க ளோடு மன்னரு மைந்தர் தாமும்
குடைந்தவண் டுறையு மென்பூக் கொய்துநீ ராட மைதீர்
தடங்களு மடுவுஞ் சூழ்ந்த தண்ணறுஞ் சோலை சார்ந்தார்.

[இறுத்த-தங்கிய. அருக்கன்-சூரியன். உம்பர் சேர்ந்தான்—உயர்ந்தான். மை-குற்றம். தண்நறும்-குளிர்ச்சியும் மணமும்பொருந்திய.]

4. திண்சிலை புருவ மாகச் சேயரிக் கருங்க ணம்பால்
புண்சிலை செய்வ ரென்று போவன போன்ற மஞ்ஞை
பண்சிலம் பணிவா யார்ப்ப நாணிறைப் பறந்த கிள்ளை
ஒண்சிலம் பாற்ற மாத ரொதுங்குதோ றொதுங்கு மன்னம்.

(அச்சோலையில்), புருவத்தை திண் சிலை ஆக (கொண்டு மாதர்) சே அரி (படர்ந்த) கரும்கண் (ஆகிய) அம்பால், (தமக்கு) சில புண் செய்வர் என்று மஞ்ஞைகள் போவன போன்றன. பண்கள் சிலம்பும் (அம்மாதரது) அணி வாய் ஆர்ப்ப (அது கேட்டு) கிள்ளைகள் நாணினால் பறந்தன. மாதர் (தம்) ஒண் சிலம்பு அரற்ற ஒதுங்கும் தோறும் அன்னம் (தோற்று) ஒதுங்கும். [திண்-வலிய. சிலை-வில். சே அரி-செவ்வரி. பண்சிலம்பும்-பண்ணியல் பொருந்தப் பேசும். ஒதுங்கும்-நடக்கும், அகலும்]

5. செம்பொன்செய் சுருளுந் தெய்வக் குழைகளுஞ் சேர்ந்து மின்
பம்புதே னலம்ப வொல்கிப் பண்ணையி னாடல் நோக்கிக் [னப்
கொம்பொடுங் கொடிய னாரைக் குறிப்பறிந் துணர்த றேற்றார்
வம்பவி ழலங்கன் மார்பின் மைந்தரு மயங்கி நின்றார்.

செம்பொன்னால் செய்த சுருளும், தெய்வ (தன்மை அமைந்த) குழைகளும் சேர்ந்து மின்ன, பம்பும் தேன் அலம்ப, ஒல்கி (சம் தம் மனைவியர்) பண்ணையோடு ஆடலை நோக்கி, (அந்த) கொடி அன்னாரை கொம்பொடு குறிப்பு அறிந்து (வித்தியாசம்) உணர்தல் தேற்றாராய், வம்பு அவிழ்கின்ற அலங்கல் (தரித்த) மார்போடு கூடிய மைந்தர், மயங்கி நின்றார். [சுருள்-ஓலை. குழை-குண்டலம். பம்புதேன் அலம்ப-நெருங்கிய வண்டுகள் ஒலிக்க. ஒல்கி-அசைந்து. பண்ணை-தோழியர் கூட்டம். குறிப்பு-அடையாளம். வம்பு-வாசனை. அலங்கல்-பூமாலை.]

6. பாசிழைப் பரவை யல்குற் பண்டரு கிளவித் தண்டேன்
மூசிய கூந்தன் மாதர் மொய்த்தபே ரமலை கேட்டுக்
கூசின வல்ல பேச நாணின குயில்க ளெல்லாம்
வாசகம் வல்லார் முன்னின் றியாவர்வாய் திறக்க வல்லார்.

பாசு இழைகள் அணிந்த பரவை அல்குலையும், பண்போன்ற கிளவியையும், தண்மை பொருந்தியதும் தேன் மூசியதுமான கூந்தலையும் உடைய மாதர் மொய்த்த பேர் அமலையை கேட்டு கூசின அல்ல குயில்களெல்லாம் (பேசாதிருந்தன, அவை இவர்கள் முன்) பேச நாணின— வாசகம் வல்லார்முன் நின்று யாவர் வாய்திறக்க வல்லார்! [பாசிழை-பசும் பொன்னாபரணம். பரவை-பரந்த. கிளவி, வாசகம்-பேச்சு. மூசிய-மொய்த்த. அமலை-ஆரவாரம். கூசின-பயந்து.]

7. நஞ்சினுங் கொடிய நாட்ட மமுதென நயந்து நோக்கிச்
செஞ்சவே கமலக் கையாற் றீண்டலு நீண்ட கொம்பர்
தஞ்சிலம் படியின் மென்பூச் சொரிந்துடன் றாழ்ந்த வென்றால்
வஞ்சிபோன் மருங்கு லார்மாட் டியாவரே வணங்க லாதார்.

நஞ்சினும் கொடிய நாட்டத்தால் (அவை) அமுது எனும்படி நயந்து நோக்கி, (தம்) கமலம்போன்ற கையால் செஞ்சவே தீண்டலும் நீண்ட

கொம்புகள், தம் சிலம்பு (அணிந்த) அடியில் மெல்லிய பூவை சொரிந்து (அவைகளும்) உடன் தாழ்ந்தன என்றால்—வஞ்சிக் கொடிபோல் மருங்குலார் (ஆகியமாதர்கள்) மாட்டு வணங்கலாதார் யாவர்! [நாட்டம்-கண். மருங்குலார்-இடையுடையவர்]

8. அம்புயத் தணங்கி னன்னா ரம்மலர்க் கைக டீண்ட
வம்பிய லலங்கற் பங்கி வாளரி மருளுங் கோளார்
தம்புய வரைகள் வந்து தாழ்வன தளிர்த்த மென்பூங்
கொம்புக டாழு மென்றல் கூறலாந் தகைமைத் தொன்றோ.

வம்பு இயன்ற அலங்கல் (சூடிய) பங்கியுடைய வாள் அரி மருளும் கோளார் (ஆகிய ஆடவர்) தம் புயமாகிய வரைகள், அம்புயத்து (அமரும்) அணங்கு அன்னார் (ஆகிய மாதர் தம்) அழகிய மலர்போன்ற கைகள் தீண்ட வந்து தாழ்வன. (அவ்வாறிருக்க) தளிர்த்த மெல்லிய பூம் கொம்புகள் (பாவையர் கைதீண்ட) தாழும் என்றல் கூறலாம் தகைமைத்து ஒன்றோ? [அம்புயத்தணங்கு-திருமகள். வம்பு-மணம். பங்கி-குடுமி. அரி-சிங்கம். கோளார்-வலியுடையவர். தகைமைத் தொன்றோ-தகுதியை உடையதோ.]

9. நதியினுங் குளத்தும் பூவா நளினங்கள் குவளை யோடு
மதிநுதல் வல்லி பூப்ப நோக்கிய மாலைத் தும்பி
அதிசய மெய்திப் புக்கு வீழ்ந்தன வலைக்கப் போகா
புதியன கண்ட போழ்து விடுவரோ புதுமை பார்ப்பார்

நதியிலும் குளத்திலும் பூவாத (முகமாகிய) நளினங்களை, கண்ணாகிய குவளையோடு நுதலாகிய மதியையும் (மாதர்களாகிய) வல்லிக் கொடிகள் பூப்ப, (இந்தப் புதுமையை) நோக்கிய மாலை (யாக வருகின்ற) தும்பிகள் அதிசயம் எய்தி (அம்மாதர்பால்) புகுந்து வீழ்ந்தன. அலைக்கவும் போகா (ஆயின).—புதியன கண்டபோது புதுமை பார்ப்பார் விடுவரோ! [நளினம்-தாமரை. மாலை-வரிசை. தும்பி-வண்டு. அலைக்க-ஓட்ட] குவளையும் சந்திரனும் பொதிந்த ஒரு தாமரைப் பூவைப் பூத்த வல்லிக்கொடிபோல் மாதர் தோன்றினர் என்பது கருத்து.

10. உலந்தரு வயிரத் திண்டோ ளொழுகிவா ளொளிக்கொண் மேனி
மலர்ந்தபூந் தொடையன் மாலை மைந்தர்பான் மயிலி னன்னார்
கலந்தவர் போல வொல்கி யொசிந்தன சிலகை வாராப்
புலந்தவர் போல நின்ற வுளசில பூத்த கொம்பர்.

வயிர உலம் தரு திண்மை பொருந்திய தோளையும், ஒழுகி வாள் ஒளிகொண்ட மேனியும், மலர்ந்த பூ தொடையலான மாலையும் உடைய (தம் நாயகராகிய) மைந்தர்பால் கலந்தவர்களான மயில் அன்னார்போல் சில(பூத்த கொம்புகள்) ஒல்கி ஒசிந்தன. (மற்றும்) சில பூத்த கொம்பு நாயகர்களுடன்) புலந்தவர்போல கைவாரா (நிமிர்ந்து) நின்றன

[வயிரஉலம் தரு-திரண்ட வயிரக்கல்லை ஒத்த. ஒழுகி-நேராக, நீண்ட. ஒல்கி ஒசிந்த-அசைந்துத் துவண்டன. புலந்தவர்-ஊடியவர். கைகவாரா-கைக்கு எட்டாமல்]

11. பூவெலாங் கொய்து கொள்ளப் பொலிவில துவள நோக்கி
யாவதாங் கணவர் கண்ணுக் கழகில விவையென் றெண்ணிக்
கோவையும் வடமு நாணுங் குழைகளுங் குழையப் பூட்டிப்
பாவையர் பணிமென் கொம்பை நோக்கினர் பரிந்து நிற்பார்.

பாவையர்—பூ எலாம் கொய்து கொள்ள (அதனால் கிளைகள்) பொலிவு இலவாய் துவள (அதை அவர்) நோக்கி, "இவை (இப்பொழுது) அழகு இல (ஆயின). (நமது) கணவர்கள் கண்ணுக்கு யாவது ஆகும்" என்று எண்ணி, (தாம் பூண்ட) கோவையும் வடமும் (பொன்) நாணும் குழைகளும் (எடுத்து அவைகளுக்கு) குழைய பூட்டி, (பாரம் தாங்காது) பணிகின்ற மெல்லிய கொம்பை நோக்கி—பரிந்து நிற்பார். [பரிந்து-விரும்பி].

12. துறும்போதி னிற்றேன் றுவைத்துண்டுழ றும்பி யீட்டம்
நறுங்கோதை யோடு நனைசின்னமு நீத்த நல்லார்
வெறுங்கூந்தன் மொய்க்கின் றனவேண்டல வேண்டு போதும்
உறும்போக மேலோர் நலனுள்வழி யுண்ப ரன்றே.

துறும் போதின் தேனை துவைத்து உண்டு உழலும் தும்பியின் ஈட்டம், (தாம்) வேண்டும் போதையும் வேண்டலவாய், நறும் கோதையையும், நனை (கிள்ளி முலைமீது சித்திரமா யப்பிக்கொண்ட) சின்னங்களையும் நீத்த நல்லார்களது வெறும் கூந்தலை (அதன் இயற்கை மணத்திற் கவாவி) மொய்க்கின்றன—மேலோர், நலன் உள்ள வழி உற்ற போகத்தை உண்பர் அன்றே! [துறும்-அடர்ந்த. தும்பிஈட்டம்-வண்டின் கூட்டம். நனை-அரும்பு. போது-பூ. நல்லார்-மாதர். கோதை-பூமாலை.

13. மெய்ப்போதி னங்கைக் கணியன்னவண் மென்ப ளிங்கிற்
பொய்ப்போது தாங்கிப் பொலிகின்றதன் மேனி நோக்கி
இப்பாவை யெங்கோற் குயிரன்னவ ளென்ன வுன்னிக்
கைப்போதி னோடு நெடுங்கண்பனி கார நின்றாள்.

மெய்யில் போதுகள் (சூடியிருந்த) நங்கைகளுக்கு அணி அன்னவள் (ஒருத்தி), பொய் போதை தாங்கி பொலிகின்ற தன் மேனி (இனது நிழலை) மென் பளிங்கில் நோக்கி, "(இத்துணை அழகுள்ள) இப்பாவை (போல்வாளைக் காண்பானானால்) எம் கோனுக்கு (அவள்) உயிர் அன்னவள் (ஆய்விடுவாள்)" என்ன (அவ்வியத்தால்) உன்னி (முகத்தைப் புதைத்துத் தன்) கையாகிய (தாமரை) போதில் நெடும் கண் பனி கார நின்றாள். [கார-சொரிய. பொய்ப்போது-நிழலில் தோன்றும் பூ].

14. கோளுண்ட திங்கண் முகத்தாளொரு கொம்பர் மன்னன்
தோளுண்ட மாலை யொரு தோகையைச் சூட்ட நோக்கித்
தாளுண்ட கச்சாற் றகையுண்ட முலைக்க ணாலி
வாளுண்ட கண்ணின் மழையுண்டென வார நின்றாள்.

(கூந்தலாகிய) கோள் உண்ட திங்கள்போன்ற முகத்தாள் (ஆன) (பூங்) கொம்பு (போல்வாள் ஒருத்தி)—(தன் நாயகனாகிய) மன்னன் தோளில் உண்ட மாலையை (அவன்) ஒரு தோகைக்கு சூட்ட (அதை) நோக்கி, (தனக்குரிய மாலையைப் பிறிதொன்றற் கிட்டதற்கு ஆற்றாளாய்) கச்சால் தகை உண்ட (தனது) தாள் உண்ட முலைக்கண் வாளுண்ட கண்ணில் மழை உண்டு என (தாரை தாரையாய்) ஆலி வார நின்றாள். [கோள்-மேகம். உண்ட பெருந்திய தோகை-மயில். தகை உண்ட—கட்டப்பட்ட. தாள் உண்ட-அடி பெருத்த. வாளுண்ட-வாள்போன்ற. ஆலிவார—நீர்த்துளி சொரிய.]

15. மயில்போல் வருவாண் மனங்காணிய காதன் மன்னன்
செயிர்தீர் மலர்க்காவி னோர்மாதவிச் சூழல் சேரப்
பயில்வா ளிறைபண்டு பிரிந்தறி யாள்ப தைத்தாள்
உயிர்நாடி யொல்கும் முடல்போலல மந்து ழன்றாள்.

மயில்போல் (நடந்து தன்னிடம்) வருவாள் (ஆகிய தன் நாயகியின்) மனத்தை (சோதித்து) காண்பதற்கு, (அவளிடம்) காதல் (நிறைந்த) மன்னன், செயிர்தீர்ந்த மலர் காவில் ஓர் மாதவி சூழலில் (மறைந்து) சேர, பண்டு இறை பிரிந்து அறியாளாய் பயில்வாள், (ஆகிய அந்தப் பெண்) பதைத்து உயிரை நாடி ஒல்கும் உடல்போல் அலமந்து உழன்றாள். [செயிர்தீர்-குற்றம் நீங்கிய. கா-சோலை. மாதவி சூழல்-வசந்த மல்லிகைக் கொடிப் பந்தல். பண்டு-பூர்வத்தில். இறை-சிறிதும். பயில்வாள்-உடன் உறைபவள். ஒல்கும்—தளரும்.]

16. மைதாழ் கருங்கண்கள் செவப்புற வந்து தோன்ற
நெய்தாவும் வேலா னெடுநெஞ்சு புலர்ந்து நின்றாள்
எய்தாது நின்ற மலர்நோக்கி யெனக்கி தீண்டுக்
கொய்தீதி யென்றோர் குயிலைக்கரங் கூப்பு கின்றாள்.

[மைதாழ்-மை தங்கிய. உற-மிகுதியும். புலர்ந்து-பிணங்கி. எய்தாது-கைக்கு எட்டாமல். கொய்தீதி-பறித்துக்கொடு.] தலைவனுடன் பிணங்கியவள், அவனது உதவியின்றித்தான் வேண்டியது எய்தல் கூடும் எனக் காட்டுவாள்போலும், மற்றொரு வகையில் துணையின்றித் தமியளாகிய தன்னிடத்து அவனுக்கு இரக்கம் உண்டாவதற்காகவும், இருவரும் மறுபடிப் பேசிக் கூடுவதற்கு இது ஒரு ஏதுவாதல் பொருட்டும் குயிலைப் பூப்பறித்துத் தர வேண்டிக்கொண்டனள்.

17. செம்மாந்த தெங்கின் னிளநீரையோர் செம்ம ஞேக்கி
அம்மா விவைமங் கையர்கொங்கைக ளாகு மென்ன
எம்மாதர் கொங்கைக் கிவையொப்பன வென்ருே ரேழை
விம்மா வெதும்பா வெயராமுகம் வெய்து யிர்த்தாள்.

ஒரு செம்மல் செம்மாந்த தெங்கின் இளநீரை நோக்கி, (வியப்படைந்து) 'அம்மா! இவை மங்கையர் கொங்கைகள் ஆகும்' என்ன, (அதைக் கேட்டுக்கொண்டிருந்த அவன் நாயகியாகிய) ஓர் ஏழை (சாதிப்பன்மையால் அவன் 'மங்கையர்' எனக் கூறியதுணராது, அதைப் பலர்பாலாகக் கொண்டு, அவன் பல மாதர்களிடம் பழக்கமுடையவனுகின்ருன் என மதித்து), "எம்மாதர் கொங்கைக்கு இவை ஒப்பன?" என்று விம்மி வெதும்பி முகம் வெயர்த்து வெய்துயிர்த்தாள். [செம்மல்-தலைவன். செம்மாந்த-உயர்ந்த. ஏழை-பெண். வெதும்பி-மனம்புழுங்கி. வெய்துயிர்த்தாள்-வெப்பமாகப்பெரு மூச்சு எறிந்தாள்.]

18. போரென்ன வீங்கும் பொருப்பன்ன பொலங்கொ டிண்டோள்
மாரன் னனையான் மலர்கொய்திருந் தானை வந்தோர்
காரன்ன கூந்தற் குயிலன்னவள் கண்பு தைப்ப
ஆரென்ன லோடும் மனலென்ன வயிர்த்து யிர்த்தாள்.

ஓர் கார் அன்ன கூந்தல் உடைய குயில் அன்னவள் (பின்புறமாக) வந்து,—'போர்' என்ன (கேட்ட மாத்திரத்திலேயே) வீங்கும் பொருப்பு அன்ன பொலம் கொண்ட திண் தோளையுடைய மாரன் அனையான் (ஆகிய தன் நாயகன்) மலர் கொய்து இருந்தவனை (விளையாட்டாக) கண் புதைப்ப, (அவன் அசதியில்) "ஆர்?" (கண் பொத்தியது) என்ன லோடும், (தானன்றி இவனுடன் கண் பொத்தி விளையாடும் உரிமையுடைய மாதர் பலர் இலராயின் இவன் 'யார்' என்று வினவ நியாயமில்லை என) அயிர்த்து (அவள்) அனல் என்ன உயிர்த்தாள்- [மாரன்-மன்மதன். அயிர்த்து—சந்தேகித்து. பொருப்பு-மலை. பொலம்—அழகு.]

19. ஊற்ருர் நறைநாண் மலர்மாத ரொருங்கு வாசச்
சேற்ருல் விளையாத செந்தாமரைக் கைக ணீட்டி
ஏற்ருர்க் குதவா னிடையேந்தின னின்ரு ழிந்தான்
மாற்ரு னுதவான் கடுவச்சையன் போலோர் மன்னன்.

ஓர் மன்னன் (தான் பறித்துவந்த) ஊற்று ஆர் நறை உடைய நாள் மலரை, சேற்றில் விளையாத வாசம் பொருந்திய செந்தாமரை (ஆகிய தம்) கைகளை நீட்டி ஒருங்கு ஏற்ற (தன் பத்தினி) மாதர்க்கு (ஒருத்திக்குக் கொடுத்தால் மற்றவரெல்லாம் கோபித்து ஊடல் கொள்வார் என அஞ்சி, ஒருவர்க்கும் கொடாமல், 'கொடேன்' என்று சொல்லாமலும்) உதவானும் (அவர்களுக்கு) இடையில் ஏந்தி நின்று—மாற்ரு

ஞயும் உதவானுயும் (விவசரிக்கும் ஒரு) கடும் வச்சையன்போல்—ஒழிந்தான்- [ஊற்று ஆர்-ஊறுகின்ற. மாற்ருன்-மறுக்காதவன். வச்சையன்-உலோபி. நாள்-புதிய.]

20. ஊ தக்கின்ற வேனேக் கினடன்னுயி ரன்ன மன்னவன்
மைக்கொண்ட கண்ணு ளெதிர்மாற்றவள் பேர்விளம்ப
மெய்க்கொண்ட நாணந் தலைக்கொண்டிட விம்மி மென்பூக்
கைக்கொண்டு மோந்தா ளுயிர்ப்புண்டு கரிந்த வன்றே.

(தனது தோள்களில்) தைக்கின்ற வேல்போன்ற நோக்கினள் (ஆகிய ஒருத்தி) தன் உயிர் அன்ன மன்னவன் (அந்த) மைகொண்ட கண்ணுளை (கூப்பிட முயன்றவனுய் வாய் தவறி, அவளது) எதிர் மாற்றவளின் பேரை விளம்ப, (அதைக் கேட்டதும், தான் காட்டி வரும் காதற்கொக்க தன்னிடத்துக் காட்டி வஞ்சித்துவந்த இவனுக்கு எப்பொழுதும் தன் மாற்ருள் நினைவே மனத்தில் குடிகொண்டிருப்ப தென எண்ணி அதனுல் அவள்) மெய் (முழுவதும்) கொண்ட நாணம் தலைகொண்டிட (அவள்) விம்மி (இம்மெய்ப்பாட்டை மறைக்க முயன்றவளாய்) மெல்லிய பூவை (தன்) கையில்கொண்டு மோந்தாள். (கோபாக்கினியுடன் கூடிய அவளது) உயிர்ப்பை உண்டு (அம்மலர்) கரிந்தன. [தலைகொண்டிட-மிகுதியாக.]

தேவியர் கண்ணேக்கம் மொய்க்கத் திரியும் மன்னவன் வண்டினம் மொய்க்கத் திரியும் மதயானையை ஒத்தான்.

21. திண்டே ரரசன் ஞெருவன் குலத்தேவி மார்தம்
ஒண்டா மரைவாண் முகத்துண்மிளி ருண்க ணெல்லாங்
கண்டா தரிப்பத் திரிவான்மதங் கௌவி யுண்ண
வண்டா தரிக்கத் திரிமாமத யானையை யொத்தான்.

[குலம்-சிறந்த. உண்-மையுண்ட. ஆதரிப்ப-விரும்ப.]

22. சந்திக் கலாவெண் மதிவா ணுத லாட னக்கும்
வந்திக் கலாம்வாட் கணிஞட்கும் வகுத்து நல்கி
நிந்திக் கலாகா வுருவத்தின னிற்பப் போது
சிந்திக் கலாப மயிலிற்கண் சிவந்து போஞர்.

(அவயவ இலக்கணம் வல்லோரால்) நிந்திக்கல் ஆகாத உருவத்தினன் (ஆன ஒரு மன்னன், தான் பறித்து வந்த) போதுகளை, (தனது மனைவியாகிய) சந்தி (காலத்தில் தோன்றும்) கலைகளையுடைய வெண்மதிபோன்ற வாள் நுதலாள் தனக்கும், (உமையாளொக்கும் மங்கையரும்) வந்திக்கல் ஆகும் வாள்போன்ற கண்ணிஞளுக்கும் (சமஞக) வகுத்து நல்கி நிற்ப, (இருவரும் தம் தமை மற்றவளுக்கு ஒப்பாக அவன் கருதியதற்காக வெகுண்டு அவன் கொடுத்த மலர்களைத் தரையில்) சிந்தி கண் சிவந்து கலாபத்துடன் கூடிய மயில்கள் போல் (அகன்று) போஞர். [கலாபம்-தோகை.]

24. வந்தெங் குந்தன் மன்னுயி ரேயோ பிறிதொன்றோ
கந்தந் துன்றுஞ் சோர்குழல் காணாள் கலைபேணாள்
அந்தந் தோறு மற்றுகு முத்த மவைபாராள்
சிந்துஞ் சந்தத் தேமலர் நாடித் திரிவாளும்.

(தன்) கந்தத்தில் சோர்கின்ற துன்றும் குழலை காணாளாய், கலையை பேணாளாய், அந்தம் தோறும் அற்று உகும் முத்தை பாராளாய், தேம் சிந்தும் சந்தம் (பொருந்திய) மலர்களை நாடி எங்கும் வந்து திரிவாள்.—(இவ்வாறு இவள் பூத் தேடுகின்ற முயற்சியை நோக்குங்கால் அவை அவளது) மன்னிய உயிரேயோ (அல்லது அதுபோன்ற) பிறிது ஒன்றோ !—(யாம் அறியோம்). [கந்தம்-கழுத்தின் அடிப்பாசம். துன்றும்-அடர்ந்த. கலை-வஸ்திரம். சந்தம்-அழகு, நிறம்.]

24. யாழொக் குஞ்சொற் பொன்னனை யாளோ ரிகன்மன்னன்
தாழத் தாழா டாழ்ந்த மனத்தா டளர்க்கின்றாள்
ஆழத் துள்ளுங் கள்ள நினைப்பா ளவனின்ற
சூழற் கேதன் கிள்ளையை யேவித் தொடர்வாளும்.

யாழினது நாதத்தை ஒக்கும் சொல் உடைய பொன் அனையாள் (ஒருத்தி தன் நாயகனாகிய) ஓர் இகல் பொருந்திய மன்னன் (ஊடல் தணிய அவளுக்கு) தாழ (அவள் மனம்) தாழாளாய், (பிறகு, அவன் அகன்ற பின்) (அவன் பால்) தாழ்ந்த மனத்தாளாய் (அவன் வணங்கிய சமயத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஊடல் தீராது போனதற்கு) தளர்கின்றாளாய், (மறுபடி கூடுவதற்கு ஒரு உபாயம் தேடவேண்டுமென்று சிறிது சிந்தித்துத் தன் மனதின்) ஆழத்தில் துள்ளும் கள்ளம் (ஒன்றை) நினைப்பாளாய், (பிரிந்து சென்று) அவன் நின்ற சூழலுக்கே தன் கிள்ளையை ஏவி (கிளியைத் தொடர்பவள்போல் மறுபடி அங்குச் சென்றால் அவன் தன்னிடம் காதல் காட்டிக் கூடல் கூடும் என உன்னி) தொடர்வாள். [பொன்-இலக்குமி. இகல்-வலிமை. தாழ-வணங்க. தாழாள்-மனமிரங்காதவளாகி. சூழல்-இடம்.]

25. அந்தா ராகத் தைங்கணை நூறா யிரமாகச்
சிந்தா நின்ற சிந்தையி னன்செய் குவதோரான்
மந்தா ரங்கொண் டுகுதி போமா தவியென்றோர்
சந்தார் கொங்கைத் தார்குழ லாள்பாற் றளர்வானும்.

அம் தார் (அணிந்த) ஆகத்தில் (மன்மதனது) ஐந்து (புஷ்ப) கணைகள் நூறு ஆயிரம் ஆக சிந்துகிற சிந்தையினன் (ஆன ஓர் மன்னன்), (தான்) செய்வது (இன்னதென்று) ஓரான் ஆய், ஓர், சந்து ஆர் கொங்கைகளையும் தார் சூடிய குழலையும் உடையாள் பால் (சென்று,) (நான் அணிந்திருக்கும்) மந்தாரம் (மாலையை) கொண்டு (பதிலாக நீ

யணிந்த) மாதவி (மாலையை) ஈகுதியோ?" என்று (இரந்து பின் நின்றவனுய்)தளர்ந்தான். [தார்-மாலை. ஆகம்-மார்பு. ஓரான்-தேராது. சந்து ஆர்-சந்தனம் பொருந்திய]

26. நாடிக் கொண்டாள் குற்ற நயந்தாண் முனிவாற்ருள்
ஊடிக் காணக் காட்டு நலத்தா ளுடனில்லாள்
தேடித் தேடிச் செய்த செழும்பூ நறுமாலை
சூடிச் சூடிக் கண்ணடி நோக்கித் துவள்வாளும்.

(தன் நாயகனிடத்தில்) குற்றத்தை நயந்தவள் (ஒருத்தி அதைத் தானே) நாடி கொண்டாள். (தேடிக்கொண்ட அக்குற்றத்தைக் கண்டு) முனிவு ஆற்ருள், (அதனுல்) ஊடி, (பின், கூடுங்கால் தன் நாயகன்) காண காட்டும் நலத்தாளாய், (அவன்) உடன் நில்லாளாய் (அகன்று) தேடி தேடி செய்த செழும்பூ நறும் மாலையை (தான்) சூடி சூடி கண்ணடி நோக்கி (தற்காலம் இவ்வழகை நாயகன் காண் பதற்கில்லையே என்று) துவள் வாளும்—[நயந்தவள்-விரும்பியவள். முனிவாற்ருள்-கோபத்தைப் பொருதவளாய். நலம்-இன்பம்.]

27. மறலிக் கூணும் வன்கதிர் வேலா னிடையேவந்
துறவிக் கோலம் பெற்றிலெ னென்ரு லுடன்வாழ்விப்
பிறவிக் கொல்லே னென்செய்வ திப்பே ரணியென்ரு
விறலிக் கீவா ளொத்திழை யெல்லாம் விடுவாளும்.

(பகைவரைக் கொன்று) மறலிக்கு ஊண் ஆகும் வன் கதிர் தங்கிய வேலான் (ஆகிய தன் நாயகன்), (என்) இடையே வந்து உற இ கோலம் பெற்றிலென் என்ருல், (மறுபடி அவன்) உடன் வாழ்வை இ பிறவியில் ஒல்லேன். இ பேர் அணி (அவன் என்னிடம் வந்து ஊடல் தீர்த்துக் கூடுவதற்குக் காரணமாயிராதாரின், இருந்துதான்) என் செய்வது" என்று இழை எல்லாம் விறலிக்கு (பரிசாக) ஒத்து ஈவாளாய் (அவளைத் தன் கணவன்பால் தூது) விடுவாளும்—[மறலி-யமன். ஆகும்-செய்விக்கும். கதிர்-ஒளி. இடையே-இடத்தில். ஒல்லேன்-பொருந்தேன். விறலி-பாடல்மகள். ஒத்து-சம்மதித்து.]

28. வம்பிற் பொங்குங் கொங்கை சுமக்கும் வலியின்றிக்
கம்பிக் குந்தன் னுண்ணிடை நோவக் கசிவாளும்
பைம்பொற் கிண்ணம் மெல்விர லுங்கிப் பயில்கின்ற
கொம்பிற் பிள்ளைக் கிள்ளை யொளிக்கக் குழைவாளும்.

[வம்பில் பொங்கும் கொங்கை-கச்சினின்று மீறி விம்முகின்ற முலை. கம்பிக்கும்-நடுங்குகின்ற. கிண்ணம்-கிளிக்கு உணவு வைக்கப்பெற்ற கிண்ணம். பயில்கின்ற-பேசுகின்ற. கிள்ளை-கிளி.]

29. தன்னைக் கண்டாண் மென்னடை கண்டா டமர்போலத்
துன்னக் கண்டா தோழமை கண்டா டுணையென்றாள்
உன்னைக் கண்டா ரெள்ளுவர் பொல்லா துடுநீயென்
றன்னக் கன்னிக் காடை யளிப்பா னமைவாளும்.

(அன்னமாகிய) தன்னை கண்டு (அதன்) மெல் நடையை கண்டு, தமர்போல (அவளை அது) துன்ன கண்டு (அதன்) தோழமை கண்டு (அதனைத் தன்) துணை என்றாள். (என்று, ஆடையில்லாத) "உன்னை கண்டார் எள்ளுவர். (அது) பொல்லாது. (ஆதலால் இதை) நீ உடு" என்று, கன்னி அன்னத்திற்கு ஆடை அளிக்க அமைவாளும்—[தன்னை-அதனை. தமர்-இங்குச் சிலதியர். துன்ன-பிரியாதிருக்க. துணை-தோழி. எள்ளுவர்-இகழ்வர். பொல்லாது-குற்றம்.]

30. பாகொக் குஞ்சொல் னுண்கலை யாடன் படரல்குல்
ஆகக் கண்டோ ராடர வாமென் றயனண்ணுந்
தோகைக் கஞ்சிக் கொம்பி னொதுங்கித் துணரீன்ற
சாகைத் தன்கைக் கண்கள் புதைத்தே தளர்வாளும்.

பாகு ஒக்கும் சொல் (மிழற்றுகின்றவளும்) நுண்ணிய கலையாளும் (ஆகிய ஒருத்தி) தன் படர்ந்த அல்குல் (மெல்லிய ஆடை வழியாய்) ஆக, (அதை) கண்டு, "(அது) ஓர் ஆடும் அரவு ஆகும்" என்று (கருதி) அயலில் நண்ணும் (பாம்பிற்குப் பகையாகிய) தோகைக்கு அஞ்சி, கொம்புபோல் ஒதுங்கி, துணர் ஈன்ற சாகைகளில் (மறைந்து) (அச்சத்தினால்) தன் கையால் கண்களை புதைத்து தளர்வாளும். [கலையாள்-ஆடை தரித்தவள். ஆக-தோன்ற. நண்ணும்-நெருங்கும். தோகை-மயில். கொம்பு, சாகை-பூங்கொம்பு. துணர்-பூங்கொத்து. ஒதுங்கி-நடந்து.]

31. பொன்னே தேனே பூமக ளேகா ணென்னையென்னாத்
தன்னே ரில்லா னங்கொரு கொய்யற் றழைமூழ்க
இன்னே என்னைக் காணுதி நீயென் றிகலித்தன்
நன்னீ லக்கண் கையின் மறைத்து நகுவாளும்.

தனக்கு (பிறரெவரும்) நேர் இல்லான் (ஒருவன்) (தன் நாயகியை) "பொன்னே, தேனே, பூமகளே, என்னை (இருக்குமிடம் தேடி) காண்," என்று (ஒரு) கொய்யலுக்கு உரிய தழையின் இடையில் மூழ்க,—(அவள் அதற்கு) இகலி, 'நீ (தான்) என்னை இன்னே காணுதி' என்று, தனது நல் நீலம் கண்களை (தன்) கையினால் மறைத்து, (தன் கண்ணை மறைத்துக்கொள்வதால் பிறருக்குத்தான் தென்படாது இருத்தல் நேராதென்பது விளையாட்டயர்வில் உணராதிருந்த தன் பேதைமைக்குத் தானே) நகுவாளும்— [கொய்யல்-பறித்தல். நல்நீலம்-மிகவுங் கரிய. இகலி-எதிராக]

32. வில்லிற் கோதை நாணுற மிக்கோ னிகலங்கம்
புல்லிக் கொண்ட தாமரை மென்பூ மலர்தாங்கி
அல்லிற் கோதை மாதர்மு கம்மா மரவிந்தச்
செல்வக் கானிற் செங்கதி ரென்னத் திரிவானும்.

வில்லின் நாண் கோதையில் உற, மிக்கோன் (ஒரு செம்மல், தனது) இகல் அங்கம் புல்லிகொண்ட தாமரையாகிய (மன்மதனது வேட்டை விளைக்கும் பாணமாகிய) மெல்லிய பூ உடைய மலரை தாங்கி, அல்லில் கோதை(உடைய) மாதர்களது முகம் ஆம் அரவிந்தமாகிய செல்வ கானில் (அவை மலர்ந்தொளிர) செம் கதிர் என்ன திரிவானும்,—[கோதை-வில் பயில்வோர் இடக்கையில் அணியும் சிறு தோல் கவசம். இகல் அங்கம்-போரிற்குரிய அங்கம், கை. புல்லிக்கொண்ட-அணைந்த. பூ-பொலிவு, அழகு. அல்லில் கோதை-இருள்போன்ற கூந்தல்]

33. செய்யிற் கொய்புஞ் செங்கு முதச்செஞ் சிலையொன்றும்
கையிற் பெய்யுங் காமனு நாணுங் கவிஞர்த
மையற் பேதை மாதர் மிழற்றும் மழலைச்சொற்
றெய்வப் பாடல் சொற்கலை யென்னத் தெரிவாரும்.

செய் இல் கொய்யும் (மையல் விளைக்கும் மன்பதபாணமாகிய) செம் குமுதம் (ஒன்றும்), (செய்யில் கொய்யும் கரும்பாகிய) சிலை ஒன்றும் (தன்) கையில் பெய்த காமனும் (கூட இவர்களழகிற்குத் தோற்று) நாணும் கவிஞர் (ஆகிய ஆடவர்), பேதைகளாகிய மையல் கொண்ட தமது மாதர்கள் மிழற்றும் மழலை சொல்களை தெய்வ பாடலும் சொல்கலையும் என்ன (மதித்து அதன் தத்துவங்களை) தெரிவாரும்—[செய்-வயல். சிலை-வில். கவிஞர்-அழகுடையவர். மையல்-காமமயக்கம். தெய்வப்பாடல்-வேதம். சொல்கலை-கலாசாஸ்திரங்கள், கவிகள்.]

34. சோலைத் தும்பி மென்குழ லாகத் தொடைமேவுங்
கோலைக் கொண்ட மன்மத வாயன் குறியுப்ப
நீலத் துண்கண் மங்கையர் சூழ நிரையாவின்
மாலைப் போதின் மால்விடை யென்ன வருவாரும்.

(அந்த) சோலையில், தும்பி (இசைக்கும் ஓசை) மெல்லிய (புள்ளாங்) குழல் ஆக, தொடை மேவும் கோலை கொண்ட மன்மதன் ஆகிய ஆயன், (செல்லும்) குறியில் உய்ப்ப, நீலத்து (மை) உண்ட கண்களுடைய மங்கையர் ஆ நிரையைப்போல் சூழ, மாலை போதில் மால் விடை என்ன (ஆடவர்) வருவாரும்—[தொடை மேவும் கோல்-மன்மதனைக் குறிக்கும்போது:—நாணில் பொருந்திய அம்பு: ஆயனைக் குறிக்கும்போது:—பூமாலை சூட்டிய கைக்கோல். ஆயன்-இடையன். ஆ நிரை-பசுக்கூட்டம். மால் விடை-பெருமை தங்கிய இருஷபம்.]

35. ஊக்க முள்ளத் துடைய முனிவராற்
காக்க லாவது காமன்கை வில்லெனும்
வாக்கு மாத்திர மல்லது வல்லிபிற்
பூக்கொய் வாள்புரு வக்கடை போதுமே.

உள்ளத்து ஊக்கம் உடைய முனிவராலும் காக்கலா அது 'காமன் கை வில்' எனும் வாக்கு மாத்திரம் அல்லது (சாக்ஷியும் வேண்டுமானல்); வல்லிக்கொடிபோல் (அசைந்து நடந்து) பூவை கொய்வாள் (ஒருத்தியின்) புருவத்தின் கடை (அதை ரூபிக்க) போதுமே. [ஊக்கம்-வலி. காக்கலா அது-காத்தற்கு இயலாத அது.]

36. நாறு பூங்குழ னன்னுதல் புன்னைமேல்
ஏறி னன்மனத் தும்பர்சென் றேறினள்
ஊறு ஞானத் துயர்ந்தவ ராயினும்
வீறு சேர்முலை மாதரை வெல்வரோ.

நாறும் பூ (அணிந்த) குழலையும் நல்நுதலையும் உடைய ஒருத்தி, (ஓடிப் பிடித்தாடும் விளையாட்டில் தன் கைக்கெட்டாது) புன்னை மரத்தின்மேல் ஏறினன் (ஆன தன் நாயகனது) மனத்து உம்பர் சென்று ஏறினள்—(பார்க்கப் புகுந்தால்) ஊறும் ஞானத்து உயர்ந்தவர் ஆயினும் வீறு சேர்ந்த முலை மாதரை (எவ்வகையிலும்) வெல்வரோ! [நாறும்-மணம் வீசும். குழல்-கூந்தல். மனத்தும்பர் சென்றேறினள்-உடல் கைக்கெட்டாவிட்டாலும் அவன் மனதிற்கு மேல் சென்று அதைத் தன் வயப்படுத்திவிட்டாள். ஊறும்-பெருகும். வீறு-வேறொன்றிடத்துமில்லாத பேரழகு.]

37. சினையின் மேலிருந் தானுருத் தேவரால்
வனைய வும்மரி யாள்வனப் பின்றலை
நினைவு நோக்கமு நீக்கலன் கைகளால்
நனையு நாண்முறி யுங்கொய்து நல்கினன்.

(நாயகிக்குப் பூ பறித்தீதல் பொருட்டு) சினையின் மேல் (ஏறி) இருந்தான் (ஒரு ஆடவன்), தேவரால் (சிருஷ்டிக்க இயலாவிடினும்) உருவை வனையவும் அரியாள் (ஆகிய தன் நாயகியின்) வனப்பின்தலை நினைவும் நோக்கமும் நீக்கலனாகி (தடுமாற்றங்கொண்டு நினைப்பது தொன்றும் செய்வதொன்றுமாய் மனமுடன் செல்லாத் தன்) கைகளால் (பூக்களை மறந்து) நனையும் நாள் முறியும் கொய்து (அவளுக்கு) நல்கினன். [சினை-கிளை. வனைய-எழுத. வனப்பின்தலை-அழகினிடத்தில். நனை-அரும்பு. நாள்முறி-இளம் தளிர்.]

38. வண்டு வாழ்குழ லாண்முக நோக்கியோர்
தண்டு போற்புயத் தான்றடு மாறினன்
உண்டு கோபமென் றுள்ளத் துணர்ந்தவள்
தொண்டை வாயிற் றுடிப்பொன்று சொல்லவே.

வண்டுகள் வாழ்கின்ற குழலாள் (ஒருத்தியின்) முகத்தை நோக்கி (அவளது அழகின் வலியால்) ஓர் தண்டுபோல் புயத்தான் தடுமாறினன். (தடுமாற்றத்தின் உண்மைக் காரணம் உணரா அவள், தன் மேல் அவனுக்கு ஏதோ) கோபம் உண்டு என்று உள்ளத்து உணர்ந்து (தானும் கோபம் கொண்டு ஏதோ உரைக்கப் புகுந்தவள்) தொண்டை போன்ற வாயில் (சொல்லெழும்பாமல்) துடிப்பு ஒன்று (மாத்திரம்) சொல்லல் (ஆயினள்.) [தண்டு-கதை ஆயுதம். தடுமாறினன்-மன நிலைகுலைந்தான். தொண்டை-கொவ்வைக்கனி. துடிப்பு-துடித்தல்.]

39. ஏயுந் தன்மைய ரிவ்வகை யாரெலாந்
தூய தண்ணிழற் சோலைத் துறுமலர்
வேயுஞ் செய்கை வெறுத்தனர் வெண்டிரை
பாயுந் தீம்புனற் பண்ணைசென் றெய்தினர்.

ஏயும் தன்மையரான இவ்வகையார் எலாம்—தூய தண் நிழல் சோலையில் துறுமலர் வேயும் செய்கையை வெறுத்தனர் (ஆகி), (அவ்விடம் விட்டு) வெண் திரை பாயும் தீம் புனலிற்கு சென்று பண்ணையை எய்தினர். [ஏயும்-பொருந்திய. துறுமலர்-அடர்ந்த மலர். திரை-அலை. புனல் பண்ணை-நீர் விளையாட்டு.]

---

17. நீர்விளையாட்டுப் படலம்.

1. புனைமலர்த் தடங்க ளேக்கிப் பூசல்வண் டார்த்துப் பொங்க
வினையறு துறக்க நாட்டு விண்ணவர் கணமு நாண
நனைமலர்க் குழலார் மைந்தர் நறுமலர்ச் சோலை நின்று
வனகரி பிடிக ளோடும் வருவன போல வந்தார்.

[புனை-அலங்காரமான. பூசல்-ஆரவாரம் செய்யும். நனை-தேன். வனகரி-காட்டு யானை. வினையறு-இருவினைநீங்கிய].

2. அங்கவர் பண்ணை நன்னீ ராடுவா னமைந்த தோற்றங்
கங்கைவார் சடையோ னன்ன மாமுனி கனல மேனாள்
மங்கையர் கூட்டத் தோடும் வானவர்க் கிறைவன் செல்வம்
பொங்குமா கடலுட் செல்லுந் தோற்றமே போன்ற தன்றே.

[நன்னீர்பண்ணை-நீர்விளையாட்டு. மாமுனி-துர்வாசமுனி. கனல-வெகுண்டு சாபமிட].

குவளைகள் கண்போலும், கண் குவளைபோலும்; முகம் தாமரை போலும், தாமரை முகம்போலும் மலர்ந்தன.

3. மைபவாங் குவளை யெல்லா மாதர்கண் மலர்கள் பூத்த
கைபவா முருவத் தார்தங் கண்மலர் குவளை பூத்த
செய்ய தாமரைக ளெல்லாந் தெரிவையர் முகங்கள் பூத்த
தையலார் முகங்கள் செய்ய தாமரை பூத்த வன்றே.

[மையவாம் - கருமையான. கையவாம் - சாமுத்ரிகாலக்ஷணத்திற் கிசைந்த].

4. தாளையேய் கமலத் தாளின் மார்புறத் தழுவு வாருந்
தோளையே பற்றி வெற்றித் திருவெனத் தோன்று வாரும்
பாளையே விரிந்த தென்னைப் பாந்தநீ ருந்து வாரும்
வாளைமீ னுகள வஞ்சி மைந்தரைத் தழுவு வாரும்.

[முதலடி:—நாளம்பொருந்திய கமலத்தில் வசிக்கும் இலக்குமியைப் போல் ஆடவர்தம் மார்புஉற தழுவுவார். வெற்றித்திரு-விஜயலட்சுமி. உந்துவார்-தள்ளுவார். உகள புரள].

5. வண்டுணக் கமழுஞ் சுண்ணம் வாசநெய் நானத் தோடுங்
கொண்டெதிர் வீசு வாருங் கோதைகொண் டோச்சு வாருந்
தொண்டைவாய்ப் பெய்து தூநீர் கொழுநர்மேற் றூகின் றாரும்
புண்டரீ கக்கை கூட்டிப் புனல்முகந் திறைக்கின் றாரும்.

[வண்டு உண-வண்டுகள் விரும்பி உண்ண. சுண்ணம்-வாசனைப் பொடி. நெய்-தைலம். நானம்-கஸ்தூரி. கோதை-பூமாலை. தொண்டைவாய்-கொவ்வைக் கனிபோன்ற வாய். தூகின்றார்-வீசுகின்றவர்].

6. மின்னொத்த விடையி னாரும் வேயொத்த தோளி னாரும்
சின்னத்தி னளக பந்தி திருமுக மறைப்ப நீக்கி
அன்னத்தை வருதி யென்றே யாடவென் றழைக்கின் றாரும்
பொன்னொத்த முலையின் லந்து பூவொற்ற வுளைகின் றாரும்.

[வேய்-மூங்கில். சின்னத்தின்-பூந்தாதுபடிந்துள்ள. அளகபந்தி-தலைமயிர்த்தொகுதி. பூஒற்ற-பூக்கள்பட. உளைகின்றார்-வருந்துபவர்].

7. பண்ணுள பவளத் தொண்டை பங்கயம் பூத்த தன்ன
வண்ணவாய்க் குவளை வாட்கண் மருங்கிலாக் கரும்பி னன்னார்
உண்ணிறை கயலை நோக்கி யொடுநீர்த் தடங்கட் கெல்லாம்
கண்ணுள வாங்கொ லென்று கணவரை வினவு வாரும்.

பண்உள பவளநிறமான தொண்டையை பங்கயம்பூத்தது அன்ன வண்ணம் வாயையும், குவளையும் வாளும் போன்ற கண்ணும் (உடைய) மருங்கு இல்லாத கரும்பு அன்னார் (ஆகியமாதர்), (நீரின்) உள் நிறைந்த

கயலை நோக்கி, "ஓடும் நீர் (உடைய) தடங்களுக்கு எல்லாம் கண் உள ஆகும் கொல்?" என்று (தம்) கணவரை வினவுவாரும்— [முதலடிக்கு-தாமரைபோன்ற முகத்தில் கொவ்வைக் கனிபோன்ற வாய் இருந்த தென்பது கருத்து. தடம்-நீர்க்கரை.]

தன் நிழலைத் தோழி எனக்கருதி முத்தாரம் ஒருத்தி நல்கினாள்.

8. தேனகு நறவ மாலைச் செறிகுழற் றெய்வ மன்னாள்
தானுடைக் கோல மேனி தடத்திடைத் தோன்ற நோக்கி
நானகை நகுகின் றாளிந் நன்னுதற் றோழி யாமென்
றானமின் முலையினார முரங்குளிர்ந் துதவு வாளும்.

[தேன்நகு நறவமாலை-வண்டுகள் களிக்க மது பொருந்திய மாலையைச் சூடிய. தானுடை-தனது. நான்நகநகுகின்றாள்-நான் சிரித்தால் அவளும் சிரிக்கின்றாள்].

9. குண்டலந் திருவில் வீசக் குழைமணி யார மின்ன
விண்டொடர் வரையின் வைகு மென்மயிற் கணங்கள் போல
வண்டுளர் கோதை மாதர் மைந்தர்தம் வயிரத் திண்டோள்
தண்டுகள் தழுவு மாசை புனற்கரை சார்கின் றாரும்.

[திருவில்-சிறந்த ஒளி. கணம்-கூட்டம். வண்டு உளர் கோதை-வண்டுகள் தங்கித் தம் சிறகைக் கோதிக்கொள்ளும் பூமாலை அணிந்த].

10. அங்கிடை யுற்ற குற்றம் யாவதென் றறிதல் தேற்றும்
செங்கய லனைய நாட்டஞ் சிவப்புறச் சீறிப் போன
மங்கையோர் கமலச் சூழன் மறைந்தனள் மறைய மைந்தன்
பங்கய முகமென் றோரா னையுற்றுப் பார்க்கின் றானும்.

(புனல் கரையில் அவ்வாறு தழுவு மாசையால் சார்ந்த) அங்கு இடையில் (நாயகனிடத்தில்) உற்ற குற்றம் யாவது என்று அறிதல் தேற்றும். (ஊடல் கொண்டு) செம் கயல் அனைய நாட்டம் சிவப்பு உற சீறி போன (அந்த) மங்கை ஒரு கமல சூழலில் மறைந்தனள். மறைய, மைந்தன் (தாமரைக் கிடையே தோன்றும் அவள் முகம் எது என்பது அறிய இயலாது நினைத்து), (இது) பங்கயம் (இது அவள்) முகம் என்று ஓராறுய் ஐயம் உற்று பார்க்கின்றானும் [கமலச் சூழல்-சுற்றிலும் தாமரை செறிந்த இடத்தில்]

11. பொற்றொடித் தளிர்க்கைச் சங்கம் வண்டொடு புலம்பி யார்ப்ப
எற்றிநீர் குடையுந் தோறு மேந்துபே ரல்கு லின்றுங்
கற்றைமே கலைக ணீங்கிச் சீறடி கௌவக் காலில்
சுற்றிய நாக மென்று துணுக்கத்தாற் றுடிக்கின் றாரும்.

சங்கம் வண்டொடு புலம்பி ஆர்ப்ப, பொன் தொடி (அணிந்த) தளிர் போன்ற கைகளால் நீரை எற்றி (மாதர்) குடையும் தோறும், எந்து

பேர் அல்குல்நின்றும் (அவர்களது) மேகலைகள் கற்றையாக நீங்கி (அவர்) சீறடியை கௌவ, (அவைகளை) காலில் சுற்றிய நாகம் என்று துணுக்கத்தால் துடிக்கின்றாரும். [எற்றி-எறிந்து. ஏந்து-உயர்ந்த].

12. குடைந்துநீ ராடு மாதர் குழாம்புடை சூழ வாழித்
தடம்புயம் பொலிய வாண்டோர் தார்கெழு வேந்த னின்றான்
கடைந்தநா ளமிழ்தி னோடுங் கடலிடை வந்து தோன்றும்
மடங்கையர் சூழ நின்ற மந்தர மலையு மொத்தான்.

[குழாம்-கூட்டம். புடை-பக்கத்தில். ஆழி-வாகுவலயம் அணிந்த, சக்ர வாளகிரியை ஒத்த. நின்றான்-நின்றவன்.]

குறிப்பு :—மேல் 2-வது செய்யுளில், நீராடச் சென்ற மாதரைத் தூர்வாச முனிவனது சாபத்தால் கடல் புக்கொளித்த இந்திரனது செல்வத்திற்கு ஒப்புப்படுத்திக் கூறியது அவலச் சகுனமென்று கருதுவோர்க்குச் சமாதானமாய் இங்கவர் மந்தரம் திரிய மீண்டமையையும் கம்பர் எடுத்துரைத்தனர் போலும்.

13. தொடியுலாங் கமலச் செங்கைத் தூநகைத் துவர்த்த செவ்வாய்க்
கொடியுலா மருங்கு னல்லார் குழாத்தொரு குரிசி னின்றான்
கடியுலாங் கமல வேலிக் கண்ணகன் கான யாற்றப்
பிடியெலாஞ் சூழ நின்ற பெய்மத யானை யொத்தான்.

[உலாம்-பொருந்திய, போன்ற, தங்கிய. நகை-பல். துவர்த்த-பவழ நிறமான. குழாம்-கூட்டம். குரிசில்-அரசன். கடி-வாசனை]

14. கானமா மயில்க ளெல்லாங் களிகெடக் களிக்குஞ் சாயல்
சோனைவார் குழலி னார்தங் குழாத்தொரு தோன்ற னின்றான்
வானயா றதனை நண்ணி வயின்வயின் வயங்கித் தோன்றும்
மீனெலாஞ் சூழ நின்ற விரிகதிர்த் திங்க ளொத்தான்.

[முதலடி :—கானத்திலுள்ள மா மயில்களெல்லாம் தம் செருக்கழியும்படி களிக்கின்ற சாயல் உடைய. சோனைவார் குழலினார்-விடா மழை போல் நீண்ட கூந்தலையுடைய மாதர். நின்றான்-நின்றவன். வானயாறு-ஆகாயகங்கை. வயின் வயின்-எங்கும். மீன்-நக்ஷத்திரம்]

15. மேவலாந் தகைமைத் தல்லால் வேழவிற் றடக்கை வீரற்
கேவெலாங் காட்டு கின்ற வீணை நெடுங் கண்ணெ ரேழை
பாவைமார் பயந்த கோலப் பண்ணையிற் பொலிவாள் வண்ணப்
பூவெலா மலர்ந்த பொய்கைத் தாமரை பொலிவ தொத்தாள்.

வேழம் வில் (ஏந்திய மன்மதனாகிய) தடம் கை வீரனுக்கு மேவல் ஆகும் தகைமைத்து (மாத்திரம்) அல்லாது (அவனுக்கு)

ஏ எல்லாம்(கற்பித்து)காட்டுகின்ற இணையான நெடும் கண்களையுடைய ஓர் ஏழை—(தனது தோழிகளாகிய) பாவைமார்களது கோலம் பயந்த பண்ணையில் பொலிபவள்—வண்ணம் பூ எல்லாம் மலர்ந்த பொய்கையில் தாமரை பொலிவதை ஒத்தாள். [வேழம்-கரும்பு. மேவல்-விருப்பு. ஏ-அஸ்திரசாஸ்திரம். கோலம் பயந்த பண்ணை-அழகு பெற்ற மாதர் கூட்டம். வண்ணம்-அழகு. ஏழை-பெண்].

16. மிடலுடைக் கொடிய வேலே யென்னவாண் மிளிர்வ வென்னச்
சுடர்முகத் துலாவு கண்ணு டோகையர் சூழ நின்றாள்
மடலுடைப் போது காட்டும் வளர்கொடி பலவுஞ் சூழக்
கடலிடைத் தோன்று மென்பூங் கற்பக வல்லி யொத்தாள்.

சுடர்பொருந்திய முகத்தில், மிடல் உடைய கொடிய வேல் என்னவும் வாள்கள் மிளிர்வன என்னவும் உலாவும் கண்ணுள் (ஒருத்தி) தோகையர் சூழ நின்றாள். (அவள் அப்பொழுது), மடல் உடைய போதுகளை காட்டும் வளர்கின்ற கொடிகள் பலவும் சூழ (பால்) கடல் இடையில் தோன்றிய மெல்லிய பூக்களையுடைய கற்பகவல்லியை ஒத்தாள். [மிடல்-வலிமை. உலாவும்-பிறழ்கின்ற. மடல்-இதழ்.]

17. தேரிடைக் கொண்ட வல்கு றெங்கிடைக் கொண்ட கொங்கை
ஆரிடைச் சென்றுங் கொள்ள வொண்கிலா வழகு கொண்டாள்
வாரிடைத் தனமீ தாட மூழ்கினாள் வதன மைதீர்
நீரிடைத் தோன்றுந் திங்க ணிழலெனப் பொலிந்த தன்றே.

தேர் (தட்டின்) இடத்து (அழகுபெற்று) கொண்ட அல்குலையும், தெங்கின் (குரும்பை) இடத்து (அழகு பெற்று) கொண்ட கொங்கைகளையும், யார் இடத்தும் சென்று (பெற்று) கொள்ள ஒண்கிலாத அழகையும் கொண்டாள் (ஒருத்தி), (கட்டிய) வாரின் இடையில் தனம் மீது ஆட (நீரில்) மூழ்கினாள். (அவளது) வதனம் (நீரினுள்) மை தீர்ந்த திங்கள் (ஒன்று உண்டாயின் அதன்) நீர் இடை தோன்றும் நிழல் என பொலிந்தது. [ஒண்கிலாத-கூடாத. மை-களங்கம்].

குறிப்பு:—நீரில் முழுக நெற்றித் திலகம் அழிந்ததால் களங்கம் நீங்கிய திங்கள் ஆயது போலும் அவள் முகம். திலகத்தை நீக்கிய கைகேசியைப் பின் மதிக்குமறுதுடைத்தாளாகக் கம்பர் கூறுகின்றனர்.

18. மலைக டந்த புயங்கண் மடந்தைமார்
கலைக டந்தக லல்குல் கடம்படு
முலைக டந்தமின் முந்தி நெருங்கலால்
நிலைக டந்து பரந்தது நீத்தமே.

மலையை (வென்று) கடந்த (ஆடவர்களது) புயங்களும், மடந்தை மார்களது மேகலையை கடந்து அகன்ற அல்குலும், (அவர்களது) கடம்படு முலைகளும் தம்மில் முந்தி நெருங்கலால், நீத்தம் (தன் நீர்) நிலையை கடந்து பரந்தது. [கடம்படு-குடத்தை ஒத்த. நீத்தம்-நீர்]

புணர்ச்சிக்கும் புனலாவதற்கும் சிலேடை.

19. செய்ய வாய்வெளுப் பக்கண் சிவப்புற
நெய்ய ராக மழியத் துகினெகத்
தொய்யின் மாமுலை மங்கையர் தோய்தலாற்
பொய்கை காதற் கொழுநரும் போன்றதே.

தொய்யில் (எழுதப்பெற்ற) மா முலைகளை உடைய மங்கையர்—(தமது) செய்ய வாய் வெளுப்பவும், கண் சிவப்பு உறவும், நெய் (கலந்த) அராகம் அழியவும், துகில் நெகவும்—தோய்தலால், (அப்) பொய்கை (அவர்களது) காதல் கொழுநரும் போன்றது. [தொய்யில்-சந்தனத்தால் முலைமீது அலங்காரமாய் எழுதும் சித்திரம். அராகம்-செந்நிற வாசனைப்பொடி. துகில் நெக-ஆடை நெகிழ.]

20. ஆன தூயவ ரோடுட னாடினர்
ஞான நீரவ ராகுவர் நன்றரோ
தேனு நாவியுந் தேக்ககி லாவியும்
மீனு நாறின வேறினி வேண்டுமோ.

தூயவர் ஆனவரோடு உடன் ஆடினர் ஞான நீரவர் நன்று ஆகுவர். (இதற்கு உதாரணமாய்), (சிறந்த மாதரோடு சிறிது நேரமேனும் பழகியதால்) மீனும் (கூட) தேனும் நாவியும் அகிலின் தேக்கு ஆவியும் நாறின, (என்றால்) இனி வேறு (எடுத்துக்காட்ட) வேண்டுமோ! [ஆடினர்-ஊடாடினவர். நீரவர்-குணமுடையவர். நாவி-கஸ்தூரி. தேக்கு-நிறைந்த.]

குறிப்பு:—மீனும் மாதரும் சேர்ந்து பழகுங்கால் மீன் நாற்றம் மாதரைப் பற்றுமல் மாதர் மணமே மீனிற்குப் படிந்தது—முன் வரைக்காட்சிப் படலம் 8-வது செய்யுளில் கொண்ட தன் கொள்கையைக் கம்பர் இங்கு மொருதரம் எடுத்துக் காட்டுகின்றார்.

செஞ்சாந்தும் குங்குமமும் படர்தலால் அந்நீர்நிலை
செவ்வானம் ஒத்தது.

21. மிக்க வேந்தர்தம் மெய்படி சாந்தொடும்
புக்க மங்கையர் குங்குமம் போர்த்தலால்
ஒக்க நீல முகிற்றலை போழ்ப
செக்கர் வானக மொத்ததத் தீம்புனல்.

22. காக துண்ட நறுங்கல வைக்களி
ஆக முண்ட தடங்கலு நீங்கலால்
பாக டர்ந்த பணிக்கனி வாய்ச்சியர்
வேக டஞ்செய் பணியென மின்னினார்.

பணி (ஆகிய) பாகு அடர்ந்த (கொவ்வை) கனிபோன்ற வாய்ச்சியர், காகதுண்டம் (சேர்ந்த) நறும் கலவை களி (முதலிய அவர்களது) ஆகத்தை உண்டது அடங்கலும் (நீராடுகையில்) நீங்கலால்,-வேகடம் செய்த பூணிஎன மின்னினார். [பணி-சொல். காகதுண்டம்-அகில். களி-குழம்பு. வேகடம்-சாணைபிடித்தல்]

23. பாய ரித்திற லான்பசுஞ் சாந்தினால்
தூய பொற்புயத் துப்பொதி தூக்குறி
மீய ரித்து வெளுக்கவோர் மெல்லியல்
சேய ரிக்கருங் கண்கள் செவந்தவே.

பாய்கின்ற அரியின் திறலான் (ஒரு செம்மல்), (தனது) தூயபொன் (அணி அணிந்த) புயத்தில் பொதிந்த (தன் நாயகி அன்புடன் எழுதிய தொய்யிலாகிய) தூ குறியை (நீராடுகையில்) மீ அரித்து வெளுக்க (அதைக்கண்டு அந்த நாயகியாகிய) ஓர் மெல் இயலை உடையாள் (தன்னிடம் அன்பிலன் என்று ஊட, அவளது) செவ்வரி படர்ந்த கரும் கண்கள் (கோபத்தால்) செவந்தன. [அரி-சிங்கம். அரித்து-அழித்து]

24. கதம்ப நாள்விரை கள்ளவிழ் தாதொடுந்
ததும்பு பூந்திரைத் தண்புனல் சுட்டதால்
நிதம்ப பாரத்தோர் நேரிழை காமத்தால்
வெதும்பு வாளுடல் வெப்பம் வெதுப்பவே.

நிதம்பபாரத்தையுடைய ஓர் நேர்இழை, காமத்தால் வெதும்புவாளாகி (அவளது) உடலின் வெப்பம் வெதுப்ப, (அதனால்) கதம்பம், நாள் விரைகள், அவிழ்கின்ற தாது (இவைகளொடு) ததும்பும் பூம் திரைகளுடைய தண் புனல் சுட்டது! [வெதுப்ப-வெப்பமாக்க. கதம்பம்-பரிமளப் பொடி. நாள்விரை-புதிய சந்தனம்]

திருமகளை நீராட்டும் யானை போல் ஓர் செம்மல் நாயகி மீது
நீர் முகந்து எறிந்தான்.

25. தைய லாளையோர் தாரணி தோளினான்
நெய்கொ ளோதியி னீர்முகந் தெற்றினான்
செய்ய தாமரைச் செல்வியைத் தீம்புனல்
கையி னாட்டுங் களிற்றர சென்னவே.

[தார்-பூமாலை. நெய்கொள் ஓதி-தைலம் பூசிய கூந்தல்.]

26\. சுளியு மென்னடை தோற்க நடந்தவர்
ஒளிகொள் சீறடி யொத்தன வாமென
விளிவு தோன்ற மிதிப்பன போன்றன
நளின மேறிய நாகிள வன்னமே,

நளினத்தில் ஏறிய நாகுஇள அன்னங்கள், (அந்தத் தாமரைமலர் தமது) மெல் நடை தோற்க நடந்தவர்கள் (ஆன மாதர்களது) ஒளி கொண்ட சிறு அடிகளை ஒத்தன ஆகும் என சுளியும். (சுளிந்து அந்த) விளிவு தோன்ற (அவைகளை) மிதிப்பன போன்றன. [நளினம்-தாமரை. நாகு இள-மிகவும் இளமையான. சுளியும்-கோபிக்கும். விளிவு-கோபம்]

27\. எரிந்த சிந்தைய ரெத்தனை யென்கெனோ
அரிந்த கூருகி ராலழி சாந்துபோய்த்
தெரிந்த கொங்கைகள் செவ்விய நூல்புடை
வரிந்த வங்கல சங்களை மானவே.

அரிந்த கூரிய உகிரால் அழிந்த சாந்து போய் விட (அதனால்) தெரிந்த கொங்கைகள், (இடையாகிய) செவ்விய நூலின் புடையில் வரிந்த அம் கலசங்களை மான—(அவைகளைக் கண்டு காமவேட்கையால்) எரிந்த சிந்தையர் (ஆன ஆடவர்) எத்தனை என்கென் ! [அரிந்த-வெட்டித்திருத்திய. மான-ஒத்திருக்க. என்கென்-என்று இயம்புவேன்.]

28\. தாழ நின்ற ததைமலர்க் கையினால்
ஆழி மன்னொரு வன்னுரைத் தானது
வீழி யின்கனி வாயொரு மெல்லியல்
தோழி கண்ணிற் கடைக்கணிற் சொல்லினாள்.

தாழநின்ற (இதழ்) ததைந்த (தாமரை) மலர்போன்ற கையினால் ஆழி (அணிந்த) மன்னன் ஒருவன் (சாடை காட்டித் தன் காதலை ஒருத்திக்கு) உரைத்தான். அதை வீழியின் கனிபோன்ற வாய் உடைய ஒரு மெல்லியல் (தன்) கடைக்கண்ணினால் (தனது) தோழியின் கண்ணில் (சாடையாக) சொல்லினள். [வீழி-ஒரு செடி]

29\. தள்ளி யோடி யலைதடு மாறலால்
தெள்ளு நீரின் முழுகுசெந் தாமரை
புள்ளி மானனை யார்முகம் போல்கிலா
துள்ள நாணி யொளிப்பன போன்றவே.

குறிப்பு :—மாதரது முகத்திற்குடைந்து முழுகா மலர்களை, அன்னங்கள் தம்மை நடையில் உடைத்த சீறடிகள் போல்வன எனத் துவைக்கின்றன.

30. இனைய வெய்த விரும்புன லாடிய
வனைக ருங்கழன் மைந்தரு மாதரும்
அனைய நீர்வறி தாகவந் தேறினார்
புனைந றுந்துகில் பூணொடுந் தாங்கினார்.

[இனைய எய்த-இத்தன்மையனவான நிகழ்ச்சிகள் நிகழ. இரும், கரும்-பெரிய. வறிதாக-வற்றிப்போக.]

31. மேவி னார்பிரிந் தார்க்கந்த வீங்குநீர்
தாவு தண்மதி தன்னொடுந் தாரகை
ஓவு வானமு முண்ணிறை தாமரைப்
பூவெ லாங்குடி போனதும் போன்றதே.

(இவ்வாறு) மேவி (மூழ்கிப் பிறகு) பிரிந்தார்க்கு அந்த வீங்கும் நீர், தாவும் தண்மதியொடும் தாரகை ஓவிய வானத்தையும், உள் நிறைந்த தாமரை பூ எலாம் குடி போனதையும் போன்றது. [தாரகை-நக்ஷத்திரம். ஓவிய-நீங்கிய]

சூரியன் நீர்விளையாட விரும்பினவன்போல் மேற்கடலில் குளித்தான்.

32. மானி னேக்கியர் மைந்தரோ டாடிய
ஆன நீர்விளை யாடலை நோக்கினான்
தானு மன்னது காதலித் தானென
மீன வேலையை வெய்யவ னெய்தினான்.

[ஆன-தக்க. நோக்கினான்-நோக்கி. வேலை-கடல்].

33. ஆற்ற லின்மையி னாலழிந் தேயுந்தம்
வேற்று மன்னர்தம் மேல்வரும் வேந்தர்போல்
ஏற்று மாதர் முகங்களொ டெங்கணுந்
தோற்ற சந்திரன் மீளவுந் தோற்றினான்.

ஆற்றல் இன்மையினால் அழிந்தேயும் தம் வேற்று மன்னர் தம்மேல் (மீண்டும் போர் செய்ய) வரும் வேந்தரை போல்—மாதர் முகங்களோடு எங்கணும் ஏற்று தோற்ற சந்திரன் மீளவும் தோற்றினான். [வேற்று மன்னர்-பகையரசர். ஏற்று-எதிர்த்து]

18 உண்டாட்டுப் படலம்.

மதுவுண்டு மாதர்விளையாடுவதைச் சொல்லும் படலம்.

1. வெண்ணிற நறைநிறை வெள்ள மென்னவும்
பண்ணிறஞ் செறிந்திடை பரந்த தென்னவும்
உண்ணிறை காமமிக் கொழுகிற் றென்னவுந்
தண்ணிறை நெடுநிலாத் தழைத்த தெங்குமே.

வெண்ணிறமான நறை நிறைந்த வெள்ளம் என்னவும், (செவிப்புலன் வழியதே ஆன) பண் (கண்ணிற்குப் புலப்படும் வண்ணம்) நிறம் செறிந்து (உலகின்) இடை பரந்தது என்னவும், (சந்திரோதயகாலத்தில் ஸ்திரீ புருஷர்களது மனதிற்கு) உள் காமம் நிறைமிக்கு ஒழுகிற்று என்னவும், தண்மை நிறைந்த நெடும் நிலா எங்கும் தழைத்தது. [நறை-கள். பண் இசை நிறைமிக்கு-வரையறைக் கடங்காமல்.]

2. கலந்தவர்க் கினியதோர் கள்ளு மாய்ப்பிரிந்
துலர்ந்தவர்க் குயிர்சுடு விடமு மாயுடன்
புலர்ந்தவர்க் குதவிசெய் புதிய தூதுமாய்
மலர்ந்தது நெடுநிலா மதனன் வேண்டவே.

குறிப்பு :—இன்பம் துன்பம் என்பன விஷயத்தின் இயற்கையாகா. அவை விஷயத்தின்பால்பட்டு விவகரிப்போர் வகையவாம். பிரபஞ்சம் மனத்தில் ஒடுங்கி இருக்க அவரவர் மனநிலைக் கேற்றவாறு அவ்வச்சமயங்களில் விஷயங்கள் நடிக்கின்றன என்னும் மானசதத்துவம் இச்செய்யுளில் வெள்ளிடை மலைபோல் கிடக்கின்றது. அகமே புறம். ஈதறியா மாந்தர் விஷய விகற்பங்கள் எதிர்ப்படும்போது குன்று முட்டிய குருவி யெனத் திகைக்கின்றனர்.

3. ஆறெலாங் கங்கையே யாய வாழிதாம்
கூறுபாற் கடலையே யொத்த குன்றெலாம்
ஈறிலான் கயிலையை யிணைந்த வெண்ணினி
வேறுநாம் புகல்வது நிலவின் வீக்கமே.

ஆறுகள் எல்லாம் (சந்திரனது கிரணங்களாடப் பெற்று விளங்குவதால் சிவபிரானது சடையில் பாயும்) கங்கையே ஆயின. ஆழிகள் எல்லாம் (தம்முள் சந்திர விம்பம் தோன்றப் பெறுதலால் சிறப்பித்து) கூறப்படும் பால்கடலையே ஒத்தன. குன்றுகள் எல்லாம் (நிலவொளிபட்டு வெண்ணிறம் பெற்று விளங்கியதால், பரமசிவனுகிய)

ஈறு இல்லான் (வைகும்) கயிலையை இயைந்தன. இனி, நிலவின் வீக்கத்தை (குறித்து) வேறு என்ன நாம் புகல்வது! [இயைந்தன-போன்றன. வீக்கத்தை-மிகுதியை.]

4. எள்ளருந் திசைகளோ டியாரும் யாவையும்
கொள்ளைவெண் ணிலவினுற் கோலங் கோடலால்
வள்ளுறை வயிரவாண் மகர கேதனன்
வெள்ளணி யொத்தது வேலை ஞாலமே.

திசைகளோடு யாரும் யாவையும் வெண் நிலவின் கொள்ளையால் எள்ள அருமையான கோலம் கோடலால்—வேலையால் சூழப்பட்ட ஞாலம், வள் உறையும் (தாழைமட லாகிய) வயிரம் போன்ற வாளை யுடைய மகர கேதனன் (ஆன மன்மதன் பிறந்த தினத்தைக் கொண் டாடி அணிந்த) வெள்ளை அணியை ஒத்தது [எள்ள-இகழ்தற்கு. கொள்ளை-மிகுதி. கோலம் கோடலால்-அலங்காரம் கொள்வதால். வள்ளுறை-கூர்மை தங்கிய. வயிரம்-வஜ்ராயுதம். மகரகேதனன்-மீனக் கொடியோன். அணி-சேனை.]

5. தயங்குதா ரகைபுரை தரள நீழலும்
இயங்குகார் மிடைந்தகா வெழினிச் சூழலுங்
கயங்கள்போன் றொளிர்பளிங் கடுத்த கானமும்
வயங்குபூம் பந்தரு மகளி ரெய்தினர்.

தயங்கும் தாரகையை புரை தரள (பந்தலின்) நீழலும், (ஆகாயத்தில்) இயங்கும் காரை மிடைந்த காவில்உள்ள எழினி சூழலும், கயம் கள் போன்று ஒளிரும் பளிங்கு அடுத்த கானமும், வயங்கும் பூம் பந்தரும் (சென்று) மகளிர் எய்தினர். [தயங்கும், வயங்கும்-விளங்குகின்ற. புரை-ஒத்த. இயங்கும்-சஞ்சரிக்கும். கார்-மேகம். மிடைந்த-எட்டிய. கா-சோலை. எழினிசூழல்-திரைகள் கட்டிய இடம்]

6. பூக்கம ழோதியர் போது போக்கிய
சேக்கையின் பச்செருச் செருக்குஞ் சிந்தையார்
ஆக்கிய வமிர்தென வம்பொன் வள்ளத்து
வாக்கிய பசுநறு மாந்தன் மேயினர்.

பூ கமழும் ஓதியர், போதுகளை போக்கிய சேக்கையுள் இன்பம் (தரும் கலவி) செரு (செய்து) செருக்கும் சிந்தையராய், (கடல் கடைந்து) ஆக்கிய அமிர்து என அம்பொன் வள்ளத்து வாக்கிய பசும் நறுவை மாந்தல் மேயினர் [ஓதியர்-கூந்தலுடைய மாதர். போது போக்கிய சேக்கை-மலர் தூவிய படுக்கை. செரு-போர். செருக்கும்-களிக்கும். வாக்கிய-வடித்த. நறு-கள். மாந்தல் மேயினர்-குடிக்க லாயினர்.]

7. மீனுடை விசும்பினர் விஞ்சை நாட்டவர்
ஊனுடை யுடம்பினு ருருவ மொப்பிலார்
மானுடை நோக்கினர் வாயின் மாந்தினர்
தேனுடை மலரிடைத் தேன்பெய் தென்னவே.

(விண்) மீன்கள் உடைய விசும்பினர் (ஆகிய தேவலோக மாதரும்) விஞ்சை நாட்டவர் (ஆகிய வித்தியாதர மாதரும்), (அங்குத் தங்கி இருந்த) ஊனை உடைய உடம்பினர் (ஆன அயோத்தி மாதர்களது) உருவத்திற்கு ஒப்பு இல்லார். (இத்தகைய சிறப்பு வாய்ந்த), மானின் உடைய நோக்கினர், (மென் மொழிகளாகிய) தேனை உடைய (குமுத) மலர் இடை (பின்னும்) தேனை பெய்தது என்ன, (மதுவைத் தம்) வாயினால் மாந்தினர். [நோக்கினர்-பார்வையுடையவர்.]

8. உக்கபால் புரைநிலா வுண்ட வள்ளமுங்
கைக்கொள்வா ளொளிபடச் செவந்து காட்டத்தன்
மைக்கணுஞ் செவந்ததோர் மடந்தை வாய்வழிப்
புக்கதே னமிர்தமாய்ப் பொலிந்த போன்றவே.

கொள்வாள் ஆன ஓர் மடந்தையின் கை ஒளிபட, உக்க பால் புரை நிலா உண்ட வள்ளம் செவந்து காட்ட, (அதனால்) தன் மை (உண்ட) கண்ணும் செவந்தது. (ஆகையால் அவள்) வாய் வழி புக்க தேன் (உண்டவரைச் செம்மை செய்) அமிர்தமாய் பொலிந்த போன்ற. [முதலடி:—சிந்தின பாலையொத்த சந்திரிகைபட்ட பாத்திரம். கொள் வாள்-எடுப்பவள்.]

9. தாமமு நானமுந் தைத்த தண்ணகிற்
றூமமுண் குழலிய ருண்ட தூநறை
ஓமவெங் குழியுகு நெய்யி னுள்ளுறை
காமவெங் கனலினைக் கனற்றிக் காட்டிற்றே.

தாமமும் நானமும் தைத்த தண்ணிய அகிலின் தூமம் உண்ட குழலியர் (ஆன மாதர்) உண்ட தூ நறைபானது, வெம் ஓம குழியில் உகும் நெய்போல் (அவர்களது) உள்ளத்தில் உறைந்த காமம் ஆகிய வெம் கனலை கனற்றி காட்டிற்று. [தாமம்-மாலை. நானம்-கஸ்தூரி. தைத்த-நெருங்கிய. கனற்றி-எரித்து.]

10. விடனொக்கு நெடிய நோக்கி னமிர்தொக்கு மின்சொ லார்தம்
மடனொக்கு மடனு முன்டே வானுத லொருத்தி காணத்
தடனொக்கு நிழலைப் பொன்செய் தண்ணறுந் தேறல் வள்ளத்
துடனொக்க உவந்து நீயே யுண்ணுதி தோழி யென்றாள்.

வாள் (பொருந்திய) நுதல் (உடைய) ஒருத்தி, (தன்) தடன் ஒக்கும் நிழலை பொன்னால் செய்த தண்ணியநறும் தேறல் வள்ளத்தில் காண

(அந்நிழலைத் தன துருவென்றறியாது மற்றொருத்திதேன் நயந்து வந்துளாள் என எண்ணி நகைக்குங்கால், பிரதி விம்பமும் நகைக்கத் தான்நக நகுகின்றாள் ஆதலால் அவள் தோழியாம் என்று அவள்) உடன் ஒக்க உவந்து, 'தோழி, நீயே உண்ணுதி' என்றாள். (எனவே)—விடம் ஒக்கும் நெடிய நோக்கையும் அமிர்தை ஒக்கும் இன் சொல்லையும் உடையார் தம் மடனை ஒக்கும் மடனும் (பிறி தொன்றிடத்தில்) உண்டோ! [வாள்-ஒளி. தடன் ஒக்கும்-பெருமை பொருந்திய. வள்ளம்-வட்டில், பாத்திரம். மடன்-அறியாமை.]

11. அச்சநுண் மருங்கு லாளோ ரணங்கனு ளளக பந்தி
நச்சுவேற் கருங்கட் செவ்வாய் நளிர்முக மதுவுட் டோன்றப்
பிச்சிநீ யென்செய் தாயிப் பெருநற விருக்க வாளா
எச்சிலை நுகர்தி யோவென் றெயிற்றரும் பிலங்க நக்காள்.

(இது முறிந்துவிடுமோ என்னும்) அச்சத்தை (கண்டோர்க்குத் தரும்) நுண்ணிய மருங்குலாள் (ஆகிய) ஓர் அணங்கு அன்னாள், (தன்) அளக பந்தியும், நஞ்சு தடவிய வேல்போன்ற கரும் கண்களையும் செவந்த வாயையும் உடைய நளிர் முகம் (வள்ளத்திலுள்ள) மதுவுள் தோன்ற (அப்பிரதிவிம்பத் தோற்றத்தைப் வேறொருமாதென் றெண்ணி அவளை இகழ்வாள்போல்) "பிச்சியாகிய நீ என்ன (மதி யீனத்திற்கிடமான காரியம்) செய்தாய்! இ பெரு நறவு (சாடியில்) இருக்க, (அதை அருந்தாது வள்ளத்திலுள்ள எனது) எச்சிலை வாளா நுகர்தியோ!" என்று (தனது) எயிறுகளாகிய (முல்லை) அரும்புகள் இலங்க நக்காள். [அளகபந்தி-முடிந்த கூந்தல். நளிர்-குளிர்ந்த. வாளா-வீணாக. எயிறு-பல். இலங்க-விளங்க. நக்காள்-சிரித்தாள்.]

12. புறமெலா நகைசெய் தேசப் பொருவரு மேனி வேறோர்
மறமுலாங் கொலைவேற் கண்ணாண் மணியின்வள் ளத்து வெள்
நிறநிலாக் கற்றை பாய நிறைந்தது போன்று தோன்ற [ளை
நறவென வதனை வாயில் வைத்தன ளுணுட் கொண்டாள்.

வேறு ஓர், பொருவு அரு மேனி உடையவளும், மறம் (என) உலாவும் கொலை செய்கின்ற வேல் போன்ற கண்ணாளும் (ஆகிய ஒருத்தி), மணி ஆல் செய்த வள்ளத்தில் வெள்ளைநிற நிலா கற்றை பாய, (அதனால் அவ் வள்ளம் மது) நிறைந்தது போன்று தோன்ற, நறவு என (மதித்து) அதனை—வாயில் வைத்து (தன் மதியீனத்தைக் கண்டு) புறம் (உள்ளோர்) எல்லாம் நகைசெய்து ஏச—நாணை உள்ளத்தில் கொண்டாள். [பொருவு அரு-ஒப்பில்லாத. மறம்-யமன்.]

13 யாழ்க்குமின் குழற்கு மின்ப மளித்தன விவையா மென்னக்
கேட்குமென் மழலைச் சொல்லோர் கிஞ்சுகங் கிடந்த வாயாள்
தாட்கருங் குவளை தோய்ந்த தண்ணறைச் சாடி யுட்டன்
வாட்கணி னிழலைக் கண்டாள் வண்டென வோச்சு கின்றாள்.

[கிஞ்சுகம் கிடந்த வாயாள்-முருக்கம் பூவைப்போன்ற இதழோடு கூடிய வாயை உடையவள், அல்லது, கிஞ்சுகப்புள்ளானது இவளது இன்சொல் இன்னிசைக்குக் காத்துக்கிடக்கும் வாயாள். கிஞ்சுகம்-கேகயப்புள். கருங்குவளையின் தாள் சாடியில் இருந்ததற்குக் காரணம் 19வது செய்யுளில் காண்க.]

14. களித்தகண் மதர்ப்ப வாங்கோர் கனங்குழை கள்ளி னுள்ளால்
வெளிப்படு கின்ற காட்சி வெண்மதி நிழலை நோக்கி
அளித்தனெ னபயம் வானத் தரவினை யஞ்சி நீவந்
தொளித்தனை யஞ்ச லென்றாங் கினியன வுரைத்து நின்றாள்.

ஆங்கு ஓர் கனமான குழையை அணிந்தவள், (சாடியில் இருக்கும்) கள்ளின் உள் வெளிப்படுகின்ற காட்சியாகிய வெண் மதியின் நிழலை நோக்கி, (தனது) களித்த கண் மதர்ப்ப, "(இப்பொழுது) நீ (இராகு வாகிய) வானத்து அரவினை அஞ்சிவந்து (இங்கு) ஒளித்தனை. (நான் நாயகனை விட்டுப் பிரிந்த காலத்து எனக்கு உயிர் சுடும் விடமாய் என்னுடன் பகைத்தனையாயினும், அதை அன்றே மறந்து இன்று உனக்கு) அபயம் அளித்தனன். அஞ்சல்" என்று (இன்னபல) இனியன உரைத்து நின்றாள். [நிழல்-பிரதிபிம்பம். களித்தகண் மதர்ப்ப-மயங்கிய கண் களித்தவளாய்.]

15. அழிகின்ற வறிவி னாலோ பேதைமை யாலோ வாற்றுச்
சுழிநின்ற தன்ன வுந்தித் தோகையங் கொருத்தி செந்தேன்
பொழிகின்ற பூவின் வேய்ந்த பந்தரைப் புரைத்துக் கீழ்வந்
திழிகின்ற கொழுநி லாவை நறவென வள்ளத் தேற்றாள்.

ஆற்றில் சுழி (அசையாது) நின்றது அன்ன உந்தியை உடைய தோகைபோன்ற ஒருத்தி, அங்கு, செந்தேனை பொழிகின்ற பூவினால் வேய்ந்த பந்தலை புரைத்து கீழ்வந்து இழிகின்ற கொழுநிலாவை—(மதுமாந்தி) அழிகின்ற (அவளது) அறிவினாலோ (அல்லது இயற்கை யாகிய) பேதைமையாலோ—நறவு என (எண்ணி) வள்ளத்தில் ஏற்றாள். [உந்தி-கொப்பூழ். புரைத்து-துளைத்து.]

16. மின்னென நுடங்கு கின்ற மருங்குலா ளொருத்தி வெள்ளை
இன்னமிர் தனைய தீஞ்சொ லிடைதடு மாறி யென்னே
வன்னமே கலையை நீக்கி மலர்த்தொடை யல்குல் சூழ்ந்தாள்
பொன்னரி மாலை கொண்டு புரிகுழல் புனைய லுற்றாள்.

[இன்னமிர்தனைய தீஞ்சுவை யுடையதும் வெள்ளையானதும் ஆன சொல் இடை தடுமாறி, என மாற்றிக்கொள்க. வெள்ளை-கபடின்மை வன்னம்-நிறமமைந்த. புரிகுழல்-சுருண்ட கூந்தல்.]

17. கண்மணி வள்ளத் துள்ளே களிக்குந்தன் முகத்தை நோக்கி
விண்மதி மதுவி னாசை வீழ்ந்ததென் றொருத்தி யுன்னி
உண்மகிழ் துணைவ னோடு மூடுநாள் வெம்மை நீங்கித்
தண்மதி யாகில் யானுந் தருவனிந் நறவை யென்றாள்.

[கண்மணி வள்ளம்-கள் நிறைந்த மணிவட்டில். மதுவினாசை-மதுவின் ஆசையால். ஊடும் நாள்-பிணங்கிய காலத்திலும்.]

18. எள்ளொத்த கோல மூக்கி னேந்திழை யொருத்தி முன்கை
தள்ளத்தண் ணறவை யெல்லாந் தவிசிடை யுகுத்துந் தேறாள்
உள்ளத்தின் மயக்கந் தானன் றுட்புறத் துண்டென் றெண்ணி
வள்ளத்தை மறித்து வாங்கி மணிநிற விதழில் வைத்தாள்.

எள்ளொத்த-எள்பூவைப்போன்ற. தவிசு-பீடம். மறித்து வாங்கி-மறுபடி எடுத்து.]

19. வான்றனைப் பிரித லாற்றா வண்டினம் வச்சை மாக்கள்
என்றவர் நிதியம் வேட்ட விரவல ரென்ன வார்ப்பத்
தேன்றரு கமலச் செவ்வாய் திறந்தன ணுகர நாணி
ஊன்றிய கழுநீர் நாளத் தாளினா லொருத்தி யுண்டாள்.

வச்சைமாக்களை என்று அவர் நிதியத்தை வேட்ட இரவலர் என்ன வண்டு இனம் வான்தனை பிரிதல் ஆற்றாது ஆர்ப்ப, (வாய் திறந்தால் வண்டு நுழையுமென அஞ்சி) ஒருத்தி, (வார்த்தையாகிய) தேனை தருகின்ற கமலம்போன்ற சிவந்த வாயை திறந்து (மதுவை) நுகர நாணி (வள்ளத்தில்) ஊன்றிய கழுநீரினது நாளம்பொருந்திய தாளினால் (மதுவை) உண்டாள். [வச்சைமாக்கள்-உலோபிகள். என்று-யாசித்து. வேட்ட-விரும்பிய. இரவலர்-யாசகர். வான்-ஆகாயம். ஆர்ப்ப-ஆரவாரம் செய்ய. கழுநீர்-செவ்வல்லி. நாளம்-உள்தொளை.]

20. புள்ளுறை கமல வாவிப் பொருகயல் வெருவி யோட
வள்ளுறை கழித்த வாள்போல் வரியுற வயங்கு கண்ணாள்
கள்ளுறை மலர்மென் கூந்தற் களியிள மஞ்ஞை யன்னாள்
உள்ளுறை யன்ப னுண்ணா னெனநற வுண்ண லெண்ணாள்.

புள் உறைகின்ற கமல வாவியிலுள்ள (கண்ணுக்கு நிகர் என்று) பொரும் கயல்கள் (தோல்வியுற்று) வெருவி ஓடவும், வள் உறையினின்று கழித்த வாள்போல் (செவ்) வரி உறவும் வயங்குகின்ற கண்ணாள் (ஆன ஒரு), கள் உறைகின்ற மலர்கள் அணிந்த மெல்லிய கூந்தலோடு கூடிய களிக்கின்ற இள மஞ்ஞை அன்னாள், (தனது) உள்ளத்தில் (நீங்காதவனாய்) உறையும் அன்பன் (மது) உண்ணான், (தானுண்டால் மதுப் பழக்கமில்லாத அவனையு மது சேரும்) என (அஞ்சி, அவள்) நறவு உண்ணலை எண்ணாள். [கமலவாவி-தாமரைத்தடாகம். வள் உறை-தோலுறை. வயங்கு-விளங்குகின்ற. மஞ்ஞை-மயில்.]

21\. கூற்றுறழ் நயனங்கள் சிவப்பக் கூனுதல்
ஏற்றிவா ளெயிறுக ளதுக்கி யின்றளிர்
மாற்றருங் கரதல மறிக்கு மாதொரு
சிற்றமா மபிநயந் தெரிக்கின் றாரினே.

ஒரு சீற்றம் ஆம் அபிநயத்தைத் தெரிவிக்கின்றவரைப்போல், மாது (ஒருத்தி) (தனது) கூற்று உறழ் நயனங்கள் சிவப்ப, கூன் நுதல் ஏற்றி வாள் எயிறுகளால் (இதழை) அதுக்கி, இன் தளிர் போன்ற மாற்று அரும் கரதலங்களால் (எதிர்வருவதாகப் பாவிக்கும் காதலனை) மறிக்கும். [கூற்றுறழ்-யமன் போன்ற. கூன் நுதல் ஏற்றி-வளைந்த புருவங்களை நெரித்து. வாள் எயிறு-ஒளி பொருந்திய பற்கள். மாற்று அரும்-ஒப்பு இல்லாத. மறிக்கும்-தடுப்பாள்]

22\. துடித்தவான் றுவரிதழ்த் தொண்டைத் தூநிலா
கடித்தவா லெயிறுக ளெறிப்பக் கண்களால்
வடித்தவெங் குருதிவேல் விழிக்கு மாதர்மெய்
பொடித்தவேர் புறத்துகு நறவம் போன்றதே.

துடிக்கின்ற வான் துவர் (உள்ள) இதழ்களோடுகூடிய (வாயாகிய) தொண்டையில், (அதை) கடித்து (உள்ள) வால் எயிறுகள் தூய நிலாவை எறிப்ப, (தமது) கண்களால் வெம் குருதிபடிந்த வடித்த வேலைப்போல் விழிக்கும் மாதர்களது மெய்யில் பொடித்த வேர் (அவர்கள்) புறத்து உகும் நறவம் போன்றது. [வான் துவர்-சிறந்த செந்நிறம். தொண்டை-கொவ்வைக் கனி. வால்-ஒளியுள்ள. எறிப்ப-வீச. குருதி-இரத்தம். வேர்-வியர்வை]

23\. கனித்திர ளிதழ்பொழி செம்மை கண்புக
நினைப்பதொன் றுரைப்பதொன் றாயொர் நேரிழை
தனிச்சுடர்த் தாமரை முகத்துச் சாபமும்
குனித்தது பனித்தது குழவித் திங்களே.

(கொவ்வை) கனிபோன்ற திரண்ட இதழ் (மது வுண்டதால் வெளுப்ப அப்பொழுது அவை) பொழிகின்றதான செம்மை (அவளது) கண்களில்புக, ஓர் நேர்மையான இழைகளை அணிந்த பெண், (மனத்தில்) நினைப்பது ஒன்றும் (மது வெறியால்) (வாயால்) உரைப்பது ஒன்றும் ஆய், (அவளது) தனி சுடர் பொருந்திய தாமரைபோன்ற முகத்தில் (உள்ளபுருவமாகிய) சாபம் குனித்தது; (நெற்றியாகிய) குழவி திங்கள் பனித்தது. [செம்மை-செந்நிறம். மதுபானம் செய்தால் வாய் வெளுப்பதும் கண் சிவப்பதும் நேரிடுவதால், வாயானது தன் செந்நிறத்தைப் பொழிந்துவிட அது கண்ணில் மாறிப் புகுந்ததுபோலும். சாபம்-வில். குனித்தது-வளைந்தது. குழவி திங்கள்-இளஞ் சந்திரன். பனித்தது-பனி அரும்பியதுபோல் வியர்த்தது.]

கணவற்கும் கள்ளிற்கும் சிலேடை.

24\. இலவிதழ் துவர்விட வெயிறு தேனுக
முலைமிசைக் கச்சொடு கலையு மூட்டற
அலைகுழல் சரிதர வசதி யாடலாற்
கலவிசெய் கொழுநருங் கள்ளு மொத்தவே.

[கலை-மேகலை, ஆடை. மூட்டற-கட்டு நீங்க. அசதியாடல்-சிரித்துக் களித்துப் பேசல்.]

25\. கனைகழற் காமனுற் கலக்க முற்றதை
அனகனுக் கறிவியென் றறியப் போக்குமோர்
இனமணிக் கலையினு டோழி நீயுமென்
மனமெனத் தாழ்தியோ வருதி யோவென்றாள்.

"கனைக்கின்ற கழல் அணிந்த காமனால் (நான்) கலக்கம் உற்றதை (என் நாயகனாகிய) அனகனுக்கு அறிவி" என்று (அவன்) அறிய (தோழியை) போக்கும் ஓர் இனம் மணிகள் (அமைந்த) கலையினாள், "தோழி, (அவர்பால் சென்றால்) நீயும் என் மனம் என (மீள வாராமல்) தாழ்தியோ, (அல்லது தூதுமாத்திரம் சென்றதை நினைந்து விரைவாக) வருதியோ!" என்றாள். [கனைக்கின்ற-ஒலிக்கின்ற. அனகன்-குற்றமில்லாதவன்.]

26\. மானமர் நோக்கியோர் மதுகை வேந்தன்பால்
ஆனதன் பாங்கிய ராயி னாரெலாம்
போனவர் போனவர்த் தொடரப் போக்கினாள்
தானுமங் கவர்கள்பின் றமிய ளேகினாள்.

[மான் அமர் நோக்கி-மானுடன் பகைக்கும் பார்வையுடையவள். மதுகை-திண்மையுடைய. ஆன-தூதான.]

27\. விரைசெய்பூஞ் சேக்கையின் றெப்ப மீமிசை
கரைசெயா வாசைபங் கடலு ளாளொரு
பிரசமென் குதலையாள் கொழுநன் பேரெலாம்
உரைசெயுங் கிள்ளையை யுவந்து புல்லினாள்.

[முதலடி-வாசனை வீசுகின்ற புஷ்ப சயனமாகிய தெப்பத்தின்மேல். பிரசம்-தேன். கிள்ளை-கிளி.]

28\. மன்றலு ளொருசிறை யிருந்தொர் வாணுதல்
தன்றுணைக் கிள்ளையைத் தழீஇயென் னாவியை
இன்றுபோய்க் கொணர்கிலை யென்செய் தாயெனக்
கன்றிலோ டொத்தியென் றழுது சீறினாள்.

ஓர் வாள்போன்ற நுதலுடையவள், மன்றல் நாறும் ஒரு சிறை இருந்து, தன் துணையாகிய கிள்ளையை தழுவி, "என் (நாயகனாகிய) ஆவியை இன்று போய் (அழைத்து) கொணர்கிலை. (மற்று) என் செய்தாய்(நீ)! (பிரிந்த காலத்தில் துன்பம் விளைக்கும் பறவையாகிய) அன்றிலோடு (நீ) எனக்கு ஒத்தி" என்று அழுது சீறினாள். [மன்றல்-வாசனை. சிறை-இடம். என் செய்தாய்-என்ன பயன்பட்டாய். ஒத்தி-ஒத்திருக்கிறாய்.]

29. வளைபயில் முன்கையோர் மயிலனாள் தனக்
கிளையவள் பெயரினைக் கொழுந னீதலும்
முளையெயி றிலங்கிட முறுவல் வந்தது
களகள வுதிர்ந்தது கயற்க ணாலியே.

வளைகள் பயில்கின்ற முன் கைகளை உடைய ஓர் மயில் அன்னாள், இளையவள் பெயரை தனக்கு கொழுநன் ஈதலும் (நினைவு அவன் சோர்ந்ததை எண்ணி) முளைபோன்ற (தன்) எயிறு இலங்கிட (அவனுக்கு)முறுவல் (முதலில்)வந்தது. (பிறகு, தன்னிலும் தனது இளையவள் பெயரே அவன் நாநுனியில் இருந்ததால் தன்பால் அவனுக்குக் காதல் குறைவு எனஃ மதித்து அவளுக்கு) கயல்போன்ற கண்களில் ஆலி களகள (என) உதிர்ந்தது. [பயில்-நெருங்கிய. ஈதலும்-இட்டு அழைக்க. ஆலி-நீர்த்துளி]

30. செற்றமுன் புரிந்ததோர் செம்மல் வெம்மையால்
பற்றலு மல்குலிற் பரந்த மேகலை
அற்றுகு முத்தின்முன் னவனி சேர்ந்தன
பொற்றொடி யொருத்திகண் பொறாத முத்தமே.

முன் (காதலிமாட்டு) செற்றம் புரிந்தவனான ஓர் செம்மல், வெம்மையால் (ஊடல்தீர அவளது) அல்குலில் பரந்த மேகலையை பற்ற (அவள் இன்னும் பிணங்கி அகல அப்பொழுது) அற்று உகும் (மேகலையின்) முத்தின் முன் (அக்காதலியாகிய) பொன்தொடி அணிந்த ஒருத்தியின் (இதுவரையில் ஊடியிருந்ததற்காக) பொறாத கண்முத்தம் அவனியில் சேர்ந்தன. [செற்றம்-கோபம் உண்டாவதற்குக் காரணமான குற்றம். வெம்மையால்-வேட்கையால். பொறாத-சகிக்காத. அவனி-பூமி. கண் முத்தம்-கண்ணீர்த் துளிகள்]

31. தோடவிழ் கூந்தலா ளொருத்தி தோன்றலோ
டூடுகே னுவையி னுருகு நோய்கெடக்
கூடுகே னவவன் குணங்கள் வீணையிற்
பாடுகே னெனப் பலவும் பன்னினாள்.

[தோடவிழ்-மலர்கள் மலர்ந்த. தோன்றல்-நாயகன்]

ஊடலை உரைக்காது ஒருத்தி பாடலைப்பாடிப் போது போக்கினாள்.

32. மாடகம் பற்றினள் மகர வீணைதன்
தோடவிழ் மலர்க்கரஞ் சேவப்பத் தொட்டனள்
பாடின ளொருத்திதன் பாங்கு ளார்களோ
டூடின துரைசெயா ளுள்ளத் துள்ளதே.

[மாடகம்-முறுக்காணி. தொட்டனள்-தொட்டு.]

33. குழைத்தபூங் கொம்பனா ளொருத்தி கூடலை
இழைத்தன ளதுவவ ளிட்ட போதெலாம்
பிழைத்தலு மனங்கவேள் பிழைப்பி லம்பினால்
உழைத்தன ளுயிர்த்தன ளுயிருண் டில்லென.

குழைத்த பூ கொம்பு அன்னாள் ஒருத்தி, கூடலை இழைத்தனள். (ஆனால்) அதை அவள் இட்டபோது எல்லாம் (இருதலையும் கூடாமல்) பிழைத்தது (எனவே) அனங்கவேளின் பிழைப்பு இல்லாத அம்பினால் உழைத்தனள்; உயிர் உண்டு இல்லை என்ன உயிர்த்தனள். [குழைத்த-தளிர்த்த. பிழைத்தது-தவறியது. உழைத்தனள்-வருந்தினாள். உயிர்த்தனள்-பெருமூச் செறிந்தாள்]

குறிப்பு:—கூடலை இழைத்தலாவது;—கூடல் சுழியை இட்டுக் குறிபார்த்தல். ஊடலாலோ மற்றெக் காரணத்தாலோ நாயகனைப்பிரிந்துள தலைவி "நாயகனை இன்றுகூடப் பெறுவனோ அன்றோ" என மனத்துள் கவற்சியோடு, முத்து மணல் பரப்பிக் கண்களை மூடிக்கொண்டு விரலாலே ஆழி வடிவமாகச் சுழித்தல். சுழித்தபின் கண்திறந்து பார்க்க வரியின் இருதலையும் கூடிப்பொருந்தி யிருக்குமாயின் அவளும் நாயகனுடன் கூடப்பெறுவாள் என்று கொள்ளப்படும்.

34. பந்தணி விரலினா ளொருத்தி பையுளாள்
சுந்தர னொருவன்பாற் றூது போக்கினாள்
வந்தன னெனக்கடை யடைத்து மாற்றினாள்
சிந்தனை தெரிந்தில சிவந்த நாட்டமே.

பந்தினுடைய (திரண்ட) அணியை உடைய விரலினாள் (ஆன) ஒருத்தி (நாயகனைப் பிரிந்த) பையுள் உடையாளாய் (அந்த) சுந்தரன் ஒருவன்பால் தூது போக்கினள் (தூது சென்ற தோழி அவன்) 'வந்தனன்' என, (உள் ஏற்காமல்) கடையை அடைத்து மாற்றினாள் நாட்டம் சிவந்தன (என்பதைக் கண்டோமேயன்றி, மெய்யுடாரத் திரு

தவள் வந்தவனை மறுத்த) சிந்தனை (யாதோ) தெரிந்து இலம். [அணி-அழகு. பையுள்-துன்பம். கடை-வாயில். நாட்டம்-கண்]

குறிப்பு:—தூது அனிப்பிய பின்னே வந்தான். தானாகத் தன் வேட்கையால் வந்திலனே என்றவளுக்குக் கோபம் மூண்டதுபோலும்.

35. உய்த்தபூம் பள்ளியி னூட னீங்குவான்
சித்தமுண் டொருத்திக் கதன்பன் றேர்கிலான்
பொய்த்ததோர் மூரியா னிமிர்ந்து போக்குவாள்
எத்தனை யிறந்தன கடிகை யீண்டென்றாள்.

ஒருத்திக்கு (சேடியர்) உய்த்த பூம்பள்ளியில் ஊடல் நீங்க சித்தம் உண்டு, அதை அன்பன் தேர்கிலான் (ஆகிச்சும்மா இருந்தான்), (ஆதலால் அவள்) பொய்த்ததான ஓர் மூரியை போக்குவாளாய் நிமிர்ந்து "ஈண்டு கடிகை எத்தனை இறந்தன?", என்றாள். [உய்த்த-அமைத்த. மூரிபோக்குவாளாய்-சோம்பல் விடுவாளாய். கடிகை இறந்தன-நாழி கழிந்தன.]

குறிப்பு:—எனவே தான் இன்னும் துயிலமரவில்லை என்பதும் தெரிவித்துப் பேச்சுத் தொடர்வதற்கு ஓர் ஆதாரம் கற்பிக்கின்றனள் போலும்.

36. விதைத்தமென் காதலின் வித்து மெய்ந்நிறை
இதைப்புன நனைத்திட முளைத்த வேயெனப்
பதைத்தன ளொருத்தன்மே லொருத்தி பஞ்சடி
உதைத்தலும் பொடித்தன வுரோம ராசியே.

(வேட்கையால்) பதைத்தனளாகி ஒருத்தி (தன் நாயகனாகிய) ஒருத்தன்மேல் பஞ்சு (போன்ற) அடியால் உதைத்தலும்—(அவன்) மெய்யில் நிறைந்த உரோம ராசி, விதைத்த மென்காதலின் வித்து (இன்பமாகிய நீர்) நனைத்திட இதைப் புனம் முளைத்தனவே என, பொடித்தன. [இதைப் புனம்-புதுக்கொல்லை. உரோம ராசி பொடித்தன-மயிர் சிலிர்த்தன.]

37. பொலிந்தவாண் முகத்தினன் பொங்கித் தன்னையும்
மலிந்தபே ருவகையான் மாற்று வேந்தரை
நலிந்தவா ளுழவனோர் நங்கை கொங்கைபோய்
மெலிந்தவா நோக்கித்தன் புயங்கள் வீங்கினான்.

மாற்று வேந்தரை நலிந்த வாள் உழவன் (ஒருத்தன்), (தான் இறுக அணைத்ததால்) ஓர் நங்கையின் கொங்கைகள் (நிமிர்தல்) போய் மெலிந்தவாறு நோக்கி, பொலிந்த வாள்பொருந்திய முகத்தினனாய்,

தன்னையும் மலிந்த பேர் உவகையோடு (தன்) புயங்கள் வீங்கினன். [மாற்றுவேந்தர்-பகையரசர். நலிந்த-வென்ற. மலிந்த-விஞ்சிய. வீங்கினன்-பூரித்தான்.]

குறிப்பு:—வாட்போரில் பெற்ற வெற்றியெல்லாம் கலவிப்போரில் தன்னை எதிர்த்த கொங்கைகளைத் தகர்த்ததற்கு நிகராகாவென்ன எண்ணிக் களிப்பினால் தோள் பூரித்தான் என்பது இச்செய்யுளில் அடங்கிய கருத்தாகும்.

38. ஏய்ந்தபே ரெழிலினா னொருவ னெய்தினன்
வேய்ந்தபோ லெங்கணு மனங்கன் வெங்கணை
பாய்ந்தபூம் பள்ளியிற் படுத்த பல்லவந்
தீய்ந்தன நோக்கினன் றிகைக்குஞ் சிந்தையான்.

ஏய்ந்த பேர் எழிலினான் ஒருவன் எய்தி, எங்கணும் வேய்ந்தன போல் அனங்கனது வெம் கணைகள் பாய்ந்த பூம்பள்ளியில், (படுத்தான்), (அவ்வாறு அவன்) படுத்த பல்லவம் தீய்ந்தன (என்பதை) நோக்கினன். (காமாக்கினியால் தீய்ந்தன என்னும் காரணம் உணராமல்) திகைக்கும் சிந்தையான் (ஆயினன்). [ஏய்ந்த-பொருந்திய. எழிலினான்-அழகுடையவன். பூம்-அழகிய. பல்லவம்-தளிர்.]

39. ஊட்டிய சாந்துவெந் துலரும் வெம்மையான்
நாட்டினை யளித்திநீ யென்று நல்லவர்
ஆட்டுநீர்க் கலசமே யென்ன லானவோர்
வாட்டொழின் மைந்தற்கோர் மங்கை கொங்கையே.

(மார்பில்) ஊட்டிய சாந்து வெந்து உலரும் (காம) வெம்மையான் (ஆன) ஓர் வாள்தொழில் (வல்ல) மைந்தனுக்கு, (அவனை அணைந்த) ஓர் மங்கையின் (விம்மிப்பூரித்த) கொங்கைகள், "நீ நாட்டினை அளித்தி" என்று நல்லவர் (முடி சூட்டுமுன்) ஆட்டும் (பட்டாபிஷேக) நீர் கலசமே என்னல் ஆயின.

40. பயிருறு கிங்கிணி பரந்த மேகலை
வயிரவான் பூணெலாம் வாங்கி நீக்கினாள்
உயிருறு தலைவன்பாற் போக வுன்னினாள்
செயிருறு திங்களைத் தீய நோக்கினாள்.

(வேறிடம் சென்றிருந்த தன்) உயிர் உற்ற தலைவன்பால் போக உன்னினாள் (ஆன ஒருத்தி, (பிறர்க்குப் புலப்படாமல் செல்லக்கருதி), (அயலுள்ளோரை ஒலியால்) பயிர் தலை உற்ற கிங்கிணியையும் பரந்த மேகலையையும் (ஒளியால் குறிப்பித்துக் காட்டும் மற்ற) வயிரம் (அமைந்த) வான் பூண்களை எல்லாம் வாங்கி நீக்கினாள். (எனினும் மறைந்து

செல்வதற்கு இடையூறாய் நிலவு வீசும்) செயிர் உற்ற திங்களை (தன் கோபக்கனலால்) தீய நோக்கினாள். [பயிர் உறு-அழைத்தலை உற்ற, அழைக்கும். வாங்கி-கழற்றி. செயிர்-களங்கம்.]

41. ஏனுமிவ் வன்மையை யென்னென் றுன்னுதும்
ஆலைமென் கரும்பனா னொருவற் காங்கொரு
சோலைமென் குயிலனாள் சுற்றி வீக்கிய
மாலையை நிமிர்ந்தில வயிரத் தோள்களே.

ஆங்கு, ஒரு சோலையில் வாழும் மெல்லிய குயில் அன்னாள், ஆலையில் (அகப்பட்டு வருந்தும்) மெல்லிய கரும்பு அன்னான் ஒருவனுக்கு சுற்றி வீக்கிய (பூ) மாலையை (அவனது) வயிரத் தோள்கள் நிமிர்ந்து இல. (எனின், அவன்) ஏனும் இந்த (பூமாலைபோல் பிணித்த காமத்தின்) வன்மையை என்னென்று (நாம்) உன்னுதும்! [வீக்கிய-கட்டிய. நிமிர்ந்து இல-தாங்கி நிமிரவில்லை. ஏனும்-ஏற்கும். உன்னுதும்-மதிப்போம்.]

42. சோர்குழ லொருத்திதன் வருத்தஞ் சொல்லுவான்
மாரனை நோக்கியோர் மாதை நோக்கினாள்
காரிகை யிவளவள் கருத்தை நோக்கியோர்
வேரியந் தொடையலான் வீடு நோக்கினாள்.

சோர்கின்ற குழலை உடையாள் ஒருத்தி தன் (காம நோய்) வருத்தத்தை (நாயகனிடம் போய்ச்) சொல்ல (கண்முன் நின்று அம்பு எய்பவன் போல் மது மயக்கம் கொண்டவளுக்குத் தோற்றுகின்ற) மாரனை நோக்கி, (அவன் ஏகாதது கண்டு, பின்தன் தோழியான) ஓர் மாதை (நீ யாவது செல்லாயோ என்பாள் போல்) நோக்கினாள். காரிகை இவள் (தலைவியாகிய) அவளது கருத்தை நோக்கி (குறிப்பாக) ஓர் வேரி அமைந்த அம் தொடையலான் (ஆகிய நாயகனது) வீட்டை நோக்கினாள். [வேரி-வாசனை]

43. சினங்கெழு வாட்கையோர் செம்மல் பாலொரு
கனங்குழை மயிலனாள் கடிது போயினாள்
மனங்குழை நறவமோ மாலை தான்கொலோ
அனங்கனோ யார்கொலோ வழைத்த தூதரே.

சினம்கெழு வாள் (தாங்கும்) கையை உடைய ஓர் செம்மல் பால், ஒரு கனவிய குழையை அணிந்த மயில் அன்னாள் கடிது போயினாள். (இவ்வாறு அவளை நாயகனிடம்) அழைத்த தூதர் யார்! மனதை குழையச் செய்கிற (அவளுண்டிருந்த) நறவமோ, மாலை தானோ, அனங்கனோ! (அறிகிலேம்). [கனம்-வட்டமான. குழை-காதணி. மாலை-மாலைப்போது. கெழு-மிகுந்த]

44. தொகுதரு காதற்குத் தோற்ற சீற்றத்தோர்
வகிர்மதி நெற்றியாண் மழைக்க ணாலிவந்
துகுதலு முற்றதெ னென்று கொற்றவன்
நகுதலு நக்கன ணாணு நீங்கினாள்.

தொகுதரும் காதலுக்கு தோற்ற சீற்றத்தையுடைய ஓர் வகிர்ந்த மதி (போன்ற) நெற்றியையுடையாள், (கலவிப் போரில் தான் அடைந்த தோல்வியை நினைத்து) மழை பொருந்திய கண்களின் ஆலி வந்து உக, (அதைக்கண்டு வியந்தவனாய்) கொற்றவன் “(உனக்கு) உற்றது என்?” என்று நகுதலும் (அவளும் உடன் சேர்ந்து) நக்கனள். நாணும் நீங்கினாள். [தொகுதரும்-மிகுதியான. வகிர்-பிளந்த, வகிர்மதி-அர்த்த சந்திரன். கொற்றவன்-வெற்றிபெற்ற நாயகன். கண்ணாலி-கண்ணீர்.]

45. பொய்த்தலை மருங்குலா ளொருத்தி புல்லிய
கைத்தல நீக்கினள் கருத்தி னீக்கிலள்
சித்திரம் போன்றவச் செயலோர் தோன்றற்குச்
சத்திர மார்பிடைத் தைத்த தொத்ததே.

பொய்த்து அலைகின்ற மருங்குலாள் ஒருத்தி (நாயகன் மீதிருக்கும் அன்பை) கருத்தில் நீக்கிலளாய் (தன்னை) புல்லிய (அவன்) கைத்தலங்களை (காரணம் ஒன்றுமின்றி) நீக்கினள். (மாதர் ஊடல் உணர்த்தச் செய்யும்) சித்திரம் போன்ற (மனம் சேராத) அந்தச் செயல் ஓர் தோன்றலுக்கு (இவள் இப்போது தன்பால் கண்ட குற்றம் யாவதோ என்னும் வருத்தத்தை உண்டாக்கி) மார்பு இடை சத்திரம் தைத்ததை ஒத்தது. [பொய்த் தலைமருங்குலாள்-பொய்யாகி அலைகின்ற இடையை உடையவள். தோன்றல்-அரசிளங்குமரன். சத்திரம்-வேல்].

46. மெல்லிய லொருத்தி தான் விரும்புஞ் சேடியைப்
புல்லிய கையினள் போதி தூதெனச்
சொல்லுவா ளுறுமுறு நாணிற் சொல்லலள்
எல்லையில் பொழுதெலா மிருந்து விம்மினாள்.

மெல்லியல் ஒருத்தி தான் விரும்பும் சேடியை புல்லிய கையினளாய் “(நாயகன் பால்) தூதுபோ” என சொல்ல உறும். (ஆனால்) உற்ற நாணினால் (அதை) சொல்லலள். (இவ்வாறு அவள்) எல்லையில்லாத பொழுது எல்லாம் இருந்து விம்மினாள். [உறும்-இசைவாள்].

47. ஊறுபே ரன்பினா ளொருத்தி தன்னுயிர்
மாறிலாக் காதலன் செயலை மற்றொரு
நாறுபூங் கோதைபா னவில நாணுவாள்
வேறுவே றுளசில மொழிவி ளம்பினாள்.

ஊறுகின்ற பேர் அன்பினுள் ஒருத்தி, தனக்கு உயிர் (நாயகியன்றி) மாறு இல்லாத காதலன் (கலவியில் செய்த) செயல்களை மற்றொரு (மணம்) நாறும் பூ கோதையை உடையவள்பால் நவில (புகுமளவில்) நாணுவாளாகி, சில வேறு வேறு உள மொழிகளை விளம்பினுள். [மாறு-வேறு. கோதை-கூந்தல். பூ-அழகிய.]

48. கருத்தொரு தன்மைய துயிரு மொன்றுதம்
அருத்தியு மத்துணை யாய நீரினர்
ஒருத்தியு மொருவனு முடலு மொன்றெனப்
பொருத்துவ ராமெனப் புல்லி னாரரோ.

(இருவர்) கருத்து ஒரு தன்மையது, உயிரும் ஒன்று, தம் அருத்தியும் அத்துணை, ஆகிய நீரினர் ஆன ஒருத்தியும் ஒருவனும் (கருத்தும் உயிரும் ஆசையும் மாத்திரமே யன்றி அவர்களது) உடலும் (கூட) ஒன்று என (சேர்த்து) பொருத்துவர் ஆகும் என (இருவரும்) புல்லினர். [அருத்தி-விருப்பம். அத்துணை-அவ்விதம். நீரினர்-தன்மையுடையவர்.

49. வெதிர்பொரு தோளினு ளொருத்தி வேந்தன்வந்
தெதிர்தலுந் தன்மன மெழுந்து முன்செல
மதிமுகங் கதுமென வணங்கி னாளது
புதுமையா தலினவற் கச்சம் பூத்ததே.

வெதிரை பொருவும் தோளினுள் ஒருத்தி (தனது நாயகனாகிய) வேந்தன் வந்து எதிர்தலும் (அவன் வந்த சந்தோஷத்தால்) தன் மனம் எழுந்து (அவனை வரவேற்க) முன் செல, (அவன் தன்னைப் பாராட்டுவதற்குமுன் தனது அகத்துள்ள உவகையை முகமலர்ச்சியால் தெரிவித்துவிட்டேனே என நாணி) மதிமுகம் கதுமென அணங்கினள். (தான் வர இவ்வாறவள் முகம் வாடுதலாகிய) அது புதுமையாதலின் அவனுக்கு அச்சம் பூத்தது. [வெதிர் பொரும்-மூங்கிலை நிகர்க்கும். அணங்கி-வருந்தி.]

50. துனிவரு நலத்தொடு சோர்கின் றாளொரு
குனிவரு நுதலிக்குக் கொழுந னின்றியே
தனிவரு தோழியுந் தாயை யொத்தனள்
இனிவரு தென்றலு மிரவு மென்னவே.

துனியால் வருகின்ற நலத்தோடு சோர்கின்றாள் ஆன ஒரு குனி வரும் நுதலை உடையவளுக்கு (நாயகன்பால் தூது சென்று) கொழுநன் இன்றி தனியாக (திரும்பி) வரும் தோழியும் (காதலனை விலக்கித் தன்னை உட்புறம்) உந்தும் ஆயை ஒத்தனள். இனி (பிரிந்தவரை வருத்தி) வரும் தென்றலும் இரவும் (அவளுக்கு) என்ன (ஆகுமோ)! [துனி-நீடித்தபுலவி. குனிவரும்-வளைந்த. ஆய்-தாய்.]

51. ஆக்கிய காதலா ளொருத்தி யந்தியில்
தாக்கிய தெய்வமுண் டென்னுந் தன்மையாள்
நோக்கின ணின்றன ளுவன்று கேள்வனிற்
போக்கின தூதினோ டுணர்வும் போக்கினள்.

(மிகுதியாக) ஆக்கிய காதலாள் ஒருத்தி (அனுப்பிய தூது தாழ்வதற்குத் தரியாது) கேள்வன்பால் நுவன்று போக்கின தூதினோடு (தன்) உணர்வையும் போக்கினளோ! (ஏனெனில்) (வெறித்த) நோக்கினளாய் நின்றனள். (பேய் இல்லை என்போர்க்கு) "அந்தியில் தாக்கிய தெய்வம் உண்டு" என்னும் தன்மையள் (ஆயினள்). [தாக்கிய தெய்வம்-தாக்கணங்கு. நுவன்று-சொல்லி]

52. மறப்பிலள் கொழுநனை வரவு நோக்குவாள்
பிறப்பினோ டிறப்பெனப் பெயருஞ் சிந்தையால்
துறப்பரு முகிலிடைத் தோன்று மின்னெனப்
புறப்படும் புகுமொரு பூத்த கொம்பனாள்.

ஒரு பூத்த கொம்பு அன்னாள், (தன்) கொழுநனை (இறையளவும்) மறப்பிலளாகி (அவனது) வரவை (எதிர்) நோக்குபவளாய், பிறப்பு இறப்பு என பெயரும் சிந்தையோடு, துறப்பு அரிய முகிலின் இடை தோன்றும் மின் என (வெளியே) புறப்படுவாள், (பிறகு உள்ளே) புகுவாள் (ஆயினள்). [பெயரும்-மாறிமாறி வரும். துறப்பு அரு-விலக்குவதற்கரிய.]

53. எழுதருங் கொங்கைமே லனங்க னெய்தவம்
புழுதவெம் புண்களில் வளைக்கை பொற்றினாள்
அழுதனள் சிரித்தன ளற்றஞ் சொல்லினள்
தொழுதன ளொருத்தியைத் தூது வேண்டியே.

[எழுதரும்-விம்மிப்பூரித்த, அற்றம்-அவள் அடைந்த சோர்வு]

54. ஆர்த்தியு முற்றது மறிஞர்க் கற்றந்தான்
வார்த்தையி னுணர்த்துதல் வறிதன் றோவென
வேர்த்தனள் வெதும்பினள் மெலிந்து சோர்ந்தனள்
பார்த்தன ளொருத்திதன் பாங்க னாளையே.

'ஆர்த்தியையும் (அதை) உற்றதும் (அதை நீக்கும்) அற்றத்தைத் தானும் அறிஞர்க்கு வார்த்தையினால் உணர்த்துதல் வறிது அன்றோ!' என (சிந்தித்து) ஒருத்தி, வேர்த்து வெதும்பி மெலிந்து சோர்ந்து (தன்) பாங்கனாளை (குறிப்புணர்ந்து என் கொழுநனைக் கொணராதிருப்பதென்னே என) பார்த்தனள். [ஆர்த்தி-துன்பம். உற்றதும்-அடைந்த காரணத்தையும். அற்றம்-தகுந்த சமயம். பாங்கனாள்-தோழி]

55. தனங்களி னிளையவர் தம்மின் மும்மடி
கனங்கன மிடையிடை களிக்குங் கள்வனாய்
மனங்களி னுழைந்தவர் மாந்து தேறலை
அனங்கனு மருந்தின னாதல் வேண்டுமால்.

தனங்களையுடைய இளையவர் தம்மினும் (அனங்கன்) மும்மடி கனம் கனம் இடை இடை களிக்கின்றான். (ஆதலால்) அனங்கனும் அவர் மனங்களில் கள்வனாய் நுழைந்து (அவர்) மாந்தும் தேறலை அருந்தினவன் ஆதல் வேண்டும். [இளையவர்-மாதர். மும்மடி-மூன்று மடங்கு. கனம் கனம்-அதிக அதிக. இடை இடை-எங்கும். தேறல்-மது]

56. நறைகம ழலங்கன் மாலை நளிர்நறுங் குஞ்சி மைந்தர்
துறையறி கலவிச் செவ்வித் தோகையர் தூசு வீசி
நிறையக லல்குல் புல்குங் கலன்கழித் தகல நீத்தார்
அறைபறை யனைய நீரா ரருமறைக் காவ ரோதான்.

நறைகமழ்கின்ற அலங்கல் மாலை (யணிந்து)நளிர்ந்த நறும் குஞ்சியை உடைய மைந்தர், கலவிச் செவ்வியின் துறையை அறிந்த தோகையர்களது தூசை (அவிழ்த்து) வீசி (எறிந்து பின்னும் அவர்களது) நிறைந்த அகன்ற அல்குலை புல்கும் (மேகலை ஆகிய ஒலிக்கின்ற) கலனை கழித்து அகல நீத்தார். (அது தக்கதே, எனெனில்) அறைகின்ற பறை அனைய நீரார் அரிய மறைக்கு (வைப்பிடம்) ஆவரோ! (ஆகாராதலால்) [நளிர்-குளிர்ந்த. செவ்வி-தன்மை. மறை-இரகசியம். தூசு-ஆடை. நீரார்-தன்மையுடையவர்]

57. பொன்னருங் கலனுந் தூசும் புறத்துள துறத்தல் வம்போ
நன்னுத லொருத்தி தன்பா லகத்துள நாணும் நீத்தாள்
உன்னருந் துறவு பூண்ட வுணர்வுடை யொருவ னேபோல்
தன்னையுந் துறக்குந் தன்மை காமத்தே தங்கிற் றன்றே.

நல்ல நுதலையுடைய ஒருத்தி, தன்பால் அகத்தில் உள்ள நாணையே நீத்தாள். (அவ்வாறிருக்க) புறத்தே உள்ள அரும் பொன்கலனையும் தூசையும் துறத்தல் வம்போ! உன்னுதற்கு அரிய துறவுபூண்ட உணர்வையுடைய ஒருவனைப்போல் தன்னையே துறக்கும் தன்மை காமத்தில் தங்கிற்று. [வம்போ-புதுமையோ. உணர்வு-ஞானம்]

குறிப்பு :—பிரபஞ்சமும் தானும் எல்லாம் ஒரே பிரம்ம மயம் என்னுமோர் உணர்வால் விருப்பு வெறுப்பு எனும் இருவகைப் பிரிவு இலதாதல் நான்மறையின் முடிபு. இம் முடிபு இருதிறத்தால் எய்தல் கூடும். தன்னையும் சேர்த்து எல்லாவற்றையும் வெறுத்துத் துறப்பினும் தானுள்பட எல்லாவற்றையும் விரும்பி ஏற்பினும் இரண்டெனும் பேதம்

மறைந்தொழிகின்றது. சிலர் அவ்வபேத உணர்ச்சி பெறுமாறு துறவிகளாவார். சிலர் அவ்வுணர்ச்சி பெற்றதால் துறக்கின்றனர். முன்னையவர் முயற்சி எத்துணிபு தரவல்லதோ அஃதை இல்லறம் நின்று இன்பம் துய்ப்போர் பெறுவதுமாகும் என்னும் நுண்ணியதோர் உண்மையை நம் கவி இச்செயுளின் ஈற்றிரண்டடிகளால் விளக்கி வைக்கின்றனர். இல்லறத்தில் சதிபதிகளின்கண் உண்டாகும் கழிபேரன்பு, தீதிலதாயின், செவ்வியளவில் உலகமடங்கலும் வியாபித்தற்குக் காரணமாதற்கு ஒத்த வித்தின் பான்மையது. அஃது பாலுட் பிரைபோல் பரவி சிருஷ்டியூடே அன்பு மயமாகி விடுவதால் பிறகு தான் எனும் பிரிநிலை பயனின்றி விடுகின்றதன்றோ. ஆகையால் தன்னையும் துறக்கும் தன்மை காமத்தே தங்கிற்று. காமத்தினது அந்தமும் இதுவே என்பதற்குச் சான்றாக மதனன் அமரருய்யுமாறு தன்னையே துறந்த பரிசு மறக்கற்பாலதன்று. இச்செய்யுளுடன் முன் தாடகைவதைப்படலம் 2-வது பாசுரத்தின் பொருளை ஒப்பு நோக்குங்கால் கம்பரது கருத்து நன்கனம் புலப்படுகின்றது. அங்கு "ஆரணத்துறையுளாய்" என்னும் தொடரை விளியாகக்கொள்ளாது "ஆரணத்து உறையுள் ஆய்" எனப் பிரித்து, "காமன் அங்கமற்று உகுதலே வேதத்தினது இரகசியம் இதுவென்று காட்டியதாகி," எனப் பொருள் படுத்துவதே சிறப்புடைத்தாகும்.

58. பொருவரு மதனன் போல்வா னொருவனும் பூவின் மேலத்
திருவினுக் குவமை சால்வா ளொருத்தியுஞ் சேக்கைப் போரில்
ஒருவருக் கொருவர் தோலா ரொத்த னருயிரு மொன்றே
இருவர்த முணர்வு மொன்றே யென்றபோ தியாவர் வெல்வார்.

[பொருவு அரு-ஒப்பில்லாத. தோலார்-தோல்வியடையாராய்]

59. கொள்ளைப்போர் வாட்க ணாளங் கொருத்தியோர் குமர னன்னான்
வள்ளத்தா ரகலந் தன்னை மலர்க்கையாற் புதைப்ப நோக்கி
உள்ளத்தா ருயிரன் னாண்மே லுதைபடு மென்று நீநின்
கள்ளத்தாற் புதைத்தி யென்னா முன்னையிற் கனன்று மிக்காள்.

(ஆடவர் உயிரை) கொள்ளை (கொள்ளும்) போர் (செய்வனவான) வாள் (போன்ற) கண்ணாள் ஒருத்தி, (ஊடலில் உதைக்கப் புகுங்கால் அவளது நாயகனாகிய) ஓர் குமரன் அன்னான் (கல்லொத்த தன் மார்பில் பட்டு அவள் பாதம் வருந்தும் என இரங்கித் தன்) வள்ளம் (அமைந்த) தார்(சூடிய) அகலம் தன்னை (தனது) மலர்போன்ற கையால்

புதைப்ப, (அதை) நோக்கி (ஊடல் மிகும் காரணம் ஒன்று சிருஷ்டித்து), "(உனது) உள்ளத்தில் ஆர்ந்த உயிரன்னாள் (ஆகிய மற்றவள்) மேல் (இந்த) உதை படும் என்று நீ நின் கள்ளத்தால் (மார்பில் என் உதை படா வண்ணம்) புதைத்தி!" என்று முன்னையில் கனன்றுமிக்காள். [வள்ளம்-வளமை. அகலம்-மார்பு. கனன்று-கோபித்து.]

60. பாலுள பவளச் செவ்வாய்ப் பணைமுலை நிகர்த்த மென்றோள்
வேலுள நோக்கி னாளோர் மெல்லியல் வேலை யன்ன
மாலுள சிந்தை யாங்கோர் மழையுள தடக்கை யாற்கு
மேலுள வரம்பை மாத ரென்பதோர் விருப்பை யீந்தாள்.

பால் (சுவை) உள்ள பவளம்போன்ற செவந்த வாயையும் பணைத்த முலைகளையும் (பணையை) நிகர்த்த மெல்லிய தோள்களையும் வேல் உள்ள நோக்கினையும் உடையாள் ஆன ஓர் மெல்லியல், வேலை அன்ன மால் உள்ள சிந்தையையும் மழை (போல் கொடை) உள்ள தடம் கையையும் உடையான் ஒருவனுக்கு, "மேல் உள்ள அரம்பை மாது (இவள்)" என்பது (ஆன) ஓர் விருப்பை ஈந்தாள். [பணை-பருத்த, மூங்கில். வேல்உள்ள-வேல்போன்ற. வேலை-கடல். மால்-ஆசை. மழை-மேகம். மேல்-விண் உலகம்.]

61. புனத்துள மயிலனாள் கொழுநன் பொய்யுரை
நினைத்தனள் சீறுவா ளொருத்தி நீடிய
சினத்தொடு காதலன் சேக்கைப் போரிடை
மனத்துறை காதலே வாகை கொண்டதே.

புனத்தில் உள்ள மயில் அன்னாள் ஒருத்தி (தன்னிடம் வராத் தாழ்ந்ததற்குக் காரணமாக) கொழுநன் (சொன்ன) பொய் உரைகளை நினைத்து (நினைத்து) சீறுவாள். (எனினும்) காதலனுடன் சேக்கைபோர் இடை (அவளது) நீடிய சினத்தொடு (மாறுகொண்டு அவளது) மனத்தில் உறையும் காதலே வாகை கொண்டது. [வாகை-வெற்றி.]

62. கொலையுரு வமைந்தென கொடிய நாட்டத்தோர்
கலையுரு வல்குலாள் கணவற் புல்குவாள்
சிலையுரு வழிதரச் செறிந்த மார்பிற்றன்
முலையுரு வினவென முதுகை நோக்கினாள்.

கொலை (தொழில்) உருவு அமைந்தது என கொடிய நாட்டத்தையுடைய ஓர், கலையை (ஊடு) உருவும் அல்குலாள், (தனது) கணவனை புல்குவாள். (புல்லி), உருவு அழிய சிலையை செறிந்த (அவன்) மார்பில் தன் முலைகள் (பாய்ந்து) உருவின என (ஐயுற்று அவனது) முதுகை (எட்டியதோஎன) நோக்கினாள். [நாட்டம்-கண். கலை-ஆடை. சிலை-மலை. செறிந்த-நொறுக்கின.]

63. குங்கும முதிர்ந்தன கோதை சோர்ந்தன
சங்கின மார்த்தன கலையுஞ் சாய்ந்தன
பொங்கின சிலம்புகள் பூச லிட்டன
மங்கைய ரிளநல மைந்த ருண்ணவே.

[சங்கு-வளை. சாய்ந்தன-நழுகின. பூசல்-ஒலி. இளநலம்-புதிய இன்பம்.]

64. துனியுறு புலவியைக் காதற் சூழ்சுடர்
பனியெனத் துடைத்தலும் பதைக்குஞ் சிந்தையாள்
புனைகுழ லொருமயில் பொய்யு றங்குவாள்
கனவெனு நலத்தினாற் கணவற் புல்லினாள்.

காதல் (ஆகிய) சூழ்ந்த சுடர் (கலையுடைய சூரியன் உள்ளத்தில் உதிக்க) (அவளது) துனி உற்ற புலவியை (அது) பனி என துடைத்தலும் (வேட்கையால்) பதைக்கும் சிந்தையாளாகி, புனைந்த குழல் உடைய ஒரு மயில்போன்றவள் பொய் (உறக்கம்) உறங்குவாளாய் (உறக்கத்தில்) கனவு (உண்டு) எனும் நலத்தினால் கணவனை புல்லினாள். [துனி-கோபம். புனைந்த-அலங்கரித்த. நலம்-உபாயம்.]

65. வட்டவாண் முகத்தொரு மயிலு மன்னனும்
கிட்டிய போதுடல் கிடைக்கப் புல்லினார்
விட்டிலர் கங்குலின் விடிவு கண்டிலர்
ஒட்டிய வுடற்பிரிப் புணர்கி லாமையால்.

வட்டமாகிய வாள்பொருந்திய முகத்தை உடைய ஒரு மயில்போல் வாளும் (அவளது) மன்னனும் (ஊடல் தீர்ந்து) கிட்டியபோது (ஊடியிருந்த காலத்தில் உயிர்மாத்திரமேயன்றி இப்போது) உடல் கிடைக்க (இருவரும் இறுக) புல்லினார். (அவ்வாறு) ஒட்டிய உடலை பிரிப்பு உணர்கிலாமையால் விட்டிலர், கங்குலின் விடிவும் கண்டிலர். [வாள்-ஒளி. பிரிப்பு-பிரிக்கும் வகை. கங்குல்-இரவு]

66. அருங்களி மால்களி றனைய வீரர்க்குங்
கருங்குழன் மகளிர்க்குங் கலவிப் பூசலால்
நெருங்கிய வனமுலை சுமக்க நேர்கலா
மருங்குல்போற் றேய்ந்ததம் மாலைக் கங்குலே.

(தணித்தற்கு) அரிய களியுடைய மால் களிறு அனைய வீரர்க்கும், கரும் குழல் மகளிர்க்கும் (நேர்ந்த) கலவிபூசலால் நெருங்கிய வன முலைகளை சுமக்க நேர்கலாத (அம்மாதரது) மருங்குலைப்போல் அந்த மாலை கங்குல், தேய்ந்தது. [களி-மயக்கம். மால்-மதங்கொண்ட. நேர்கலாத-ஆற்றாத. மருங்குல்-இடை. பூசல்-போர். வன-அழகிய]

67. கடையுற நன்னெறி காண்கி லாதவர்க்
இடையுறு திருவென விந்து நந்திட
படர்திரைக் கருங்கடற் பரமன் மார்பிடைச்
சுடர்மணிக் கரசென விரவி தோன்றினான்.

(முன்பிறப்பில்) கடை உற நல்நெறி காண்கிலாதவர்க்கு (இப்பிறப்பில்) இடையில் உற்ற திரு (எவ்வாறு சிறிதளவு இருந்து மறைந்து விடுமோ அவ்விதம்) என இந்து நந்திட, படர்ந்த திரைகளையுடைய கருங்கடல் (அமர்ந்த) பரமனது மார்பிடை (இருக்கும் கௌஸ்துவமெனும்) சுடர்மணிக்கு அரசு என இரவி தோன்றினான். [கடையுற-முற்றிலும். திரு-செல்வம். இந்து-சந்திரன். நந்திட-ஒளிமழுங்க. கரும்-பெருமை பொருந்திய. இரவி-சூரியன்.]

---

19. எதிர்கொள் படலம்.

பரிவாரசகிதனாய் இவ்வாறுவந்த தசரதமன்னனைச் சனகன்
எதிர்கொண்டு வரவேற்கும் படலம்.

1. அடாநெறி யறிதல் செல்லா வருமறை யறைந்த நீதி
விடாநெறிப் புலமைச் செங்கோல் வெண்குடை வேந்தர் வேந்த
படாமுக மலையிற் றோன்றிப் பருவமொத் தருவி பல்குங் [ன்
கடாநிறை யாறு பாயுங் கடலொடுங் கங்கை சேர்ந்தான்.

அடாத நெறியை அறிதல் செல்லாதவனும், அருமறைகள் அறைந்த நீதிகளை விடாத நெறியையுடைய புலமை நிறைந்தவனும், செங்கோல் வெண்குடைகளை உடையவனுமாகிய (தசரத) வேந்தர் வேந்தன், படம் அணிந்த முகத்தையுடைய (யானைகளாகிய) மலையில் தோன்றி, (கார்) பருவத்தை ஒத்து அருவிபோல் பல்கும் கடம் ஆகிய நிறைந்த ஆறுபாயும் (யானைப் படையாகிய) கடலொடும் கங்கையை சேர்ந்தான். [புலமை-அறிவு. படம்-யானை முகத்தில் அணியும் சித்திரச் சீலை. பல்கும்-பாயும்].

2. கப்புடை நாவி னாக ருலகமுங் கண்ணிற் றோன்றத்
துப்புடை மணலிற் றூகிக் கங்கைநீர் சுருங்கிக் காட்ட
அப்புடை யனீக வேலை யாண்புனன் முகந்து மாந்த
உப்புடைக் கடலுந் தெண்ணீ ருண்ணமை யுற்ற தன்றே.

(சேர்ந்ததும்) கங்கை, கப்பு உடைய நாகர்களது உலகமும் கண்ணுக்கு தோன்றவும், துப்பு உடைய மணல் தூறு ஆகியும், நீர் சுருங்கி காட்டும் வண்ணம், அப்பை உடைய (தசரதனது) அனீகமாகிய வேலை

(அந்நதியின்) அகன்ற புனலை முகந்து மாந்தலால், (சங்கை நீர் கடற்கு எட்டாது போக அர்த்த) உப்பை உடைய கடலும் தெள்நீர் உண்ண (வேண்டும் என்கிற) நசையை உற்றது. [கப்பு-பிளவு. துப்பு-தூய்மை. அனீகவேலை-சேனை சமுத்திரம். புனல்-நீர். நசை-விருப்பு.]

3. ஆண்டுநின் றெழுந்து போகி யகன்பணை மிதிலை யென்னும்
ஈண்டுநீர் நகரின் பாங்க ரிருநிலக் கிழவ னெய்தத்
தாண்டுமாப் புரவித் தானைத் தண்ணளிச் சனக னென்னுந்
தூண்தரு வயிரத் தோளான் செய்தது சொல்ல லுற்றும்.

[இருநிலக் கிழவன்-பெரிய பூமிக்கு உரிமை உடையவன். பணை-வயல். தண்ணளி-கிருபை.]

4. வந்தன னரச னென்ன மனத்தெழு முவகை பொங்கக்
கந்தடு களிறுந் தேருங் கலினமாக் கடலுஞ் சூழச்
சந்திர னிரவி தன்னைச் சார்வதோர் தன்மை தோன்ற
இந்திர திருவன் றன்னை யெதிர்கொள்வா னெழுந்து வந்தான்.

[கந்து அடுகளிறு-கட்டுத்தறியை முறிக்கின்ற யானை. கலினமா-கடிவாளம் பூட்டிய குதிரை. இந்திர திருவன்-இந்திரனுக்குரிய செல்வமெல்லாம் உடையவன்]

5. கங்கைநீர் நாடன் சேனை மற்றுள கடல்க ளெல்லாம்
சங்கின மார்ப்ப வந்து சார்வன போலச் சாரப்
பங்கயத் தணங்கைத் தந்த பாற்கட லெதிர்வ தேபோல்
மங்கையைப் பயந்த மன்னன் வளநகர் வந்த தன்றே.

[பயந்த-பெற்ற. நகர்-நகருள்ளவர்.]

சேனை ஏழுகடல்களும் ஒருங்கே எழுந்ததை ஒத்தது.

6. இலைகுலா மயிலினு னனிகமே மெனவுலா
நிலைகுலா மகரநீர் நெடியமா கடலெலாம்
அலகின்மா களிறுதேர் புரவியா ளெனவிராய்
உலகெலா நிமிர்வதே பொருவுமோ ருவமையே.

இலை குலாவும் அயிலினுன் (ஆகிய மன்னனது) அனிகம், (அதற்கு உவமை எது என்று பார்க்கப்புகின்), மகர (மீன்கள்) நிலைகுலாவும் ஏழ் (சாகரங்கள்) என உலாவும் நீர் (உடைய) நெடிய மா கடல் எலாம், அலகு இல்லாது மா களிறு தேர் புரவி (கால்) ஆள் என விராவி, உலகு எல்லாம் நிமிர்வதையே பொருவும். [இலை குலாம் அயில்-அலகு பொருந்திய வேல். அலகு-அளவு. விராய்-கலந்து. பொருவும்-ஒக்கும். எழுவது-படர்வது.]

சேனை தாமரைத் தடாகத்தை ஒத்தது.

7. தொங்கல்வெண் குடைதொகைப் பிச்சமுட் படவிராய்
எங்கும்மின் புதைதரப் பகன்மறைந் திருளெழப்
பங்கயஞ் செய்யவும் வெளியவும் பலபடத்
தங்குதா மரையுடைத் தானமே போலுமே.

[தொங்கல்-பீலிக்குஞ்சம். தொகைப்பிச்சம்-பீலிக்குடை. பகல்-சூரியன். தானம்-தடாகம்].

8. கொடியுளா ளோதனிக் குடையுளா ளோகுலப்
படியுளா ளோகடற் படையுளா ளோபகர்
மடியிலா அரசன்மார் பினிலுளா ளோவளர்
முடியுளா ளோதெரிந் துணர்கிலா முளரியாள்.

முளரியில் (வைகி) உள்ளாள் (ஆகிய ஜயலக்ஷ்மி), (அறிஞர் கொடியது என) பகரும் மடி இல்லாத அரசனது, கொடியில் உள்ளாளோ, (அவனது) தனி குடையில் உள்ளாளோ, (அவன் செல்லும்) குலம் படியில் உள்ளாளோ, (அவனுடன் வரும்) கடல் போன்ற படையில் உள்ளாளோ, (அவனது) மார்பினில் உள்ளாளோ, (அவன் தரித்த) வளர்கின்ற முடியில் உள்ளாளோ, (அவள் எங்கும் இருப்பதால் இங்குத்தான் இருக்கின்றனள் என்று) தெரிந்து (யாம்) உணர்கிலேம். [முளரி-தாமரை. மடி-கெடுதி அல்லது சோம்பல். குலம்-சிறந்த. படி-பூமி].

9. வார்முகங் கெழுவுகொங் கைபர்கருங் குழலின்வண்
டேர்முழங் காவமே ழிசைமுழங் காவமே
தேர்முழங் காவம்வெண் டிரைமுழங் காவமே
கார்முழங் காவம்வெங் கரிமுழங் காவமே.

(அங்கு) வார்முகம் கெழுவும் கொங்கையையுடைய மாதர்களது கரிய குழலில் வண்டுகள் ஏர் (ஆக) முழங்கும் அரவமானது எழு இசையையும் முழங்கும் (யாழ்முதலிய கருவிகளின்) அரவம் (ஆகும்). தேர் முழங்குகின்ற அரவம் வெண் திரை (களையுடைய கடல்) முழங்கும் அரவம் (ஆகும்). கரிகள் முழங்கும் அரவம் கார் முழங்கும் அரவம் (ஆகும்). [வார்முகம் கெழுவு கொங்கை-கச்சணிடத்தில் நிறைந்து விம்மிய முலை. ஏர்-அழகு. திரை-அலை. கரி-யானை. கார்-மேகம்].

10. சூழுமா கடல்களுந் திடர்படத் துகடவழ்ந்
தேழுபா ரகமுமுற் றுளதெனற் கெளிதரோ
ஆழியா னுலகளந் தன்றுதாள் சென்றவப்
பூழையூ டேபொடித் தப்புறம் போயதே.

(அச்சேனை செல்வதால் கிளம்பிய) துகள் தவழ்ந்து, (உலகை) சூழும் மா கடல்களும் திடர்பட, பார்அகம் ஏழும் உற்று உளது என்னலுக்கு எளிதோ! (சுதர்சனம் என்னும்) ஆழியை உடையவன் (ஆனதிருமால்) (மாவலிபால் மண்வேண்டி) உலகை அளந்த அன்று (அவனது) தாள் செற்ற அப் பூழையூடு பொடித்து (அண்டமுகட்டிற்கு) அப்புறம் போயது. [துகள் தவழ்ந்து-தூளி படர்ந்து. பார்அகம்-அண்டம். உற்று உளது-தங்கியது. ஆழி-சக்ராயுதம். பூழை-துளை. பொடித்து-புழுதியாக்கி].

11\. மன்னெடுங் குடைமிடைந் தடையவான் மறைதரத்
துன்னிடு நிழல்வழங் கிருடிரப் பெளிதரோ
பொன்னிடும் புவியிடும் புனைமணிக் கலனெலாம்
மின்னிடும் வில்லிடும் வெயிலிடும் நிலவிடும்.

மன்னரது நெடும் குடைகள் மிடைந்து அடைய (அதனால்) வான் மறைய (அதனால்) துன்னிடும் நிழல் வழங்கும் இருளை துரப்பு எளிதோ. (எனினும்) பொன்னில் (குயிற்றி) இட்ட புனைந்த மணி கலன் எல்லாம் (அச்சேனை செல்லும் வழியில்) புவியில் இடும். (இட அவை) மின் இடும், (வான) வில் இடும், வெயில் இடும், நிலவு இடும். (ஆதலால் குடைகளால் உண்டாகிய இருள் ஒழிந்தது). [மிடைந்து அடைய-நெருங்கிச் சேர. வான்-ஆகாயம். வில்-வானவில். துரப்பு-நீக்குவது.]

குறிப்பு:—குடைகள் நெருங்கி மறைத்தலால் ஆகாயத்தினின்று கீழ் வருகின்ற மின், வில், வெயில், நிலவு ஆகிய நால்வித ஒளிகளும் தடுப்புண்ண, மன்னவர் செல்வழி உகுந்த அணிகலன்கள், மேகம் வானவில் கதிரவன் சந்திரன் இவைகளுக்குப் பதிலாய் அமைந்து அதுவது தனித்தனியே தருகின்ற பல்வேறு ஒளிகளைத் தாமே கீழ் நின்று மேல்போகச் செலுத்தின. எனவே குடைகள் மிடைந்த இருள் இவற்றால் முற்றிலும் அற்றது.

12\. தாவின்மன் னவர்பிரான் வரவருட் சனகனும்
ஏவருஞ் சிலையினு னெதிர்வரும் நெறியெலாம்
தூவுதண் சுண்ணமுங் கனகநுண் டூளியும்
பூவின்மென் றாதுகும் பொடியுமே பொடியெலாம்.

தா இல்லாத மன்னர்பிரான் (ஆகிய தசரத சக்ரவர்த்தி) வர, அருள் (தங்கிய மனத்தினனான) சனகன் ஆகும் (பிறரெவரும்) ஏவுதற்கு அரிய சிலையினன், (தயாதனை) எதிர் (கொள்ள) வரும் நெறி எல்லாம்

(படிந்த) பொடி எல்லாம் தூவும் தண்ணிய சுண்ணமும், கனக நுண் தூளியும் பூவின் மெல்லிய தாது உகும் பொடியே. [தா-குற்றம். கனகம்-பொன். தாது-மகரந்தம்.]

13. நறுவிரைத் தேனுநா னமுநறுங் குங்குமச்
செறியகிற் றேய்வையு மான்மதத் தேக்கரும்
வெறியுடைக் கலவையும் விரவுசெந் சாந்தமும்
செறிமதக் கலுழிபாய்ச் சேறுமே சேறெலாம்.

[விரை-வாசனை பொருந்திய. செறி அகில் தேய்வை-செறிந்த அகில் குழம்பு. நானம்-மயிர்ச்சாந்து. மான் மதம்-கஸ்தூரி. வெறி-வாசனை. மதக்கலுழி-யானை மதத்தாலாகிய கலங்கல் நீர்.]

14. மன்றலங் கோதையர் மணியினும் பொன்னினும்
சென்றுவந் துலவுமச் சிதைவிலா நிழலினேர்
வென்றிதிண் கொடியொடு நெடுவிதா னமும்விராய்
நின்றவெண் குடைகளி னிழல்களே நிழலெலாம்.

மன்றல் பொருந்திய அம் கோதையர் (அணிந்துள) மணியினும் பொன்னினும் சென்றுவந்து உலவும் அ சிதைவு இல்லாத நிழலிற்கு நேராக வென்றிபொருந்திய திண்ணிய கொடியொடும் நெடிய விதான முடனும் விராய் நின்ற வெண் குடைகளின் நிழல்களே நிழல் எலாம் (ஆகும்). [மன்றல்-வாசனை. கோதையர்-பூமாலை சூடிய மாதர். சிதைவு-கெடுதல். நிழல்-ஒளி, விராய்-கலந்து. நிழல்-சாயை.]

கடலுடன் நதி கலப்பதைப்போல் ஆரவாரித்து
இரு சேனைகளும் கூடின.

15. பாறிலா மதுகையான் வருபெருந் தானைமேல்
ஊறுபே ருவகையா னனிகம்வந் துற்றபோ
தீறிலோ தையினெடு மெறிதிரைப் பரவைவாய்
ஆறுபாய் கின்றதோ ரமலைபோ லானதே.

[மதுகையான்-வலியையுடையவன். தானை, அனிகம்-சேனை. பரவை-கடல். அமலை, ஓதை-ஒலி.]

16. கந்தையே பொருகரிச் சனகனுங் காதலோ
டோதவோ தரியதோர் தன்மையோ டுலகுளார்
தந்தையே யனையவத் தகவினான் முன்புதன்
சிந்தையே பொருநெடுந் தேரின்வந் தெய்தினான்.

ஓதுதற்கு அரியது (ஆன) ஓர் (நற்குண) தன்மையோடு உலகில் உள்ளார்க்கு தந்தையே அனைய அ தகவு உடையான் (ஆன தயாத னிற்கு) முன்—கந்தை பொரும் கரிகள் உடைய சனகனும், (தயாத

ளைக் காணக்கொண்டிருக்கும்) காதலோடு உந்த, (அக்காதல் பொருந்திய), தன் சிந்தையையே (வேகத்தில் நீ முன்னோ நான் முன்னோ என) பொரும் நெடும் தேரில் வந்து எய்தினன். [கந்துபொருகரி-கட்டுத்தறியை முறிக்கும் யானை. உந்த-செலுத்த. சிந்தை-மனம்.]

17. எய்தவத் திருநெடுந் தேரிழிந் தினையதன்
மொய்கொடிண் சேனைபின் னிற்கமுன் சேறலும்
கையின்வந் தேறெனக் கடிதின்வந் தேறினான்
ஐயனும் முகமலர்ந் தகமுறத் தழுவினான்.

(அவ்வாறு) எய்த, (ஜனகன்) அ திரு நெடும் தேரிலிருந்து இழிந்து, இனையதான தன் மொய்கொண்ட திண்ணிய சேனை பின் நிற்க (தயரதனுக்கு) முன் சென்று (அவனுக்கு) கைகொடுத்து "(என் தேரில்) வந்து ஏறு" என (வேண்ட அவனும் அவ்வாறே) கடிதின் வந்து ஏறினான். (ஏறி, தசரதனை) ஐயனும் முகம் மலர்ந்து அகம் உற(சனகனை) தழுவினான். [இழிந்து-இறங்கி. மொய்-வலி, நெருக்கம்.]

18. தழுவிநின் றவனிருங் கிளையையுந் தமரையும்
வழுவில்சிந் தனையினன் வரிசையின் னளவளாய்
எழுகமுந் துறவென வினிதுவந் தெய்தினான்
உழுவைமுந் தரியனா னெவரினும் முயரியான்.

(பின் நிற்கும் சேனையாகிய) உழுவைகளுக்கு முந்தும் அரி அன்னானும் எவரினும் உயர்ந்தானும் (ஆன தயரதன், தன்னை) தழுவி நின்றவன் (ஆகிய சனகனது) இரும் கிளையையும் தமரையும், வழு இல்லாத சிந்தனையோடு வரிசையாய் அளவளாவி (பின்), "முந்துஉற எழுக" என (அவனும்) இனிது உவந்து (மிதிலை) எய்தினான். [உழுவை-புலி. அரி-சிங்கம். இரும்-பெருமை பொருந்திய. அளவளாய்-க்ஷேமம் விசாரித்து.]

19. இன்னவா றிருவரும் மினியவா றேகவத்
துன்னுமா நகரிநின் றெதிர்கொளத் துன்னினான்
தன்னையே யனையவன் றழலையே யனையவன்
பொன்னின்வார் சிலையிறப் புயநிமிர்த் தருளினான்.

இன்னவாறு (அவ்வரசர்) இருவரும் இனியவாறு (மிதிலைக்குள்) ஏக, (இவர்களை) எதிர்கொள்ள,—தன்னையே அனையவனும், (திறத்தில்) தழலை அனையவன் (ஆன பரமசிவனது) பொன் (மலையாகிய மேருவை) போன்ற வார்சிலை இறும்படி (தனது) புயங்களை நிமிர்த்து அருளினவனும் (ஆன ஸ்ரீராமன்),—அ (ஊராரெல்லாம் அரசைக்காண) துன்னும் மா நகரி நின்று துன்னினான். [வார்சிலை-நீண்டவில். துன்னும்-நெருங்கும். துன்னினான்-சமீபித்தான்.]

குறிப்பு:—"தன்னைபே அனைபவன்" என்பது 'அயலொரு உவமை எற்கா ஒருதனிப் பெருந்தகை இராமன்.' எனப் பொருள்படும். இனி, "(இராமனுன) தன்னையே அனைய வன்தழலை அனையான்" என ஆக்கி அவ்வடியினின்று சிவவிஷ்ணு அபேதத்தைப் பெறுதலும் கூடும்.

20. தம்பியுந் தானுமத் தானைமன் னவனகர்ப்
பம்புதிண் புரவியும் படைஞரும் புடைவரச்
செம்பொனின் பசுமணித் தேரின்வந் தெய்தினான்
உம்பரும் மனிதரும் முரகருந் தொழவுளான்.

[பம்பு-நிறைந்த. உம்பர்-தேவர். உரகர்-நாகர்.]

21. யானையோ விரதமோ விவுளியோ பிடிகளோ
ஆனபே ருறையிலா நிறைவையா ரறிகுவார்
தானையோர் சனகனே வலினெடுந் தாதைமுன்
போனபே ரிருவர்தம் புடைவரும் படையினே.

[உறை-தொகை கூட்டிப்போடும் குறி. தானை எர்-சேனை யழகு வாய்ந்த. இவுளி-குதிரை.]

22. காவியுங் குவளையுங் கடிகொள்கா யாவுமொத்
தோவியஞ் சுவைகெடப் பொலிவதோ ருருவொடே
தேவருந் தொழுகழற் சிறுவன்முன் பிரிவதோர்
ஆவிவந் தென்னவந் தரசன்மா டணுகினான்.

காவியும் குவளையும் கடிகொண்ட காயாவும் ஒத்து, (இவன் உருவத்தை எத்தனை தாம் சித்தரித்துப் பார்த்தாலும் கூடாதாய் அந்த) ஓவியம் சுவை கெட பொலிவதான ஒரு உருவுடன், முன் (மன்னனது இன்னுயிர் வழிக்கொண்டாலென விச்வாமித்திரனுடன் சென்று) பிரிந்த (தயரதனது) ஆவி (மீண்டு) வந்ததென்ன, தேவரும் தொழுகின்ற கழல் அணிந்த (இராமனாகிய) சிறுவன் வந்து (தசரத) அரசன் மாடு அணுகினான். [கடி-வாசனை. காயா-காயாமலர்.]

23. அனிகம்வந் தடிதொழக் கடிதுசென் றரசர்கோன்
இனியபைங் கழல்பணிந் தெழுதலுந் தழுவினான்
மனுவெனுந் தகையன்மார் பிடைமறைந் தனமலைத்
தனிநெடுஞ் சிலையிறத் தவழ்தடங் கிரிகளே.

(அணுக, தயரதனது) அனிகம் வந்து (இராமனது) அடிகளை தொழ, (அவன்) கடிதுசென்று அரசர்கோன் (ஆனதந்தையின்) இனிய பை கழலை பணிந்து எழுதலும், (அரசன் அவனை) தழுவினான். (தழுவ) மலைபோன்ற தனிநெடும் சிலை இறும்படி தவழ்ந்த (இராமனது) தடம் கிரிகள் (ஆகிய தோள்கள்), 'மனு' எனும் தகையன் (ஆன

தயாரதனது) மார்பு இடை மறைந்தன. [பை-பசும்பொன்னாலாகிய. தனி-ஒப்பற்ற. இற-ஒடிய. தவழ்-அசைந்த].

24. இளையபைங் குரிசில்வந் தடிபணிந் தெழுதலும்
தளைவருந் தொடையன்மார் புறவுறத் தழுவினான்
களைவருந் துயரறக் ககனமெண் டிசையெலாம்
விளைதரும் புகழினா னெவரினும் மிகுதியான்.

(பிறகு) இளைய பசும் (பொன் நிறமமைந்த) குரிசில் (ஆன இலக்ஷ்மணன்) வந்து (தந்தையின்) அடிகளை பணிந்து எழுதலும், (விண்ணுலகு மண்ணுலகு உள்ளோர்க்கு) களைவதற்கு அரிய துயர்(எல்லாம்) அறும்படி ககனமும் எண் திசையும் எல்லாம் (பேர் கேட்ட அளவிலே பகைவர் அனைவரும் பின்னோடும் வண்ணம்) விளைதரும் புகழினானும் எவரினும் மிகுதியானும் (ஆன அத்தயரதன்), (மலரால்) தளைவரும் (தன்) தொடையல் (அணிந்த) மார்பில் உற (இலக்ஷ்மணனை) உற தழுவினான். [குரிசில்-இராஜ குமாரன். ககனம்-ஆகாயம். விளை தரும்-வளரும். தளைவரும்-கட்டியுள்ள. தொடையல்-மாலை. மிகுதியான்-உயர்ந்தவன். உற-பொருந்த, மிகுதியும்]

இராமன் தாயரையும் வணங்கி உவப்பித்தான்.

25. கற்றைவார் சடையினான் கைக்கொளுந் தனுவிறக்
கொற்றநீள் புயநிமிர்த் தருளுமக் குரிசில்பின்
பெற்றதா யரையுமப் பெற்றியிற் றொழுதெழுந்
துற்றபோ தவர்மனத் துவகைபா ருரைசெய்வார்.

[அப்பெற்றியின்-அவ்வண்ணமே]

26. உன்னுபே ரன்புமிக் கொழுகியொத் தொண்கணீர்
மன்னுதா ரைகடரத் தொழுதெழும் பரதனைப்
பொன்னின்மார் புறவணைத் துயிருறப் புல்லினான்
தன்னையத் தாதைமுன் றழுவினா லென்னவே.

(இராமனை எப்போதும்) உன்னும் பேர் (உள்) அன்பு மிக்கு (வெளியே) ஒழுகியது ஒத்து ஒண்மை பொருந்திய கண்ணீர் மன்னும் தாரைகள் தர தொழுது எழும் பரதனை, (இராமன்) பொன் மார்பு உற அணைத்து, தன்னை அ தாதை முன் தழுவியது அன்னவே, உயிர் உற புல்லினான். [உன்னும்-நினைக்கும். ஒண்மை-ஒளி. மன்னும்-நெருங்கிய. பொன்-அழகிய.]

27. கரியவன் பின்புசென் றவனருங் காதலிற்
பெரியவன் றம்பியென் றினையதோர் பெருமையப்
பொருவருங் குமார்தம் புனைநறுங் குஞ்சியால்
இருவர்பைங் கழலும்வந் திருவரும் வருடினார்.

கரியவன் (ஆகிய இராமனுக்கு) பின்பு (முனியுடன்) சென்றவன் (இலக்ஷ்மணன்) ; (அந்த இராமனிடத்தில்) அரிய காதலில் பெரியவன் (ஆன பரதனுக்கு இவன்) தம்பி (சத்ருக்கன்) ; என்று இனைய (விதத்தில் ஏற்றம் தாழ்வற்ற) ஓர் பெருமை (வாய்ந்த) அந்த பொருவு அரும் குமரர் இருவரும் வந்து, தம் புனைந்த நறும் குஞ்சியால் (இலக்ஷ்மணன் பரதனையும் சத்ருக்கன் இராமனையும்) இருவரது பைகழலையும் வருடினர். [காதலில்-பக்தியில். புனை-அலங்கரித்த. நறும்-வாசனை வீசும். குஞ்சி-சிகை. வருடினர்-தடவினர், வணங்கினர்.]

28. கோல்வருஞ் செம்மையுங் குடைவருந் தண்மையும்
சால்வருஞ் செல்வமென் றுணர்பெருந் தாதைதன்
மேல்வருந் தன்மையால் மிகவிளங் கினர்கள்தாம்
நால்வரும் பொருவினன் மறையெனும் நடையினர்.

(ஓர் அரசனுக்குச் செங்) கோலால் வரும் செம்மையும் (வெண்கொற்ற) குடையால் வரும் தண்மையுமே சால்வரும் செல்வம் என்று (உய்த்து) உணர்ந்த பெரும் தாதையின் மேல்வரும் தன்மையால்-(தம் முள்) பொரு இல்லாத நான்மறை எனும் நடையினர்களான (அந்த) நால்வரும் மிக விளங்கினர்கள். [தண்மை-தண்ணளி. சால்வரும்-சிறந்த. மேல்வரும்-உயர்ந்த. பொரு-மாறுபாடு.]

குறிப்பு:—(1) நீதியும் கருணையுமே அரசற்குரிய அருஞ்செல்வமெனக்கருதித் தம்மனத்தைப் பிற பொருட்களின்பால் செலுத்தியிலராதலால் அவ்வியம் அவாபோன்ற அன்பைச் சிதைக்கும் மனப்பான்மைக் கிடமின்றி யெஞ்ஞான்றும் மாறுபாடற்ற நடையினராயினர்.

குறிப்பு:—(2) " (அரசனுக்குச் செங்) கோலால் வரும் செம்மையும் (வெண்கொற்ற) குடையால் வரும் தண்மையும் (ஆகிய நீதி கருணை என்னும் இரண்டு செல்வங்களும், மள்ளர் உழுத படை) சாலிலிருந்து வரும் செல்வம் தான் என்று உணர்ந்த தாதை" என முன்னிரண்டு அடிகளுக்கு வேறு பொருளும் கூறலாம். இப்பொருளில், சால் என்பது படைச்சாலைக் குறிப்பதாகும். ஆயின் "குடிபுயாக் கோலு யரும், என்னும் வாய்மையை உணர்ந்த தூயவன் தயரதன்" எனக் கவி விளக்கிக் காட்டுவதாகக் கொள்ளல் வேண்டும். இப்பொருளில் "பொருவில்" என்பதற்கு அர்த்தம் "நிகரற்ற" என்பதாகும்.

29. சான்றெனத் தகையசெங் கோலினு னுயிர்கள்தாம்
ஈன்றநற் றாயெனக் கருதுபே ரருளினான்
ஆன்றவிச் செல்வமித் தனையுமொய்த் தருகுறத்
தோன்றலைக் கொண்டுமுற் செல்கெனச் சொல்லினான்.

(நீதிவழுவா ஆட்சிக்கு இதுவே) சான்று எனத்தகைய செங்கோலினானும், (உலகில் வாழும்) உயிர்கள் தாம் (தம்மை) ஈன்ற நல்தாய் என கருதும் பேர் அருளினானும் (ஆன தயாதன்) "ஆன்ற இச்செல்வம் இத்தனையும் மொய்த்து (அவனுக்கு) அருகில் உற (இராமனாகிய) தோன்றலை கொண்டு முன் செல்க" என சொல்லினான். [சான்று-சாக்ஷி. ஆன்ற-நிறைந்த. மொய்த்து-நெருங்கி. தோன்றல்-இளவல்]

30. காதலோ வறிகிலங் கரிகளைப் பொருவினார்
தீதிலா வுவகையுஞ் சிறிதரோ பெரிதரோ
கோதைசூழ் குஞ்சியக் குமரர்வந் தெய்தலும்
தாதையோ டொத்ததத் தானையின் றன்மையே.

31. தொழுதிரண் டருகுமன் புடையதம் பியர்தொடர்ந்
தழிவில்சிந் தைபினுகந் தாடன்மா மிசைவரத்
தழுவுசங் குடனெடும் பணைதழங் கிடவெழுந்
தெழுதருந் தகையதோர் தேரின்மே லேகினான்.

[ஆடல்மா-குதிரை. பணை-முரசம். தழங்கிட-ஒலிக்க]

32. பஞ்சிசூழ் மெல்லடிப் பாவைமார் பண்ணைசூழ்
மஞ்சுசூழ் நெடியமா ளிகையின்வந் திடைவிராய்
நஞ்சுசூழ் விழிகள்பூ மழையின்மேல் விழநடந்
திஞ்சிசூழ் மிதிலைமா வீதிசென் றெய்தினான்.

பண்ணையாக சூழ்ந்த, (செம்) பஞ்சி சூழ்ந்த மெல்லிய அடிகளுடைய பாவைமார், மஞ்சு சூழ்ந்த நெடிய மாளிகையினின்று (வெளிப்புறம்) வந்து இடைவிராவ, (அவர்களது) நஞ்சுசூழ்ந்த விழிகளாகிய (தாமரை குவளை போன்ற மாதர் பார்வையாம்); பூக்கள் மழையைப் போல் (தன்) மேல் விழ நடந்து, இஞ்சி சூழ்ந்த மிதிலையின் மா வீதி சென்று (இராமன்) எய்தினான். [பண்ணை-கூட்டம். மஞ்சு-மேகம். விராவ-நெருங்க. இஞ்சி-மதில்]

33. சூடகந் துயல்வரக் கோதைசோர் தரமலர்ப்
பாடகம் பரதநூல் பகரவெங் கடகரிக்
கோடரங் கிடவெழுங் குவிதடங் கொங்கையார்
ஆடரங் கல்லவே யணியரங் கமெல்லாம்.

சூடகம் துயல்வருதலாலும், கோதை சோர்தருதலாலும், (தாமரை) (மலர்போன்ற பாதங்களிலணிந்த) பாடகம் பரதநூல் (ஒலியை) பகர்வ

தாலுமே, அணி அரங்கு எல்லாம்—கடம்பொழிகின்ற வெம்கரியினது கோடுகள் (ஒப்பாகாததால்) அரங்கிட (விம்மி) எழும் குவிந்த தடம் கொங்கையார் (நடனம்) ஆடும் அரங்கு அல்ல, (மாற்று இராம பக்தியால் நிகழும் நிகழ்ச்சிகளேயாம்). [சூடகம்-கைவளை. துயல்வர-அசைய. கோதை-கூந்தல். பாடகம்-கிண்கிணி. அரங்கு-மாளிகை. கடம்-மதம். அரங்கிட-வருந்தி அழிய. தடம்-பெரிய. அரங்கு-நடன சாலை.]

34. பேதைமார் முதல்கடைப் பேரிளம் பெண்கடாம்
ஏதியார் மாரவே ளேவவந் தெய்தினார்
ஆதிவா னவர்பிரா னணுகலா லணிகொள்கார்
ஓதியார் வீதிவா யுற்றவா றுரைசெய்வாம்.

வானவர்களது ஆதிபிரான் (ஆன இராமன்) அணுகலால்—ஏதி ஆர்ந்த மாரவேள் ஏவ, பேதைமார் முதல் பேரிளம் பெண்கள் கடை வந்து-எய்தினவர்களான, அணிகொண்ட கரிய ஓதியார் (ஆன மாதர்) வீதிவாய் உற்றவாறு (இனி) உரை செய்வோம். [ஏதி ஆர்ந்த-ஆயுதங்கள் நிறைந்த. மாரவேள்-மன்மதன். அணி-அழகு. ஓதியார்-கூந்தலார்.]

---

20. உலாவியற் படலம்.

குறிப்பு:—பரம்பொருளின் தத்துவம் இப்படலத்தில் விரவிக் கிடக்கின்றது. கரணங்களின் உதிவியாலும் மதவாராய்ச்சியாலும் துறவு போன்ற மார்க்கங்களாலும் அப்பொருள் எட்டாமை காண்க. இனி, அன்பினால் உணர்ந்தெய்திய பக்தர்தம் மன நிலையும் செயல் வகையும் இச்செய்யுள்களில் கம்பர் செவ்வனே வகுத்திருக்கின்றனர்.

1. மானினம் வருவ போன்று மயிலினந் திரிவ போன்றும்
மீனின மிளிர்வ போன்று மின்னின மிடைவ போன்றுந்
தேனினம் பம்பி யார்ப்பச் சிலம்பினம் புலம்ப வெங்கும்
பூநனை கூந்தன் மாதர் பொம்மெனப் புகுந்து மொய்த்தார்.

[மீன்-நக்ஷத்ரம். மின்-மின்னல். மிடைவ-நெருங்குவன. தேன்-வண்டு. ஆர்ப்ப, புலம்ப-ஒலிக்க. பூநனை-பூந்தேன் படிந்த.]

2. விரிந்துவீழ் கூந்தல் பாரார் மேகலை யற்ற நோக்கார்
சரிந்தபூந் துகில்கள் தாங்கா ரிடைதடு மாறத் தாழார்
நெருங்கினர் நெருங்கிப் புக்கு நீங்குமி னீங்கு மின்னென்
றருங்கல மனைய மாதர் தேனுக ரளியின் மொய்த்தார்.

[தாழார்-தாமதியார். அற்றம்-அறுந்தசை. அருங்கலம்.....மொய்த்தார்-அருமையான யாழ் போன்றிசைக்கும் மாதர், தேனை உண்ணும் வண்டுகளைப்போல் மொய்த்தார். கலம்-யாழ்].

3. கண்ணினுற் காத லென்னும் பொருளையே காண்கின் றேமிப்
பெண்ணினீர் மையினு லெய்தும் பயனின்று பெறுது மென்பார்
மண்ணினி னுலர்ந்து வான மழையற வறந்த காலத்
துண்ணுநீர் கண்டு வீழு முழைக்குலம் பலவு மொத்தார்.

[நீர்மை-தன்மை. உழைக்குலம்-மான்கூட்டம்].

4. பள்ளத்துப் பாயு நன்னீ ரனையவர் பானல் பூத்த
வெள்ளத்தும் பெரிய கண்ணார் மென்சிலம் பலம்ப மென்பூத்
தள்ளத்த மிடைக ணோவத் தமைவலித் தவன்பாற் செல்லும்
உள்ளத்தைப் பிடித்து மென்ன வோடுகின் றாரு மொத்தார்.

(இராமபிரானிடம் பக்தியோடு அணுகும் தன்மையில்) பள்ளத்தில் பாயும் நல்நீர் அனையவர்களான (அந்த) வெள்ளத்தில் பூத்த பானல் போல் பெரிய கண்ணார் (ஆன அம்மாதர்), மெல்லிய சிலம்பு (பாதத்தில்) அலம்பவும் (கூந்தலிலணிந்துள்ள) மெல்லிய பூ (பாரத்தால்) தள்ள (அதனால்) இடைகள் நோவவும், (அன்பால்) தம்மை வலித்தவன் பால் (விரைந்து)செல்லும் (தம்) "உள்ளத்தை (ஓடி)பிடித்தும்" என்ன (கருதி) ஓடுகின்றவரையும் ஒத்தார். [பானல்-கருங்குவளை. அலம்பும்-ஒலிக்கும். பிடித்தும்-பிடிப்போம்].

5. ஆரத்தமுண் டனைய மேனி அகலிகைக் களித்த தாளும்
விரைக்கருங் குழலிக் காக வில்லிற நிமிர்ந்து வீங்கும்
வரைத்தடந் தோளுங் காண மறுகினில் வீழு மாதர்
இரைந்துவந் தமிழ்தின் மொய்க்கு மீயின மெனலு மானார்.

[ஆரத்த முண்டனைய-செவ்வரக்குப் பூசியதொத்த. அளித்த-முன்னை வண்ணத்தைக்கொடுத்த. விரை-வாசனையமைந்த. மறுகு-வீதி. ஈ இனம்-ஈக்கூட்டம்].

6. வீதிவாய்ச் செல்கின் றான்போல் விழித்திமை யாது நின்ற
மாதரார் கண்க ளூடே வாவுமான் றேரிற் செல்வான்
யாதினு முயர்ந்தோர் தன்னை யாவர்க்குங் கண்ண னென்றே
ஓதிய பெயர்க்குத் தானே யுறுபொரு ளுணர்த்தி விட்டான்.

வீதிவாய் செல்கின்றவன் போல் (பாவித்து, ஆனால் உண்மையில்) இமையாது விழித்து நின்ற மாதரார்களது கண்களுக்கு ஊடே வாவும் மான் பூட்டிய தேரில் செல்வான் (ஆயினான் இராமன்). (எனவே) யாதினும் உயர்ந்தோர் (ஆன முனிவர் முதலாயினோர்) தன்னை "கண்ணன்" என்று (பேரிட்டு) யாவர்க்கும் ஓதிய (அந்த) பெயர்க்கு (இப்பொழுது மாதர்களது, அதாவது பக்தர்களது கண்ணகலாது வசிப்பவன் என்னும்) உற்ற பொருளை தானே உணர்த்திவிட்டான். [வீதிவாய்-வீதிவழியே. ஊடே-உள்ளே. வாவுமான்-குதிரை.]

7. எண்கடந் தலகி லாதின் றேகுறு மிவன்றே ரென்று
பெண்கடந் தம்மி னொந்து பேதுறு கின்ற காலை
மண்கடந் தமரர் வைகும் வான்கடந் தானைத் தான்றன்
கண்கட வாமற் காத்த காரிகை வலிய ளேகாண்.

(இராமனாகிய) இவன் தேர் (நமது) எண்ணிற்கும் (இரங்காது) கடந்து (வேகத்தில்) அலகு இல்லாது இன்று ஏகுறும் என்று (குறை கூர்ந்து) பெண்கள் தம் தமக்குள்ளே நொந்து பேது உறுகின்ற காலையில்—(மாவலிபால் வேண்டிய) மண்ணை (அளந்து) கடந்து, (பிறகு) அமரர்வைகும் வானையும் கடந்த அவனை, தன் கண்ணைவிட்டு கடவாமல் காத்த காரிகை (யாகிய சீதாபிராட்டி) வலியளே, (என்பதற்கு ஐயமில்லை). [எண்-எளிமை. அலகு-அளவு. பேதுறுதல்-மயங்குதல்].

8. பயிரொன்று கலையுஞ் சங்கும் பழிப்பறு நலனும் பண்புஞ்
செயிரின்றி யலர்ந்த பொற்புஞ் சிந்தையு முணர்வுந் தேசும்
வயிரஞ்செய் பூணு நாணு மடனுந்தன் னிறையு மற்றும்
உயிரொன்றுமொழியவெல்லாமுகுத்தொருதெரிவைநின்றாள்.

[பயிர் ஒன்றும் கலை-ஒலியோடு கூடிய மேகலை. நலன்-வனப்பு. செயிர்-மாசு. பொற்பு-பொலிவு. தேசு-பொன்னிறம்.]

9. குழையுறு மிளிருங் கெண்டை கொண்டலி னாலி சிந்தத்
தழையுறாக் கரும்பின் சாபத் தனங்கவேள் சரங்கள் பாய்ந்த
இழையுறாப் புண்ண றாத விளமுலை யொருத்தி சோர்ந்து
மழையுறா மின்னி னன்ன மருங்குல்போ னுடங்கி நின்றாள்.

தழைஉறாத கரும்பு சாபத்தையுடைய அனங்கவேள் (எய்த) சரங்கள் பாய்ந்த, இழைகள் உறாத புண் அறாத இளமுலைஉடையாள் ஒருத்தி, (காதிலணிந்த) குழையை உற்று மிளிரும் (கண்களாகிய) கெண்டை கொண்டலைப்போல் ஆலி சிந்த, சோர்ந்து, மழையிலும் உறாத மின் அன்ன (தன்) மருங்குலையே போல் நுடங்கி நின்றாள். [தழை-இலை. உறாத-இல்லாத, சாபம்-வில். இழை-ஆபரணம், மிளிரும்-விளங்கும். ஆலி-நீர்த்துளி. மழை, கொண்டல்-மேகம். மருங்கு-இடை.]

10. பஞ்சணி விரலி னார்தம் படைநெடுங் கண்க ளெல்லாம்
செஞ்செவே யையன் மெய்யின் கருமையைச் சேர்ந்த வோதாம்
மஞ்சன மேனி யான்றன் மணிநிற மாத ரார்தம்
அஞ்சன நோக்கம் பாய விருண்டதோ வறிகி லேமால்.

[பஞ்சு அணி-செம்பஞ் சூட்டிய. மஞ்சு அன-மேகம் போன்ற. அஞ்சன நோக்கம்-மைத் தீட்டிய கண் பார்வை.]

குறிப்பு:—' மை வண்ணனாகிய இராமனை உற்றுக் கருதிப் பருகியதால் மாதர்களது கண்களெல்லாம் இவன் திருமேனி பட்டுக் கலந்து கருகினவோ, அல்லது அஞ்சனம்

நிற்கிய மாதரார் பார்வையெல்லாம் ஒருங்கே பட்டதால் அவன் திருமேனி கருநிறமாயதோ காரண காரிய வகையறியுமாற்றல் இல்லேம்,' எனக் கம்பர் ஐயம் கொண்டனர். தாமறிந்த ரூப குணங்களின் அநுஞானத்தால் மனிதர் தமது ராகத்வேஷங்களுக்கேற்க ஒரு தெய்வத்தை அநுகரண சிருஷ்டி செய்து வைத்துக்கொண்டிருக்கின்றனரோ, அல்லது தெய்வந்தான் மனிதரைச் சிருஷ்டித்து அவர்களுக்குத் தனது தன்மையைத் தந்து வைத்திருக்கின்றதோ எனத் தத்வ சாஸ்திரிகள் இடும் வழக்கை இச்செய்யுள் நினைவூட்டுகின்றது.

11. மாந்தளிர் மேனி யாளோர் வாணுதல் மதன னெங்கும்
பூந்துணர் வாளி மாரி பொழிகின்ற பூச லோக்கி
வேந்தர்கோ னாணை நோக்கான் வீரன்வில் லாண்மை பாரான்
ஏந்திழை யாரை யெய்வான் யாவனோ வொருவ னென்றாள்.

பூந்துணர் (ஆகிய) வாளிமாரி எங்கும் பொழிகின்ற மதனனது பூசலை நோக்கி, மாந்தளிர் போன்ற மேனியளான வாள் (வீசும்) நுதல் (உடையவள்) ஒருத்தி, ''வேந்தர்கோன் (ஆகிய தயரதனது) ஆணையை (அச்சத்தால்) நோக்காமலும் (இராமனாகிய) வீரனது வில் ஆண்மையை (நாணத்தால்) பாராமலும், (எம்போன்ற) ஏந்தும் இழை (உடைய)மாதரை (அம்பால்) எய்கின்ற ஒருவன் யாவனோ'' என்றாள். [துணர்-கொத்து. பூசல்-போர். வாள்-ஒளி. யாவனோ-எத்துணை கயவனோ].

12. சொன்னலங் கடந்த காமச் சுவையையே யோருருவ மாக்கி
இன்னலந் தெரிய வல்லா ரெழுதிய தென்ன நின்றாள்
பொன்னையும் பொருவு நீராள் புனைந்தன வெல்லாம் போகத்
தன்னையுந் தாங்க லாதா டுகிலொன்றுந் தாங்கி நின்றாள்.

சொல்லின் நலம் (ஆகும் வர்ணனையின் எல்லையை) கடந்த காமச்சுவையையே ஒரு (கட்புலனாகும்) உருவம் ஆக்கி இனிமையின் நலத்தை தெரிய வல்லார் (ஆன ஓவியர்) எழுதியது (ஆன சித்திரம்) என்ன நின்றாள் (ஒருத்தி), பொன்னையும் பொருவும் நீராளாய் (மேல் எட்டாவது கவியில் சொல்லப்பட்ட) புனைந்தன எல்லாம் (உகுந்து) போக, (பின்) தன்னையும் தாங்கலாதாளாய் துகில் ஒன்றையே (மானத்தால் முற்றிலும் நழுவ விடாது) தாங்கி நின்றாள். [பொன்னையும் பொருவும் நீராள்-இலக்குமியை நிகர்க்கும் தன்மையளாய்.]

13. விற்றங்கு புருவ நெற்றி வெயர்வரப் பசலை மெய்யிற்
சுற்றெங்கு மெறிப்ப வுள்ளஞ் சோரவோர் தோகை நின்றாள்
கொற்றஞ்செய்கொலையேவென்னக்கூற்றெனக்கொடியகண்ணாள்
மற்றொன்றுங் காண்கி லாதா டமியனே வள்ள லென்றாள்.

வில் (போல் வளைவு) தங்கும் புருவத்திலும் நெற்றியிலும் வெயர்வை வர, பசலை (நிறம்) மெய்யின் சுற்று எங்கும் எறிப்ப, உள்ளம் சோர ஓர் தோகை(போல்வாள்) நின்றாள். (அவள்)கொற்றம் செய்கின்ற கொலை (தொழிலையுடைய) வேல் என்ன கூற்று என்ன கண்ணுளாய் (இராமன் பாலே முழுப் பார்வையையும் செலுத்தியுள்ளாளாதலால் அவளது கோசரத்தில்) மற்றொன்றும் காண்கிலாதாள் (ஆகி), "(தன்னழகை யான் காண எளிவந்த இந்த) வள்ளல் (படைவீரர் புடைசூழாத) தமியனே" என்றாள். [பசலை-காதல் நோயால் உடலில் படரும் நிறம். எறிப்ப-அடிக்க. கொற்றம்-வெற்றி. தமியன்-தனியாயிருப்பவன்]

14. மைக்கருங் கூந்தற் செவ்வாய் வாணுத லொருத்தி யுள்ளம்
நெக்கன ளுருகு கின்றா ளெஞ்சிலை வஞ்சன் வந்து
புக்கனன் போகா வண்ணங் கண்ணெனும் புலங்கொள் வாயில்
சிக்கென வடைத்தேன் றோழி சேருது மமளி யென்றாள்.

[நெக்கனள்-தளர்ந்தவளாய். வஞ்சன்-கண்வழி நுழையுமோர் கள்வனான இராமன். புலம் கொள்வாயில்-சட்புலனாகிய வழியை. சிக்கென-விரைவாக. அமளி-படுக்கை]

15. தாக்கணங் கனையாண் மேனி தைத்தவேள் சரங்கள் பாராள்
வீக்கிய கலையுந் தூசும் வேறுவே றான தோராள்
ஆக்கிய பாவை யன்னா ளொருத்தியாண் டமலன் மேனி
நோக்குகின் றாரை யெல்லா மெரியெழ நோக்கு கின்றாள்.

[தாக்கணங்கு-மாதரனைவரையும் அழகில் வெல்பவளாகிய திருமகள். வீக்கிய-கட்டிய. கலை-மேகலை. தூசு-ஆடை. ஓராள்-உணராள். ஆக்கிய-கைவல்லோன் சித்திரித்தமைத்த. எரிஎழ-(கண்ணெச்சில் படுமென்றோ அவ்வியத்தாலோ) தீஎழ.]

16. களிப்பன மதர்ப்ப நீண்டு கதுப்பினை யளப்ப கள்ளம்
ஒளிப்பன வெளிப்பட் டோடப் பார்ப்பன சிவப்புள் ளூற
வெளுப்பன கறுப்ப வான வேற்கணா ளொருத்தி யுள்ளம்
குளிர்ப்பொடு காண வந்தாள் வெதுப்பொடு கோயில் புக்காள்.

களிப்பனவும், மதர்ப்பனவும், நீண்டு கதுப்பினை அளப்பனவும், கள்ளம் (ஒருபோது) ஒளிப்பனவும், (மறுபோது) வெளிப்பட்டு ஓட பார்ப்பனவும், (மாறிமாறி) சிவப்பு உள் ஊறுவதும் வெளுப்பதும் கறுப்பதும் (ஆயின) ஆன, வேல் (போன்ற) கண்ணாள் ஒருத்தி, உள்ளம் குளிர்ப்போடு (இராமனைக்காண வெளி) வந்தாள்; (ஆனால் காமந்தாங்காது) வெதுப்பொடு (தன்) கோயில் புக்காள்.

17. கருங்குழற் பாரம் வார்கொள் கனமுலை கலைசூ ழல்குல்
நெருங்கின மறைப்ப வாண்டோர் நீக்கிடம் பெறாது விம்மும்
பெருந்தடங் கண்ணி காணும் பேரெழி லாசை தூண்ட
மருங்குலின் வெளிக ளூடே வள்ளலை நோக்கு கின்றாள்.

(மற்ற மாதர்களது) கரும் குழல்பாரம், வாரை கொண்ட கனம் முலை, கலை சூழ்ந்த அல்குல் (ஆகிய இவை) நெருங்கி (இராமனை) மறைப்ப, ஆண்டு ஓர் (சிறிதும்) நீக்கு இடம் பெறாது (ஏங்கி) விம்மும் பெரும் தடம் கண்ணி (ஒருத்தி), (இராமனது) பேர் எழிலை காணும் ஆசை தூண்ட (அம்மாதர் கூட்டத்தில் அவர்களது துடிபோல் நடு குறுகிய) மருங்குலின் வெளிகள் ஊடே வள்ளலை நோக்குகின்றாள். [வார்-கச்சு. கலை-ஆடை. ஆண்டு-அந்த. எழில்-அழகு. மருங்குல்-இடை. நீக்கிடம், வெளிகள்-இடை வெளி]

குறிப்பு:—"மருங்குல் வெளி" என்றதால், 'இடை வெளி' என நாம் இக்காலம் உபயோகிக்கும் சொற்றொடர் வந்ததற்கு இம்மாது அந்நாள் செய்த செய்கைதான் ஆதாரமோ எனக் கவி விநோதமாய்க் கூறுகின்றார் போலும்.

18. வரிந்தவா ளனங்கன் வாளி மனங்கழன் றனவு மாதர்
எரிந்தபூ ணினமுங் கொங்கை வெயர்த்தபோ திழிந்த சாந்துஞ்
சரிந்தமே கலையு முத்துஞ் சங்கமுந் தாழ்ந்த கூந்தல்
விரிந்தபூந் தொடையு மன்றி வெள்ளிடை யரிதவ் வீதி.

[வரிந்த........கழன்றனவும்-(தாழை மடலாகிய) வாளை இடையில் கட்டிய மன்மதன் எய்த பாணங்களாகிய புஷ்பங்கள் மாதர்கள் மனத் தூடுருவிக் கழன்று விழுந்து கிடப்பனவும். எரிந்த பூண் இனம்-ஒளி வீசும் ஆபரணத் தொகுதிகள். வெள்ளிடை-வெற்றிடம்]

19. தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழற் கமல மன்ன
தாள்கண்டார் தாளே கண்டார் தடக்கைகண் டாரு மஃதே
வாள்கண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்
ஊழ்கண்ட சமயத் தன்னா னுருவுகண் டாரை யொத்தார்.

(இராமனது) தோளை கண்டவர் (அதனழகில் அடியுடன் ஈடுபட்டு) தோளையே கண்டார். கழல் தொடுத்த கமலம் அன்ன (அவனது) தாளை கண்டவர் தாளையே கண்டார். தட கை கண்டவரும் அஃதே. (எனவே) வாள் கண்ட கண்ணார் (ஆன அம்மாதருள்) யார் தான் (இராமனது) வடிவினை முடிய கண்டார். (ஒருவருமில்லை). (ஆதலால் அவர்), (தம்முள்) ஊழ்கண்ட (எல்லா) சமயத்து (முடிவுப் பொருள்) அன்னான் (ஆன ஒரே இறைவனது) உருவின் (ஒவ்வொரு அம்சத்தையே) கண்டார் (ஆன சமயவாதிகளை) ஒத்தார். [வாள் கண்ட-வாள்போன்ற. ஊழ் கண்ட-பகைகொண்ட]

குறிப்பு:—உள்ளத் துதித்த அன்பால் தேர்வதன்றிச் சமய சித்தாந்தங்கள் வாயிலாய் அப் பரம் பொருளின் வடிவை முடியக் காண்பதரிதெனுங் கருத்தும், 'கண்ணுடையார் கண்டிலர்' என்றதால் பெறுதல் கூடும். இச்செய்யுள்

அங்கு எய்திய எல்லா மாதரையும் பொதுப்படக் கூறிய தன்று. மனத்தன்பினால் இராமனது வடிவடங்கத் தரிசியாது கண்ணோ கொண்டு அவனைக் காண்பான் புகுந்த ஒரு சிலர்க்குற்ற தொன்றையே ஓதுகின்றது.

உலகமுண்டவன் சீதையாகிய ஒருமாதின் மனத்தில் அடங்க இசைந்த பெருந்தகையாயினான்.

20. தையல் சிற்றிடை யாளொரு தாழ்குழல்
உய்ய மற்றவ னுள்ளத் தொடுங்கினான்
வைய முற்றும் வயிற்றி லடக்கிய
ஐய னிற்பெரி யாரினி யாவரே.

[உய்ய-வருத்தம் தீர்ந்து பிழைக்க. ஒடுங்கினான்-அடங்கினான்]

இராமனைக்காண நடந்து வந்தவள் அவனைப் பெறாததால் மூர்ச்சித்துச் சேடியர் எடுத்த ஏகுபவளாயினாள்.

21. அலம்பு பாரக் குழலியொ ராயிழை
சிலம்பு மேகலை பேரொலி செய்திட
நலம்பெய் கொம்பி னடந்துவந் தெய்தினாள்
புலம்பு சேடியர் கைம்மிசைப் போயினாள்.

[அலம்பு-தேன் அலம்பும், வண்டுகள் ஒலிக்கும். நலம் பெய் கொம்பின்-அழகிய பூங்கொம்பைப்போல்.]

22. அருப்பு மென்முலை யாளங்கொ ராயிழை
இருப்பு நெஞ்சினை யேனுமோ ரேழைக்காப்
பொருப்பு வில்லைப் பொடிசெய்த புண்ணியா
கருப்பு வில்லிறுத் தாட்கொண்டு காவென்றாள்.

அங்கு, அரும்புபோன்ற மென் முலையாள் (ஆன) ஓர் ஆய் இழை, (இராமனை நோக்கி) (நீ என்பால் இரங்காது) இரும்பு போன்ற (கரியதும் கடியதுமான) நெஞ்சு உடையவனே யாயினும், (சீதையாகிய) ஓர் ஏழைக்காக (சிவனது) பொருப்பு (போன்ற) வில்லை பொடி செய்த புண்ணியனே, (என்னை வதைக்கும் மன்மதனது) கரும்பு வில்லை இறுத்து ஆள் கொண்டு கா," என்றாள். [ஆயிழை-ஆராய்ந்து எடுத்த ஆபரணங்களை அணிந்தவள். ஏழை-பெண். பொருப்பு-மலை]

குறிப்பு :—மலைபோன்ற வில்லை முறித்துச் சீதாபிராட்டியை ஆட்கொண்டதுபோல் எம்பெருமான் அருள் சுரந்துவிடத்து அரிய இடையூறு களைந்து ஆட்கொள்வரென்பதும், அவ்வருள் கொள்ளாவழி எதும் செய்ய இசையார் என்பதும், தாகம் எத்தனையாயினும் பக்தர் இவ்வருள்

பெறுவதற்கான பக்குவம் அடையும் வரையில் காத்துத் தான் இருக்கவேண்டுமென்பதும் இச்செய்யுளுடன் 32, 35, 37-வது செய்யுள்களையும் சேர்த்துப் பார்க்குங்கால் அறியலாகும்.

23. மைத வழ்ந்த கருங்கணோர் வாணுதல்
செய்த வன்றனித் தேர்மிசைச் சேறல்விட்
டெய்த வந்தெதிர் நின்றமை தானிது
கைத வங்கொல் கனவுகொ லோவென்றாள்.

ஓர், மைதவழ்ந்த கரும் கண் உடைய வாள் நுதல்—(இராமனை மன்மதனே என்று பாவித்து), "(இத்தனை பூசலையும் ஒளிந்து) செய்தவன் (ஆன மன்மதன், தனது காற்றாகிய) தனி தேர்மிசை சேறலை விட்டு (தரையில்) எய்த வந்து (எனக்கு) எதிர் நின்றமைதான் இது (அவனது) கைதவமோ, (அல்லது எனது) கனவோ!'' என்றாள். [தனி-ஒப்பற்ற. சேறல்-செல்லுதல். எய்த-நெருங்கி. கைதவம்-கபடம்]

24. மாதொ ருத்தி மனத்தினை யல்லதோர்
தூது பெற்றில ளின்னுயிர் சோர்கின்றாள்
போத ரிக்கட் பொலன் குழைப் பூண்முலைச்
சீதை பெத்தவஞ் செய்தன ளோவென்றாள்.

மாது ஒருத்தி (இராமனை அடையத் தன்) மனத்தை அல்லது (சீதைக்காகத் தூதுசென்ற தருமம் போன்ற வேறு) ஓர் தூதை பெற்றிலளாய் (தனது) இனிய உயிர் சோர்ந்து, "(தாமரை) போது (போன்றதும்) (செவந்த) அரி (படர்ந்ததுமான) கண்ணையும் பொலன் குழையையும் பூண் (அணிந்த) முலையையும் உடைய சீதை (இவனை எளிதில் பெற) எ தவம் செய்தனளோ!'' என்றாள். [பொலன்-பொன். பூண்-ஆபரணம்]

25. பழுதி லாவொரு பாவைபன் னாள்பதைத்
தழுது வெய்துயிர்த் தன்புடைத் தோழியைத்
தொழுது சோர்ந்தயர் வாளிந்தத் தோன்றலை
எழுத லாங்கொலிம் மன்மத னாலென்றாள்.

[வெய்துயிர்த்து-வெம்மையாகப் பெரு மூச்சுவிட்டு. தோன்றல்-அரசிளங் குமரன்.]

இத்துணை அழகு வாய்ந்தவன் திருமாலேயாவன் காண்.

26. வண்ண வாபொரு வாணுதன் மானிடர்க்
கெண்ணுங் காலின் விலக்கண மெய்திட
ஒண்ணு மோவொன் றுணர்த்துகின் றேனிவன்
கண்ண னேயிது கண்டிரும் பின்னென்றாள்.

[வண்ணம்-அழகிய. இலக்கணம்-லக்ஷணம். ஒண்ணுமோ-கூடுமோ. ஒன்று-ஒரு செய்தி. கண்டுஇரும்-பொறுத்துப் பார்த்தால் தெரியவரும்]

27. கனக நூபுரங் கைவளை யோடுக
மனநெ கும்படி வாடியோர் வாணுதல்
அனக னிந்நக ரெய்திய தாதியில்
சனகன் செய்த தவப்பய னாமென்றாள்.

[கனகநூபுரம்-பொன் சிலம்பு. உக-கழன்று சிந்த.]

என்கனவிலேனும் இவன் தனித்து வருவானோ

28. நனிவ ருந்தி நலங்குடி போய்விடப்
பனிவ ருங்கணோர் பாசிழை யல்குலாள்
முனிவ ருங்குல மன்னரு மொய்ப்பறத்
தனிவ ருங்கொல் கனவின் றலையென்றாள்.

[நனி-மிகவும். நலம் குடிபோய்விட-அழகு விட்டகல. பனி-நீர். பாசிழை-பசும் பொன்னாபரண மணிந்தவள். மொய்ப்பு அற-நெருங்குதல் நீங்கி.]

29. புனங்கொள் கார்மயில் போலியோர் பொற்கொடி
மனங்கொள் காதன் மறைத்தலை யெண்ணினாள்
அனங்க வேள தறிந்தன னற்றந்தான்
மனங்கள் போல முகமு மறைக்குமோ.

புனத்தை (இருப்பிடமாக) கொண்ட கார் (காலத்து) மயில்போல் வாளான ஓர் பொன் கொடி (போல்வாள்), (தன்) மனத்தில் கொண்ட காதலை மறைக்க எண்ணினாள். (ஆனால்) மனம் போல முகமும் அற்றம் மறைக்குமோ! (ஆதலால்) அனங்கவேள் அதை அறிந்தனன். (அறிந்து மேன்மேலும் பாணப் பிரயோகம் செய்தான்). [புனம்-கொல்லை. அற்றம்-இரகசியம்.]

30. இணைநெ டுங்கணொ ராயிழை யேந்துபூ
அணைய டைந்திடி கேட்ட வராவெனப்
புணர்ந லங்கிளர் கொங்கை புழுங்கிட
உணர்வ ழுங்க வுயிர்த்தன ளாவியே.

[பூ அணை-மலர்ப்பள்ளி. அரா-சர்ப்பம். புணர்-நெருங்கிய. நலம் கிளர்-அழகு சிறந்த.]

சீதை உற்ற மகிழ்ச்சி சிறிதேனும் பெறாத
இம்மாதர் எங்ஙனம் பிழைப்பார்.

31. ஆம்ப லொத்தமு தூறுசெவ் வாய்ச்சியர்
தாம்ப தைத்துயி ருட்டடு மாறுவார்
தேம்பு சிற்றிடைச் சீதையைப் போற்சிறி
தேம்பல் பெற்றில ரெங்ஙன முய்வரே.

[உயிர் உள் தடுமாறுவார்-உயிர் பதைப்பவர். தேம்பும்-மெலியும். ஏம்பல்-மகிழ்ச்சி.]

32. வேர்த்து மேனி தளர்ந்துயிர் விம்மலோ
டார்த்தி யுற்ற மடந்தைய ராரையும்
தீர்த்த னித்தனை சிந்தையிற் செங்கணிற்
பார்த்தி லன்னுட் பரிவில னேயென்றாள்.

"மேனி வேர்த்து உயிர் தளர்ந்து ஆர்த்தியோடு விம்மல் உற்ற மடந்தையர் யாரையும் (இராமனுசிய இந்த) தீர்த்தன் (தன்) சிந்தையாலாவது செம் கண்ணாலாவது இத்தனையும் பார்த்திலன். (எனவே இவன் என்ன) உள் பரிவு இலனே!" என்றாள் (அவனருளுக்குத்தான் இன்னும் பக்குவமாக வில்லை என்பதறியாத ஒருத்தி). [ஆர்த்தி-துன்பம். இத்தனையும்-சிறிதளவுகூட. உள் பரிவு-மன இரக்கம்.]

33. வையம் பற்றிய மங்கைய ரெண்ணிலர்
ஐயன் பொற்புக் களவில்லை யாதலால்
எய்யும் பொற்சிலை மாரனு மென்செய்வான்
கையம் பற்றுடை வாளினுங் கைவைத்தான்.

(இராமனுசிய) ஐயனது பொற்புக்கு அளவு இல்லை ஆதலால், (அவன் சென்ற) வையத்தை (நாணமின்றி ஆர்வமே மிகுந்து) பற்றிய மங்கையர் எண் இலர். (இடைவிடாது பூவாளி) எய்யும் பொன் சிலை உடைய மாரனும் (இனி) என் செய்வான்! கை அம்பு அற்று (முன் 18-வது செய்யுளில் சொன்னபடி இதுவரையில் இடையில் கட்டியிருந்த தாழைமடலாகிய) வாளிலும் கை வைத்தான். [பொற்பு, பொன்-அழகு. வையம்-தேர். மாரன்-மன்மதன்]

34. நான வார்குழ னாரிய ரோடலால்
வேனில் வேளொடு மேலுறை வார்களோ
டான பூச லறிந்தில மம்புபோய்
வான நாடியர் மார்பினுந் தைத்தவே.

நானம் (பூசிய) வார் குழல் (உடைய இந்த) நாரியரோடு (மாத்திரம்) அல்லாமல், வேனில் வேளுக்கு (தெய்வலோகமாகிய) மேல் உறைவார்களோடு ஆன பூசல் (எத்தன்மையது என்பதை) அறிந்திலம். (ஆனால் அவனது) அம்பு போய் வான நாடியர்களது மார்பினும் தைத்தன. (அதாவது தேவ கன்னிகைகள் நிறை யழிந்தனர் என்பதற்கு ஐயம் இல்லை). [நானம்-புழுகு. வேனில் வேள்-மன்மதன். வார்-நீண்ட. ஆன-விளைந்த. பூசல்-பகை.]

35. மருண்ம யங்கு மடந்தையர் மாட்டொரு
பொருணை யந்திலன் போகின்ற தேயிவன்
கருணை யென்பது கண்டறி யான்பெரும்
பரிணை தன்கொல் படுகொலை யானென்றாள்.

மருளால் மயங்குகின்ற மடந்தையர்மாட்டு (அவர் நன்கொடையாய் அளிக்கத் தவிக்கும் இன்பம் நலம் முதலிய) ஒரு பொருளும் நயந்திலனாய் இவன் போகின்றனனே! (இவன்தான்) பெரும் பரிணதனே! (பரிணதனாயின் தான் ஏற்காவிடினும் இவன் நலத்தை இரக்கும் எம்மனோர்க்குக் கொடாதிருப்பனோ)! (வாஸ்தவத்தில் இவன்) கருணை என்பதையே கண்டு அறியானான படுகொலையான்! என்றாள் ஒருத்தி. [மருள்-உன்மத்தம். நயந்திலனாய்-விரும்பாது. பரிணதன்-ஞானி.]

36. தொய்யில் வெய்ய முலைத்துடி போலிடை
நையும் நொய்ய மருங்குலொர் நங்கைதான்
கையு மெய்யு மறிந்திலள் கண்டவர்
உய்யு முய்யு மெனத்தளர்ந் தோய்வுற்றாள்.

தொய்யில் (தீட்டிய) வெய்ய முலையையும், துடியைப்போல் இடைநையும் மருங்குலையும் உடைய ஓர் நங்கை (இராமனது அழகைக் கண்டு அது) கை என்பதும் (அல்லது) மெய்தான் என்பதும் அறிந்திலள், (ஆனால்), "(எதுவாயிருப்பினும் இதை) கண்டவர் உய்யும் உய்யும்" என (இடைவிடாது இயம்பி) தளர்ந்து ஓய்வு உற்றாள். [தொய்யில்-மாதர் முலைக்கிடும் கோலம். வெய்ய-விருப்பத்தைத் தருகின்ற. இடை நையும்-நடுமெலிந்த. கை-ஒப்பனை, கற்பனை artificial. மெய்-இயற்கை, உண்மை real. உய்யும்-முத்திபெறுவர்.]

குறிப்பு:—பகவான் வெறும் கற்பனையோ அல்லது மெய்ப்பொருளேயோ எனத் தெளியாதவர்கூட, அவரது அனந்த கல்யாண குணங்களில் சிறிதளவு கண்டனராயின் அன்னதில் ஈடுபட்டு, மெய்யேனும் பொய்யேனும் உய்யும் வகை வேறிலதென்று துணிந்து ஏனையவரை அப்பகவான்பால் ஆற்றுப்படுத்த விழைவர். இந்நங்கையின் செய்கை அன்னதகையது.

37. பூக வூசல் புரிபவள் போலொரு
பாகின் மென்மொழி தன்மலர்ப் பாதங்கள்
சேகு சேர்தரச் சேவகன் றேரின்பின்
ஏகு மீளுமி தென்செய்த வாறரோ.

(சர்க்கரை) பாகு (போன்று இளகியதும் இனியதுமான) ஒரு மெல்லிய மொழியுடையாள், பூகத்தில் கட்டிய ஊசல் (ஆடுவதை) புரிபவள்போல், தன் மலர்போன்ற பாதங்கள் சேகு சேர்தர, (இராமனாகிய) சேவகனது தேரின் பின் (தொடர்ந்து) ஏகுவாள், (ஆனால் பயனில்லை என்று) மீளுவாள்—(ஓயாமல்) இது செய்தவாறு என்! [பூகம்-பாக்குமரம். சேகு சேர் தர-மரத்தின் வைரம்போல் காய்ப்பு அடைய. சேவகன்-வீரன். என்-எதற்காக.]

38. பெருத்த காதலிற் பேதுறு மாதரில்
ஒருத்தி மற்றங் கொருத்தியை நோக்கியென்
கருத்து மவ்வழி கண்டதுண் டோவென்றாள்
அருத்தி யுற்றபின் னாணமுண் டாகுமோ.

அருத்தி உற்ற பின் நாணம் (என்பது) உண்டாகுமோ! (உண்டாகாது, ஆதலாற்றான் போலும்) பெருத்த காதலால் பேதுறும் மாதரில் ஒருத்தி (கோபத்தோடு) மற்றொருத்தியை நோக்கி, "என்ன! (உன்) கருத்தும் (ஸ்ரீராமபிரானாகிய) அவ்வழி கண்டது உண்டோ!" என்றாள். [அருத்தி-விருப்பம். பேதுறும்-கலங்கும்.]

39. நங்கை யங்கொரு பொன்னையந் தாருய்யத்
தங்க ளின்னுயி ருங்கொடுத் தார்தமர்
எங்க ளின்னுயி ரெங்களுக் கீகிலா
வெங்க ணெங்கண் விளைந்த திவற்கென்றாள்.

அங்கு, பொன் (னிற்கு இணையான) ஒரு நங்கை, "(இவ்விராமனது) தமர், (தம்மை) நயந்தவர் உய்ய தங்களது இன்னுயிரையும் (சிபி சக்ரவர்த்தி போன்றவர்) கொடுத்துளார். (அவர் வழிப் பிறந்த இவன் இன்று) எங்களது இனிய உயிரையே, எங்களுக்கு ஈகிலாத வெம் கண் இவனுக்கு எங்கண் விளைந்தது!" என்றாள். [பொன்-இலக்குமி. ஈகிலாத-அளிக்காத. வெங்கண்-நிர்த்தாக்ஷிண்யம். எங்கண்-எவ்விடத்தில்.]

40. நாமத் தாலழி வாளொரு நன்னுதல்
சேமத் தார்வில் லிறுத்தது தேருங்கால்
தூமத் தார்குழற் றூமொழித் தோகைபால்
காமத் தாலன்று கல்வியி னாலென்றாள்,

(ஸ்ரீராமனது) நாமத்தை (பன்னிப்பன்னி) அழிவாளான ஒரு நல் நுதல்—" (சீதையின் கன்னிமைக்கு) சேமம் ஆகின்ற (வெற்றி) தார் (சூட்டிய) வில்லை (இராமன்) இறுத்தது (என்ன காரணத்தால் என்பதை) தேருங்கால், (அது) (அகில்) தூமத்து ஆர்ந்த குழலையும் தூமொழியையும் உடைய தோகை போல்வாள் (ஆன சீதையின்) பால் (உண்டாகிய) காமத்தால் அன்று. (அவனுக்கிருக்கும் தனுர்வேத) கல்வியினால் (தான்)" என்றாள். [சேமம்-காவல். தார்-மாலை. தேருங்கால்-யோசிக்குமிடத்து. ஆர்ந்த-பொருந்திய. கல்வி-இங்குக் கல்விச் செருக்கு.]

41. ஆர முந்துகி லுங்கலன் யாவையும்
சோர வின்னுயிர் சோருமோர் சோர்குழல்
கோர வில்லிமுன் னேயெனைக் கொல்கின்ற
மார வேளின் வலியவர் யாரென்றாள்.

[கோரவில்லி-அச்சத்தைத் தருகின்ற திரயம்பகம் என்னும் வில்லை வளைத்த இராமன்].

இராமன் மண்டபம் சென்றெய்தினன்.

42. மாத ரின்னன மொய்த்திட வள்ளல்போய்க்
கோதில் சிந்தை வசிட்டனுங் கோசிக
வேத பாரனு மேவிய மண்டபம்
ஏதின் மன்னர் குழாத்தொடு மெய்தினன்.

[வேத பாரன்-அந்தணன். ஏது இல்-குற்றமற்ற]

43. திருவி னாயகன் மின்றிரிந் தாலெனத்
துருவு மாமணி யாரந் துயல்வரப்
பருவ மேகம் படிந்தது போற்படிந்
திருவர் தாளு முறையி னிறைஞ்சினன்.

(எய்தி), உருவு மா மணி ஆரம், மின்திரிவதைப்போல் (மார்பில்) துயல்வர, (கார்) பருவத்து மேகம் (தரையில்) படிவதுபோல் படிந்து திருவின் நாயகன் (ஆன இராமபிரான்), (அம்முனிவர்) இருவர்தாளும் முறையின் இறைஞ்சினன். [உருவு-வடிவமைந்த. துயல்வர-அசைய. முறையின்-கிரமமாக. இறைஞ்சினன்-வணங்கினன்]

44. இறைஞ்சி யன்னவ ரேத்தின ரேவவோர்
நிறைஞ்ச பூந்தவி சேறி நிழல்கள்போல்
புறஞ்செய் தம்பிய ருட்பொலிந் தானரோ
அறஞ்செய் காவற் கயோத்தியுட் டோன்றினன்.

அறத்தை காவல் செய்தற்கு அயோத்தியுள் தோன்றினன் (ஆன இராமன்), இறைஞ்சி, அன்னவர் (அவனை) ஏத்தினர். (ஏத்தி அவர்) ஏவ ஓர் (அழகு) நிறைந்த பூ தவிசு ஏறி (தனது) நிழல்கள்போல் புறம் (நிற்றலை) செய்கின்ற தம்பியருள் பொலிந்தான். [ஏத்தினர்-புகழ்ந்தனர். பூ-பொலிவுடைய. தவிசு-ஆசநம்.]

அம்மண்டபத்தில் மீனினம் புடைசூழச் சந்திரன் வருவது
போல் தயரதன் தமரொடும் எய்தினன்.

45. ஆன மாமணி மண்டப மன்னதில்
தானை மன்னன் றமரொடுஞ் சார்ந்தனன்
மீனெ லாம்வரப் பின்வரு வெண்மதி
வானி லாவுற வந்தது மானவே.

[வான் நிலா உற-ஆகாயம் விளங்க. மான-ஒத்திருக்க]

46. வந்து மாதவர் பாதம் வணங்கிமேல்
சிந்து தேமலர் மாரி சிறந்திட
அந்த ணாளர்க ளாசியொ டாசனம்
இந்தி ரன்முக நாணுற வேறினான்.

[தேம்மலர்-தேனோடு கூடியமலர். ஆசியொடு-ஆசீர்வாதங்களுடன்.]

47. கங்கர் கொங்கர் கலிங்கர் தெலுங்கர்கள்
சிங்க ளாதிபர் சேரலர் தென்னவர்
அங்கர் சீனர் குலிந்த ரவந்திகர்
வங்கர் மாளவர் சோழர் மராடரே.

48. மான மாகதர் மச்சர் மிலேச்சர்கள்
ஏனை வீர விலாடர் விராடர்கள்
சீனர் தெங்கணர் செஞ்சகர் சோமகர்
சோன கேசர் துருக்கர் குருக்களே.

49. ஏதி யாதவ ரேழ்வகைக் கொங்கணர்
சேதி ராசர் தெலுங்கர் கருநடர்
ஆதி வானங் கவித்த வவனிவாழ்
சோதி நீண்முடி மன்னருந் துன்னினர்.

அரசாது புகழ் கொழுந்து விட்டு ஓங்குவது
போல் வெண்சாமரை பொலிந்தன.

50. நீங்க ரும்பினுந் தித்திக்கு மின்சொலார்
தாங்கு சாமரை மாடு தயங்குவ
ஓங்கி யோங்கி வளர்ந்துயர் கீர்த்தியின்
பூங்கொ ழுந்து பொலிவன போன்றவே.

[மாடு தயங்குவ-பக்கத்தில் விளங்குவன]

51. சுழலும் வண்டு மிஞிறுஞ் சுரும்புஞ்சூழ்ந்
துழலுந் தும்பியும் பம்பற லோதியர்
குழலி னோடுறக் கூறுபல் லாண்டிசை
மழலை யாழிசை யோடு மலிந்தவே.

சுழல்கின்ற வண்டும் மிஞிறும் சுரும்பும், சூழ்ந்து உழலும் தும்பியும், பம்பும் அறல் (போன்ற) ஓதியர்கள் குழலினோடு (பொருந்தி) உற அவர்கள்) கூறும் பல்லாண்டு இசை (அவர்களது) மழலை (மொழியை யொத்த) யாழின் இசையோடு மலிந்தன. [பம்பும்-மொய்க்கின்ற. அறல்-ஆற்றினடியில் காணும் கருமணல். ஓதியர்-கூந்தலையுடைய மாதர். குழல்-குழல்வாத்தியம். மலிந்தன-நிறைந்தன.]

52. வெங்கண் யானையி னான்றனி வெண்குடை
திங்க டங்கள் குலக்கொடி சீதையாம்
மங்கை மாமணங் காணிய வந்தருள்
பொங்கிப் பொங்கித் தழைப்பது போன்றதே.

வெங்கண் (பொருந்திய) யானையை உடையான் (ஆனதயாதனது) தனி வெண்குடை (விளங்குமக்காட்சியானது)—திங்கள், தங்கள் குலத்திற்கு கொடிபோல்வாள் (ஆன) சீதைஆம் மங்கையினது மா மணம் காணவந்து அருள் (மேன்மேலும்) பொங்கி பொங்கி தழைப்பது போன்றது. [வெங்கண்-குரூரம். தனி-ஒப்பற்ற. தழைப்பது-பூரிப்பது]

குறிப்பு:—ஜனகனும் சூரிய வம்சத்தவனே. மிதிலைக் காட்சிப் படலம் 76-வது செய்யுளில் குறிப்புணர்த்தியபடி, பாற்கடலில் ஒருங்கே தோன்றிய வகையில் திருமகள் திங்களுக்கு உடன் பிறந்தாளாகி இங்கவன் குலக்கொடியாய் விளங்குகின்றாள்.

53. ஊடு போர்விட மின்றியொன் றும்வகை
நீடு மாகடற் றானை நெருங்கலால்
ஆடன் மாமத வானைச் சனகர்கோன்
நாடெ லாமொரு நன்னக ராயதே.

[ஊடுபோர்இடம்-நடுவில்புகுந்துசெல்லும்இடம். ஆடல்மா-குதிரை.]

54. ஒழிந்த தென்னினி யொண்ணுத றாதைதன்
பொழிந்த காத றொடரப் பொருளெலாம்
அழிந்து வந்துகொண் டாடலி னன்புதான்
இழிந்து ளார்க்கு மிராமற்கு மொத்ததே.

ஒள் நுதல் (உடையாளாகிய சீதையின்) தாதை, தன் (உள்நின்று) பொழிந்த காதல் தொடர (தனது) பொருளெல்லாம் உவந்து (வரையில்லாது கொடுத்தலால்) அழிந்து (போமாறு விருந்தினரை) கொண்டாடலால், (அவன் காட்டிய) அன்புதான் இராமனுக்கும் இழிந்துளார்க்கும் ஒத்தது. (எனின் நாம் சொல்லாது) ஒழிந்தது (வேறு) இனி என்? [இழிந்துளார்-தாழ்ந்தவர்.]

இராமனிடத்திலிருந்த பேரன்பால் ஜனகன் இராமனைப்போலவே அவனைச் சேர்ந்தவர்களுள் மிக்க தாழ்ந்தவரையும் பாராட்டி வரவேற்றான், என்பது இச்செய்யுளின் பொருள்.

21. கோலங்காண் படலம்.

சீதாபிராட்டிக்கு மணக்கோலம் செய்த படலம்.

1. தேவியர் மருங்கு சூழ விந்திர னிருக்கை சேர்ந்த
ஓவிய முயிர்பெற் றென்ன வரசிருந்த காலைத்
தாவில்வெண் கவிகைச் செங்கோற் சனகனை யினிது நோக்கி
மாவிய னோக்கி னாளைக் கொணர்கென வசிட்டன் சொன்னான்.

[மருங்கு-பக்கத்தில். இந்திரனிருக்கை-அரசற்கமைத்த ஆசநம். ஓவியம்-சித்திரம். அரசு-தயரதன். தா இல்-பழுதற்ற. மாவிய னோக்கினாள்-மா இயல் நோக்கி-திருமகள்போன்ற பார்வையுடையவள்; மாவடு வகிர்ந்தது போன்ற கண்ணையுடையவள்; மா வியன் நோக்கி-அழகிய பெரிய பார்வையை உடையவள்.]

2. உரைசெயத் தொழுத கைய னுவந்தவுள் ளத்தன் பெண்ணுக்
கரைசியைத் தருதி ரீண்டென் றாயிழை யவரை யேவக்
கரைசெயற் கரிய காதல் கடாவிடக் கடிது சென்றார்
பிரைசமொத் தினிய சொல்லார் பேதைதா தியரிற் சொன்னார்.

(இவ்வாறு வசிஷ்டன்) உரை செய்ய, (ஜனகன்) தொழுதகையனும் உவந்த உள்ளத்தனும், "பெண்களுக்கெல்லாம் அரசி (யாகிய சீதையை) ஈண்டு தருதிர்," என்று (அவள் தோழியரான) ஆயிழையவரை ஏவ, (அவர்களும்) கரை செய்யற்கு அரிய காதல் கடாவிட கடிது சென்று பிரசம் ஒத்து இனிய சொல் ஆர்ந்த (சீதை ஆகிய) பேதையின் தாதியரிடத்தில் (இவ்விஷயத்தை) சொன்னார் [தருதிர்-அழைத்து வாருங்கள். கரைசெயற்கு-அளவு இடுவதற்கு. கடாவிட-செலுத்த. பிரசம்-தேன். ஆர்ந்த-நிறைந்த.]

3. அமிழிமைத் துணைகள் கண்ணுக் கணியென வமைக்குமாபோல்
உமிழ்சுடர்க் கலன்க ணங்கை யுருவினை மறைப்ப தோரார்
அமிழ்தினைச் சுவைசெய் தென்ன வழகினுக் கழகு செய்தார்
இமிழ்திரைப் பரவை ஞால மேழைமை யுடைத்து மாதோ.

(கண்ணை மறைத்து) அமிழும் இமை துணைகள் கண்ணுக்கு அணி என அமைக்குமாறுபோல்—சுடர் உமிழ்கின்ற கலன்கள் (சீதையாகிய) நங்கையின் உருவை மறைப்பதை ஓராது, அமிழ்தத்திற்கே (இன்னும்) சுவை செய்தென்ன (சீதையின்) அழகிற்கே (அத்தாதியர் நகைகள் பூட்டி) அழகு செய்தார்! (என்னே இது!) இமிழ்கின்ற திரைகளையுடைய பரவை (சூழ்ந்த) ஞாலம் ஏழைமை (மிகுதியும்) உடையது (அன்றோ!). [இமை துணை-இரு இமை. அணி-அழகு. சுடர் உமிழ்-ஒளி வீசும். ஓராது-உணராது. இமிழ்-ஒலிக்கும். பரவை-கடல். ஏழைமை-அறியாமை.]

4. கண்ணன்றன் னிறந்தன் னுள்ளக் கருத்தினை நிறைத்து மீதிட்
டுண்ணின்றுங் கொடிக ளோடி யுலகெங்கும் பரந்த தென்ன
வண்ணஞ்செய் கூந்தற் பார வலயத்து மழையுட் டோன்றும்
விண்ணின்ற மதியின் மென்பூஞ் சிகழிகைக் கோதை வேய்ந்தார்.

கண்ணன் தன் (கரு) நிறம் (சீதையின் நினைவை விட்டகலாததால் அவளது) உள்ள கருத்தை (எல்லாம்) நிறைத்து, மீறு இட்டு, உள் நின்றும் கொடிகளாக ஓடி (அந்நிறம்) உலகு எங்கும் பரந்தது என்ன, (சீதையின்) வண்ணம் செய் கூந்தல் பாரவலயத்தில் (சில சேடியர்), விண் நின்ற மழையுள் தோன்றும் மதியைப்போல் மெல்லிய பூவாலாகிய சிகழிகை என்னும் கோதையை வேய்ந்தார். [மீதிட்டு-மேல் எழுந்து. என்ன-போன்ற. வண்ணம்-அழகு. வலயத்தில்-வட்டத்தில். மழை-மேகம். சிகழிகைக் கோதை-வாசிகை என்னும் தலையிலணியும் வளைந்த பூமாலை.]

5. விதியது வகையால் வான மீனினம் பிறையை வந்து
கதுவுறு கின்ற தென்னக் கொழுந்தொளி கஞலத் தூக்கி
மதியினைத் தந்த மேக மருங்குநா வளைப்ப தென்னப்
பொதியிரு ளளக பந்தி பூட்டுவ பூட்டி விட்டார்.

விதி வகையால் வானத்தில் உள்ள மீன் இனம் வந்து பிறையை கதுவுறுகின்றதென்ன (நெற்றியைச் சுற்றி நவமணிகளழுத்திய) கொழுந்து (என்னும் அணியை) ஒளி கஞல தூக்கியும்; (தன்னுள் மறைந்திருந்த முழு) மதியை (புறத்தே) தந்த மேகமானது (மறுபடி அம்மதியைக் கவ்வ ஒளிக்கதிர்களாகிய) நாவை மருங்கு வளைப்பது என்ன, இருள் பொதிபோன்ற அளக பந்தியில் பூட்டுவன (ஆன ஆபரணங்களை) பூட்டியும் (சில சேடியர்) விட்டார். [கதுவுறல்-வளைத்தல். கொழுந்து-சுட்டி. கஞல-பிரகாசிக்க.]

6. வெள்ளத்தின் சடிலத் தான்றன் வெஞ்சிலை யிறுத்த வீரன்
தள்ளத்தன் னாவி சோரத் தனிப்பெரும் பெண்மை தன்னை
அள்ளிக்கொண் டகன்ற கள்ள யல்லன்கொ லாங்கொ லென்பாள்
உள்ளத்தி னூச லாடக் குழைநிழ லுமிழ விட்டார்.

"(உடல்) தள்ளவும் ஆவிசோரவும் (என்) தனி பெரும் பெண்மை தன்னை (கன்னிமாடத்தருகில் தோன்றி) அள்ளிக்கொண்டு (மண்வழி நடந்து, விலக்குவாரின்றி முனியொடு மறைய) அகன்ற கள்ள— (போல்வான்தான்), (கங்கை) வெள்ளத்து சடிலத்தான் (ஆகிய பரமசிவன்) தன் வெஞ்சிலையை இறுத்த (இந்த) வீரன் அல்லன் கொல்! ஆம் கொல்!" என்பவளாகிய சீதையினது (இந்தச் சந்தேகம் பொருந்திய) உள்ளத்தைப் போலவே ஊசலாட (காதில்) குழைகள் நிழல் உமிழ (மாட்டி) விட்டார். [தள்ள-தள்ளாட. சடிலம்-ஜடாபாரம். ஊசல்-ஊஞ்சல். நிழல்-ஒளி.]

7\. கோனணி சங்கம் வந்து குடியிருந் தனைய கண்டத்
தீனமில் கலன்க டம்மி லியைவன வணிதல் செய்தார்
மானணி நோக்கி னார்தம் மங்கலக் கழுத்துக் கெல்லாம்
தானணி யான போது தனக்கணி யாது மாதோ.

(சகல லோகத்திற்கும்) கோன் (ஆகிய திருமால் கையில்) அணிந்த சங்கமே வந்து குடிஇருந்த அனைய (சீதாபிராட்டியின்) கண்டத்தில் ஈனம் இல்லாத கலன்கள் தம்மில் இயைவனவற்றை (சேடியர்) அணிதல் செய்தார். (ஆனால், அக்கழுத்திற்குஇயைந்த அணிதான் ஒன்றுண்டோ?). மான்போன்ற அணியமைந்த நோக்கினார் (ஆகிய எல்லா மாதர்) தம் கழுத்துக்கெல்லாம் (திருமகளாகிய அவள்) தானே மங்கல அணி ஆனபோது தனக்கு அணி (என்பது) யாது! [கோன்-திருமால். மான் அணி-மான் போன்ற அழகிய. மங்கல அணி-திருமாங்கல்யம்].

8\. கோணிலா வான மீன்க ளியைவன கோத்த தென்கோ
வாணிலா வயங்கு செவ்வி வளர்பிறை வதிந்த தென்கோ
நாணிலா நகையி னின்ற நளிர்நிலாத் தவழ்ந்த தென்கோ
பூணிலா முலைமே லார முத்தையான் புகல்வ தென்னோ.

(இன்னும்) பூண்நிலாவும் (சீதையின்) முலைமேல் (அணிந்த) முத்து (ஆரத்தை யான்) என் (என்று) புகல்வேன்—கோள் நிலா வானமீன்கள் (இவைகளுள்) இயைவனவற்றை கோத்தது என்கோ! (அல்லது) வாள் நிலா வயங்கும் செவ்வி வளர்பிறை வதிந்தது என்கோ! (அல்லது, தோழியர் செய்யும் பரிகசத்தின் பொருட்டு) நாணத்தினால் ஆகும் (புன் சிரிப்புடன்) நின்ற நகையின் நளிர்நிலா தவழ்ந்தது என்கோ! [நிலாவும்-தங்கும். கோள்-கிரகம். நிலா-சந்திரன். வாள்-பிரகாசமான. செவ்வி-அழகிய. நகை-பல். நளிர் நிலா தவழ்ந்தது-குளிர்ந்த நிலவு பரவியது.]

9\. மொய்கொள்சீ றடியைச் சேர்ந்த முளரிக்குஞ் செம்மை யீந்த
தையலா ளமிழ்த மேனி தயங்கொளி தழுவிக் கொள்ள
வெய்யபூண் முலையிற் சேர்ந்த வெண்முத்துஞ் சிவந்த வென்றால்
செய்யரைச் சேர்ந்து ளாருஞ் செய்யராய்த் திகழ்வ ரன்றே.

(என்ன நிறத்தில் வெல்வையோ என) மொய் கொண்டனவாய் சேர்ந்த முளரிக்கும் (இன்னும்) செம்மையை ஈந்த சிறு அடியை உடைய தையலாள் (ஆன சீதையின்) அமிழ்தம் போன்ற (திரு) மேனியினது தயங்கும் ஒளியை தழுவிக் கொள்வதால், வெய்ய பூண் முலையில் சேர்ந்த (அந்த) வெண்முத்தும் சிவந்தன. என்றால், "செய்யவரை சேர்ந்து உள்ளாரும் செய்யவராய் திகழ்வர்" (என்பது உண்மையே) அன்றோ! [மொய்-போர். முளரி-தாமரை. வெய்ய-விருப்பத்தைத் தருகிற. செய்ய-சிவந்த, செம்மைத் தன்மை பொருந்திய.]

10. கொமையுற வீங்கு கின்ற குலிகச்செப் பனைய கொங்கைச்
சுமையுற நுடங்கு கின்ற நுசுப்பினாள் பூண்செய் தோளுக்
கிமையுற விமைக்குஞ் செங்கே ழினமணி முத்தி னோடும்
அமையுற வமைவ துண்டா மாகினொப் பாகு மன்றே.

கொம்மைஉற வீங்குகின்ற குலிக செப்பை அனைய கொங்கைகளினது சுமையால் உற நுடங்குகின்ற நுசுப்பு உடையாளது பூண் செய்த தோளுக்கு—(உவமை தேடப்புகின்), (காண்போர்) இமைஉற இமைக்கும் செம்கேழ் (வாய்ந்த) மணி இனம் முத்தோடும் உற அமைவதான அமை (ஒன்று) உண்டாம் ஆகில் (அது அத்தோளிற்கு) ஒப்பு ஆகும். [கொமையுற-திரண்டு. குலிகம்-செவப்பு. உற- மிகுதியாய். நுசுப்பு இடை. இமைஉற-கண் கூச. செம்கேழ்-செவ்வொளி. அமை-மூங்கில்]

11. தளையவிழ் கோதை யோதிச் சானகி தளிர்க்கை யென்னும்
முளரிக ளிராமன் செங்கை முறைமையிற் றீண்ட நோற்ற
அளியன கங்குற் போதுங் குவியல வாகு மென்றாங்
கிளவெயில் சுற்றி யன்ன வெரிமணிக் கடகஞ் சேர்த்தார்.

தளை அவிழ்கின்ற கோதை (சூட்டிய) ஓதியையுடைய சானகியின் தளிர் (போன்ற மிருதுவான) கை என்னும் முளரிகள், இராமனது செம் கைகளை (வேத) முறைமையில் தீண்ட நோற்றன. (ஆகையால் அவைநம்மால்) அளியன. (எனவே) (அவை, மற்றத் தாமரை மலர்களைப்போலல்லாது) கங்குல் போதிலும் குவியல ஆகும் என்று (கருதி), இளம் வெய்யிலை சுற்றியது அன்ன (அக்கைகளில்) எரிமணி கடகம் சேர்த்தார். [தளை-கட்டு. ஓதி-கூந்தல். அளியன-கொண்டாடத்தக்கன. கங்குல்-இரவு. வெயில்-சூரியன்]

12. சில்லிய லோதி கொங்கைத் திரண்மணிக் கனகச் செப்பில்
வல்லியு மனங்க வில்லு மான்மதச் சாந்திற் றீட்டிப்
பல்லிய னெறியிற் பார்க்கும் பரம்பொரு ளென்ன யார்க்கும்
இல்லையுண் டென்ன நின்ற விடையினுக் கிடுக்கண் செய்தார்.

சில் இயல் (வாய்ந்த) ஓதியை உடையவளது கொங்கைகளாகிய மணி கனக செப்பின்மேல் (சேடியர்) மான்மத சாந்தினால் (காம) வல்லியும் அனங்கன் வில்லும் (இவ்வுருவங்களைத் தொய்யிலாக) தீட்டி, (இந்தத் தொய்யில் பாரமும் கூடச்சேர)—பல இயல்கள் (வாய்ந்த சமய பேத) நெறிகளால் (தேடிப்) பார்க்கும் பரம்பொருளையே அன்ன யார்க்கும் (காட்சி பூர்வமாய்) 'இல்லை' (என்றும், அநுமான பூர்வமாய்) 'உண்டு' என்றும் நின்ற (அந்த) இடையினுக்கு (மேன்மேலும்) இடுக்கண் செய்தார். [சில் இயல் ஓதி-மெல்லிய தன்மையுடைய கூந்தல். மணி-அழகிய. மான்மதம்-கஸ்தூரி. பல் இயல்-பலவிதமாய் வேறுபட்ட தன்மை. இடுக்கண்-துன்பம்]

குறிப்பு:—கண்ணுக்குத் தோன்ருத நுண்ணிடையாதலால்—'கண்களுக்கு எட்டாக் கடவுளை ஏற்கோம்' எனக் கூறும் நாஸ்திகர்போல அதை மறுப்பாரும்; மற்று, உடலின் மேல்கீழ்ப் பாகங்களைப் பிணைக்குமோ ராதாரமின்றியமையாதாதலின் பீஜாங்குர நியாயத்தா லிறைவனுண்டெனக் கொள்ளும் ஆஸ்திகர்போல் அவ்விடையை நம்புவாரும் உளராதலின் பரம்பொருளும் சீதை இடையும் ஒன்ருயின. காணக் குறையே யன்றி யில்லா இடையன்று என்பது விளங்க இராவணனும், மாரீசன்வதைப் படலத்தில் "புடைகொண் டெழு கொங்கையுமல்குலும்புல்கி நிற்குமிடை கண்டில மல்ல தெல்லா வுருவும் தெரிந்தாம்", என இரங்குகின்றனன்.

13. நிறஞ்செய்கோ சிகநுண் தூசு நீவிநீ வாத வல்குல்
புறஞ்செய்மே கலையுந் தாழத் தாரகைச் சும்மை பூட்டித்
திறஞ்செய்கா சீன்ற சோதி பேதைசே யொளியிற் றேய்ந்து
கறங்குபு திரியத் தாமுங் கண்வழுக் குற்று நின்ருர்.

நிறம் செய்கின்ற நுண் கோசிக தூசு நீவியும், நீவாத அல்குல் புறத்தே (அழகு) செய்கின்ற மேகலை தாழவும், தாரகைச்சும்மை (என்னும் ஆபரணத்தை) பூட்டியும், (பல) திறங்கள் செய்த காசுகள் ஈன்ற சோதி, பேதை (ஆகிய சீதையின்) ஒளியில் தேய்ந்து கறங்குபு திரிய (அலங்காரம் செய்த சேடியர்)தாமும்(அக்காசுகளைப் போலவே), (பிராகசத்தினுல்) கண்வழுக்கு உற்று நின்ருர். [கோசிகம்-பட்டு. தூசு-ஆடை. நீவி-கொய்சகம். நீவாத-அகலாத. காசு-இரத்தினம். கறங்குபு-அலைந்து. கண்வழுக்குற்று-கண்ணின் ஒளிமழுங்கி]

14. ஐயவா மனிச்சப் போதி னதிகமு நொய்ய வாடற்
பையர வல்கு லாடன் பஞ்சின்றிப் பழுத்த பாதம்
செய்யபூங் கமல மன்னச் சேர்த்திய சிலம்பு சால
நொய்யவே நொய்ய வென்ருே பலபட நுவல்வ தம்மா.

'ஆடல் (செய்கின்ற) பை (உடைய) அரவு (போன்ற) அல்குலாள் (ஆன சீதை) தன் (செம்) பஞ்சு இன்றி பழுத்த பாதம், ஐய ஆகும் அனிச்சப்போதின் அதிகமும் நொய்ய, சால நொய்யவே நொய்ய' என்ருே, (அவளது கால்களாகிய) செய்ய பூம் கமலங்களில் மன்ன சேர்த்திய சிலம்புகள் பலபட நுவல்வன ! [பை-படம். அரவு-பாம்பு. பஞ்சின்றிப் பழுத்த-செம்பஞ்சு ஊட்டாமலே சிவந்த. ஐய, நொய்ய-மெல்லிய. மன்ன-அமைய.]

பிராட்டியின் கண்ணிற்கு மையிட்டனர்.

15\. நஞ்சினே டமிழ்தங் கூடி நாட்டங்க ளான வெண்ணச்
செஞ்செவே நீண்டு நீண்டு சேயரி சிதறித் தீய
வஞ்சமுங் களவு மின்றி மழையென மதர்த்த கண்கள்
அஞ்சன நிறமோ வண்ணல் வண்ணமோ வறித றேற்றும்.

[நாட்டம்-கண். சே அரி-செவ்வரி. மழை-மேகம். அறிதல் தேற்றும்-அறியோம்]

16\. மொய்வளர் குவளை பூத்த முளரியின் முளைத்த மூன்னாள்
மெய்வளர் மதியி ஞப்பண் மீனுண்டே லன்ன தேய்ப்ப
வையக மடந்தை மார்க்கு நாகர்கோ தையர்க்கும் வானத்
தெய்வமங் கையர்க்கு மேலாந் திலகத்தைத் திலகஞ் செய்தார்.

மொய் வளர்கின்ற குவளை (ஆகிய கண்களை) பூத்த முளரியில் (முகத்தில்) முளைத்ததான மெய் வளர்கின்ற மூன்னாள் மதியின் (நெற்றியின்) நாப்பண் (ஒரு விண்) மீன் உண்டேல் அன்னதை ஏய்ப்ப—வையக மடந்தைமார்க்கும் நாகர் கோதையர்க்கும் வானத் தெய்வ மங்கையர்க்கும் மேலாம் திலகம்போன்ற சீதைக்கு (சேடியர்) திலகம் செய்தார். [மொய்-வண்டு. மூன்னாள் மதி-மூன்றாம் நாள் பிறை. ஏய்ப்ப-ஒத்திருக்க. மேலாம்-சிறந்த]

17\. சின்னப்பூச் செருகு மேன்பூச் சேகரப் போது கோதில்
கன்னப்பூக் கஞல மீது கற்பகக் கொழுந்து மான
மின்னப்பூஞ் சுரும்பும் வண்டு மிஞிறுந் தும் பிகளும் பம்பும்
புன்னைப்பூந் தாது மானும் பொற்பொடி யப்பி விட்டார்.

சின்னப்பூவும், செருகுகின்ற மெல்லிய பூவும், சேகரத்திலணியும் போதும், கோது இல்லாத கன்னத்திலணியும் பூவும், கஞல (அவைகளின்) மீது—பூ சுரும்பும் வண்டும் மிஞிறும் தும்பிகளும் பம்புகின்ற புன்னைப்பூவின் தாதை மானும்—பொன் பொடியை, கற்பகத்தின் கொழுந்தை மான மின்ன, அப்பிவிட்டார். [போது-மலர். கோது-குற்றம். கஞல-விளங்க. பூ-பொலிவுடைய. பம்பும்-மொய்த்துப் பொங்கும். தாது-பராகம். மானும்-ஒக்கும். சேகரம்-உச்சி]

18\. நெய்வளர் விளக்க மாட்டி நீரொடு பூவுந் தூவித்
தெய்வமும் பராவி வேத பாரகர்க் கீந்து செம்பொன்
ஐயவி நுதலிற் சேர்த்தி வானிற வயினி சுற்றிக்
கைவளர் மயில னாளை வலஞ்செய்து காப்புமிட்டார்.

[பராவி-துதித்து. வேதபாரகர்-அந்தணர். ஐயவி-கடிப்பகையாகிய வெண்கடுகு. வால் நிற அயினி-ஒளிபொருந்திய சிவப்புநிறச் சோறு கரைத்த ஆரதி. காப்பு-ஆரத்திநீரைத்தொட்டுநெற்றியிலிடும்பொட்டு]

19. கஞ்சத்துக் களிக்கு மின்றேன் கவர்ந்துணும் வண்டு போல
அஞ்சொற்கள் கிள்ளைக் கெல்லா மருளினா ளழகை மாந்தித்
தஞ்சொற்கள் குழறித் தத்தந் தகைதடு மாறி நின்றார்
மஞ்சர்க்கு மாத ரார்க்கு மனமென்ப தொன்றே யன்றோ.

கிள்ளைக்கு எல்லாம் அம் சொற்களை (பழக்கி) அருளினவள் (ஆகிய, இவ்வாறலங்கரிப்பட்ட சீதையின்) அழகை (அவள் சேடியர் முதலாயினோரெல்லாம்) மாந்தி,—கஞ்சத்திலுள்ள களிப்பைத் தருகின்ற இனிய தேனை கவர்ந்து உண்ணும் வண்டுபோல—தம் சொற்கள் குழறி தம்தம் தகை தடுமாறி நின்றார். (நோக்குங்கால்) மஞ்சர்க்கும் மாதரார்க்கும் (அழகின் வயப்படும் தன்மையில்) மனம் என்பது (வித்தியாசமேதுவும் இன்றி) ஒன்றே அன்றோ! [கிள்ளை-கிளி. மாந்தி-பருகி. கஞ்சம்-தாமரை. தகை-இயற்கை. மஞ்சர்-ஆடவர்.]

20. இழைகுலா முலையி னாளை யிடையுவா மதியி னோக்கி
மழைகுலா மோதி நல்லார் களிமயக் குற்று நின்றார்
உழைகுலாநயனத்தார்மாட்டொன்றொன்றேவிரும்பற்கொத்த
தழகெலா மொருங்கே கண்டால் யாவரே யாற்ற வல்லார்.

[இழை குலாவும்-ஆபரணம் தங்கிய. இடைஉவாமதி-பூரணைச் சந்திரன். மழைகுலாம்-மேகம் போன்ற. உழைகுலாம்-மானின் தன்மை பொருந்திய. ஆற்ற-பொறுக்க.]

21. சங்கங்கை யுடைமை யாலுந் தாமரைக் கோயி லாலும்
எங்கெங்கும் பரந்து வெவ்வே றுள்ளத்தி னெழுதிற் றென்ன
அங்கங்கே தோன்ற லாலு மருந்ததி யனைய கற்பின்
நங்கையு நம்பி யொத்தா ளினிப் புகல்வ தென்னோ.

தாமரை கோயிலில் ஆலும், அருந்ததி அனைய கற்பின், நங்கை (ஆகிய சீதாபிராட்டி), சங்கு அம்கையில் உடைமையாலும், எங்கு எங்கும் பரந்து வெவ்வேறு உள்ளத்தில் எழுதிற்று என்ன அங்கு அங்கே தோன்றலாலும் (இராமனாகிய) நம்பியை ஒத்தாள்—(எனின்) நாம் இனி புகல்வது என்! [ஆலும்-நிர்த்தனம் செய்கின்ற. சங்கு-வளை, பாஞ்சசந்யம். 2-ம் அடி:—இராமனைக் குறிக்கும்போது, பக்தர்கள் உள்ளந்தோறும் தோன்றுபவன். சீதையைக் குறிக்கும்போது, எல்லார் கண்ணிலும் பதிந்த உருவினள்.]

22. பரந்தமே கலையுங் கோத்த பாதசா லகமு நாகச்
சிரஞ்செய்நூ புரமும் வண்டுஞ் சிலம்பொடு சிலம்பி யார்ப்பப்
புரந்தரன் கோற்கீ ழானோ ராம்பையர் புடைசூழ்ந் தென்ன
வரம்பறு மழலைத் தீஞ்சொன் மடந்தையர் தொடர்ந்து சூழ்ந்தார்.

[பாதசாலகம், நூபுரம்-காலிலணியும் அணிகள். நாகச்சிரம் செய்-நாகத்தின் தலைபோல் செய்த கடைப் பூட்டுள்ள. சிலம்பி-ஒலித்து].

23. சிந்தொடு குறளுங் கூனுஞ் சிலதியர் குழாமுஞ் தெற்றி
வந்தடி வணங்கிச் சுற்ற மணியணி விதான நீழல்
இந்துவின் கொழுந்து விண்மீ னினத்தொடும் வருவ தென்ன
நந்தலில் விளக்க மன்ன நங்கையு நடக்க லுற்றாள்.

[சிந்தர்-குறளினும் சிறிது நெடியவர். தெற்றி-சித்திர மண்டபம். இந்து-சந்திரன். நந்தல் இல்-கெடுதல் இல்லாத]

24. வல்லிமை யுயிர்த்தநில மங்கையிவள் பாதம்
மெல்லிய வுறைக்குமென வஞ்சிவெளி யெங்கும்
பல்லவ மலர்த்தொகை பரப்பின ளெனத்தன்
நல்லணி மணிச்சுடர் தவழ்ந்திட நடந்தாள்.

(சீதா பிராட்டியாகிய) வல்லிபோல்வாளை உயிர்த்த நிலமங்கை, "இவள் பாதம் மெல்லிய (ஆகையால் தரை) உறைக்கும்" என அஞ்சி, (அவள் நடக்கும்) வெளி எங்கும் பல்லவத்தோடுகூடிய மலர்த்தொகைகளை பரப்பினள் என, (அச்சீதை) தன் நல்ல அணிகளிலுள்ள மணிகளது (பலநிறப்பட்ட) சுடர்கள் (தனக்குமுன் தரையில்) தவழ்ந்துஇட (அவை மீது) நடந்தாள். [வல்லி-கொடி. உயிர்த்த-பெற்ற. உறைக்கும்-உறுத்தும். பல்லவ மலர்த்தொகை-தளிர்களோடு சேர்ந்த பூங்கொத்து.]

25. தொழுந்தகைய மென்னடை தொலைந்து களியன்னம்
எழுந்திடை விழுந்தயர்வ தென்னவய லெங்கும்
கொழுந்துடைய சாமரை குலாவவொர் கலாபம்
வழங்குநிழன் மின்னவரு மஞ்ஞையென வந்தாள்.

(தாமே நடையில் சிறந்தனவென்று) களித்த அன்னங்கள் (இவளது) மெல் நடைக்கு தொலைந்து அவளை தொழும் தகையனவாய், எழுந்தும் இடையில் விழுந்தும் அயர்வது என்ன—அயல் எங்கும் கொழுந்தை உடைய (வெண்) சாமரைகள் குலாவ, கலாபம் வழங்கும் நிழல் மின்ன வரும் ஒரு மஞ்ஞை என (சீதாபிராட்டி) வந்தாள். [களி-செருக்கிய. தொலைந்து-தோல்வியடைந்து. குலாவ-அசைய. கலாபம்-பீலிக்குடை. நிழல்-ஒளி. மஞ்ஞை-மயில்.]

26. மண்முத லனைத்துலகின் மங்கையர்க ளெல்லாங்
கண்மணி யெனத்தகைய கன்னியெழில் காண
அண்ணன்மரபிற்சுட ரருத்தியொடு தானவ்
விண்ணிழிவ தொப்பதொர் விதானநிழல் வந்தாள்.

[எழில்-அழகு. மூன்றாமடி :—இராமனது குல முதல்வனான சூரியன் விருப்பத்துடன். விதானம்-மேற்கட்டி, canopy.]

27. கற்றைவிரி பொற்சுடர் பயிற்றுறு கலாபஞ்
சுற்றுமணி புக்கவிழை மிக்கிடை துவன்றி
விற்றவழ வாணிமிர மெய்யணிகண் மின்னச்
சிற்றிடை நுடங்கவொளிர் சீறடி பெயர்த்தாள்.

கற்றையாக விரிந்த பொன் சுடர் பயில்தலை உற்ற கலாபத்தில் சுற்றும் மணிகள் புக்க இழைகள் மிக்கு இடை (யெங்கும்) துவன்றி, வில் தவழ வாள் நிமிர மெய்யிலணிந்த அணிகள் மின்ன, சிறு இடை நுடங்க (சீதை தன்) ஒளிர்கின்ற சிறு அடியை பெயர்த்து (நடந்தாள்.) [கலாபம்-இடையிலணியும் ஆபரணம். வில்-விட்டுவிட்டுப் பிரகாசிக்கும் ஒளி. வாள்-இடைவிடாது வீசும் ஒளி. நிமிர-வீச. இடை-இடம், இடுப்பு.]

28. பொன்னினொளி பூவின்வெறி சாந்துபொதி சீதம்
மின்னினிழ லன்னவடன் மேனியொளி மான
அன்னமு மரம்பைபரு மாரமிழ்து நாண
மன்னவை யிருந்தமணி மண்டப மடைந்தாள்.

[வெறி-வாசனை. சாந்துபொதிசீதம்-சந்தனத்திலுள்ள குளிர்ச்சி. மான-ஒத்திருக்க.]

29. சமைத்தவரை யின்மைமறை தானுமென லாமச்
சுமைத்திரண் முலைத்தெரிவை தூய்வடிவு கண்டார்
அமைத்திரள்கொ டோளியரு மாடவரு மெல்லாம்
இமைத்தில ருயிர்த்திலர்கள் சித்திர மெனத்தாம்.

(அதற்கென்று) சமைத்த வரை இன்மை (என்னும் தன்மையால்) "மறையேதான் (இதுவோ)" எனல் ஆகும் அ சுமை பொருந்திய திரண்ட முலைகளையுடைய (சீதையாகிய) தெரிவையின் தூய வடிவை கண்ட அமைபோன்ற திரள்கொண்ட தோளியரும் ஆடவரும் எல்லாம் (அவளழகைக் கண்டு வியந்தவர்களாய்) இமைத்து இலராய் உயிர்த்திலர்களாய் சித்திரம் என தாம் (அசைவற்று நின்றனர்). [சமைத்த-ஏற்படுத்திய. வரை-அளவு, முடிவு. மறை-வேதம். சுமை-பாரம். தெரிவை-பெண். அமை-மூங்கில். எல்லையில்லாத் தன்மையால் மறைகளும் பிராட்டியின் முலையை ஒக்குமென்பது முதலடியின் கருத்தாகும்.]

30. அன்னவளை யல்லளென வாமென வயிர்ப்பான்
கன்னியமிழ் தத்தையெதிர் கண்டகடல் வண்ணன்
உன்னுயிர் நிலைப்பதொ ரருத்தியொ டுழைத்தாண்
டின்னமிழ் தெழக்களிகொ ளிந்திரனை யொத்தான்.

அன்னவளே, (தான் கன்னிமாடத்து உம்பரில் முன் கண்டவளே இப்பொழுது இம்மண மண்டபத்திற்கு வர இருப்பவள்) அல்லளோ! (அல்லது அவள் தான்) ஆகுமோ என (இதுவரையில்) அயிர்ப்பவன் (ஆகி) (இப்பொழுது) கன்னியாகிய அமிழ்தத்தை எதிர் கண்ட கடல் வண்ணன் (ஆகிய இராமன்)—ஊனில் உயிர் நிலைப்பதாகிய ஓர் அருத்தியோடு உழைத்து ஆண்டு (பால் கடலின்) இன் அமிழ்து எழ களிகொண்ட இந்திரனை ஒத்தான். [அயிர்ப்பவன்-சந்தேகிப்பவன். உன்-ஊன்-உடல். அருத்தி-விருப்பம்.]

31. நறத்துறை முதிர்ச்சியுறு நல்லமிழ்து பில்குற்
றறத்தின்விளை வொத்துமுக டுந்தியரு குய்க்கும்
நிறத்துவ ரிதழ்க்குயி லினைப்பினிடை யல்லாற்
புறத்துமுள தோவென மனத்தொடு புகன்றான்.

(முன் இராமன் கண்ட கன்னிமாடத்து) முகடானது, நற (வாகிய) துறையில் முதிர்ச்சி உற்று, நல் அமிழ்து பில்குற்று (தான் வளர்த்த ஒரு) அறத்தின் விளைவை ஒத்து (இப்பொழுது) உந்தி (இராமனது) அருகு உய்க்கும் (சீதையாகிய) துவர் நிற இதழ் (உடைய இந்த) குயில், '(என்) நினைப்பின் இடை அல்லால் புறத்தும் உளதோ' என (இராமன் தன்) மனத்தோடு புகன்றான். [முகடு-மேன் மாடம். துறை-ஆறு. பில்குற்று-தெளித்து. உய்க்கும்-சேர்க்கும். துவர் நிறம்-பவழ நிறம்.]

32. எங்கள்செய் தவத்தினி லிராமனென வந்தோன்
சங்கினொடு சக்கர முடைத்தனி முதற்பேர்
அங்கணர சாதலினவ் வல்லிமலர் புல்லும்
மங்கையிவ ளாமென வசிட்டன்மகிழ் வுற்றான்.

[பேர் அம்கண் அரசு-பெரிய அழகிய அருளுடைய இறைவன்]

33. துன்றுபுரி கோதையெழில் கண்டுலகு சூழ்வந்
தொன்றுபுரி கோலொடு தனித்திகிரி யுய்ப்பான்
என்றுமுல கேழுமர செய்தியுளெ னேனும்
இன்றுதிரு வெய்தியதெ னக்கென நினைத்தான்.

உலகை சூழ்வந்து (ஏற்றம் தாழ்வின்றி) ஒன்றாக (ஆளுதலை) புரிகின்ற (செங்) கோலொடு தனி திகிரியை உய்ப்பவன் (ஆகிய தயரதன்), துன்றுபுரிந்த கோதையையுடைய சீதையின் எழிலை கண்டு, "உலகு ஏழும் அரசு என்றும் எய்தி உளென் எனும், (இவள் மருகியாக வாய்க்கும்) இன்றுதான் எனக்கு திரு எய்தியது" என நினைத்தான். [திகிரி உய்ப்பவன்-ஆக்ஞாசக்கரம் செலுத்துபவன். துன்றுபுரி கோதை-நெருங்கிக்கட்டிய கூந்தல்.]

34. நைவளம் நவிற்றுமொழி நண்ணவர லோடும்
வையநுகர் கொற்றவனு மாதவரு மல்லார்
கைதலை புக்கன கருத்துளது மெல்லாம்
தெய்வமென வுற்றுவுடல் சிந்தைவச மன்றே.

நைவளம் (போல்) நவிற்றும் மொழி (யாள் ஆன சீதை) நண்ண வந்ததும், வையத்தை (பிரளய காலத்தில்) நுகர்ந்த (இராமனாகிய) கொற்றவனும், மாதவரும் அல்லாராய் (அங்கிருந்த மற்ற) கருத்து உளது எல்லாம் (அவளை) தெய்வம்என உற்றனவாய் (தம்மையறியாமலே) கைகள் (கும்பிட) தலைமேல் புக்கன.—உடல் (செய்கின்ற செய்கைகள் எல்லாம்) சிந்தையின் வசம் அன்றோ! [நைவளம்-குறிஞ்சி நிலச் சிறுயாழ். நண்ண-நெருங்க]

35. மாதவரை முற்கொள வணங்கிநெடு மன்னன்
பாதமல ரைத்தொழுது கண்கள்பனி சோரும்
தாதையரு கிட்ட தவி சிற்றனி யிருந்தாள்
போதினை வெறுத்தரசர் பொன்மனை புகுந்தாள்.

(போதினை.........புகுந்தாள்-தாமரையை விட்டகன்று அரசரது அழகிய மனைகளில் புகுந்த திருவாகிய சீதை. தவிசு-ஆசநம்]

36. அச்சென நினைத்தமுத லந்தண னினைந்தான்
பச்சைமலை யொத்தபடி வத்தட லிராமன்
நச்சுடை வடிக்கண்மலர் நங்கையிவ ளென்றால்
இச்சிலை கிடக்கமலை யேழையு மிறாதோ.

(இராமனையே தனக்கு) அச்சு என நினைத்த அந்தணரில் முதல்வனான விச்வாமித்திரன்—'நஞ்சு உடைய வடித்த கண்மலர்களோடு கூடிய நங்கை (பேரழகுடைச் சீதையாகிய) இவள் என்றால், பச்சைமலையை ஒத்த படிவத்து அடல் இராமன், (எனது குறிப்பிற் கிணங்கியொடித்த) இந்த சிலை கிடக்கட்டும். (இன்னும், அன்னாளைப் பெறத் தானோ) எழு (குலகிரிகளென்னும்) மலைகளையும் இறாதோ!'' (என) நினைந்தான். [அச்சு-உயிர். வடி-நீண்ட. படிவத்து-உருவத்தை உடைய. இறாதோ-உடைக்கத்தான் மாட்டானோ.]

37. எய்யவில் வளைத்ததது மிறுத்ததது முரைத்து
மெய்விளை விடத்துமுத லையம்விட லுற்றாள்
ஐயனை யகத்துவடி வேயல புறத்தும்
கைவளை திருத்துபு கடைக்கணி னுணர்ந்தாள்.

(இருமுனிவும்) எய்ய வில் வளைத்ததும் (அதை) இறுத்ததும் (சீதைக்கு) உரைக்க, (அவள்) மெய் விளைவு இடத்து (இறுத்தவ

னிவனோ அல்லனோ எனும்) முதலில் கொண்டிருந்த ஐயத்தை விடல் உற்றாள். (பிறகு), (தன்) கை வளைகளை திருத்திக்கொள்பவள் போல் (தன்) அகத்துள் (தங்கிய) வடிவே அல்லாது புறத்தும் ஐயனை கடைக்கண்ணால் உணர்ந்தாள். [எய்ய-பொருந்த. மெய்விளைவிடத்து-உண்மை தெரிகின்றபோது. ஐயம்- சந்தேகம்.]

38. கருங்கடை நெடுங்கணொளி யாறுநிறை கண்ணப்
பெருங்கடலின் மண்டவுயிர் பெற்றினி துயிர்க்கும்
அருங்கல னணங்கரசி யாரமிழ் தனைத்தும்
ஒருங்குட னருந்தினரை யொத்துட றடித்தாள்.

(சீதையினது) நெடுங் கண்ணின் கரும் கடை ஒளியாகிய ஆறு நிறைந்த கண் (இராமனாகிய) அ பெரும் கடலில் மண்ட (அதாவது அவனது வடிவழகில் தன் பார்வையைச் செலுத்தி) உயிர் பெற்று ....தடித்தாள். [தடித்தாள்-பூரித்தாள்.]

39. கணங்குழை கருத்தினுறை கள்வனென லானான்
வணங்குவி லிறுத்தவ னெனத்துயர் மறந்தாள்
அணங்குறு மவிஞ்சைகெட விஞ்சையி னகம்பா
டுணர்ந்தறிவு முற்றுபய னுற்றவரை யொத்தாள்.

கணம் ஆகிய குழை (அணிந்த சீதை), (இதுகாறும் தன்) கருத்தின் உறைந்த கள்வன் எனல் ஆனான் (எவனோ அவனே) வணங்கும் வில்லை இறுத்தவன் என (உணர்ந்து) துயரை மறந்தவளாகி—அணங்கு உற்ற அவிஞ்சை கெட விஞ்சையின் அகம் பாட்டை உணர்ந்து அறிவு முற்றின பயனை உற்றவரை, ஒத்தாள். [கணம்-வட்டம். அணங்கு-துன்பம், அவிஞ்சை-அஞ்ஞானம். விஞ்சை-ஞானம். அகம்பாடு-உள்ளுறைப் பொருள்.]

குறிப்பு:—அவனவன் உள்ளத்திலே அநவரதம் குடிகொண்ட இறைவனை எக்காலத்தில் ஒருவன் 'அவனே' என உணர்கின்றானோ அக்காலத்திலவன் பிரம்ம ஞானியாகின்றான். அவித்தை அகலாவரையில் 'அவனல்லன்' எனமறுக்காவிடினும் 'அவனோ' என்னுமையம் போராடுகின்றது. அவித்தை நீங்கி இறைவனை அறிதற்கு அளவற்ற அன்பே காரணம். அன்பால் பிணிப்புண்ட எம்பிரான் கருத்திலே மாத்திரமன்றிப் புறத்தே சகல சிருஷ்டியிலும் தன்னைத் தோற்றுவிக்கின்றான். 37, 38, 39 ஆம் பாசுரங்கள் இந் நுட்பத்தைக் கூறாமற் கூறுகின்றன.

40. கொல்லுயர் களிற்றரசர் கோமக னிருந்தான்
கல்விகரை யுற்றமுனி கௌசிகனை மேலோய்
வல்லிபொரு சிற்றிடை மடந்தைமண நாளாம்
எல்லையி னலத்தபக லென்றுரைசெய் கென்றான்.

[வல்லிபொரு-பூங்கொடி போன்ற. எல்லையில் நலத்த பகல் என்று-அளவற்ற நன்மையைப் பயக்கும் நாள் எந்நாள்]

41. வாளையுக ளக்கயல்கள் வாவிபடி மேதி
மூளைமுது கைக்கதுவ மூரிய வரான்மீன்
பாளைவிரி யக்குதிகொள் பண்ணைவள நாடா
நாளையென வுற்றபக னற்றவ னுரைத்தான்.

"வாளை (மீன்கள்) உகள, (அதனால்) கயல்கள் வாவியில் படிகின்ற மேதியின் மூளையையும் முதுகையும் கதுவ, மூரிய வரால்மீன் (அருகிலுள்ள கமுக மரங்களில்) பாளை விரியும் வண்ணம் குதிகொள்ளும் பண்ணைவளம் (அமைந்த கோசல) நாட்டையுடைய தயரதனே, (கடிமணத்திற்கு) உற்றபகல் நாளை" என (விச்வாமித்திர) நல்தவன் உரைத்தான். [வாவி-குளம். மேதி-எருமை. மூரிய-வலிய. பண்ணை-வயல்]

42. சொற்றபொழு தத்தரசர் கைதொழ வெழுந்தான்
ஒற்றைவயி ரச்சுரிகொள் சங்கினொலி பொங்கப்
பொற்றட முடிப்புது வெயிற்பொழி தரப்போய்
நற்றவ ரநுச்சைகொடு நன்மனை புகுந்தான்.

[வயிரச்சுரிகொண்ட ஒற்றை சங்கு-வயிரப்பூணணிந்த சுரிமுகம் கொண்ட ஒப்பற்ற சங்கு. பொற்றட......போய்-பொன்னாலாகிய பெரிய கிரீடம் (இதுகாறும் இல்லாத) புதிய ஒளியை (சீதை மருகியாய் வாய்த்த பெருமையால்) பொழிய. அநுச்சை-அநுமதி]

43. அன்னமரி திற்பிரிய வண்ணலு மகன்றார்
பொன்னினெடு மாடமனை புக்கனன் மணிப்பூண்
மன்னவர் பிரிந்தனர்கள் மாதவர்கள் போனார்
மின்னுசுடர் நாயகனு மேருவின் மறைந்தான்.

[அன்னம்-சீதாபிராட்டி. மின்னுசுடர் நாயகன்-சூரியன்]

22. கடிமணப் படலம்.

1. இடம்படு புகழ்ச்சனகர் கோனினிது பேணக்
கடம்படு களிற்றரச ராதியிடை கண்டோர்
தடம்படு புயத்தசிறு தம்பியர்கள் காறும்
உடம்பொடு துறக்கநக ருற்றவரை யொத்தார்.

இடம்பட்ட புகழ் உடைய சனகர்களுக்கு கோன் (விருந்தினரை) இனிது (உபசரித்து) பேண, கடம்படும் களிறு உடைய அரசர் ஆதி, தடம்பட்ட புயத்த சிறு தம்பியர்கள் காறும், (இவர்களுக்கு) இடை கண்டோர் (யாவரும்) (தம் தம்) உடம்பொடு துறக்கநகர் உற்றவரை (சந்தோஷத்தால்) ஒத்தார். [இடம்படு-பெருகிய. கடம்-மதம். தடம் படு-விசாலமான. துறக்க நகர்-சுவர்க்கம்.]

2. தேடரு நலத்தபுன லாசைதெற லுற்றார்
மாடோர்தட முற்றதனை யெய்தும்வகை காணார்
ஈடழி வுறத்தளர்வோ டேமுறுவ ரன்றே
ஆடக வளைக்குயிலு மந்நிலைய ளானாள்.

தேடுவதற்கு அருமையான நலத்ததான புனல் ஆசையால் தெறல் உற்றவர், (தேடித் தேடிக் கடைசியில்) மாடு ஒரு தடத்தை உற்றும் (கூட) அதனை எய்தும் வகை காணாமல் (தம்) ஈடு அழிவுஉற தளர் வோடு ஏம்உறுவர் அன்றோ! ஆடகம் வளை (அணிந்த) குயில் (போன்ற சீதையும்), (இராமனைக் கண்டுமவனை எய்தப் பெறாமல்), (மேல் சொன்ன) அ நிலையள் ஆனாள். [புனல் ஆசை-நீர்த்தாகம். தெறல்-துன்பம். மாடு-அருகில். ஈடு-வலி. ஏமுறுவர்-மயங்குவர். ஆடகம்-பொன்.]

3. உரவே துமிலா ருயிரீ துமெனக்
கரவே புரிவா ருளரோ கதிரோன்
வரவே யெனையா ளுடையான் வருமே
இரவே கொடியாய் விடியா யெனுமால்.

“உரவு ஏதும் இல்லாதவர் (ஆன மாதாது) உயிரை ஈதும் என்று (சொல்லிச் சொல்லி ஆனால் கொடாமல்) கரவே (முற்றிலும்) புரிவார் (ஆன சயவரும்) உளரோ! (இல்லை, ஆதலால் பொழுது புலர்ந்து) கதிரோன் வர என்னை ஆள் உடையான் (ஆன இராமன் தவறாமல் எனக்கு உயிர் கொடுக்க) வரும். (அவ்வாறாக, ஈவது விலக்கும்) இரவே, (நீ) கொடியாய். (விடியத்தான்) விடியாயோ!” என்னும் [உரவு ஏதும்-வலி சிறிதும். ஈதும்-அளிப்போம்.]

4. கருநா யிறுபோல் பவர்கா லொடுபோய்
வருநா ளயலே வருவாய் மனனே
பெருநா ளுடனே பிரியா துழல்வாய்
ஒருநா டரியா தொழிவா ருளரோ.

"மனமே, (நீ) கருநாயிறு (ஒன்று உளதாயின் அது) போல்பவர் காலொடு (வயப்பட்டு) போய் (அங்குத் தங்கியிருந்து நாளை அவர்) வரு நாளில்(அதற்கு)அயலே வருவாய் (ஆயினையே)! (உன் ஆற்றாமையை என்னென்று சொல்வது), (இனி) பெருநாள் (அப்பாதங்களுடனே) பிரியாது உழல்வாய் (என்பது திண்ணமாயிருக்க, இந்த) ஒரு நாள் தரியாது (என்னை விட்டு) ஒழிவாரும் உளரோ." [கருநாயிறு-கரு நிறச் சூரியன். பெருநாள்-வெகுகாலம். உழல்வாய்-திரிவாய்.]

5. கனையேழ் கடல்போல் கருநா ழிகைதான்
வினையேன் வினையால் விடியா விடினீ
தனியே பறவாய் தகவே துமிலாய்
பனைமே லுறைவாய் பழிபூ ணுதியோ.

கனைக்கின்ற ஏழ்கடல்போல் கரியநாழிகை தான் (நீ) வினையேன் (ஆகிய என்னுடைய) வினையால் விடியாவிடின் (கிடக்கட்டும், அதைத் தான் ஒருவாறு சகிக்க நான்படும் கஷ்டத்திடையில்), பனை (மரத்தின்) மேல் (அகலாது) உறைவாய் (ஆகிய அன்றிலே), நீயும் (என்) தகவு ஏதும் இலாது (என்னை வருத்தும்) பழியை பூணுதியோ! (இதைவிட்டு) தனியே பறவாய். [கனை-ஒலிக்கின்ற. உறைவாய்-தங்கியிருப்ப வனே. தகவு-தகுதி. தனியேபறவாய்-வேறு இடத்திற்குத்தனியே பறந்துபோய்விடு]

6. அயில்வே லனல்கால் வனவா நிழலாய்
வெயிலே யெனநீ விரிவாய் நிலவே
செயிரே திலா ருடறேய் வுறுவார்
உயிர்கோ ளுறுவா ருளரோ வுரையாய்.

நிலவே! நீ, அயில்உடைய வேல் போன்ற அனல்கால்வன ஆகும் நிழல் ஆகி வெயிலே என விரிவாய். செயிர் ஏதும் இலாராய் உடல் தேய்வு உறுவார் (ஆகிய என்போன்ற மாதரின்)உயிரை(இரக்கமின்றி) கோள் உறுவார் (நீயன்றி வேறுயாவராயினும்) உளரோ! (இருப்பின்) உரையாய். [அயில்-கூர்மை. நிழல்-ஒளி. வெயில்-சூரியன். விரி வாய்-பரவுவாய். செயிர்-குற்றம், நோய். கோளுறுவார்-கொல்வார்.]

7. மன்றற் குளிர்வா சம்வபங் கனல்வாய்
மின்றுத் துநிலா நகைவீழ் மலபக்
குன்றிற் குலமா முழையிற் குடிவாழ்
தென்றற் புலியே யிரைதே டுதியோ.

மன்றல் பொருந்திய குளிர்ந்த வாசம் ஆகிய அனல் வயங்கும் வாயையும், மின் தொத்தும் நிலாவாகிய நகையையும் (உடையதாய்) (எல்லோரும்) வீழ்கின்ற மலயம் (என்னும்) குன்றில் குலம் மா முழையில் குடி வாழ்கின்ற தென்றல் (என்னும்) புலியே! (நீ எங்கும் திரிந்து எம்போன்ற ஏழையரின் உயிராகிய) இரை தேடுதியோ. [மன்றல்-வாசனை. வயங்கும்-விளங்கும். மின் தொத்தும்-ஒளி சேர்ந்த. நகை-பல். வீழ்-விரும்புகின்ற. மலயம்-பொதியின் மலை. குலம்-சிறந்த. முழை-குகை.]

8. தெருவே திரிவா ரொருசே வகனார்
இருபோ தும்விடா ரிதுவென் னைகொலாங்
கருமா முகில்போல் பவர்கன் னியர்பால்
வருவா ருளரோ குலமன் னவரே.

"குலமன்னவர் கன்னியர்பால் (கனியிடத்தில்) வருவார் உளரோ! (மற்று விச்வாமித்திரனுடன்) தெருவே திரிந்தவரும், (வில் இறுத்த) ஒரு சேவகனாரும், கரிய மா முகில் போல்பவரும் (ஆன இவர், இரவு பகல்) இருபோதும் (என்னை) விடார். இது என்ன (ஆச்சரியம்) கொல்." (என இராமனது நினைவின் காரணமான உரு வெளித் தோற்றத்தைக் குறித்துக் கூறினாள்.)

9. தெருளா வினைதீ யவர்சே ரலர்தோள்
அருளா நெறியோ டுமவா வதுவோ
கருளார் கடலோ கரைகா ணரிதால்
இருளா னதுதா னெனையூ ழிகொலாம்.

"(அவர்) தெருளாத வினை (உடைய) தீயவர் (பால்) சேரலர். (ஆகையால் வினையேனாகிய என்னைச் சேரார். எனினும் அவர் அருள் வள்ளலாதலால் என்னைத் தடுத்தாட்கொள்வாரெனக் கருதி எனது) அவா ஆனது அருள் ஆகும் (அவரது) தோள்நெறி ஓடும். (இந்நிலையி லிருக்கும் என்னை வருத்துகின்ற) கருள் ஆர்ந்த கடலோ கரை காண்பது அரிது. இருள் ஆனது தான் என்ன ஊழியோ! [தெருளா-நன்மை தீமையுணராத. சேரலர்-சேராதவர். அவா-ஆசை. கருள்-கறுப்பு.]

10. பண்ணோ வொழியா பகலோ புகுதா
தெண்ணோ தவிரா விரவோ விடியா
துண்ணோ யொழியா வுயிரோ வகலா
கண்ணோ துயிலா விதுவோ கடனே.

"(எனக்குத் துன்பத்தைத் தருகின்ற) பண்களோ ஒழியா, பகலோ புகுதாது. (எனது) எண்ணங்களோ தவிரா, இரவோ விடியாது, உள்ளத்திலுள்ள நோய்கள் ஒழியா, உயிரோ அகலா, கண்களோ துயிலா—இவை (எல்லாம்) கடனேயோ! [பண்-இசை. கடனேயோ-முறையோ.]

11. இடையே வளைசோ ரவெழுந் துவிழுந்
தடலேய் மதனன் சரமஞ் சினையோ
உடலோய் வுறநா ளுமுறங் கலையால்
கடலே யுரைநீ யுமொர்கன் னிகொலாம்.

"கடலே, (என்னைப்போல்) நீயும் ஓர் கன்னியோ, அடல் எய்ந்த மதனன் (எய்யும்) சரங்களுக்கு அஞ்சினையோ? உரை. (ஏனெனில் நீயும் என்னைப்போல்) இடையே வளைசோர எழுந்து விழுந்து உடல் ஓய்வுஉற நாளும் உறங்கலை." [அடல்-வலி. இடை-எனது இடை, உனது இடத்தில். வளை-எனது கைவளை, உனது சங்குகள். நாளும்-எப்பொழுதும்.]

12. எனவின் னனபன் னியிருந் துளைவாள்
துனியுன் னிநலங் கொடுசோர் வுறுகால்
மனைதன் னில்வயங் குறும்வை கிருள்வாய்
அனகன் னினைகின் றனயா மறைவாம்.

என (மேற்சொன்ன) இன்னன பன்னி இருந்து உளைவாளாகி (சீதாபிராட்டி) துனியை உன்னி (தனது) நலத்தோடு சோர்வு உறுகின்ற காலத்தில், (தானிருந்த) மனைதன்னில் வயங்குறும் வைகும் இருளில் (இராமனாகிய) அனகன் நினைக்கின்றனவற்றையும் (யாம் இனி) அறைவாம். [பன்னி-சொல்லி. உளைவாள்-வருந்துபவள். துனி-துன்பம். வயங்குறும்-விளங்கும். வைகும்-பொருந்திய. அனகன்-பரிசுத்தன்.]

இராமன் இரங்கல்.

13. முன்கண் டுமுடிப் பரும்வேட் கையினால்
என்கண் டுணைகொண் டிதயத் தெழுதிப்
பின்கண் டுமொர்பெண் கரைகண் டிலெனால்
மின்கண் டவரெங் கறிவார் வினையே.

"முன் (கன்னிமாடத்தில்) கண்டு, முடிப்பதற்கு அரிய வேட்கையினால் என் கண்களை (தூரிகைபோல்) துணையாகக் கொண்டு (அவள் உருவத்தை என்) இதயத்தில் (பதிய) எழுதி, (அவ்வுருவத்தின் அழகு அவ்வளவும் ஓவியத்தில் அமைந்ததோ என) பின்னும் (இப்பகல் மன்னவையில்) கண்டும் (கூட) ஒரு பெண் (பெற்ற அழகிற்கு) கரை கண்டிலென்.—மின்னலை கண்டவர் (அதை முடியக்காணும்) வினையை எங்கு அறிவார்! [வேட்கை-ஆசை. வினை-செய்கை.]

14. திருவே யனையாண் முகமே தெரியின்
கருவே கனியே விளைகா மவிதைக்
கெருவே மதியே யிதுவென் செய்தவா
ஒருவே னுடுநீ யுறவா கலையோ.

மதியே, (நீ) திருவே அனையாள் (ஆன சீதையின்) முகத்திற்கு (ஒப்பு) எது! (நீ) எரியின் கரு, (அதன்) கனி, (ஆனாலோ) விளைகின்ற காம விதைக்கு எரு. (அவ்வாறிருக்க என்னை வருத்துவதாகிய) இது (நீ) செய்தவாறு என்ன! (என்) ஒருவனோடு நீ உறவு ஆகலையோ! [மதி-சந்திரன். எரி-நெருப்பு.]

15. கழியா வுயிருந் தியகா ரிகைதன்
விழிபோ லவளர்ந் ததுவீ கிலதால்
அழிபோ ரிறைவன் படவஞ் சியவன்
பழிபோ லவளர்ந் ததுபா யிருளே.

"(சைனியம் தோல்வியுற்று) அழிகின்ற போரில் (தான் முனையிற் சென்று) பட அஞ்சியவன் (ஆன அச்சேனைக்கு) இறைவனது பழியைப்போல வளர்ந்தது ஆன பாய்கின்ற இருள்—கழிஆகி (என்) உயிர் (ஆகிய யாழை) உந்திய காரிகை தன் விழிபோல (கருத்து) வளர்ந்தது, வீகிலது. [பட-இறக்க. கழி-யாழைஇசைக்கும் கருவி. உந்திய-சலனம் செய்வித்த. வீகிலது-ஒடுங்குவதில்லை].

16. நினையா யொருகா னெடிதோ நெறிதான்
வினவா தவர்பால் விடைகொண் டிலையோ
புனமா னனையா ரொடுபோ யினவென்
மனனே யெனைநீ யுமறந் தனையோ.

"புனத்திலுள்ள மான் அனையார் (ஆகிய சீதை) ஒடு போயின என் மனமே, (என்னைநீ) நினையாய். (அல்லது, நீ திரும்பிவரக்காலம் தாழ்வதற்குக் காரணம்) நெறிதான் ஒருகால் நெடிதோ! (அல்லது) (அவளது அழகில் ஈடுபட்டுத் திரும்ப இசையாமல் விடை தாவென்று) வினவாது (நீ) அவர்பால் விடைகொண்டு இலையோ! (அல்லது) என்னை நீயும் மறந்தனையோ! [புனம்-கொல்லை. நெறி-வழி.]

17. தன்னோக் கெரிகா றகைவா ளரவின்
பன்னோக் கினதென் பதுபண் டுகொலாம்
என்னோக் கினுநெஞ் சினுமென் றுமுளார்
மென்னோக் கினதே கடுவல் விடமே.

"கடுவல் விடம், தன் நோக்கில் எரியை கால்கின்ற தகையுடைய வாள் (பொருந்திய) அரவின் பல்லினது (அல்லது திட்டி விடத்தைப் போல்) நோக்கினது, என்பது பண்டு கொல் (உண்மை) ஆகும். (இப்பொழுதோ அவ்விஷம்) என் நோக்கினும் நெஞ்சினும் என்றும் (அகலாது) உளார் (ஆகிய சீதையினது) மெல் நோக்கினதே (ஆகும்). [கடுவல்-கொடியவலிய. நோக்கு-பார்வை. எரிகால்-தீ வீசுகின்ற. பண்டு-பூர்வகாலம்.]

18. வல்லோர் புனைமா ளிகைவார் பொழிலோ
டெல்லா முளவா யினுமென் மனமோ
சொல்லா ரமுதின் சுவையோ டினிதாம்
எல்லோ தியர்தாம் விளையா டிடமே.

"(சிற்பம்) வல்லோர் புனைந்த மாளிகை வார்பொழில் இவைகளோடு எல்லாம் (அவளுக்கு உளவாயினும், அவைகளை எல்லாம் விட்டு) அரிய அமுதின் சுவைபோல் இனிது ஆம் சொல்லும், எல் (போன்ற) ஓதியும் உடையவர் (ஆகிய சீதை) தாம் விளையாடும் இடமோ (இப்பொழுது) என் மனமே (ஆயது). [புனைந்த-அலங்கரித்த. வார்பொழில்-நீண்ட சோலை. எல் ஓதி-இருண்ட கூந்தல்.]

19. மானவர் பெருமானும் மனநினை வினனாகத்
தேனமர் குழலாடன் றிருமண வினைநாளை
பூநகு மணிவாசம் புனைநக ரணிவீரென்
றானையின் மிசையாண ரணிமுர சறைகென்றான்.

(இராமனது நிலை அவ்வாறாக, ஜனகனாகிய) மானவர் பெருமானும், தேன் அமர்ந்த குழலாள்தன் திருமணவினை நாளை (என்பது) மனநினை வினன் ஆக, (வள்ளுவனையழைத்து) 'புனைநகரை, பூ (ஒளி) நகும்மணி வாசம் (இவைகளால்) அணிவீர் என்று ஆனையின் மிசை யாணர் அணி முரசு அறைக' என்றான். [மானவர்-புருஷர். தேன்-வண்டு. புனை-அலங்கரிப்பதற்குரிய. நகும்-வீசும். வாசம்-சீலை. யாணர் அணி முரசு-அழகிய மங்கலமுரசு.]

20. முரைசறை தலுமான முதியரு மிளையோரும்
விரைசெறி குழலாரும் விரவினர் விரைகின்றார்
உரைசெறி கிளையோடு முவகையி னுயர்கின்றார்
கரைதெரி வரிதாகு மிரவொரு கரைகண்டார்.

[மான-சிறந்த. விரை-வாசனை. விரவினர்-கலந்து]

21. அஞ்சன வொளியானு மலர்மிசை யுறைவாளும்
எஞ்சலின் மணநாளைப் புணர்குவ ரெனலோடும்
செஞ்சுட ரிருள்கீறித் தினகர னொருதேர்மேல்
மஞ்சனை யணிகோலங் காணிய வெனவந்தான்.

[அஞ்சனம்-மை. எஞ்சல்இல்-குறைவற்ற. சுடர்-கிரணங்களால். தினகரன்-சூரியன். மஞ்சன்-மைந்தனாகிய இராமன்.]

22. தோரண நடுவாருந் தூணுறை பொதிவாரும்
பூரண குடமெங்கும் புனைதுகில் வனைவாரும்
காரணி நெடுமாடங் கதிர்மணி யணிவாரும்
ஆரண மறைவாணர்க் கின்னமு தடுவாரும்.

[கார்அணி-மேகம் பொருந்திய. அடுவார்-சமைப்பார்.]

23. அன்னமென் னடையாரு மழவிடை யனையாரும்
கன்னிநன் னகர்வாழை கமுகொடு நடுவாரும்
பன்னரு நிரைமுத்தம் பரியன தெரிவாரும்
பொன்னணி யணிவாரு மணியணி புனைவாரும்.

[கன்னி-அழிவில்லாத. பன்அரு-விலைசொல்வதற்கரிய. நிரை-வரிசை. பரியன-பெரியவை.]

24. சந்தன மகிலுறுஞ் சாந்தொடு தெருவெங்கும்
சிந்தினர் திரிவாருஞ் செழுமலர் சொரிவாரும்
இந்திர தனுநாண வெரிமணி நிரைமாடத்
தந்தமில் விலையாரக் கோவைக ளணிவாரும்.

[இந்திரதனு-வானவில். எரி-பிரகாசிக்கின்ற. ஆரக்கோவை-முத்து வடம்].

25. தளங்கிளர் மணிகாலத் தவழ்சுட ருமிழ்தீபம்
இளங்குளிர் முளையார்நற் பாலிகை யினமெங்கும்
விளிம்புபொன் விரைநாற வெயிலொடு நிலவீனும்
பளிங்குடை யுயர்திண்ணைப் பத்தியின் வைப்பாரும்.

[1வது அடி பட்டைதீர்ந்த வைரம் ஒளிவீசத் தவழ்கின்ற சுடரைத் தரும் மணிவிளக்கு. விரைநாற-மெழுகிய சந்தனம் மணக்க.]

26. மந்தர மணிமாட முன்றிலின் வயினெங்கும்
அந்தமி லொளிர்முத்தி னகனிரை யொளிவீச
இந்திர னெடுவான மீனலர் குவதென்னப்
பந்தரி னிழல்வீசப் படர்வெயில் கடிவாரும்.

மந்தர (மலையொத்த) மணிமாடங்களின் முன்றிலின் வயின் எங்கும், அந்தமில்லாத ஒளிர்கின்ற முத்தின் அகன்ற நிரை ஒளி வீச, இந்திரனுக்குரிய நெடு வானம் (விண்) மீன் அலர்குவது என்ன பந்தலின் நிழல் வீச (அதனால்) படர்கின்ற வெயிலை (விழாமல்) கடிவாரும். [முன்றில்-முற்றம். வயின்-இடம். கடிவாரும்-விலக்குபவரும்.]

27. வயிரமின் னொளியீனு மரகத மணிவேதிச்
செயிரறு மொளிதீபஞ் சிலதியர் கொணர்வாரும்
வெயில்விர வியபொன்னின் மிடைகொடி மதிதோயும்
எயிலினி னடுவாரு மகிலெரி யிடுவாரும்.

[வேதி-ஓமமேடை. செயிரறும்-குற்றமற்ற. வெயில் விரவிய-பிரகாசம் பொருந்திய. மிடை-நெருங்கிய. மதி-சந்திரன். எயில்-மதில்.]

28, பண்டியி னிறைவாசப் பனிமலர் கொணர்வாரும்
தண்டலை யிலையோடு கனிபல தருவாரும்
குண்டலம் வெயில்வீசக் குரவைகள் புரிவாரும்
உண்டைகொண் மதவேழத் தோடைக ளணிவாரும்.

[தண்டலை-சோலை. குரவை-கைகளைக்கோத்தாடும் கூத்து. உண்டைகொள் மதவேழம்-நீராட்டும்பொழுது பாகன் கை வில்லுண்டையால் அடிபட்டயானை. ஓடை-முகபடாம்.]

29. கலவைகள் புனைவாருங் கலனல தெரிவாரும்
மலர்குழல் மிலைவாரும் மதிமுக மணியாடித்
திலகமு மிடுவாருஞ் சிகழிகை யணிவாரும்
இலவிதழ் பொலிகோல மெழில்பெற விடுவாரும்.

[சலன் நல-நல்ல ஆபரணங்கள். மிலைவார்-சூடுவார். ஆடி-கண்ணாடி. சிகழிகை-மாலை. 4வது அடி-இலவமலர்போன்ற அதரத்தில் விளங்குகின்ற செஞ்சாயக் கோலத்தை அழகு பெற இடுவாரும்.]

30. தப்பின மணிகாசுஞ் சங்கமு மயிலன்னார்
ஒப்பனை புரிபோது மூடலி னுகுபோதும்
துப்புறழ் நிறவாசச் சுண்ணமு முதிர்தாதும்
குப்பைக ளெனவாரிக் கொண்டன களைவாரும்.

[தப்பின-கைதவறிச் சிந்தின. மணி-முத்து. காசு-இரத்தினம். ஒப்பனை-அலங்காரம். துப்புறழ்-பவளம் போன்ற. தாது-மகரந்தம்]

31. மன்னவர் வருவாரு மறையவர் நிறைவாரும்
இன்னிசை மணியாழி னிசைமது நுகர்வாரும்
சென்னியர் திரிவாருஞ் சிலதியர் செறிவாரும்
கன்னலின் மணவேலைக் கடிகைக டெரிவாரும்.

[இசைமது-சங்கீதத் தேன். சென்னியர்-பாணர். 4வது அடி-நாழிகை வட்டிலில் விவாக வேலைகளுக்குரிய நாழிகைகளைத் தெரிவார்]

32. கணிதர்கள் தொகுவாருங் கலைபல பயில்வாரும்
பணியணி யினமுத்தம் பலவித நிலமன்னர்
அணிநெடு முடியொன்றொன் றறைதலி னுகுமம்பொன்
மணிமலை தொகுமன்னன் வாயிலின் மிடைவாரும்.

[கணிதர்-ஜோதிடர். பணியணி-வடமாகக் கோத்த. மலை தொகு-மலைபோல் குவிந்த. மிடைவார்-நெருங்குபவர்].

33. கேடகம் வெயில்வீசக் கிளரயி னிலவீனக்
கோடுயர் நெடுவிஞ்சைக் குஞ்சர மதுபோல
ஆடவர் திரிவாரு மரிவையர் களிகூர
நாடக நவில்வாரு நகையுயிர் கவர்வாரும்.

[2வது அடி-தந்தம் நிமிர்ந்த பெரிய போர் வித்தைவல்ல யானை போன்ற ஆடவர். அரிவையர்-மாதர். நாடகம்-நடனம். நகைஉயிர் கவர்வார்-புன்னகையால் ஆடவரது உயிரை அபகரிப்பவர்.]

34. கதிர்மணி யொளிகாலக் கவர்பொரு டெரியாவா
றெதிர்சுட ரதுமின்னுற் றெழுதலி னிமையோரும்
மதுவிரி குழலாரு மதிலுடை நெடுவானம்
அதுவிது வெனவோரா தலமர லுறுவாரும்.

கதிர் (வீசுகின்ற) மணிகள் ஒளியை கால (அதுபட்டுக்கண்ணைக்) கவர்கின்ற பொருள் (எதுவும்) தெரியாவாறு, அது எதிர்சுடர் மின் உற்று எழுதலின்—இமையோரும் மது விரிகுழலோர் (ஆன தேவமாதரும்) மதில் உடைய (தம்) நெடுவானம் (முன் அகன்ற) அதுவோ, (இப்பொழுதிருக்கும்) இதுவோ என ஓராது அலமரல் உறுவாரும். [கால-பிரகாசிக்க. எதிர்சுடர்-பிரதி ஒளி. வானம்-சுவர்க்கம். ஓராது-உணராது. அலமரல்-கலக்கம்.]

35. தேர்மிசை வருவாருஞ் சிவிகையில் வருவாரும்
ஊர்தியில் வருவாரு மொளிர்மணி நிறையோடைக்
கார்மிசை வருவாருங் கரிணியில் வருவாரும்
பார்மிசை வருவாரும் பண்டியில் வருவாரும்.

[சிவிகை-பல்லக்கு. ஊர்தி-வாகனம். கார்-மேகம்போன்ற யானை. கரிணி-பெண்யானை.]

36. முத்தணி யணிவாரு மணியணி முனிவாரும்
பத்தியி னிமிர்செம்பொற் பலகலன் மகிழ்வாரும்
தொத்துறு தொழின்மாலை சுரிகுழ லணிவாரும்
சித்திர நிரைதோயுஞ் செந்துகில் புனைவாரும்.

முத்து அணிகளை அணிவாரும், மணி அணிகளை (அணிந்து ஆடியில் பார்த்து இவை பொருந்த வில்லை என்று விலக்கி) முனிவாரும், பத்தியின் நிமிர்ந்த செம்பொன் கலன் பல (அணிந்து) மகிழ்வாரும், தொத்துகள் உற்ற (தொடுக்கும்) தொழில் (அமைந்த) மாலைகளை சுரிந்த குழலில் அணிவாரும், சித்திர நிரை தோய்ந்த செம்துகில் புனைவாரும். [முனிவார்-வெறுப்பவர். பத்தி, நிரை-வரிசை. தொத்து-பூங்கொத்து. துகில்-ஆடை.]

37. விடநிகர் விழியாரு மமுதெனு மொழியாரும்
கிடைபுரை யிதழாருங் கிளர்நகை யொளியாரும்
தடமுலை பெரியாருந் தனியிடை சிறியாரும்
பெடையன நடையாரும் பிடியென வருவாரும்.

[விடம்-விஷம். கிடைபுரை-செந்நெட்டியொத்த. இதழ்-அதரம். நகை-பல். பெடை அனம்-பெண்ணன்னம். பிடி-பெண்யானை.]

38. உண்ணிறை நிமிர்செல்வ மொருதுறை செலவென்றும்
கண்ணுற லரிதென்றுங் கருதுத லரிதம்மா
எண்ணுறு சுடர்வானத் திந்திரன் முடிசூட
மண்ணுறு திருநாளே யொத்தத மணநாளே.

39. கரைதெரி வரியது கனகம் வேய்ந்தது
வரையென வுயர்ந்தது மணியிற் செய்தது
நிரைவளை மணவினை நிரப்பு மண்டபம்
அரசர்த மரசனு மணுகன் மேயினான்.

[கனகம் வேய்ந்தது-பொன்தகடுபுதைத்தது. 3-வது அடி-வரிசையான வளைகளை யணிந்த சீதையின் மணவினை நிறைவேறு மண்டபம்]

40. வெண்குடை யிளநிலா விரிக்க மின்னெனக்
கண்குடை யினமணி வெயிலுங் கான்றிடப்
பண்குடை வண்டினம் பாட வாடன்மா
மண்குடை தூளிவிண் மறைப்ப வேகினான்.

[கண்குடை-கண்ணைத்துளைக்கின்ற. ஆடல்மா-குதிரை]

41. மங்கல முரசின மழையி னார்த்தன
சங்குகள் முழங்கின தாரை பொம்மெனப்
பொங்கின மறையவர் புகலு நான்மறை
கங்குலி னொலிக்குமக் கடலும் போன்றவே.

[மழை-மேகம். கங்குலின்-இரவில்]

42. பரந்ததேர் களிறுபாய் புரவி பண்ணையில்
தரந்தர நடந்தன தானை வேந்தனை
நிரந்தரந் தொழுதெழு நேமி மன்னவர்
புரந்தரன் புடைவரு மமரர் போன்றனர்.

[பண்ணை-கூட்டம். தரம்தரம்-கிரமமாக. தானை-சேனையுடைய. நிரந்தரம்-எப்பொழுதும். நேமி-சக்கிரமுடைய. புரந்தரன் புடை-இந்திரனுக்கருகில்]

43. அணையவன் மண்டப மணுகி யம்பொனிற்
புனைமணி யாசனம் பொலியத் தோன்றினான்
முனிவரு மன்னரு முறையி னேறினார்
சனகனுந் தன்கிளை தழுவ வேறினான்.

[தன்கிளை தழுவ-தனது சுற்றத்தார் சூழ.]

44. மன்னரு முனிவரு வானு ளோர்களும்
அன்னமென் னடையணங் கனைய மாதருந்
துன்னினர் துவன்றினர் சுடர்கள் சூழ்வரும்
பொன்மலை யொத்தகப் பொருவில் கூடம்.

[துன்னினர் துவன்றினர்-நெருங்கிக்கூடினர். சுடர்-சந்திரசூர்யர்கள். பொன்மலை-மேருமலை. கூடம்-மண்டபம்.]

மண்டபம் அண்டம் போன்றது.

45. புயலுள மின்னுள பொருவின் மீனுள
இயன்மணி யினமுள சுடரி ரண்டுள
மயன்முதற் றிருத்திய மணிசெய் மண்டபம்
அயன்முதற் றிருத்திய வண்ட மொத்ததே.

(மாதர் கூந்தலாகிய) புயல் உள, (இடையாகிய) மின் உள, பொருவு இல் (விண்) மீன் உள (எனும்படி) இயல் மணியினம் உள, (குண்டலங்களாகிய சூர்யசந்திர) சுடரும் இரண்டு உள. (ஆகையால்) மயன் முதல் திருத்திய (அந்த) மணிகளால் செய்த மண்டபம் அயன் முதல் திருத்திய அண்டத்தை ஒத்தது. [பொருவில்-நிகரற்ற. திருத்திய-செய்த. மயன்-தச்சன். அயன்-பிரமன்]

மண்டபம் திருமால் வயிற்றை ஒத்தது.

46. எண்டவ முனிவரு மிறைவர் யாவரும்
அண்டரும் பிறரும்புக் கடங்கிற் றாதலின்
மண்டபம் வையமும் வானும் வாய்மடுத்
துண்டவன் மணியணி யுதர மொத்ததே.

[எண்தவம்-மதித்தற்குரிய தபசு. இறைவர்-அரசர், பிரம்மருத்ரர். அண்டர்-தேவர்.]

இராமபிரான் மணக்கோலம் கொள்ளல்

47. தராதல முதலுல கனைத்துந் தள்ளுற
விராவின குவிந்தன விளம்ப வேண்டுமோ
அராவணை துறந்துபோந் தயோத்தி யெய்திய
இராகவன் செய்கையை யியம்பு வாமரோ.

[தராதலம்-பூமி. விராவின குவிந்தன-கலந்து கூடினவற்றை.]

மங்கள ஸ்நானம்.

48. சங்கினந் தவழ்கட லேழிற் றந்தவும்
சிங்கலி லருமறை தெரிந்த தீர்த்தங்கள்
கங்கையே முதலவுங் கலந்த நீரினல்
மங்கல மஞ்சன மரபி னாடினான்.

[சிங்கல் இல்-கெடுதலில்லாத. மரபின்-முறைமைப்படி.]

நாமம் ஜபித்தல்.

49. என்றுநான் முகன்முதல் யாரும் யாவையுந்
நின்றபே ரிருளினை நீக்கி நீணெறி
சென்றுமீ ளாக்குறி சேரச் சேர்த்திடு
தன்றிரு நாமத்தைத் தானுஞ் சாற்றியே.

நான் முகன் முதல் (பிரபஞ்சத்திலுள்ள) யாரும் யாவையும் (பற்றி) நின்ற (அஞ்ஞானமாகிய) பேர் இருளினை என்றுபோல் நீக்கி (முத்தியடையும்) நீள் நெறி சென்று (பிறகு பிறப்பு இறப்பு என்னும் துன்பத்திற்கு) மீளாத குறி (ஆகிய பரமபதத்தில்) சேர (ஆத்மாவை) சேர்த்திடும், தன் (அனந்தமாகிய) திருநாமத்தை தானே சாற்றி... [நீள்-உயர்ந்த. என்று-சூரியன். சேர-பொருந்த.]

குலதெய்வ வழிபாடு.

50. கோதறு தவத்துத்தன் குலத்து ளோர்தொழும்
ஆதியஞ் சோதியை யடிவ ணங்கினான்
காதியல் கயல்விழிக் கன்னி மார்களை
வேதியர்க் கருமறை விதியி னல்கியே.

(தம்) காது (அளவு) இயல்கின்ற கயல்போன்ற விழியை உடைய கன்னிமார்களை (தானமாக) வேதியர்க்கு அருமறை விதியோடு நல்கி, கோது அற்ற தவத்துடைய தன் குலத்து உளோர் தொழும் ஆதி அம் சோதியை அடி வணங்கினான். [இயல்-செல்கின்ற. வேதியர்-அந்தணர். கோது-குற்றம்.]

மேகத்தை நிலவு தழுவியதுபோல் மார்பில் சந்தனம் பூசினான்.

51. அழிவருந் தவத்தினோ டறத்தை யாக்குவான்
ஒழிவருங் கருணையோ ருருவு கொண்டென
எழுதரும் வடிவுகொண் டிருண்ட மேகத்தைத்
தழுவிய நிலவெனக் கலவை சாத்தியே.

[அழிவு அரும்-அழிதலில்லாத. ஒழிவு அரும்-நீங்காத.]

கடலில் சந்திரன் தோன்றுவதுபோல்
மயிர் முடியில் மாலைகளணிந்தான்.

52. மங்கல முழுநிலா மலர்ந்த திங்களைப்
பொங்கிருங் கருங்கடல் பூத்த தாமெனச்
செங்கிடைச் சிகழிகைச் செம்பொன் மாலையுந்
தொங்கலுந் துயல்வரச் சுழியஞ் சூட்டியே.

[மங்கலம்-பொலிவையுடைய. தொங்கல்-மாலை. துயல்வர-அசைய. சுழியம்-குடுமி.]

குண்டலம் தரித்தல்.

53. ஏதுமி லிருகுழை யிரவு நன்பகல்
காதல்கண் டுணர்ந்தன கதிருந் திங்களுஞ்
சீதைதன் கருத்தினைச் செவியி னுள்ளுறத்
தூதுசென் றுரைப்பன போன்று தோன்றவே.

இரவிலும் நன் பகலிலும் (சீதை இராமனிடத்தில் அகலாது கொண்டுள) காதலை (நேராக) கண்டு உணர்ந்தனவான திங்களும் கதிரும், (இராமனுக்கு) சீதைதன் கருத்தை (அவன்) செவியின் உள்உற தூது சென்று உரைப்பனபோன்று தோன்ற, ஏதம் இல்லாத இரு குழைகள் (இராமன் அணிந்தனன்). [கதிர்-சூரியன். ஏதம்-குற்றம்.]

54. கார்விடக் கறையுடைக் கணிச்சி வானவன்
வார்சடைப் புடையிேனோர் மதிமி லைச்சதான்
சூர்சுடர்க் குலமெலாஞ் சூடி னானென
வீரபட் டத்தொடு திலக மின்னவே.

கார்விஷத்தின் கறைய (கழுத்தில்) உடைய, கணிச்சி (ஏந்திய) வானவன் (ஆகிய சிவன்), (தன்) வார் சடையின் புடை ஓர் மதி (மாத்திரம்) மிலைச்ச, (இராமனோ) தான், சூர்கின்ற சுடர்க்குலமெல்லாம் சூடினான் என வீரபட்டமும் திலகமும் மின்னவே (அணிந்தான்). [கார்-கரிய. கணிச்சி-மழு. மிலைச்ச-அணிய. சூர்-சுழல்கின்ற.]

55. சக்கரத் தயல்வருஞ் சங்க மாமென
மிக்கொளிர் கழுத்தணி தரள வெண்கொடி
மொய்க்குமென் குழலினாண் முறுவ லுள்ளுறப்
புக்கன நிறைத்துமெய் பொடிப்ப போன்றவே.

(திருமால் ஏந்திய) சக்கரத்திற்கு அயலில் வரும் சங்கம் ஆகும் என, மிக்கு ஒளிர்கின்ற (அவன்) கழுத்தில் அணிந்த வெண்தரளக் கொடி, (வண்டுகள்) மொய்க்கின்ற மென்மையான குழலினாள் (ஆன சீதையின்) முறுவல் (இராமனது) உள்ளம் உற புக்கனவாகி (அவ்வுள்ளத்தை)

நிறைத்து (பொங்கி) மெய்யிலும் (தோன்ற) பொடிப்பன போன்றன. [தாளக்கொடி-முத்துமாலை. முறுவல்-புன்சிரிப்பு. பொடிப்பன-அரும்பின.]

56. பந்திசெய் வயிரங்கள் பொறியிற் பாடுற
அந்தமில் சுடர்மணி யழலிற் றோன்றலால்
சுந்தரத் தோளணி வலயந் தொல்லைநாள்
மந்தரஞ் சுற்றிய வரவ மானுமே.

சுந்தர தோளில் அணிந்த வலயம்—பந்தியாக செய்த வயிரங்கள் பொறியைப்போல் பாடு உற, அந்தம் இல்லாத சுடர் (பொருந்திய) மணிகள் (அதன் கண்ணாகிய) அழல்போல் தோன்றலால்—தொல்லை நாள் மந்தரகிரியை சுற்றிய (வாசுகி என்னும்) அரவம் மானும். [பாடு உற-பக்கத்தில் பொருந்தவும். வலயம்-வாகுவலயம். பொறி-புள்ளி. அரவம்-பாம்பு. மானும்-ஒக்கும்-]

57. கோவையின் பெருவட முத்தங் கோத்தன
காவல்செய் தடக்கையி னடுவட் காந்துவ
மூவகை யுலகுக்கு முதல்வ னாமென
ஏவரும் பெருங்குறி யிட்ட போன்றவே.

முத்தம் கோத்தனவான கோவையின் பெரு வடம் (சிருஷ்டியை) காவல் செய்கின்ற (இராமனது) தடம்கையின் நடுவண் காந்துவன. (அவை) மூவகை உலகுக்கும் (இவன்) முதல்வன் ஆம் என, ஏவரும் பெரும் குறி இட்டன போன்றன. [நடுவண்-நடுவில். காந்துவன-பிரகாசிப்பன. ஏ-உயர்ச்சி]

58. மாண்டபொன் மணியணி வலயம் வந்தெதிர்
வேண்டினர்க் குதவுவான் வேண்டிக் கற்பகம்
ஈண்டுதன் கொம்பிடை யீன்ற தாமெனக்
காண்டகு தடக்கையிற் கடக மின்னவே.

எதிர் வந்து வேண்டினர்க்கு (வேண்டியவற்றை) உதவவேண்டி கற்பக விருக்ஷம் ஈண்டு தன்கொம்பு (ஒன்றை) இடை ஈன்றதாம் என—மாண்ட பொன்னாலும் மணியாலும் அணி (செய்யப்பெற்ற) வலயம் (அணிந்த) காண்பதற்குத்தகுந்த (அவனது) தடம்கையில் கடகம் மின்ன (தரித்தான்). [ஈண்டு-இவ்வுலகில். கொம்பு-கிளை. மாண்ட-மாட்சிமைபொருந்திய].

59. தேனுடை மலர்மகள் திளைக்கு மார்பினில்
தானிடை விளங்கிய தகையி னாரந்தான்
மீனெடு சுடர்விட விளங்கு மேகத்து
வானிடு வில்லென வயங்கிக் காட்டவே.

தேனை உடைய மலரில் வசிக்கும் மகள் (ஆகிய இலக்குமி) திளைக்கும் (நீலநிற) மார்பினில்தான் இடைவிளங்கிய தகையின் (இரத்தின) ஆரம்தான்—மின்னொடு சுடர்விட விளங்கும் மேகத்தில் வானத்தில் இடுகின்ற வில் (ஆகிய இந்திரவில்) என வயங்கி காட்ட (இராமன் இரத்ன ஹாரம் அணிந்தான்.) [திளைக்கும்-நெருங்கிவசிக்கும். தகையின்-அழகிய. மீன்-மின்-மின்னல். வயங்கி-பிரகாசித்து.]

60. நணுகவு நிமிரவு நடக்கும் ஞானத்தார்
உணர்வினி னொளிதிக ழுத்த ரீயந்தான்
தணிவருங் கருணைதன் கழுத்திற் சாத்திய
மணியுமிழ் கதிரென மார்பிற் றோன்றவே.

[உலகவிஷயங்களில் பட்டும் பட்டாததுமாய் விவகரிக்கும் ஞானிகளது அறிவைப்போல் ஜோதிவீசுகின்ற பட்டு மேலாடை, குறைவற்ற கருணைவள்ளலாகிய இராமபிரான் கழுத்திலிட்ட முத்துவடம் வீசின பிரகாசம் என அதன்பக்கத்தில் மார்பினில்தோன்ற அணிந்தனன், என்பது இச்செய்யுளின் கருத்து.]

61. மேவருஞ் சுடரென விளங்கு மார்பினூல்
ஏவருந் தெரிந்தினி துணர்மி னீண்டெனத்
தேவரு முனிவருந் தெரிக்க லாமுதல்
மூவருந் தானென முடிந்த தொத்ததே.

மேவுஅரும் சுடர்என விளங்கும் மார்பின்நூல்—'தேவரும் முனிவரும் தெரிக்கலா முதல்மூவரும் தான்என' எவரும் தெரிந்து இனிது ஈண்டு உணர்மின் என, முடிந்தது ஒத்தது. [மேவரும்-அடைவதற்கரிய. சுடர்-கிரணம். மார்பினூல்-பூணூல். தெரிக்கலா-தெரிவிக்க இயலாத. முதல்மூவர்-மும்மூர்த்திகள்.]

62. சுற்றுநீ டணிமணிச் சோதி பொங்கமேல்
ஒற்றைமா மணியுமி ழுதர பந்தனம்
மற்றுமோ ரண்டமு மயனும் வந்தெழப்
பொற்றடந் தாமரை பூத்த தொத்ததே.

சுற்றிலும் நீள்கின்ற அணிமணியின் சோதி (நக்ஷத்திரங்களைப் போலவும் கிரகங்களைப் போலவும்) பொங்க, (அவைகளுக்கு) மேல், ஒற்றையாகிய மா மணி (யொன்று பிரமனைப்போல் சோதியை) உமிழ (ஆக்கிய) உதாபந்தனம் (என்னும் வயிற்றிலணியும் ஆபரணம்)—மற்றும் ஓர் அண்டமும் அயனும் வந்து எழ (இராமபிரானது திருஉந்தியாகிய) பொன் தடம் தாமரை பூத்ததை ஒத்தது. [பொன்-அழகிய. தடம்-பெரிய.]

கருங்கடலைப் பாற்கடல் தழுவியதுபோல் பட்டாடை தரித்தான்.

63. மண்ணுறு சுடர்மணி வயங்கித் தோன்றிய
கண்ணுறு கருங்கட லதனைக் கைவளர்
தண்ணிறப் பாற்கட றழீஇய தாமென
வெண்ணிறப் பட்டொளி விளங்கச் சாத்தியே.

[மண் உறு-கழுவப்பெற்ற. கண் உறு-பெருமை உற்ற. கைவளர்-அலங்காரம் பொருந்திய. தண்நிறம்-குளிர்ந்த வெண்ணிறம் உடைய.]

மேருசூழ்வரும் சூரியன்போல் வாள் கட்டினான்.

64. சலம்வரு தாளமுந் தயங்கு நீலமும்
அலம்வரு நிழலுமி ழும்பொற் கச்சினால்
குலம்வரு கனகவான் குன்றை நின்றுடன்
வலம்வரு கதிரென வாளும் வீக்கியே.

[சலம் வரு-நீர் பொருந்திய. அலம்வரு-அசைகின்ற. குலம், வான்-சிறந்த.]

65. முகைவிரி சுடரொளி முத்தின் பத்திவான்
தொகைவிரி பட்டிகைச் சுடருஞ் சுற்றிடத்
தகையுடை வாளெனுந் தயங்கு வெய்யவன்
நகையிள வெயிலெனத் தொங்க னாற்றியே.

முகையாக விரிகின்ற சுடர் (ஆன) ஒளியையுடைய முத்தின் பத்தியாகிய வான் தொகை விரிந்த பட்டிகையின் சுடரும் சுற்றிட (அணிந்து), தகையான உடைவாள் எனும் தயங்கு வெய்யவனது நகையாகிய இளவெயில் என (அந்தவாளின் அடியில் இரத்தின) தொங்கலும் நாற்றி. [முகை, தொகை-கூட்டம். பத்தி-வரிசை. பட்டிகை-அரைநாண். தகை-அழகு. வெய்யவன்-சூரியன். நகை-ஒளி. தொங்கல்-மணிமாலைக்குஞ்சம். நாற்றி-தொங்கவிட்டு]

66. காசொடு கண்ணிழல் கஞலக் கைவினை
ஏசறு கிம்புரி யெயிறு வெண்ணிலா
வீசலின் மகரவாய் விளங்கு மின்னென
ஆசையை யொளிகளா லளந்து காட்டவே.

காசினால் ஆகிய (அதன்) கண்களினது நிழல் கஞல, ஏசு அற்ற கைவினை (அமைந்த) கிம்புரி (அணிந்த அதன்) எயிறு வெண்நிலா வீசலால் மகரவாய் (என்னும் திறந்தவாயோடுகூடிய மீன்வடிவமான ஆபரணம்) விளங்கும் மின்னல்என ஆசைகளை (அதன்) ஒளிகளால் அளந்துகாட்ட (அணிந்தான்) [காசு-இரத்தினம். கஞல-நெரிங்கிப் பொலிய. நிழல்-ஒளி. ஏசுஅற்ற-குற்றமற்ற. கிம்புரி-அலங்காரப் பூண். எயிறு-பல். ஆசை-திசைகள்.]

67. இனிப்பரந் துலகினை யளப்ப தெங்கெனத்
தனித்தனித் தடுப்பன போலுஞ் சால்பின
நுனிப்பரு நுண்வினைச் சிலம்பு நோன்கழல்
பனிப்புறுந் தாமரைப் பாதம் பற்றவே.

நுனிப்பதற்கும் அருமையான நுண்ணிய வினை (அமைந்த) சிலம்புகள், நோன்மை பொருந்திய (வீர) கழல்கட்டிய பனிப்புஉற்ற தாமரை (மலர் போன்ற) பாதங்களை—'(மாவலிபால் பெற்று மூவுலகும் அளந்தாய்விட்டதால்) இனி, உலகினை பரந்து அளப்பது எங்கு' என தனித் தனி தடுப்பனபோலும் சால்பினவாய்—பற்ற(அணிந்தான்). [நுனிப்பு-ஆராய்தல். நுண்-நுட்பமான. நோன்மை-வலிமை. பனிப்பு-குளிர்ச்சி. பரந்து-வளர்ந்து. சால்பின-தன்மையுடையனவாய்]

68. இன்னண மொளிர்தர விமைய வர்க்கெலாம்
தன்னையே யனையதோர் கோலந் தாங்கினான்
பன்னக மணிவிளக் கழலும் பாயலுள்
அன்னவர் தவத்தினா லனந்தர் நீங்கினான்.

[முதல் இரண்டடி :—தேவர்களுக் கெல்லாம் தான் எப்படிச்சிறந்தவனோ அவ்விதமே செய்யத்தகுந்த அலங்காரங்களுக்கெல்லாம் சிறந்ததோர் அலங்காரத்தை, மேல்சொல்லிவந்த விதம் ஒளிவீசத்தாங்கினான். பன்னகம்-ஆதிசேஷனாகியபாம்பு. மணிவிளக்கு அழலும் பாயல்-மரகத மணிகள் விளக்கைப்போல்பிரகாசிக்கும் சயனம். அனந்தர்-நித்திரை]

69. முப்பரம் பொருளுக்குண் முதலை மூலத்தை
இப்பரந் துடைத்தவ ரெய்து மின்பத்தை
அப்பனை யப்பினு ளமிர்தந் தன்னையே
ஒப்பனை யொப்பனை யுரைக்க வொண்ணுமோ.

(பிரம்மா விஷ்ணு சிவன் என்னும்) மூன்று பரம்பொருள்களுக்கு முதலானவனை, (வாசுதேவனாக அமைந்த அவர்களது) மூலத்தை, இ(வ்வுலக) பாரம் துடைத்தவர் எய்தும் (பரமபதநாதனாகிய) இன்பத்தை, (திருவேங்கடத்தில் எழுந்தருளியுள்ள) அப்பனை, அப்பினுள் (பிறந்த) அமிர்தம் தன்னை ஒப்பானை, ஒப்பனைஉரைக்க (எம்மனோரால்) ஒண்ணுமோ! [துடைத்தவர்-துறந்தவர். அப்பு-கடல். ஒப்பனை-அலங்காரம். ஒண்ணுமோ-கூடுமோ]

குறிப்பு:—அப்பினுள் அமிர்தம் என்பதற்கு, நீரில் அமைந்த சுவையெனக் கொள்வதும் சிறப்புடைத்து. நம்நா அறிந்துள அறுவகைச் சுவைபோலல்லாததாலும் தெவிட்டாத் தன்மையாலும், தாகம் தணிப்பது நீரொன்றேயாதலாலும் ஈச்வரானுபவ வின்பம் நீர்ச்சுவையை ஒக்கும்.

தானங்களைச் செய்து இராமன் விவாக
மண்டபத்திற்குப் புறப்பட்டான்.

70. பல்பதி னாயிரம் பசுவும் பைம்பொனும்
எல்லையி னிலனொடு மணிகள் யாவையும்
நல்லவர்க் குதவின னவினு நான்மறைச்
செல்வர்கள் வழுத்துறத் தேர்வந் தேறினான்.

[நவிலும்-சிறப்பித்துக்கூறும். வழுத்துற-துதிக்க.]

இராமன் ஏறிய தேர் சூர்யனது தேரை ஒத்தது.

71. பொற்றிர ளச்சது வெள்ளிச் சில்லிபுக்
குற்றது வயிரத்தி னுற்ற தட்டது
சுற்றுறு நவமணி சுடருந் தோற்றத்த
தொற்றையா ழிக்கதிர்த் தேரொ டொப்பதே.

[சில்லி-சக்கரம். ஒற்றையாழி-ஒற்றைச் சக்கரம்.]

அத்தேர்க்குப் பரதன் நான்கு குதிரைகளைப் பூட்டினான்.

72. நூல்வருந் தன்மைய நுனிக்கு நோன்மைய
சால்பெருஞ் செவ்விய தரும மாதிய
நாலையு மனையன புரவி நான்கொரு
பாலமை யுணர்ந்தவன் பக்கம் பூண்டவே.

(அசுவ இலக்கண) நூல் (படி) வரும் தன்மையனவும், (எல்லோரும்) நுனிக்கும் நோன்மையனவும், சால்பெரும் செவ்வியனவும், தருமம் ஆதிய (பொருள் இன்பம் வீடு) நாலையும் அனையனவும் ஆகிய நான்கு புரவிகளை, (எல்லாம்) ஒரு பாலமை (என) உணர்ந்தவன் (ஆகிய பரதன் தேரின்) பக்கத்தில் பூட்டவும். [நுனிக்கும் நோன்மை-கருதும் பெருமை. சால்பெரும்செவ்வி-மிகவும்சிறந்தஅழகு. புரவி-குதிரை.]

குறிப்பு:—ஒரு பாலமை உணர்ந்தவன் என்பதற்கு, வேதமும், வேதாந்தத்தின் துணிபாகிய பரம்பொருளும், பஞ்சபூதங்களும், அவைதமாலாகிய சராசர சிருஷ்டி வகைகளும் எல்லாம் ஒரே தன்மையன என்று உணர்ந்தவனான பரதன், என்பது பொருள். முன் திருவவதாரப் படலம் 121-வது செய்யுளில்—'கரதல முற்றொளிர் நெல்லி கடுப்ப, விரத மறைப்பொருள் மெய் நெறிகண்ட வரதன்' இவனே.

73. அனையதோர் தேரினி லருணை னின்றெனப்
பணிவரு மலர்க்கணைப் பரதன் கோல்கொளக்
குனிசிலைத் தம்பிபின் கூட வேனையன்
இனியபொற் கவரிகா லியக்க வேகினான்.

அனையதான ஓர் தேரினில் அருணன் நின்றதைப்போல், பனி வரும் மலர்போன்ற கண்களுடைய அ பரதன் கோல்கொள்ளவும், குனிந்த சிலையுடைய (இலக்குமணனாகிய) தம்பி பின் கூடவும், ஏனையவன் (ஆன சத்ருக்நன்) இனிய பொன் கவரி கால் இயக்கவும் (இராமன்) ஏகினன். [பனிவரும்-குளிர்ந்த. சிலை-வில். கால்-காற்று.]

74. அமைவரு மேனியா னழகி னயதோ
கமையுறு மனத்தினற் கருத வந்ததோ
சமைவுற வறிந்திலந் தக்க தாகுக
இமையவ ராயின ரிங்கு ளாருமே.

(இவ்வைபவத்தைக் கண்டு) இங்கு உள்ளாரும் இமையவர் ஆயினர். (அது) அமைவதற்கு அருமையான மேனியானது அழகினால் (கண் கொட்ட ஆற்றலிலராய் இமையவர்) ஆயதோ. (அல்லது) கமை உற்ற மனத்தினால் (அவன் திவ்ய ஸ்வரூபத்தை இடைவிடாது) கருத (தாதான்மிய பாவத்தால் தேவர்களேயாகி இமையாமை) வந்ததோ! சமைவு உற அறிந்து இலம். தக்கது ஆகுக. [கமை-பொறுமை. சமைவு உற-சந்தேகமில்லாமல். தக்கது ஆகுக-எந்தக் காரணம் தக்கதோ அதுவேயாகட்டும்.]

75. வரம்பறு முலகினை வலிந்து மாய்வின்றித்
திரம்பயி லரக்கர்தம் வருக்கந் தேய்வின்று
நிரம்பிய தெனக்கொடு நிறைந்த தேவரும்
அரம்பையர் குழாத்தொடு மாடன் மேயினர்.

[வரம்பறும்-எல்லையற்ற. வலிந்து-வருத்தி. திரம்பயில்-நிலையுற்ற. வருக்கம்-வம்சம். தேய்வு இன்று நிரம்பியது-நாசம் இன்றைக்கு நிறைவேறியது. குழாம்-கூட்டம். ஆடல் மேயினர்-நடனமாடினர்.]

76. சொரிந்தனர் பூமழை சுண்ணந் தூவினர்
விரிந்தொளிர் காசுபொன் றூசு வீசினர்
பரிந்தன ரழகினைப் பருகி னர்கொலாம்
தெரிந்திலந் திருநகர் மகளிர் செய்கையே.

[காசு-இரத்தினம். தூசு-வஸ்திரம். 3வது அடி—இராமனது அழகு என்னும் மதுவை விரும்பிக் குடித்துவிட்டார்களோ?]

77. வள்ளலை நோக்கிய மகளிர் மேனியின்
எள்ளரும் பூணெலா மிரிய நிற்கின்றார்
உள்ளன யாவையு முதவிப் பூண்டவும்
கொள்ளையிற் கொள்கெனக் கொடுக்கின் றாரினே.

[எள்ளரும்-பழிப்பு அற்ற. இரிய-கழல. பூண்டவும்-அணிந்திருப்பனவற்றையும். கொடுக்கின்றாரின்-கொடுப்பவரைப்போல்]

சூரியன் மேருமலையடைவதுபோல் இராமனும்
விவாக மண்டபம் சென்றடைந்தான்.

78. எஞ்சலி லுலகத் துள்ள வெறிபடை யரசர் வெள்ளங்
குஞ்சரக் குழாத்திற் சுற்றக் கொற்றவ னிருந்த கூடம்
வெஞ்சினத் தனுவ லானு மேருமால் வரையிற் சேருஞ்
செஞ்சுடர்க் கடவு ளென்னத் தேரிடைச் சென்று சேர்ந்தான்.

[எஞ்சிலில்-குறைவற்ற. எறிபடை-எறிகின்ற ஆயுதங்களையுடைய. தனுவலான்-வில் தொழில் வல்ல இராமன்.]

79. இரதமாண் டிழிந்த பின்ன ரிருமருங் கிரண்டு கையும்
பரதனு மிளைய கோவும் பரிந்தன ரேந்தப் பைந்தார்
வரதனு மெய்தி மைதீர் மாதவர்த் தொழுது நீதி
விரதமெய்த் தாதை பாதம் வணங்கிமா டிருந்த வேலை.

[ஆண்டு-அவ்விடத்தில். இழிந்த-இறங்கிய. இளையகோ-தம்பி, இலக்குமணன். பைந்தார்-பசுமையான மாலை. வரதன்-இராமன். மைதீர்-குற்றம்தீர்ந்த. நீதிவிரதமெய்த்தாதை-ஸத்யவ்ருதமாகிய நீதியைக் கொண்ட தந்தை, தயரதன். மாடு-அருகில். வேலை-பொழுது]

80. சிலையொடு கயல்வாட் டிங்க ளேந்தியோர் செம்பொற் கொம்பர்
முலையிடை முகிழ்ப்பத் தேரின் மீமிசை முளைத்த தன்னாள்
அலைகடற் பிறந்து பின்னை யவனியிற் றோன்றி மீள
மலையிடை யுதிக்கின் றாள்போன் மண்டப மதனில் வந்தாள்.

(நெற்றியும் புருவமும் ஆகிய) சிலையும், (கண்களாகிய) கயலும் (பொருந்திய) வாள் (வீசும்) (முகமாகிய) திங்களை ஏந்தி, இடையில் முலைகள் முகிழ்ப்ப, (உருவமாகிய) ஓர் செம்பொன் கொம்பு (அல்குலாகிய) தேரின் மீமிசை முளைத்தது (ஒன்று உளதாயின் அதை) அன்னாள் (ஆகிய சீதை), அலையுடைய கடலில் பிறந்து பின் அவனியில் தோன்றி மீள மலையினிடத்தில் உதிக்கின்றவள்போல் மண்டபமதனில் வந்தாள். [முகிழ்ப்ப-அரும்ப. அன்னாள்-ஒப்பவள். மீமிசை-மேல். அவனி-பூமி]

81. நன்றிவா னவரெலா மிருந்த நம்பியைத்
துன்றிருங் கருங்கடற் றுவைப்பத் தோன்றியிம்
மன்றலங் கோதையாண் மாலை சூட்டிய
அன்றினு மின்றுடைத் தழகென் றாரரோ.

(அங்கு) இருந்த நம்பியை நன்றியுடைய வானவரெல்லாம் (கண்டு) "இருமையும் கருமையும் (உடைய பால்) கடலை துவைப்ப (அப்பொழுது) தோன்றி இந்த மன்றல் (பொருந்திய) அம் கோதையாள் மாலை சூட்டிய அன்றினும் (இம்மண்டபத்தில்) இன்று அழகு உடைத்து" என்றார். [இருமை, கருமை-பெருமை. துவைப்ப-கடைய. மன்றல்-வாசனை. கோதை-கூந்தல்.]

82. ஒலிகட லுலகினி லும்பர் நாகரிற்
பொலிவது மற்றிவள் பொற்பென் றுலிவள்
மலிதரு மணம்படு திருவை வாயினுன்
மெலிதரு முணர்வினன் விளம்பு கேனரோ.

[உம்பர்-தேவலோகத்தில். நாகர்-நாகலோகம். பொற்பு-ஐச்வரியம். மலிதரு மணம் படு திருவை-நிறைந்த திருமணத்தின் வைபவத்தை. மெலிதரும் உணர்வினன்-சிற்றறிவுடைய நான்]

83. இந்திரன் சசியொடு மெய்தி ளுனிளஞ்
சந்திர மௌலியுந் தைய லாளொடும்
வந்தனன் மலரயன் வாக்கி ளுளுடன்
அந்தரம் புகுந்த னனழகு காணவே.

[இளம் சந்திர மௌலி-பிறைச்சந்திரன் தரித்த ஜடையுடைய சிவன். வாக்கினுள்-ஸரஸ்வதி. அந்தரம்-ஆகாயம்.]

84. நீந்தருங் கடலென நிறைந்த வேதியர்
தேய்ந்தநூன் மார்பினர் சுற்றத் தொன்னெறி
வாய்ந்தநல் வேள்விக்கு வசிட்டன் மையற
ஏய்ந்தநல் தருப்பையோ டினிதி னெய்தினுன்.

[நீந்துஅரும்-நீந்திக் கடப்பதற்கு அரிய. வேள்வி-விவாகம். மை அற எய்ந்த-குற்றமில்லாது அமைந்த.]

85. தண்டிலம் விரித்துநற் றருப்பை சாத்தியே
மண்டலம் விதிமுறை வகுத்து மென்மலர்
கொண்டவை சொரிந்தெரி குழும மூட்டினன்
பண்டுள மறைநெறி பரிவிற் செய்தனன்.

[தண்டிலம்-ஹோமத்திற்கு அக்னிவளர்க்கு மிடத்தில் பரப்பும் மணல். மண்டலம்-அம்மணலின்மேல் வட்டமாக கீறும் கோடுகள். குழும-திரள. பரிவின்-விரும்பி.]

86. மன்றலின் வந்து மணித்தவி சேறி
வென்றி நெடுந்தகை வீரனு மார்வத்
தின்றுணை யன்னமு மெய்தி யிருந்தார்
ஒன்றிய போகமும் யோகமு மொத்தார்.

மன்றலின் வந்து மணி தவிசு ஏறி, வென்றி நெடும் தகை வீரனும் (அவனிடம்) ஆர்வமுடைய இனிய துணையாகிய (பிராட்டியாகிய) அன்னமும் எய்தி இருந்தார். (அப்போது அவர்) ஒன்றிய போகமும் யோகமும் ஒத்தார். [மன்றல்-மணக்கூடம். தவிசு-மணப்பலகை. ஆர்வம்-ஆசை. ஒன்றிய-சேர்ந்த].

குறிப்பு :—சகல போகங்களும் தரவல்ல பிராட்டியும் யோகரூபியாய நாராயணனும் இங்குப் பொருந்தக்கூடிய பான்மையால், சாதாரணமாய் யோகமும் போகமும் ஒன்றுடனொன்று சேராவெனும் கொள்கைக்குப் புறநடையாய் இங்கு ஒன்றிக்காட்டினர் போலும்.

87\. கோமகன் முன்சன கன்குளிர் நன்னீர்
பூமக ளும்பொரு ளுமென்ன நீயென்
மாமக டன்னொடு மன்னுதி யென்னாத்
தாமரை யன்ன தடக்கையி னீந்தான்.

சனகன், கோமகன் முன் (நின்ற, அவனது) தாமரை அன்ன தடம் கையில், "என் மா மகள் தன்னொடு நீ பூமகளும் பொருளும் என்ன மன்னுதி" என்று, குளிர்ந்த நல்நீர் ஈந்தான். [கோமகன்-அரச குமாரன். பூமகளும் பொருளும் என்ன-இலக்குமியையும் பரம்பொருளாகிய நாராயணனையும் போல். மன்னுதி-நிலைபெற்று வாழ்க]

88\. அந்தண ராசி யருங்கல மன்னார்
தந்தபல் லாண்டிசை தார்முடி மன்னவர்
வந்தனை வானவர் வாழ்த்தொலி போல
முந்திய சங்க முழங்கின மாதோ.

[அரும்கலம் அன்னார்-அருமையான யாழ்போன்ற குரலுடைய மாதர்.]

89\. வானவர் பூமழை மன்னவர் பொற்பூ
ஏனையர் தூவு மிலங்கொளி முத்தம்
தானகு நாண்மல ரென்றிவை தம்மால்
மீனகு வானின் விளங்கிய திப்பார்.

[முத்தம் தான் நகு-முத்தைப்போல் பிரகாசிக்கின்ற. நாள் மலர்-புதிய மலர். மீன் நகு-நக்ஷத்ரங்கள் விளங்குகின்ற. பார்-பூமி.]

90\. வெய்ய கனற்றலை வீரனு மந்நாள்
மைபறு மந்திர முற்றும் வழங்கா
நெய்யமை யாகுதி யாவையு நேர்ந்தான்
தையல் தளிர்க்கை தடக்கை பிடித்தான்.

[கனல் தலை-அக்கினியில். தடக்கை-தனது பெரிய கையால்.]

91\. இடம்படு தோளவ னோடியை வேள்வி
தொடங்கிய வெங்கனல் சூழ்வரு போதின்
மடம்படு சிந்தையள் மாறுபி றப்பில்
உடம்புயி ரைத்தொடர் கின்றதை யொத்தாள்.

[இடம் படு-விசாலமான. இயை-பொருந்திய. மடம்படு-மடமை தங்கிய.]

92. வலங்கொடு தீயை வணங்கினர் வந்து
பொலம்பொரி செய்வன செய்பொருண் முற்றி
இலங்கொளி யம்மி மிதித்தெதிர் நின்ற
கலங்கலில் கற்பி னருந்ததி கண்டார்.

தீயை வலம் கொண்டு வணங்கி வந்து, பொலம் பொரி (இடுதல் போன்ற) செய்வனவாகிய செய்பொருள் (எல்லாம்) முற்றி, இலங்குகின்ற ஒளி பொருந்திய அம்மியை மிதித்து, (அவர்களுக்கு) எதிரில் (நக்ஷத்திரமாயல்லாது வடிவுடன்) நின்ற கலங்கல் இல்லாத கற்போடு கூடிய (வசிட்டாது தேவியாகிய) அருந்ததியை கண்டார். [பொலம்-பொன், அழகிய. கலங்கலில்-கலங்காத.]

93. மற்றுள செய்வன செய்து மகிழ்ந்தார்
முற்றிய மாதவர் தாண்முறை சூடிக்
கொற்றவ னைக்கழல் கும்பிட லோடும்
பொற்றொடி கைக்கொடு நன்மனை புக்கான்.

[தாள்முறை சூடி-தாள்களை முறையாக வணங்கி. பொன் தொடி-பொன் வளை யணிந்த சீதை. நல்மனை-தனது கிரஹம்.]

94. ஆர்த்தன பேரிக ளார்த்தன சங்கம்
ஆர்த்தன நான்மறை யார்த்தனர் வானோர்
ஆர்த்தன பல்கலை யார்த்தன பல்லாண்
டார்த்தன வண்டின மார்த்தன வேலை.

[பல்கலை-பல சாஸ்திரங்கள். வேலை-எல்லை, திசைகள்.]

95. கேகயன் மாமகள் கேழ்கிளர் பாதம்
தாயினு மன்பொடு தாழ்ந்து வணங்கி
ஆயத னன்னை யடித்துணை சூடித்
தூய சுமித்திரை தாடொழ லோடும்.

[கேழ்கிளர்-ஒளி வீசுகின்ற. தாடொழல்-தாளைத் தொழல்.]

96. அன்னமு மன்னவ ரம்பொன் மலர்த்தாள்
சென்னி புனைந்தனள் சிந்தை யுவந்தார்
கன்னி யருந்ததி காரிகை காண
நன்மக னுக்கிவ ணல்லணி யென்றார்.

(சீதையாகிய) அன்னமும், (தன் மாமியர்களான) அன்னவர் அம் பொன் மலர் (போன்ற) தாள்களை சென்னியில் புனைந்தனள்; (அவர்கள்) சிந்தை உவந்தார். கன்னி அருந்ததி (அம்மை), (சீதையாகிய) காரிகையை கண்டு "(இராமனாகிய) நல்ல மகனுக்கு இவள் நல் அணி" என்றார். [சென்னி-தலை. கன்னி-கற்பழிவில்லாத. காரிகை-கட்டழகி. 4-வது அடி. நம் அழகனுக்கு அழகு செய்யக்கூடியவள் இவளே, என்பது கருத்து.]

97. சங்க வளைக்குயி லைத்தழி நின்றார்
அங்கண னுக்குரி யாருள ராவார்
பெண்க ளினிப்பிற ரெங்குள ரென்றார்
கண்கள் களிப்ப மனங்கள் களிப்பார்.

(தயரதனுகிய) அம் கண்ணனுக்கு உரியாராய் உளர் ஆவார் (ஆன அவனது அறுபதினுயிரம் பெண்டிரும்), சங்கவளை (அணிந்த) குயில் போன்ற சீதையை தழிநின்று, கண்கள் களிப்ப மனங்கள் களிப்ப, "(இவளைப் பார்த்த பிறகு) பெண்கள் (என்று சொல்லத் தகுந்தவர்) இனி பிறர் எங்கு உளர்!" என்றார். [தழி-தழுவி.]

98. எண்ணில கோடிபொன் னெல்லையில் கோடி
வண்ண வருங்கல மங்கையர் வெள்ளம்
கண்ணக னுடொடு காசுயர் தூசும்
பெண்ணி னணங்கனை யாள்பெறு கென்றார்.

(அங்கிருந்தவர்களெல்லாம்), பெண்ணின் அணங்கு அனையாளே, (நீ) எண் இலாத கோடி பொன்னும், அரும் கலம் (பூட்டி அலங்கரிக்கும்) வண்ண மங்கையர் எல்லையிலாத கோடி வெள்ளமும், கண் அகன்ற நாடும், காசும், உயர்ந்த தூசும், (நன்கொடையாகக் கொடுத்த இவைகளை) பெறுக" என்றார். [கண்-இடம்.]

99. நூற்கட லன்னவர் சொற்கட னோக்கி
மாற்கட லன்ன மனத்தவ ளோடுங்
காற்கடல் போற்கரு ணைக்கடல் பண்டைப்
பாற்கட லன்னதொர் பாய லணைந்தான்.

கால் (பொருந்திய) கடல்போல் கருணைகடல் (ஆகிய இராமன்)—நூல் (அறிவிலே) கடல் அன்னவர் (ஆன முனிவர்களது) சொல்கடன் நோக்கி, மால் கடல் அன்ன மனத்தவள் (ஆன சீதை) ஒடு—பண்டை பால் கடல் அன்னது (ஆன) ஓர் பாயல் அணைந்தான். [கால்-வலிமை. சொல் கடன் நோக்கி-சொல்லிய விதிகளை அனுசரித்து. பால்-வேட்கை. பண்டை-முன் விட்டு நீங்கிய. பாயல்-சயனம்.]

100. பங்குனி யுத்தர மான பகற்போ
தங்க ணிருக்கினி லாயிர நாமச்
சிங்க மணத்தொழில் செய்த திறத்தால்
மங்கல வங்கி வசிட்டன் வகுத்தான்.

[அங்கண்.........மணத்தொழில்-அவ்விடத்தில், வேதத்தில் ஆயிரம் நாமம் உடைய சிங்கம்போன்ற இராமனது மணவினை. மங்கலஅங்கி-மங்களகரமான அக்கி.]

101. வள்ள றனக்கிளை யோர்க டமக்கும்
எள்ளலில் கொற்றவ னெம்பி யளித்த
அள்ளன் மலர்த்திரு வன்னவர் தம்மைக்
கொள்ளு மெனத்தம ரோடு குறித்தான்.

(பிறகு), எள்ளல் இல்லாத கொற்றவன் (ஆன சனகன், தயரதனை நோக்கி) "எம்பி (ஆகிய குசத்துவசன் பெற்று) அளித்த அள்ளலில் முளைக்கின்ற (தாமரை) மலரில் வசிக்கும் திரு அன்னவர்தம்மை, (இராமனாகிய) வள்ளல்தனக்கு இளையோர்கள் தமக்கும் (விவாகம் செய்து) கொள்ளும்" என தமரோடு குறித்தான். [எள்ளல்-குற்றம். அள்ளல்-சேறு. எம்பி, இளையோர்-தம்பி. குறித்தான், நிச்சயித்தான்].

102. கொய்ந்நிறை தாரன் குசத்துவ சப்பேர்
நெய்ந்நிறை வேலவன் மங்கையர் நேர்ந்தார்
மைந்நிறை கண்ணியர் வானுறை நீரார்
மெய்ந்நிறை மூவரை மூவரும் வேட்டார்.

கொய்த நிறை தாரனும், குசத்துவசன் (என்னும்) பேர் உடையவனும், நெய் நிறைந்த வேலவனும் ஆகிய அவனுடைய மங்கையர் (அதற்கு) நேர்ந்தார். (எனவே அந்த) மை நிறைந்த கண்ணியரும் வானில் உறையும் நீராரும் (ஆகிய மாண்டவி, ஊர்மிளை சுருதகீர்த்தி) மூவரும், மெய்நிறைந்த (பரத லக்ஷ்மண சத்ருக்னர்) மூவரை (முறையே) வேட்டார். [கொய் நிறை தாரன்-ஆய்ந்தநிறையொடு கூடிய மனைவியை யுடையவன். நீரார்-தன்மையுடையவர்.]

103. வேட்டவர் வேட்டபின் வேந்தனு மேனாள்
கூட்டிய சீர்த்தி கொடுத்தில னல்லால்
ஈட்டிய மெய்ப்பொரு ளுள்ளன வெல்லாம்
வேட்டவர் வேட்டவை வேண்டள வீந்தான்.

வேட்டவர் வேட்டபின் (ஜனக) வேந்தனும், மேல்நாள் கூட்டிய சீர்த்தியை (அதைக் கொடுக்க இயலாதாகையால்) கொடுத்திலன் (ஆகையால் அது) அல்லாது ஈட்டிய மெய்ப்பொருள் (அவனிடத்தில்) உள்ளன எல்லாம் வேட்டவர் வேட்டவைகளை (அவர்) வேண்டு அளவு ஈந்தான். [வேட்டவர் வேட்டபின்-விவாகம்செய்து கொண்டவர்களெல்லாம் விவாகம்செய்து கொண்டபின். சீர்த்தி-புகழ். வேட்டவர் வேட்டவை-விரும்பினவர்களுக்கு விரும்பினவற்றை.]

104. ஈய்ந்தள வில்லதொ ரின்ப நுகர்ந்தே
ஆய்ந்துணர் கேள்வி யருந்தவ ரோடும்
வேந்தனு மந்நகர் வைகினன் மெள்ளத்
தேய்ந்தன நாள்சில செய்த துரைப்பாம்.

(தயரத) வேந்தனும் (அவ்வாறே) ஈந்து, அளவு இல்லாத ஓர் இன்பம் நுகர்ந்து, ஆய்ந்து உணர்ந்த கேள்வியரான அருந்தவரோடும், அ (மிதிலை) நகர் வைகினன். நாள் சில மெள்ள தேய்ந்தன. (பிறகு) செப்பதும் உரைப்போம். [தேய்ந்தன-கழிந்தன.]

---

23. பரசுராமப் படலம்.

1. தானுவதோர் வகையேநனி சனகன்குயி லுடனே
நானுவித வருபோகமு நுகர்கின்றவந் நாள்வாய்
ஆனுமறை நெறியாசிகண் முனிகோசிக னருளிப்
போனுன்வட திசைவாயுயர் பொன்மால்வரை புக்கான்.

(இராமனுகிய) தான் (எடுத்த அவதாரத்திற்கு ஏற்றது) ஆவது ஆன ஓர் வகையே, சனகன் (தந்த) குயில் (போன்ற சீதை) உடனே, நானுவித அரிய போகமும் நனி நுகர்கின்ற அ நாளில்—(அவர்களுக்கு) கோசிக முனி, ஆனுத மறை நெறியால் ஆசிகள் அருளி (மிதிலை விட்டு) போனுன். (போய்) வட திசையில் உயர்ந்த மால் பொன்வரை புக்கான். [நனி-மிகுதியாக. ஆனுத-குறையாத. மால்-பெரிய.]

2. அப்போதினின் முடிமன்னவ னணிமாநகர் செலவே
இப்போதுந மனிகந்தனை யெழுகென்றினி திசையாக்
கைப்போதக நிகர்காவலர் குழுவந்தடி தழுவ
ஒப்போதருந் தேர்மீதினி லினிதேறின னுரவோன்.

அப்போது, முடிமன்னவன் (ஆகிய தயரதன்) (தனது) 'அணி மா நகர் செல, இப்போது நம் அனிகம் தன்னை எழுக' என்று இனிது இசைக்க, (அதன்படியே) கையையுடைய போதகம் நிகர்க்கின்ற காவலர்களது குழு வந்து (அவன்) அடியை தழுவ, ஒப்பு ஓதுவதற்கு அரிய தேர்மீது இனிதாக (அந்தத் தயரதனுகிய) உரவோன் ஏறினுன். [அணி-அழகிய. அனிகம்-சேனை. போதகம்-யானை. உரவோன்-வலி யமைந்தவன்.]

3. தன்மக்களு மருமக்களு நனிதன்கழல் தழுவ
மன்மக்களு மயன்மக்களும் வயின்மொய்த்திட மிதிலைத்
தொன்மக்களு மன மூக்குயிர் பிரிவென்பதோர் துயரின்
வன்மைக்கடல் புகவுய்ப்பதோர் வழிசென்றன னுரவோன்.

[மன்மக்கள்-அரசர். அயல்மக்கள்-மற்றையோர். வயின்-இடமெங்கும். மனம் உக்கு-மனம் நெகிழ்ந்து. 4-வது அடி:—உரவோன் ஆகிய தயரதன் துயராகிய வலிய கடலில் புகுந்து நடப்பதான ஒரு வழியில் சென்றுன்.]

4. முன்னேநெடு முடிமன்னவன் முறையிற்செல மிதிலை
நன்மாநக ருறைவார்மன நனிபின்செல நடுவே
தன்னேர்புரை தருதம்பியர் தழுவிச்செல மழைவாழ்
மின்னேபுரை யிடையாளொடு மினிதேகினன் வீரன்.

[தன் நேர்புரைதரு தம்பியர்-தனக்கு நிகரான தம்பியர். மழை-மேகம். மின்னேபுரை-மின்னலைப்போன்ற.]

தயரதன் வழியில் தீய சகுனங்கள் கண்டு நின்றான்.

5. ஏகும்மள வையின்வந்தன வலமும்மயி லிடமும்
காகம்முத லியமுந்தின தடைசெய்வன கண்டான்
நாகம்மன னிடையிங்குள திடையூறென நடவான்
மாகம்மணி யணிதேரொடு நின்றானெறி வந்தான்.

[நாகம் அனன்-யானையைப்போன்றவன். மாகம் அணி-ஆகாயத்தளவு சென்ற.] (மயில் வலமானது நல்ல சகுனம். காகம் முதலிய இடமானது தீயசகுனம்.)

6. நின்றேநெறி யுணர்வானொரு நினைவாளனை யழையா
நன்றோபழு துளதோநடு வுரைநீ நயமென்னக்
குன்றேபுரை தோளானெதிர் புள்ளின்குறி கொள்வான்
இன்றேவரு மிடையூறது நன்றாய்விடு மென்றான்.

நின்று, (புள்களது) நெறியை உணர்ந்தவனான ஒரு நினைவு ஆளனை அழைத்து, "(இந்தச் சகுனம்) நன்றோ, பழுது உளதோ (அதன்) நயத்தை நீ நடுவு உரை" என்ன, (அந்த) புள்ளின் குறியை (தெரிந்து) கொள்வான் (ஆன நிமித்திகன்) (தயரதனாகிய) குன்றை புரையும் தோளான் எதிர், "இடையூறு இன்றே வரும், (ஆனால்) அது நன்று ஆய்விடும்" என்றான். [நடுவு உரை-உண்மை சொல். நயம்-பலன்.]

அப்பொழுது பரசுராமன் எதிர்வரல்.

7. என்னும்மள வினில்வானக மிருள்கீறிட வொளியாய்
மின்னும்படி புடைவீசிய சடையான்மழு வுடையான்
பொன்னின்மலை வருகின்றது போல்வானனல் கால்வான்
உன்னுந்தழல் விழியானுரு மதிர்கின்றதொ ருரையான்.

[புடை-பக்கத்தில். மழு-போர்க்கோடரி, பரசு. அனல்கால்வான்-வெப்பம் வீசுகின்ற சரீரமுடையவன். உரும் அதிர்கின்ற உரையான்-இடியையும் நடுங்கச் செய்கின்ற வார்த்தையுடையவன்.]

8. கம்பித்தலை யெறிநீருறு கலமொத்துல குலையத்
தம்பித்துயர் திசையானைகள் தளரக்கடல் சலியா
வெம்பித்திரி தரவானவர் வெருவுற்றிரி தரவோர்
செம்பொற்சிலை தரியாவயின் முகவாளிகள் தெரிவான்.

(புயல்காற்றால்) அலை எறிகின்ற (கடல்) நீரில் உற்ற கலத்தை ஒத்து உலகு கம்பித்து அலைய, (எட்டு) திசைகளிலும் உள்ள உயர்ந்த யானைகள் (அச்சத்தால்) தம்பித்து தளர, கடல்கள் எல்லாம் சலித்து வெம்பி திரிதர, வானவர் வெருவு உற்று இரிதர, ஓர் செம்பொன் சிலை தரித்து, (அவன்) அயில் (பொருந்திய) முகம் (உடைய) வாளிகள் தெரிவான். [கலம்-மரக்கலம். கம்பித்து-நடுங்கி. தம்பித்து-அசைவற்று. வெம்பி-பொங்கி. திரிதர-சுழல. வெருவு-பயம். இரிதர-ஓட. சிலை-வில். அயில்-கூர்மை. முகம்-நுனி. வாளி-அம்பு.]

9\. விண்கீழுற வென்றோபடி மேல்கீழுற வென்றோ
எண்கீறிய வுயிர்யாவையு நமன்வாயிட வென்றோ
புண்கீறிய குருதிப்புனல் பொழிகின்றது புரையக்
கண்கீறிய கனலான்முனி வேறென்றயல் கருத.

விண்ணானது கீழ் உற (வேண்டும்) என்றோ? படியானது மேல் கீழஉற (ஆகவேண்டும்) என்றோ? (பிரமன்) எண் கீறிய உயிர்யாவையும் நமன் வாயில் இட (வேண்டும்) என்றோ? (இவையல்லாமல்) கீறிய புண்ணிலிருந்து குருதிப்புனல் பொழிகின்றதை புரைய (அவன்) கண்களினின்று கீறிய கனலால் (அவனது) 'முனிவிற்கு (காரணம்) அயல் எது' என்று (பார்த்தோர்) கருதவும்—[விண்கீழ் உற-ஆகாயம் பூமியில்வந்து படிய. படிமேல்கீழுற-பூமி தலைகீழாக. எண் கீறிய-கணக்கிட்டு வகுத்த. குருதி-இரத்தம். அயல்-வேறு]

10\. போரின்மிசை யெழுகின்றதொர் மழுவின்சிகை புகையத்
தேரின்மிசை மலைசூழ்வரு கதிருந்திசை திரிய
நீரின்மிசை வடவைக்கன னெடுவானுற முடுகிப்
பாரின்மிசை வருகின்றதொர் படிவெஞ்சுடர் படர.

(வைக்கோல்) போரின்மிசை எழுகின்றதான (புகையைப்போல்) ஓர் மழுவின் சிகைபுகைய, தேரின்மிசை (மேரு) மலையை சுழன்று வரும் (சூரியனாகிய) கதிரும் திசை திரிய, நீரின்மிசை (யான) வடவைக்கனல் நெடிய வானத்தை உற முடுகி (மறுபடியும்) பாரின்மிசை வருகின்றபடி ஓர் வெம்சுடர் (எங்கும்) படர—[திரிய-மாற. பார்-பூமி. படி-விதத்தில்]

11\. பாழிப்புய முயர்திக்கிடை யடையப்புடை படரச்
சூழிச்சடை முடிவிண்டொட வயல்வெண்மதி தோற்ற
ஆழிப்புன லெரிகானில மாகாயமு மழியும்
ஊழிக்கடை முடிவிற்றிரி யுமைகேள்வனை யொப்ப.

பாழி (ஆகிய) புயங்கள் உயர்ந்த திக்குகளுக்கு இடை அடைவதாலும், சூழி சடை புடையில் படர்வதாலும், (அச்சடையின்) முடி விண்ணை தொட (அதனால் அதற்கு) அயலில் வெண்மதி தோற்றலாலும், (பொங்கும்) ஆழியின் புனலும், எரியும், காலும், நிலமும், ஆகாயமும் (ஆகிய பஞ்ச பூதங்களும்) அழியும் ஊழியின் கடைமுடி

வில் திரிகின்ற (சிவனுடைய) உமையின் செல்வனை ஒப்ப—[பாழி-வலிமை, பருமை. சூழி-சூழ்ந்ததானை. புடை-பக்கம். ஆழி-கடல். எரி-அக்நி. கால்-காற்று]

12. அயிர்துற்றிய கடல்மாநில மடையத்தனி படருஞ்
செயிர்சுற்றிய படையானடல் மறமன்னவர் திலகன்
உயிருற்றதொ ரமரமெனவோ ராயிர முயர்தோள்
வயிரப்பணை துணியத்தொடு வடிவாய்மழு வுடையான்.

மாநிலம் அடைய தனி படரும் அயிர்துற்றிய கடல் (போன்ற) செயிர் சுற்றிய படையானும், அடல் (பொருந்திய) மறம் (உடைய) மன்னவர் திலகனும் ஆகிய கார்த்த வீரியார்ச்சுனனை, ஓர் மரம் ஆம் (எனப் பாவித்து) (அவனது) உயிர் (நிலை) உற்றது ஓர் ஆயிரம் உயர்ந்த தோள்களாகிய வயிரம்பெற்ற பணைகள் துணிய தொட்ட வடிவாய்ந்த மழு உடையான்—[தனி-ஒப்பற்று. அயிர்-நுண்ணியமணல். செயிர்-கோவம். படை-சேனை. அடல்-வெற்றி. மறம்-வீரம். பணை-கிளை. தொட்ட-அறுத்த. வடி-கூர்மை]

13. நிருபர்க்கொரு பழிபற்றிட நிலமன்னவர் குலமுங்
கருவற்றிட மழுவாள்கொடு களைகட்டுயிர் கவரா
இருபத்தொரு படிகாலெழு கடலொத்தலை யெறியுங்
குருதிக்குரை புனலிற்புக முழுகித்தனி குடைவான்.

(தன்தந்தையைக் கொன்றதாகிய) ஒரு பழி நிருபர்க்கு பற்றிட, (அதனால்) (எல்லா) நில மன்னவர் குலமும் கரு அற்றிட மழுவாள் கொண்டு (அவர்களது) இருபத்தொரு படிகால் களைகட்டு உயிரை கவர்ந்து, எழுகடல்களையும் ஒத்து அலை எறியும் குருதியாகிய குரைக்கின்ற புனலில் புக முழுகி தனி குடைவான்—[நிருபர்-க்ஷத்திரியர். படிகால்-தலைமுறை. களைகட்டு-அரிந்துநீக்கி. குரை-ஒலிக்கின்ற. குடைவான்-ஆடுபவன்]

14. கமையொப்பதொர் தவமுஞ்சுடு கனலொப்பதொர் சினமுஞ்
சமையப்பெரி துடையானெதிர் தள்ளூற்றிடை தளரும்
அமயத்துயர் பறவைக்கினி தாறும்வகை சீறுச்
சிமயக்கிரி யுருவத்தனி வடிவாளிக டெரிவான்.

கமையை ஒப்பது ஆன ஓர்தவமும், சுடும் கனலை ஒப்பது ஆன ஓர் சினமும் சமைய பெரிது உடையானும், (மானச வாவிக்குச் செல்லும் கால்) எதிர் தள்ளூற்று இடை தளரும் அமயத்தில் (பறவைகளில்) உயர்ந்த (அன்ன) பறவைகளுக்கு இனிது ஆறு ஆகும்வகை சீறி, சிமயம் (உடைய கிரவுஞ்ச) கிரியை (ஊடு) உருவ தனி வடி வாளிகள் தெரிவானும் (ஆன பரசுராமன்). [கமை-பொறுமை. சமைய-பொருந்த. ஆறு-வழி. சிமயம்-சிகரம். வடி-கூரிய. மானசவாவிக்குச் செல்ல இயலாமல் கிரவுஞ்சகிரியால் தடைப்புண்ட அன்னங்

கள் புகுந்து செல்வதற்கு அம்மலைமீது பரசுராமன் அம்பு எய்து அதனில் ஒரு துளை உண்டாக்கினன் என்று ஒரு கதையுளதென்பர்]

15. மையம்புக நிமிரக்கடல் தழுவும்படி சமைவான்
மையின்னுயர் மலைநூறிய மழுவாளவன் வந்தான்
ஐயன்றனை யரிதிற்றரு மரசன்னது கண்டான்
வெய்யன்வர நிமமென்னைகொ லெனவெய்துறு மெல்லை.

மையம் (அழுந்தி) புக (அந்தப் பள்ளத்தில்) தழுவும்படி கடல் நிமிர (மிதித்து நடப்பதில்) சமைவான் (ஆகி அந்த) மையினும் உயர்ந்த (கிரவுஞ்ச) மலையை நூறிய மழுவாளவன் வந்தான். அதை (இராமனாகிய) ஐயன்தனை அரிதில் தரும் (தயாத) அரசன் கண்டு, '(இந்த) வெய்யன் (இங்கு) வர நிமம் என்கொல்' என வெய்துறும் எல்லை. [மையம்-மலை. தழுவும்படி கடல் நிமிர-வந்தடையும்படி கடல்நீர் பொங்கிப்பாய. சமைவான்-நடப்பதில் பொருந்தியவன், நடந்தவன். மை-மேகம். நூறிய-பிளந்த. அரிதில் தரும்-அருமையாய்ப் பெற்ற. வெய்துறும் எல்லை-அச்சம் கொண்டபோது]

16. பொங்கும்படை யிரியக்கிளர் புருவக்கடை நெரிய
வெங்கண்பொறி சிதறக்கடி துருமேறென விடையாச்
சிங்கம்மென வுயர்தேர்வரு குமரன்னெதிர் சென்றான்
அங்கண்ணழ கனுமிங்கிவ னாரோவெனு மளவில்.

(தயாதனது) பொங்கும் படை இரிய, (பரசுராமன்) கிளர்கின்ற புருவத்தின் கடை (கோபத்தால்) நெரிய, வெம் கண்களிலிருந்து (தீ) பொறி சிதற, உரும் ஏறு என, கடிது இடைந்து, சிங்கம் என உயர்ந்த தேரில் வரும் (இராமபிரானாகிய) குமரனுக்கு எதிரில் சென்றான். (அது கண்ட) அம் கண் அழகனும் 'இங்கு (வந்த) இவன் ஆரோ' எனும் அளவில்—[படை இரிய-பரிவாரம் கலைந்து ஓட. உரும் ஏறு-இடி. கடிது இடைந்து-விரைவாக நெருங்கி.]

17. அரைசன்னவ னிடைவந்தினி தாராதனை புரிவான்
விரைசெய்முடி படிமேலுற வடிமேலுற விழவும்
கரைசென்றில னணையானெடு முடிவின்கனல் கால்வான்
முரைசின்குரல் படவீரன தெதிர்நின்றிவை மொழிவான்.

(தயாத) அரசன் அவன் இடை வந்து இனிது ஆராதனை புரிந்து, (தான்) படிமேல் உறவும் (தன்) விரை செய்கின்ற முடி (அவனது) அடிகள்மேல் உறவும் விழுந்தும்கூட (அப்பரசுராமன் கோபத்தின்) கரையை (கடந்து) சென்றிலன் அணையானாய், (யுக) முடிவில் (எழும் ஊழி) கனலை கால்வானாய், (அதிர்த்திருந்த) முரசங்களது குரல் (எல்லாம்) பட, (இராமனாகிய) வீரனது எதிர் நின்று இவை மொழிவான். [விரை-வாசனை. பட-அடங்க. கால்வானாய்-வீசுகின்றவனாய்.]

18. இற்றோடிய சிலையின்திற மறிவெனினி யானுன்
பொற்றோள்வலி நிலைசோதனை புரிவானசை யுடையேன்
செற்றோடிய திரடோளுறு தினவுஞ்சிறி துடையேன்
மற்றோர்பொரு ளிலையிங்கிதென் வரவென்றன னுரவோன்.

"இற்று ஒடிய (அந்த) சிலையின் திறம் (அது முன்பே உடைந்திருந்ததென்பதை யான்) அறிவேன். இனி யான் உன் பொன் தோளின் வலி நிலை (எவ்வாறு என்பதை) சோதனை புரிய நசை உடையேன். (பகைவரை) செற்று ஓடிய (எனது) திரண்ட தோள் உற்ற (போர் வேண்டும்) தினவும் சிறிது உடையேன். மற்று ஓர் பொருள் இல்லை. இங்கு இது என் வரவு" என்றனன் (அந்த) உரவோன் (ஆகிய பரசுராமன்) [இற்று ஒடிய-ஒடிந்துபோன. பொன்-அழகிய. நசை-ஆசை. செற்று ஓடிய-அழித்துவந்த.]

19. அவனன்னது பகருமள வையின்மன்னவ னயர்வான்
புவனம்முழு வதும்வென்றொரு முனிவற்கருள் புரிவாய்
சிவனும்மய னரியும்மலர் சிறுமானிடர் பொருளோ
இவனும்மென துயிரும்முன தபயம்மினி யென்றான்.

அவன் அன்னது பகரும் அளவையில் மன்னவன் அயர்ந்து, (பரசுராமனை நோக்கி)" புவனம் முழுவதும் வென்று ஒரு (காசியப) முனிவனுக்கு(கொடுத்து)அருள் புரிபவனே! சிவனும் அயனும் அரியும் அலர் (எம்போன்ற) சிறு மானிடர் (உனக்கு ஒரு) பொருளோ. [இராமனாகிய) இவனும் எனது உயிரும் இனி உனது அபயம்," என்றான். [அயர்ந்து-மனந்தளர்ந்து. புவனம்-பூமி. அயன்-பிரமன். அரி-திருமால். அலர்-அல்லாது. அபயம்-அடைக்கலம்.]

குறிப்பு:—முன் கையடைப் படலம் 12-வது செய்யுளில், அரனும் அயனும் புரந்தரனும் புகுந்து செய்யும் இடையூற்றிற் கிடையூறு யான்காப்பன் என்று, அறைகூவிய தயரதன், இங்கு அன்னவர்க்கு நிகரென மதித்த பரசுராமன்பால் சிறு மானிடனாய் ஒடுங்கி படிபணிந்ததும் வியப்பன்று. இவ்விரண்டிற்கும் புத்திர வாஞ்சையே காரணம். ஆற்றல் செருக்கினால் அறை கூவியழைத்ததுமில்லை, மறமின்றிப் போரஞ்சிப் பணிந்ததுமில்லை, அரிதில் பெற்றதன் தோன்றல் தீதுறுவண்ணம் அங்கு விஞ்சுவதும் இங்குக் கெஞ்சுவதும் இன்றியமையாவாயின. தயரதன் அறிந்தவரையில் இவ்விருதிறத்தும் பிறிதொரு வழியின்மை ஆராயின் நன்கு புலப்படும்,

20. விளிவார்விளி வதுதீவினை விழைவாருழை யன்றோ
களியாலிவ னயர்கின்றன வுளவோகன லுமிழும்
ஒளிவாய்மழு வுடையாய்பொர வுரியாரிடை யல்லால்
எளியாரிடை வலியார்வலி யென்னாகுவ தென்றான்.

"(இராமன் உன்னை வணங்கி ஆராதித்திலன் என்னும் கோவமாயின், அது தீவினை அல்லவே) விளிவார் தீவினை விழைவார் உழை அன்றோ விளிவது!" (அவன் வணங்காததற்குக் காரணம் அறியாமையே அன்றி) களியால் இவன் (உன்னைப் பணிய) அயர்கின்றன (ஏதேனும்) உளவோ? கனலை உமிழும் ஒளி (பொருந்திய) வாய் (உடைய) மழு உடையாய், (அவ்வாறே யவன் செருக்கினால் வணங்கிலன் என்றும் அது தீவினையே என்றும் கொள்ளினும் கூட), (உனக்கு நிகராக) பொர உரியார் இடை அல்லால் (இவன் போன்ற) எளியார் இடை (உன்போன்ற) வலியோர் (காட்டும்) வலி, என்ன (பயன்) ஆகுவது" என்றான் (தயரதன்). [1-வது அடி-கோபம் கொள்பவர், தீவினையை விரும்பிச் செய்தவர்கள் மீதன்றோ தம் கோவத்தைச் செலுத்துதல் தகுதி. களி-செருக்கு. அயர்கின்றன-மறப்பவை.]

21. நனிமாதவ முடையாயிது பிடிநீயென நல்குந்
தனிநாயக முலகேழையு முடையாயிது தவிராய்
பனிவார்கடல் புடைசூழ்படி நரபாலரை யருளால்
முனிவாறினை முனிகின்றது முறையோவென மொழிவான்.

"நனி மா தவம் உடையாய், இதை நீ பிடி என (அந்தக் காசிப முனிவனுக்கு) நல்கும் தனி நாயகம் (ஆன) உலகு ஏழையும் உடையாய், (நீ கொண்ட இந்தச் செயலை) தவிராய்; பனி வார் கடல் புடை சூழ்ந்த படியில் உள்ள நரபாலரை (உன்) அருளால் முனிவு ஆறினை (ஆகிய நீ இப்பொழுது இங்கு) முனிகின்றது முறையோ?" என (தயரதன்) மொழிவான். [தவிராய்-விட்டுவிடு. தனிநாயகம்-ஏகாதிபத்யம். முனிவு-கோபம். படி-பூமி.]

22. புறனின்றவ ரிகழும்படி நடுவின்றலை புணராத்
திறனின்றுயர் வலியென்பதொ ரறிவின்றரு செயலோ
அறனின்றதன் னிலைநின்றுயர் புகழொன்றுவ தன்றோ
மறனென்பது மறவோயிது வலியென்பது வலியோ.

"மறவோய், புறன் நின்றவர் இகழும்படி நடுவின் தலை புணராத திறன் நின்று உயர்கின்ற வலி என்பது ஓர் அறிவினால் தருகின்ற செயலோ! மறன் என்பது, அறன் நின்றதன் நிலைநின்று உயர்ந்த புகழ் ஒன்றுவது அன்றோ! (அவ்வாறிருக்க நீ செய்யப் புகுந்த) இது வலி என்பது (உண்மையில்) வலியோ! (என்றான் தயரதன்). எம்மை நீ எதிர்ப்பதைக் கண்டு அயல்நிற்பவர் எல்லாம் இகழும்படி நடுநிலை

யற்ற தன்மையில் காட்டுகின்ற வல்லமை அறிவிற் கழகாகுமா? வீரம் என்பது அறம் பிழையாது பகைவரை வென்றுயர்ந்ததால் பெற்ற புகழன்றோ! ஆகையால் வீரனே, நீ இப்பொழுது எம்பால் காட்ட இருக்கும் பலம் உண்மையான பலமாகாது,—என்பது இச்செய்யுளின் பொருள். [திறம்-தன்மை. மறம்-வீரம்]

23. சலத்தோடியை விலனென்மக னனையானுயிர் தபுமேல்
உலத்தோடெதிர் தோளாயென துறவோடுயி ருகுவேன்
நிலத்தோடுயர் கதிவானுற நெடியாயுன தடியேன்
குலத்தோடற முடியேலிது குறைகொண்டனெ னென்றான்.

"என் மகன் (உன்) சலத்திற்கு இயைவு இலன். அனையானது உயிர் தபுமாயின்—உலத்தோடு எதிர்க்கின்ற தோளாய்,—எனது உறவோடும் நிலத்தோடும் உயர்கதியாக வானைஉற (எனது) உயிரை உகுவேன். நெடியாய், உனது அடியேன் குலத்தோடு அற முடியேல். இதை (உன்னிடம்) குறை கொண்டனென்" என்றான். [சலம்-பெருங்கோபம். தபுமேல்-அழியுமாயின். உலம்-திரண்டகல். குறை கொண்டனென்-வேண்டிக் கொள்கிறேன்]

24. என்றுவடி விழுவானையு மிகழாவெரி விழியாப்
பொன்றூர்கலை யணிவானெதிர் புகுவானிலை யுணராத்
தன்றாலொரு செயலின்மையை நினையா வுயிர்தளரா
மின்றாவய ருறும்வாளர வெனவெய்துற லுற்றான்.

என்று (வேண்டி) அடியில் விழுவான் ஆகிய தயரதனையும் இகழ்ந்து எரி போல் விழித்து, பொன் ஆர்ந்த கலையை அணிந்தவன் (ஆன இராமனுக்கு) எதிர் புகுவான் (ஆன பரசுராமனது) நிலையை (தயரதன்) உணர்ந்து, (இனி இதைத்தடுக்க) தன்னால் ஒரு செயலும் இன்மையை நினைத்து உயிர்தளர்ந்து, (அவன்) மின்னலால் அயர்வு உறும் வாள் (பொருந்திய) அரவு என்ன (இனி, இடிபோல் போர்வருமே என்று) வெய்துறல் உற்றான் [கலை-வஸ்திரம். வாள்-ஒளி.]

25. மானம்முடை முடிமன்னவன் மதிசோர்வுறன் மதியான்
தானன்னிலை யுறுவானுறு வினையுண்டது தவிரான்
ஆனம்முடை யுமையண்ணலை யந்நாளுறு சிலைதான்
ஊனம்முள ததன்மேனிலை கேணீயென வுரைப்பான்.

(இவ்விதம்தன்) மானம் உடைகின்ற (தயரத) முடிமன்னவன் மதி சோர்வு உறல்வதையும் மதியானாய். (பரசுராமன்) தானும் அந்நிலை (ஆகிய மானபங்கம்) உறுவதற்கு உற்ற வினை (ஒன்று) உண்டு, (ஆதலால்) அதை தவிரான் (ஆகி, இராமனை நோக்கி) "ஆன் உடைய உமையின் அண்ணல் (ஆகிய பரமசிவனை) அந்நாள் உற்ற சிலைதான் ஊனம் உளது. அதன் மேல் நிலை நீ கேள்" என உரைப்பான். [ஆன்-இடபம். மேல்நிலை-முன்தன்மை.]

26. ஒருகால்வரு கதிராமென வொளிகால்வன வுலையா
வருகார்தவழ் வடமேருவின் வலிசால்வன வையம்
அருகாவினை புரிவானுள னவனாலமை வனதாம்
இருகார்முக முளயாவையு மேலாதன மேனாள்.

" ஒரு கால் (உடைய தேரில்) வரும் (சூரியனாகிய) கதிர் ஆம் என ஒளி கால்வனவும், (சூலுற்று) உலையா வரும் கார் தவழ்கின்ற வடமேருவினும் வலி சால்வனவும், வையம் அருகா வினை புரிவான் (விச்வகர்மா என்னும் தெய்வத்தச்சன்) உளன், அவனால் மேல்நாள் (செய்து) அமைவன (ஆன) இரு கார்முகங்கள் உள. தாம் யாவையும் (தமக்கு ஒப்பாக) ஏலாதன. [கால்-சக்கரம். உலையா-வருந்தி. கார்-மேகம். வையம் அருகா-உலகத்திற்கு எவ்விதக் குறைவுமில்லாமல். கார்முகம்-வில். ஏலாதன-ஏற்காதன]

27. ஒன்றினை யுமையாள் கேள்வ னுவந்தனன் மற்றை யொன்றை
நின்றுல களந்த நேமி நெடியவ னங்கை கொண்டான்
என்றது வுணர்ந்த விண்ணோ ரிரண்டினின் மேன்மை யெய்தும்
வென்றிய தியாவ தென்று விரிஞ்சனை வினவ வன்னான்.

[உவந்தனன்-விரும்பி ஏற்றான். விரிஞ்சன்-பிரமன்]

28. சீரிது தேவர் தங்கள் சிந்தனை யென்ப துன்னி
வேரியங் கமலத் தோனு மியைவதோர் வினையந் தன்னால்
யாரினு முயர்ந்த மூலத் தொருவரா மிருவர் தம்மை
மூரிவெஞ் சிலைமே லிட்டு மொய்யமர் மூட்டி விட்டான்.

[சீரிது-நல்லது, வேரி அம் கமலத்தோன்-தேன் பொருந்திய அழகிய தாமரையில் வசிக்கும் பிரமன். இயைவதோர் வினையந்தன்னால்-பொருந்திய ஒரு உபாயத்தால். மூரி, மொய்-வலி]

29. இருவரு மிரண்டு வில்லு மேற்றின ருலக மேழும்
வெருவரத் திசைகள் பேர வெங்கனல் பொங்க மென்மேல்
செருமலை கின்ற போழ்திற் றிரிபுர மெரித்த தேவன்
வரிசிலை யிற்ற தாக மற்றவன் முனிந்து மன்னோ.

[ஏற்றினர்-நாணேற்றினர். வெருவர-பயமடைய. பேர-நிலை பெயர. செரு-போர். இற்றது ஆக-முறிய. (மற்று, அசை) அவன்-அந்தச் சிவன்.]

30. மீட்டும்போர் தொடங்கும் வேலை விண்ணவர் விலக்க வல்வில்
நீட்டினன் றேவர் கோன்கை நெற்றியிற் கண்ணன் வெற்றி
காட்டிய கரிய மாலுங் கார்முகந் தன்னைப் பாரில்
ஈட்டிய தவத்தின் மிக்க விருசிகற் கீந்து போனான்.

[வேலை-சமயத்தில். தேவர்கோன்-இந்திரன். நெற்றியிற் கண்ணன் வெற்றிகாட்டிய-நெற்றியில் கண்ணுடையவனை வெற்றி கண்ட, இருசிகன்-பரசுராமனது பாட்டன்]

31. இருசிக னெந்தைக் கீய வெந்தை யெமக்குத் தந்த
வரிசிலை யிதனை நொய்தின் வாங்குதி யாயின் மன்னர்
குரிசிலே நின்னோ டொப்பா ரில்லையான் குறித்த போரும்
புரிகில னின்றே டின்னம் புகல்வது கேட்டி மன்னே.

[நொய்தின்-எளிதாக. வாங்குதியாயின்-வளைப்பாயானால். எந்தை-என் தந்தையாகிய சமதக்னி]

32. ஊனவில் லிறுத்த மொய்ம்பை நோக்குமீ தூக்க மன்றால்
மானவ மற்றுங் கேளாய் வழிப்பகை யுடைய னும்பால்
ஈனமி லெந்தை சீற்ற நீக்கினா னென்ன முன்னோர்
தானவ னனைய மன்னன் கொல்லயான் சலித்து மேனாள்:

(அப்பொழுது இராமன் பரசுராமன் கையிலிருந்த வில்லை அலக்ஷிய மாகப் பார்க்கப் பரசுராமன் பின்னும் சொல்கிறான்) '(நீ முன்) ஊனம் உடைய வில்லை இறுத்த மொய்ம்பை (நம்பி இவ்வில்லையும் அலக்ஷிய மாக) நோக்குவதாகிய ஈது ஊக்கம் அன்று. மானவனே, மற்றும் கேள், (நான்) உம்பால் வழிப்பகை உடையன். ஈனம் இல்லாத என் தந்தை சீற்றம் நீக்கினவன் என்ன (துணிவுகொண்டு) முன் ஓர் தான வன் அனைய (கார்த்த வீர்யன் என்னும்) மன்னன், மேல்நாள் (என் தந் தையை) கொல்ல யான் சலித்து—[மொய்ம்பு-வலி. ஊக்கம்-முயற்சி. மானவ-சிறந்தவனே. தானவன்-அசுரன்]

33. மூவெழு முறைமை பாரின் முடியுடை வேந்தை யெல்லாம்
வேவெழு மழுவின் வாயால் வேரறக் களைந்திட் டன்னோர்
தூவெழு குருதி வெள்ளத் துறையிடை முறையி னெந்தைக்
காவன கடன்க ணேர்ந்தே னருஞ்சின மடக்கி நின்றேன்.

[வே எழு-கோபாக்னி எழுகின்ற. தூ-தசை. ஆவன கடன்கள் நேர்ந்தேன்-செய்யவேண்டிய பித்ரு கடன்களைச் செய்தேன்]

34. உலகெலா முனிவற் கீந்தே னுறுபகை யொடுக்கிப் போந்தென்
அலகின்மா தவங்கள் செய்தோ ரருவரை யிருந்தே னாண்டைச்
சிலையையீ யிறுத்த வோசை செவியுறச் சீறி வந்தேன்
மலைகுவன் வல்லை யாயின் வாங்குதி தனுவை யென்றான்.

[அருவரை-பெருமலை. ஆண்டை-அங்கு. உறுபகை-உட்பகை வெளிப்பகை இரண்டும். 4 வது அடி:—தன்னிடம் இருந்தவில்லை இராமன் கையேற்க இணங்கவில்லை என்று பரசுராமன் கருதி "ஆனால், உன்னிடம் முன் சொன்ன வண்ணம் போர் செய்வேன். கூடுமாயின் போர் தொடங்கு' என்பது கருத்து. முனி-காசிபமுனி.]

இராமன் பரசுராமன் கை வில்லை வாங்கி வளைத்தான்.

35. என்றன னென்ன நின்ற விராமனு முறுவ லெய்தி
நன்றொளிர் முகத்த னாகி நாரணன் வலியி னாண்ட
வென்றிவிற் றருக வென்னக் கொடுத்தனன் வீரன் கொண்டான்
துன்றிருஞ் சடையோ னஞ்சத் தோளுற வாங்கிச் சொல்லும்.

[முறுவல்-புன்னகை. துன்று இரும்-நெருங்கிய பெரிய.]

36. பூதலத் தரசை யெல்லாம் பொன்றுவித் தனையென் றாலும்
வேதவித் தாய மேலோன் மைந்தனீ விரதம் பூண்டாய்
ஆதலிற் கொல்ல லாகா தம்பிது பிழைப்ப தன்றால்
யாதிதற் கிலக்க மாவ தியம்புதி விரைவி னென்றான்.

"பூதலத்திலுள்ள அரசரை எல்லாம் பொன்றுவித்தனை (ஆகையால் நானிப்பொழுது உன்னைக் கொன்று மறுபழி வாங்கிவிடலாம்), என்றாலும், வேதவித்து ஆகிய மேலோனது மைந்தன் நீ. (மேலும்) விரதம் பூண்டாய். ஆதலின் (நான்) கொல்லல் ஆகாது. (எனினும் வில்லில் பூட்டிய) இது அம்பும் பிழைப்பது அன்று; (ஆதலால்) இதற்கு இலக்கம் ஆவது யாது? விரைவின் இயம்புதி!" என்றான். (இராமன்). [பொன்றுவித்தனை-கொன்றனை. வேதவித்து-வேதஞான முடையவன். விரதம்-தவம். இலக்கம்-லக்ஷ்யம், குறி. பிழைப்பது-வீண்போவது.]

பரசுராமன் இராமனைத் துதித்தல்.

37. நீதியாய் முனிந்திட லீயிங்கு யாவர்க்கும்
ஆதியா னறிந்தன னலங்க னேமியாய்
வேதியா விறுவதே யன்றி வெண்மதிப்
பாதியான் பிடித்தவில் பற்றப் போதுமோ.

"நீதியாய் முனிந்து இடல். நீ இங்கு யாவர்க்கும் ஆதியான் (என்பதை (யான்) அறிந்தனன். அலங்கல் (அணிந்த) நேமியாய், வெண்மதியின் பாதியைச் சூடினவனாகிய சிவன் பிடித்தவில் வேதியா இறுவதே அன்றி (உன் கைக்கு) பற்ற (கூட) போதுமோ!' [அலங்கல்-மாலை. நேமி-சக்ராயுதம். வேதியா-பேதித்து, இரண்டாக.]

38. பொன்னுடை வனைகழற் பொலங்கொ டோளினாய்
மின்னுடை நேமியா னாதல் மெய்ம்மையால்
என்னுள துலகினுக் கிடுக்கண் யான்றந்த
உன்னுடை வில்லுமுன் னூரத் தூக் கீடன்றால்.

"பொன்உடைய வனைந்த கழலினையும் பொலம் (அணிகள்) கொண்ட தோளினையும் உடையானே, (நீ) மின்உடைய நேமியான் ஆதல் மெய்ம்மை. (இனி) உலகினுக்கு இடுக்கண் என்ன உளது! யான் (இப்பொழுது மறுபடியும்) தந்த உன்னுடைய வில்லும் உன் ஊரத்துக்கே ஈடு அன்று!" [பொன்-அழகு. வனை-அலங்கரித்த. கழல்-வீரகண்டை. மின்-ஒளி. இடுக்கண்-துன்பம். ஈடு-சமானம்]

39. எய்தவம் பிடைபழு தெய்தி டாமலென்
செய்தவம் யாவையுஞ் சிதைக்க வேயெனாக்
கையவ ணெகிழ்தலுங் கணையுஞ் சென்றவன்
மையறு தவமெலாம் வாரி மீண்டதே.

"(நீ இது காறும்) எய்த அம்பு (வீண்போகாதிருக்க) (இந்த) இடையில் பழுது எய்திடாமல் என் செய்தவம் யாவையும் (இலக்காகக் கொண்டு) சிதைப்பாய்" என்று (பரசுராமன் தன்) கையை அவண் நெகிழ்த்தலும், (இராமனது)கணையும் சென்று அவன் மை அற்ற தவம் எலாம் வாரி மீண்டது. [இடையில்-இப்பொழுது. பழுது-பயனில்லாமை. அவண்-அங்கே. நெகிழ்த்தலும்-தளர்த்தி விரித்ததும். மை-குற்றம்]

40. எண்ணிய பொருளெலா மினிது முற்றுக
மண்ணிய மணிநிற வண்ண வண்டுழாய்க்
கண்ணிய யாவர்க்குங் களைக ணாகிய
புண்ணிய விடையெனத் தொழுது போயினான்.

"மண்ணிய மணிநிற வண்ணனே, வண்துழாய் கண்ணியனே, யாவர்க்கும் களைகண் ஆகிய புண்ணியனே, (நீ) எண்ணிய பொருள் எல்லாம் இனிது முற்றுக; (இனி எனக்கு) விடை (தருவாய்)" என தொழுது (பரசுராமன்) போயினான். [மண்ணிய-வேகடம் செய்த, கழுவி மாசு நீக்கிய. வண்-வளப்பம் பொருந்திய. கண்ணிய-மாலையை அணிந்தவனே. களைகண்-ஆதாரம், புகலிடம்.]

41. அழிந்தவன் போனபி னமல னைம்புல
னொழிந்துதன் னுயிருலைந் துருகு தந்தையை
பொழிந்தபே ரன்பினாற் றொழுது முன்புபுக்
கிழிந்தவான் றுயர்க்கடற் கரைநின் றேற்றினான்.

(மானம்) அழிந்து அவன் போனபின், (இராமனாகிய) அமலன், ஐம்புலன் ஒழிந்து தன்உயிர் உலைந்து உருகும் தந்தையை, பொழிந்த பேர் அன்பொடு தொழுது, (அவன்) முன்பு புக்கு இழிந்த வான் துயரமாகிய கடல் நின்று கரை ஏற்றினான். [ஐம்புலன்-ஐந்து புலன்களும். உலைந்து-வருந்தி. இழிந்த-இறங்கிய. வான்-பெரிய].

42. வெளிப்படு முணர்வினன் விழுமம் நீங்கியே
தளிர்ப்புறு மதகரித் தானை யானிடைக்
குளிப்பருந் துயர்க்கடற் கோடு கண்டவன்
களிப்பெனுங் கரையிலாக் கடலு ளாழ்ந்தனன்.

வெளிப்படும் உணர்வினன் (ஆகித் தயரதன்)விழுமம் நீங்கி தளிர்ப்பு உறும் (அந்த) மதம் (பொழிகின்ற) கரிகளாலாகிய தானையான், இடையில் குளிப்பதற்கு அரிய துயரமாகிய கடலின் கோடுகண்டவன் (மறுபடி) களிப்பு என்னும் கரை இல்லாத கடலுள் ஆழ்ந்தனன். [தானை-சேனை. விழுமம்-துன்பம். கோடு-கரை]

43. பரிவறு சிந்தையப் பரசு ராமன்கை
வரிசிலை வாங்கியோர் வசையை நல்கிய
ஒருவனைத் தழுவிநின் றுச்சி மோந்துதன்
அருவியங் கண்ணினுங் கலச மாட்டினான்.

[பரிவு அறு-இரக்கம் அற்ற. கலசம்-நீர்க்கலசம். வசை-பழி]

44. பொய்ம்மையில் சிறுமையிற் புரிந்த வாண்டொழின்
மும்மையி னுலகினான் முடிக்க லாவதோ
மெய்ம்மையிச் சிறுவனே வினைசெய் தோர்களுக்
கிம்மையு மறுமையு மீயு மென்றனன்.

"பொய்மை இல்லாத (இந்த) சிறுமையில் (இவன்) புரிந்த (பரசு ராமனை வென்றதான) ஆண்தொழில் மும்மையாகிய உலகினால் (செய்து) முடிக்கல் ஆவதோ! இ சிறுவனே வினைசெய்தோர்களுக்கு (அவ்வினைகளுக்கு ஏற்றவாறு) இம்மையும் மறுமையும் ஈயும். (இது) மெய்மை," என்றனன் (தயரதன்). [பொய்மையில் சிறுமை-வஞ்சனை யற்ற இளமை. உலகினால்-உலகத்தாரால்.]

45. பூமழை பொழிந்தனர் புகுந்த தேவருள்
வாமவேல் வருணனை மான வெஞ்சிலை
சேமியென் றுதவினன் சேனை யார்த்தெழ
நாமநீ ரயோத்திமா நகர நண்ணினான்.

(அப்பொழுது) பூ மழை பொழிந்தனராய் (அங்கு) புகுந்த தேவருள் வாம வேல் தாங்கிய வருணனை (அழைத்து), "(இந்த) மான வெஞ் சிலையை (நீ) சேமி," என்று (இராமன், பரசுராமன் கொடுத்தவில்லை, வருணனிடம்) உதவி, சேனை ஆர்த்து எழ, நாமநீர் (சூழ்ந்த) அயோத்தி மா நகரம் நண்ணினான். [வாம-ஒளிபொருந்திய. சேமி-காப் பாற்றிவை. நாமநீர்-அச்சம் தருகின்ற அகழிநீர்.]

குறிப்பு:—இந்த வில்தான் பிறகு விதுரன் கைக்கு வந் தது. அதையும் திருமால் கிருஷ்ணனாகச் சென்று விதுர னது கையைக் கொண்டே முறித்து வைத்தார்.

46. நண்ணின ரின்பத்து வைகு நாளிடை
மண்ணுறு முரசினம் வயங்கு தானையவ்
வண்ணலப் பரதனை நோக்கி யாண்டகை
எண்ணருந் தகையதோர் பொருளி யம்புவான்.

நண்ணி, (அயோத்தியில்) இன்பத்தோடு வைகும் நாள் இடையில், (ஒருநாள்) மண் உற்ற முரசு இனம் வயங்கும் தானையை உடைய அந்த

(தயரத) ஆண்தகை, அண்ணல் (ஆகிய அ) பரதனை நோக்கி, எண் அரிய தகையதான ஓர் பொருள் இயம்புவான். [நாளிடை-காலத்தில். மண்-மார்ச்சனை. பொருள்-செய்தி]

47. ஆணைநின் றன்முது தாதை யையநிற்
காணிய விழைவதோர் கருத்த னாதலால்
கேணியில் வளைமுரல் கேக யம்புகப்
பூணொளிர் மார்பநீ போதி யென்றனன்.

"ஐய, ஆணை (பொருந்திய) நின்தன் முதுதாதை நின்னை காண விழையும் ஓர் கருத்தன் (ஆயிருக்கிறான்) ஆதலால், கேணியில் வளை முரல்கின்ற கேகயம் புக, பூண்கள் ஒளிர்கின்ற மார்பனே, நீ (அந்த) போ" என்றனன் [ஆணை-வெற்றி. கேணியில் வளைமுரல்-நீர்நிலைகளில் சங்குகள் ஒலிக்கின்ற.]

48. ஏவலு மிறைஞ்சிப்போ யிராமன் சேவடிப்
பூவினைச் சென்னியிற் புனைந்து போயினான்
ஆவியங் கவனல தில்லை யாதலான்
ஓவலி னுயிர்பிரிந் துடல்சென் றென்னவே.

[4 வது அடி :—நீங்காத உயிரைவிட்டுப் பிரிந்து உடல் போய்விடுவதுபோல் இராமனை விட்டுப் பரதன் போயினான்]

பரதனும் சத்ருக்னனோடு கேகயம் போய்ச் சேர்ந்தான்.

49. உளைவிரி புரவித்தே ருதாசித் தென்றெனும்
வளைமுரல் தானையான் மருங்கு போதப்போய்
இளையவன் றன்னொடு மேழு நாளிடை
நளிபுனற் கேகய நாடு நண்ணினான்.

[உளை-கழுத்துமயிர். நளிபுனல்-குளிர்ந்த நீர் வளம் பொருந்திய. உதாசித்-பரதனது மாமன்.]

50. ஆனவன் போனபின் னரசர் கோமகன்
ஊனமில் பேரர சுய்க்கு நாளிடை
வானவர் செய்தமா தவமுண் டாகலான்
மேனனி நிகழ்ந்தன விளம்பு வாமரோ.

[2-வது அடி. நீதிநின்றித்தன் பெரிய அரசாட்சியை நடத்தும் காலத்தில். மேல் நனிநிகழ்ந்தன-இதன்மேல் மிகுதியாக நடந்த விஷயங்களை.]

பாலகாண்டம் முற்றிற்று.

PRINTED AT THE N.M.S. PRESS, VEPERY, MADRAS.